
பாரதிதாசன்
கவிதைகள்
மணிவாசகர் பதிப்பகம்

G.M.L Prakaash

# பாரதிதாசன் கவிதைகள்

(முழுவதும்)



நான்கு தொகுதிகள்

பாவேந்தர்

பாரதிதாசன்

வானவில் புத்தக நிலையம்
கரந்தைத் தமிழ்ச்சங்கச்சாலை,
தஞ்சாவூர்-613 002.

மணிவாசகர் பதிப்பகம்

55, லிங்கித் தெரு, சென்னை — 600 001

மறுபதிப்பு: 1992

உரிமை செறிவு

பக்கங்கள்: 480 + 16

பதிப்பாசிரியர்:
டாக்டர் ச. மெய்யப்பன்

விலை ரூ.40-00

கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்

12–B, மேல சன்னதி,
சிதம்பரம் – 608 001.

55, லிங்கித் தெரு,
சென்னை – 600 001.

28–A, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை – 625 001.

15, ராஜ வீதி,
கோயமுத்தூர் – 641 001.

28, கிளைவ்ஸ் கட்டிடம்,
திருச்சி – 620 002.

தொலைபேசி :
சிதம்பரம் 2799 – சென்னை 513707

அச்சிட்டோர்: பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை–600 013.



பாவேந்தர்

பாரதிதாசன்

(1891-1964)



# தமிழியக்கத்தின் ஊற்றுக்கண்


## டாக்டர். ச. மெய்யப்பன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்


**பா**ரதிதாசன் தமிழ் இயக்கத்திற்கு ஊற்றுக்கண்; தமிழின் உயர்வுக்குப் பாடினார்; தமிழர் உயர்வுக்குப் பாடினார்; துறை தோறும் தமிழ் வளம்பெற, நலம்பெற வழிபல காட்டியவர்.

பாரதியின் தமிழிலும் எளிய தமிழைக் கவிதைக்குப் பயன் படுத்தினார்; மக்கள் தமிழில் மாண்புறு கவிதைகள் பாடினார்; தமிழ்ச் சொல்லின் உயர்வினை ஆட்சியில் கொணர்ந்தார்; தமிழ் வழிபாடு செய்தார்; வழிபடத் தமிழ் அடியார் குழுவினையும் உரு வாக்கினார்; பரம்பரையைத் தோற்றுவித்தார்; வாழையடி வாழை யெனக் கவிஞர் அணியினைக் கண்ட பெருமைக்குரியவர். அவரைப் பின்பற்றி அவர் வழியில் கண்ணதாசன் வெற்றி பெற்றார்.

பாவேந்தரின் சொல்லும், சொல்லாட்சியும், நடையும், உத்தி களும், உவமைகளும், உருவகங்களும் அவருக்குப் பின் தோன்றிய கவிஞர்கள் அனைவரையும் பாதித்துள்ளன. பாரதிதாசன் தமி ழுக்குப் புதிய வழிகாட்டினார்; ஒளி கூட்டினார். புத்தொளியில் புத்துணர்வு பெற்று, புதியன பெற்று வளர்கிறது தமிழுலகம். புதிய பாட்டை வகுத்த புரட்சிக் கவிஞருக்கு நூற்றாண்டு.

பாரதியைப் போல் வீடுதோறும் பாரதிதாசன் கவிதைகளும், மலிவுப் பதிப்புக்களும், பரிசுப் பதிப்புக்களும், செம்பதிப்புக்களும், கையடக்கப் பதிப்புக்களும், பையடக்கப் பதிப்புக்களும் பல்கிட அரசும், பதிப்பகங்களும் வழிவகை செய்திட வேண்டும்.

கவிதையின் பரப்பை, ஆழத்தை, அகலத்தை, உயரத்தை, நுண்மையை, செம்பதிப்பு புலப்படுத்துகிறது. வற்றாத தமிழில் வளமான கற்பனைகள் எண்ணில; கற்பனை உத்திகள் பற்பல.

பாரதிக்குப்பின் தமிழ்க்கவிதையுலகில் தனிச் சிறப்பிடம் பெற்றவர் பாரதிதாசன். பாரதி தொடங்கிய தமிழ்வழிபாடு பாரதி தாசனால் விரிவு பெற்றது. நிறைவு பெறுகிறது. நாட்டு விடு தலையைப் பாரதியும், மக்களின் அக விடுதலை, பொருளாதார விடுதலை, மொழி விடுதலை முதலியவற்றைப் பாரதிதாசனும் அழுத்தமாகப் பாடியுள்ளனர்.

பாரதியினும் எளிய மொழி. பழகு தமிழ். கவிஞரின் தமிழ்க்கவிதைக்கு ஊட்டமாய் அமைகின்றன. பாரதிதாசன் பாதிப்பு கடந்த ஐம்பது ஆண்டுகளில் 1940 – 1990 தமிழில் நீக்கமற நிறைந் துள்ளது.

பாரதிதாசன் பரம்பரை ஐம்பது, அறுபதுகளில் முத்திரை பதித்தது. எழுபது, தொண்ணூறுகளில் அடுத்த அணி இன்னும் புது முயற்சி களில் புதிய வேதம் படைத்தது. பாரதிதாசனின் சுவடு பதியாத பாடல் இல்லை. அவர் ஒளிவீச்சு, அழகு செய்யாத கவிதை இல்லை. வளரும் தமிழ் இலக்கியத்தில் கவிஞரின் பதிவு மிகுதி. நேரடி நிழல்களும் உண்டு. நிழலுக்கு நிழல்களும் உண்டு.

தமிழ் வழிபாடு,

இன உணர்வு,

இயற்கை, பாடுபொருள் ஆயின. கவிஞரின் உவமை, தொடர் கள், சொல்லாட்சிகள் கவிஞர்கள் எல்லோரிடத்தும் பாதிப்பை உண்டாக்கியுள்ளன. சீர்திருத்தச் செம்மலாகிய பாரதிதாசனின் சீர்திருத்தப் பணி, தனித்ததொரு பேராய்வுக்கு உரியது.

கவிஞர் அவர்கள் வானொலியில் பொங்கல் நாளில் பாட்டரங் கில் அமிழ்து எது என்று பாடினார். அது தேனென இனித்தது, என்றும் தெவிட்டாததாக அமைந்தது. பலமுறை படித்தேன், ஒவ் வொரு வரியும் ஒரு படித் தேன். தமிழ் கற்க விரும்புவோர்க்கு அஃது ஒரு தமிழ் உணர்வு. கவிஞரின் படைப்பாற்றலை, படைப்புக் கூறு களை, படைப்பு நுட்பங்களைத் திறனாய்ந்து உணரத் தொடங்கி விட்டது தமிழகம்.

கவிஞரின் படைப்புக் கொள்கைகளை, இலக்கிய உருவாக்க நெறிகளை, கவிஞரின் காதற் கொள்கைகளை, அகப் பொருள் அழகுகளை, மொழி நலத்தினை, உணர்வுகளைச் சுவைத்து இன்புற வேண்டும்.

தமிழ் மறுமலர்ச்சியுறும் இந்நாளில், அவர்தம் கருத்து ஒவ்வொன்றும் நம்மை ஒருபடி உயர்த்துகின்றது என்பதை உளமார உணர்கிறோம். கவிஞர் தம் குருவாகிய பாரதியாரைப் பாட்டினால் வழிபட்டார். இக்கருத்தோவியம் காலமெல்லாம் தமிழ்க் கருத்துலகுக்கு வளம் சேர்ப்பதாகுக! இவ்வண்ண ஓவியம் வளர் தமிழுக்கு ஒரு பொன்னோவியம்!

பாவேந்தரின் கவிதைகளை செம்பதிப்பாக வெளியிடும் நல்வாய்ப்பை எண்ணிப் பெருமையும், பெருமிதமும், பேருவகை யும் கொள்கிறேன். பாவேந்தரின் படைப்புகளை நாட்டுடைமை யாக்கிய தமிழக அரசுக்குத் தமிழ் மக்களின் நன்றி என்றும் உரியது. எதிர்காலத்தில் பாவேந்தர் நூல்கள் வெளியிடும் மாபெரும் திட்டத்திற்கு இஃது ஓர் தொடக்கமே.

# பாவேந்தர் பாரதிதாசன் வாழ்க்கைக் குறிப்புகள்

**1891** – ஏப்பிரல் 29, புதன் இரவு 10–15 மணிக்குப் புதுவையில் சுப்புரத்தினம் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி.

**1895** – ஆசிரியர் திருப்புளிசாமி அய்யாவிடம் தொடக்கக் கல்வி. இளமையிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெறுதல்.

**1908** – முதுபெரும் பு லவர் பு .அ. பெரியசாமியிடமும், பின்னர் பு லவர் பங்காரு பத்தரிடமும், தமிழ் இலக்கண– இலக்கியங்களையும், சித்தாந்த வேதாந்தப் பாடங்களையும் கற்றல். மாநிலத்திலேயே முதல் மாணவ ராகச் சிறப்புறல். புலவர் சுப்புரத்தினத்தை, வேணு நாயகர் வீட்டுத் திரு மணத்தில் பாரதியார் காணல். பாரதியாரின் எளிய தமிழ் சுப்பு ரத்தினத்தைப் பற்றுதல்.

**1909** – காரைக்கால் சார்ந்த நிரவியில் ஆசிரியர் பணி ஏற்றல்.

**1918** – பாரதியாரின் சாதி மதம் கருதா, தெளிந்த உறுதியான கருத்து களால் ஈர்ப்புற்றுத் தெய்வப் பாடல்களைப் பழகு தமிழில் எழுதுதல். புதுவை தமிழக ஏடுகளில் கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல் காரன், பாரதிதாசன் என்ற பெயர்களில், பாடல், கதை, கட்டுரை, மடல் கள் எழுதுதல். 10 ஆண்டுக்காலம் பாரதியார்க்கு உதவியும் உறுபொருள் கொடுத்தும் தோழனாய் இருத்தல்.

**1919** – திருபுவனையில் ஆசிரியராக இருக்கையில் பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல்பட்டார் என்று குற்றம்சாட்டி 1 1/4 ஆண்டு சிறை பிடித்த அரசு, விடுதலை செய்தது. வேலை நீக்க வழக்கில் கவிஞர் வென்று பணியில் சேர்தல்.

**1920** – இந்திய விடுதலை அறப்போராட்டத்தில் பங்கேற்றல். புவ னகிரியைச் சேர்ந்த பெருமாத்தூர் பரதேசியார் மகள் பழனி அம்மையைத் திருமணம் செய்தல்.

**1921** –பாரதியார் மறைவு (12.9.21)

**1926** – ஸ்ரீமயிலம் சுப்ரமணியர் துதியமுது நூலை இயற்றல்.

**1928** – நவம்பர் 3, கோபதி (மன்னர் மன்னன்) பிறப்பு.

**1929** – 'குடியரசு', 'பகுத்தறிவு' ஏடுகளில், பாடல், கட்டுரை, கதை எழுதுதல். குடும்பக் கட்டுப்பாடு பற்றி இந்தியாவிலே பாட்டெழுதிய முதற் பாவலர்.

**1930** – பாரதி, புதுவை வருகைக்கு முன்னும் பின்னும், பாடிய சிறுவர் சிறுமியர் தேசிய கீதம், தொண்டர் நடைப்பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு ஆகியவற்றை நூல் வடிவில் வெளியிடல். சஞ்சீவி பர்வதத்தின் சாரல், தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு நூல்களை வெளியிடல். டிசம்பர் 10இல் 'புதுவை முரசு' கிழமை ஏட்டின் ஆசிரியர் பொறுப்பேற்றல்.

**1933** – மா. சிங்காரவேலர் தலைமையில் சென்னையில் நடந்த நாத்திகர் மாநாட்டின் பதிவேட்டில் 'நான் ஒரு நிரந்தரமான நாத்திகன்' என்று எழுதிக் கையெழுத்திடல்.

**1934** – முழுநிலா இரவில் தோழர் ப. ஜீவானந்தம், குத்தூசி குருசாமி, குஞ்சிதம், மயிலை சீனிவேங்கடசாமி, மாயூரம் நடராசன், சாமி சிதம்பரனார், நாரண துரைக்கண்ணனுடன் படகில் மாமல்லபுரம் செல்லல். 'மாவலிபுரச் செலவு' பாடல் பிறந்தது.

**1935** – இந்தியாவில் முதல் பாட்டேடான – 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' தொடக்கம். இதற்கு உறுதுணையாக இருந்தவர் எஸ்.ஆர். சுப்பிரமணியம்.

**1937** – புரட்சிக்கவி – குறுங்காவியம் வெளியிடல்.

**1938** – பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியைக் கடலூர் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி, நாராயணசாமி நாயுடு ஆகியோர் பொருள் உதவியால் வெளியிடுதல். பெரியார் 'தன்மான இயக்கத்தின் சிறந்த பாவலர்' என்று பாராட்டுதல்.

**1941** – எதிர்பாராத முத்தம் (குறுங்காவியம்.)

**1942** – குடும்ப விளக்கு I வெளியிடுதல்.

**1943** – பாண்டியன் பரிசு (காவியம்) வெளியிடல்.

**1944** – இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு (நாடகம்), அழகின் சிரிப்பு ஆகிய நூல்கள்ள ஒன்றன் பின் ஒன்றாய் வெளியிடல். குடும்ப விளக்கு II வெளியிடல். செட்டிநாடு முழுவதும் இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்திப் பகுத்தறிவு இயக்கத்தைக் காலூன்றச் செய்தல்.

**1945** – புதுவை, 95, பெருமாள் கோயில் தெரு வீட்டை வாங்குதல், தமிழியக்கம் (ஒரே இரவில் எழுதியது), எது இசை நூல்கள் வெளியிடல்.

**1946** – 'முல்லை' இதழ் தொடங்கல். அமைதி – ஊமை நாடகம் வெளியிடல். (29.7.46) பாவேந்தர் 'புரட்சிக் கவி' என்று போற்றப்பட்டு ரூ.25000 கொண்ட பொற்கிழியைப் பெறுதல். நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னாடை போர்த்தல். அறிஞர் அண்ணா நிதி திரட்டித் தருதல்.

**1947** – புதுக்கோட்டையிலிருந்து குயில் 1, 2 மாத வெளியீடு. 'சௌமியன்.' நாடக நூல், பாரதிதாசன் ஆத்திசூடி வெளியிடுதல். சென்னையில் 'குயில்', இசையமுது வெளியிடல்; புதுவையிலிருந்து 'குயில்' இதழ் ஆசிரியர் – வெளியிடுபவர். கவிஞர் பேசுகிறார் (சொற் பொழிவு நூல்.)

**1948** – காதலா கடமையா?' (காவியம்), முல்லைக்காடு, இந்தி எதிர்ப்புப் பாடல்கள், படித்த பெண்கள் (உரை நாடகம்), கடல்மேற்குமிழிகள் (காவியம்), குடும்ப விளக்கு III, திரா விடர் திருப்பாடல், அகத்தியன் விட்ட புதுக்கரடி நூல் வெளியிடல்.

**1949** – பாரதிதாசன் கவிதைகள் 2 ஆம் தொகுதி, சேரதாண்டவம், தமிழச்சியின் கத்தி (குறுங்காவியம்), ஏற்றப்பாட்டு வெளியிடல்.

**1950** – குடும்ப விளக்கு IV, குடும்ப விளக்கு V வெளியிடல்.

**1951** – அமிழ்து எது? – கழைக்கூத்தியின் காதல் வெளியிடல்.

**1954** – பொங்கல் வாழ்த்துக் குவியல் வெளிவரல், குளித்தலையில் ஆட்சிமொழிக் குழுவிற்குத் தலைமை ஏற்றல்.

**1955** – புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றியுற்று அவைத் தலைமை ஏற்றல். பாரதிதாசன் கவிதைகள் – மூன்றாம் தொகுதி வெளியிடல்.

**1956** – தேனருவி இசைப்பாடல்கள் வெளியிடல்.

**1958** – தாயின் மேல் ஆணை; இளைஞர் இலக்கியம் வெளியிடல், தமிழகப் பு லவர் குழுவின் சிறப்பு றுப்பினராதல், 'குயில்' கிழமை ஏடாக வெளிவருதல்.

**1959** – பாரதிதாசன் நாடகங்கள், குறிஞ்சித் திட்டு வெளியிடல், பிசிராந்தையார் நாடகம் தொடர்தல், 1.11.50 முதல் திருக்குறளுக்கு வள்ளுவர் உள்ளம் என்ற உரை விளக்கம் எழுதுதல்.

**1961** – சென்னைக்குக் குடிபெயர்தல், பாண்டியன் பரிசு – திரைப்படம் எடுக்கத் திட்டமிடல். செக் நாட்டு அறிஞர் கமில் சுவலபில் செக் மொழியில் பெயர்த்த பாவேந்தரின் பாடல்களைக் கொண்ட நூலைப் பெறுதல்.

**1962** – சென்னையில் மீண்டும் 'குயில்' கிழமை ஏடு (15.4.62). அனைத்துலகக் கவிஞர் மன்றத் தோற்றம். கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா வெளியிடல்.

**1962** – மூதறிஞர் இராசாசி, தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கல்.

**1963** – பன்மணித்திரள் நூல் வெளியீடு. 72ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா.

**1964** – பொது மருத்துவமனையில் ஏப்பிரல் 21இல் இயற்கை எய்துதல். மறுநாள் புதுவை கடற்கரையில் உடல் அடக்கம். வாழ்ந்த காலம் 72 ஆண்டு, 11 மாதம், 28 நாள்.

**1965** – ஏப்பிரல் 21, புதுவை கடற்கரை பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசன் நினைவு மண்டபம், புதுவை நகராட்சியினரால் கட்டப்பெற்றது.

**1968** – சென்னையில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது, பாவேந்தரின் திருஉருவச்சிலை, மெரினா கடற்கரையில் திறந்து வைக்கப்பட்டது.

**1969** – பிசிராந்தையார் நூல் பரிசுக்குத் தேர்ந்தெடுத்தல்.

**1970** – மார்ச்சு, கவிஞரின் 'பிசிராந்தையார்' நாடக நூலுக்கு சாகித்திய அகாதமி ரூ.5000 பரிசு வழங்கியது.

**1971** – ஏப்பிரல் 29இல் பாவேந்தரின் பிறந்த நாள் விழா புதுவை அரசு விழாவாகக் கொண்டாடப்பெற்றது. ஆண்டு தோறும் அரசு விழா எடுக்கிறது. பாவேந்தர் வாழ்ந்த பெருமாள் கோயில் தெரு 95–ஆம் எண் இல்லம் அரசுடைமையாயிற்று. அங்கே புரட்சிக் கவிஞர் நினைவு நூலகம் – நினைவகம் அருங்காட்சியகமாக கவிஞரின் ஆவணக் காப்பகமாகத் திகழ்கிறது.

**1972** – ஏப்பிரல் 29, பாவேந்தரின் முழு உருவச்சிலை புதுவை அரசினரால் திறந்து வைக்கப்பெற்றது.

# நானோர் பாவேந்தன்

## பாரதிதாசனார் தம்மைப்பற்றி இயற்றிய கவிதை

தமிழி லக்கணம், தமிழி லக்கியம்
என்க்குச் சொல்லிக் கொடுத்தவர், புதுவைத்
திருப்புளி சாமி ஐயா, செந்தமிழ்
இருப்பே என்னும் பங்காரு பத்தர்,
புலவர்க்குப் புலமை ஈந்து நிலவு
பெரும்புகழ்ப் பெரிய சாமிப் பிள்ளை
என்பவர் ஆவர்.
இவர்களின் அருளினால்
பதினே ழாண்டும் பற்றா இளையேன்
நாற்பது புலவர் தேர்தலில் முதலாத்
தேர்வு பெற்றேன்.
காரைக் காலின்
ஒரு பகுதி யான "நிரவியில்" ஓர் இடம்
ஓர்ஆ சிரியர் தேவைஎன் றதனால்
அந்த இடத்தை அடையக் கருதிப்
புலவர் பல்லோர் போட்டி இட்டனர்.
யானும் பதினெட்டாண் டெய்தினேன். ஆயினும்
"இளையன் ஆதலால் அவன்அவ் விடத்தை
அடைதல் ஆகா தென்றனர்" ஆள்வோர்.
ஆயினும் நானே அதனை அடையச்
சட்டங் காட்டித் தடைகளை நீக்கி
அன்றுஎனை நிரவி ஆசிரியன் ஆக்கினார்.
அவர் யார்?
கல்வித் துறைச்செய லாளர்
பொய்இலா ராகிய "கையார்" என்க.
முப்பத் தேழாண் டலுவல் பார்த்தேன்.
ஓய்வு பெற்றேன் ஊதியப் பேற்றுடன்.
அலுவலில் இருந்த அத்தனை நாளிலும்
அறவழி தவறிய அதிகா ரிகளின்
எதிர்ப்பிலா நேரமே இல்லை; அக் கடலை
வென்று நீந்தா வேளையே இல்லை.
அலுவல் கால நிலைஇது.

ஆயினும்,

ஆசை பற்றிய தமிழின் தொண்டில்
ஒட்டிய என்உளம் வெட்டினும் பிரியாது.
வெண்பா முதலிய எழுதும் என்கை;
வண்ணம்பாடிக் கொண்டிருக் கும்வாய்!
முப்ப தாண்டு முடியும் வரைக்கும்நான்
எழுதிய அனைத்தும் என்ன சொல்லும்?
கடவுள் இதோஎன்று மக்கட்குக் காட்டிச்
"சுடச்சுட அவன்அருள் துய்ப்பீர்" என்னும்!
ஆயினும்,
கடவு ளுருவம் அனைத்தையும்
தடவிக் கொண்டுதான் இருந்ததென் நெஞ்சம்!
பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிர மணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை, புதுநடை காட்டினார்.
நானும் அவர்க்கே எழுத்தியல் உதவுமோர்
தொண்டினால், அவர்க்கும், புலவர்க்கும் தோன்றும்
சண்டையில் வெற்றி கண்டிடச் செய்தேன்.
முட்புதர்க் களாப்பழம் அதனில் மொய்க்கும்
கட்புலம் போல என்றன் உள்ளம்,
சாதி என்பதோர் இடரைத் தவிர்த்தும்
சழக்கே என்பதோர் பெரும்படை தாக்கியும்
இளைஞர்க்குத் தமிழ்நலம் தந்து ஆசிரியர்
ஆக்குமோர் தொண்டினை நோக்கி நடந்தது.
நல்லா சிரியன்மார் நல்லா சிரியைமார்
பல்லோர் என்னிடம் பயின்றவர் இன்றும்
அலுவலில் அழகுற வாழ்கின் றார்கள்.
திலகர் செய்த உரிமைக் கிளர்ச்சியால்
கொலைமுதற் பற்பல குற்றம் சுமந்த
மாசிலா மனத்து மாட சாமியும்
அன்புறு பாரதி அரவிந் தர்முதல்
வன்முறை யுடையரால் வருந்துவார்க்கு உதவியாய்ப்
பன்முறைப் புதுவையில் செத்துப் பிழைத்தேன்.
மக்கள்நலம் காத்தல் கண்டுஆள வந்தார்
எக்கேடு சூழினும் அஞ்சேன்; ஒருநாள்
சிறைக்கதவு திறக்கப் பட்டது; சென்றேன்;
அறைக்கதவு புனிதப் பட்டது; மீண்டேன்.
புதுவை அரசியற் போரில் இறங்குவேன்;
இதைவை யேன்எனில் அதைவிட்டு வையேன்.

நாய்பல நாற்புறம் வாய்தி றக்கினும்
தாய்மொழித் தொண்டு தவறிய தில்லை.

நன்றி மறந்தவர் இன்று வரைக்கும்
குன்று கொணர்ந்து தூற்றுவர்; நன்றெனப்
பட்டதைச் செய்வேன்; பகைவருக்கு அஞ்சேன்.
வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் பிறரைத்
தூக்கி விடுவதில் சோர்ந்ததே இல்லை.
பூடிப்புத் தந்தேன் சோறுதந் தேன்தலை
எடுக்கச் செய்தேன்; என்தலை தனைஅவன்
அறுக்க முயன்ற போதும் சிரித்தேன்;
குறுக்கிற் பாய்ந்தும் பெரியவன் ஆகட்டும்
என்று நினைத்திருக் கின்றேன்; இன்றும்

என்கை பற்றி எழுந்து, பின் என்னையே
துன்பு றுத்தும் பிள்ளைகள் பற்றிய
கதைகள் பலஉள.
தடைகள் கணக்கில.
எதையும் தாண்டி இந்நாள் எழுபதாம்
ஆண்டினை, ஈளைநோய் அங்காந்த வாயையும்
தாண்டி அடைந்தேன்; சாவு தோற்றது!
மெய்யே!

ஆயினும் மெய்இலா உலகில்
என்னை இன்னும் வாழச் சொன்னார்
புலவர் இராம நாதன் அவர்கள்!
நானோர் பாவேந் தன்என் பதனை
நானிலத் தமிழர் நன்றே அறிவர்.

என்பாட்டுச் சுவையில் ஈடு பட்டவர்
நோக்கினால் நூற்றுக்கு நாற்ப தின்மர்.
என்நடை தம்நடை; என்யாப்புத் தம்யாப்பென்று
இந்நாள் எழுந்துள பாவலர் தம்மை
எண்ணினால், இருப்பவர் தம்மில் நூற்றுக்குத்
தொண்ணூற் றொன்பது பேர்எனச் சொல்லுவர்.
திரைப்படப் பாட்டும் பேச்சும் செய்பவர்
இருப்பிடம் என்றன் நூற்களின் இருப்பிடம்!
அவரால் வெளிவந் துள்ள திரைப்படம்
என்நூற் சொல்லை மாற்றியது குறிப்பிடும்!
பழியே தவர்மேல்? என்நூல் அல்லது
வழியே தவர்க்கு? கற்பனை ஏது?
கட்சித் தலைவர்தம் கட்சிக் குழந்தையின்
தொட்டில் ஆட்டப் பாடிய பாட்டும்

வளர்க்கப் பாடி வந்த பாட்டும்
என்பாட் டாகும்! என்பாட் டுக்குப்
பின்பாட்டுப் பாடினேன் அதனைத் தன்பாட்டு
என்று இயம்பும்—இது குன்றின் விளக்காம்!
எனினும்,

நாட்டுப் பற்றுள நல்லவர்
மிகப்பலர் என்றன் பாட்டின் மேன்மையை
உணர்ந்து சிலசொல் உரைத்த துண்டு;
முட்டுக் கட்டை இட்ட தில்லை.
மற்றும்,

தமிழே உயிரென வாழும்
தோழர் சில்லோர் வாழ்வின் பயனென
என்பாட் டுக்களை என்றன் நூல்களை
வரப் படுத்தி முறைப்படி வாய்விட்டு
வீட்டிலும் கூட்டந் தன்னிலும் மிக்க
ஒழுங்குறப் பாடு கின்றதும் உண்மையே.
ஒருநாள், ஓரிலக்கம் மக்கள் கூடிக்
கால்இ லக்கம் வெண்பொற் காசும்
பொன்னின் ஆடையும் ஈந்ததும் பொய்யன்று.
இவர்க ளன்றி மேல்நான் இயம்பிய
இழிந்தோர் என்னை ஒழிக்கத் தமிழையே
ஒழிக்கவும் தயங்கா உள்ளம் படைத்தவர்.
புலவர் இராம நாதன் அவர்கள்
தமது பெருந்தமிழ்ப் புலமையால் தாவி
என்றன் நூல்கள் அனைத்தையும் எடுத்துக்
"கவிஞரும் காதலும்" எனப்பெயர் கொடுத்துத்
திறனாய்வு வையம் காணச் செய்தார்.
நான்கா ணும்அவர் நல்ல எண்ணம்,
என்றன் எழுபதாம் ஆண்டின் பின்னும்
நன்றுநான் இன்பமாய் வாழ்வதற் கான
நோற்றலின் ஆற்றல் தருவதாம்!

வள்ளுவர்.

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கென் றருளினார்.
புலவர் இராம நாதனார் நூல்பல
உலகினுக் களித்துல குளவரை வாழ்கவே.

[1.3.60 ஆம் நாளன்று பாவேந்தர் எழுதிய இந்தப் பாடல், தஞ்சைப் புலவர் இராமநாதனார்க்கு வழங்கிய... வாழ்த்துருவில் நமக்குக் கிடைக்கப் பெற்றது!]

# உள்ளுறை

## முதல் தொகுதி


**காவியம்**

சஞ்சீவி பர்வதத்தின் சாரல் 1
புரட்சிக் கவி 14
வீரத்தாய் 29

**இயற்கை**

மயில் 41
சிரித்த முல்லை 42
உதய சூரியன் 42
காடு 43
கானல் 44
மக்கள் நிலை 45
காட்சி இன்பம் 47

**காதல்**

மாந்தோப்பில் மணம் 48
காதற் கடிதங்கள் 50
காதற் குற்றவாளிகள் 51
எழுதாக் கவிதை 53
காதற் பெருமை 54
காதலைத் தீய்த்த கட்டுப்பாடு 57
தலைவி காதல் 60
விரகதாபம் 60

**தமிழ்**

தமிழின் இனிமை 61
இன்பத் தமிழ் 62
தமிழ் உணவு 63
தமிழ்ப் பேறு 64
எங்கள் தமிழ் 65
தமிழ் வளர்ச்சி 66
தமிழ்க் காதல் 66
எந்நாளோ? 67
சங்கநாதம் 69
தமிழ்க் கனவு 69

**பெண்ணுலகு**

பெண்களைப் பற்றி பெர்னாட்ஷா 71
கைம்மைப் பழி 71
கைம்மைக் கொடுமை 73
மூடத்திருமணம் 74
எழுச்சியுற்ற பெண்கள் 75
குழந்தை மணத்தின் கொடுமை 77
பெண்ணுக்கு நீதி 78
கைம்பெண் நிலை 79
இறந்தவன்மேற் பழி 80
கைம்மைத் துயர் 80
கைம்மை நீக்கம் 81
தவிப்பதற்கோ பிள்ளை? 82
ஆண் குழந்தை தாலாட்டு 84
பெண் குழந்தை தாலாட்டு 85

**புதிய உலகம்**

உலக ஒற்றுமை 86
பேரிகை 86
தளை அறு! 87
கூடித் தொழில் செய்க 88
தொழிலாளர் விண்ணப்பம் 89
வாழ்வில் உயர்வு கொள்! 91
மாண்டவன் மீண்டான்! 92
ஆய்ந்து பார்! 94
மானிட சக்தி 95
முன்னேறு! 96
உலகப்பன் பாட்டு 96
உலகம் உன்னுடையது! 97
சாய்ந்த தராசு 99
வியர்வைக் கடல் 99
நீங்களே சொல்லுங்கள்! 101
புதிய உலகு செய்வோம் 102
பலிபீடம் 103
சகோதரத்துவம் 104
சேசு பொழிந்த தெள்ளமுது 104

**பன்மணித்திரள்**

தமிழ்நாட்டிற் சினிமா! 106
புத்தகசாலை 108
வாளினை எடடா! 109
வீரத்தமிழன் 110
சைவப்பற்று 111
எமனை எலி விழுங்கிற்று 113
சுதந்தரம் 114

நம் மாதர் நிலை 115
ஏசுநாதர் ஏன் வரவில்லை? 115
கடவுள் மறைந்தார்! 116
உன்னை விற்காதே! 116
பத்திரிகை 117
யாத்திரை போகும் போது 119
பூசணிக்காய் மகத்துவம் 119

## இரண்டாம் தொகுதி

திராவிடர் நாட்டுப்பண் 120

### சிறுகாப்பியம்

போர் மறவன் 121
ஒன்பது சுவை 123
காதல் வாழ்வு 128

### இயற்கை

இயற்கைச் செல்வம் 132
அதிகாலை 132
வானம்பாடி 133
மாவலிபுரச் செலவு 134
இருசுடரும் என் வாழ்வும் 136
தென்றல் 137

### காதல்

தொழுதெழுவாள் 138
சொல்லும் செயலும் 141
இருவர் ஒற்றுமை 141
பந்துபட்டதோள் 142
தன்மான உலகு 143
மெய்யன்பு 144
பெற்றோர் இன்பம் 145
பணமும் மணமும் 148
திருமணம் 149

### கருத்துரைப் பாட்டு

தலைவன் கூற்று 150
தலைவி கூற்று 151
தோழி கூற்று 151
கதவுபேசுமா? 151

### பாரதி

புதுநெறிகாட்டிய புலவன் 152
தேன்கவிகள் தேவை 157
பாரதி உள்ளம் 159
மகா கவி 160
செந்தமிழ்நாடு 162
திருப்பள்ளி எழுச்சி 163
நாடக விமரிசனம் 163

### திராவிட நாடு

இனப் பெயர் 164
திராவிடன் கடமை 167
அது முடியாது 167
பிரிவு தீது 168
உணரவில்லை 169
உயிர் பெரிதில்லை 169
இனி எங்கள் ஆட்சி 170
தமிழனுக்கு வீழ்ச்சி இல்லை 171
தமிழன் 172
பகை நடுக்கம் 172
கூவாய் கருங்குயிலே 173
தமிழர்களின் எழுதுகோல் 174
இசைத் தமிழ் 175
சிறுத்தையே வெளியே வா! 175
தீவாளியா? 176
பன்னீர்ச் செல்வம் 177

### பன்மணித்திரள்

அறம் செய்க 179
கற்பனை உலகில் 179
குழந்தை 181
தொழில் 181
குழந்தைப் பள்ளிக்கூடம் தேவை 183
கடவுள் மறைந்தார் 184
கடவுளுக்கு வால் உண்டு 184
நம் மாதர் 185
மலையிலிருந்து! 186
எந்த நாளும் உண்டு 186
பெண்குரங்குத் திருமணம் 187
கற்பின் சோதனை 187
தலையுண்டு செருப்புண்டு 188
எண்ணத்தின் தொடர்பே 188
சங்கங்கள் 189
குடியானவன் 191
மடமை ஓவியம் 194
நாடகம்—சினிமா நிலை 195
படத்தொழிற் பயன் 196
வள்ளுவர் வழங்கிய முத்துக்கள் 198

இசைபெறு திருக்குறள் 199
வாழ்வு 201
கொட்டு முரசே! 202

## மூன்றாம் தொகுதி

கடற்மேற் குமிழிகள் 203
அமிழ்து எது? 262
அகத்தியன் விட்ட புதுக்கரடி 276
நல்லமுத்துக் கதை 280
ஏற்றப் பாட்டு 300

### திராவிடர் திருப்பாடல்

காலைப் பத்து 314
விடுதலைப் பாட்டு 316
இராப்பத்து 317
திராவிடர் ஒழுக்கம் 319
அன்னை அறிக்கை 321
சமத்துவப் பாட்டு 322
ஆலய உரிமை 336
ஞாயமற்ற மறியல் 340
சேசு பொழிந்த தெள்ளமுது 343
புரட்சித் திருமணத் திட்டம் 355

## நான்காம் தொகுதி

பொன் அத்தான்! 354
நினைவு வராதா? 355
இது மறதியா? 356
மறப்பதெப்படி? 356
அழுதேன்; பிறகு சிரித்தேன்! 357
ஒருத்தனுக்கு ஒருத்தி 358
அவள் துடிப்பு! 359
அவன் வாராதபோது 359
பொழுது விடியவில்லை! 360
நேயனை அழைத்து வா! 361
நானா? அவளா? 361
தவளை போல் குதிக்காதீர்! 362
அவன் எனக்குத்தான்! 363
தென்றல் செய்த குறும்பு! 364
தோழியே சொல்வாய்! 364
தீராதோ காதல் நோய்? 365
திருமணம் எனக்கு! 365
முத்து மாமா! 366
அறுவடைப் பாட்டு! 366
மணக்க என்றான்! 367
இன்பத்தின் துன்பம்! 368
சேவலைப் பிரிந்த அன்றிற் பேடு 368
மணவாளனைப் பறிகொடுத்த மங்கை அழுகின்றாள் 369
சாவை நீக்கு 369
நீ எனக்கு வேண்டும்! 370
இன்பம் அனைத்தும்! 370
தொல்லை தீர்க்கலாம் 371
உன் எண்ணம் கூறு! 372
வந்தேன் நான்; நீ இல்லையே! 372
அவளில்லையே! 373
திருக்குறள் படித்தான் 373
பறந்துவந்த கிளியே! 374
அவளையா மணப்பேன்? 375
சிரிப்பே குத்தகைச் சீட்டு 375
அவளும் நானும் 376
இரும்பினும் பொல்லா நெஞ்சினள் 377
ஒட்டாரம் செய்வது 377
வந்தாள் 378
இவள்?... தேன்! 379
கனியே, நாம் தன்னந்தனி! 379
வண்ணத் தமிழாள் 380
பாரதி போல்வாள்! 381
வீடும் பாலையே! 382
பிணித்தது நெற்றி! பிடிபட்டது யானை! 382
வருவார் என்பதால் இருந்தேன்! 383
தமிழ் மகளே வேண்டும்! 383
கற்பே உயிர்... 384
சோறல்ல கோவைப்பழம்! 384
வண்டி முத்தம் 385
அவனும் அவளும் 386
வண்டும் வேங்கையும் 387
இன்பம் எங்கும் இன்பம் 388
தேனமுதே! 388
மகிழ்ச்சி வேண்டுமா? 389

| | |
|---|---|
| மகளே வாழ்க! | 390 |
| எதிர்பார்க்கும் ஏந்திழை | 391 |
| அன்பன் வந்தால் அப்படி! | 391 |
| தோப்புக்குள்ளே மாப்பிள்ளை | 392 |
| அயல்மனை விரும்பியவன் பட்டபாடு | 393 |
| அவள் அடங்காச் சிரிப்பு | 394 |
| பள்ளிக்குப் போகும் புள்ளிமான் | 395 |
| இன்றைக்கு ஒத்திகை | 396 |
| பேசுதற்குத் தமிழின்றிக் காதலின்பம் செல்லுமோ? | 396 |
| இன்பம் | 398 |
| பச்சைக்கிளி | 402 |
| பால்காரன்பால் அன்பு | 404 |
| நிலவு சிரித்தது | 405 |
| காதல் வலியது போலும்! | 405 |
| **நாடு** | |
| தமிழகம் | 405 |
| எழில்மிகு தமிழ்நாடு | 407 |
| விடுதலை ஆசை | 407 |
| நாட்டியல் நாட்டுவோம்! | 408 |
| வள்ளுவர் வழி | 412 |
| துன்ப உலகிலும் தொண்டு! | 412 |
| தோழனே! உன்னிடம் சொல்வேன்! | 413 |
| புத்தர் புகன்றார் | 414 |
| நன்றி இது – தீது எது? | 415 |
| எது கலை? | 416 |
| இது... கலை! | 417 |
| ஒழுக்கம் விழுப்பந்தரும் | 418 |
| ஏன் நரைக்கவில்லை? | 419 |
| குட்டி நிலாவும் வட்ட நிலாவும் | 420 |
| கடன்பட உடன்படேல்! | 421 |
| கருத்தடை மருத்துவமனையில் ஒருத்தி வேண்டுகோள் | 422 |
| அரசினரே நடத்த வேண்டும்! | 422 |
| நிலையானது புகழ் ஒன்றே! | 423 |
| கையேந்துவார் மகிழ்ச்சி – கடவுள் மகிழ்ச்சி! | 424 |
| நம்பிக்கை வைத்தான்! | 425 |
| எவர்சில்வர் ஏனம் | 427 |
| ஏய்க்கின்றாரே! | 427 |
| சாவதற்கு மருந்து உண்டோ! | 428 |
| மக்கள் நிகர்! | 429 |
| உழைப்பவரும் ஊராள்பவரும் | 430 |
| புத்துணர்வு பெறுவீர்! | 430 |
| தொழில் | 431 |
| நலம் தேடு! | 432 |
| புத்தர் புகன்றார் இல்லை! | 432 |
| தமிழன் | 433 |
| நாம் தமிழர் என்று பாடு! | 433 |
| ஒற்றுமைப் பாட்டு | 434 |
| கொட்டடா முரசம் | 435 |
| மிடிமை தீரக் கடமை புரிவீர்! | 436 |
| எவன் தமிழன்? | 436 |
| மாணவர் ஒற்றுமை | 437 |
| குரங்கிலிருந்து மனிதனா? | 438 |
| தூங்கும் புலி எழுந்தது! | 439 |
| புலிக்கு நாய் எந்த மூலை! | 440 |
| வீட்டுக் கோழியும் காட்டுக் கோழியும் | 441 |
| சீனாக்காரன் தொலைந்தான் | 443 |
| அழைப்பு | 444 |
| உலகின் அமைதியைக் கெடுக்காதே! | 445 |
| முனையிலே முகத்து நில்! | 446 |
| கதர் இராட்டினப் பாட்டு | 449 |
| இராட்டினச் சிறப்பு | 454 |
| பாரததேவி வாழ்த்து | 457 |
| முன்னேறு... | 458 |
| சுயமரியாதை எக்காளம் | 459 |
| பெண்கள் பாட்டு | 460 |
| பிள்ளைப் பாட்டு | 461 |
| வாழ்க திராவிடம் | 462 |
| பாரீஸ் விடுதலை விழா! | 463 |
| என் கருத்தில்... | 465 |
| "தீவாளியா?" | 466 |
| கூதிர் விழா | 468 |
| பாடல் முதற்குறிப்பகராதி | 469 |

# பாரதியார் முன்!

மகாகவி பாரதியாரின் விருப்பப்படி நம் புரட்சிக் கவிஞர் அவர்கள் முதன்முதலில் பாடிய பாட்டு இதன் கீழ்க் காணப்படுவது. இந்தப் பாடல் பல பத்திரிகைகளில் – பல மொழிகளில் வெளி வந்துள்ளது! இந்தப் பாட்டின் மூலம் நம் கவிஞர் தமிழ் நாட்டிற்கு அறிமுகமானார்.

எங்கெங்குக் காணினும் சக்தியடா,—தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா!—அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா!—ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ?—எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம்—அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!

காளை ஒருவன் கவிச்சுவையைக்—கரை
காண நினைத்த முழுநினைப்பில்—அன்னை
தோளசைத்தங்கு நடம்புரிவாள்—அவன்
தொல்லறிவாளர் திறம் பெறுவான்—ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே—இந்த
வையமுழுவதும்துண்டு செய்வேன்—என
நீள இடையின்றி நீ நினைத்தால்—அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே!

# காவியம்

## 1. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

குயில்கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்கஉண்டு;
பூக்கள் மணங்கமழும்; பூக்கள்தொறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்;
வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு;
காட்டு மறவர்களும் காதல்மணம் செய்வதுண்டு;
நெஞ்சில் நிறுத்துங்கள்; இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல்என்று சொல்லிடுவார்.

* * * *

சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே ஓர்நாளில்
கொஞ்சம் குறையமணி நான்காகும் மாலையிலே
குப்பன் எனும்வேடக் குமரன் தனியிருந்து
செப்புச் சிலைபோலே தென்திசையைப் பார்த்தபடி
ஆடா தசையாமல் வாடிநின்றான். சற்றுப்பின்,
வாடாத பூமுடித்த வஞ்சிவரக் கண்டான்.
வரக்கண்ட தும்குப்பன் வாரி அணைக்கச்
சுரக்கின்ற காதலொடு சென்றான் — 'தொடாதீர்கள்!'
என்றுசொன் னாள்வஞ்சி. இளையான் திடுக்கிட்டான்.

* * * *

குன்றுபோல் நின்றபடி குப்பன் உரைக்கின்றான்:
'கண்ணுக்குள் பாவையே! கட்டமுதை நான்பசியோ
டுண்ணப்போம் போதுநீ ஓர்தட்டுத் தட்டிவிட்டாய்!
தாழச் சுடுவெய்யில் தாளாமல் நான்குளிர்ந்த
நீழலைத்தா வும்போது நில்என்று நீதடுத்தாய்!
தொட்டறிந்த கையைத் தொடாதேஎன் றாய்! நேற்றுப்
பட்டறிந்த தேகசுகம் விட்டிருக்கக் கூடுவதோ?
உன்னோடு பேச ஒருவாரம் காத்திருந்தேன்;
என்னோடு முந்தாநாள் பேச இணங்கினாய்!
நேற்றுத்தான் இன்பக் கரைகாட்டி னாய்! இன்று
சேற்றிலே தள்ளிவிட்டாய்! காரணமும் செப்பவில்லை'.

* * * *

என்றுரைக்கக் கேட்ட இளவஞ்சி, 'காதலரே!
அன்றுநீர் சொன்னபடி அவ்விரண்டு மூலிகையைச்
சஞ்சீவி பர்வதத்தில் தையலெனைக் கூட்டிப்போய்க்
கொஞ்சம் பறித்துக் கொடுத்தால் உயிர்வாழ்வேன்.
இல்லையென்றால் ஆவி இரா' தென்றாள். வேட்டுவன்
'கல்லில் நடந்தால்உன் கால்கடுக்கும்' என்றுரைத்தான்.
'கால்இரண்டும் நோவதற்குக் காரணமில்லை. நெஞ்சம்,
மூலிகைஇ ரண்டின்மேல் மொய்த்திருப்ப தால்' என்றாள்.
'பாழ்விலங்கால் அந்தோ! படுமோசம் நேரும்'என்றான்.
'வாழ்வில்எங்கும் உள்ளதுதான் வாருங்கள்' என்றுரைத்தாள்.
'அவ்விரண்டு மூலிகையின் அந்தரங்கம் அத்தனையும்,
இவ்விடத்திற் கேட்டுக்கொள்' என்றுரைப் பான்குப்பன்:
'ஒன்றைத்தின் றால்இவ் வுலகமக்கள் பேசுவது
நன்றாகக் கேட்கும்மற் றொன்றைவா யில்போட்டால்
மண்ணுலகக் காட்சிஎலாம் மற்றிங் கிருந்தபடி
கண்ணுக் கெதிரிலே காணலாம். சொல்லிவிட்டேன்;
ஆதலால் மூலிகையின் ஆசை தணி' என்றான்.
'மோதிடுதே கேட்டபின்பு மூலிகையில் ஆசை' என்றாள்.
'என்னடி! பெண்ணேநான் எவ்வளவு சொன்னாலும்
சொன்னபடி கேட்காமல் தோஷம் விளைக்கின்றாய்;
பெண்ணுக் கிதுதகுமோ? வண்ணமலர்ச் சோலையிலே,
எண்ணம்வே றாகி இருக்கின்றேன் நான்' என்று
கண்ணைஅவள் கண்ணிலிட்டுக் கையேந்தி நின்றிட்டான்.

* * * *

'பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்என் கின்றீரோ?
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே.
ஊமைஎன்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு.
புலன்அற்ற பேதையாய்ப் பெண்ணைச்செய் தால்அந்
நிலம்விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே.
சித்ரநிகர் பெண்டிர்களைச் சீரழிக்கும் பாரதநற்
புத்ரர்களைப் பற்றியன்றோ பூலோகம் தூற்றுவது?
சற்றுந் தயங்கேன் தனியாய்ச்சஞ் சீவிமலை

உற்றேறி மூலிகையின் உண்மை அறிந்திடுவேன்;
மூலிகையைத் தேட முடியாவிட் டால்,மலையின்
மேலிருந்து கீழே விழுந்திறக்க நானறிவேன்.
ஊரிலுள்ள பெண்களெல்லாம் உள்ளத்தைப் பூர்த்திசெயும்
சீரியர்க்கு மாலையிட்டுச் சீரடைந்து வாழ்கின்றார்.
தோகைமயிலே! இதைநீகேள் சொல்லு கின்றேன்.
நாகம்போல் சீறுகின்ற நாதரிடம் சொல்லிவிடு.
பச்சிலைக்குச் சஞ்சீவி பர்வதம்செல் வேன்' என்றாள்.

* * * *

'அச்சுப் பதுமையே! ஆரணங்கே! நில்லேடி!
நானும் வருகின்றேன் நாயகியே! நாயகியே!
ஏனிந்தக் கோபம்? எழிலான காதலியே!'
என்றுகுப்பன் ஓடி இளவஞ்சி யைத்தழுவி
நின்றான். இளவஞ்சி நின்று மகிழ்வுற்றாள்.
'அவ்விரண்டு மூலிகையில் ஆரணங்கே நீஆசை
இவ்வளவு கொண்டிருத்தல் இப்போதுதான் அறிந்தேன்
கூட்டிப்போய்ப் பச்சிலையைக் கொய்து தருகின்றேன்;
நீட்டாண்மைக் காரி! எனக்கென்ன நீதருவாய்?'
என்று மொழிந்தான் எழுங்காத லால்குப்பன்.
'முன்னே இலைகொடுத்தால் முத்தம் பிற' கென்றாள்.
'என்கிளியே நீமுத்தம் எத்தனைஈ வாய்?' என்றான்.
'என்றன் கரத்தால் இறுக உனைத்தழுவி
நோகாமல் முத்தங்கள் நூறுகொடுப் பேன்' என்றாள்.
'ஆசையால் ஓர்முத்தம் அச்சாரம் போ'டென்றான்.

* * * *

'கேலிக்கு நேரம் இதுவல்ல, கேளுங்கள்;
மூலிகைக்குப் பக்கத்தில் முத்தம் கிடைக்கும்' என்றாள்.
குப்பன் தவித்திட்டான், காதற் கொடுமையினால்.
எப்போது நாம்உச்சிக் கேறித் தொலைப்பதென
அண்ணாந்து பார்த்திட்டான் அம்மலையின் உச்சிதனை!
கண்ணாட்டி தன்னையும்ஓர் கண்ணாற் கவனித்தான்.
வஞ்சிஅப் போது மணாளன் மலைப்பதனைக்
கொஞ்சம் அவமதித்துக் கோவை உதடு
திறந்தாள். திறந்து சிரிக்குமுன், குப்பன்
பறந்தான் பருவதமேல் பாங்கியையும் தூக்கியே.

கிட்டரிய காதற் கிழத்தி இடும்வேலை
விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ!
கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர்கடுகாம்.
மாமலைதான் சென்னி வளைந்து கொடுத்ததுவோ,
நாம்மலைக்கக் குப்பன் விரைவாய் நடந்தானோ,
மங்கையினைக் கீழிறக்கி, 'மாதே! இவைகளே
அங்குரைத்த மூலிகைகள்; அட்டியின்றிக் கிள்ளிக்கொள்'
என்றுரைத்தான் குப்பன். இளவஞ்சி தான்மகிழ்ந்து
சென்று பறித்தாள். திரும்பிச் சிறிதுவழி
வந்தார்கள். அங்கோர் மரத்து நிழலிலே
சிந்தை மகிழ்ந்து சிறக்க அமர்ந்தார்கள்.

* * * *

மூலிகையில் ஓர்இனத்தை முன்னே இருவருமாய்
ஞாலத்துப் பேச்சறிய நாக்கிலிட்டுத் தின்றார்கள்.
வஞ்சிக்கும் குப்பனுக்கும் வையத்து மாந்தர்களின்
நெஞ்சம் வசமாக நேரில்அவர் பேசுதல்போல்
செந்தமிழில் தங்கள் செவியிற்கேட் கப்பெற்றார்.
அந்த மொழிகள் அடியில் வருமாறு:

* * * *

"இத்தாலி தேசம் இருந்துநீ இங்குவந்தாய்;
பத்துத் தினமாகப் பாங்காய் உணவுண்ண
இவ்விடுதி தன்னில் இருந்து வருகின்றாய்!
'எவ்வாறு நான்சகிப்பேன் இந்தக் கறுப்பன்
எனக்கெதிரே உட்கார்ந் திருப்பதனை' என்றாய்;
'தனக்கெனவே நல்உணவுச் சாலைஒன் றுண்டாக்கி
அங்கவன் சென்றால் அடுக்கும்' எனஉரைத்தாய்;
இத்தாலிச் சோதரனே! என்ன மதியுனக்கே?
செத்து மடிவதிலும் சேர்ந்து பிறப்பதிலும்
இவ்வுலக மக்களிலே என்னபே தங்கண்டாய்?
செவ்வைபெறும் அன்பில்லார் தீயபே தம்கொள்வார்.
எங்கள் பிராஞ்சியர்கள் இப்பேதம் பாராட்டித்
தங்கள் பழங்கீர்த்தி தாழ்வடைய ஒப்பார்கள்;
பேதபுத்தி சற்றும் பிடிக்காது போ! போ! போ!
பேதம்கொண் டோர்க்குப் பிராஞ்சில் இடமில்லை"

என்ற மொழிகள் இவர்காதில் கேட்டவுடன்
நன்று பிராஞ்சியர்க்கு நாக்குளிர வாழ்த்துரைத்தார்.
பின்னர் அமெரிக்கன் பேசுவதைக் கேட்டார்கள்.
அன்னவன் பேச்சும் அடியில் வருமாறு:

* * * *

'நல்ல அமெரிக்கன் நானிலத்தில் வாழ்கின்ற
எல்லாரும் நன்றாய் இருக்க நினைத்திடுவான்.
பொல்லா அமெரிக்கன் பொன்னடைந்து தான்மட்டும்
செல்வனாய் வாழத் தினமும் நினைத்திடுவான்.
நல்லவனாய் நானிருக்க நாளும் விரும்புகிறேன்'
சொல்லும் இதுகேட்ட தோகையும் குப்பனும்,
'கொத்தடிமை யாகிக் குறைவுபடும் நாட்டுக்கு
மெத்ததுணை யாகியிவன் மேன்மை அடைக' என்றார்.
இங்கிலாந்து தேசம் இருந்தொருவன் பேசினான்;
இங்கிருந்து கேட்டார் இருவரும். என்னவென்றால்:

* * * *

'ஓ!என் சகோதரரே! ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
நாவலந் தீவு நமைவிட்டுப் போகாது.
வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள்என்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்;
ஆகையால் எல்லாரும் அங்கே தனித்தனிதான்.
ஏகமன தாகிஅவர் நம்மை எதிர்ப்பதெங்கே?
பேதம் வளர்க்கப் பெரும்பெரும்பு ராணங்கள்!
சாதிச்சண் டைவளர்க்கத் தக்கஇதி காசங்கள்!
கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்.
தேன்சுரக்கப் பேசிஇந்து தேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்.
இந்த உளைச்சேற்றை, ஏறாத ஆழத்தை
எந்தவிதம் நீங்கி நமைஎதிப்பார்? இன்னமும்,
சிந்தனா சக்தி சிறிதுமின்றி மக்களுக்குத்
தம்தோள் உழைப்பிலே நம்பிக்கை தானுமின்றி
ஊறும் பகுத்தறிவை இல்லா தொழித்துவிட்டுச்
சாரற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்றவைத்துப்
பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கி யேஅந்தக்

கற்கள் கடவுள்களாய்க் காணப் படும்அங்கே.
இந்த நிலையிற் சுதந்தரப் போரெங்கே?
கொந்தளிப்பில் நல்லதொரு கொள்கை முளைப்பதெங்கே?
'தேகம் அழிந்துவிடும்; சுற்றத்தார் செத்திடுவார்;
போகங்கள் வேண்டாம்; பொருள்வேண்டாம் மற்றுமிந்தப்
பாழுலகம் பொய்யே பரமபதம்போ' என்னும்
தாழ்வகற்ற எண்ணுங்கால் சாக்குருவி வேதாந்தம்.
சாதிப் பிரிவு சமயப் பிரிவுகளும்,
நீதிப் பிழைகள் நியமப் பிழைகளும்,
மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சிசெய்தே
ஓடச்செய்தால் நமையும் ஓடச்செய்வார் என்பேன்'.

* * * *

இந்தப் பிரசங்கம் இவ்விருவர் கேட்டார்கள்;
சொந்த நிலைக்குத் துயருற்றார். வஞ்சி
சிலைபோல் இருந்தாள்; திகைத்தாள்; பின் நாட்டின்
நிலையறிய நேர்ந்தது பற்றி மகிழ்ந்திட்டாள்!
'பச்சிலையால் நல்ல பயன்விளையும்' என்றுசொன்னாள்!
பச்சிலையைத் தந்த பருவதத்தைக் கும்பிட்டாள்.
'இந்த இலையால் இனிநன்மை கொள்க' என்று
சொந்தத் தாய்நாட்டுக்குச் சொன்னாள் பெருவாழ்த்து.
'வல்லமைகொள் பச்சிலையின் மர்மத்தைக் கண்டபடி
சொல்லிஎனைத் தூக்கிவந்து சூக்ஷுமத்தைக் காட்டிய, கண்
ணாளர்தாம் வாழ்வடைக' என்றாள்; அவனுடைய
தோளை ஒருதரம் கண்ணாற் சுவைபார்த்தாள்.
அச்சமயம் குப்பன், அழகியதன் தாய்நாட்டார்
பச்சைப் பசுந்தமிழில் பேசுவதைக் கேட்டிருந்தான்.
குப்பனது தோளில் குளிர்ந்தமலர் ஒன்றுவிழ
இப்பக்கம் பார்த்தான்; வஞ்சி இளங்கையால்
தட்டிய தட்டென்று சந்தேகம் தீர்ந்தவனாய்க்
'கட்டிக் கரும்பே! கவனம் எனக்கு
நமது தேசத்தில் நடக்கின்ற பேச்சில்
அமைந்து கிடக்கு' தென்றான். வஞ்சி அதுகேட்டே
'அன்னியர்கள்' பேசுவதில் அன்பைச் செலுத்துங்கள்:
கன்னத்தை மாத்திரம்என் கையிற் கொடுங்களென்றாள்.

'அன்பும் உனக்குத்தான்; ஆருயிரும் உன்னதுதான்
இன்பக் கிளியே! எனக்களிப்பாய் முத்த' மென்றான்.

* * * *

கையோடு கைகலந்தார்; முத்தமிடப் போகையிலே
ஐயையோ! ஐயையோ! என்ற அவலமொழி
காதிலே வீழ்ந்தது! முத்தம் கலைந்ததே!
'ஈதென்ன விந்தை? எழில் வஞ்சி! கேள்' என்றான்.
வஞ்சி கவனித்தாள். சத்தம் வரும்வழியாய்
நெஞ்சைச் செலுத்தினார் நேரிழையும் காதலனும்.

* * * *

'ஓர்நொடியிற் சஞ்சீவி பர்வதத்தை ஓடிப்போய்
வேரோடு பேர்த்துவர வேண்டுமே ஐயாவே!'
இப்பாழும் வாக்கை இருவரும் கேட்டார்கள்.
குப்பன் மிகப்பயந்து கோதைமுகம் பார்த்திட்டான்.
வஞ்சி யவள்நகைத்தே 'இன்ப மணாளரே!
சஞ்சீவி பர்வதத்தைத் தாவிப் பெயர்க்கும்
மனிதரும் இல்லை! மலையும் அசையாது!
இனிஅந்தச் சத்தத்தில் எண்ணம் செலுத்தாதீர்'
என்றுரைத்தாள் வஞ்சி. இதுசொல்லித் தீருமுன்,

* * * *

'நன்றாக உங்களுக்கு ராமன் அருளுண்டு;
வானம் வரைக்கும் வளரும் உடலுண்டே;
ஏனிங்கு நின்றீர்? எடுத்துவரு வீர்மலையை'

* * * *

என்றஇச் சத்தம் இவர்செவியில் வீழ்ந்தவுடன்
குன்று பெயர்வது கொஞ்சமும்பொய் யல்லவென்று
குப்பன் நடுநடுங்கிக் கொஞ்சுமிள வஞ்சியிடம்
'மங்கையே, ராமனருள் வாய்ந்தவனாம்; வானமட்டும்
அங்கம் வளர்வானாம்; அப்படிப் பட்டவனை
இந்தச்சஞ் சீவிமலை தன்னை யெடுத்துவர
அந்த மனிதன்அங்கே ஆணை யிடுகின்றான்!
நாலடியில் இங்கு நடந்துவந்து நாம்மலையின்
மேலிருக்கும் போதே வெடுக்கென்று தூக்கிடுவான்,

இங்கு வருமுன் இருவரும் கீழ்இறங்கி
அங்குள்ள சாரல் அடைந்திடுவோம் வா'வென்றான்.

* * * *

'ராமனெங்கே! ராமன் அருளெங்கே! சஞ்சீவி
மாமலையைத் தூக்குமொரு வல்லமைஎங்கே! இவற்றில்
கொஞ்சமும் உண்மை இருந்தால்நாம் கொத்தவரைப்
பிஞ்சுகள்போல் வாடிப் பிழைப்பதரி தாகி
அடிமையாய் வாழோமே? ஆண்மைதான் இன்றி
மிடிமையில் ஆழ்ந்து விழியோமே?' என்றந்த
வஞ்சி யுரைத்தாள். பின் மற்றோர் பெருஞ்சத்தம்,
அஞ்சுகின்ற குப்பன் அதிரச்செய் திட்டதே:

* * * *

'அம்மலையை ஓர்நொடியில் தூக்கிவந் தையாவே
உம்எதிரில் வைக்கின்றேன் ஊஹீஹீ ஊஹீஹீ'

* * * *

குப்பன் பதைத்தான் குடல்அறுந்து போனதுபோல்.
'எப்படித்தாம் நாம்பிழைப்போம்? ஏதும் அறிகிலேன்
சஞ்சீவி பர்வதத்தைத் தாவித் தரையோடு
பஞ்சிருக்கும் மூட்டைபோல் பாவி அவன்எவனோ
தூக்குகின்றான்! வஞ்சி! சுகித்திருக்க எண்ணினையே!
சாக்காடு வந்ததடி! தக்கவிதம் முன்னமே
நம்பென்று நான்சொன்ன வார்த்தையெல்லாம் நம்பாமல்
வம்பு புரிந்தாய்! மலையும் அதிர்ந்திடுதே!
முத்தமீ கொடுத்து முழுநேர மும்தொலைத்தாய்
செத்துமடி யும்போது முத்தம் ஒருகேடா?
என்றனுயி ருக்கே எமனாக வாய்த்தாயே!
உன்றன் உயிரைத்தான் காப்பாற்றிக் கொண்டாயா?
தூக்கிவிட்டான்! தூக்கிவிட்டான்! தூக்கிப்போய்த் தூளாக
ஆக்கிச் சமுத்திரத்தில் அப்படியே போட்டிடுவான்!
எவ்வாறு நாம்பிழைப்போம்? ஏடி, இதைநீதான்
செவ்வையாய் யோசித்துச் செப்பாயோ ஓர்மார்க்கம்?'

* * * *

— என்று துடிதுடிக்கும் போதில், இளவஞ்சி
நின்று நகைத்துத்தன் நேசனைக்கை யால்அணைத்தே

'இப்புவிதான் உண்டாகி எவ்வளவு நாளிருக்கும்,
அப்போது தொட்டிந்த அந்திநே ரம்வரைக்கும்
மாமலையைத் தூக்கும் மனிதன் இருந்ததில்லை.
ஓமண வாளரே! இன்னம் உரைக்கின்றேன்,
மன்னும் உலகம் மறைந்தொழியும் காலமட்டும்
பின்னும் மலைதூக்கும் மனிதன் பிறப்பதில்லை.
அவ்வறே ஓர்மனிதன் ஆகாயம் பூமிமட்டும்
எவ்வாறு நீண்டு வளருவான்? இல்லைஇல்லை;
காதல்நிசம். இக்கனிமுத்தம் மிக்க உண்மை!
மாதுதோள் உம்தோள் மருவுவது மெய்யாகும்.
நம்புங்கள் மெய்யாய் நடக்கும்விஷ யங்களிவை.
சம்பவித்த உண்மை அசம்பவத்தால் தாக்குறுமோ?
வாழ்க்கை நதிக்குவீண் வார்த்தைமலை யும்தடையோ?
வாழ்த்தாமல் தூற்றுகின்றீர் வந்துநிற்கும் இன்பத்தை!
பொய்யுரைப்பார் இந்தப் புவியையொரு சிற்றெறும்பு
கையால் எடுத்ததென்பார் ஐயோஎன் றஞ்சுவதோ?
முத்தத்தைக் கொள்க முழுப்பயத்தில் ஒப்படைத்த
சித்தத்தை வாங்கிச் செலுத்துங்கள் இன்பத்தில்.'

* * * *

என்றுரைத்தாள் வஞ்சி. இதனாற் பயனில்லை;
குன்று பெயர்ந்ததென்று குப்பன் மனம்அழிந்தான்;

* * * *

'இந்நேரம் போயிருப்பார்! இந்நேரம் பேர்த்தெடுப்பார்!
இந்நேரம் மேகத்தில் ஏறிப் பறந்திடுவார்!
உஸ்என்று கேட்குதுபார் ஓர்சத்தம் வானத்தில்!
விஸ்வரூ பங்கொண்டு மேலேறிப் பாய்கின்றார்'

* * * *

இம்மொழிகேட் டான்குப்பன்; 'ஐயோ' எனஉரைத்தான்.
அம்மட்டும் சொல்லத்தான் ஆயிற்றுக் குப்பனுக்கே.
உண்மை யறிந்தும் உரைக்கா திருக்கின்ற
பெண்ணான வஞ்சிதான் பின்னும் சிரித்து,
'மனத்தை விடாதீர் மணாளரே காதில்
இனிவிழப் போவதையும் கேளுங்கள்' என்றுரைத்தாள்.

வஞ்சியும் குப்பனும் சத்தம் வரும்வழியில்
நெஞ்சையும் காதையும் நேராக வைத்திருந்தார்:

* * * *

'இப்படி யாக அநுமார் எழும்பிப்போய்
அப்போது ஜாம்பவந்தன் ஆராய்ந்து சொன்னதுபோல்
சஞ்சீவி பர்வதத்தைத் தாவிப் பறந்துமே
கொஞ்சநே ரத்தில் இலங்கையிலே கொண்டுவந்து
வைத்தார். உடனே மலைமருந்தின் சக்தியால்
செத்த இராமனும்"லக்ஷ்மணனும் சேர்ந்தெழுந்தார்'

* * * *

உற்றிதனைக் கேட்டகுப்பன் 'ஓஹோ மலையதுதான்
சற்றும் அசையாமல் தான்தூக்கிப் போனானே!
லங்கையிலே வைத்தானே! லங்கையில்நாம் தப்போமே!'
என்றான். நடுக்கம் இதயத்தில் நீங்கவில்லை.
'இன்னும் பொறுங்கள்' எனஉரைத்தாள் வஞ்சி.

* * * *

"பெரும்பாரச் சஞ்சீவி பர்வதத்தைப் பின்னர்
இருந்த இடத்தில் அநுமார், எடுத்தேகி
வைத்துவிட்டு வந்தார் மறுநிமிஷம் ஆகாமுன்.
செத்தார்க் குயிர்கொடுத்தார். தெண்டமும்போட்டு நின்றார்!'

* * * *

குப்பனிது கேட்டுக் குலுக்கென்று தான்நகைத்தான்.
'அப்போதே நானினைத்தேன் ஆபத்திரா தென்று.
நான்நினைத்த வண்ணம் நடந்ததுதான் ஆச்சரியம்.
ஏனடி! வஞ்சி! இனியச்சம் இல்லை' யென்றான்.

* * * *

'ஆனாலும் இன்னும் அரைநிமிஷம் காத்திருங்கள்;
நானும் அதற்குள்ளே நாதரே, உம்மையொரு
சந்தேகம் கேட்கிறேன். தக்க விடையளிப்பீர்!
இந்த மலையில்நாம் ஏறிய பின்நடந்த
ஆச்சரிய சம்பவந்தான் என்ன? அதையுரைப்பீர்!
பேச்சை வளர்த்திப் பிரியப் படவில்லை'
—றாள் இளவஞ்சி. குப்பன் இசைக்கிறான்:

* * * *

'என்னடி வஞ்சி! இதுவும் தெரியாதா?
நாமிங்கு வந்தோம். நமக்கோர் நலிவின்றி
மாமலையை அவ்வநுமார் தூக்கி வழிநடந்து
லங்கையிலே வைத்தது! ராமன் எழுந்ததும்,
இங்கெடுத்து வந்தே இருப்பிடத்தில் வைத்தது!
கண்ணே! மலையைக் கடுகளவும் ஆடாமல்
கண்ணாடிப் பாத்திரத்தைக் கல்தரையில் வைப்பதுபோல்
தந்திரமாய் மண்ணில் தலைகுனிந்து வைத்திட்ட
அந்தப் பகுதிதான் ஆச்சரியம் ஆகுமடி!'

* * * *

ஆச்சரிய சம்பவத்தைக் குப்பன் அறிவித்தான்.
பேச்செடுத்தாள் வஞ்சி; பிறகும் ஒருசத்தம்:

* * * *

'இம்மட்டும் இன்று கதையை நிறுத்துகின்றேன்;
செம்மையாய் நாளைக்குச் செப்புகின்றேன் மற்றவற்றைச்
சத்தியரா மாயணத்திற் சத்தான இப்பகுதி
உத்தியாய்க் கேட்டோர் உரைத்தோர்எல் லாருமே
இங்குள்ள போகங்கள் எல்லாம் அனுபவிப்பர்;
அங்குள்ள வைகுந்தம் அட்டியின்றிச் சேர்வார்கள்;
ஜானகீ காந்தஸ் மரணே! ஜயஜயராம்!'

* * * *

'மானேஈ தென்னஎன்றான்' வையம்அறி யாக்குப்பன்
'முன்புநான் உங்களுக்கு முத்தம் கொடுக்கையிலே
சொன்ன 'ஐயையோ' தொடங்கி இதுவரைக்கும்
ராமாயணம் சொல்லி நாளைக் கழிக்கின்ற
ஏமாந்தார் காசுக் கெசமானன் என்றுரைக்கும்
பாகவதன் சொன்னான் பலபேரைக் கூட்டியே.
ஆகியதும் இந்த அரிய உழைப்புக்குப்
பத்தோ பதினைந்தோ பாகவதன் பெற்றிடுவான்.
சித்த மலைக்கச் சிறிதுமிதில் இல்லை' யென்று.
கையி லிருந்தஒரு காட்சிதரும் மூலிகையை
'ஐயா இதைவிழுங்கி அவ்விடத்திற் பாருங்கள்'
என்றந்தக் குப்பனிடம் ஈந்துதா னும்தின்றாள்.
தின்றதும் தங்கள் விழியால் தெருவொன்றில்,
'மாளிகையி னுள்ளே மனிதர்கூட் டத்தையும்,

ஆளிவாய்ப் பாகவதன் அங்கு நடுவிலே
உட்கார்ந் திருப்பதையும், ஊர்மக்கள் செல்வதையும்,
பட்டைநா மக்காரப் பாகவதன் ரூபாயைத்
தட்டிப்பார்க் கின்றதையும், சந்தோஷம் கொள்வதையும்
கண்டார்கள்; கண்டு கடகடவென் றேசிரித்தார்.
வண்டு விழியுடைய வஞ்சி யுரைக்கின்றாள்:

* * * *

'வான்ளவும் அங்கங்கள், வானரங்கள், ராமர்கள்,
ஆனது செய்யும் அநுமார்கள், சாம்பவந்தர்,
ஒன்றல்ல; ஆயிரம் நூல்கள் உரைக்கட்டும்.
விஸ்வரூ பப்பெருமை, மேலேறும் வன்மைகள்,
உஸ்என்ற சத்தங்கள், அஸ்என்ற சத்தங்கள்,
எவ்வளவோ நூலில் எழுதிக் கிடக்கட்டும்.
செவ்வைக் கிருபை செழுங்கருணை அஞ்சலிக்கை
முத்தி முழுச்சுவர்க்கம் முற்றும் உரைக்கட்டும்.
இத்தனையும் சேரட்டும் என்ன பயனுண்டாம்?
உள்ள பகுத்தறிவுக் கொவ்வாத ஏடுகளால்
எள்ளை அசைக்க இயலாது. மானிடர்கள்
ஆக்குவதை ஆகா தழிக்குமோ? போக்குவதைத்
தேக்குமோ? சித்தம் சலியாத் திறன்வேண்டும்.
மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கை
எக்களிக்க வேண்டும் இதயத்தில்! ஈதன்றி
நல்லறிவை நாளும் உயர்த்தி உயர்த்தியே
புல்லறிவைப் போக்கிப் புதுநிலைதே டல்வேண்டும்.
மக்கள் உழைக்காமுன் மேலிருந்து வந்திடுமோ?
எக்கா ரணத்தாலும் இன்மையிலே உண்மையுண்டோ?
மீளாத மூடப் பழக்கங்கள் மீண்டும்உமை
நாடா திருப்பதற்கு நானுங் களையின்று
சஞ்சீவி பர்வதத்தில் கூப்பிட்டேன். தற்செயலாய்
அஞ்சும் நிலைமையே அங்கே நிகழ்ந்ததுண்டாம்.
உங்கள் மனத்தில் உறைந்து கிடந்திட்ட
பங்கஞ்செய் மூடப் பழக்க வழக்கங்கள்
இங்கினிமேல் நில்லா எனநான் நினைக்கின்றேன்.
தங்கள்கை நீட்டித் தமியாளை முன்னரே
சாரலிலே முத்தம் தரக்கேட்டீர், சாயவில்லை.

ஈர மலையிலே யான்தந்தேன். ஏற்கவில்லை.
சத்தத்தை எண்ணிச் சலித்தீர். அச் சத்தத்தால்
முத்தத்தை மாற்ற முடியாமற் போனாலும்
உம்மைப் பயங்காட்டி ஊளையிட்ட சத்தத்தால்
செம்மைமுத்தம்கொள்ளவில்லை. சேர்ந்துமுத்தம்கொள்வீரே!'

* * * *

'ஏஏஏ நான்இன்றைக் கேளனத்துக் காளானேன்.
நீயேன் இதையெல்லாம் நிச்சயமாய்ச் சொல்லவில்லை?
ராமா யணமென்ற நலிவு தருங்கதை
பூமியிலி ருப்பதைஇப் போதே அறிகின்றேன்.
நம்பத் தகாதவெலாம் நம்பவைத்துத் தங்கள் நலம்
சம்பாதிக் கின்ற சரித்திரக் காரர்களால்
நாடு நலிகுவதை நான்இன்று கண்டுணர்ந்தேன்.
தோடு புனைந்த சுடர்க்கொடியே நன்றுசொன்னாய்!
நல்ல இமயம், நலங்கொழிக்கும் கங்கைநதி,
வெல்லத் தமிழ்நாட்டின் மேன்மைப் பொதியமலை,
செந்நெல் வயல்கள், செழுங்கரும்புத் தோட்டங்கள்,
தின்னக் கனிகள் தெவிட்டாப் பயன்மரங்கள்,
இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்
முப்பத்து முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன?
செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன?
மூடப் பழக்கம், முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவ தென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்.
பாரடி மேற்றிசையில் சூரியன் பாய்கின்றான்.
சார்ந்த ஒளிதான் தகத்தகா யக்காட்சி!
மாலைப் பொழுதும் வடிவழகு காட்டுதுபார்!
சாலையிலோர் அன்னத்தைத் தன்பேடு தேடுதுபார்.
என்னடி சொல்கின்றாய் ஏடி இளவஞ்சி?
என்நெஞ்சை உன்நெஞ்சம் ஆக்கிப்பார்' என்றுரைத்தான்.

* * * *

தென்றலிலே மெல்லச் சிலிர்க்கும் மலர்போலே
கன்னி யுடல்சிலிர்க்கக் 'காதலரே நாம்விரைவாய்ச்
சாரல் அடைவோமே, காதலுக்குத் தக்கஇடம்.
சாரலும் தண்மாலை நாயகியைச் சாரக்
குயில்கூவிக் கொண்டிருக்கும்; கோல மிகுந்த

மயிலாடிக் கொண்டிருக்கும்; வாச முடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்க உண்டு;
பூக்கள் மணங்கமழும்; பூக்கள்தோறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்.
அன்பு மிகுந்தே அருகிருக்கும் நாயகரே
இன்பமும் நாமும் இனி!'

## 2. புரட்சிக் கவி

### [பில்கணீயம் என்ற வடமொழி நூலைத் தழுவியது]

அகவல்

அரசன் அமைச்சர்பால் அறிவிக் கின்றான்:
'அமுத வல்லிஎன் ஆசைக் கொருபெண்!
தமிழிலக் கியங்கள் தமிழிலக் கணங்கள்
அமைவுற ஆய்ந்தாள்; அயல்மொழி பயின்றாள்;
ஆர்ந்த ஒழுக்கநூல், நீதிநூல் அறிந்தாள்;
அனைத்தும் உணர்ந்தா ளாயினும், அன்னாள்
கவிதை புனையக் கற்றா ளில்லை.
மலரும், பாடும் வண்டும், தளிரும்,
மலையும், கடலும், வாவியும், ஓடையும்,
விண்ணின் விரிவும், மண்ணின் வனப்பும்,
மேலோர் மேன்மையும், மெலிந்தோர் மெலிவும்
தமிழின் அமுதத் தன்மையும், நன்மையும்,
காலைஅம் பரிதியும், மாலை மதியமும்
கண்ணையும் மனத்தையும் கவர்வன; அதனால்
என்மகள் அகத்தில் எழுந்த கவிதையைப்
புறத்தில் பிறர்க்குப் புலப்படுத் துதற்குச்
செய்யுள் இலக்கணம் தெரிதல் வேண்டுமாம்!
ஏற்றஓர் ஆசான் எங்குளான்?
தோற்றிய வாறு சொல்க அமைச்சரே!'

எண்சீர் விருத்தம்

தலைமைஅமைச் சன்புகல்வான்: 'எனது மன்னா,
சகலகலை வல்லவன்;இவ் வுலகோர் போற்றும்
புலவன்; உயர் கவிஞன்; அவன் பேர்உ தாரன்!
புதல்விக்குத் தக்கஉபாத் தியாயன் அன்னோன்.

இலையிந்த நாட்டினிலே அவனை ஒப்பார்!
எனினும்,அவன் இளவயதும் அழகும் வாய்ந்தோன்.
குலமகளை அன்னவன்பால் கற்க விட்டால்
குறைவந்து சேர்ந்தாலும் சேர்தல் கூடும்!

ஆனாலும் நானிதற்கோர் மார்க்கம் சொல்வேன்:
அமுதவல்லி உதாரனிடம் கற்கும் போது
தேனிதழாள் தனைஅவனும், அவனைப் பெண்ணும்
தெரிந்துகொள்ள முடியாமல் திரை விடுக்க!
பானல்விழி மங்கையிடம் 'உதாரனுக்குப்
பார்வையில்லை குருட'னென்று சொல்லி வைக்க!
ஞானமுறும் உதாரனிடம் 'அமுத வல்லி
நலிகுஷ்ட ரோகி'என எச்ச ரிக்க!'

தார்வேந்தன் இதுகேட்டான்; வியந்தான்! 'ஆம் ஆம்
தந்திரத்தால் ஆகாத தொன்று மில்லை;
பேர்வாய்ந்த உதாரனைப்போய் அழைப்பீர்' என்றான்.
பேச்சுவல்ல அமைச்சர்பலர் சென்ற ழைத்தார்.
தேர்வாய்ந்த புவிராஜன் போலே யந்தச்
செந்தமிழ்த்தீங் கவிராஜன் உதாரன் வந்தான்.
பார்வேந்தன் நிகழ்த்தினான்; உதாரன் கேட்டுப்
'பைந்தமிழ்க்குத் தொண்டுசெயக் கடவோம்' என்றான்.

சிந்து கண்ணி

மன்னவன் ஆணைப்படி—கன்னி
மாடத்தைச் சேர்ந்ததொரு
பன்னரும் பூஞ்சோலை—நடுப்
பாங்கில்ஓர் பொன்மேடை!
அன்னதோர் மேடையிலே—திரை
ஆர்ந்த மறைவினிலே
மின்னொளி கேட்டிருப்பாள்—கவி
வேந்தன் உரைத்திடுவான்!
யாப்புமுறை உரைப்பான்—அணி
யாவும் உரைத்திடுவான்;
பாப்புனை தற்கான—அநு
பவம்பல புகல்வான்.
தீர்ப்புற அன்னவளும்—ஆசு
சித்திரம் நன்மதுரம்

சேர்ப்புறு வித்தாரம்—எனும்
தீங்கவிதை யனைத்தும்,
கற்றுவர லானாள்—அது
கால பரியந்தம்
சற்றும் அவன்முகத்தை—அவள்
சந்திக்க வில்லை! விழி
அற்றவனைப் பார்த்தல்—ஓர்
அபசகுன மென்றே!
உற்றதோர் நோயுடையாள்—என்
றுதாரனும் பார்த்ததில்லை!
இவ்விதம் நாட்கள்பலப்—பல
ஏகிட ஓர்தினத்தில்
வெவ்விழி வேலுடையாள்—அந்த
மேடையிற் காத்திருந்தாள்.
அவ்வம யந்தனிலே—விண்
அத்தனையும் ஒளியால்
கவ்வி உயர்ந்ததுபார்—இருட்
காட்டை அழித்த நிலா!

எண்சீர் விருத்தம்

அமுதவல்லி காத்திருந்த மேடை யண்டை
அழகியபூஞ் சோலையண்டை உதாரன் நின்றே,
இமையாது நோக்கினான் முழுநி லாவை!
இருவிழியால் தழுவினான்; மனத்தால் உண்டான்!
சுமைசுமையாய் உவப்பெடுக்க, உணர்வு வெள்ளம்
தூண்டிவிட ஆஆஆ என்றான்; வாணி
அமைத்திட்டாள் நற்கவிதை! மழைபோற் பெய்தான்!
அத்தனையும் கேட்டிருந்தாள் அமுத வல்லி:

'நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தைக்
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ!

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்!
அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்;
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்!
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ!

உனைக்காணும் போதினிலே என்னு ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவ தில்லை
நித்திய தரித்திரராய் உழைத் துழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால், பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பம் தானோ!

உன்னைஎன திருவிழியாற் காணுகின்றேன்;
ஒளிபெறுகின் றேன்; இருளை ஒதுக்கு கின்றேன்;
இன்னலெலாம் தவிர்கின்றேன்; களிகொள் கின்றேன்;
எரிவில்லை குளிர்கின்றேன் புறமும் உள்ளும்!
அன்புள்ளம் பூணுகின்றேன்; அதுவு முற்றி
ஆகாயம் அளாவுமொரு காதல் கொண்டேன்!
'இன்பமெனும் பால்நுரையே! குளிர்வி ளக்கே!
எனை இழந்தேன், உன்னெழிலில் கலந்த தாலே!'

### வேறு சிந்து கண்ணி

இவ்வித மாக உதாரனும்—தன
தின்குரலால் வெண்ணி லாவையே
திவ்விய வர்ணனை பாடவே—செவி
தேக்கிய கன்னங் கருங்குயில்,
'அவ்வறி ஞன்கவி வல்லவன் — விழி
அற்றவ னாயின், நிலாவினை
எவ்விதம் பார்த்தனன், பாடினன்? — இதில்
எத்துக்கள் உண்டெ'ன ஓடியே,
சாதுரி யச்சொல் உதாரனை — அவன்
தாமரைக் கண்ணொடும் கண்டனள்!

ஓது மலைக்குலம் போலவே — அவன்
ஓங்கிய தோள்களைக் கண்டனள்!
'ஏதிது போன்றஓ ராண்எழில் — குறை
இன்றித் திருந்திய சித்திரம்?
சோதி நிலாவுக்கும் மாசுண்டாம் — இச்
சுந்தர னோகறை ஒன்றிலான்!'

என்று வியப்புடன் நின்றனள்; — அந்த
ஏந்திழை தன்னெதிர் நின்றதைத்
தன்னிக ரற்ற உதாரனும் — கண்டு
தன்னை மறந்தவ னாகியே
'என்ன வியப்பது? வானிலே — இருந்
திட்டதோர் மாமதி மங்கையாய்
என்னெதி ரேவந்து வாய்த்ததோ? — புவிக்
கேதிது போலொரு தண்ஒளி!

மின்னற் குலத்தில் விளைந்ததோ? — வான்
வில்லின் குலத்திற் பிறந்ததோ?
கன்னற் றமிழ்க்கவி வாணரின் — உளக்
கற்பனை யேஉருப் பெற்றதோ?
பொன்னின் உருக்கிற் பொலிந்ததோ? — ஒரு
பூங்கொடி யோ? மலர்க் கூட்டமோ?'
என்று நினைத்த உதாரன்தான் — 'நீ
யார்?' என்ற ஓர்உரை போக்கினான்.

'அமுதவல்லி யன்றோ!' என்றாள் — 'அந்த
அமைச்ச னும்முடி வேந்தனும்
நமைப் பிரித்திடும் எண்ணத்தால் — உனை
நாட்டம் இல்லாதவன் என்றனர்!
சமுச யப்பட நீஇன்று — மதி
தரிசன மதைப் பாடினை!
கமலங் கள்எனும் கண்ணுடன் — உனைக்
காணப் பெற்றதென் கலா' என்றாள்.

### எண்சீர் விருத்தம்

'இன்னொன்று கேளாயோ அமுத வல்லி!
என்னிடத்தில் உன்தந்தை 'என்ம கட்கு
முன்னொன்று தீவினையால் பெருநோய் வந்து
மூண்டதெ'னச் சொல்லிவைத்தான்! அதனா லன்றோ,

மின்ஒன்று பெண்ணென்று புவியில் வந்து
விளைந்ததுபோல் வின ளந்தஉன தழகு மேனி
இன்றுவரை நான்பார்க்க எண்ண வில்லை'
என்றுரைத்தான், வியப்புடையான் இன்னுஞ் சொல்வான்:

'காரிருளால் சூரியன்தான் மறைவ துண்டோ?
கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை யாமோ?
பிறர்சூழ்ச்சி செந்தமிழை அழிப்ப துண்டோ?
நேர்இருத்தித் தீர்ப்புரைத்துச் சிறையிற் போட்டால்
நிறைதொழிலா ளர்களுணர்வு மறைந்து போமோ?
சீரழகே! தீந்தமிழே! உனைஎன் கண்ணைத்
திரையிட்டு மறைத்தார்கள்!' என்று சொன்னான்.

பஃறொடை வெண்பா

'வானத்தை வெண்ணிலா வந்து தழுவுவதும்
மோனத் திருக்கும் முதிர்சோலை மெய்சிலிர்க்க

ஆனந்தத் தென்றல்வந் தாரத் தழுவுவதும்
நானோக்கி நோக்கி நலிதலினைக் காணாயோ?

சித்திரித்த ஆணழகே, சென்றுபடர் முல்லையினைக்
கத்திரித்தல் இன்றிக் கரந்தழுவும் மாமரமும்,

சத்தமிட்ட வண்டு தடாகத்தின் அல்லியினை
முத்தமிட்டுத் தேன்குடிக்கும் நல்ல முடிவும்,

உணர்வுதனை உண்டாக்க வில்லையோ உன்பால்?
தணலைத்தான் வீசுகின்றான் சந்திரனும் என்மேல்!

குணமுள்ளார், கொஞ்சவரும் கோதையரைக் காதற்
பிணமாக்கித் தாங்கள் பிழைக்க நினைப்பாரோ?'

என்றுதன் காதல் எரிதழலுக் காற்றாமல்
சென்றுதன் னெஞ்சம் தெரிவித்தாள் சேல்விழியாள்!

'நன்று மடமயிலே! நான்பசியால் வாடுகின்றேன்;
குன்றுபோல் அன்னம் குவித்திருக்கு தென்னெதிரில்!

உண்ண முடியாதே ஊராள்வோன் கூர்வாளும்
வண்ணமுடிச் செல்வாக்கும் வந்து மறிக்குதடி!

எண்ணக் கடலில் எழுங்காதல் நீளலைதான்
உண்ணும் மணிக்குளத்தில் ஓடிக் கலக்காமல்

நால்வருணங் கள்விதித்தார் நாட்டார்கள்; அன்னவற்றில்
மேல்வருணம் கோல்கொண்டு மேதினியை ஆள்வருணம்

நீயன்றோ பெண்ணே! நினைப்பை யகற்றிவிடு!
நாயென்றே எண்ணிஎனை நத்தாமல் நின்றுவிடு!

வேல்விழியால் என்றன் விலாப்புறத்தைக் கொந்தாதே!
பால்போல் மொழியால் பதைக்கஉயிர் வாங்காதே!

கண்ணாடிக் கன்னத்தைக் காட்டிஎன் உள்ளத்தைப்
புண்ணாக்கிப் போடாதே; போபோ மறைந்துவிடு!

காதல் நெருப்பால் கடலுன்மேல் தாவிடுவேன்
சாதிஎனும் சங்கிலிஎன் தாளைப் பிணித்ததடி!

பாளைச் சிரிப்பில்நான் இன்று பதறிவிட்டால்
நாளைக்கு வேந்தனெனும் நச்சரவுக் கென்செய்வேன்?

கொஞ்சு தமிழ்த்தேன் குடித்துவிட அட்டியில்லை
அஞ்சுவ தஞ்சாமை பேதமையன் றோஅணங்கே?

ஆணிப்பொன் மேனி அதில்கிடக்கும் நல்லொளியைக்
காணிக்கை நீவைத்தால் காப்பரசர் வாராரோ?

பட்டாளச் சக்ரவர்த்தி பார்த்தாலும் உன்சிரிப்புக்
கட்டாணி முத்துக்குக் காலில்விழ மாட்டாரோ?'

என்றழுதான் விம்மி இளையான், கவியரசன்.
குன்றும் இரங்கும்! கொடும்பாம்பும் நெஞ்சிளகும்!

ஏழையரைக் கொல்ல எதிரிருந்து பார்த்திருப்போர்
பாழான நெஞ்சும் சிலசமயம் பார்த்திரங்கும்!

சித்தம் துடிக்கின்ற சேயின் நிலைமைக்கு
ரத்தவெறி கொண்டலையும் நால்வருணம் ஏனிரங்கும்?

ரத்தவெறி கொண்டலையும் ராசன்மனம் ஏனிரங்கும்?
அத்தருணம் அந்த அமுதவல்லி ஈதுசொல்வாள்:

'வாளை உருவிவந்து மன்னன் எனதுடலை
நாளையே வெட்டி நடுக்கடலில் போடட்டும்,

காளைஉன் கைகள்எனைக் காவாமல் போகட்டும்,
தாளை அடைந்தஇத் தையல்உள்ளம் மாறாதே!

ஆதரவு காட்டாமல் ஐய! எனைவிடுத்தால்
பாதரக்ஷை போலுன்றன் பாதம் தொடர்வதன்றி,

வேறு கதியறியேன்; வேந்தன் சதுர்வருணம்
சீறும்எனில் இந்தஉடல் தீர்ந்தபின்னும் சீறிடுமோ?

ஆரத் தழுவி அடுத்தவினா டிக்குள்உயிர்
தீரவரும் எனிலும் தேன்போல் வரவேற்பேன்!

அன்றியும்என் காதல் அமுதே! நமதுள்ளம்
ஒன்றுபட்ட பின்னர் உயர்வென்ன தாழ்வென்ன?

நாட்டின் இளவரசி நான்ஒருத்தி! ஆதலினால்
கோட்டை அரசன்எனைக் கொல்வதற்குச் சட்டமில்லை!

கோல்வேந்தன் என்காதற் கொற்றவனைக் கொல்லவந்தால்,
சேல்விழியாள் யான்எனது செல்வாக்கால் காத்திடுவேன்!

சாதி உயர்வென்றும், தனத்தால் உயர்வென்றும்,
போதாக் குறைக்குப் பொதுத்தொழிலா ளர்சமுகம்

மெத்த இழிவென்றும், மிகுபெரும்பா லோரைஎல்லாம்
கத்தி முனைகாட்டிக் காலமெல்லாம் ஏய்த்துவரும்

பாவி களைத்திருத்தப் பாவலனே நம்மிருவர்
ஆவி களையேனும் அர்ப்பணம்செய் வோம்! இதனை

நெஞ்சார உன்மேலே நேரிழையாள் கொண்டுள்ள
மிஞ்சுகின்ற காதலின்மேல் ஆணையிட்டு விள்ளுகின்றேன்!

இன்னும் என்ன?' என்றாள். உதாரன் விரைந்தோடி
அன்னத்தைத் தூக்கியே ஆரத் தழுவினான்.

இன்ப உலகில் இருவர்களும் நாள்கழித்தார்.
பின்பொருநாள் அந்தப் பெருமாட்டி அங்கமெலாம்

மாறுபடக் கண்டு மனம்பதறித் தோழியர்கள்
வேறு வழியின்றி வேந்தனிடம் ஓடியே

'மன்னவனே! உன்அருமை மங்கை அமுதவல்லி
தன்னை உதாரனுக்குத் தத்தம் புரிந்தாளோ,

காதல்எனும் இன்பக் கடலில் குளித்துவிட்ட
மாதிரியாய்த் தோன்றுகிறாள். மற்றிதனை மேன்மைச்

சமூகத்தில் விண்ணப்பம் சாதித்தோம்' என்றார்.
அமைதி யுடைய அரசன் அதன்உண்மை

கண்டறிய வேண்டுமென்று கன்னிகைமா டத்தருகே
அண்டியிருந் தான்இரவில் ஆரும் அறியாமல்!

வந்த உதாரன்எழில் மங்கைக்கு கைலாகு
தந்து, தமிழில் தனிக்கா தலைக்கலந்து

பேசினதும், காத்திருந்த பெண்ணரசி வேல்விழியை
வீசினதும், முத்தம் விளைத்த நடைமுறையும்

கண்டான் அரசன்! கடுகடுத்தான்! ஆயிரந்தேள்
மண்டையிலே மாட்டியது போல மனமுளைந்து

மாளிகைக்குச் சென்றான். மறுநாள் விடியலிலே
வாளில் விஷம்பூசி வைத்திருக்கச் சொல்லிவிட்டுச்

சேவகரைச் சீக்கிரம் உதாரனை இழுத்துவர
ஏவினான். அவ்வா றிழுத்துவந்தார் வேந்தனிடம்.

இச்சேதி ஊரில் எவரும் அறிந்தார்கள்;
அச்சமயம் எல்லாரும் அங்குவந்து கூடிவிட்டார்.

ஆர்ந்த கவியின் அரசனுயிர் இன்றோடு
தீர்ந்ததோ என்று திடுக்கிட்டார் எல்லாரும்.
ஈடற்ற நற்கவிஞன் இந்நிலைமை, அக்கன்னி
மாடத்தில் உள்ளஎழில் மங்கைக்கும் எட்டியதாம்.
அங்கே உதாரனிடம் மன்னன் உரைக்கின்றான்.
சிங்கா தனத்திலே சேர்ந்து:

சிந்து கண்ணி

'கொற்றவன் பெற்ற குலக்கொடியைக் கவி
    கற்க உன்பால் விடுத்தேன் – அட!
குற்றம் புரிந்தனையா இல்லையா இதை
    மட்டும் உரைத்து விடு!
வெற்றி எட்டுத்திக்கு முற்றிலுமே சென்று
    மேவிட ஆள்பவன் நான் – அட
இற்றைக்கு நின்தலை அற்றது! மற்றென்னை
    என்னென்றுதா னினைத்தாய்?

வாள்பிடித்தே புவி ஆளுமிராசர் என்
    தாள் பிடித்தே கிடப்பார்! – அட
ஆள் பிடித்தால் பிடி ஒன்றிருப்பாய் என்ன
    ஆணவமோ உனக்கு?
மீள்வதற்கோ இந்தத் தீமை புரிந்தனை
    வெல்லத் தகுந்தவனோ? – இல்லை!

மாள்வதற்கே இன்று மாள்வதற்கே' என்று
　　மன்னன் உரைத்திட வே.

'மாமயில் கண்டு மகிழ்ந்தாடும் முகில்
　　வார்க்கும் மழைநாடா! — குற்றம்
ஆம்என்று நீயுரைத் தால்குற்றமே! குற்றம்
　　அன்றெனில் அவ்விதமே!
கோமகள் என்னைக் குறையிரந்தாள் அவள்
　　கொள்ளை வனப்பினிலே — எனைக்
காமனும் தள்ளிடக் காலிடறிற்றுக்
　　கவிழ்ந்தவண்ணம் வீழ்ந்தேன்!

பழகும் இருட்டினில் நானிருந்தேன் எதிர்
　　பால் நில வாயிரம்போல் — அவள்
அழகு வெளிச்சம் அடித்த தென்மேல்
　　அடியேன் செய்த தொன்று மில்லை.
பிழைபுரிந்தே னென்று தண்டனை போடுமுன்
　　பெற்று வளர்த்த உன்றன்
இழைபுரிச் சிற்றிடை அமுதவல்லிக் குள்ள
　　இன்னல் மறப்ப துண்டோ?

நொண்டிச் சிந்து

கவிஞன் இவ்வா றுரைத்தான் — புவி
காப்பவன் இடியெனக் கனன்றுரைப்பான்:
'குவிந்த உன் உடற்சதையைப் — பல
கூறிட்டு நரிதின்னக் கொடுத்திடுவேன்.
தவந்தனில் ஈன்ற என்பெண் — மனம்
தாங்குவ தில்லையெனிற் கவலை யில்லை!
நவிலுமுன் பெரும் பிழைக்கே — தக்க
ராசதண் டனையுண்டு! மாற்றமுண்டோ?

அரசனின் புதல்வி அவள் — எனில்
அயலவ னிடம்மனம் அடைத லுண்டோ?
சரச நிலையி லிருந்தீர் — அந்தத்
தையலும் நீயும்,அத் தருணமதில்
இருவி ழியாற் பார்த்தேன்! — அறி
விலிஉன தொருகுடி அடியோடே
விரைவில்என் ஆட்சி யிலே — ஒரு
வேர்இன்றிப் பெயர்த்திட விதித்துவிட்டேன்!'

'கொலைஞர்கள் வருக' என்றான் — அவன்
கூப்பிடு முன் வந்து கூடிவிட்டார்.
'சிலையிடை இவனை வைத்தே — சிரச்
சேதம் புரிக'எனச் செப்பிடுமுனம்
மலையினைப் பிளந்திடும் ஓர் — சத்தம்
வந்தது! வந்தனள் அமுதவல்லி!
'இலைஉனக் கதிகாரம் — அந்த
எழிலுடை யான்பிழை இழைக்கவில்லை.

ஒருவனும் ஒருத்தியுமாய் — மனம்
உவந்திடில் பிழையென உரைப்பதுண்டோ?
அரசென ஒரு சாதி — அதற்
கயலென வேறொரு சாதியுண்டோ?
கரிசன நால் வருணம் — தனைக்
காத்திடும் கருத்தெனில், இலக்கணந்தான்
தரும்படி அவனை இங்கே — நீ
தருவித்த வகையது சரிதானோ?

என்மனம் காதலனைச் — சென்
றிழுத்தபின் னேஅவன் இணங்கினதால்
அன்னவன் பிழையில னாம்! — அதற்
கணங்கெனைத் தண்டித்தல் முறையெனினும்,
மன்ன,நின் ஒருமகள் நான் — எனை
வருத்திட உனக்கதி காரமில்லை!
உன்குடிக் கூறிழைத் தான் — எனில்
ஊர்மக்கள் இடம்அதை உரைத்தல் கடன்!'

என்றபற் பல வார்த்தை — வான்
இடியென உரைத்துமின் னெனநகைத்தே
முன்னின்ற கொலைஞர் வசம் — நின்ற
முழுதுணர் கவிஞனைத் தனதுயிரை
மென்மலர்க் கரத்தாலே — சென்று
மீட்டனள் வெடுக்கெனத் தாட்டிகத்தால்.
மன்னவன் இருவிழியும் — பொறி
வழங்கிட எழுந்தனன்; மொழிந்திடுவான்:

கும்மி

நாயை இழுத்துப் புறம் விடுப்பீர் — கெட்ட
நாவை அறுத்துத் தொலைக்கு முன்னே! — இந்தப்

பேயினை நான்பெற்ற பெண்ணெனவே சொல்லும்
பேச்சை மறந்திடச் சொல்லிடுவீர்! — என்
தூய குடிக்கொரு தோஷத்தையே தந்த
துட்டச் சிறுக்கியைக் காவற்சிறை — தன்னில்
போய்அடைப்பீர்! அந்தப் பொய்யனை ஊரெதிர்
போட்டுக் கொலை செய்யக் கூட்டிச் செல்வீர்!'

என்றுரைத்தான். இருசேவகர்கள் அந்த
ஏந்திழை அண்டை நெருங் கிவிட்டார்! — அயல்
நின்ற கொலைஞர், உதாரனை யும்'நட
நீ' என் றதட்டினார்! அச்சமயம் — அந்த
மன்றி லிருந்தஓர் மந்திரிதான் முடி
மன்னனை நோக்கி யுரைத்திடுவான் — 'நீதி
அன்றிது மங்கைக் கிழைத்திருக்கும் தண்டம்;
அன்னது நீக்கி யருள்க' என்றான்.

எண்சீர் விருத்தம்

'காதலனைக் கொலைக்களத்துக் கனுப்பக் கண்டுங்
கன்னியெனை மன்னிக்கக் கேட்டுக் கொண்ட
நீதிநன்று மந்திரியே! அவன்இ றந்தால்
நிலைத்திடும்என் உயிரெனவும் நினைத்து விட்டாய்!
சாதல்எனில் இருவருமே சாதல் வேண்டும்;
தவிர்வதெனில் இருவருமே தவிர்தல் வேண்டும்;
ஓதுகஇவ் விரண்டிலொன்று மன்ன வன்வாய்!
உயிர்எமக்கு வெல்லமல்ல!' என்றாள் மங்கை.

'என்ஆணை மறுப்பீரோ சபையி லுள்ளீர்!
இசைகிடந்த என்செங்கோல் தன்னை வேற்றார்
பின்நாணும் படிசும்மா இருப்ப துண்டோ?
பிழைபுரிந்தால் சகியேன்நான்! உறுதி கண்டீர்
என்ஆணை! என்ஆணை!! உதார னோடே
எதிரிலுறும் அமுதவல்லி இருவர் தம்மைக்
கன்மீதி லேகிடத்திக் கொலைசெய் வீர்கள்
கடிதுசெல்வீர்! கடிதுசெல்வீர்!!, என்றான் மன்னன்.

அவையினிலே அசைவில்லை பேச்சு மில்லை;
அச்சடித்த பதுமைகள்போல் இருந்தார் யாரும்!

சுவையறிந்த பிறகுணவின் சுகம்சொல் வார்போல்
தோகையவள் 'என்காதல் துரையே கேளாய்!
எவையும்நம்மைப் பிரிக்கவில்லை; இன்பம் கண்டோம்;
இறப்பதிலும் ஒன்றானோம்! அநீதி செய்த
நவையுடைய மன்னனுக்கு நாட்டு மக்கள்
நற்பாடம் கற்பியா திருப்ப தில்லை.

'இருந்திங்கே அநீதியிடை வாழ வேண்டாம்
இறப்புலகில் இடையறா இன்பங் கொள்வோம்!
பருந்தும்,கண் மூடாத நரியும் நாயும்,
பலிபீட வரிசைகளும் கொடுவாள் கட்டும்
பொருந்தட்டும்; கொலைசெய்யும் எதேச்சை மன்னன்
பொருந்தட்டும்; பொதுமக்கள் ரத்தச் சேற்றை
அருந்தட்டும்!' என்றாள். காதலர்கள் சென்றார்!
அதன்பிறகு நடந்தவற்றை அறிவிக்கின்றேன்:

கொலைக்களத்தில் கொலைஞர்களும் அதிகா ரங்கள்
கொண்டவரும் காதலரும் ஓர்பால் நின்றார்;
அலைகடல்போல் நாட்டார்கள் வீடு பூட்டி
அனைவருமே வந்திருந்தார். உதார னுக்கும்
சிலைக்குநிகர் மங்கைக்கும் 'கடைசி யாகச்
சிலபேச்சுப் பேசிடுக' என்றுசொல்லித்
தலைப்பாகை அதிகாரி விடைதந் திட்டான்;
தமிழ்க்கவிஞன் சனங்களிடை முழக்கஞ் செய்வான்;

'பேரன்பு கொண்டவரே, பெரியோ ரே,என்
பெற்றதாய் மாரே,நல் இளஞ்சிங் கங்காள்!
நீரோடை நிலங்கிழிக்க, நெடும ரங்கள்
நிறைந்துபெருங் காடாக்க, பெருவி லங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்
நெடுங்குன்றில் பிலஞ்சேர, பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார்? அழகு நகருண் டாக்கி!

'சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின்தோள்கள்?

கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

'அக்கால உலகிருட்டைத் தலைகீ ழாக்கி
அழகியதாய் வசதியதாய்ச் செய்தார் தந்தார்?
இக்கால நால்வருணம் அன்றி ருந்தால்
இருட்டுக்கு முன்னேற்றம் ஆவ தன்றிப்
புக்கபயன் உண்டாமோ? பொழுது தோறும்
புனலுக்கும் அனலுக்கும் சேற்றினுக்கும்
கக்கும்விஷப் பாம்பினுக்கும் பிலத்தி னுக்கும்
கடும்பசிக்கும் இடையறா நோய்க ளுக்கும்.

'பலியாகிக் கால்கைகள் உடல்கள் சிந்தும்
பச்சைரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடைய தாகத்
தந்ததெவர்? அவரெல்லாம் இந்த நேரம்
எலியாக முயலாக இருக்கின் றார்கள்!
ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்
புலிவேஷம் போடுகின்றான்! பொதுமக் கட்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின் றானா?

அரசனுக்கும் எனக்குமொரு வழக்குண் டாக
அவ்வழக்கைப் பொதுமக்கள் தீர்ப்ப தேதான்
சரியென்றேன்; ஒப்பவில்லை! இவளும் நானும்
சாவதென்றே தீர்ப்பளித்தான்; சாவ வந்தோம்!
ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்
உண்டென்றால், அத்தேசம் ஒழிதல் நன்றாம்!
இருவர் இதோ சாகின்றோம்! நாளை நீங்கள்
இருப்பதுமெய் என்றெண்ணி யிருக்கின் றீர்கள்!

'தன்மகளுக் கெனைஅழைத்துக் கவிதை சொல்லித்
தரச்சொன்னான், அவ்வாறு தருங்கா லிந்தப்
பொன்மகளும் எனைக்காதல் எந்தி ரத்தால்
புலன்மாற்றிப் போட்டுவிட்டாள்; ஒப்பி விட்டேன்!
என்உயிருக் கழவில்லை! அந்தோ! என்றன்
எழுதாத சித்திரம்போல் இருக்கு மிந்த

மன்னுடல்வெட் டப்படுமோர் மாப ழிக்கு
மனநடுக்கங் கொள்ளுகின்றேன்! இன்னும் கேளீர்;

'தமிழறிந்த தால்வேந்தன் எனைஅ ழைத்தான்;
தமிழ்க்கவியென் றெனைஅவளும் காத லித்தாள்!
அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ்,என் னாவி
அழிவதற்குக் காரணமா யிருந்த தென்று
சமுதாயம் நினைத்திடுமோ? ஐய கோ!என்
தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்ப துண்டோ?
உமைஒன்று வேண்டுகின்றேன். மாசில் லாத
உயர்தமிழை உயிர்என்று போற்று மின்கள்!

'அரசனுக்குப் பின்னிந்தத் தூய நாட்டை
ஆளுதற்குப் பிறந்தஒரு பெண்ணைக் கொல்ல
அரசனுக்கோ அதிகாரம் உங்க ளுக்கோ?
அவ்வரசன் சட்டத்தை அவம தித்தான்!
சிரம்அறுத்தல் வேந்தனுக்குப் பொழுது போக்கும்
சிறியகதை; நமக்கெல்லாம் உயிரின் வாதை!
அரசன்மகள் தன்நாளில் குடிகட் கெல்லாம்
ஆளுரிமை பொதுவாக்க நினைத்தி ருந்தாள்!

'ஐயகோ சாகின்றாள்! அவளைக் காப்பீர்!
அழகியஎன் திருநாடே! அன்பு நாடே!
வையகத்தில் உன்பெருமை தன்னை,நல்ல
மணிநதியை, உயர்குன்றை, தேனை அள்ளிப்
பெய்யுநறுஞ் சோலையினை, தமிழாற் பாடும்
பேராவல் தீர்ந்ததில்லை! அப்பே ராவல்
மெய்யிதயம் அறுபடவும், அவ்வி ரத்த
வெள்ளந்தான் வெளிப்படவும் தீரு மன்றோ?

'வாழியஎன் நன்னாடு பொன்னா டாக!
வாழியநற் பெருமக்கள் உரிமை வாய்ந்தே!
வீழியபோய் மண்ணிடையே விண்வீழ் கொள்ளி
வீழ்வதுபோல் தனித்தாளும் கொடிய ஆட்சி!
ஏழையினேன் கடைசிமுறை வணக்கம் செய்தேன்!
என்பெரியீர், அன்னையீர் ஏகு கின்றேன்!
ஆழ்க என்றன் குருதியெலாம் அன்பு நாட்டில்
ஆழ்க' என்றான்! தலைகுனிந்தான் கத்தி யின்கீழ்!

படிகத்தைப் பாலாபி ஷேகம் செய்து
பார்ப்பதுபோல் அமுதவல்லி கண்ணீர் வெள்ளம்
அடிசேர்தல் கண்டார்கள் அங்கி ருந்தோர்!
ஆவென்று கதறினாள்! 'அன்பு செய்தோர்
படிமீது வாழாரோ?' என்று சொல்லிப்
பதைபதைத்தாள்! இதுகேட்ட தேச மக்கள்
கொடிதென்றார்! கொடுவாளைப் பறித்தார்; அந்தக்
கொலையாளர் உயிர்தப்ப ஓட லானார்!

கவிஞனுக்கும் காதலிக்கும் மீட்சி தந்தார்!
காவலன்பால் தூதொன்று போகச் சொன்னார்;
'புவியாட்சி தனிஉனக்குத் தாரோம் என்று
போயுரைப்பாய்' என்றார்கள்! போகா முன்பே,
செவியினிலே ஏறிற்றுப் போனான் வேந்தன்!
செல்வமெலாம் உரிமையெலாம் நாட்டா ருக்கே
நவையின்றி யெய்துதற்குச் சட்டம் செய்தார்!
நலிவில்லை! நலமெல்லாம் வாய்ந்த தங்கே!

## 3. வீரத்தாய்

### காட்சி 1

[மணிபுரி மாளிகையில் ஓர் தனி இடம். சேனாபதி காங்கேயனும் மந்திரியும் பேசுகின்றனர்.]

சேனாபதி:

மன்னன் மதுவினில் ஆழ்ந்து கிடக்கின்றான்!
மின்னல்நேர் சிற்றிடை ராணி விஜயா
நமக்கும் தெரியாமல் எவ்விடமோ சென்றாள்.
அமைப்புறும் இந்த மணிபுரி ஆட்சி
எனக்கன்றோ! அன்றியும் என்னரும் நண்ப,
உனக்கே அமைச்சுப் பதவி உதவுவேன்!

மந்திரி:

ஒன்றுகேள் சேனைத் தலைவ, பகைப்புலம்
இன்றில்லை ஆயினும் நாளை முளைக்கும்;
அரசியோ வீரம், உறுதி அமைந்தாள்!
தரையினர் மெச்சும் சர்வ கலையினள்!

**சேனாபதி:**

அஞ்சுதல் வேண்டாம் அவளொரு பெண்தானே!

**மந்திரி:**

நெஞ்சில்நான் பெண்ணை எளிதாய் நினைக்கிலேன்.

**சேனாபதி:**

ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர்
தேடுவதும், ஆடவர்க்குச் சேவித் திருப்பதுவும்,
அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப்போல் வாழுவதும்
கெஞ்சுவது மாகக் கிடக்கும் மகளிர்குலம்,
மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர்பகுதி!
ஆனமற் றோர்பகுதி ஆண்மை எனப் புகல்வேன்!
எவ்வாறா னாலும்கேள் சேனையெலாம் என்னிடத்தில்!
செய்வார்யார் நம்மிடத்தில் சேட்டை? இதையோசி!

**மந்திரி:**

(சிரித்துச் சொல்வான்)
மானுஷிகம் மேல்என்பார், வன்மை உடையதென்பார்
ஆன அதனை அளித்ததெது? மீனக்
கடைக்கண்ணால் இந்தக் கடலுலகம் தன்னை
நடக்கும்வகை செய்வதெது? நல்லதொரு சக்தி
வடிவமெது? மாமகளிர் கூட்டமன்றோ? உன்சொற்
கொடிது! குறையுடைத்து! மேலும்அது கிடக்க;
மன்னன் இளமைந்தன் எட்டு வயதுடையான்,
இன்னும் சிலநாளில் ஆட்சி எனக்கென்பான்!

**சேனாபதி:**

கல்வியின்றி யாதோர் கலையின்றி, வாழ்வளிக்கும்
நல்லொழுக்க மின்றியே நானவனை ஊர்ப்புறத்தில்
வைத்துள்ளேன்; அன்னோன் நடைப்பிணம்போல் வாழ்கின்றான்.
இத்தனைநாள் இந்த இரகசியம் நீயறியாய்!

**மந்திரி:**

ஆமாமாம் கல்வியிலான் ஆவி யிலாதவனே!
சாமார்த்திய சூல தந்திரத்தில் தேர்ந்தவன் நீ!
உன்எண்ணம் என்னசொல்? நான்உனக் கொத்திருப்பேன்!
முன்னால் செயப்போவ தென்ன மொழிந்துவிடு!

சேனாபதி:

ராசாங்க பொக்கிஷத்தை நாம்திறக்க வேண்டும்;பின்
தேசத்தின் மன்னனெனச் சீர்மகுடம் நான்புனைந்தே
ஆட்சிசெய வேண்டும்என் ஆசையிது! காலத்தை
நீட்சிசெய வேண்டாம்; விரைவில் நிகழ்விப்பாய்!

மந்திரி:

பொக்கிஷத்தை யார்திறப்பார்? பூட்டின் அமைப்பைஅதன்
மிக்க வலிமைதனைக் கண்டோர் வியக்கின்றார்.
தண்டோராப் போட்டுச் சகலர்க்கும் சொல்லிடுவோம்
அண்டிவந்து தாழ்திறப்பார்க் காயிரரூ பாய்கொடுப்போம்.

சேனாபதி:

தேவிலை! நீ சொன்னதுபோல் செய்துவிடு சீக்கிரத்தில்
ஆவி அடைந்தபயன் ஆட்சிநான் கொள்வதப்பா!

காட்சி 2

[சேனாபதி அரச குமாரனாகிய சுதர்மனை மூடனாக்கி வைக்கக் கருதிக் காடுசேர்ந்த ஓர் சிற்றூரில் கல்வியில்லாத காளிமுத்து வசத்தில் விட்டு வைத்திருக்கிறான். கிழவர் ஒருவர் காளிமுத்தை நண்பனாக்கிக்கொண்டு உடன் வசிக்கிறார்.]

காளிமுத்து:

என்னா கெழவா? பொடியனெங்கே? இங்கேவா!
கன்னா பின்னாஇண்ணு கத்துறியே என்னாது?
மாடுவுளை மேய்க்கவுடு! மாந்தோப்பில் ஆடவுடு!
காடுவுளே சுத்தவிடு! கல்விசொல்லித் தாராதே!

கிழவர்:

மாட்டினொடும் ஆட்டினொடும் மன்னன் குமாரனையும்
கூட்டிப்போய் வந்திடுவேன்; குற்றமொன்றும் நான்புரியேன்!
மன்னன் மகனுக்குக் கல்வியோ நல்லறிவோ
ஒன்றும் வராமேஉன் உத்தரவு போல்நடப்பேன்.

காளிமுத்து:

ஆனாநீ போய்வா, அழைச்சிப்போ பையனையும்
ஓநாயில் லாதஇடம் ஓட்டு!

காட்சி 3

[கிழவர் ஓர் தனியிடத்தில் சுதர்மனுக்கு வில்வித்தை கற்றுக் கொடுக்கிறார்.]

கிழவர்:

'விற்கோலை இடக்கரத்தால் தூக்கி, நாணை
விரைந்தேற்றித் தெறித்துப்பார்! தூணீ ரத்தில்,
பற்பலவாம் சரங்களிலே ஒன்றை வாங்கிப்
பழுதின்றிக் குறிபார்த்து, லட்சி யத்தைப்
பற்றிவிடு! மற்றொன்று, மேலும் ஒன்று
படபடெனச் சரமாரி பொழி! சுதர்மா
நிற்கையில்நீ நிமிர்ந்துநிற்பாய் குன்றத் தைப்போல்!
நெளியாதே! லாவகத்தில் தேர்ச்சி கொள்நீ!'

சுதர்மன்:

'கற்போர்கள் வியக்கும்வகை இந்நாள் மட்டும்
கதியற்றுக் கிடந்திட்ட அடியே னுக்கு
மற்போரும், விற்போரும், வாளின் போரும்,
வளர்கலைகள் பலப்பலவும் சொல்லித் தந்தீர்!
நற்போத காசிரியப் பெரியீர், இங்கு
நானுமக்குச் செயும்கைம்மா றொன்றும் காணேன்!
அற்புதமாம்! தங்களைநான் இன்னா ரென்றே
அறிந்ததில்லை; நீரும்அதை விளக்க வில்லை.'

கிழவர்:

'இன்னாரென் றென்னைநீ அறிந்து கொள்ள
இச்சையுற வேண்டாங்காண் சுதர்மா. என்னைப்
பின்னாளில் அறிந்திடுவாய்! நீறு பூத்த
பெருங்கனல்போல் பொறுத்திருப்பாய்; உன்ப கைவன்
என்பகைவன்; உன்னாசை என்றன் ஆசை!
இஃதொன்றே நானுனக்குச் சொல்லும் வார்த்தை
மின்னாத வானம்இனி மின்னும்! அன்பு
வெறிகாட்டத் தக்கநாள் தூர மில்லை!'

காட்சி 4

[சுதர்மனும் கிழவரும் இருக்குமிடத்தில் தண்டோராச் சத்தம் கேட்கிறது.]

உமிழாதோ, வருத்தாதோ
உம்மையே உம்மருமை
உள்ளச் சான்றே?

அமுதூட்ட நஞ்சூட்டி
அகமகிழும் தாயுண்டோ
அருமைச் சேய்க்கே? 28

படிப்பாரின் தமிழ்ச்சுவடி
பரிந்தாயும் அரசியலார்
குழுவி னோரே,

தடிப்பாகிப் போவதுண்டோ
உம்முள்ளம்? தமிழென்றும்
வடசொல் என்றும்

வடிப்பாக்கி நோக்கிடவும்
மாட்டீரோ? செந்தமிழின்
பகைவரின் வால்

பிடிப்பாரின் துணையில்இனும்
பிழைப்பீரோ, மறவர்தமிழ்ப்
பெரிய நாட்டில்? 29

தமிழ்நடையில் நயம்வேண்டின்
தமிழ்நாட்டின் நடைமுறையைத்
தமிழ்நாட் டாரை

அமையவரை தல்வேண்டும்!
அவ்வாற்றால் அமைவுற்ற
சுவடி தன்னை

உமைமறந்து மறுக்காதீர்
உமியைப்போய் ஒப்பாதீர்
இன்னும் கேளீர்

தமிழ்தழுவாச் சுவடிதனைத்
தணல்தழுவா திராதினிமேல்
தமிழ்நா டெங்கும். 30

த.4.

# 7. அரசியல்சீர் வாய்ந்தார் (2)

தெலுங்குதமிழ் நாட்டினிலேன்?
செத்தவட மொழிக்கிங்கே
என்ன ஆக்கம்?

இலங்கும் இசைப் பாட்டுக்கள்
பிறமொழியில் ஏற்படுத்த
இசைய லாமோ?

நலங்கண்டீர் தமிழ்மொழியால்
நற்றமிழை ஈடழித்தல்
நன்றோ? சின்ன

விலங்கதுதான் சோறிட்டான்
மேற்காட்டும் நன்றியைநீர்
மேற்கொள் ளீரோ. 31

பொதுமையிலே கிடைத்திட்ட
செல்வாக்கை இனநலத்துக்
காக்குவோரை

இதுவரைக்கும் மன்னித்த
எழில்தமிழர் இனிப்பொறுப்பார்
என்பதில்லை!

குதிகாலும் மேற்செல்லும்
அடுத்தபடி கீழேதான்
வந்து சேரும்

அதுவியற்கை! மலைக்காதீர்!
அறிவுநாள் இது! கொடுமை
அழிந்தே தீரும். 32

அரசியலார் அறிக்கையிலும்
சுவடியிலும் தமிழ்ப் பெருமை
அழித்தி டக்கை

[illegible]சையெல்லாம் காட்டுவதோ?
வடமொழியும் பிழைத்தமிழும்
பெருகி விட்டால்

வருநாளில் தமிழழியும்
வடமொழிமே லோங்குமெனும்
கருத்தோ? நாட்டில்

திருடர்களை வளரவிடும்
ஏற்பாடோ? செல்லுபடி
ஆகா திங்கே. 33

திருடர்கள் ஜாக் கிரதை இதைத்
திருடருண்டு விழிப் போடி
ருங்கள் என்றால்,

வருந்தீமை என்ன? நியா
யஸ்தலத்தை அறமன்றம்
எனில்வாய்க் காதோ?

அருவருக்கும் நெஞ்சுண்டையார்
அருவருக்கும் செயலுடையார்
அன்றோ இந்தக்

கருவறுக்கும் வினை செய்வார்
கலப்பாலில் துளி நஞ்சும்
கலத்தல் வேண்டாம். 34

அரசியலார் அலுவலகம்
அறமன்றம் இங்கெல்லாம்
அலுவல் பெற்றீர்

உரையனைத்தும் ஆங்கிலமோ?
உணர்விலையோ? ஒழுக்கந்தான்
இதுவென் பீரோ.

வரும்நாட்டுப் புறத்தவரின்
தமிழ்ப் பேச்சும் பிடிப்ப தில்லை
வண்ட மிழ்சேர்

திருநாட்டிற் பிறந்தோமென்
றெண்ணுவதும் இல்லை இனித்
திருந்து வீரே. 35

# 8. அரசியல்சீர் வாய்ந்தார் (3)

தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டில் முதலமைச்சாய்
வருதல் வேண்டும்

தமிழ்ப்பகைவன் முதலமைச்சாய்த்
தமிழ்நாட்டில் வாராது
தடுத்தல் வேண்டும்.

நமை வளர்ப்பான் நந்தமிழை
வளர்ப்பவனாம்! தமிழ் அல்லால்
நம்முன் னேற்றம்

அமையாது. சிறிதும் இதில்
ஐயமில்லை, ஐயமில்லை
அறிந்து கொண்டோம். 36

தமிழ் எங்கே! தமிழன் நிலை
என்ன எனத் தாமறியாத்
தமிழர் என்பார்

தமிழர் நலம் காப்பவராய்
அரசியலின் சார்பாக
வர முயன்றால்

இமைப்போதும் தாழ்க்காமல்
எவ்வகையும் கிளர்ந்தெழுதல்
வேண்டும்! நம்மில்

அமைவாக ஆயிரம்பேர்
அறிஞர் உள்ளார் எனமுரசம்
ஆர்த்துச் சொல்வோம். 37

நகராட்சி சிற்றூரின்
நல்லாட்சி மாவட்ட
ஆட்சி என்று

புகுகின்ற பல ஆட்சிக்
கழகங்கள் எவற்றினுமே
புகநினைப்பார்

தகுபுலமை குறிக்கின்ற
சான்றுதர வேண்டுமெனச்
சட்டம் செய்தால்

அகலுமன்றோ தமிழ்நாட்டின்
அல்லலெலாம்? அல்லாக்கால்
அமைதி யுண்டோ? 38

தமிழறியான் தமிழர் நிலை
தமிழர்நெறி தமிழர்களின்
தேவை, வாழ்வு

தமையறிதல் உண்டோ எந்
நாளுமில்லை! தமிழறியான்
சுவையே காணான்!

சுமைசுமையாய் அரசியல்சீர்
சுமந்தவர்கள் இதுவரைக்கும்
சொன்ன துண்டோ

தமிழ்க்கல்வி தமிழ் நாட்டில்
கட்டாயம் என்பதொரு
சட்டம் செய்ய! 39

ஆங்கில நூல் அறிவுக்குச்
சான்றிருந்தால் அதுபோதும்
அலுவல் பார்க்க!

ஈங்குள்ள தமிழர் நெறி
அவர்க்கென்ன தெரிந்திருக்கும்?
இதுவு மன்றி,

மாங்காட்டுச் செவிடனெதிர்
வடிகட்டி ஊமையரை
வைத்ததைப் போல்

தீங்கற்ற தமிழறியான்
செந்தமிழ் நாட்டலுவலின் மேற்
செல்ல லாமோ. 40

# 9. புலவர் (1)

தமிழ்ப்புலவர் ஒன்றுபடும்
நன்னாளே தமிழர்க்குப்
பொன்னா ளாகும்!

தமிழ்ப் பெருநூல் ஒன்றேனும்
ஒற்றுமையைத் தடைசெய்யக்
கண்ட துண்டோ?

தமிழ்ப் புலவர் தமக்குள்ளே
மாறுபட்ட தன்மையினால்
இந்நாள் மட்டும்

தமிழ்ப் பெருநா டடைந்துள்ள
தீமையினைத் தமிழறிஞர்
அறிகி லாரோ? 41

ஒல்காத பெரும் புகழ்த் தொல்
காப்பியமும், நன்னூலும்
தமிழர்க் கெல்லாம்

நல்கரிய நன்மை யெலாம்
நல்கின என் றால்நாமும்
நன்றி சொல்வோம்.

செல்பலநூற் றாண்டுசெல
அவ்விருநூல் திருவடியில்
புதிய நூற்கள்

பல்காவேல் இருநூற்கும்
பழியே! நம் புலவர்க்கும்
பழியே யன்றோ? 42

தனித்தியங்கத் தக்கதெனத்
தமிழ்பற்றித் தமிழ்ப்புலவர்
சாற்றுகின்றார்

இனித்திடும் அவ் விருநூலில்
வடமொழி ஏன்? வட எழுத்துக்
கொழுங்கு தான் ஏன்?

தனித் தமிழில் இந்நாட்டுத்
தக்கபுதுக் காப்பியம், நன்
னூல், இயற்ற

நினைப்பாரேல் நம்புலவர்
நில வாவோ ஆயிர நூல்
தமிழகத்தே. 43

முதுமைபெறு சமயமெனும்
களர் நிலத்தில் நட்டதமிழ்ப்
பெருநூல் எல்லாம்

இதுவரைக்கும் என்னபயன்
தந்ததென எண்ணுகையில்
நான்கு கோடிப்

பொதுவான தமிழரிலே
பொன்னான தமிழ் வெறுத்தார்
பெரும்பா லோராம்!

புதுநூற்கள் புதுக் கருத்தால்
பொது வகையால் தரவேண்டும்
புலவ ரெல்லாம். 44

சோற்றுக் கென் றொருபுலவர்
தமிழ் எதிர்ப்பார் அடி வீழ்வார்!
தொகையாம் செல்வப்

பேற்றுக் கென் றொருபுலவர்
சாஸ்திரமும் தமிழ் என்றே
பேசி நிற்பார்!

நேற்றுச்சென் றார்நெறியே
நாம் செல்வோம் என ஒருவர்
நிகழ்த்தா நிற்பார்!

காற்றிற்போம் பதராகக்
காட்சியளிக் கின்றார்கள்
புலவர் சில்லோர்! 45

# 10. புலவர் (2)

சீவல்ல பத்திருவள்
ளுவரானார் என் றொருவர்
செப்ப லுற்றார்!

நாவன்மை என்பதுவும்
செந்தமிழை நலிப்பதற்கோ?
நாணி லாரோ?

பாவளிக்கும் சுவை முழுதும்
பருகி விட்டதா யுரைக்கும்
ஒருவர் சொல்வார்.

கோவையிட்ட கம்பனது
செய்யுளிலே முக்காலும்
கோணல் என்றே, 46

கம்பனார் பதினோரா
யிரம் பாட்டில் முக்காலும்
கழித்துப் போட்டு

நம்பினால் நம்புங்கள்
இவைதாம் கம்பன் செய்யுள்
என அச் சிட்டு

வெம்புமா றளிக்கையிலும்
மேவாத செயல் இதனைச்
செய்ய இந்தக்

கொம்பன் யார் எனக் கேட்க
ஆளில்லையா புலவர்
கூட்டந் தன்னில்? 47

"வாட்டடங்கண்" "கற்றரை" யை
வாள்த்தடங்கண் கல்த்தரை என்
றெழுதி முன்னைப்

பாட்டினிலே பெரும் பிழையைப்
பல்குவிப்பா னுக்குமணிப்
பண்டி தர்கள்

சாட்டைகொடுத் தறிக்கை விடத்
தாள்ஒன்றும் அற்றதுவோ!
தமக்குச் சோறு

போட்டிடுவார் ஒப்புகிலார்
எனுங் கருத்தோ மானமற்ற
போக்குத் தானோ! 48

வடமொழியும் தெரியும் எனப்
பொய் கூறி வடமொழிக்கு
வாய்ப்பும் நல்க

வடமொழி யானைக் கொண்டு
மொழி பெயர்த்து வருவார்க்கு
வண்டமிழ்ச் சீர்

கெடுவதிலே கவலையில்லை.
ஆரியரை ஆதரித்துக்
கிடப்ப தொன்றே

நடைமுறையில் நலன் விளைக்கும்
என்னு மொரு மடமையினை
நசுக்க வேண்டும். 49

அரசினரின் மொழியாக,
அரசியலார் மொழியாக,
அரசியல் சார்

வரிசையுறு சட்டமன்றின்
மொழியாக, வையம் அறி
மொழிய தாகத்

திருமலிந்த தமிழ் மொழிதான்
ஆகும்வகை நம்புலவர்
சேர்ந்து தொண்டு

புரிக என வேண்டுகின்றோம்,
பொழிக என வேண்டுகின்றோம்
பொன்மழைதான்! 50

# 11. குடும்பத்தார்!

அன்னை தந்த பால்ஒழுகும்
குழந்தைவாய் தேன்ஒழுக
அம்மா என்று

சொன்னதுவும் தமிழன்றோ!
அக்குழந்தை செவியினிலே
தோய்ந்த தான

பொன்மொழியும் தமிழன்றோ!
புதிதுபுதி தாய்க்கண்ட
பொருளி னோடு

மின்னியதும் தமிழன்றோ!
விளையாட்டுக்கிளிப் பேச்சும்
தமிழே யன்றோ! 51

வானத்து வெண்ணிலவும்
வையத்தின் ஓவியமும்
தரும் வியப்பைத்

தேனொக்கப் பொழிந்ததுவும்
தமிழன்றோ! தெருவிலுறு
மக்கள் தந்த

ஊனுக்குள் உணர்வேயும்
தமிழன்றோ! வெளியேயும்
உள்ளத் துள்ளும்

தான் நத்தும் அனைத்துமே
காட்சி தரும் வாயிலெலாம்
தமிழே யன்றோ. 52

திருமிக்க தமிழகத்தின்
குடும்பத்தீர் இல்லறத்தீர்!
செந்தமிழ்க்கே

வருமிக்க தீமையினை
எதிர்த்திடுவீர் நெஞ்சாலும்
வாய்மெய் யாலும்!

பொருள் மிக்க தமிழ்மொழிக்குப்
புரிந்திடுவீர் நற்றொண்டு;
புரியா ராயின்,

இருள்மிக்க தாகிவிடும்
தமிழ் நாடும் தமிழர்களின்
இனிய வாழ்வும்! 53

காக்கை "கா" என்றுதனைக்
காப்பாற்றச் சொல்லும்! ஒரு
கருமு கில்தான்,

நோக்கியே "கடமடா"
என்றேதன் கடனுரைக்கும்
நுண்கண் கிள்ளை

வாய்க்கும் வகை 'அக்கா' என்
றழைத்ததனால் வஞ்சத்துப்
பூனை "ஞாம் ஞாம்" (நாம்)

காக்கின்றோம் எனச் சொல்லக்
கழுதை அதை "ஏ" என்று
கடிந்து கூறும். 54

"கூ" எனவே வையத்தின்
பேர் உரைத்துக் குயில் கூவும்.
"வாழ் வாழ்" என்று

நாவினிக்க நாய் வாழ்த்தும்
நற்சேவல் "கோ" என்று
வேந்தன் பேரைப்

பாவிசைத்தாற் போலிசைக்க,
வருங்காற்றே "ஆம்" என்று
பழிச்சும்! இங்கு

யாவினுமே தமிழல்லால்
இயற்கை தரும் மொழிவேறொன்
றில்லை யன்றோ. 55

# 12. கோயிலார்

உயிர்போன்ற உங்கள் தமிழ்
கடவுளுக்கே உவப்பாதல்
இல்லை போலும்!

உயிர்போன்ற உங்கள் தமிழ்
உரைத்தக்கால் கடவுளதை
ஒப்பார் போலும்!

பயிரழிக்கும் விட்டிலெனத்
தமிழ்மொழியைப் படுத்தவந்த
வடம றைதான்

செயிர்தீர வாழ்த்துதற்கும்
தேவையினைச் சொல்லுதற்கும்
உதவும் போலும்! 56

மடிகட்டிக் கோயிலிலே
மேலுடையை இடுப்பினிலே
வரிந்து கட்டிப்

பொடிகட்டி இல்லாது
பூசியிரு கைகட்டிப்
பார்ப்பா னுக்குப்

படிகட்டித் தமிழரெனப்
படிக்கட்டின் கீழ்நின்று
தமிழ்மா னத்தை

வடிகட்டி அவன் வடசொல்
மண்ணாங்கட் டிக்குவப்பீர்
"மந்தரம்" என்றே. 57

காற்செருப்பைப் பிறனொருவன்
கழிவிடத்தில் தள்ளிடினும்
பொறாத உள்ளம்,

நீமற்படுத்தும் எவற்றினுக்கும்
மேற்பட்ட தன்மொழியைத்
தமிழைத் தீயோர்

போற்றுவதற் குரியதொரு
பொதுவினின்று நீக்கிவைத்தால்
பொறுப்ப துண்டோ?

வேற்றுவரின் வடமொழியை
வேரறுப்பீர் கோயிலிலே
மேவி டாமே. 58

சொற்கோவின் நம்போற்றித்
திரு அகவல் செந்தமிழில்
இருக்கும் போது

கற்கோயில் உட்புறத்தில்
கால்வைத்த தெவ்வாறு
சகத்ர நாமம்?

தெற்கோதும் தேவாரம்,
திருவாய்நன் மொழியான
தேனி ருக்கச்

செக்காடும் இரைச்சலென
வேதபா ராயணமேன்
திருக்கோ யில்பால்? 59

திருப்படியில் நின்றபடி
செந்தமிழில் பெரும்படியார்
அருளிச் செய்த

உருப்படியை அப்படியே
ஊரறியும் படியுரைத்தால்
படியும் நெஞ்சில்!

தெருப்படியிற் கழுதையெனச்
செல்லுபடி யாகாத
வடசொற் கூச்சல்

நெருப்படியை எப்படியோ
பொறுத்திடினும் நேர்ந்தபடி
பொருள் கண்டீரோ! 60

தெருப்படியிற் கழுதையெனச்
செல்லுபடி யாகாத
வடசொற் கூச்சல்

நெருப்படியை எப்படியோ
பொறுத்திடினும் நேர்ந்தபடி
பொருள் கண்டிரோ! 60

# 13. அறத்தலைவர்

அறத்தலைவீர் செயத்தக்க
அறமிந்நாள் தமிழ்காத்தல்
அன்றோ? தங்கள்

நிறத்தியலை நிலைநிறுத்தித்
தமிழ் அழிக்க நினைப்பாரின்
செயலை நீவிர்

மறத்தலினும் கேடுண்டோ?
மடத்திலுறு பெரும்பொருளைச்
செந்தமிழ்,சீர்

பெறச்செலவு செய்தலினும்
பெறத்தக்க பெரும்பேறு
பிறிது முண்டோ! 61

கல்லாரின் நெஞ்சத்தே
கடவுள் நிலான் என்னுமொழி
கண்டு ளீரே

நில்லாத கடவுளை நீர்
நிலைத்திருக்கும் படி செய்யத்
தமிழர் நாட்டில்

எல்லாரும் தமிழ்கற்க
என்செய்தீர்? செயநினைத்தால்
இயலா தேயோ?

தொல்லையெலாம் போமாறு
தூய்மையெலாம் ஆமாறு
தொண்டும் செய்வீர்! 62

செந்தமிழிற் புதுப்புது நூல்
விளைப்பதற்குச் செல்வத்தைச்
செலவு செய்தால்

நந்தமிழ்நா டுயராதோ!
நலிவெல்லாம் தீராவோ!
பொருளை அள்ளித்

தந்தாரே முன்னாளில்
தமிழ்நாட்டார் உம்மிடத்தில்.
தலைமை யேற்று

வந்தீரே அரசியல்சீர்
வாய்ந்தாரை வசப்படுத்தி
வாழ்வ தற்கோ? 63

அறநிலையக் காப்புக்கே
அரசினர்கள் அயலாரை
அமைப்பர்! அன்னோர்

பிறமொழிக்குத் துணை நின்றும்
தமிழ்மொழியின் பீடழிக்கும்
செயல் புரிந்தும்,

சிறுமையுறு வடமொழிக்குக்
கழகங்கள் இங்கமைத்தும்
தீமை செய்வார்!

உறுதியுடன் தமிழரெலாம்
ஒன்றுபட்டால் எவ்வெதிர்ப்பும்
ஒழிந்து போகும்! 64

நாட்டிலுறும் அறநிலையம்
ஒவ்வொன்றும் நற்றமிழ்க்கல்
லூரி ஒன்றும்,

வீட்டிலுறு கழகங்கள்
நாலைந்தும், மேன்மையுறும்
புலவர் கூடித்

தீட்டுநூல் வெளியீடு
செய்நிலையம் ஒன்றுமாய்த்
தருமேல் நம்மை

வாட்டிவரும் வறுமை நிலை
மாய்க்கவரும் தாழ்மை நிலை
மாய்ந்து போமே. 65

## 14. விழா நடத்துவோர்

தேர்வரும், பின் பார்ப்பனர்கள்
வரிசையுறச் செங்கைகள்
கோத்த வண்ணம்,

நீர்வருங்கால் கத்துகின்ற
நெடுந்தவளைக் கூட்டமெனக்
கூச்ச லிட்டு

நேர்வருவார் அன்னவர்கள்
நிகழ்த்துவதன் பொருளென்ன?
இனிமை உண்டா?

ஊர் வருந்தும் படி இதை ஏன்,
விழாத்தலைவர் உடன்சேர்த்தார்?
ஒழிக்க வேண்டும்! 66

பல்லிசைகள் நேர்முழங்கப்
பகல் போலும் விளக் கெடுப்பக்
குதிரை, யானை

நல்ல சிறப் பளித்துவர
நடுவி லொரு தேவடியாள்
ஆட, மக்கள்

எல்லாரும் கயிறிழுக்க
இயங்குமொரு தேர்மீதில்
ஆரி யத்தைச்

சொல்லிடுமோர் சொரிபிடித்த
பார்ப்பானைக் குந்தவைத்தல்
தூய்மை தானா! 67

விழாக சுப முகூர்த்தமென
வெளிப் படுத்தும் மண அழைப்பில்
மேன்மை என்ன?

தேனின் பெருக்கன்று; செந்தமிழே!
'சுற்றத்தார் மற்றவர் பார்த்திடுவார் — என்
தோழிகள் இப்பக்கம் வந்திடுவார்.

காலை மலர்ந்தது; மாந்தரெலாம் — தங்கள்
கண்மலர்ந் தேநட மாடுகின்றார்; — இச்
சோலையி லேஇளமா மரங்கள் — அடர்
தோப்பினை நோக்கி வருக' என்றாள்.
நாலடி சென்றனர் மாமரத்தின் — கிளை
நாற்புறம் சூழ்ந்திட்ட நல்விடுதி!
மூலக் கருத்துத் தெரிந்திருந்தும் — அந்த
மொய்குழல் 'யாதுன்றன் எண்ண' மென்றாள்.

'உன்னை எனக்குக் கொடுத்துவிடு — நான்
உனக்கெனைத் தந்திட அட்டியில்லை' — இந்தக்
கன்னல் மொழிக்குக் கனிமொழியாள் — எட்டிக்
காய்மொழி யாற்பதில் கூறுகின்றாள்;
'சின்ன வயதினில் என்றனையோர் — பெருஞ்
சீமான் மணந்தனன் செத்துவிட்டான்; — எனில்
அன்னது நான்செய்த குற்றமன்று — நான்
அமங்கலை' என்றுகண் ணீர்சொரிந்தாள்.

'மணந்திட நெஞ்சில் வலிவுளதோ?' — என்று
வார்த்தை சொன்னாள்; குப்பன் யோசித்தனன்! — தன்னை
இணங்கென்று சொன்னது — காதலுள்ளம் — 'தள்'
என்றனமூட வழக்க மெலாம் — தலை
வணங்கிய வண்ணம் தரையினிலே — குப்பன்
மாவிலை மெத்தையில் சாய்ந்துவிட்டான்! — பின்
கணம்ஒன்றிலே குப்பன் நெஞ்சினிலே — சில
கண்ணற்ற மூட உறவினரும்.

வீதியிற் பற்பல வீணர்களும் வேறு
விதியற்ற சிற்சில பண்டிதரும் — வந்து
'சாதியி லுன்னை விலக்கிடுவோம் — உன்
தந்தையின் சொத்தையும் நீ இழப்பாய் — நம்
ஆதி வழக்கத்தை மீறுகின்றாய்; — தாலி
அறுத்தவளை மணம் ஒப்புகின்றாய் — நல்ல
கோதை யொருத்தியை யாம்பார்த்து — மணம்
கூட்டிவைப்போம்' என்று சத்தமிட்டார்.

கூடிய மட்டிலும் யோசித்தனன் — குப்பன்
குள்ளச் சமூகத்தின் கட்டுக்களை — முன்
வாடிக் குனிந்த தலைநிமிர்ந்தான் — அந்த
வஞ்சியைப் பார்த்தனன் மீண்டும் அவன் — ஆ!
ஏடி வடிவத்தின் ஆதிக்கமே, — மூடர்
எதிர்ப்பில் வெளிப்படும் நமதுசக்தி! — மற்றும்
பேடி வழக்கங்கள், மூடத்தனம் — இந்தப்
பீடைகளே இங்குச் சாத்திரங்கள்.

காதல் அடைதல் உயிரியற்கை — அது
கட்டில் அகப்படும் தன்மையதோ? — அடி
சாதல் அடைவதும் காதலிலே — ஒரு
தடங்கல் அடைவதும் ஒன்றுகண்டாய்! — இனி
நீதடு மாற்றம் அகற்றிவிடு — கை
நீட்டடி! சத்தியம்! நான்மணப்பேன்! — அடி
கோலத் தொடங்கடி! என்று சொன்னான். — இன்பம்
கொள்ளை, கொள்ளை, கொள்ளை, மாந்தோப்பில்!

## 12. காதற் கடிதங்கள்

### காதலியின் கடிதம்

என் அன்பே,

இங்குள்ளார் எல்லோரும்
க்ஷேமமாய் இருக்கின்றார்கள்.
என்தோழியர் க்ஷேமம்;
வேலைக்காரர் க்ஷேமம்; இதுவுமன்றி
உன்தயவால் எனக்காக உன்வீட்டுக்
களஞ்சியநெல் மிகவுமுண்டே,
உயர்அணிகள் ஆடையகை ஒவ்வொன்றில்
பத்துவிதம் உண்டு. மற்றும்
கன்னலைப்போற் பழவகை பதார்த்தவகை
பக்ஷணங்கள் மிகவுமுண்டு.
கடிமலர்ப்பூஞ் சோலையுண்டு. மான் க்ஷேமம்.
மயில் க்ஷேமம். பசுக்கள் க்ஷேமம்.
இன்னபடி இவ்விடம்யா வரும்எவையும்
க்ஷேமமென்றன் நிலையோ என்றால்,

'இருக்கின்றேன்; சாகவில்லை' என்றறிக.

இங்ஙனம் உன்
எட்டிக்காயே

### காதலன் பதில்

செங்கரும்பே,

உன்கடிதம் வரப்பெற்றேன்.
நிலைமைதனைத் தெரிந்து கொண்டேன்.
தேமலர்மெய் வாடாதே; க்ஷேமமில்லை
என்றுநீ தெரிவிக் கின்றாய்.
இங்கென்ன வாழ்கிறதோ? இதயத்தில்
உனைக்காண எழும்ஏக் கத்தால்,
இன்பாலும் சர்க்கரையும் நன்மணத்தால்
பனிக்கட்டி இட்டு றைத்த
திங்கள்நிகர் குளிர்உணவைத் தின்றாலும்
அதுவும் தீ! தீ! தீ! செந்தீ!
திரவியஞ்சம் பாதிக்க இங்குவந்தேன்.
உனை அங்கே விட்டுவந்தேன்!
இங்குனைநான் எட்டிக்காய்
என நினைத்ததா யுரைத்தாய்; இதுவும் மெய்தான்.
இவ்வுலக இன்பதெலாம் கூட்டிஎடுத்
துத்தெளிவித் திறுத்துக்காய்ச்சி
எங்கும்போல் எடுத்துருட்டும் உருட்சியினை
எட்டிக்காய் என்பா யாயின்
எனக்குநீ எட்டிக்காய் என்றுதான்
சொல்லிடுவேன்.

இங்குன்
அன்பன்

## 13. காதற் குற்றவாளிகள்

தோட்டத்து வாசல் திறக்கும் — தினம்
சொர்ணம் வந்தால் கொஞ்ச நேரம்மட்டும்
வீட்டுக் கதைகளைப் பேசிடுவாள் — பின்பு
வீடுசெல் வாள்இது வாடிக் கையாம்.
சேட்டுக் கடைதனிற் பட்டுத்துணி — வாங்கச்

சென்றனள் சுந்தரன் தாய்ஒருநாள்!
பாட்டுச் சுவைமொழிச் சொர்ணம் வந்தாள் – வீட்டிற்
பாடம் படித்திருந்தான் இளையோன்.

கூடத்திலே மனப் பாடத்திலே – விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை,
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால் – அவள்
உண்ணத் தலைப்படு நேரத்திலே,
பாடம்படித்து நிமிர்ந்த விழி – தனிற்
பட்டுத் தெரித்தது மானின்விழி!
ஆடைதிருத்தி நின்றாள் அவள்தான் – இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்.

'தன்னந்தனிப்பட என்னை விட்டே – பெற்ற
தாயும் கடைக்கு நடந்து விட்டாள்.
இன்னும் உண்டோஅங்கு வேலை' என்றான் – சொர்ணம்
ஏறிட்டுப் பார்த்தனள் கூறுகின்றாள்:
'தன்னந் தனிப்பட நீயிருந்தாய் – எந்தத்
தையல்உன் பொன்னுடல் அள்ளிவிட்டாள்?'
என்றனள். 'சுந்தரன் என்னுளத்தைக் – கள்ளி!
எட்டிப் பறித்தவள் நீ' என்றனன்.

உள்ளம் பறித்தது நான்என்பதும் – என்றன்
உயிர் பறித்தது நீ என்பதும்
கிள்ளி உறிஞ்சிடும் மாமலர்த்தேன் – இன்பக்
கேணியிற் கண்டிட வேணுமென்றாள்.
துள்ளி எழுந்தனன் சுந்தரன்தான்! – பசுந்
தோகை பறந்தனள் காதலன் மேல்!
வெள்ளத்தி னோடொரு வெள்ளமுமாய் – நல்ல
வீணையும் நாதமும் ஆகிவிட்டார்.

சாதலும் வாழ்தலும் அற்றஇடம் – அணுச்
சஞ்சல மேனும் இல்லாதஇடம்,
மோதலும் மேவலும் அற்றஇடம் – உளம்
மொய்த்தலும் நீங்கலும் அற்றஇடம்.
காதல் உணர்வெனும் லோகத்திலே – அவர்
காணல் நினைத்தல் தவிர்ந்திருந்தார்.
சூதற்ற சுந்தரன் தாயும் வந்தாள் – அங்குச்
சொர்ணத்தின் தாயும் புகுந்துவிட்டாள்!

பெற்ற இளந்தலைக் கைம்பெண்ணடி! — என்ன
பேதைமை? என்றனள், மங்கையின் தாய்.
சிற்சில ஆண்டுகள் முற்படவே — ஒரு
சின்னக் குழந்தையை நீ மணந்தாய்;
குற்றம் புரிந்தனை இவ்விடத்தே — அலங்
கோலமென்றாள் அந்தச் சுந்தரன் தாய்.
புற்றரவொத்தது தாயர் உள்ளம்! — அங்குப்
புன்னகை கொண்டது மூடத்தனம்!

குற்றம் மறுத்திடக் காரணங்கள் — ஒரு
கோடி யிருக்கையில், காதலர்கள்
கற்றவை யாவையும் உள்ளத்திலே — வைத்துக்
கண்ணிற் பெருக்கினர் நீரருவி!
சற்றிது கேளுங்கள் நாட்டினரே! — பரி
தாபச் சரித்திரம் மானிடரே!
ஒற்றைப் பெரும்புகழ்த் தாயகமே! — இந்த
ஊமைகள் செய்ததில் தீமையுண்டோ?

## 14. எழுதாக் கவிதை

மேற்றிசையிற் சூரியன்போய் விழுந்துமறைந் திட்டான்;
　　மெல்லஇருட் கருங்கடலில் விழுந்ததிந்த உலகும்!
தோற்றியபூங் காவனமும் துளிரும்மலர்க் குலமும்
　　தோன்றவில்லை; ஆயினும்நான் ஏதுரைப்பேன் அடடா!
நாற்றிசையின் சித்திரத்தை மறைத்தஇருள் என்றன்
　　நனவிலுள்ள சுந்தரியை மறைக்கவச மில்லை.
மாற்றுயர்ந்த பொன்னுருக்கி வடிவெடுத்த மங்கை
　　மனவெளியில் ஒளிசெய்தாள் என்னதகத் தகாயம்!

புன்னையின்கீழ்த் திண்ணையிலே எனைஇருக்கச் சொன்னாள்,
　　புதுமங்கை வரவுபார்த் திருக்கையிலே, அன்னாள்,
வன்னமலர்க் கூட்டத்தில், புள்ளினத்தில், புனலில்,
　　வானத்தில், எங்கெங்கும் தன்னழகைச் சிந்திச்
சின்னவிழி தழுவும்வகை செய்திருந்தாள்; இரவு
　　தேர்ந்தவுடன் என்னுளத்தைச் சேர்ந்துவிட்டாள், எனினும்;
சன்னத்த மலருடலை என்னிருகை ஆரத்
　　தழுவுமட்டும் என்னுயிரில் தணிவதுண்டோ காதல்?

என்னுளத்தில் தன்வடிவம் இட்டஎழில் மங்கை,
இருப்பிடத்தில் என்னுருவம் தன்னுளத்திற் கொண்டான்;
மின்னொளியாள் வராததுதான் பாக்கி;யிந்த நேரம்
வீறிட்ட காதலுக்கும் வேலிகட்டல் உண்டோ?
கன்னியுளம் இருளென்று கலங்கிற்றோ; கட்டுக்
காவலிலே சிக்கிஅவள் தவித்திடுகின் றாளோ;
என்னென்பேன் அதோபூரிக் கின்றதுவெண் ணிலவும்
எழில்நீல வான்எங்க ணும்வயிரக் குப்பை!

மாலைப்போ தைத்துரத்தி வந்தஅந்திப் போதை
வழியனுப்பும் முன்னிருளை வழியனுப்பி விட்டுக்
கோலநிலா வந்திங்கே கொஞ்சுகின்ற இரவில்
கொலைபுரியக் காத்திருக்கும் காதலொடு நான்தான்
சோலைநடுவே மிகவும் துடிக்கின்றேன்; இதனைத்
தோகையிடம் போயுரைக்க எவருள்ளார்? அன்னாள்
காலிலணி சிலம்புதான் கலீரெனக்கே ளாதோ?
கண்ணெதிரிற் காணேனோ பெண்ணரசை யிங்கே?

தண்ணிலவும் அவள் முகமோ! தாரகைகள் நகையோ!
தளிருடலைத் தொடும்உணர்வோ நன்மணஞ்சேர் குளிரும்!
விண்ணீலம் கார்குழலோ! காணும்எழி லெல்லாம்
மெல்லியின்வாய்க் கள்வெறியோ! அல்லிமலர்த் தேனின்
வண்டின்ஒலி அன்னவளின் தண்டமிழ்த்தாய் மொழியோ!
வாழியஇங் கிவையெல்லாம் எழுதவரும் கவிதை!
கண்டெடுத்தேன் உயிர்ப்புதையல்! அதோவந்து விட்டாள்!
கண்டெழுத முடியாத நறுங்கவிதை அவளே!

## 15. காதற் பெருமை

நல்ல இளம் பருவம் — மக்கள்
நாடும் குணம், கீர்த்தி,
கல்வி இவையுடையான் — உயர்
கஜராஜ் என்பவனும்,
முல்லைச் சிரிப்புடையாள் — மலர்
மூஞ்சி ஸரோஜாவும்,
எல்லையிற் காதற்கடல் — தனில்
ஈடுபட்டுக் கிடந்தார்!

திங்கள் ஒருபுறமும் — மற்றைச்
செங்கதிர் ஓர்புறமும்
தங்கி யிருந்திடினும் — ஒளி
தாவுதல் உண்டதுபோல்
அங்கந்த வேலூரில் — இவர்
அங்கம் பிரிந்திருந்தும்
சங்கமம் ஆவதுண்டாம் — காதற்
சமுத்திர விழிகள்!

ஒட்டும் இரண்டுளத்தைத் — தம்மில்
ஓங்கிய காதலினைப்
பிட்டுப்பிட் டுப்புகன்றார் — அதைப்
பெற்றவர் கேட்கவில்லை.
குட்டை மனத்தாலே — அவர்
கோபப் பெருக்காலே
வெட்டிப்பி ரிக்கவந்தார் — அந்த
வீணையை நாதத்தினை!

'பொன்னவிர் லோகத்திலே — உள்ளம்
பூரிக்கும் காதலிலே
என்னுளம் கன்னியுளம் — இணைந்
திருந்தும் இன்பஉடல்
தன்னைப் பயிலுவதோர் — நல்ல
சந்தர்ப்பம் இல்லை'யென்றே
தன்னையும் தையலையும் — பெற்ற
சமூகத்தை நொந்தான்.

'அண்டை இல்லத்தினிலே — என்
அன்பன் இருக்கின்றான்;
உண்ணும் அமுதிருந்தும் — எதிர்
உண்ண முடிந்ததில்லை.
தண்டமிழ்ப் பாட்டிருந்தும் — செவி
சாய்த்திடக் கூடவில்லை
வண்மலர் சூடவில்லை — அது
வாசலிற் பூத்திருந்தும்,'

என்று ஸரோஜாவும் — பல
எண்ணி எண்ணி அயர்வாள்.

தன்னிலை கண்டிருந்தும் — அதைச்
சற்றும் கருதாமல்
என்னென்னமோ புகல்வார் — அந்த
இரும்பு நெஞ்சுடையார்.
அன்னதன் பெற்றோரின் — செயல்
அத்தனையும் கசப்பாள்.

நல்ல ஸ்ரோஜாவின் — மணம்
நாளைய காலை என்றார்;
மெல்லியின் பெற்றோர்கள் — வந்து
வேறொரு வாலிபனைச்
சொல்லி உனக்கவன்தான் — மிக்க
தோதென்றும் சொல்லிவிட்டார்.
கொல்லும் மொழிகேட்டாள் — மலர்க்
கொம்பு மனம் ஒடிந்தாள்.

'கொழிக்கும் ஆணழகன் — அவன்
கொஞ்சி வந்தே எனது
விழிக்குள் போய்ப் புகுந்தான் — நெஞ்ச
வீட்டில் உலாவு கின்றான்.
இழுத் தெறிந்துவிட்டே — மற்
றின்னொரு வாலிபனை
நுழைத்தல் என்பதுதான் — வெகு
நூதனம்' என்றழுவாள்.

'காதலிருவர்களும் — தம்
கருத் தொருமித்தபின்
வாதுகள் வம்புகள் ஏன்? — இதில்
மற்றவர்க் கென்ன உண்டு?
சூதுநிறை யுளமே — ஏ
துட்ட இருட்டறையே!
நீதிகொள்' என்றுலகை — அவள்
நிந்தனை செய்திடுவாள்!

இல்லத்தின் மாடியிலே — பின்னர்
ஏறிஉரைக்க லுற்றாள்:
'இல்லை உனக்கெனக்கு — மணம்
என்று முடித்துவிட்டார்.

பொல்லாத நாளைக்கொரு — வெறும்
புல்லனை நான் மணக்க
எல்லாம் இயற்றுகின்றார் — பெற்ற
எமன்கள் இவ்விடத்தில்!'

அடுத்த மாடியிலே — நின்ற
அன்பனிது கேட்டான்;
துடித்த உள்ளத்திலே — அம்பு
தொடுக்கப்பட்டு நின்றான்.
எடுத்துக்காட்டி நின்றாள் — விஷம்
இட்டதோர் சீசாவை'
அடிஎனதுயிரே, — அழை
அழை எனையும் என்றான்.

நீயும் உளத்தோனும் — 'விஷம்'
தேடி எடுத்துவந்தான்!
'தூயநற் காதலர்க்கே — பெருந்
தொல்லை தரும்புவியில்
மாய்க நமதுடல்கள்; விஷம்
மாந்துக நம்மலர்வாய்;
போய்நுகர்வோம் சலியா — இன்பம்;
பூமியின் கர்ப்பத்திலே'.

என்று விஷம் குடித்தார் — அவர்
இறப்பெனும் நிலையில்
ஒன்றுபட்டுச் சிறந்தார் — இணை
ஓதரும் காதலர்கள்,
இன்று தொட்டுப் புவியே — இரண்
டெண்ணம் ஒருமித்தபின்
நின்று தடைபுரிந்தால் — நீ
நிச்சயம் தோல்வி கொள்வாய்!

## 16. காதலைத் தீய்த்த கட்டுப்பாடு

வேற்றூர்போய் நள்ளிரவில் வீடு வந்த
வேலனிடம், ஆள் ஒருவன் கடிதம் தந்தான்,
ஏற்றதனை வாசிக்க லுற்றான் வேலன்:
"என்னருமைக் காதலரே, கடைசிச் சேதி;
நேற்றிரவு நாமிருவர் பூந்தோட் டத்தில்,
நெடுநேரம் பேசியதை என்தாய் கண்டாள்!

ஆற்றாத துயரால்என் தந்தை, அண்ணன்
அனைவரிடமும் சொல்லி முடித்து விட்டாள்.

குடும்பத்தின் பெயர்கெடுக்கத் தோன்றி விட்டாய்
கொடியவளே! விஷப்பாம்பே! என்று தந்தை
தடதடவென் றிருகையால் தலையில் மோதித்
தரையினிலே புரண்டழுதார்; அண்ணன் அங்கு
டடமடவென் றேகொல்லைக் கிணற்றில் வீழ்ந்தே
மாய்வார்போல் ஓடிப்பின் திரும்பி வந்து
படுபாவி தாலியற்ற பிறகும் இந்தப்
பழுதுநடை கொள்வதுண்டோ என்று நைந்தார்.

தாயோஎன் எதிர்வந்து, தாலி யோடு
சகலமும் போயினஏடி இன்னும் என்ன!
தீயாகிக் கொளுத்திவிட்டாய் எம்மை யெல்லாம்!
தெருவார்கள் ஊரார்கள் இதைய றிந்தால்
ஓயாமல் தூற்றிடுவார்! யாம்இவ் வூரில்
உயர்ந்திருந்தோம்; தாழ்த்திவிட்டாய் அந்தோ! நீதான்
பாயேனும் விரித்ததிலே படுப்ப துண்டா
பதியிழந்தால்? மூதேவி! என்று சொன்னாள்.

தந்தையார் 'அடி உன்னைக் கொன்று போட்டுத்
தலையறுத்துக் கொள்ளுகின்றேன்' என்பார். அண்ணன்
அந்தமதி யற்றவனைக் கொல்வேன் என்றே
அருகிருக்கும் கொடுவாளைப் பாய்ந்தெ டுப்பான்!
இந்தவிதம் கொதித்தார்கள் இரவு மட்டும்!
இனிஎன்னால் அவர்கட்குத் தொல்லை வேண்டாம்;
சுந்தரனே, என்காதல் துரையே! உன்னைத்
துறக்கின்றேன் இன்றிரவில் கடலில் வீழ்ந்தே!"

காதலியின் கடிதத்தில் இதைவா சித்தான்!
கதறினான்! கடல்நோக்கிப் பறந்தான் வேலன்!
ஈதறிந்தார் ஊரிலுள்ளார்; ஓடி னார்கள்,
எழில்வானம், முழுநிலவு, சமுத்தி ரத்தின்
மீதெல்லாம் மிதக்கும்ஒளி, அகண்டா காரம்
மேவுபெருங் காட்சியில்ஓர் துன்பப் புள்போல்
மாதுகடற் பாலத்தின் கடைசி நின்று
வாய்விட்டுக் கதறுகின்றாள் வசமி ழந்தாள்:

'எனைமணந்தார் இறந்தார்;என் குற்ற மல்ல;
இறந்தவுடன் மங்கலநாண், நல்லா டைகள்,
புனைமலர்குங் குமம்அணிகள் போன துண்டு;
பொன்னுடலும் இன்னுயிரும் போன துண்டோ?
எனைஆளும் காதலுக்கோர் இலக்கி யத்துக்
கிசைந்ததெனில் உயிரியற்கை; நான்என் செய்வேன்?
தனையடக்கிக் காதலினைத் தவிர்த்து வாழும்
சகம்இருந்தால் காட்டாயோ நிலவே நீதான்!

'கண்படைத்த குற்றத்தால் அழகி யோன்என்
கருத்தேறி உயிர்ஏறிக் கலந்து கொண்டான்!
பெண்படைத்த இவ்வுலகைப் பல்லாண் டாகப்
பெற்றுயர்ந்த நெடுவானே புனலே! கூறீர்,
மண்படைப்பே காதலெனில் காத லுக்கு
மறுப்பெதற்குக் கட்டுப்பா டெதற்குக் கண்டார்?
புண்படைத்த என்நாடே, கைம்மைக் கூர்வேல்
பொழிகின்றாய் மங்கையர்மேல்! அழிகின் றாயே!

ஆடவரின் காதலுக்கும், பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும், மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல், மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்!
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்,
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?

'இளமைதந்தாய், உணர்வுதந்தாய், இன்பங் காணும்
இன்னுயிரும் தந்திட்டாய் இயற்கைத் தேவி,
வளமையற்ற நெஞ்சுடையார் இந்நாட் டார்கள்
மறுக்கின்றார் காதலினைக் கைம்மை கூறி;
தளைமீற வலியில்லேன்! அந்தோ, என்றன்
தண்டமிழின் இனிமைபோல் இனிய சொல்லான்
உளமாரக் காதலித்தான் என்னை! அன்னோன்
ஊர்நிந்தை ஏற்பதனைச் சகிப்பே னோநான்!

'ஒருயிரும் இரண்டுடலும் நாங்கள்! எம்மை
உளிகொண்டு வெட்டிவிட்ட கட்டுப் பாடே,

தீராத காதலினை நெஞ்சத் தோடு
தீய்த்துவிட்டாய்' என்றாள் – பின் ஓடி வந்து
சீராளன் தாவினான்! – வீழ்ந்தாள்! – வீழ்ந்தான்!
தேம்பிற்றுப் பெண்ணுலகு! இருவர் தீர்ந்தார்!
ஊரார்கள் பார்த்திருந்தார் கரையில் நின்றே
உளம்துடித்தார்; எனினும்அவர் உயிர்வாழ் கின்றார்.

## 17. தலைவி காதல்

சோலையிலோர் நாள்எனையே
தொட்டிழுத்து முத்தமிட்டான்
துடுக்குத் தனத்தை என்சொல்வேன்
மாலைப்பொழுதில் இந்த மாயம்புரிந்த செம்மல்
வாய்விட்டுச் சிரித்துப் பின்
போய்விட்டானேடி தோழி! (சோ)

ஓடிவிழிக்கு மறைந்தான் – ஆயினும் என்றன்
உள்ளத்தில் வந்து நிறைந்தான்!
வேடிக்கை என்ன சொல்வேன்
மின்னல்போல் எதிர் நின்றான்!
வேண்டித் தழுவச் சென்றேன்
தாண்டி நடந்துவிட்டான்! (சோ)

அகம் புகுந்தான் சேயோ – அவனை எட்டி
அணைக்க வழிசொல்வாயோ!
சகம்பெறும் அவன் அன்று தந்த துடுக்குமுத்தம்!
சக்ரவாகம் போல்வந்தான்;
கொத்திப்போக மறந்தான்! (சோ)

## 18. விரகதாபம்

காதலும் கனலாய் என்னையே சுடும்
ஈதென்ன மாயமோ!
நாதர் மாதெனையே சோதித்தாரோ
நஞ்சமோஇவ் வஞ்சி வாழ்வு? ஐயையோ!
நலியுதேஎன் அகமிகுதியு மலருடலே
நனிமெலிதல் ஆநீதி இதுவலவோ?
வனிதை யாளினெதிர் அழகுதுரை விரைவில்
வருவரோ அலது வருகிலரோ?

வாரிச விக சித முக தரி சனமுற
வசமதோ கலவி புரிவது நிசமோ
மதுரமான அமுதமு
மலரினொடுமது கனியிரச மதிவிரச மடைவதென்ன! (கா)

தென்ற லென்றபுலி சீறல் தாளேன்
சீத நிலவே தீதாய் விளைந்திடுதே!
வென்றி யணைந்திடும் அவர்புயம் அணைந்தே
மேவி ஆவி எய்தல் எந்த நாள்? (காதலும்)

# தமிழ்

## 19. தமிழின் இனிமை

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும், – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்;
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும், – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

பொழிலிடை வண்டின் ஒலியும், – ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்,
குழலிடை வாய்க்கும் இசையும், – வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்,
குழவிகள் மழலைப் பேச்சும், – பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்,
விழைகுவ னேனும், தமிழும் – நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!

பயிலுறும் அண்ணன் தம்பி, – அக்கம்
பக்கத் துறவின் முறையார்,
தயைமிகு உடையாள் அன்னை, – என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை,
குயில்போற் பேசிடும் மனையாள், – அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை,

அயலவ ராகும் வண்ணம் — தமிழ் என்
அறிவினில் உறைதல் கண்டீர்!

நீலச் சுடர்மணி வானம், — ஆங்கே
நிறையக் குளிர்வெண் ணிலவாம்,
காலைப் பரிதியின் உதயம், — ஆங்கே
கடல்மேல் எல்லாம் ஒளியாம்,
மாலைச் சுடரினில் மூழ்கும், — நல்ல
மலைகளின் இன்பக் காட்சி,
மேலென எழுதும் கவிஞர், — தமிழின்
விந்தையை எழுதத் தரமோ?

செந்நெல் மாற்றிய சோறும் — பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை, — கட்டித்
தயிரோடு மிளகின் சாறும்,
நன்மது ரஞ்செய் கிழங்கு — காணில்
நாவிலி னித்திடும் அப்பம்,
உன்னை வளர்ப்பன தமிழா! — உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

## 20. இன்பத் தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர்! — அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்றுபேர்! — இன்பத்
தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்! — இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்! — இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! — இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! — இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! — இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! — இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ!

## 21. தமிழ் உணவு

ஆற்றங் கரைதனிலே — இருள்
அந்தியிலே குளிர் தந்த நிலாவினில்,
காற்றிலுட் கார்ந்திருந்தேன் — வெய்யிற்
காலத்தின் தீமை இலாததினால் அங்கு
வீற்றிருந்தார் பலபேர் — வந்து
மேல்விழும் தொல்லை மறந்திருந்தார்! பழச்
சாற்றுச் சுவைமொழியார் — சிலர்
தங்கள் மணாளரின் அண்டையிருந்தனர்; (ஆற்றங்கரைதனிலே)

நாட்டின் நிலைபேசிப் — பல
நண்பர்கள் கூடி இருந்தனர் ஓர் புறம்.
ஓட்டம் பயின்றிடுவார் — நல்ல
ஒன்பது பத்துப் பிராயம் அடைந்தவர்;
கோட்டைப் பவுன் உருக்கிச் — செய்த
குத்துவிளக்கினைப் போன்ற குழந்தைகள்
ஆட்டநடை நடந்தே — மண்ணை
அள்ளுவர், வீழுவர் அம்புலிவேண்டுவர்; (ஆற்றங்கரைதனிலே)

புனலும் நிலாவொளியும் — அங்குப்
புதுமை செய்தே நெளிந்தோடும்; மரங்களில்
இனிது பறந்து பறந் — தங்கும்
இங்கும் அடங்கிடும் பாடிய பறவைகள்.
தனிஒரு வெள்ளிக்கலம் — சிந்தும்
தரளங்கள் போல்வன நிலவு நக்ஷத்திரம்.
புனையிருள் அந்திப் பெண்ணாள் — ஒளி
போர்த்ததுண்டோ எழில் பூத்ததுண்டோ அந்த
(ஆற்றங்கரைதனிலே)

விந்தை உரைத்திடுவேன் — அந்த
வேளையில் அங்கொரு வாள்விழி கொண்டவள்
முந்த ஓர் பாட்டுரைத்தாள் — அது
முற்றுந் தெலுங்கில் முடிந்து தொலைந்தது;
பிந்தி வடக்கினிலே — மக்கள்
பேசிடும் பேச்சினில் பாட்டு நடத்தினள்
எந்தவிதம் சகிப்பேன்? — கண்ட
இன்பம் அனைத்திலும் துன்பங்கள் சேர்ந்தன;
(ஆற்றங்கரைதனிலே)

பொருளற்ற பாட்டுக்களை — அங்குப்
புத்தமுதென்றனர்; கைத்தாதளமிட்டனர்;
இருளுக்குள் சித்திரத்தின் — திறன்
ஏற்படுமோ இன்பம் வாய்த்திடக்கூடுமோ?
உருவற்றுப் போனதுண்டோ — மிக்க
உயர்வுற்ற தமிழ்மக்கள் உணர்வுற்ற நல்வாழ்வு?
கருவுற்ற செந்தமிழ்ச்சொல் — ஒரு
கதியற்றுப் போனதுண்டோ அடடா அந்த (ஆற்றங்கரைதனிலே)

சங்கீத விற்பனனாம் — ஒரு
சண்டாளன் ஆரம்பித்தான் இந்துஸ்தான் ஒன்றை;
அங்கந்தப் பாட்டினிலே — சுவை
அத்தனையும் கண்டுவிட்டது போலவே
நம்குள்ளர் வாய்திறந்தே — நன்று
நன்றென ஆர்ப்பரித்தார்; அந்த நேரத்தில்
எங்கிருந்தோ தமிழில் — ஓர்
இன்பநறுங்கவி கேட்டது காதினில் (ஆற்றங்கரைதனிலே)

'அஞ்சலை, உன் ஆசை — என்னை
அப்புறம் இப்புறம் போகவிடாதடி
கொஞ்சம் இரங்கிடுவாய் — நல்ல
கோவைப் பழத்தினைப் போன்ற உதட்டினை
வஞ்சி, எனக்களிப்பாய்!' — என்ற
வண்ணத் தமிழ்ப்பதம் பண்ணிற் கலந்தென்றன்
நெஞ்சையும் வானத்தையும் — குளிர்
நீரையும், நிலவையும் தமிழர் குலத்தையும்

ஒன்றெனச் செய்ததுவே — நல்
உவகை பெறச்செய்ததே தமிழ்ப் போசனம்!
நன்று தமிழ் வளர்க! — தமிழ்
நாட்டினில் எங்கணும் பல்குக! பல்குக!
என்றும் தமிழ் வளர்க! — கலை
யாவும் தமிழ்மொழியால் விளைந்தோங்குக!
இன்பம் எனப்படுதல் — தமிழ்
இன்பம் எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!

## 22. தமிழ்ப் பேறு

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
'என்னை எழு' தென்று சொன்னது வான்;

ஓடையுந் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியந் தீட்டுக, என்றுரைக்கும்;
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்;
ஆடும்மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க என்றார்.

சோலைக் குளிர்தரு தென்றல் வரும், பசுந்
தோகை மயில் வரும் அன்னம் வரும்;
மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்
மாணிக்கப் பரிதி காட்சிதரும்;
'வேலைச் சுமந்திடும் வீரரின் தோள்உயர்
வெற்பென்று சொல்லி வரைக' எனும்
கோலங்கள் யாவும் மலைமலையாய் வந்து
கூவின என்னை! — இவற்றிடையே,

இன்னலிலே, தமிழ் நாட்டினிலேயுள்ள
என் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்.
அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே!
'இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் —
துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை யுண்டாகிடும், வீரம் வரும்.'

## 23. எங்கள் தமிழ்

இனிமைத் தமிழ் மொழி எமது — எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு — எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை — எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் — தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில் (இனிமைத்)

தமிழ் எங்கள் உயிர் என்ப தாலே — வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே
தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம் — இன்பத்
தமிழ்குன்று மேல் தமிழ் நாடெங்கும் இருளாம்.

தமிழுண்டு தமிழ் மக்க ளுண்டு — இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
தமிழ் என்று தோள் தட்டி ஆடு! — நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு!
(இனிமைத்)

## 24. தமிழ் வளர்ச்சி

எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிஉறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்!
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்.
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை.
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!

## 25. தமிழ்க் காதல்

கமலம் அடுக்கிய செவ்விதழால் — மலர்க்
காட்டினில் வண்டின் இசைவளத்தால்
கமழ்தரு தென்றல் சிலிர்சிலிர்ப்பால் — கருங்
கண்மலரால் முல்லை வெண்ணகைப்பால்
அமையும் அன்னங்கள் மென்னடையால் — மயில்
ஆட்டத்தினால் தளிர் ஊட்டத்தினால்
சமையும் ஒருத்தி — அப் பூஞ்சோலை — எனைத்
தன்வசம் ஆக்கிவிட்டாள் ஒருநாள்.

சோலை அணங்கொடு திண்ணையிலே — நான்
தோளினை ஊன்றி இருக்கையிலே

சேலை நிகர்த்த விழியுடையாள் — என்றன்
செந்தமிழ்ப் பத்தினி வந்துவிட்டாள்!
சோலை யெலாம்ஒளி வானமெலாம் — நல்ல
தோகையர் கூட்டமெ லாம்அளிக்கும்
கோலஇன் பத்தையென் உள்ளத்திலே — வந்து
கொட்டிவிட் டாள்எனைத் தொட்டிழுத்தாள்!

## 26. எந்நாளோ?

என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்,
பராக்கிர மத்தால், அன்பால்,
உன்னத இமம லைபோல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட் டிடல்எந் நாளோ?

கைத்திறச் சித்தி ரங்கள்,
கணிதங்கள் வான நூற்கள்,
மெய்த்திற நூற்கள், சிற்பம்,
விஞ்ஞானம், காவி யங்கள்
வைத்துள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தக சாலை எங்கும்
புதுக்குநாள் எந்த நாளோ?

தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயுநாள் எந்த நாளோ,
ஆரிதைப் பகர்வார் இங்கே?

பார்த்தொழில் அனைத்தும் கொண்ட
பயன்தரும் ஆலைக் கூட்டம்
ஆர்த்திடக் கேட்ப தென்றோ?
அணிபெறத் தமிழர் கூட்டம்

போர்த்தொழில் பயில்வ தெண்ணிப்
புவியெலாம் நடுங்கிற் றென்ற
வார்த்தையைக் கேட்டு நெஞ்சு
மகிழ்ந்து கூத்தாடல் என்றோ?

வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவ ரேமற்
றுடலினால் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங்கொ ணாதே;
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ?

தறுக்கினாற் பிறதே சத்தார்
தமிழின்பால் என்நாட் டான்பால்
வெறுப்புறும் குற்றஞ் செய்தா
ராதலால் விரைந்தன் னாரை
நொறுக்கினார் முதுகெ லும்பைத்
தமிழர்கள் என்ற சேதி
குறித்தசொல் கேட்டின் பத்திற்
குதிக்கும்நாள் எந்த நாளோ?

நாட்டும்சீர்த் தமிழன் இந்த
நானில மாயம் கண்டு
காட்டிய வழியிற் சென்று
கதிபெற வேண்டும் என்றே
ஆட்டும்சுட் டுவிரல் கண்டே
ஆடிற்று வையம் என்று
கேட்டுநான் இன்ப ஊற்றுக்
கேணியிற் குளிப்ப தெந்நாள்?

விண்ணிடை இரதம் ஊர்ந்து
மேதினி கலக்கு தற்கும்
பண்ணிடைத் தமிழைச் சேர்த்துப்
பாரினை மயக்கு தற்கும்
மண்ணிலே வாளை யேந்திப்
பகைப்புலம் மாய்ப்ப தற்கும்

எண்ணிலாத் தமிழர் உள்ளார்
எனும்நிலை காண்ப தென்றோ?

கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்,
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ?

## 27. சங்க நாதம்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!
திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமிழுடன் பிறந்தோம்
நாங்கள், ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு ஞாபகம்செய்
முழங்கு சங்கே! (எங்)

சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென் றூதூது சங்கே!
பொங்கும் தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!
வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள்
வெற்றித் தோள்கள்!
கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறுமுள்ளம்
எங்கள் உள்ளம்!
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய் கின்றதமிழ்
எங்கள் மூச்சாம்! (எங்)

## 28. தமிழ்க் கனவு

தமிழ்நா டெங்கும் தடபுடல்! அமளி!!
பணமே எங்கணும் பறக்குது விரைவில்

குவியுது பணங்கள்! மலைபோற் குவியுது!!
தமிழின் தொண்டர் தடுக்கினும் நில்லார்,
ஓடினார், ஓடினார், ஓடினார் நடந்தே!
ஆயிரம் ஆயிரத் தைந்நூறு பெண்கள்
ஒளிகொள் விழியில் உறுதி காட்டி
இறக்கை கட்டிப் பறக்கின் றார்கள்!
ஐயோ, எத்தனை அதிர்ச்சி, உத்ஸாகம்!
சமுத்திரம் போல அமைந்த மைதானம்
அங்கே கூடினார் அத்தனை பேரும்.
குவித்தனர் அங்கொரு கோடி ரூபாய்.
வீரத் தமிழன் வெறிகொண் டெழுந்தான்.
உரக்கக் கேட்டான்: 'உயிரோ நம்தமிழ்?
அகிலம் கிழிய ஆம்! ஆம்! என்றனர்.
உள்ளன்பு ஊற்றி ஊற்றி ஊற்றித்
தமிழை வளர்க்கும் சங்கம் ஒன்று
சிங்கப் புலவரைச் சேர்த்தமைத் தார்கள்!
உணர்ச்சியை, எழுச்சியை, ஊக்கத் தையெலாம்
கரைத்துக் குடித்துக் கனிந்த கவிஞர்கள்
சுடர்க்கவி தொடங்கினர்! பறந்தது தொழும்பு!
கற்கண்டு மொழியில் கற்கண்டுக் கவிதைகள்,
வாழ்க்கையை வானில், உயர்த்தும் நூற்கள்,
தொழில்நூல், அழகாய்த் தொகுத்தனர் விரைவில்!
காற்றி லெலாம் கலந்தது கீதம்!
சங்கீ தமெலாம் தகத்தகா யத்தமிழ்!
காதலெ லாம்தமிழ் கனிந்த சாறு!
கண்ணெதிர் தமிழக் கட்டுடல் வீரர்கள்!
காதல் ததும்பும் கண்ணா என்றனைக்
கோதை ஒருத்தி கொச்சைத் தமிழால்
புகழ்ந்தா ளென்று, பொறாமல் சோர்ந்து
வீழ்ந்தான்! உடனே திடுக்கென விழித்தேன்.
அந்தோ! அந்தோ! பழைய
நைந்த தமிழரொடு நானிருந் தேனே!

# பெண்ணுலகு

## 29. பெண்களைப்பற்றிப் பேர்னாட்ஷா

புவிப்பெரியான் ஜார்ஜ் பெர்னார்ட் ஷாவுரைத்த
பொன்மொழியைக் கேளுங்கள் நாட்டில் உள்ளீர்!
"உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்.
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்;
அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான்"!
குவியுமெழிற் பெண்களுக்கே ஊறு செய்யும்
குள்ளர்களே, கேட்டீரோ ஷாவின் பேச்சை!

அவனியிலே ஒருவனுக்கு மனைவி யின்றேல்
அவனடையும் தீமையையார் அறியக் கூடும்?
கவலையுற ஆடவர்கள் நாளும் செய்யும்
கணக்கற்ற ஊழல்களை யெல்லாம் அந்த
நவையற்ற பெண்களன்றோ விலக்கு கின்றார்!
நானிலத்தில் மார்தட்டும் ஆட வர்கள்
சுவைவாழ்விற் கடைத்தேறத் தக்க தான
சூக்ஷமமும் பெண்களிடம் அமைந்த தன்றோ!

கல்வியில்லை உரிமையில்லை பெண்க ளுக்குக்
கடைத்தேற வழியின்றி விழிக்கின் றார்கள்!
புல்லென்றே நினைக்கின்றீர் மனைவி மாரைப்
புருஷர்களின் உபயோகம் பெரிதென் கின்றீர்!
வல்லவன்பே ரறிஞன்ஷா வார்த்தை கேட்டீர்
மனோபாவம் இனியேனும் திருந்த வேண்டும்.
இல்லையெனில் எதுசெயலாம்! பெண்ஆண் என்ற
இரண்டுருளை யால்நடக்கும் இன்பவாழ்க்கை!

## 30. கைம்மைப் பழி

கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இங்கு
வேரிற் பழுத்த பலா— மிகக்
கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே குளிர்
வடிகின்ற வட்ட நிலா!

சீரற் றிருக்குதையோ குளிர் தென்றல்
சிறந்திடும் பூஞ் சோலை – சீ
சீஎன் றிகழ்ந்திடப் பட்டதண்ணே நறுஞ்
சீதளப் பூ மாலை.

நாடப்படா தென்று நீக்கி வைத்தார்கள்
நலஞ்செய் நறுங் கனியைக் – கெட்ட
நஞ்சென்று சொல்லிவைத் தார் எழில் வீணை
நரம்புதரும் • தொனியை.

தொடப் படாதென்று சொல்லிவைத் தார் தலை
சூடத்தகும் க்ரீ டத்தை – நாம்
தொடவும் தகாதென்று சொன்னார் நறுந்தேன்
துவைந்திடடும் பொற் குடத்தை!

இன்ப வருக்கமெல் லாம்நிறை வாகி
இருக்கின்ற பெண்கள் நிலை – இங்
கிவ்விதமாய் இருக்குதண்ணே! இதில்
யாருக்கும் வெட்க மிலை!

தன்கண வன்செத்து விட்டபின் மாது
தலையிற்கைம் மைஎன ஓர் – பெருந்
துன்பச் சுமைதனைத் தூக்கிவைத் தார்; பின்பு
துணைதேட வேண்டாம் என் றார்.

துணைவி இறந்தபின் வேறு துணைவியைத்
தேடுமோர் ஆடவன் போல் – பெண்ணும்
துணைவன் இறந்தபின் வேறு துணைதேடச்
சொல்லிடு வோம்புவி மேல்.

'கணைவிடு பட்டதும் லட்சியம் தேடும்' நம்
காதலும் அவ் வாறே – அந்தக்
காதற் கணைதொடுக் காத உயிர்க்குலம்
எங்குண்டு சொல் வேறே?

காதல் இல்லாவிடம் சூனியமாம் புவி
காதலினால் நடக்கும்! – பெண்கள்
காதலுளத்தைத் தடுப்பது, வாழ்வைக்
கவிழ்க்கின்றதே நிகர்க்கும்.

காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைம்மையைத் தூர்க்கா தீர்! – ஒரு

கட்டழகன் திருத் தோளினைச் சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்கா தீர்!

## 31. கைம்மைக் கொடுமை

கண்கள் நமக்கும்உண்டு — நமக்குக்
    கருதும் வன்மையுண்டு;
மண்ணிடைத் தேசமெல்லாம் — தினமும்
    வாழ்ந்திடும் வாழ்க்கையிலே
எண்ண இயலாத — புதுமை
    எதிரிற் காணுகின்றோம்
கண்ணிருந் தென்ன பயன்? நமக்குக்
    காதிருந் தென்னபயன்?

வானிடை ஏறுகின்றார் — கடலை
    வசப்ப டுத்துகின்றார்
ஈனப் பொருள்களிலே — உள்ளுறை
    இனிமை காணுகின்றார்
மேனிலை கொள்ளுகின்றார் — நாமதை
    வேடிக்கை பார்ப்பதல்லால்
ஊன்பதைத்தே அவைபோல் — இயற்ற
    உணர்ச்சி கொள்வதில்லை.

புழுதி, குப்பை, உமி — இவற்றின்
    புன்மைதனைக் களைந்தே
பழரசம் போலே — அவற்றைப்
    பயன்ப டுத்துகின்றார்!
எழுதவும் வேண்டா — நம்நிலை
    இயம்பவும் வேண்டா!
அழகிய பெண்கள் — நமக்கோ
    அழுகிய பழத்தோல்!

கைம்மை எனக்கூறி — அப்பெரும்
    கையினிற் கூர்வேலால்
நம்மினப் பெண்குலத்தின் — இதய
    நடுவிற் பாய்ச்சுகின்றோம்;
செம்மை நிலையறியோம் — பெண்களின்
    சிந்தையை வாட்டுகின்றோம்;
இம்மை இன்பம்வேண்டல் — உயிரின்
    இயற்கை என்றறியோம்.

கூண்டிற் கிளிவளர்ப்பார் — இல்லத்தில்
குக்கல் வளர்ந்திடுவார்,
வேண்டியது தருவார் — அவற்றின்
விருப்பத்தை யறிந்தே!
மாண்டவன் மாண்டபின்னர் — அவனின்
மனைவியின் உளத்தை
ஆண்டையர் காண்பதில்லை — ஐயகோ,
அடிமைப் பெண்கதியே!

## 32. மூடத் திருமணம்

'முல்லை சூடி நறுமணம் முழுகிப்
பட்டுடை பூண்டு பாலொடு பழங்கள்
ஏந்திய வண்ணம் என்னரு மைமகள்
தனது கணவனும் தானு மாகப்
பஞ்சணை சென்று பதைப்புறு காதலால்
ஒருவரை ஒருவர் இழுத்தும் போர்த்தும்,
முகமல ரோடு முகமலர் ஒற்றியும்,
இதழோடு இதழை இனிது சுவைத்தும்,
நின்றும் இருந்தும் நேயமோடு ஆடியும்
பிணங்கியும், கூடியும் பெரிது மகிழ்ந்தே
இன்பத்துறையில் இருப்பர்' என்று எண்ணினேன்.
இந்த எண்ணத்தால் இருந்தேன் உயிரோடு!
பாழும் கப்பல் பாய்ந்து வந்து
என்மகள் மருகன் இருக்கும் நாட்டில்
என்னை இறக்கவே, இரவில் ஒருநாள்
என்மகள் மருகன் இருவரும் இருந்த
அறையோ சிறிது திறந்து கிடந்ததை
நள்இராப்பொழுதில் நான்கண்ட போதில்
இழுத்துச் சாத்த என்கை சென்றது;
கழுத்தோ கதவுக்கு உட்புறம் நீண்டது;
கண்களோ மருகனும் மகளும் கனிந்து
காதல் விளைப்பதைக் காண ஓடின;
வாயின் கடையில் எச்சில் வழியக்
குறட்டை விட்டுக் கண்கள் குழிந்து
நரைத்தலை சோர்ந்து, நல்லுடல் எலும்பாய்ச்
சொந்த மருகக் கிழவன் தூங்கினான்!

இளமை ததும்ப, எழிலும் ததும்பக்
காதல் ததும்பக் கண்ணீர் ததும்பி
என்மகள் கிழவ னருகில் இருந்தாள்.
சிவந்த கன்னத்தால் விளக்கொளி சிவந்தது!
கண்ணீர்ப் பெருக்கால் கவின்உடை நனைத்தாள்!
தொண்டு கிழவன் விழிப்பான் என்று
கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள்
காதலும் தானும் கனலும் புழுவுமாய்
ஏங்கினாள்; பின்பு வெடுக்கென்று எழுந்தாள்.
சர்க்கரைச் சிமிழியைப் பாலிற் சாய்த்தாள்.
செம்பை எடுத்து வெம்பி அழுதாள்.
எதையோ நினைத்தாள்! எதற்கோ விழித்தாள்!
உட்கொள்ளும் தருணம் ஓடிநான் பிடுங்கினேன்.
பாழுந் தாயே! பாழுந் தாயே!
என்சா வுக்கே உனை இங்கு அழைத்தேன்!
சாதலைத் தடுக்கவோ தாய்எமன் வந்தாய்?
என்றுஎனைத் தூற்றினாள். இதற்குள்ஓர் பூனை
சாய்ந்த பாலை நக்கித் தன்தலை
சாய்ந்து வீழ்ந்து செத்தது கண்டேன்.
மண்ணாய்ப் போக! மண்ணாய்ப் போக!
மனம்பொருந் தாமணம் மண்ணாய்ப் போக!
சமூகச் சட்டமே! சமூக வழக்கமே!
நீங்கள், மக்கள் அனைவரும்
ஏங்கா திருக்க மண்ணாய்ப் போகவே!

## 33. எழுச்சியுற்ற பெண்கள்

மேற்றிசையில் வானத்தில் பொன்னு ருக்கு
வெள்ளத்தில் செம்பருதி மிதக்கு நேரம்!
வேற்கண்ணி யாளொருத்தி சோலை தன்னில்
விளையாட நின்றிருந்தாள் மயிலைப் போலே!
காற்றடித்த சோலையிலே நேரம் பார்த்துக்
கனியடித்துக் கொண்டுசெலும் செல்வப் பிள்ளை
ஆற்றுவெள்ளம் போலாசை வெள்ளம் தூண்ட
அவளிடத்தே சிலசொன்னான் பின்னுஞ் சொல்வான்:

'விரிந்தஒரு வானத்தின் ஒளிவெள் ளத்தை
விரைந்துவந்து கருமேகம் விழுங்கக் கூடும்!

இருந்தவெயில் இருளாகும் ஒருக ணத்தில்!
இதுஅதுவாய் மாறிவிடும் ஒருக ணத்தில்.
தெரிந்ததுதான்; ஆனாலும் ஒன்றே யொன்று
தெளிந்தஓர் உள்ளத்தில் எழுந்த காதல்
பருந்துவந்து கொத்துமென்றும் தணிவ தில்லை;
படைதிரண்டு வந்தாலும் சலிப்ப தில்லை!

'கன்னத்தில் ஒருமுத்தம் வைப்பாய் பெண்ணே,
கருதுவதிற் பயனில்லை தனியாய் நின்று.
மின்னிவிட்டாய் என்மனத்தில்! பொன்னாய்ப் பூவாய்
விளைந்துவிட்டாய் கண்ணெதிரில்' என்று சொன்னான்.
கன்னியொரு வார்த்தையென்றாள் என்ன வென்றான்;
கல்வியற்ற மனிதனைநான் மதியேன் என்றாள்.
பன்னூற்பண் டிதனென்று தன்னைச் சொன்னான்.
பழச்சுளையின் வாய்திறந்து சிரித்துச் சொல்வாள்:

பெருங்கல்விப் பண்டிதனே! உனக்கோர் கேள்வி;
பெண்களுக்குச் சுதந்தரந்தான் உண்டோ? என்றாள்.
தரும்போது கொள்வதுதான் தருமம் என்றான்.
தராவிடில்நான் மேற்கொண்டால் என்ன வென்றாள்.
திருமணமா காதவள்தன் பெற்றோ ரின்றிச்
செயல்ஒன்று தான்செய்தல் அதர்மம் என்றான்.
மருவஅழைக் கின்றாயே, நானும் என்றன்
மாதா பிதாவின்றி விடைசொல் வேனோ?

என்றுரைத்தாள். இதுகேட்டுச் செல்வப் பிள்ளை
என்னேடி, இதுஉனக்குத் தெரிய வில்லை;
மன்றல்செயும் விஷயத்தில் ஒன்றில் மட்டும்
மனம்போல நடக்கலாம் பெண்கள் என்றான்.
என்மனது வேறொருவன் இடத்தி லென்றே
இவனிட்ட பீடிகையைப் பறக்கச் செய்தாள்.
உன்நலத்தை இழக்கின்றாய் வலிய நானே
உனக்களிப்பேன் இன்பமென நெருங்க லானான்!

அருகவளும் நெருங்கிவந்தாள்; தன்மேல் வைத்த
ஆர்வந்தான் எனநினைத்தான்! இமைக்கு முன்னே
ஒருகையில் உடைவாளும் இடது கையில்
ஓடிப்போ! என்னுமொரு குறிப்பு மாகப்

புருவத்தை மேலேற்றி விழித்துச் சொல்வாள்;
'புனிதத்தால் என்காதல் பிறன்மே லென்று
பரிந்துரைத்தேன்! மேற்சென்றாய்! தெளிந்த காதல்
படைதிரண்டு வந்தாலும் சலியா'தென்றாள்.

ஓடினான் ஓடினான் செல்வப் பிள்ளை
ஓடிவந்து மூச்சுவிட்டான் என்னி டத்தில்.
கூடிஇரு நூறுபுலி எதிர்த்த துண்டோ?
கொலையாளி யிடமிருந்து மீண்ட துண்டோ?
ஓடிவந்த காரணத்தைக் கேட்டேன். அன்னோன்
உரைத்துவிட்டான்! நானவற்றைக் கேட்டு விட்டேன்.
கோடிஉள்ளம் வேண்டுமிந்த மகிழ்ச்சி தாங்கக்
குலுங்கநகைத் தேயுரைத்தேன் அவனி டத்தில்:

செல்வப்பிள் ளாய்!இன்று புவியின் பெண்கள்
சிறுநிலையில் இருக்கவில்லை; விழித்துக் கொண்டார்!
கொல்லவந்த வாளைநீ குறைசொல் லாதே!
கொடுவாள்போல் மற்றொருவாள் உன்ம னைவி
மெல்லிடையில் நீகாணாக் கார ணத்தால்,
விளையாட நினைத்துவிட்டாய் ஊர்ப்பெண் கள்மேல்!
பொல்லாத மானிடனே, மனச்சான் றுக்குள்
புகுந்துகொள்வாய்! நிற்காதே! என்றேன்; சென்றான்.

## 34. குழந்தை மணத்தின் கொடுமை

ஏழு வயதே எழிற்கருங் கண்மலர்!
ஒருதா மரைமுகம்! ஒருசிறு மணியிடை!!
சுவைத் தறியாத சுவைதருங் கனிவாய்!
இவற்றை யுடைய இளம்பெண் – அவள்தான்,
கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு.
தாவாச் சிறுமான், மோவா அரும்பு!
தாலி யறுத்துத் தந்தையின் வீட்டில்
இந்தச் சிறுமி யிருந்திடு கின்றாள்;
இவளது தந்தையும் மனைவியை யிழந்து
மறுதார மாய்ஓர் மங்கையை மணந்தான்.
புதுப்பெண் தானும் புதுமாப் பிளையும்
இரவையே விரும்பி ஏறுவர் கட்டிலில்!
பகலைப் போக்கப் பந்தா டிடுவர்!
இளந்தலைக் கைம்பெண் இவைகளைக் காண்பாள்!

தனியாய் ஒருநாள் தன்பாட் டியிடம்
தேம்பித் தேம்பி அழுத வண்ணம்
ஏழு வயதின் இளம்பெண் சொல்லுவாள்:
என்னை விலக்கி என்சிறு தாயிடம்
தந்தை கொஞ்சுதல் தகுமோ?' தந்தை
அவளை விரும்பி, அவள்தலை மீது
பூச்சூடு கின்றார்; புறக்கணித் தார்எனை!
தாமும் அவளும் தனியறை செல்வார்;
நான்ஏன் வெளியில் நாய்போற் கிடப்பது?
அவருக்கு நான்மகள்! அவர்எதிர் சென்றால்,
நீபோ! என்று புருவம் நெறிப்பதோ?'
பாட்டி மடியிற் படுத்துப் புரண்டே
இவ்வாறு அழுதாள் இளம்பூங் கொடியாள்.
இந்நிலைக்கு இவ்வாறு அழுதாள் – இவளது
பின்நிலை எண்ணிப் பாட்டி பெரிதும்
அழுத கண்ணீர் வெள்ளம், அந்தக்
குழந்தை வாழ்நாட் கொடுமையிற் பெரிதே.

## 35. பெண்ணுக்கு நீதி

கல்யாணம் ஆகாத பெண்ணே! – உன்
கதிதன்னை நீநிச்ச யம்செய்க கண்ணே! (கல்)

வல்லமை பேசியுன் வீட்டில் – பெண்
வாங்கவே,வந்திடு வார்கள்சில பேர்கள்;
நல்ல விலை பேசுவார் – உன்னை
நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்,
கல்லென உன்னை மதிப்பார் – கண்ணில்
கல்யாண மாப்பிள்ளை தன்னையுங் கண்டார்;
வல்லி உனக்கொரு நீதி – 'இந்த
வஞ்சகத் தரகர்க்கு நீ அஞ்ச வேண்டாம்' (கல்)

பெற்றவ ருக்கௌஜ மானர் – எதிர்
பேசவொண் ணாதவர் ஊரினில் துஷ்டர்.
மற்றும் கடன்கொடுத் தோர்கள் – நல்ல
வழியென்று ஜாதியென் றேவுரைப் பார்கள்;
சுற்றத்தி லேமுதி யோர்கள் – இவர்
சொற்படி உன்னைத் தொலைத்திடப் பார்ப்பார்.

கற்றவளே ஒன்று சொல்வேன் — 'உன்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன்!' (கல்)

தனித்துக் கிடந்திடும் லாயம் — அதில்
தள்ளி யடைக்கப் படுங்குதி ரைக்கும்
கனைத்திட உத்தர வுண்டு — வீட்டில்
காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டும்;
கனத்துடன் பெற்றோரைக் கேளே! — அவர்
கல்லொத்த நெஞ்சையுன் கண்ணீரி னாலே
நனைத்திடு வாய்அதன் மேலும் — அவர்
ஞாயம் தராவிடில் விடுதலை மேற்கொள்! (கல்)

மாலைக் கடற்கரை யோரம் — நல்ல
வண்புனல் பாய்ந்திடும் மாநதி தீரம்
காலைக் கதிர்சிந்து சிற்றூர் — கண்
காட்சிகள், கூட்டங்கள், பந்தாடும் சாலை
வேலை ஒழிந்துள்ள நேரம் — நீ
விளையாடு வாய்தாவி விளையாடு மான்போல்!
கோலத் தினைக்கொய்வ துண்டோ? — 'பெண்கள்
கொய்யாப் பழக்கூட்டம்' என்றே உரைப்பாய்.

## 36. கைம்பெண் நிலை

கண்போற் காத்தேனே — என்னருமைப்
பெண்ணை நான்தானே (கண்)

மண்ணாய்ப் போன மாப் பிள்ளை
வந்ததால் நொந்தாள் கிள்ளை
மணமக னானவன் — பிணமக னாயினன்
குணவதி வாழ்க்கை எவ் — வணமினி ஆவது? (கண்)

செம்பொற் சிலை,இக் காலே
கைம் பெண்ணாய்ப் போன தாலே
திலகமோ குழலில் — மலர்களோ அணியில்?
உலகமே வசைகள் — பலவுமே புகலும் (கண்)

பொன்னுடை பூஷ ணங்கள்
போக்கினாளே என் திங்கள்!
புகினும் ஓர்அகம் சகுனம் தீதென
முகமும் கூசுவார் — மகளை ஏசுவார்! (கண்)

தரையிற் படுத்தல் வேண்டும்
சாதம் குறைத்தல் வேண்டும்
தாலி யற்றவள் – மே லழுத்திடும்
வேலின் அக்ரமம் – ஞாலம் ஒப்புமோ? (கண்)

வருந்தாமற் கைம்பெண் முகம்
திருந்துமோ இச் சமூகம்?
மறுமணம் புரிவது – சிறுமைஎன் றறைவது
குறுகிய மதியென – அறிஞர்கள் மொழிகுவர் (கண்)

## 37. இறந்தவன்மேற் பழி

அந்திய காலம் வந்ததடியே! – பைந்தொடியே!
இளம்பிடியே! பூங்கொடியே!

சிந்தைஒன் றாகிநாம் இன்பத்தின் எல்லை
தேடிச் சுகிக்கையில் எனக்கிந்தத் தொல்லை
வந்ததே இனிநான் வாழ்வதற் கில்லை
மனத்தில் எனக்கிருப்ப தொன்றே – அதை – இன்றே –
குணக்குன்றே, – கேள்நன்றே! (அந்திய)

கடும்பிணி யாளன்நான் இறந்தபின் மாதே!
கைம்பெண்ணாய் வருந்தாதே, பழிஎன்றன் மீதே,
அடஞ்செய்யும் வைதிகம் பொருள்படுத் தாதே!
ஆசைக் குரியவனை நாடு – மகிழ்வோடு – தார்சூடு –
நலம்தேடு! (அந்திய)

கற்கண்டு போன்றபெண் கணவனை இழந் தால்
கசந்த பெண் ஆவது விந்தைதான் புவி மேல்!
சொற்கண்டு மலைக்காதே உன்பகுத் தறிவால்
தோஷம், குணம் அறிந்து நடப்பாய் – துயர் கடப்பாய் –
துணை பிடிப்பாய் – பயம் விடுப்பாய். (அந்திய)

## 38. கைம்மைத் துயர்

பெண்கள்துயர் காண்பதற்கும் கண்ணிழந்தீரோ!
கண்ணிழந்தீரோ! உங்கள் கருத்திழந்தீரோ! (பெண்)

பெண்கொடிதன் துணையிழந்தால்
பின்பு துணை கொள்வதிலே
மண்ணணில் உடம்பாகாவதென்ன வாழ்வறிந்தோரே?
வாழ்வறிந்தோரே! மங்கை மாரை ஈன்றோரே! (பெண்)

மாலையிட்ட மணவாளன் இறந்து விட்டால்
மங்கைநல்லாள் என்ன செய்வாள்? அவளை நீங்கள்
ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம்
அணுவளவும் அடையாமல் சாகச் செய்தீர்!
பெண்டிழந்த குமரன் மணம்
பெண்டு கொள்ளச் செய்யும் எத்தனம்
கண்டிருந்தும் கைம்பெண் என்ற கதை சொல்லலாமோ?
கதை சொல்லலாமோ? பெண்கள் வதை கொள்ளலாமோ?
(பெண்)

துணையிழந்த பெண்கட்குக் காதல் பொய்யோ?
சுகம்வேண்டா திருப்பதுண்டோ அவர்கள் உள்ளம்?
அணையாத காதலினை அணைக்கச் சொன்னீர்
அணைகடந்தால் உங்கள்தடை எந்தமூலை?
பெண்ணுக்கொரு நீதி கண்டீர்
பேதமெனும் மதுவை யுண்டீர்
கண்ணிலொன்றைப் பழுதுசெய்தால் கான்றுமிழாதோ?
கான்றுமி ழாதோ புவி தான் பழியாதோ? (பெண்)

## 39. கைம்மை நீக்கம்

நீ எனக்கும், உனக்கு நானும் — இனி
நேருக்கு நேர் தித்திக்கும் பாலும், தேனும் (நீ)

தூய வாழ்வில் இதுமுதல் நமதுளம்
நேய மாக அமைவுற உறுதிசொல்! அடி! (நீ)

கைம்பெண் என்றெண்ணங் கொண்டே
கலங்கினா யோகற் கண்டே?

காடு வேகு வதை ஒரு மொழியினில்
மூடு போட முடியுமா உரையடி? இத்ததி (நீ)

பைந்தமி ழைச்சீ ராக்கக்
கைம்மைஎன் னும்சொல் நீக்கப்
பறந்து வாடி அழகிய மயிலே!
இறந்த கால நடைமுறை தொலையவே. (நீ)

பகுத்தறிவான மன்று
பாவை நீஏறி நின்று
பாரடி உன் எதிரினிற் பழஞ் செயல்
கோரமாக அழிந்தொழிகுவதையே (நீ)

கருத்தொரு மித்த போது
கட்டுக்கள் என்ப தேது
கைம்மை கூறும் அதிசய மனிதர்கள்
செம்மை யாகும் படிசெய மனதுவை! அடி! (நீ)

## 40. தவிப்பதற்கோ பிள்ளை?

விளக்குவைத்த நேரத்தில் என்வேலைக் காரி
வெளிப்புறத்தில் திண்ணையிலே என்னிடத்தில் வந்து
களிப்புடனே 'பிரசவந்தான் ஆய்விட்ட'தென்றாள்!
காதினிலே குழந்தையழும் இன்னொலியும் கேட்டேன்!
உளக்கலசம் வழிந்துவரும் சந்தோஷத் தாலே
உயிரெல்லாம் உடலெல்லாம் நனைந்துவிட்டேன் நன்றாய்;
வளர்த்துவரக் குழந்தைக்கு வயதுமூன் றின்பின்
மனைவிதான் மற்றுமொரு கருப்பமுற லானாள்.

பெண்குழந்தை பிறந்ததினி ஆண்குழந்தை ஒன்று
பிறக்குமா என்றிருந்தேன். அவ்வாறே பெற்றாள்!
கண்ணழகும் முகஅழகும் கண்டுமேலும் நாட்கள்
கழிக்கையிலே மற்றொன்றும் பின்ஒன்றும் பெற்றாள்!
எண்ணுமொரு நால்வரையும் எண்ணி யுழைத்திட்டேன்.
எழில்மனைவி தன்னுடலில் முக்காலும் தேய்ந்தாள்!
உண்ணுவதை நானுண்ண மனம்வருவ தில்லை;
உண்ணாமலே மனைவி பிள்ளைகளைக் காத்தாள்.

வரும்படியை நினைக்கையிலே உள்ளமெலாம் நோகும்!
வாராத நினைவெல்லாம் வந்துவந்து தோன்றும்!
துரும்பேனும் என்னிடத்தில் சொத்தில்லை! நோயால்
தொடர்பாகப் பத்துநாள் படுத்துவிட்டால் தொல்லை;
அரும்பாடு மிகப்படவும் ஆக்ஷேப மில்லை;
ஆர்தருவார் இந்நாளில் அத்தனைக்கும் கூலி?
இரும்பாநான்? செத்துவிட்டால் என்பிள்ளை கட்கே
என்னகதி? ஏன்பெற்றேன்? எனநினைக்கு நாளில்,

ஒருதினத்தில் பத்துமணி இரவினிலே வீட்டில்
உணவருந்திப் படுக்கையொடு தலையணையும் தூக்கித்
தெருத்திண்ணை மேல்இட்டேன்! நித்திரையும் போனேன்!
சிறுவரெல்லாம் அறைவீட்டில் தூங்கியபின் என்றன்

அருமனைவி என்னிடத்தே மெதுவாக வந்தாள்.
'அயர்ந்தீரோ' என்றுரைத்தாள்! மலர்க்கரத்தால் தொட்டாள்!
'தெருவினிலேபனி' என்றாள், ஆமென்று சொன்னேன்;
தெரிந்துகொண்டேன் அவள்உள்ளம். வார்த்தையென்ன தேவை.

மனையாளும் நானுமாய் ஒருநிமிஷ நேரம்
மவுனத்தில் ஆழ்ந்திருந்தோம். வாய்த்ததொரு கனவு;
'கனல்புரளும் ஏழ்மையெனும் பெருங்கடலில், அந்தோ!
கதியற்ற குழந்தைகளோர் கோடானு கோடி
மனம்பதைக்கச் சாக்காட்டை மருவுகின்ற நேரம்
வந்ததொரு பணம்என்ற கொடிபறக்கும் கப்பல்;
இனத்தவரின் குழந்தைகளோ, ஏ! என்று கெஞ்ச,
ஏறிவந்த சீமான்கள் சீ! என்று போனார்.'

கனவொழிய நனவுலகில் இறங்கிவந்தோம் நாங்கள்;
காதல்எனும் கடல்முழுக்கை வெறுத்துவிட்டோம். மெய்யாய்த்
தினம்நாங்கள் படும்பாட்டை யாரறியக் கூடும்?
சீ! சீ!! சீ!!! இங்கினியும் காதல் ஒரு கேடா?
எனமுடித்தோம். ஆனாலும் வீட்டுக்குள் சென்றோம்.
இன்பமெனும் காந்தந்தான் எமையிழுத்த துண்டோ!
தனியறையில் கண்ணொடுகண் சந்தித்த ஆங்கே
தடுக்கிவிழுந் தோம்காதல் வெள்ளத்தின் உள்ளே!

பத்துமாதம் செல்லப் பகற்போதில் ஓர்நாள்,
பட்டகடன் காரர்வந்து படுத்துகின்ற நேரம்,
சித்தமெலாம் மூத்தபெண் சுரநோயை எண்ணித்
திடுக்கிடுங்கால், ஒருகிழவி என்னிடத்தில் வந்து
முத்தாலம் மைவைத்த கிருபையினால் நல்ல
முகூர்த்தத்தில் உன்மனைவி பிள்ளைபெற்றாள் என்றாள்!
தொத்துநோய், ஏழ்மை, பணக்காரர் தொல்லை
தொடர்ந்தடிக்கும் சூறையிலே பிள்ளையோ பிள்ளை!

காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம். இதிலென்ன குற்றம்?
சாதலுக்கோ பிள்ளை? தவிப்பதற்கோ பிள்ளை?
சந்தான முறைநன்று: தவிர்க்குமுறை தீதோ?
காதலுக்குக் கண்ணலுத்துக் கைகளெலாம் அலுத்துக்
கருத்தலுத்துப் போனோமே! கடைத்தேற மக்கள்

ஓதலுக்கெல் லாம்மறுப்பா? என்னருமை நாடே,
உணர்வுகொள் உள்ளத்தில் உடலுயிரில் நீயே.

## 41. ஆண்குழந்தை தாலாட்டு

ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ
ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ

காராரும் வானத்தில் காணும் முழுநிலவே!
நீராரும் தண்கடலில கண்டெடுத்த நித்திலமே!

ஆசை தவிர்க்கவந்த ஆணழகே சித்திரமே!
ஓசை யளித்துமலர் உண்ணுகின்ற தேன்வண்டே!

உள்ளம் எதிர்பார்த்த ஓவியமே என்மடியில்
பிள்ளையாய் வந்து பிறந்த பெரும்பேறே!

சின்ன மலர்வாய் சிரித்தபடி பால்குடித்தாய்
கன்னலின் சாறே கனிரசமே கண்ணுறங்கு!

நீதிதெரியும் என்பார் நீள்கரத்தில் வாளேந்திச்
சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில்

கனலேற்ற வந்த களிறே, எனது
மனமேறு கின்ற மகிழ்ச்சிப் பெருங்கடலே!

தேக்குமரம் கடைந்து செய்ததொரு தொட்டிலிலே
ஈக்கள் நுழையாமல் இட்ட திரை நடுவில்,

பொன்முகத்தி லேயிழைத்த புத்தம் புதுநீலச்
சின்னமணிக் கண்ணை இமைக்கதவால் மூடிவைப்பாய்!

அள்ளும் வறுமை அகற்றாமல் அம்புவிக்குக்
கொள்ளைநோய் போல்மதத்தைக் கூட்டியழும் வைதிகத்தைப்

போராடிப் போராடிப் பூக்காமல் காய்க்காமல்
வேரோடு பேர்க்கவந்த வீரா, இளவீரா!

வாடப்பல புரிந்து வாழ்வை விழலாக்கும்
மூடப்ப ழக்கத்தைத் தீதென்றால் முட்டவரும்

மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த
ஈடற்ற தோளா, இளந்தோளா, கண்ணுறங்கு!

'எல்லாம் அவன் செயலே' என்று பிறர்பொருளை
வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும்,

காப்பார் கடவுள்உமைக் கட்டையில்நீர் போகுமட்டும்
வேர்ப்பீர், உழைப்பீர் எனஉரைக்கும் வீணருக்கும்,

மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே, என் செந்தமிழே கண்ணுறங்கு!

## 42. பெண் குழந்தை தாலாட்டு

ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ
ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ

சோலை மலரே! சுவர்ணத்தின் வார்ப்படமே!
காலைஇளஞ் சூரியனைக் காட்டும் பளிங்குருவே!

வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே!

நாய்என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய்என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே!

வெண்முகத்தில் நீலம் விளையாடிக் கொண்டிருக்கும்
கண்கள் உறங்கு! கனியே உறங்கிடுவாய்!

அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்
சின்ன உடலாகச் சித்திரித்த மெல்லியலே!

மின்னல் ஒளியே, விலைமதியா ரத்தினமே!
கன்னல் பிழிந்து கலந்த கனிச்சாறே!

மூடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு, மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!

வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி!

புண்ணிற் சரம்விடுக்கும் பொய்ம்மதத்தின் கூட்டத்தைக்
கண்ணிற் கனல்சிந்திக் கட்டழிக்க வந்தவளே!

தெய்விகத்தை நம்பும் திருந்தாத பெண்குலத்தை
உய்விக்க வந்த உவப்பே! பகுத்தறிவே!

எல்லாம் கடவுள்செயல் என்று துடைநடுங்கும்
பொல்லாங்கு தீர்த்துப் புதுமைசெய வந்தவளே!

வாயில்இட்டுத் தொப்பை வளர்க்கும் சதிக்கிடங்கைக்
கோயிலென்று காசுதரும் கொள்கை தவிர்ப்பவளே!

சாணிக்குப் பொட்டிட்டுச் சாமிஎன்பார் செய்கைக்கு
நாணி உறங்கு; நகைத்துநீ கண்ணுறங்கு!

# புதிய உலகம்

## 43. உலக ஒற்றுமை

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!
கன்னலடா என்சிற்றூர் என்போ னுள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளம்!
தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனது நாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்பு றுத்தல்!

ஆயுதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார்,
அவரவர்தம் வீடுநகர் நாடு காக்க
வாயடியும் கையடியும் வளரச் செய்வார்
மாம்பிஞ்சி யுள்ளத்தின் பயனும் கண்டோம்!
தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே.

## 44. பேரிகை

துன்பம் பிறர்க்கு நல்இன்பம் தமக்கென்னும்
துட்ட மனோபாவம்,
அன்பினை மாய்க்கும்; அறங்குலைக் கும்; புவி
ஆக்கந் தனைக் கெடுக்கும்.
வன்புக் கெலாம்அது வேதுணை யாய்விடும்
வறுமை யெலாம்சேர்க்கும்;
'இன்பம் எல்லார்க்கும்' என்றே சொல்லிப் பேரிகை
எங்கும் முழக்கிடுவாய்!

தாமும் தமர்களும் வாழ்வதற்கே இந்தத்
தாரணி என்ற எண்ணம்,
தீமைக் கெல்லாம் துணையாகும்; இயற்கையின்
செல்வத்தையும் ஒழிக்கும்;

தேமலர்ச் சோலையும் பைம்புனல் ஓடையும்
சித்தத்திலே சேர்ப்போம்;
'க்ஷேமம் எல்லார்க்கும்' என்றே சொல்லிப் பேரிகை
செகம் முழக்கிடுவாய்!

நல்லவர் நாட்டினை வல்லவர் தாழ்த்திடும்
நச்சுமனப் பான்மை,
தொல்புவி மேல்விழும் பேரிடியாம்; அது
தூய்மைதனைப் போக்கும்;
சொல்லிடும் நெஞ்சில் எரிமலை பூகம்பம்
சூழத் தகாது கண்டாய்;
'செல்வங்கள் யார்க்கும்' என்றே சொல்லிப் பேரிகை
திக்கில் முழக்கிடுவாய்!

## 45. தளை அறு!

கடவுள் கடவுள் என்றெதற்கும்
கதறுகின்ற மனிதர்காள்!
கடவுள் என்ற நாமதேயம்
கழறிடாத நாளிலும்
உடமையாவும் பொதுமையாக
உலகுநன்று வாழ்ந்ததாம்;
'கடையர்' 'செல்வர்' என்ற தொல்லை
கடவுள்பேர் இழைத்ததே!

உடைசுமந்த கழுதைகொண்
டுழைத்ததோர் நிலைமையும்
உடைமைமுற்றும் படையைஏவி
அடையும்மன்னர் நிலைமையும்
கடவுளாணையாயின் அந்த
உடைவெளுக்கும் தோழரைக்
கடவுள்தான் முன்னேற்றுமோ? தன்
கழுதைதான் முன்னேற்றுமோ?

ஊரிலேனும் நாட்டிலேனும்
உலகிலேனும் எண்ணினால்
நீர்நிறைந்த கடலையொக்கும்
நேர் உழைப்ப வர்தொகை!
நீர்மிதந்த ஓடமொக்கும்
நிறைமுதல்கொள் வோர்தொகை;

நேரிற்றுறை மோதுமாயின்
    தோணிஓட்டம் மேவுமோ?

தொழிலறிந்த ஏழை மக்கள்
    தொழில் புரிந்து செல்வர்பால்
அழிவிலாமு தல்கொடுக்க
    அம்முதற் பணத்தினால்
பழிமிகுந்த அரசமைத்துப்
    புடைகள் தம்மை ஏவியே
தொழில்புரிந்த ஏழை மக்கள்
    சோற்றிலேமண் போடுவார்!

நடவுசெய்த தோழர்கூலி
    நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாதசெல்வர்
    உலகைஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
    கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
    தொழிலுள்ளாரை ஏவுவோம்.

## 46. கூடித் தொழில் செய்க

கூடித் தொழில் செய்தோர் கொள்ளைலா பம்பெற்றார்
வாடிடும் பேதத்தால் வாய்ப்பதுண்டோ தோழர்களே!

நாடிய ஓர் தொழில் நாட்டார் பலர் சேர்ந்தால்
கேடில்லை நன்மை கிடைக்குமன்றோ தோழர்களே!

சிறுமுதலால் லாபம் சிறிதாகும்; ஆயிரம்பேர்
உறுமுதலால் லாபம் உயருமன்றோ தோழர்களே!

அறுபதுபேர் ஆக்கும் அதனை ஒருவன்
பெறுவதுதான் சாத்தியமோ பேசிடுவீர் தோழர்களே!

பற்பலபேர் சேர்க்கை பலம்சேர்க்கும்; செய்தொழிலில்
முற்போக்கும் உண்டாகும் முன்னிடுவீர் தோழர்களே!

ஒற்றைக் கைதட்டினால் ஓசை பெருகிடுமோ
மற்றும் பலரால் வளம்பெறுமோ தோழர்களே!

ஒருவன் அறிதொழிலை ஊரார் தொழிலாக்கிப்
பெரும்பே றடைவதுதான் வெற்றி என்க தோழர்களே!

இருவர் ஒருதொழிலில் இரண்டுநாள் ஒத்திருந்த
சரிதம் அரிதுநம் தாய்நாட்டில் தோழர்களே!

நாடெங்கும் வாழ்வதிற் கேடொன்று மில்லைஎனும்
பாடம் அதைஉணர்ந்தாற் பயன்பெறலாம் தோழர்களே!

பீடுற்றார் மேற்கில் பிறநாட்டார் என்பதெல்லாம்
கூடித் தொழில்செய்யும் கொள்கையினால் தோழர்களே!

ஐந்துரூபாய்ச் சரக்கை ஐந்துபணத்தால் முடித்தல்
சிந்தை ஒருமித்தால் செய்திடலாம் தோழர்களே!

சந்தைக் கடையோநம் தாய்நாடு? லக்ஷம்பேர்
சிந்தைவைத்தால் நம்தொழிலும் சிறப்படையும் தோழர்களே!

வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்
கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் தோழர்களே!

கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் இன்றுவரை
மூடிய தொழிற்சாலை முக்கோடி! தோழர்களே!

கூடைமுறம் கட்டுநரும் கூடித் தொழில்செய்யின்
தேடிவரும் லாபம் சிறப்புவரும் தோழர்களே!

## 47. தொழிலாளர் விண்ணப்பம்

காடு களைந்தோம் — நல்ல
கழனிதிருத்தியும் உழவுபுரிந்தும்
நாடுகள் செய்தோம்; — அங்கு
நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்.
வீடுகள் கண்டோம்; — அங்கு
வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்தோம்.
பாடுகள் பட்டோம் — புவி
பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்.
மலையைப்பிளந்தோம் — புவி
வாழவென்றேகடல் ஆழமும் தூர்த்தோம்.
அலைகடல்மீதில் — பல்
லாயிரங்கப்பல்கள் போய்வரச்செய்தோம்.
பல தொல்லையுற்றோம் — யாம்
பாதாளம் சென்று பசும்பொன் எடுத்தோம்.
உலையில் இரும்பை — யாம்
உருக்கிப்பல் யந்திரம் பெருக்கியுந் தந்தோம்.

ஆடைகள் நெய்தோம் — பெரும்
ஆற்றைவளைத்து நெல்நாற்றுகள் நட்டோம்.
கூடைகலங்கள் — முதல்
கோபுரம் நற்சுதை வேலைகள் செய்தோம்.
கோடையைக் காக்க — யாம்
குடையளித்தோம் நல்ல நடையன்கள் செய்தோம்.
தேடிய பண்டம் — இந்தச்
செகத்தில் நிறைந்திட முகத்தெதிர் வைத்தோம்.

வாழ்வுக்கொவ்வாத — இந்த
வையத்தை இந்நிலை எய்தப்புரிந்தோம்.
ஆழ்கடல், காடு, — மலை
அத்தனையிற்பல சத்தை யெடுத்தோம்.
ஈழை, அசுத்தம் — குப்பை
இலை என்னவே எங்கள் தலையிற் சுமந்தோம்.
சூழக்கிடந்தோம் — புவித்
தொழிலாளராம் எங்கள் நிலைமையைக் கேளீர்!

கந்தையணிந்தோம் — இரு
கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்.
மொந்தையிற் கூழைப் — பலர்
மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்.
சந்தையில் மாடாய் — யாம்
சந்ததம் தங்கிட வீடுமல்லாமல்
சிந்தை மெலிந்தோம் — எங்கள்
சேவைக்கெலாம் இது செய் நன்றிதானோ?

மதத்தின் தலைவீர்! — இந்த
மண்ணை வளைத்துள்ள அண்ணாத்தைமாரே,
குதர்க்கம் விளைத்தே — பெருங்
கொள்ளையடித்திட்ட கோடீசுரர்காள்,
வதக்கிப் பிழிந்தே — சொத்தை
வடிகட்டி எம்மைத் துடிக்க விட்டீரே!
நிதியின் பெருக்கம் — விளை
நிலமுற்றும் உங்கள் வசம் பண்ணி விட்டீர்

செப்புதல் கேட்பீர்! — இந்தச்
செகத்தொழிலாளர்கள் மிகப் பலர் ஆதலின்,

சுப்பல்களாக — இனித்
தொழும்பர்களாக மதித்திடவேண்டாம்!
இப்பொழுதே நீர் — பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே — எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறுமுன்பே.
(ஒப்படைப்பீரே!)

## 48. வாழ்வில் உயர்வுகொள்!

சுயமரி யாதைகொள் தோழா — நீ
துயர்கெடுப்பாய் வாழ்வில் உயர்வடைவாயே! — (சுய)

உயர்வென்று பார்ப்பனன் சொன்னால், — நீ
உலகினில் மக்கள் எல்லாம்சமம் என்பாய்;
துயருறத் தாழ்ந்தவர் உள்ளார் — என்று
சொல்லிடுந் தீயரைத் தூவென் றுமிழ்வாய்!
அயலொரு கூட்டத்தார் ஆள்வோர் — சிலர்
ஆட்பட்டிருப்பவர் என்று சொல்வோரைப்
பயமின்றி நீதிருந் தச்சொல்! — சிலர்
பழமைசொன் னால்புது நிலைநலம் காட்டு! (சுய)

சேசு முகம்மது என்றும் — மற்றும்
சிவனென்றும் அரியென்றும் சித்தார்த்த னென்றும்,
பேசி வளர்க்கின்ற போரில் — உன்
பெயரையும் கூட்டுவர் நீஒப்ப வேண்டாம்;
காசைப் பிடுங்கிடு தற்கே — பலர்
கடவுளென் பார், இரு காதையும் மூடு!
கூசி நடுங்கிடு தம்பி! — கெட்ட
கோயிலென் றால்ஒரு காதத்திலோடு. (சுய)

கோயில் திருப்பணி என்பர் — அந்தக்
கோவில் விழாவென்று சொல்லியுன் வீட்டு
வாயிலில் வந்துனைக் காசு — கேட்கும்
வஞ்சக மூடரை மனிதர் என்னாதே!
வாயைத் திறக்கவும் சக்தி — இன்றி
வயிற்றைப் பிசைந்திடும் ஏழைகட்கேநீ
தாயென்ற பாவனை யோடும் — உன்
சதையையும் ஈந்திட ஒப்புதல் வேண்டும். (சுய)

கடவுள் துவக்கிக் கொடுத்த — பல
கவிதைகள், பதிகங்கள் செப்பிய பேர்கள்,
கடவுள் புவிக்கவ தாரம், — அந்தக்
கடவுளின் தொண்டர்கள், லோக குருக்கள்,
கடவுள் நிகர் தம்பிரான்கள் — ஜீயர்,
கழுகொத்த பூசுரர், பரமாத்து மாக்கள்
கடவுள் அனுப்பிய தூதர் — வேறு
கதைகளினாலும் சுகங்கண்ட துண்டோ? (சுய)

அடிமை தவிர்ந்ததும் உண்டோ? — அன்றி
ஆதிமுதல் இந்தத் தேதிவரைக்கும்,
மிடிமை தவிர்த்ததும் உண்டோ? — அன்றி
மேல்நிலை என்பதைக் கண்டதும் உண்டோ?
குடிக்கவும் நீரற் றிருக்கும் — ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல், கொடுந்தடி யர்க்கு
மடங்கட்டி வைத்ததி னாலே — தம்பி!
வசம்கெட்டுப் போனது நமதுநன்னாடு. (சுய)

உழைக்காத வஞ்சகர் தம்மை — மிக
உயர்வான சாதுக்கள் என்பது நன்றோ?
விழித்திருக் கும்போதி லேயே — நாட்டில்
விளையாடும் திருடரைச் 'சாமி'என் கின்றார்!
அழியாத மூடத் தனத்தை — ஏட்டில்
அழகாய் வரைந்திடும் பழிகாரர் தம்மை
முழுதாய்ந்த பாவலர் என்பார் — இவர்
முதலெழுத் தோதினும் மதியிருட் டாகும்! (சுய)

## 49. மாண்டவன் மீண்டான்

ஆற்றோரம் தழைமரங்கள் அடர்ந்தஒரு தோப்பில்
அழகான இளமங்கை ஆடுகின்றாள் ஊஞ்சல்.
சேற்றுமண்ணால் திண்ணையிலே உட்கார்ந்து பொம்மை
செய்துவிளை யாடுகின்றான் மற்றுமொரு பிள்ளை.
ஏற்றிவைத்த மணிவிளக்கின் அண்டையிலே பாயில்
இளஞ்சிசுவும், பெற்றவளும் கொஞ்சுகின்றார். ஓர்பால்
ஏற்றகடன் தொல்லையினால் நோய்கொண்ட தந்தை
ஏ! என்று கூச்சலிட்டான்; நிலைதவறி வீழ்ந்தான்!

அண்டைஅயல் மனிதரெல்லாம் ஓடிவந்தார் ஆங்கே
அருந்துணைவி நாயகனின் முகத்தில்முகம் வைத்துக்
கெண்டைவிழிப் புனல்சோர அழுதுதுடித் திட்டாள்;
கீழ்க்கிடந்து மெய்சோர்ந்த நோயாளி தானும்
தொண்டையிலே உயிரெழுப்பும் ஒலியின்றிக் கண்ணில்
தோற்றமது குறைவுபடச் சுவாசம்மேல் வாங்க,
மண்டைசுழ லக்கண்ணீர் வடித்துவடித் தழுதான்
மனமுண்டு வாயில்லை என்செய்வான் பாவம்!

'பேசாயோ வாய்திறந்து பெற்றெடுத்த உன்றன்
பிள்ளைகளைக் கண்கொண்டு பாராயோ என்றன்
வீசாத மணிஒளியே,' என்றுரைத்தாள் மனைவி.
விருப்பமதை இன்னதென விளம்பிடுக, என்று
நேசரெலாம் கேட்டார்கள்: கேட்ட நோயாளி
நெஞ்சினையும் விழிகளையும் தன்னிலையில் ஆக்கிப்
பேசமுடியா நிலையில் ஈனசுரத் தாலே
'பெண்டுபிள்ளை! பெண்டுபிள்ளை!'
என்றுரைத்தான், சோர்ந்தான்!

எதிர்இருந்தோர் இதுகேட்டார்; மிகஇரக்கங் கொணடார்.
இறப்பவனைத் தேற்றவெண்ணி ஏதேதோ சொன்னார்.
இதுதேதி உன்கடனைத் தீர்க்கின்றோம் என்றார்.
இருந்தநிலை மாறவில்லை மற்றொருவன் வந்து,
'மதிவந்து விட்டதண்ணே நமதுசர்க் காருக்கு;
மக்களுக்குப் புவிப்பொருள்கள் பொதுவென்று சர்க்கார்
பதிந்துவிட்டார். இனிப்பெண்டு பிள்ளைகளைப் பற்றிப்
பயமில்லை! கவலையில்லை! மெய்யண்ணே, மெய்மெய்!!'

என்றுசொன்னான் தேற்றுமொழி, இறக்கின்ற மனிதன்
இறக்குங்கால் கவலையின்றி இறக்கட்டும் என்று!
நன்றிந்த வார்த்தைஅவன் காதினிலே பாய்ந்து
நலிவுற்ற உள்ளத்தைப் புலியுளமாய்ச் செய்து
சென்றஉயிர் செல்லாமல் செய்ததனால் அங்குச்
செத்துவிட்ட அம்மனிதன் பொத்தெனவே குந்தி,
இன்றுநான் சாவதற்கே அஞ்சவில்லை என்றான்!
இறப்பதெனில் இனியெனக்குக் கற்கண்டென் றானே!

## 50. ஆய்ந்துபார்!

சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?
சமயபே தம்வளர்த்தே தளர்வது நன்றா?
மாந்தரிற் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரேகுலமாய் வாழ்வது சரியா?

வாய்ந்தபோர்க் குறிபோல் மதக்குறி இனிதா?
மனமொழி மெய்ஒன்றி மகிழுதல் இனிதா
ஆய்ந்துபார் நெஞ்சமே அமைதிதான் சிறப்பா?
அண்டை வீட்டைப்பறிக்கும் சண்டைதான் சிறப்பா?

காணு மானிடரைக் கனம்செயல் முறையா?
கடவுள் எனும்மயக்கில் கவிழ்ப்பது முறையா?
மாணுறும் தன்னம்பிக்கை வளர்ப்பது நலமா?
வயப்படும் பக்தியினால் பயப்படல் நலமா?

வீணரைப் பணிவது மக்களின் கடனா?
மேவும் உழைப்பினிலே ஏவுதல் கடனா?
நாணு மூடவழக்கம் நாடுதல் பெரிதா?
நல்லறி வென்னும்வழிச் செல்லுதல் பெரிதா?

கோயிலுக் கொன்று கொடுத்திடல் அறமா?
கோடிகொடுக்கும் கல்வி தேடிடல் அறமா?
வாயிலில் வறியரை வளர்த்திடல் அன்போ?
மடத்தில் வீணிற்பொருளைக் கொடுத்திடல் அன்போ?

நாயிலுங் கடையாய் நலிவது மேலா?
நல்ல கூட்டுத்தொழில்கள் நாட்டிடல் மேலா?
ஓய்வறியார் உறங்க இடந்தரல் உயர்வா?
ஊரை வளைக்கும்குரு மார்செயல் உயர்வா?

மாதர்தம் உரிமை மறுப்பது மாண்பா?
மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா?
மேதினி துயர்பட விரும்புதல் இதமா?
விதவைக்கு மறுமணம் உதவுதல் இதமா?

கோதையர் காதல்மணம் கொள்வது சீரோ?
குழந்தைக்கு மணஞ்செய்து கொல்வது சீரோ?
போதனையாற் பெண்கள் பொதுவெனல் கனமோ?
பொட்டுக்கட்டும் வழக்கம் போக்குதல் கனமோ?

பாழ்படும் பழமை சூழ்வது திறமா?
பகுத்தறிவால் நலம் வகுப்பது திறமா?
தாழ்பவர் தம்மைத் தாழ்த்துதல் சால்போ?
தனம்காப்பவர் தங்கள் இனம்காத்தல் சால்போ?

ஆழ்வுறும் ஆத்திகம் வைதிகம் சுகமா?
அகிலமேற் சமதர்மம் அமைப்பது சுகமா?
சூழும் நற்பேதம் தொடர்வது வாழ்வோ?
சுயமரி யாதையால் உயர்வது வாழ்வோ?

## 51. மானிட சக்தி

**மா**னிடத் தன்மையைக் கொண்டு — பலர்
வையத்தை ஆள்வது நாம்கண்ட துண்டு
மானிடத் தன்மையை நம்பி — அதன்
வண்மையி னாற்புவி வாழ்வுகொள் தம்பி!
'மானிடம்' என்றொரு வாளும் — அதை
வசத்தில் அடைந்திட்ட உன்இரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் — இதில்
வைத்திடும் நம்பிக்கை, வாழ்வைப் பெருக்கும். (மானிட)

மானிடன் வாழ்ந்த வரைக்கும் — இந்த
வையத்திலே அவன் செய்தவரைக்கும்
மானிடத் தன்மைக்கு வேறாய் — ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய்!
மானிட மென்பது புல்லோ? — அன்றி
மரக்கட்டை யைக்குறித் திடவந்த சொல்லோ?
கானிடை வாழ்ந்ததும் உண்டு — பின்பு
கடலை வசப்படச் செய்ததும் அதுதான்! (மானிட)

மானிடம் போற்ற மறுக்கும் — ஒரு
மானிடம் தன்னைத்தன் உயிரும் வெறுக்கும்;
மானிடம் என்பது குன்று — தனில்
வாய்ந்த சமத்துவ உச்சியில் நின்று
மானிடருக் கினி தாக — இங்கு
வாய்ந்த பகுத்தறி வாம்விழி யாலே
வான்திசை எங்கணும் நீ பார்! — வாழ்வின்
வல்லமை 'மானிடத் தன்மை' என்றேதேர். (மானிட)

## 52. முன்னேறு!

சாதிமத பேதங்கள் மூடவழக் கங்கள்
தாங்கிநடை பெற்றுவரும் சண்டையுல கிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத் திற்குப்
பேசுசுய மரியாதை உலகுஎனப் பேர் வைப்போம்!
ஈதேகாண்! சமூகமே, யாம்சொன்ன வழியில்
ஏறுநீ! ஏறுநீ!! ஏறுநீ!!! ஏறே.

அண்டுபவர் அண்டாத வகைசெய் கின்ற
அநியாயம் செய்வதெது? மதங்கள் அன்றோ?
கொண்டுவிட்டோம் பேரறிவு, பெருஞ்செ யல்கள்
கொழித்து விட்டோம் என்றிங்கே கூறுவார்கள்,
பண்டொழிந்த புத்தன், ராமாநுஜன் மு
கம்மது, கிறிஸ்து — எனும் பலபேர் சொல்லிச்
சண்டையிடும் அறியாமை அறிந்தா ரில்லை!
சமூகமே ஏறுநீ, எம்கொள் கைக்கே!

## 53. உலகப்பன் பாட்டு

பகுத்தறிவு மன்றத்தில் உலகம் என்ற
பழயமுத லாளியினை நிற்க வைத்து
மிகுத்திருந்த உன்நன்செய், புன்செய் யாவும்
வெகுகாலத் தின்முன்னே, மக்கள் யாரும்
சுகித்திருக்கக் குத்தகைக்கு விட்ட துண்டோ?
சொல்! என்றேன்: உலகப்பன் ஆம் ஆம் என்றான்.
வகுத்தஅந்தக் குத்தகைக்குச் சீட்டு முண்டோ
வாய்ச்சொல்லோ என்றுரைத்தேன். வாய்ச்சொல் என்றான்.

குத்தகைக்கா ரர்தமக்குக் குறித்த எல்லை
குறித்தபடி உள்ளதுவா என்று கேட்டேன்.
கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தை யெல்லாம்
கொத்திக்கொண் டேப்பமிட்டு வந்த தாலே
கூலிமக்கள் அதிகரித்தார், என்ன செய்வேன்!
பொத்தல்இலைக் கலமானார் ஏழை மக்கள்.
புனல்நிறைந்த தொட்டியைப்போல் ஆனார் செல்வர்.

அதிகரித்த தொகைதொகையாய்ச் செல்வ மெல்லாம்
அடுக்கடுக்காய்ச் சிலரிடம்போய் ஏறிக் கொண்டு
சதிராடு தேவடியாள் போல்ஆ டிற்று!
தரித்திரரோ புழுப்போலே துடிக்கின் றார்கள்;
இதுஇந்நாள் நிலைஎன்றான் உலகப் பன்தான்!
இந்நிலையி லிருப்பதனால் உலகப் பாநீ!
புதுக்கணக்குப் போட்டுவிடு, பொருளை எல்லாம்
பொதுவாக எல்லார்க்கும்நீ குத்த கைசெய்.

ஏழைமுத லாளியென்ப தில்லா மற்செய்,
என்றுரைத்தேன். உலகப்பன் எழுந்து துள்ளி,
ஆழமப்பா உன்வார்த்தை, உண்மை யப்பா,
அதற்கென்ன தடையப்பா, இல்லை யப்பா;
ஆழமப்பா உன்கருத்து, மெய்தா னப்பா,
அழகாயும் இருக்குதப்பா, நல்ல தப்பா,
தாழ்வுயர்வு நீங்குமப்பா, என்று சொல்லித்
தகதகென ஆடினான். நான் சிரித்து,

ஆடுகின்றாய் உலகப்பா! யோசித் துப்பார்!
ஆர்ப்பாட்டக் காரர்இதை ஒப்பா ரப்பா!
தேடப்பா ஒருவழியை என்று சொன்னேன்.
செகத்தப்பன் யோசித்துச் சித்தம் சோர்ந்தான்.
ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர்நொ டிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ!

## 54. உலகம் உன்னுடையது!

பள்ளம் பறிப்பாய், பாதா ளத்தின்
அடிப்புறம் நோக்கி அழுந்துக! அழுந்துக!
பள்ளந் தனில்விழும் பிள்ளைப் பூச்சியே,
தலையைத் தாழ்த்து! முகத்தைத் தாழ்த்து!
தோளையும் உதட்டையும் தொங்கவை! ஈன
உளத்தை, உடலை, உயிரைச் சுருக்கு!
நக்கிக் குடி!அதை நல்ல தென்றுசொல்!
தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்த நாயினும்
தாழ்ந்துபோ! குனிந்து தரையைக் கௌவி

ஆமையைப் போலே அடங்கி ஒடுங்கு!
பொட்டுப் பூச்சியே, புன்மைத் தேரையே
அழு, இளி, அஞ்சு, குனி, பிதற்று!
கன்னங் கருத்த இருட்டின் கறையே,
தொங்கும் நரம்பின் தூளே! இதைக்கேள்:
மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று!
இமைதிற; எழுந்து நன்றாய் எண்ணுவாய்.
தோளை உயர்த்துச் சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து லோகத்தை!
உன்வீடு – உனது பக்கத்தின் வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்;
எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட்பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய்; அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைந்துகொள்! உன்னைச் சங்கம மாக்கு.
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேத மில்லை
உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன்; 'உடைமை மக்களுக்குப் பொது'
புவியை நடத்து பொதுவில் நடத்து!
வானைப் போல் மக்களைத் தாவும்
வெள்ளை அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!

## 55. சாய்ந்த தராசு

வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் புவி
மக்களெல்லாம் ஒப்புடையார்!

ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ? — இதை
இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ? (வா)

கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளையடிப்பதும் நீதியோ — புவி
வாழ்வதுதான் எந்தத் தேதியோ? (வா)

சிற்சிலர் வாழ்ந்திடப் பற்பலர் உழைத்துத்
தீர்களனும் இந்த லோகமே — உரு
அற்றொழிந் தாலும்நன் றாகுமே! (வா)

காண்பதெலாம் தொழிலாளி செய்தான் அவன்
காணத்தகுந்தது வறுமையாம் — அவன்
பூணத் தகுந்ததும் பொறுமையாம்! (வா)

அன்பெனச் சொல்லியிங் காதிமுதற் பேத
வன்மை வளர்த்தனர் பாரிலே — அதன்
பின்புகண் டோம்இதை நேரிலே (வா)

மக்கள் பசிக்க மடத்தலைவர்க் கெனில்
வாழை யிலைமுற்றும் நறுநெய்யாம் — இது
மிக்குயிர் மேல்வைத்த கருணையாம் (வா)

கோயிலிலே பொருள் கூட்டும் குருக்களும்
கோதையர் தோளினிற் சாய்கின்றார் — இங்கு
நோயினிலே மக்கள் மாய்கின்றார் (வா)

கோரும் துரைத்தனத்தாரும் பெரும் பொருள்
கொண்டவர்க்கே நலம் கூட்டுவார் — உழைப்
போரிடமே கத்திதீட்டுவார் (வா)

மக்களெல்லாம் சமமாக அடைந்திட
மாநிலம் தந்ததில் வஞ்சமோ? — பசி
மிக்கவரின் தொகை கொஞ்சமோ? (வா)

## 56. வியர்வைக் கடல்

அதிகாலை
கிழக்கு வெளுக்குமுன் வெளியிற் கிளம்பினேன்;
ஒளிசெயும் மணியிருள், குளிர்ச்சி, நிசப்தம்,

இவற்றிடை என்னுளம் துள்ளும் மான்குட்டி!
உத்ஸாகம் எனைத் தூக்கி ஓடினது!

**இயற்கை**

குன்றம் இருக்கும் அக்குன்றத் தின்பால்
குளமும், அழகிய குளிர்பூஞ் சோலையும்
அழகு செய்யும்! அவ்விடத் தில்தான்
என்றன் சொந்த நன்செய் உள்ளது.

**பகல்**

கடல்மிசை உதித்த பரிதியின் நெடுங்கதிர்
வானெலாம் பாய்ந்தது! பறந்தது வல்லிருள்!
புவியின் சித்திரம் ஒளியிற் பொலிந்தது.
இயற்கை தந்த எழிலிடை நடந்தேன்.

**வயல்**

வளம்பெற நிறைந்த இளம்பயிர்ப் பசுமை
மரகதம் குவிந்த வண்ணம் ஆயிற்று;
மரகதக் குவியல்மேல் வாய்ந்த பனித்துளி
காணக்கண் கூசும் வயிரக் களஞ்சியம்;
பரந்தஎன் வயலைப் பார்த்துக்கொண் டிருந்தேன்
மகிழ்ச்சி தவிர மற்றொன்று காணேன்!

**உழைப்பு**

களையினைக் களைவது கருதி, எனது
பண்ணை ஆட்கள் பலபேர் வந்தனர்.
என்னை வணங்கினர்; வயலில் இறங்கினர்.
வில்லாய் வளைந்தது மேனி; அவர்தோள்
விசையாய்க் களைந்தது களையின் விளைவை!
முகவிழி கவிழ்ந்தது வயலில் மொய்த்தது.

**நடுப்பகல்**

காலைப் போதினைக் கனலாற் பொசுக்கிச்
சூரியன் ஏறி உச்சியிற் சூழ்ந்தான்.
சுடுவெயில் உழவர் தோலை உரித்தது;
புதுமலர்ச் சோலையில் போய்விட் டேன்நான்.

**வெயில்**

குளிர்புனல் தெளிந்து நிறைந்த மணிக்குளம்!
நிழல்சேர் கரையில் நின்றுகொண்டி ருந்தேன்.

புழுக்கமும் வியர்வையும் எழுப்பி என்னை
நலிவு செய்த நச்சு வெய்யில்,
வானி லிருந்து மண்ணிற் குதித்துத்
தேன்மலர்ச் சோலைச் செழுமை கடந்தென்
உளத்தையும் உயிரையும் பிளப்பது விந்தை!
குளத்தில் விழுந்து குளிக்கத் தொடங்கினேன்.
வெள்ளைப் புனலும் கொள்ளிபோல் சுட்டது.

**உழைப்புத் துன்பம்**
காலைப் போதினைக் கனலால் பொசுக்கிச்
சோலையும் கடந்து சுடவந்த வெய்யில்
விரிபுனற் குளத்தையும் வெதுப்பிய தெண்ணினேன்.
எண்ணும் போதென் கண்ணின் எதிரில்
வியர்வையும் அயர்வுமாய்ப் பண்ணை யாட்கள்
வந்து நின்று வணக்கம் செய்தனர்.
ஐயகோ நெஞ்சமே, இந்த ஆட்கள்
தாங்கொணாக் கனலை எவ்வாறு தாங்கினர்?

**வியர்வைக் கடலின் காட்சி**
களைபோக்கும் சிறுபயன் விளைக்க இவர்கள்
உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுல குழைப்பவர்க் குரியதென் பதையே!

## 57. நீங்களே சொல்லுங்கள்!

சித்திரச் சோலைகளே, — உமை நன்கு
திருத்த இப் பாரினிலே — முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே.

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே, — உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே.

தாமரை பூத்த தடாகங்களே, உமை
தந்தஅக் காலத்திலே — எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே.

மாமிகு பாதைகளே, உமை இப்பெரு
வையமெ லாம் வகுத்தார் – அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்.

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே, – உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? – நீங்கள்
ஊர்த்தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

கீர்த்திகொள் போகப் பொருட்புவியே! உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் – எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

நீர்கனல் நல்ல நிலம்வெளி காற்றென
நின்ற இயற்கைகளே, – உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!

தாரணியே, தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ? – பசி
தீரும் என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? – இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?

கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும்உத் தேசமில்லை – சொந்த
வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை.

## 58. புதிய உலகு செய்வோம்

புதியதோர் உலகம் செய்வோம் – கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் (புதிய)

பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம். (புதிய)

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
'இது எனதெ'ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம் (புதிய)

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
'ஒருபொருள்தனி' எனும் மனிதரைச் சிரிப்போம்! (புதிய)

இயல் பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம். (புதிய)

## 59. பலிபீடம்

மத — ஓடத்திலேறிய மாந்தரே — பலி
பீடத்திலே சாய்ந்தீரே!

பாடுபட்டீர்கள் பருக்கையில்லா தொரு
பட்டியில் மாடெனா வாழ்கின்றீர் — மதக்
கேடர்கள் காலினில் வீழ்கின்றீர் — ஒண்ட
வீடுமில்லாமலே தாழ்கின்றீர்! (மத)

பாதிக்குதே பசி என்றுரைத்தால், செய்த
பாபத்தைக் காரணம் காட்டுவார் — மத
வாதத்தை உம்மிடம் நீட்டுவார் — பதில்
ஓதி நின்றால் படை கூட்டுவார். (மத)

வாதனை சொல்லி வணங்கி நின்றால் தெய்வ
சோதனை என்றவர் சொல்லுவார் — பணச்
சாதனையால் உம்மை வெல்லுவார் — கெட்ட
போதனையால் தினம் கொல்லுவார். (மத)

பேதிக்கும் நோய்க்கும் பெரும்பசிக்கும் பல
பீதிக்கும் வாய்திறப் பீர்களோ! — இழி
சாதியென்றால் எதிர்ப்பீர்களோ? — செல்வர்
வீதியைத் தான் மதிப்பீர்களோ? (மத)

கூடித் தவிக்கும் குழந்தை மனைவியர்
கூழை நினைத்திடும் போதிலே — கோயில்
வேடிக்கையாம் தெரு மீதிலே — செல்வர்
வாடிக்கை ஏற்பீரோ காதிலே! (மத)

தொட்டிடும் வேலை தொடங்கலு மின்றியே
தொந்தி சுமக்கும்பு ரோகிதர் — இட்ட
சட்டப்படிக்கு நீரோ பதர் — அவர்
அட்டகாசத்தினுக் கேதெதிர்? (மத)

மூடத்தனத்தை முடுக்கும் மதத்தை நிர்
மூலப்படுத்தக்கை ஓங்குவீர் — பலி
பீடத்தை விட்டினி நீங்குவீர் — செல்வ
நாடு நமக்கென்று வாங்குவீர். (மத)

## 60. சகோதரத்துவம்

உறுதி உறுதி உறுதி
ஒன்றே சமூகம் என்றெண்ணார்க்கே — இறுதி (உறுதி)
உறவினர் ஆவார் ஒருநாட்டார் — எனல் (உறுதி)
பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை — இந்தப்
பிழைநீங்குவதே உயிருள்ளாரின் கடமை — நம்மிற்
குறைசொல வேண்டாம் உறவினர் பகைநீங்குங்கோள் — உங்கள்
குகையினை விட்டே வெளிவருவீர்சிங் கங்காள் (உறுதி)

நாட்டுக் குலையில் தீட்டுச் சொல்வார் மொழியை — நாமே
நம்பித் தேடிக் கொண்டோம் மீளாப் பழியை — நாட்டின்
கோட்டைக் கதவைக் காக்கத் தவறும் அந்நாள் — இந்தக்
குற்றம் செய்தோம்; விடுவோம்; வாழ்வோம் இந்நாள் (உறுதி)

வாழ்விற் செம்மை அடைதல் வேண்டும் நாமே — நம்மில்
வஞ்சம் காட்டிச் சிலரைத் தாழ்த்தல் தீமை — புவியில்
வாழ்வோ ரெல்லாம் சமதர்மத்தால் வாழ்வோர் — மற்றும்
வரிதிற் றாழ்வோர் பேதத்தாலே தாழ்வோர் (உறுதி)

தேசத்தினர்கள் ஓர்தாய் தந்திடு சேய்கள் — இதனைத்
தெளியா மக்கள் பிறரை நத்தும் நாய்கள் — மிகவும்
நேசத்தாலே நாமெல்லாரும் ஒன்றாய் — நின்றால்
நிறைவாழ் வடைவோம் சலியாவயிரக் குன்றாய் (உறுதி)

பத்துங் கூடிப் பயனைத்தேடும் போது — நம்மில்
பகைகொண் டிழிவாய்க் கூறிக்கொள்ளல் தீது — நம்
சித்தத்தினிலே இருளைப் போக்கும் சொல்லைக் — கேளீர்
செனனத் தாலே உயர்வும் தாழ்வும் இல்லை (உறுதி)

## 61. சேசு பொழிந்த தெள்ளமுது

மேதினிக்குச் சேசு நாதர் எதற்கடி தோழி — முன்பு
வெம்மைகொள் மக்களைச் செம்மை புரிந்திடத் தோழா — அவர்
காதினிக்கும்படி சொன்னசொல் ஏதடி? தோழி — அந்தக்
கர்த்தர் உரைத்தது புத்தமு தென்றறி தோழா — அந்தப்

பாதையில் நின்று பயனடைந்தார் எவர்? தோழி —இந்தப்
பாரதநாட்டினர் நீங்கிய மற்றவர் தோழா — இவர்
ஏதுக்கு நன்மைகள் ஏற்கவில்லை உரை தோழி — இங்கு
ஏசுவின் கட்டளை நாசம் புரிந்தனர் தோழா.

ஏசுமதத்தினில் இந்துக்கள் ஏனடி? தோழி — அந்த
இந்துக்கள் தீயிட்ட செந்துக்கள் ஆயினர் தோழா — மிக
மோசம் அவர்க்கென்ன வந்தது கூறடி தோழி — அட
முன்—மனு என்பவன் சொன்னதில் வந்தது தோழா— அவன்
நாசம் விளைக்க நவின்றது யாதடி தோழி — சட்டம்
நால் வருணத்தினில் நாலாயிரம் சாதி தோழா — ஏசின்
ஆசை மதம்புகப்—பேதம் அகன்றதோ? தோழி — அவர்க்
கங்குள்ள மூதேவி இங்கும் முளைத்தனள் தோழா.

சொல்லிய சேசுவின் தொண்டர்கள் எங்கடி? தோழி — அந்தத்
தொண்டர்கள் உள்ளனர், தொண்டு பறந்தது தோழா — அந்தப்
புல்லிய பேதத்தைப் போக்கினரோ அவர்? தோழி — அதைப்
போதாக் குறைக்குமுப் போகம் விளைத்தனர் தோழா — அடி
எல்லையில் பேதம் இழைத்தது தான் எவர்? தோழி — அட
இந்த நெடுஞ்சட்டை அந்தகரே அறி தோழா — முன்பு
வல்லவர் சேசு வகுத்ததுதான் என்ன? தோழி — புவி
'மக்கள் எல்லாம் சமம்' என்று முழங்கினர் தோழா.

ஈண்டுள்ள தொண்டர்கள் என்ன செய்கின்றனர்? தோழி — அவர்
ஏழைகள் தாழ்வுறச் செல்வரை வாழ்த்தினர் தோழா — அடி
வேண்டவரும் திருக் கோயில் வழக்கென்ன? தோழி — அட
மேற்குலம் தாழ்குலம் என்று பிரித்தனர் தோழா — விரல்
தீண்டப்படாதவர் என்பவர் யாரடி? தோழி — இங்குச்
சேசு மதத்தினை தாபித்த பேர்கள் என் தோழா — உளம்
தூண்டும் அருட்சேசு சொல்லிய தென்னடி? தோழி — அவர்
'சோதரர் யாவரும்' என்று முழங்கினர் தோழா.
பஞ்சமர் பார்ப்பனர் என்பதெல்லாம் என்ன? தோழி — இவை
பாரதநாட்டுப் பழிச்சின்னத்தின் பெயர் தோழா — இங்குக்

கொஞ்சமும் இப்பழி கொள்ளுதல் நல்லதோ? தோழி – ஒப்புக்
கொள்ளும் நிலத்தினில் கள்ளிமுளைத்திடும் தோழா – இங்கு

நெஞ்சினிற் சேசுவின் தொண்டர் நினப்பென்ன தோழி? – தினம்
நேர்மையில் கோயில்வி யாபாரம் செய்வது தோழா – இந்த

வஞ்சகர்க்கென்ன வழுத்தினர் சேசு நல் தோழி – இன்ப
வாழ்க்கையடைந்திட யார்க்கும் சுதந்தரம் என்றார்

நாலு சுவர்க்கு நடுப்புறம் ஏதுண்டு? தோழி – அங்கு
நல்ல மரத்தினிற் பொம்மை அமைத்தனர் தோழா – அந்த

ஆலயம் சாமி அமைத்தவர் யாரடி? தோழி – மக்கள்
அறிவை இருட்டாக்கி ஆளநினைப்பவர் தோழா – மக்கள்

மாலைத் தவிர்த்து வழிசெய்வரோ இனித் தோழி – செக்கு
மாடுகளாக்கித்தம் காலைச்சுற்றச் செய்வர் தோழா – அந்தக்

கோலநற் சேசு குறித்ததுதா னென்ன? தோழா – ஆஹா
கோயிலென்றால் அன்பு தோய்மனம் என்றனர் தோழா.

ஆண்மைகொள் சேசு புவிக்குப் புரிந்ததென்? தோழி – அவர்
அன்பெனும் நன்முரசு செங்கும் முழங்கினர் தோழா – அந்தக்

கேண்மைகொள் சேசுவின்கீர்த்தி யுரைத்திடு தோழி – அவர்
கீர்த்தியுரைத்திட வார்த்தை கிடைக்கிலை தோழா – நலம்

தாண்டவம் ஆடிடச் செய்தவரோ அவர்? தோழி – அன்று
தன்னைப் புவிக்குத் தரும் பெருமானவர் தோழா – அந்த

ஆண்டவன் தொண்டர்கள் ஆகிடத்தக்கவர் யாவர் – எனில்
'அன்னியர்', 'தான்' என்ற பேதமிலாதவர் தோழா.

# பன்மணித்திரள்

## 62. தமிழ் நாட்டிற் சினிமா

உருவினையும் ஒலியினையும் ஒன்றாகச் சேர்த்தே
ஒளிபெருகத் திரையினிலே படங்காட்டும் கலையைத்
திருவிளைக்கும் நல்லறிஞர், ஐரோப்பி யர்கள்
தெரிந்துவெளி யாக்குகின்றார் எனக்கேட்ட நாளில்,
இருவிழியால் அதுகாணும் நாள்எந்த நாளோ,
என்நாடும் அக்கலையில் இறங்குநாள் எந்நாள்,

இருள் கிழித்துத் தமிழ்நாடாம் நிலவுதனை, உலகின்
எதிர்வைக்கும் நாள்சுந்நாள்' என்றுபல நினைத்தேன்.

ஒலியுருவப் படம்ஊரில் காட்டுவதாய்க் கேட்டேன்;
ஓடினேன்; ஓடியுட்கார்ந் தேன்இரவில் ஒருநாள்.
புலிவாழும் காட்டினிலே ஆங்கிலப்பெண் ஒருத்தி,
புருஷர்சக வாசமிலாப் புதுப்பருவ மங்கை
மலர்க்குலத்தின் அழகினிலே வண்டுவிழி போக்கி
வசமிழந்த படியிருந்தாள்! பின்பக்கம் ஒருவன்
எலிபிடிக்கும் பூனைபோல் வந்தந்த மங்கை
எழில்முதுகிற் கைவைத்தான்! புதுமைஒன்று கண்டேன்.

உளமுற்ற கூச்சந்தான் ஒளிவிழியில் மின்ன,
உயிர்அதிர்ந்த காரணத்தால் உடல்அதிர்ந்து நின்றே,
தெளிபுனலின் தாமரைமேற் காற்றடித்த போது
சிதறுகின்ற இதழ்போலே செவ்விதழ்கள் துடித்துச்
சுளைவாயால் நீயார்என் றனல்விழியாற் கேட்டாள்
சொல்பதில்நீ என்றதவள் சுட்டுவிரல் ஈட்டி!
களங்கமிலாக் காட்சி,அதில் இயற்கையெழில் கண்டேன்!
கதைமுடிவில் 'படம்' என்ற நினைவுவந்த தன்றே!

என்தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்;
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்துநூ றாக!
ஒன்றேனும் தமிழர்நடை யுடைபா வனைகள்
உள்ளதுவாய் அமைக்கவில்லை, உயிர்உள்ள தில்லை!
ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதா யில்லை!
ஒன்றேனும் உயர்நோக்கம் அமைந்ததுவா யில்லை!
ஒன்றேனும் உயர்நடிகர் வாய்ந்ததுவா யில்லை!
ஒன்றேனும் வீழ்ந்தவரை எழுப்புவதா யில்லை!

வடநாட்டார் போன்றஉடை, வடநாட்டார் மெட்டு!
மாத்தமிழர் நடுவினிலே தெலுங்குகீர்த் தனங்கள்!
வடமொழியில் ஸ்லோகங்கள்! ஆங்கில ப்ரசங்கம்!
வாய்க்குவரா இந்துஸ்தான்! ஆபாச நடனம்!
அடையும்இவை அத்தனையும் கழித்துப்பார்க் குங்கால்,
அத்திம்பேர் அம்மாமி எனுந்தமிழ்தான் மீதம்!
கடவுளர்கள், அட்டைமுடி, காகிதப் பூஞ்சோலை
கண்ணாடி முத்துவடம் கண்கொள்ளாக் காட்சி!

பரமசிவன் அருள்புரிய வந்துவந்து போவார்!
பதிவிரதைக் கின்னல்வரும் பழையபடி தீரும்!
சிரமமொடு தாளமெண்ணிப் போட்டியிலே பாட்டுச்
சிலபாடி மிருதங்கம் ஆவர்த்தம் தந்து
வரும் காதல்! அவ்விதமே துன்பம் வரும், போகும்!
மகரிஷிகள் கோயில்குளம் – இவைகள் கதாசாரம்.
இரக்கமற்ற படமுதலா ளிக்கெல்லாம் இதனால்
ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சியது லாபம்!

படக்கலைதான் வாராதா எனநினைத்த நெஞ்சம்
பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்,
படக்கலையாம் சனியொழிந்தால் போதுமென எண்ணும்!
பயன்விளைக்கும் விதத்தினிலே பலசெல்வர் கூடி
இடக்ககற்றிச் சுயநலத்தைச் சிறிதேனும் நீக்கி
இதயத்தில் சிறிதேனும் அன்புதனைச் சேர்த்துப்
படமெடுத்தால் செந்தமிழ்நா டென்னும்இள மயிலும்
படமெடுத்தா டும்; தமிழர் பங்கமெலாம் போமே!

## 63. புத்தகசாலை

தனித்தமைந்த வீட்டிற்புத் தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்,
இனித்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்;
இசைகேட்டேன்! மணம்மோந்தேன்! சுவைகள் உண்டேன்!
மனித்தரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகாசோதி யிற்கலந்த தெனது நெஞ்சும்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்த கங்கள்
தருமுதவி பெரிது! மிகப்பெரிது கண்டீர்!

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை;
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.

தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச் சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும்.

தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
 தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்,
அமுதம்போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்,
 அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்,
சுமைசுமையாய்ச் சேகரித்துப் பல்க லைசேர்
 துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
 நல்லதுவாய் வசதியதாய் இல்லம் வேண்டும்;
நூலெல்லாம் முறையாக ஆங்க மைத்து
 நொடிக்குநொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
 குவிந்திருக்க வகைசெய்து தருதல் வேண்டும்.
மூலையிலோர் சிறுநூலும் புதுநூ லாயின்
 முடிதனிலே சுமந்துவந்து தருதல் வேண்டும்.

வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
 மரியாதை காட்டிஅவர்க் கிருக்கை தந்தும்,
ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்
 அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
 நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்றதொண் டிழைப்பீர்! சமுதா யச்சீர்
 மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்!

## 64. வாளினை எடடா!

வலியோர்சிலர் எளியோர்தமை
வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்
நிலையாம்எனும் நினைவா?
உலகாள உனதுதாய்மிக
உயிர்வாதை யடைகிறாள்;
உதவாதினி ஒரு தாமதம்
உடனே விழி தமிழா!

கலையேவளர்! தொழில் மேவிடு!
கவிதைபுனை தமிழா!
கடலேநிகர் படை சேர்;கடு
விடநேர்கரு விகள் சேர்!

நிலமேஉழு! நவதானிய
நிறையூதியம் அடைவாய்;
நிதிநூல்விளை! உயிர் நூல்உரை
நிசநூல்மிக வரைவாய்!

அலைமாகடல் நிலம்வானிலுன்
அணிமாளிகை ரதமே
அவைஏறிடும் விதமேயுன
ததிகாரம் நிறுவுவாய்!
கொலைவாளினை எடடாமிகு
கொடியோர்செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா!

தலையாகிய அறமேபுரி
சரிநீதி யுதவுவாய்!
சமமேபொருள் ஜனநாயகம்
எனவேமுர சறைவாய்!
இலையே உண விலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவேமுர
சறைவாய் முரசறைவாய்!

## 65. வீரத் தமிழன்

தென்றிசையைப் பார்க்கின்றேன்; என்சொல்வேன் என்றன்
சிந்தையெல்லாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா!
அன்றந்த லங்கையினை ஆண்டமறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்
குன்றெடுக்கும் பெருந்தோளான் கொடைகொடுக்கும் கையான்!
குள்ளநரிச் செயல்செய்யும் கூட்டத்தின் கூற்றம்!
என்தமிழர் மூதாதை! என்தமிழர் பெருமான்
இராவணன்காண்! அவன்நாமம் இவ்வுலகம் அறியும்!

வஞ்சக விபீஷணனின் அண்ணனென்று தன்னை
வையத்தார் சொல்லுமொரு மாபழிக்கே அஞ்சும்
நெஞ்சகனை, நல்யாழின் நரம்புதனைத் தடவி
நின்றயயிசைச் செவியமுது தரும்புலவன் தன்னை,
வெஞ்சமரில் சாதல்வர நேர்ந்திடினும் சூழ்ச்சி
விரும்பாத பெருந்தகையைத் தமிழ்மறைகள் நான்கும்

சஞ்சரிக்கும் நாவானை வாழ்த்துகின்ற தமிழர்
தமிழரென்பேன், மறந்தவரைச் சழக்கரெனச் சொல்வேன்!

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்!
விசைஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்!
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தொகையாக எதிர்நிறுத்தித் தூள்தூ ளாக்கும்
காழ்ச்சிந்தை, மறச்செயல்கள் மிகவும் வேண்டும்!
கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்!
கீழ்ச்செயல்கள் விடவேண்டும் ராவ ணன்தன்
கீர்த்திசொல்லி அவன்நாமம் வாழ்த்த வேண்டும்!

## 66. சைவப் பற்று

இரும்புப் பெட்டியிலே—இருக்கும்
எண்பது லக்ஷத்தையும்
கரும்புத் தோட்டத்திலே—வருஷம்
காணும் கணக்கினையும்
அருந்துணையாக—இருக்கும்
ஆயிரம் வேலியையும்
பெரும் வருமானம்—கொடுக்கும்
பிற சொத்துக்களையும்;

ஆடை வகைகளையும்—பசும்பொன்
ஆபரணங்களையும்,
மாடு கறந்தவுடன்—குடங்கள்
வந்து நிறைவதையும்,
நீடு களஞ்சியம்—விளைந்த
நெல்லில் நிறைவதையும்,
வாடிக்கைக் காரர் தரும்—கொழுத்த
வட்டித் தொகையினையும்;

எண்ணி எண்ணி மகிழ்ந்தே—ஒருநாள்
எங்கள் மடாதிபதி
வெண்ணிறப் பட்டுடுத்திச்—சந்தனம்
மேனியெலாம் பூசிக்
கண்கவர் பூஷணங்கள்—அணிந்து
கட்டில் அறைநோக்கிப்
பெண்கள் பலபேர்கள்—குலவிப்
பின்வர முன் நடந்தார்!

பட்டு மெத்தைதனிலே—மணமே
பரவும் பூக்களின்மேல்
தட்டினிற் பக்ஷணங்கள்—அருந்திச்
சைவத்தை ஆரம்பித்தார்;
கட்டிக் கரும்பினங்கள்—சகிதம்
கண்கள் உறங்கிவிட்டார்;
நட்ட நடுநசியில்—கனவில்
நடந்தது கேளீர்.

நித்திரைப் பூமியிலே—சிவனார்
நேரில் எழுந்திருளிப்
புத்தம் புதிதாகச்—சிலசொல்
புகல ஆரம்பித்தார்.
'இத்தனை நாளாகப்—புவியில்
எனது சைவமதை
நித்த நித்த முயன்றே—புவியில்
நீளப்பரப்பி விட்டாய்.

மடத்தின் ஆஸ்தியெல்லாம்—பொதுவில்
மக்களுக் காக்கிவிட்டேன்!
திடத்தில் மிக்கவனே—இனிநீ
சிவபுரி வாழ்க்கை
நடத்துக!' என்றே சிவனார்
நவின்றுபின் மறைந்தார்.
இடிமுழக்கமென்றே—தம்பிரான்
எண்ணம் கலங்கிவிட்டார்!

தீப்பொறி பட்டதுபோல்—உடலம்
திடுக்கிட எழுந்தார்!
'கூப்பிடு காவலரை'—எனவே
கூச்சல் கிளப்பிவிட்டார்.
'காப்பளிக்க வேண்டும்—பொருள்கள்
களவுபோகு' மென்றார்;
'மாப்பிளை என்றனுக்கே—இத்தகி
மரணம் ஏதுக்' கென்றார்.

சொப்பனத்தை நினைத்தார்—தம்பிரான்
துள்ளிவிழுந் தழுதார்!

ஒப்பி உழைத்ததில்லை—சிறிதும்
உடல் அசைந்ததில்லை!
எப்படி நான் பிரிவேன்—அடடா!
இன்பப் பொருளையெல்லாம்;
தப்பிப் பிழைப்பதுண்டோ—எனது
சைவம் எனத் துடித்தார்!

## 67. எமனை எலி விழுங்கிற்று!

சர்க்கா ருக்குத் தாசன்நான்! ஓர்நாள்
பக்கத் தூரைப் பார்க்க எண்ணி
விடுமுறை கேட்டேன், விடுமுறை இல்லை;
விடுமுறை பலிக்க நோயை வேண்டினேன்
மார்புநோய் வந்து மனதில் நுழைந்தது!

மலர்ந்தஎன் முகத்தினிலே வந்தது சுருக்கம்
குண்டு விழிகள் கொஞ்சம் குழிந்தன.
என்பெண் டாட்டி என்னை அணுகினாள்.
எதிரில் பந்து மித்திரர் இருந்தார்.
தூயஓர் பெரியார் என்னுடல் தொட்டுக்
காயம் அநித்தியம் என்று கலங்கினார்.
எதிரில் நிமிர்ந்தேன்; எமன்,எமன், எமனுரு!

இருகோ ரப்பல், எரியும் கண்கள்,
சுவாசமும் கொஞ்சம் சுண்டுவ தறிந்தேன்.
சூடு மில்லை உடம்பைத் தொட்டால்;
கடிகா ரத்தின் கருங்கோடு காணேன்;
கண்டது பிழையோ, கருத்தின் பிழையோ,
ஒன்றும் சரியாய்ப் புரிய வில்லை,
என்ற முடிவை ஏற்பாடு செய்தேன்!
என்கதி என்ன என்று தங்கை
சொன்னதாய் நினைத்தேன். விழிகள் சுழன்றன!
பேசிட நாக்கைப் பெயர்த்தே னில்லை.
பேச்சடங் கிற்றெனப் பெருந்துயர் கொண்டேன்.
இருப்புத் தூண்போல் எமன்கை இருந்ததே!
எட்டின கைகள் என்னுயிர் பிடிக்க!
உலகிடை எனக்குள் ஒட்டுற வென்பதே

ஒழிந்தது! மனைவி ஓயா தழுதாள்!
எமனார் ஏறும் எருமைக் கடாவும்
என்னை நோக்கி எடுத்தடி வைத்தது.
மூக்கிற் சுவாசம் முடியும் தருணம்
நாக்கும் நன்கு நடவாச் சமயம்,
சர்க்கார் வைத்தியர் சடுதியில் வந்து
பக்குவஞ் சொல்லிப் பத்துத் தினங்கள்
விடுமுறை எழுதி மேசைமேல் வைத்து
வெளியிற் சென்றார். விஷய முணர்ந்தேன்.
"அண்டையூர் செல்ல அவசியம், மாட்டு
வண்டி கொண்டுவா" என்றேன்! மனைவி
எமனிழுக் கின்றான் என்றாள். அத்தரி
சுண்டெலி ஒன்று துடுக்காய் அம்மி
யண்டையில் மறைந்ததும் அம்மியை நகர்த்தினேன்!
இங்கு வந்த எமனை அந்த
எலிதான் விழுங்கி யிருக்கும் என்பதை
மனைவிக் குரைத்தேன். வாஸ்தவம் என்றாள்!
மாட்டு வண்டி ஓட்டம் பிடித்தது!
முன்னமே லீவு தந்திருந்தால்,
இந்நேரம் ஊர்போய் இருக்க லாமே!

## 68. சுதந்தரம்

தித்திக் கும்பழம் தின்னக் கொடுப்பார்;
மதுரப் பருப்பு வழங்குவார் உனக்கு;
பொன்னே, மணியே, என்றுனைப் புகழ்வார்;
ஆயினும் பச்சைக் கிளியே அதோபார்!
உன்னுடன் பிறந்த சின்ன அக்கா,
வான வீதியில் வந்து திரிந்து
தென்னங் கீற்றுப் பொன்னூசல் ஆடிச்
சோலை பயின்று சாலையில் மேய்ந்து
வானும் மண்ணுந்தன் வசத்திற் கொண்டாள்!
தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?
அக்கா அக்கா என்றுநீ அழைத்தாய்.
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்தரம் கிளியே?

## 69. நம் மாதர் நிலை

பழங்கல அறைக்குளே பதினைந்து திருடர்கள்
பதுங்கிடவும் வசதியுண்டு.
பதார்த்தவகை மீதிலே ஒட்டடையும் ஈக்களும்
பதிந்திடவும் வசதியுண்டு.
முழங்கள் பதினெட்டிலே மாற்றமில் லாவிடினும்
முன்றானை மாற்றமுண்டு.
முடுகிவரும் நோய்க்கெலாம் கடவுளினை வேண்டியே
முடிவடைய மார்க்கமுண்டு.
தொழுங்கணவன் ஆடையிற் சிறுபொத்தல் தைக்கவும்
தொகைகேட்கும் ஆட்கள்வேண்டும்.
தோசைக் கணக்கென்று கரிக்கோடு போடவோ
சுவருண்டு வீட்டில் இந்த
ஒழுங்கெலாம் நம்மாதர் வாரத்தின் ஏழுநாள்
உயர்விரதம் அநுஷ்டிப்பதால்
உற்றபலன் அல்லவோ அறிவியக் கங்கண்
டுணர்ந்தபா ரததேசமே!

## 70. ஏசுநாதர் ஏன் வரவில்லை?

தலை, காது, மூக்கு, கழுத்து, கை, மார்பு, விரல்,
தாள்,என்ற எட்டுறுப்பும்
தங்கநகை, வெள்ளிநகை, ரத்தினமி ழைத்தநகை,
தையலர்கள் அணியாமலும்,
விலைகுறையும் ஆடைகள் அணிந்துமே கோயில்வர
வேண்டுமென் றேபாதிரி
விடுத்தஒரு சேதியால் விஷமென்று கோயிலை
வெறுத்தார்கள் பெண்கள்,புருஷர்!
நிலைகண்ட பாதிரியின் எட்டுறுப் பேயன்றி
நீள்இமைகள், உதடு,நாக்கு
நிறையநகை போடலாம், கோயிலில் முகம்பார்க்க
நிலைக்கண்ணா டியும்உண்டென
இலைபோட் டழைத்ததும், நகைபோட்ட பக்தர்கள்
எல்லாரும் வந்துசேர்ந்தார்;
ஏசுநா தர்மட்டும் அங்குவர வில்லையே,
இனியபா ரததேசமே!

## 71. கடவுள் மறைந்தார்

மனைமக்கள் தூங்கினர் நள்ளிரவில் விடைபெற்று
வழிநடைச் சிரமம்இன்றி
மாபெரிய 'சிந்தனா லோகத்தை' அணுகினேன்
வந்தனர்என் எதிரில்ஒருவர்.
எனைஅவரும் நோக்கியே நான்கடவுள் நான்கடவுள்
என்றுபல முறைகூறினார்.
இல்லைஎன் பார்கள்சிலர்; உண்டென்று சிலர்சொல்வர்
'எனக்கில்லை கடவுள்கவலை'
எனவுரைத் தேன்.அவர் 'எழுப்புசுவர் உண்டெனில்
எழுப்பியவன் ஒருவனுண்டே
இவ்வுலகு கண்டுநீ நானும்உண் டெனஅறிக'
என்றுரைத்தார். அவரைநான்
'கனமான கடவுளே உனைச்செய்த சிற்பிஎவன்?
காட்டுவீர்' என்றவுடனே
கடவுளைக் காண்கிலேன்! அறிவியக்கப் புலமை
கண்டபா ரததேசமே!

## 72. உன்னை விற்காதே!

தென்னி லங்கை யிராவணன் தன்னையும்
நீய னென்னும் துரியனை யும்பிறர்
என்ன சொல்லி யெவ்வாறு கசப்பினும்
இன்று நானவர் ஏற்றத்தைப் பாடுவேன்;
இன்னு மிந்தச் செயலற்ற நாட்டினில்
எத்த னைதுரி யோதனர் வாழினும்
அன்ன வர்தமைக் கொல்ல முயன்றிடும்
அந்த கன்தனை நான்கொல்ல முந்துவேன்.

நெஞ்சி லுற்றது செய்கையில் நாட்டுதல்
நீச மன்று; மறக்குல மாட்சியாம்!
தஞ்ச மென்று பிறன்கையில் தாழ்கிலாத்
தன்மை யாவது வீரன் முதற்குணம்!
நெஞ்சி லூறிக் கிடந்ததம் பூமியை
நேரில் மற்றவர் ஆண்டிடப் பார்த்திடும்
பஞ்சை யின்று. துரியன் இராவணன்
பாரதக் குலம் வேண்டிடும் பண்பிதே.

தன்கு லத்தினைத் தூக்கிடும் தாம்பெனச்
சகம்சி ரிக்கப் பிறந்தவி பீஷணன்
நன்ம னத்தவன் ராமனைச் சார்ந்ததை
நல்ல தென்பது ராமன் முகத்துக்காம்.
இன்பம் வேண்டிப் பிறன்வச மாவதை
இந்தத் தேசம் இகழ்ந்திடும் மட்டிலும்
துன்ப மன்றிச் சுகம்கிடை யாதென்றே
துரைகள் சேர்ந்த சபைக்குமுன் கூறுவேன்.

பார தத்திருத் தாயெனும் பேச்சிலே
பச்சை யன்பு பொழிந்திடு கின்றவர்
வீரத் தால்உள மேசெய லாயினோர்
விழி யிலாதவர் ஊமைய ராயினும்
கோரித் தாவுமென் னுள்ளம் அவர்தம்மை!
கொள்கை மாற்றல் திருட்டுத் தனங்காண்!
ஓரி போலப் பதுங்கும் படித்தவர்
ஊமை நொள்ளை செவிடென்று சொல்லுவேன்!

இன்பம் வந்து நெருங்கிடு நேரத்தில்
ஈனர் அஞ்சிக் கிடக்கின்ற நேரத்தில்
ஒன்றி லாயிரம் தர்க்கம் புரிந்துபின்
உரிமைத் தாய்தனைப் போவென்று சொல்வதால்,
என்னை யீன்ற நறுந்தாய் நாட்டினை
எண்ணுந் தோறும் உளம்பற்றி வேகுதே!
அன்பி ருந்திடில் நாட்டின் சுகத்திலே
ஆயி ரம்கதை ஏன்வளர்க் கின்றனர்?

## 73. பத்திரிகை

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான்; இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான்;
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே.

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு

செறிதரும் மக்கள் எண்ணம்
　　செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
　　குவலையும் ஓங்கச் செய்வாய்;
நறுமண இதழ்ப்பெண் ணேஉன்
　　நலம்காணார் ஞாலம் காணார்.

கடும்புதர் விலக்கிச் சென்று
　　களாப்பழம் சேர்ப்பார் போலே
நெடும்புவி மக்கட் கான
　　நினைப்பினிற் சென்று நெஞ்சிற்
படும்பல நுணுக்கம் சேர்ப்பார்
　　படித்தவர். அவற்றை யெல்லாம்
'கொடும்' என அள்ளி உன்தாள்
　　கொண்டார்க்குக் கொண்டு போவாய்!

வானிடை நிகழும் கோடி
　　மாயங்கள், மாநி லத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
　　உட்புறம் வெளிப்பு றத்தே,
ஆனநற் கொள்கை, அன்பின்
　　அற்புதம் இயற்கைக் கூத்துத்
தேனிதழ் தன்னிற் சேர்த்துத்
　　தித்திக்கத் தருவாய் நித்தம்!

சிறுகதை ஒன்று சொல்லிப்
　　பெருமதி யூட்டும் தாளே!
அறைதனில் நடந்த வற்றை
　　அம்பலத் திழுத்துப் போட்டுக்
கறையுளம் தூய்மை செய்வாய்!
　　களைப்பிலே ஊக்கம் பெய்வாய்!
நிறைபொருள் ஆவாய் ஏழை
　　நீட்டிய வெறுங்க ரத்தே.

ஓவியம் தருவாய்! சிற்பம்
　　உணர்விப்பாய்! கவிதை யூட்டக்
காவியம் தருவாய்! மக்கள்
　　கலகல வௌச்சி ரிப்பு

மேவிடும் விகடம் சொல்வாய்!
மின்னிடும் காதல் தந்து
கூவுவாய்! வீரப் பேச்சுக்
கொட்டுவாய்க் கோலத் தாளே!

தெருப்பெருக் கிடுவோ ருக்கும்
செகம்காக்கும் பெரியோர்க் கும்,கை
இருப்பிற் பத்திரிகை நாளும்
இருந்திடல் வேண்டும்! மண்ணிற்
கருப்பெற் றுருப்பெற் றிளநடை
பெற்றுப் பின்னர் ஐந்தேஆண்டு
வரப்பெற்றார், பத்திரிகை நாளும்
உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்!

## 74. யாத்திரை போகும் போது

சீப்புக் கண்ணாடி ஆடை சிறுகத்தி கூந்தல் எண்ணெய்
சோப்புப் பாட்டரி விளக்குத் தூக்குக்கூ ஜாதாள் பென்சில்
தீப்பெட்டி கவிகை சால்வை செருப்புக் கோவணம் படுக்கை
காப்பிட்ட பெட்டி ரூபாய் கைக்கொள்க யாத்தி ரைக்கே.

## 75. பூசணிக்காய் மகத்துவம்

மெய்வண்ண வீடுகட்ட உனைத்தொங்க விடுகின்றார்கள்;
செய்வண்ண வேலைசெய்து திருமாடம் முடிக்கின் றாய் நீ!
பொய்வண்ணப் பூசணிக்காய்! கறியுனைச் செய்துண் டேன்உன்
கைவண்ணம் அங்குக்கண்டேன்: கறிவண்ணம் இங்குக் கண்டேன்!

# திராவிட நாட்டுப் பண்

இசை – மோகனம்] [தாளம் – ஆதி

வாழ்க வாழ்கவே
வளமார் எமதுதி ராவிடநாடு
வாழ்க வாழ்கவே!

சூழும் தென்கடல் ஆடும் குமரி
தொடரும் வடபால் அடல்சேர் வங்கம்
ஆழும் கடல்கள் கிழக்கு மேற்காம்
அறிவும் திறலும் செறிந்த நாடு. (வா)

பண்டைத் தமிழும் தமிழில் மலர்ந்த
பண்ணிகர் தெலுங்கு துளுமலை யாளம்
கண்டை நிகர்கன் னடமெனும் மொழிகள்
கமழக் கலைகள் சிறந்த நாடு. (வா)

அள்ளும் சுவைசேர் பாட்டும் கூத்தும்
அறிவின் விளைவும் ஆர்ந்திடு நாடு
வெள்ளப் புனலும் ஊழித் தீயும்
வேகச் சீறும் மறவர்கள் நாடு. (வா)

அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு. (வா)

அமைவாம் உலகின் மக்களை யெல்லாம்
அடிநாள் ஈன்ற அன்னை தந்தை
தமிழர்கள் கண்டாய் அறிவையும் ஊட்டிச்
சாகாத் தலைமுறை ஆக்கிய நாடு. (வா)

ஆற்றில் புனலின் ஊற்றில் கனியின்
சாற்றில் தென்றல் காற்றில் நல்ல
ஆற்றல் மறவர் செயலில் பெண்கள்
அழகில் கற்பில் உயர்ந்த நாடு. (வா)

புனலிடை மூழ்கிப் பொழிலிடை யுலவிப்
பொன்னார் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி இல்லறம் நாடும்
காதல் மாதர் மகிழுறும் நாடு. (வா)

திங்கள் வாழ்க செங்கதிர் வாழ்க
தென்றல் வாழ்க செந்தமிழ் வாழ்க
இங்குத் திராவிடர் வாழ்க மிகவே
இன்பம் சூழ்ந்ததே எங்கள் நாடு. (வா)

# சிறு காப்பியம்

## 1

## போர் மறவன்

### 1

(காதலனின் பிரிவுக்கு ஆற்றாதவளாய்த் தலைவி தனியே வருந்துகிறாள்.)

தலைவி

என்றன் மலருடல் இறுக அணைக்கும்அக்
குன்றுநேர் தோளையும், கொடுத்தஇன் பத்தையும்
உளம்மறக் காதே ஒருநொடி யேனும்!
எனைஅவன் பிரிந்ததை எவ்வாறு பொறுப்பேன்!
வான நிலவும், வண்புனல், தென்றலும்
ஊனையும் உயிரையும் உருக்கின! இந்தக்
கிளிப்பேச் சோஎனில் கிழித்தது காதையே!
புளித்தது பாலும்! பூநெடி நாற்றம்!

(காதலன் வரும் காலடி ஓசையிற் காதைச் செலுத்துகிறாள்.)

தலைவி

காலடி ஓசை காதில் விழுந்தது.
நீள வாள்அரை சுமந்தகண்
ணாளன் வருகின் றான்இல்லை அட்டியே!

### 2

(தலைவன் வருகை கண்ட தலைவி வணக்கம் புகலுகிறாள்.)

தலைவன்

வாழிஎன் அன்பு மயிலே, எனைப்பார்!
சூழும்நம் நாட்டுத் தோலாப் பெரும்படை
கிளம்பிற்று! முரசொலி கேள்நீ விடைகொடு!

(தலைவி திடுக்கிடுகிறாள். அவள் முகம் துன்பத்தில் தோய்கிறது.)

தலைவி

மங்கை என்னுயிர் வாங்க வந்தாய்!
ஒன்றும் என்வாய் உரையாது காண்க!

தலைவன்

பாண்டி நாட்டைப் பகைவன் சூழ்ந்தான்!
ஆண்டகை என்கடன் என்ன அன்னமே?
நாடு தானே நம்மைப் பெற்றது?
நாமே தாமே நாட்டைக் காப்பவர்!
உடலும் பொருளும் உயிரும், ஈன்ற
கடல்நிகர் நாட்டைக் காத்தற் கன்றோ?
பிழைப்புக் கருதி அழைப்பின்றி வந்த
அழுக்குளத் தாரிய அரிவைநீ அன்றே!
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்பெரும் பழங்குடி
நல்லியல் நங்கை, நடுக்குறல் தகுமோ?
வென்றுவா என்று நன்று வாழ்த்திச்
சென்றுவர விடைகொடு சிரிப்பொடும் களிப்பொடும்!

தலைவி

பிரியா துன்பால் பெற்ற இன்பத்தை
நினைந்துளம், கண்ணில் நீரைச் சேர்த்தது!
வாழையடி வாழைஎன வந்தஎன் மாண்பு
வாழிய சென்று வருக என்றது.

(தலைவன் தலைவியை ஆரத்தழுவிப் பிரியா உளத்தோடு
பிரிந்து செல்கிறான்.)

3

(பகைவன் வாளொடு போர்க்களத்தில் எதிர்ப்படுகிறான்:
வாளை உருவுகின்றான். தலைவனும் வாளை உருவுகின்றான்.)

தலைவன்

பகையே கேள்நீ, பாண்டிமா நாட்டின்
மாப்புகழ் மறவரின் வழிவந் தவன்நான்!
என்வாள் உன்உயி ரிருக்கும் உடலைச்
சின்ன பின்னம் செய்ய வல்லது!
வாளை எடுநின் வல்லமை காட்டுக.

(இருவரும் வாட்போர் புரிகிறார்கள்.)

4

(தலைவன் எதிரியின் வாள் புகுந்த தன் மார்பைக் கையால் அழுத்தியபடி சாய்கிறான்.)

தலைவன்

ஆஎன் மார்பில் அவன்வாள் பாய்ந்ததே!
(தரையில் வீழ்ந்து, நாற்றிசையையும் பார்க்கிறான்.)
என்னை நோக்கி என்றன் அருமைக்
கன்னல் மொழியாள், கண்ணீர் உகுத்துச்
சாப்பாடும் இன்றித் தான்நின் றிருப்பாள்;
என்நிலை அவள்பால் யார்போய் உரைப்பார்?

(வானில் பறவை ஒன்று மிதந்து போவதைக் காண்கின்றான்.)

பறவையே ஒன்றுகேள்! பறவையே ஒன்றுகேள்!
நீபோம் பாங்கில் நேரிழை என்மனை,
மாபெரும் வீட்டு மணிஒளி மாடியில்
உலவாது மேனி, உரையாது செவ்வாய்,
இமையாது வேற்கண், என்மேல் கருத்தாய்
இருப்பாள் அவள்பால் இனிது கூறுக:
பெருமையை உன்றன் அருமை மணாளன்
அடைந்தான். அவன்தன் அன்னை நாட்டுக்
குயிரைப் படைத்தான். உடலைப் படைத்தான்.
என்று கூறி ஏகுக மறந்திடேல்!
(தலைவன் தோள் உயர்த்தி உரத்த குரலில்)
பாண்டி மா நாடே, பாவையே,
வேண்டினேன் உம்பால் மீளா விடையே!

2

## ஒன்பது சுவை

### 1. உவகை

(இரவு! அவள் மாடியில் நின்றபடி, தான் வரச்சொல்லியிருந்த காதலனை எதிர்பார்க்கிறாள். அவன் வருகின்றான்.)

காதலன்

என்மேல் உன்றனுக் கெத்தனை அன்படி
என்உயிர் நீதான்! என்னுடல் நீதான்!

உன்னை யன்றிஇவ் வுலகின் ஆட்சியும்
பொன்னும் வேண்டேன், புகழும் வேண்டேன்.
காத்திருப் பேன்எனக் கழறினை வந்தேன்
பூத்திருக் கும்உன் புதுமுகம் காட்டினை.
மாளிகை உச்சியின் சாளரம் நீங்கி
நூலே ணியினைக் கால்விரல் பற்றித்
தொத்தும் கிளிபோல் தொடர்ந்திறங் குவதாய்
முத்தெழுத் தஞ்சல் எழுதினை; உயிரே
இறங்கடி ஏந்தும் என்கை நோக்கி.
(அவள் நூலேணி வழியாக இறங்குகிறாள்.)

காதலன்

வாவா பறந்து! வா வா மயிலே!
(அவளைத் தோளில் தாங்கி இறங்குகிறான்.)

காதலன்

வளைந்தது கையில் மாம்பழக் குலைக்கிளை!
ஒரேஒரு முத்தம் உதவு. சரி! பற!
(இருவரும் விரைந்து சென்று அங்கிருந்த ஓர் குதிரைமேல் ஏறி அப்புறப்படுகிறார்கள்.)

## 2. வியப்பு

(இருவரும் ஒரு சோலையை அடைகிறார்கள். குதிரையை ஒரு மரத்தில் கட்டி.)

காதலன்

வந்து சேர்ந்தோம் மலர்ச்சோ லைக்கண்!
என்னிரு தோளும் உன்உடல் தாங்கவும்,
உன்னிரு மலர்க்கைகள் என்மெய் தழுவவும்
ஆனது! நகரினை அகன்றோம் எளிதில்!
(இருவரும் உலாவுகின்றனர்.)

காதலன்

சோம்பிக் கிடந்த தோகை மாமயில்
தழைவான் கண்டு மழைவான் என்று
களத்தாடு கின்றது காணடி! வியப்பிது!
(சிறிது தொலைவில் செல்லுகிறார்கள்.)

## 3. இழிப்பு

காதலன்

குள்ளமும் தடிப்பும் கொண்ட மாமரத்
திருகிளை நடுவில் ஒருமுகம் தெரிந்தது!
சுருங்கிய விழியான்; சுருண்ட மயிரினன்;
இழிந்த தோற்றத்தன் என்னபார்க் கின்றான்?
நமைநோக்கி ஏனவன் நகரு கின்றான்?
உற்றுப் பார்!அவன் ஒருபெருங் கள்வன்.
காலடி ஓசை காட்டாது மெல்லஅக்
கொடியோன் நம்மேற் குறியாய் வருவதை
உணர்க! அன்புக் குரியாய் உணர்க!

(தம்மை நோக்கி வரும் அத்தீயனை இருவரும் பார்க்கிறார்கள்.)

## 4. வெகுளி (கோபம்)

காதலன்

வெகுளியை என்உளத்து விளைக்கின் றானவன்!
புலிபாய்ந் திடும்எனில் போய்ஒழிந் திடும்நரி!

(காதலன் கண்ணிற் கனல் எழுகின்றது. தன் உள்ளங்கை மடங்குகின்றது. அந்தக் கள்வன் தன்னை நெருங்குவதையும் காதலன் காணுகின்றான். காதலி காணுகின்றாள்.)

## 5. நகை

காதலன்

நட்டு வீழ்ந்தான் நடை தடுமாறி;
கள்ளுண் டான்.அவ் வெள்ளத் திலேதன்
உள்ளம் கரைத்தான். உணர்வி ழந்தான்.
உடைந்தது முன்பல் ஒழுகிற்று குருதி!

(இருவரும் சிரிக்கிறார்கள்.)

காதலன்

ஆந்தைபோல் விழித்தான். அடங்காச் சிரிப்பை
நமக்குப் பெண்ணே நல்விருந் தாக்கினான்.

(இருவரும் மறுபுறம் செல்கிறார்கள்.)

## 6. மறம் (வீரம்)

**காதலன்**

என்ன முழக்கம்? யார்இங்கு வந்தனர்?
கால்பட்டுச் சருகு கலகல என்றது.
(உறையினின்று வாளை உருவும் ஓசை கேட்கிறது.)

**காதலன்**

எவனோ உறையினின் றுருவினான் வாளை;
ஒலிஒன்று கிலுக்கென்று கேட்டது பெண்ணே!
ஒருபுறம் சற்றே ஒதுங்கி நிற்பாய்.
நினது தந்தை நீண்முடி மன்னன்
அனுப்பிய மறவன் அவனே போலும்!
(காதலி ஒருபுறம் மறைந்து, நடப்பதை உற்று நோக்கியிருக்கிறாள்.)

**காதலன்**

(தன்னெதிர் வந்து நின்ற மறவனை நோக்கி)

அரசன் ஆணையால் அடைந்தவன் நீயோ?
முரசு முழங்கும் முன்றிலுக் கப்பால்
அரண்மனை புனைந்த அழகு மாடியில்
வைத்தபூ மாலையை வாடாது கொணர்ந்தது
இத்தோள்; உனைஇங் கெதிர்ப்பதும் இத்தோள்!
நேரிழை இன்றி நிலைக்காது வாழ்வெனக்
கோரி அவளைக் கொணர்ந்ததும் இத்தோள்!
போர்மற வர்சூழ் பாரே எதிர்ப்பினும்
நேரில் எதிர்க்க நினைத்ததும் இத்தோள்!
உறையி னின்று வாளை உருவினேன்
தமிழ்நாட்டு மறவன்நீ தமிழ்நாட்டு மறவன்நான்
என்னையும் என்பால் அன்புவைத் தாளையும்
நன்று வாழ்த்தி நடவந் தவழி!
இலைஎனில் சும்மா இராதே; தொடங்குபோர்!
(வாட் போர் நடக்கிறது.)

**காதலன்**

மாண்டனை! என்வாள் மார்பில் ஏற்றாய்;

வாழி தோழா! நின்பெயர் வாழி!
(வந்தவன் இறந்துபடுகிறான்.)

## 7. அச்சம்

(காதலன் தன் காதலியைத் தேடிச் செல்கிறான்.)

காதலன்

அன்பு மெல்லியல், அழகியோள் எங்கே?
பெருவாய் வாட்பல் அரிமாத் தின்றதோ?
கொஞ்சும் கிள்ளை அஞ்ச அஞ்ச
வஞ்சக் கள்வன் மாய்த்திட் டானோ!
(தேடிச் செல்லுகின்றான். பல புறங்களிலும் அவன் பார்வை சுழல்கின்றது.)

## 8. அவலம்

(காதலி ஒருபுறம் இறந்து கிடக்கிறாள்.
காதலன் காணுகிறான்.)

காதலன்

ஐயகோ அவள்தான்! அவள்தான்! மாண்டாள்.
பொறிவிழிக் கள்வன் புயலெனத் தோன்றி
அழகு விளக்கை அவித்தான்! நல்ல
கவிதையின் சுவையைக் கலைத்தான் ஐயகோ!
என்றன் அன்பே, என்றன் உயிரே!
என்னால் வந்தாய், என்னுடன் வந்தாய்.
பொன்னாம் உன்னுயிர் போனது! குருதியின்
சேற்றில் மிதந்ததுன் சாற்றுச் சுவையுடல்!
கண்கள் பொறுக்குமோ காண உன்நிலை?
எண்ணம் வெடித்ததே! எல்லாம் நீஎன
இருந்தேன்; இவ்வகை இவ்விடம் இறந்தாய்.
தனித்தேன், உய்விலை, தையலே, தையலே,
என்பால் இயற்கை ஈந்த இன்பத்தைச்
சுவைக்குமுன் மண்ணில் சுவற வைத்துக்
கண்ணீர் பெருக்கிநான் கதற வைத்ததே!
ஐயகோ பிரிந்தாய்! ஐயகோ பிரிந்தாய்!

## 9. அறநிலை

கல்வி இல்லார்க்கு கல்வி ஈகிலார்
செல்வம் இல்லார்க்குச் செல்வம் ஈகிலார்
பசிப்பிணி, மடமைப் பரிமேல் ஏறி
சாக்காடு நோக்கித் தனிநடை கொண்டா ர்,
அன்போ அருளோ அடக்கமோ பொறுமையோ
இன்சொலோ என்ன இருத்தல் கூடும்?
வாழ்வான் ஒருவன் வாழ்வானைக் காணின்
வீழ இடும்பை விளைக்கின் றானே!
வையம் உய்யு மாறு
செய்வன செய்து கிடப்பேன் இனிதே!

# 3

## காதல் வாழ்வு

### ஒன்று

மணம் முடிந்தது:

தனியிடம், விடுதலைபெற்ற இரண்டுள்ளம், அளவு கடந்த அன்பு – இவை மகிழ்ச்சிக் கொடியேற்றிக் காதல் முரசு முழங்கின – இன்ப விழா! முடிவில்லை!

### இரண்டு

ஒருநாள் அவர்கள் இந்த உலகில் இறங்கி வந்து பேசலுற்றார்கள்.

"மக்கள் தொடர்பில்லாதது. தென்றலில் சிலிர்க்கும் தழை மரங்கள் உள்ளது. ஊற்றிற் சிறந்த நீர்நிலையின் துறையில் அமைந்த நுழைவாயி லுள்ளது. அழகிய சிறு குடில்! நாம் அங்கே தங்கலாம் – இது என் அவா அத்தான்."

"ஆம்! குறைவற்ற தனிமை!"

பறந்தார்கள்.

### மூன்று

"நாயின் நாக்கைப் போன்ற சிவந்த மெல்லடியைத் தூக்கிவை குடிசையில்."

"நான் மட்டுமா?"

அதிர்ந்தது அவள் உள்ளம்!

இமைப்போதில் ஒன்றில் ஒன்று புதைந்த இரண்டுடல் குடிசையில் நுழைந்தன.

"விட்டுப் பிரிவேன் என்று அச்சப்பட்டாயா?"

"மன்னிக்க வேண்டும்!"

குடிசை சாத்தப்பட்டது.

நாவற்பழம் நீர்நிலையில் விழுந்துகொண்டிருக்கும் 'இச்சிச்சு' என்ற ஒலி குடிசைக்குள் சென்றது. அதே ஒலி குடிசையினின்றும் வெளி வந்தது. இது எதிரொலியன்று!

## நான்கு

"தேக்கும், அதில் உடல் பின்னிய சீந்தற் கொடியும் பார், நம்மைப் போல!"

"இல்லை, அரண்மனை கசந்தால் அழகிய குடிலில் குடியேறத் தேக்கு நடவாது; சீந்தல் நகராது."

வானில் ஓர் ஒலி!

"வைகையின் மங்கிய ஒளியில் மங்காத இன்னிசையை உதிர்த் தன வானப் புட்கள், ஆணும் பெண்ணுமாக!"

"நாமும் வானில் — அடடா சிறகில்லையே!"

நீர்நிலை கட்டித் தழுவிக்கொண்டது இருவரையும்.

## ஐந்து

"கெண்டைகள் துள்ளி விளையாடி நீரின் அடி மட்டத்தில் அள்ளி நுகர்வன இன்பத்தை!"

"நாமும் அங்கு இன்பம் நுகர்வோம் — அடடா, நாம் மீன் களல்லவே!"

"கண்ணிமைப்போது நான் நீருக்குள் ஒளிந்து கொள்கிறேன்! பிற்பகுதியும் கேள்."

"நிறுத்துங்கள்! முற்பகுதியே என்பாதி உயிரைப் போக்கி விட்டது!"

மாற்றிச் சுவைக்கும் நான்கு விழிகள் தம்மிற் பிரியாமல் நீராடின.

## ஆறு

"கரையேறுங்கள் என்னோடு."

'மாலையின் குளிரும் நனைந்த சேலையின் குளிரும் உன் இன்பத்தைப் பெருக்கவில்லையா?"

"தவறு! நம் இருவர்க்கும் நடுவில் முயல் நுழையும் வெளி, இதற்கு நனைந்த ஆடை காரணம்."

"அதோ நம்மை நோக்கி நம் வீட்டு ஆள்." –

குடிசையில் மறைந்தார்கள் ஓடி!

## ஏழு

"அழைத்து வரச் சொன்னார்கள், அப்பா".

"ஏன்?"

"கப்பல் வந்திருக்கிறது!"

"மெல்லப் பேசு!"

'என்ன ஓசை குடிசையின் உட்கட்டில்? விட்டுவிட்டு இசைக்கும் ஒருவகைச் சிட்டுக் குரல்!"

"என்ன சொன்னார் அப்பா?"

"அனுப்ப வேண்டுமாம் உம்மை?"

"சிங்கைக்கா?"

"ஆம்! – என்ன அங்கே திட்டென்று விழுந்த உடலின் ஓசை?"

"நாலு நாட்கள் நீடிக்கலாமா?"

"இன்றைக்கே, – இதென்ன குடிசையில் வெள்ளம்?"

"நீ போ. இதோ வருகின்றேன்."

## எட்டு

தேம்பி அழுது திட்டென்று வீழ்ந்து கண்ணீரை ஆறாய்ப் பெருக்கினை அன்புடையாளே!"

"இறக்கமாட்டேன் அத்தான், உனை விட்டுப் பிரியவில்லை என்று நீங்கள் உறுதி கூறுமட்டும்."

"கடமை என் வாயை அடைக்கிறது".

"என் மடமை கிடந்து துடிக்கிறது."

"மடமை அல்ல; உயிரின் இயற்கை."

"'தந்தை சொற்படி நடக்கட்டும் என் அத்தான்' என்று என் நெஞ்சுக்குக் கூற என்னால் முடிகிறது; உயிருக்குச் சொல்லி நிறுத்த முடியவில்லை."

## ஒன்பது

"தோழி, நான் அப்பாவிடம் போகிறேன்."

"நீர் நிலையை அடுத்த குடிசையிலா அப்பா இருக்கிறார்?"

"என் கால்கள் என்னை ஏமாற்றுகின்றன. என் பிரிவால் அவள் சாகிறாள்! சென்று காப்பாற்று."

"எவ்வளவு நேரம்?"

"நேரமா?"

"எத்தனை நாள்?"

"நாளா? அடுத்த ஆண்டில் – வந்துவிடுவேன்."

"கால் நாழிகை சாக்காட்டின் கதவைச் சாத்திப் பிடித்துக் கொண்டிருக்க முடியும். ஐயா! அடுத்த ஆண்டில் அவள் உடலின் துகள் கலந்த மண்ணும் மட்கி வெளியுடன் வெளியாய்க் கலந்த தென்ற கதை பழமையாய்விடும்.

"என் துன்ப உள்ளத்தைத் தந்தையிடம் கூறுகிறேன்."

## பத்து

(நூலேணியில் அழுகுரல், கண்ணீர் – அவன் கப்பலேறுகிறான்.)

கப்பலுக்குள் – "இங்கே உட்கார வேண்டும் நீவிர்."

"கணவனும் மனைவியும் தங்கும் இடமல்லவா இது?"

"இறந்திருப்பாளானால், அது அவள் செய்த முதல் குற்றம். இறந்த செய்தி என் காதில் எட்டாதிருக்க முயன்றிருப்பாளானால் அது இரண்டாவது குற்றம்."

"இரண்டாவது குற்றத்திற்கு அவள் ஆளாகவில்லை. தன் நிலையை விளக்கும்படி என்னை அனுப்பினாள்."

"பயனற்றது இவ்வுலகம்! ஒரு பற்று என்னை வாட்டுகின்றது. அவள் இறந்தாள்; ஆதலால் நான் இறப்பேன். இதை அவள் அறியாளே! நீவிர் சான்றாகக் கடலில் கலக்கிறேன்."

சிரிப்பு! – இரண்டு இளைஞர்கள் தோழியும் தலைவியுமாகிறார் கள்.

"அத்தான்! நாம் இருவரும் சிங்கைக்குப் போகிறோம்.'

"தோழி! என் மாமாவிடமும் அத்தையிடமும் உடலும் உயிருமாக இருவரும் செல்லுகிறார்கள் என்று கூறு!"

வாழ்க, காதல் வாழ்வு!

# இயற்கை

## 4

## இயற்கைச் செல்வம்

விரிந்த வானே, வெளியே, — எங்கும்
 விளைந்த பொருளின் முதலே,
திரிந்த காற்றும், புனலும், — மண்ணும்,
 செந்தீ யாவும் தந்தோய்,
தெரிந்த கதிரும் நிலவும் — பலவாச்
 செறிந்த உலகின் வித்தே,
புரிந்த உன்றன் செயல்கள் — எல்லாம்
 புதுமை! புதுமை! புதுமை!

அசைவைச் செய்தாய், ஆங்கே — ஒலியாம்
 அலையைச் செய்தாய் நீயே!
நசையால் காணும் வண்ணம் — நிலமே
 நான்காய் விரியச் செய்தாய்!
பசையாம் பொருள்கள் செய்தாய் — இயலாம்
 பைந்தமிழ் பேசச் செய்தாய்!
இசையாம் தமிழைத் தந்தாய் — பறவை,
 ஏந்திழை இனிமைக் குரலால்!

எல்லாம் அசையச் செய்தாய் — உயிர்கள்
 சிந்தினும் அசைவைச் சேர்த்தாய்.
சொல்லால் இசையால் இன்பம் — எமையே
 துய்க்கச் செய்தாய்! அடடா!
கல்லா மயில்,வான் கோழி, — புறவுகள்
 காட்டும் சுவைசேர் அசைவால்
அல்லல் விலக்கும் "ஆடற் — கலை" தான்
 அமையச் செய்தாய் வாழி!

## 5

## அதிகாலை

அமைதியில் ஒளி அரும்பும் அதிகாலை — மிக
அழகான இருட்சோலை தனில்

(அமைதியில் ஒளி)

இமை திறந்தே தலைவி கேட்டாள் – சேவல்
எழுந்திருப்பீர் என்று கூவல்
(அமைதியில் ஒளி)

தமிழ்த்தேன் எழுந்தது வீட்டினர் மொழியெலாம்
தண்ணீர் இறைந்தது தலைவாயில் வழியெலாம்
அமைத்த கோலம் இனித்தது விழியெலாம் – நீ
ராடி உடுத்தனர் அழகுபொற் கிழியெலாம்
(அமைதியில் ஒளி)

பெற்றவர் கூடத்தில் மணைமேற் பொருந்தித்–தம்
பிள்ளைகளோடு சிற்றுண வருந்தி
உற்ற வேலையில் கைகள் வருந்தி
உழைக்கலாயினர் அன்பு திருந்தி
(அமைதியில் ஒளி)

## 6

## வானம்பாடி

வானந்தான் பாடிற்றா? வானிலவு பாடிற்றா?
தேனை அருந்திச் சிறுதும்பி மேலேறி
நல்லிசை நல்கிற்றா? நடுங்கும் இடிக்குரலும்
மெல்லிசை பயின்று மிகஇனிமை தந்ததுவோ?

வானூர்தி மேலிருந்து வல்ல தமிழிசைஞன்
தானூதும் வேய்ங்குழலா? யாழா? தனியொருத்தி
வையத்து மக்கள் மகிழக் குரல் எடுத்துப்
பெய்த அமுதா? எனநானே பேசுகையில்.

நீநம்பாய் என்று, நிமிர்ந்தஎன் கண்ணேரில்
வானம்பா டிக்குருவி காட்சி வழங்கியது.
ஏந்தும்வான் வெள்ளத்தில் இன்பவெள்ளம் தான்கலக்க
நீந்துகின்ற வானம் பாடிக்கு நிகழ்த்தினேன்:

உன்றன் மணிச்சிறகும் சின்னக் கருவிழியும்
என்றன் விழிகட்கே எட்டா உயர்வானில்
பாடிக்கொண்டே இருப்பாய்! பச்சைப் பசுந்தமிழர்
தேடிக்கொண்டே யிருப்பார் தென்பாங்கை உன்பால்!

அசையா மகிழ்ச்சி அடைகநீ! உன்றன்
இசை மழையால் இன்புறுவோம் யாம்.

## 7

## மாவலிபுரச் செலவு

(ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் மாலை 4 மணிக்குச் சென்னை, பக்கிங்காம் கால்வாயில் தோணி ஏறி, மறுநாள் காலை 9 மணிக்கு மாவலிபுரம் சேர்ந்தோம், நானும் என் தோழர் பலரும். வழிப்போக்கின் இடைநேரம் இனிமையாய்க் கழிந்தது. எனினும் அப்பெருந்தோணியைக் கரையோரமாக ஒரு கயிறு பற்றி ஒருவன் இழுத்துச் சென்றமையும், மற்றோர் ஆள் பின்புறமாக ஒரு நீளக் கழியால் தள்ளிச் சென்றமையும் இரங்கத்தக்க காட்சி. அதையும், ஆங்குக் கண்ணைக் கவர்ந்த மற்றும் சில காட்சிகளையும் விளக்கி அப்போது எழுதியதாகும் இப்பாட்டு.)

சென்னை யில்ஒரு வாய்க்கால் — புதுச்
சேரி நகர்வரை நீளும்.
அன்னதில் தோணிகள் ஓடும் — எழில்
அன்னம் மிதப்பது போல.
என்னருந் தோழரும் நானும் — ஒன்றில்
ஏறி யமர்ந்திட்ட பின்பு
சென்னையை விட்டது தோணி — பின்பு
தீவிரப் பட்டது வேகம்.

தெற்குத் திசையினை நோக்கி — நாங்கள்
சென்றிடும் போது விசாலச்
சுற்றுப் புறத்தினில் எங்கும் — வெய்யில்
தூவிடும் பொன்னொளி கண்டோம்.
நெற்றி வளைத்து முகத்தை — நட்டு
நீரினை நோக்கியே நாங்கள்
அற்புதங் கண்டு மகிழ்ந்தோம் — புனல்
அத்தனை யும்ஒளி வானம்.

சஞ்சீவி பர்வதச் சாரல் — என்று
சாற்றும் சுவடி திறந்து
சஞ்சார வானிலும் எங்கள் — செவி
தன்னிலும் நற்றமிழ் ஏற்றி
அஞ்சாறு பக்கம் முடித்தார் — மிக்க
ஆசையி னால்ஒரு தோழர்.

செஞ்சுடர் அச்சம யத்தில் – எம்மைச்
செய்தது தான்மிக்க மோசம்.

மிக்க முரண்கொண்ட மாடு – தன்
மூக்குக் கயிற்றையும் மீறிப்
பக்க மிருந்திடும் சேற்றில் – ஓடிப்
பாய்ச்சிடப் பட்டதோர் வண்டிச்
சக்கரம் போலிருள் வானில் – முற்றும்
சாய்ந்தது சூரிய வட்டம்!
புக்க பெருவெளி யெல்லாம் – இருள்
போர்த்தது! போனது தோணி.

வெட்ட வெளியினில் நாங்கள் – எதிர்
வேறொரு காட்சியும் கண்டோம்.
குட்டைப் பனைமரம் ஒன்றும் – எழில்
கூந்தல் சரிந்ததோர் ஈந்தும்
மட்டைக் கரங்கள் பிணைத்தே – இன்ப
வார்த்தைகள் பேசிடும் போது
கட்டுக் கடங்கா நகைப்பைப் – பனை
கலகல வென்றுகொட் டிற்றே.

எட்டிய மட்டும் கிழக்குத் – திசை
ஏற்றிய எங்கள் விழிக்குப்
பட்டது கொஞ்சம் வெளிச்சம் – அன்று
பௌர்ணமி என்பதும் கண்டோம்.
வட்டக் குளிர்மதி எங்கே – என்று
வரவு நோக்கி யிருந்தோம்.
ஒட்டக மேல்அர சன்போல் – மதி
ஓர்மரத் தண்டையில் தோன்றும்.

முத்துச் சுடர்முகம் ஏனோ – இன்று
முற்றும் சிவந்தது சொல்வாய்.
இத்தனை கோபம் நிலாவே – உனக்கு
ஏற்றியதார் என்று கேட்டோம்.
உத்தர மாகஎம் நெஞ்சில் – மதி
ஒன்று புகன்றது கண்டீர்.
சித்தம் துடித்தது நாங்கள் – பின்னால்
திரும்பிப் பார்த்திட்ட போது.

தோணிக் கயிற்றினை ஓர்ஆள் — இரு
தோள்கொண் டிழுப்பபது கண்டோம்.
காணச் சகித்திட வில்லை — அவன்
கரையொடு நடந்திடு கின்றான்.
கோணி முதுகினைக் கையால் — ஒரு
கோல்நுனி யால்மலை போன்ற
தொணியை வேறொரு வன்தான் — தள்ளித்
தொல்லை யுற்றான்பின் புறத்தில்.

இந்த உலகினில் யாரும் — நல்
இன்ப மெனும்கரை யேறல்
சந்தத மும்தொழி லாளர் — புயம்
தரும்து ணையன்றி வேறே
எந்த விதத்திலும் இல்லை — இதை
இருப துதரம் சொன்னோம்.
சிந்தை களித்த நிலாவும் — முத்துச்
சிந்தொளி சிந்தி உயர்ந்தான்.

நீல உடையினைப் போர்த்தே — அங்கு
நின்றிருந்தாள் உயர் விண்ணாள்.
வாலிப வெண்மதி கண்டான் — முத்து
மலையைக் கையி லிழுத்து
நாலு புறத்திலும் சிந்தி — ஒளி
நட்சத் திரக்குப்பை யாக்கிப்
பாலூடல் மறையக் காலை — நாங்கள்
பலிபு ரக்கரை சேர்ந்தோம்.

## 8

## இரு சுடரும் என் வாழ்வும்

### காலை

ஒளியைக் கண்டேன் கடல்மேல் — நல்
உணர்வைக் கண்டேன் நெஞ்சில்!
நெளியக் கண்டேன் பொன்னின் — கதிர்
நிறையக் கண்டேன் உவகை!
துளியைக் கண்டேன் முத்தாய்க் — களி
துள்ளக் கண்டேன் விழியில்!

தெளியக் கண்டேன் வையம் — என்
செயலிற் கண்டேன் அறமே!

மாலை

மறையக் கண்டேன் கதிர்தான் — போய்
மாயக் கண்டேன் சோர்வே!
நிறையக் கண்டேன் விண்மீன் — என்
நினைவிற் கண்டேன் புதுமை!
குறையக் கண்டேன் வெப்பம் — எனைக்
கூடக் கண்டேன் அமைதி!
உறையக் கண்டேன் குளிர்தான் — மேல்
ஓங்கக் கண்டேன் வாழ்வே!

9

## தென்றல்

பொதிகைமலை விட்டெழுந்து சந்த னத்தின்
புதுமணத்தில் தோய்ந்து,பூந் தாது வாரி,
நதிதழுவி அருவியின்தோள் உந்தித் தெற்கு
நன்முத்துக் கடல்அலையின் உச்சி தோறும்
சதிராடி, மூங்கிலிலே பண்எ ழுப்பித்
தாழையெலாம் மடற்கத்தி சுழற்ற வைத்து,
முதிர்தெங்கின் இளம்பாளை முகம்சு வைத்து,
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதி நோக்கி,

அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க, என்றன்
சிந்தைஉடல் அணுஒவ்வொன் றும்சி லிர்க்கச்
செல்வம்ஒன்று வரும்;அதன்பேர் தென்றற் காற்று!
வெந்தயத்துக் கலயத்தைப் பூனை தள்ளி
விட்டதென என்மனைவி அறைக்குப் போனாள்.
அந்தியிலே கொல்லையில்நான் தனித்தி ருந்தேன்;
அங்கிருந்த விசுப்பலகை தனிற்ப டுத்தேன்.

பக்கத்தில் அமர்ந்திருந்து சிரித்துப் பேசிப்
பழந்தமிழின் சாற்றாலே காதல் சேர்த்து
மிக்கஅவ சரமாகச் சென்ற பெண்ணாள்
விரைவாக என்னிடத்தில் வருதல் வேண்டும்.

அக்காலம் அறைக்குவந்த பூனை யின்மேல்
அடங்காத கோபமுற்றேன் பிறநே ரத்தில்
பக்காப்பூ னைநூறு, பொருளை யெல்லாம்
பாழாக்கி னாலும்அதில் கவலை கொள்ளேன்.

வாழ்க்கைமலர் சொரிகின்ற இன்பத் தேனை
மனிதனது தனிமையினால் அடைதல் இல்லை;
சூழ்ந்ததுணை பிரிவதெனில் இரண்டு நெஞ்சும்
தொல்லையுறு வகைஇருத்தல் வேண்டும் அங்கே
வீழ்ந்துகிடந் திட்டஎனைத் "தனிமை", "அந்தி"
இவைஇரண்டும் நச்சுலகில் தூக்கித் தள்ளப்
பாழான அவளுடலின் குளிர்ச்சி, மென்மை,
மணம்இவற்றைப் பருகுவதே நினைவா யிற்று.

தெரியாமல் பின்புறமாய் வந்த பெண்ணாள்,
சிலிர்த்திடவே எனைநெருங்கிப் படுத்தாள் போலும்,
சரியாத குழல்சரிய லானாள் போலும்,
தடவினாள் போலும்,எனைத் தன்க ரத்தால்!
புரியாத இன்பத்தைப் புரிந்தாள் போலும்!
புரியட்டும் எனஇருந்தேன் எதிரில் ஓர்பெண்
பிரிவுக்கு வருந்தினே னென்றாள் ஓகோ!
பேசுமிவள் மனைவி; மற் றொருத்தி தென்றல்!

# காதல்

## 10

## தொழுதெழுவாள்

உண்டனன் உலவி னன்பின்
உள்ளறை இட்ட கட்டில்
அண்டையில் நின்ற வண்ணம்
என்வர வறிவா னாகி,
மண்டிடும் காதற் கண்ணான்
வாயிலில் நின்றி ருந்தான்!
உண்டேன்.என் மாமி என்னை
உறங்கப்போ என்று சொன்னாள்.

அறைவாயி லுட்பு குந்தேன்
அத்தான்,தன் கையால் அள்ளி

நிறைவாயின் அமுது கேட்டுக்
கனிஇதழ் நெடிது றிஞ்சி
மறைவாக்கிக் கதவை, என்னை
மணிவிளக் கொளியிற் கண்டு
நறுமலர்ப் பஞ்ச ணைமேல்
நலியாதுட் கார வைத்தான்.

கமழ்தேய்வு[1] பூசி வேண்டிக்
கனியோடு பாலும் ஊட்டி
அமைவுற என்கால் தொட்டே
அவனுடை யால்து டைத்தே
தமிழ், அன்பு சேர்த்துப் பேசித்
தலையணை சாய்த்துச் சாய்ந்தே
இமையாது நோக்கி நோக்கி
எழில்நுதல் வியர்வை போக்கி,

தென்றலும் போதா தென்று
சிவிறி[2] கைக் கொண்டு வீசி
அன்றிராப் பொழுதை இன்பம்
அறாப்பொழு தாக்கி என்னை
நன்றுறத் துயிலிற் சேர்த்தான்

....... ....... ......
நவிலுவேன் கேட்பாய் தோழி:

கண்மூக்குக் காது வாய்மெய்
இன்பத்திற் கவிழ்ப்பான். மற்றும்
பெண்பெற்ற தாயும் போல்வான்.
பெரும்பணி எனக்கி ழைப்பான்.
வண்மையால் கால்து டைப்பான்.
மறுப்பினும் கேட்பா னில்லை.
உண்மையில் நான்அ வன்பால்
உயர்மதிப் புடையேன் தோழி.

மதிப்பிலாள் என்று நெஞ்சம்
அன்புளான் வருந்து வானேல்,

1. தேய்வு – சந்தனம் 2. சிவிறி – விசிறி

மதிகுன்றும் உயிர்போன் றாற்கு;
மறம்[1] குன்றும்; செங்கோல் ஓச்சும்
அதிராத்தோள் அதிர லாகும்;
அன்புறும் குடிகள் வாழ்வின்
நிதி குன்றும்; மன்னன் கையில்
மறைகுன்ற நேரும் அன்றோ?

நிலந்தொழேன் நீர்தொ ழேன்விண்
வளிதொழேன் எரிதொ ழேன்நான்
அலங்கல்சேர் மார்பன் என்றன்
அன்பனைத் தொழுவ தன்றி!
இலங்கிழைத் தோழி கேள்! பின்
இரவுபோ யிற்றே. கோழி,
புலர்ந்தது பொழுதென் றோதப்
பூத்ததென் கண்ண ரும்பு.

உயிர்போன்றான் துயில்க ளைந்தான்;
ஒளிமுகம் குறுந கைப்புப்
பயின்றது. பரந்த மார்பில்
பன்மலர்த் தாரும் கண்டேன்.
வெயில்மணித் தோடும் காதும்
புதியதோர் வியப்பைச் செய்ய
இயங்கிடும் உயிரன் னோனை
இருகையில் தொழுதெ ழுந்தேன்.

அழைத்தனர் எதிர்கொண் டெம்மை
அணிஇசை பாடி வாழ்த்தி.
இழைத்திடு மன்று நோக்கி
ஏகினோம். குடிகள் அங்கே
"ஒழித்தது வறுமை அன்னாய்
உதவுக" என்று நைந்தார்.
"பிழைத்தது மழை[2] என் அத்தான்
பெய்" என்றேன்,குடிகட் கெல்லாம்.

---

1. மறம் – வீரம் 2. பிழைத்தது மழை – மழை பெய்யவில்லை. மழைத் தது – மழைபோல் செந்நெல் தந்தது 4. மழைக்கை – கொடுக்குமியல் புள்ள மன்னன் கை.

மழைத்தது[3] மழைக்கை[4] செந்நெல்
வண்டிகள் நடந்த யாண்டும்.

## 11
## சொல்லும் செயலும்

சொல்வதென்றால் வெட்கமடி தோழி — சொல்லச்
சொல்லுகின்றாய் என்துணைவன்
சொன்னதையும் செய்ததையும் சொல்வதென்றால்...

முல்லைவிலை என்ன என்றான்
இல்லைஎன்று நான்சிரித்தேன்
பல்லைஇதோ என்று காட்டிப்
பத்துமுத்தம் வைத்து நின்றான். சொல்வதென்றால்...

பின்னலைப்பின்னே கரும்பாம்பென்றான் — உடன்
பேதைதுடித்தேன் அணைத்துநின்றான்
கன்னல்என்றான் கனியிதழைக்
காதல்மருந் தென்றுதின்றான். சொல்வதென்றால்...

நிறையிருட்டில் ஒருபுதிரைப் போட்டான்;
நிலவெறிப்ப தென்னவென்று கேட்டான்.
குறைமதியும் இல்லைஎன்றேன்.
குளிர்முகத்தில் முகம்அணைத்தான். சொல்வதென்றால்...

## 12
## இருவர் ஒற்றுமை

எனக்கும் உன்மேல் — விருப்பம் — இங்
குனக்கும் என்மேல் விருப்பம் அத்தான்
எனக்கும் உன்மேல்...

எனக்கு நீதுணை அன்றோ — இங்
குனக்கு நான்துணை அன்றோ — அத்தான்
எனக்கும் உன்மேல்...

இனிக்கும் என்செயல் உனக்கும் — இங்
கெனக்கும் உன் செயல் இனிக்கும்
தனித்தல் உனக்கும் எனக்கும் — நொடி
நினைப்பின் வருத்தம் மனத்தில் — அத்தான்
எனக்கும் உன்மேல்...

விழி தனிலுன தழகே — என்
அழ கிலுனது விழியே
தொழுத பிறகுன் தழுவல் — நான்
தழுவிப் பிறகுன் தொழுதல் — அத்தான்
எனக்கும் உன்மேல்...

நீ உடல்! உயிர் நானே — நாம்
நிறை மணமலர் தேனே
ஓய்விலை நும தன்பும் — இங்கு
ஒழியவிலை பே ரின்பம் — அத்தான்
எனக்கும் உன்மேல்...

## 13

## பந்துபட்ட தோள்

கட்டுடலிற் சட்டை மாட்டி — விட்டுக்
கத்தரித்த முடி சீவிப்
பட்டுச் சிறாய்இடை அணிந்தே — கையில்
பந்தடி கோலினை ஏந்திச்
சிட்டுப் பறந்தது போலே — எனை
விட்டுப் பிரிந்தனர் தோழி!
ஒட்டுற வற்றிட வில்லை — எனில்
உயிர்து டித்திட லானேன்.

வடக்குத் தெருவெளி தன்னில் — அவர்
மற்றுள தோழர்க ளோடும்
எடுத்ததன் பந்தடி கோலால் — பந்தை
எதிர்த்தடித் தேவிளை யாடிக்
கடத்திடும் ஒவ்வொரு நொடியும் — சாக்
காட்டின் துறைப்படி அன்றோ
கொடுப்பதைப் பார்மிகத் துன்பம் — இக்
குளிர்நறுந் தென்றலும் என்றாள்.

"வளர்ப்பு மயில்களின் ஆடல் — தோட்ட
மரங்கள், மலர்க்கிளைக் கூட்டம்.
கிளிக்குப் பழந்தரும் கொடிகள் — தென்னங்
கீற்று நடுக்குலைக் காய்கள்
அளித்த எழில்கண் டிருந்தாய் — உன்
அருகினில் இன்பவெள் ளத்தில்

குளிர்ந்த இரண்டு புறாக்கள் — காதல்
கொணர்ந்தன உன்றன் நினைவில்"

தோழி இவ்வா றுரைக்குங்கால் — அந்தத்
தோகையின் காதலன் வந்தான்.
"நாழிகை ஆவதன் முன்னே — நீவிர்
நண்ணியதென் இங்கே: என்றாள்.
"தாழ்குழலே! அந்தப் பந்து — கைக்குத்
தப்பிஎன் தோளினைத் தாக்கி
வீழ்ந்தது; வந்ததுன் இன்ப
மேனி நினை" வென்று சொன்னான்.

## 14

## தன்மான உலகு

என்னை அத்தான் என்ற ழைத்தாள்.
பொன்நிறை வண்டியொடு போந்து பல்லோர்
பெற்றோர் காலைப் பெரிது வணங்கி
நற்றாலி கட்ட நங்கையைக் கொடீர்என்று
வேண்டிட, அவரும் மெல்லிக்குச் சொல்லிடத்
தூண்டிற் புழுப்போல் துடித்து மடக்கொடி
"தன்மா னத்து மாப்பெரும் தகைக்குநான்
என்மா னத்தை ஈவேன்" என்று
மறுத்து, நான்வரும் வரைபொறுத் திருந்தே
சிறுத்த இடுப்புத் திடுக்கிட நடந்தே
என்வீடு கண்டு தன்பாடு கூறி
உண்ணாப் போதில் உதவுவெண் சோறுபோல்
வெண்ணகை காட்டிச் செவ்விதழ் விரித்தே
என்னை அத்தான் என்ற ழைத்தாள்.

என்னை அத்தான் என்ற ழைத்தாள்
"ஏன்!" எனில் அதட்டலென் றெண்ணு வாளோ!
"ஏனடி" என்றால் இல்லைஅன் பென்னுமோ!
"ஏனடி என்றன் இன்னுயிரே" எனில்
பொய்யெனக் கருதிப் போய்விடு வாளோ?
என்று கருதி இறுதியில் நானே
"காத்திருக் கின்றேன், கட்டழ கே"என

உண்மை கூறினேன் உவப்ப டைந்தாள்.
ஒருநொடிப் போதில் திருமணம் நடந்ததே.

என்னை அத்தான் என் றழைத்தாள்.
காத்திருப்பது கழறினேன். உவந்தாள்,
ஒரு நொடிக் கப்புறம் மீண்டும்
திருமணம்! நாடொறும் திருமணம் நடந்ததே.

## 15

## மெய்யன்பு

மலடிஎன்றேன், போஎன்றேன், இங்கி ருந்தால்
மாய்த்திடுவேன் என்றுரைத்தேன். மங்கை நல்லாள்
கலகலென நீருகுத்த கண்ணீ ரோடும்,
கணகணெனத் தணல்பொங்கும் நெஞ்சத் தோடும்,
விலகினள்! விலகினவே சிலம்பின் பாட்டும்!
விண்ணிரங்கும் அழுகுரலோ இருட்டை நீந்தக்
கொலைக்கஞ்சாத் திருடரஞ்சும் காடு சென்றாள்.
கொள்ளாத துன்பத்தால் அங்கோர் பக்கம்,

உட்கார்ந்தாள், இடைஒடிந்தாள், சாய்ந்து விட்டாள்.
உயிருண்டா? இல்லையா? யாரே கண்டார்!
இட்டலிக்கும் சுவைமிளகாய்ப் பொடிக்கும் நல்ல
எண்ணெய்க்கும் நானென்ன செய்வேன் இங்கே?
கட்டவிழ்த்த கொழுந்திலையைக் கழுவிச் சேர்த்துக்
காம்பகற்றி வடித்திடுசுண் ணாம்பு கூட்டி
வெட்டிவைத்த பாக்குத்தூள் இந்தா என்று
வெண்முல்லைச் சிரிப்போடு கண்ணாற் கொல்லும்

தெள்ளமுதம் கடைத்தெருவில் விற்ப துண்டோ?
தேடிச்சென் றேன்வானம் பாடி தன்னைச்
'சொள்ளொழுகிப் போகுதடி என்வாய் — தேனைச்
சொட்டுகின்ற இதழாளே; பிழைபொ றுப்பாய்;
பிள்ளைபெற வேண்டாமே. உனைநான் பெற்றால்
பேறெல்லாம் பெற்றவனே ஆவேன்' என்றே
அள்ளிவிடத் தாவினேன் அவளை! என்னை
அவள்சொன்னாள் "அகல்வாய் நீ அகல்வாய்" என்றே.

'மனைவிக்கும் கணவனுக்கும் இடையில் ஏதோ
மனக்கசப்பு வரல்இயற்கை. தினையை நீதான்

பனையாக்கி, நம்உயர்ந்த வாழ்வின் பத்தைப்
பாழாக்க எண்ணுவதா? எழுந்தி' ரென்றேன்.
எனைநோக்கிச் சொல்லலுற்றாள், 'நமக்கு மக்கள்
இல்லைஎனில் உலகமக்கள் நமக்கு மக்கள்
எனநோக்கும் பேரறிவோ உன்பால் இல்லை;
எனக்கும்இனி உயிரில்லை என்றாள்' செத்தாள்.

திடுக்கென்று கண்விழித்தேன் என்தோள் மீது
செங்காந்தள் மலர்போலும் அவள்கை கண்டேன்
அடுத்தடுத்துப் பத்துமுறை தொட்டுப் பார்த்தேன்
அடிமூக்கில் மூச்சருவி பெருகக் கண்டேன்
படுக்கையிலே பொற்புதையல் கண்ட தைப்போல்
பாவையினை உயிரோடு கண்ணாற் கண்டேன்.
சடக்கென்று நானென்னைத் தொட்டுப் பார்த்தேன்
சாகாத நிலைகண்டேன் என்னி டத்தே.

## 16

## பெற்றோர் இன்பம்

கூடத்து நடுவில் ஆடும் ஊஞ்சலில்
சோடித்து வைத்த துணைப்பொற் சிலைகள்போல்
துணைவனும் அன்புகொள் துணைவியும் இருந்தனர்!
உணவு முடிந்ததால், உடையவள் கணவனுக்குக்
களிமயில் கழுத்தின் ஒளிநிகர் துளிரும்,
சுண்ணமும், பாக்குத் தூளும், கமழும்
வண்ணம் மடித்து மலர்க்கை ஏந்தினாள்.
துணைவன் அதனை மணிவிளக் கெதிரில்
மாணிக் கத்தை வைத்ததுபோல் உதடு
சிவக்கச் சிவக்கத் தின்றுகொண் டிருந்தான்.
ஆயினும் அவன்உளம் அல்லலிற் கிடந்தது.

"கேட்டான் நண்பன் சீட்டு நாட்டின்றி;
நீட்டினேன் தொகை! நீட்டினான் கம்பி;
எண்ணூற் றைம்பது வெண்பொற் காசுகள்
மண்ணா யினஎன் கண்ணே" என்றான்.
தலைவன் இதனைச் சாற்றி முடிக்குமுன்
ஏகா லிஅவன் எதிரில் வந்து
கூகூ என்று குழறினான்; அழுதான்.

உழைத்துச் சிவந்ததன் உள்ளங் கைகள்
முழுக்க அவனது முகத்தை மறைத்தன.
மலைநிகர் மார்பில் அலைநிகர் கண்ணீர்
அருவிபோல் இழிந்தது. "தெரிவி அழாதே
தெரிவி" என்று செப்பினான் தலைவன்.

"நூற்றிரண் டுருப்படி நூல்சிதை யாமல்
ஆற்றில் வெளுத்துக் காற்றில் உலர்த்திப்
பெட்டி போட்டுக் கட்டி வைத்தேன்.
பட்டா ளத்தார் சட்டையும் குட்டையும்
உடன்இ ருந்தன. விடிந்தது பார்த்தேன்.
உடல்நடுங் கிற்றே. ஒன்றும் இல்லை"
என்று கூறினான் ஏழை ஏகாலி.

அல்லல் மலிந்த அவ்வி டத்தில்,
வீட்டின் உட்புறந்து விளைந்த தான
இனிய யாழிசை கனிச்சாறு போலத்
தலைவன் தலைவியைத் தழுவலா யிற்று.

"நம்அரும் பெண்ணும் நல்லியும் உள்ளே
கும்மா ளமிடும் கொள்ளையோ" என்று
தலைவன் கேட்டான். தலைவி "ஆம்" என்று
விசையாய் எழுந்து வீட்டினுட் சென்றே
இசையில் மூழ்கிய இருபெண் களையும்
வருந்தப் பேசி வண்தமிழ் இசையை
அருந்தா திருக்க ஆணை போட்டாள்.

தலைவன்பால் வந்து தலைவி குந்தினாள்.
மகளொடு வீணை வாசித் திருந்த
நாலாவது வீட்டு நல்லி எழுந்து
கூடத்துத் தலைவர் கொலுவை அடைந்தாள்.
"என்ன சேதி?" என்றான் தலைவன்.
நல்லி ஓர்புதுமை நவில லுற்றாள்.

"கடலின் அலைகள் தொடர்வது போல
மக்கள், சந்தைக்கு வந்துசேர்ந் தார்கள்,
ஆடவர் பற்பலர் அழகுப் போட்டி
போடுவார் போலப் புகுந்தனர் அங்கே!
என்விழி அங்கொரு பொன்மலர் நோக்கி
விரைந்தது. பின்அது மீள வில்லை.

பின்னர் அவன்விழி என்னைக் கொன்றது;
என்னுளம் அவனுளம் இரண்டும் பின்னின,
நானும் அவனும் தேனும் சுவையும்
ஆனோம் — இவைகள் அகத்தில் நேர்ந்தவை.

மறுநாள் நிலவு வந்தது கண்டு
நல்லிக் காகநான்,தெருக்கு றட்டில்
காத்திருந் தேன்;அக் காளை வந்தான்.
தேனாள் வீட்டின் 'எண்' தெரிவி என்றான்.
நான்கு — எனும் மொழியை நான்மு டிக்குமுன்
நீயா என்று நெடுந்தோள் தொட்டுப்
பயிலுவ தானான் பதட்டன்; என்றன்
உயிரில் தன்உயிர் உருக்கிச் சேர்த்து
மறைந்தான்" என்று மங்கை என்னிடம்
அறைந்தாள். உம்மிடம் அவள்இதைக் கூற
நாணினாள். ஆதலால் நான்இதைக் கூறினேன்
என்று நல்லி இயம்பும் போதே
இன்னலிற் கிடந்த இருவர் உள்ளமும்
கன்னலின் சாற்றுக் கடலில் மூழ்கின.

"நல்லியே நல்லியே நம்பெண் உன்னிடம்
சொல்லியது இதுவா? நல்லது நல்லது.
பெண்பெற்ற போது பெருமை பெற்றோம்.
வண்ண மேனி வளர வளர,எம்
வாழ்வுக்கு — உரிய வண்மை பெற்றோம்;
ஏழ்ந ரம்புகொள் யாழ்போல் அவள்வாய்
இன்னான் இடத்தில் என்அன் பென்று
சொன்னதால் இன்பம் சூழப் பெற்றோம்.
என்மகள் உள்ளத்தில் இருக்கும் தூயனின்
பொன்னடி தனில்எம் பொருளெலாம் வைத்தும்,
இரந்தும், பெண்ணணை ஏற்றுக் குடித்தனம்
புரிந்திடச் செய்வோம் போ" என் றுரைத்தான்.

தலைவி சாற்றுவாள் தலைவ னிடத்தில்,
"மலைபோற் சுமந்தஎன் வயிற்றில் பிறந்தபெண்
நல்லி யிடத்திற் சொன்னாள். இதனைச்
சொல்லும் போதில்என் செல்வியின் சொற்கள்
முல்லை வீசினவோ! நீல விழிகள்

உலவு மீன்போல் ஒளிவீ சினவோ;
நான்கேட் கும்பேறு பெற்றிலேன்" என்று
மகள்தன் மணாளனைக் குறித்ததில்
இவர்கட்கு இத்தனை இன்பம் வந்ததே!

## 17

## பணமும் மணமும்

அத்தைமகன் முத்தனும் ஆளிமகள் தத்தையும்
ஒத்த உளத்தால் ஒருமித்து—நித்தநித்தம்
பேசிப் பிரிவார்; பிறரறியா மற்கடி
தாசி எழுதியே தாமகிழ்வார்—நேசம்
வளர்ந்து வருகையிலே, மஞ்சினி, தன் மைந்தன்
குளிர்ந்த பெருமாளைக் கூட்டி—உளங்கனிந்தே
ஆளியிடம் வந்தான்; அமர்ந்தான்;பின் பெண்கேட்டான்
ஆளி சிரித்தே அவனிடத்தில் — "கேளண்ணா
தத்தை விதவைப்பெண் சம்மதமா?" என்றுரைத்தான்.
"மெத்த விசேட" மெனச்சொல்லி மஞ்சினிதான்— ஒத்துரைத்தான்.

"சாதியிலே நான்மட்டம் சம்மதமா?" என்றே
ஓதினான் ஆளி. 'ஒருபோதும்—காதில்நான்
மட்டம் உயர்வென்ற வார்த்தையையும் ஏற்பதில்லை
இட்டந்தான்" என்றுரைத்தான் மஞ்சினி.—"கிட்டியே
ஊர்ப்பானை தன்னை உருட்டி உயிர்வாழும்
பார்ப்பானை நீக்கிப் பழிகாரார் — தீர்ப்பான
நையும் சடங்ககற்றி நற்றமிழர் ஒப்பும்மணம்
செய்வாயா?" என்றாளி செப்பினான். — "ஐயோ என்
உத்தேசம் பார்ப்பானைத் தேடேனே! சத்தியமாய்ச்
சொன்னேன்" எனஉரைத்தான் மஞ்சினி. சொன்னதும்
பின்ஆளி சம்மதித்தான் பெண்கொடுக்க; — அந்நேரம்
வந்த தொருதந்தி! வாசித்தான் ஆளிஅதை:

கந்தவேள் பாங்கில்நீர் கட்டிய — சொந்தப்
பணம்இல்லை, பாங்கு முறிந்தது, யாதும்
குணமில்லை, என்றிருத்தல் கண்டு — திணறியே
'வீடும் எனக்கில்லை வெண்ணிலையும் ஒன்றுமில்லை;
ஆடுவீற்றால் ரூபாய்ஓர் ஐந்நூறு — கூடிவரும்
மஞ்சினி யண்ணா மணத்தை நடத்துவோம்

அஞ்சாறு தேதிக் கதிகமாய் – மிஞ்சாமல்
நாளமைப்போம்" என்றந்த ஆளி நவிலவே,
தோளலுத்த மஞ்சினி, "ஆளியண்ணா – கேளிதை
இந்த வருடத்தில் நல்லநாள் ஏதுமில்லை
சிந்திப்போம் பின்" என்று செப்பினான் – "எந்த
வருடத்தி லே? எந்த வாரத்தில்? எந்தத்
தெருவில்? திருமணம் என்ற – ஒருசொல்
நிச்சயமாய்ச் சொல்லண்ணா நீஎன்றான் ஆளிதான்!
பச்சோந்தி மஞ்சினி பாடலுற்றான்: – "பச்சையாய்த்
தாலி யறுத்தவளைத் தாலிகட்டி னால்ஊரார்
கேலிபண்ண மாட்டாரா கேளண்ணா மேலும்
சாதியிலே மட்டமென்று சாற்றுகின்றாய். அம்மட்டோ
வேதியனை நீக்கிடவும் வேண்டுமென் றாய் – ஏதும்
முடியாதே" என்று முடித்தெழுந்து சென்றான்.
படியேறி நின்றமெய்க் காதல் – துடிதுடிக்கும்
முத்தன் அங்குவந்தான். "முகூர்த்தநாள் நாளைக்கே.
தத்தையை நீமணக்கச் சம்மதமா? – மெத்த
இருந்தசொத்தும் இல்லையப்பா ஏழைநான் நன்றாய்த்
தெரிந்ததா முத்தா? செலவும் – விரிவாக
இல்லை மணந்துகொள்" என்றுரைத்தான் ஆளி! அந்தச்
சொல்லால் துளிர்த்துப்பூத் துக்காய்த்து – நல்ல
கனியாய்க் கனிந்திட்ட முத்தன் உளந்தான்
தனியாய் இராதே – "தடைஏன் – இனி" என்றான்.
முந்திமணம் ஆயிற்றாம். பாங்கு முறியவில்லை.
தந்திவந்து சேர்ந்ததாம் பின்பு!

## 18

## திருமணம்

மாதிவள் இலைஎனில் வாழ்தல் இலைஎனும்
காதல் நெஞ்சக் காந்தமும், நாணத்
திரைக்குட் கிடந்து துடிக்கும் சேயிழை
நெஞ்ச இரும்பும் நெருங்கும்! மணம்பெறும்!

புணர்ச்சி இன்பம் கருதாப் பூவையின்
துணைப்பாடு கருதும் தூயோன், திருமணச்
சட்டத் தாற்பெறத் தக்க நீநிலை

இருப்பினும் அதனை மேற்கொளல் இல்லை.
அஃது திருமணம் அல்ல ஆதலால்!

என்தின வறிந்து தன்செங் காந்தள்
அரும்பு விரற்கிளி அலகு நகத்தால்
நன்று சொறிவாள் என்று கருதி
மணச்சட் டத்தால் மடக்க நினைப்பது
திருந்திவரும் நாட்டுக்குத் தீயஎடுத் துக்காட்டு!
மங்கையர் உலகின் மதிப்புக்குச் சாவுமணி!

மலம்மூ டத்தான் மலர்பறித் தேன்எனில்
குளிர்மலர்ச் சோலை கோவென் றழாதா?

திருமண மின்றிச் செத்தான்அந்தச்
சில்லிட்ட பிணத்துக்குத் திருமணம் செய்ய
மெல்லிய வாழைக் கன்றைவெட் டுவது
புரோகிதன் புரட்டுநூல்! அதனைத்
திராவிடர் உள்ளம் தீண்டவும் நாணுமே!

## 19

## கருத்துரைப் பாட்டு

### தலைவன் கூற்று

(வேந்தனிட்ட வேலையை மேற்கொண்டு செல்லும் தலைவன், தன் தேர்ப் பாகனை நோக்கி, 'இன்று விரைந்து சென்று அரசன் இட்ட வேலையை முடித்து நாளைக்கே தலைவியின் இல்லத்தை அடைய வேண்டும்; தேரை விரைவாக நடத்து' என்று கூறுவது.)

நாமின்று சென்று நாளையே வருவோம்;
வீழும் அருவிபோல் விரைந்துதேர் நடத்துவாய்;
இளம்பிறை போல்அதன் விளக்கொளி உருளை
விண்வீழ் கொள்ளிபோல் விளைநிலம் படியக்
காற்றைப் போலக் கடிது மீள்வோம்;
வளையல் நிறைந்த கையுடை
இளையளை மீண்புற யான்மணந் துவக்கவே.

(குறுந்தொகை 189—ஆம் பாடல். மதுரை ஈழத்துப் பூதன்றேவன் அருளியது.)

## 20

## தலைவி கூற்று

(தலைவனை நினைத்துத் தான் துயிலா திருத்தலைத் தோழிக்குத் தலைவி கூறியது.)

ஆர்ப்புறும் இடிசேர் கார்ப்பரு வத்துக்
கொல்லையின் 'மணந்த முல்லைக் கொடியின்
சிரிப்பென அரும்பு விரிக்கும் நாடனை
எண்ணித் துயில்நீங் கியஎன்
கண்கள் இரண்டையும் காண்பாய் தோழியே!

(குறுந்தொகை 186—ஆம் பாடல். ஒக்கூர் மாசாத்தி அருளியது.)

## 21

## தோழி கூற்று

(தலைவன், தலைவியை மணம் புரியாமல் நெடு நாள் பழகி, ஒருநாள் வேலிப்புறத்திலே வந்து நிற்கிறான்! அவன் காதில் விழும்படி, தலைவியை நோக்கிக் கூறுகிறாள் தோழி, "தலைவன் நட்பினால் உன் தோள் வாடினாலும் உன் அன்பை அது குறைத்து விடவில்லை" என்று.)

மிளகு நீள்கொடி வளர்மலைப் பாங்கில்
இரவில் முழங்கிக் கருமுகில் பொழிய,
ஆண்குரங்கு தாவிய சேண்கிளைப் பலாப்பழம்
அருவியால் ஊர்த்துறை வரும்எழிற் குன்ற
நாடனது நட்புநின் தோளை
வாடச் செய்யினும் அன்பைமாய்க் காதே!

## 22

## கதவு பேசுமா?

காதல் துரத்தக் கடிதுவந்த வேல்முருகன்,
ஏதும் உரையாமல் இருவிரலை வீட்டுத்
தெருக்கதவில் ஊன்றினான் "திறந்தேன்" என்றோர் சொல்
வரக்கேட்டான். 'ஆஆ மரக்கதவும் பேசுமா?

என்ன புதுமை' எனஏங்க, மறுநொடியில்
சின்னக் கதவு திறந்த ஒலியோடு
தன்னருமைக் காதலியின் தாவுமலர்க் கைநுகர்ந்தான்!
புன்முறுவல் கண்டுள்ளம் பூரித்தான், "என்னேடி

தட்டுமுன்பு தாழ்திறந்து விட்டாயே" என்றுரைத்தான்.
விட்டுப் பிரியாதார் மேவும்ஒரு பெண்நான்
பிரிந்தார் வரும்வரைக்கும் பேதை, தெருவில்
கருமரத்தாற் செய்த கதவு.

# பாரதி

## 23

## புதுநெறி காட்டிய புலவன்

தூயதமிழ் நாட்டுத் தோழியீர், தோழரே!
வாயார்ந் துங்கட்கு வணக்கம் சொன்னேன்!
வண்மைசேர் திருச்சி வானொலி நிலையம்
இந்நாள் ஐந்தாம் எழிற்கவி யரங்கிற்
கென்னைத் தலைமை ஏற்கும் வண்ணம்
செய்தமைக் குநன்றி செலுத்து கின்றேன்.

உய்வகை காட்டும் உயர்தமி ழுக்குப்
புதுநெறி காட்டிய புலவன் பாரதி
நன்னாள் விழாவினை நானிலம் பரப்பும்
வானொலி நிலையம் வாழ்கென வாழ்த்தினேன்!
இக்கவி யரங்கு மிக்கு யர்ந்ததாம்
எக்கா ரணத்தால்? என்பீ ராயின்,
ஊர்ஒன் றாகி உணர்வொன் றாகி

நேர்ஒன்று பட்டு நெடுநாள் பழகிய
இருவ ரிற்சுப் பிரமணிய னொன்று
சொற்பா ரதியைச் சோம சுந்தர
நற்பா ரதிபுகழ்ந்து சொற்பெருக் காற்றுவார்
அன்றியும் பாரதி அன்பர் பல்லோர்
இன்றவன் கவிதை எழிலினைக் கூறுவார்.

இங்குத் தலைமை ஏற்ற நானும்
திங்களைக் கண்ணிலான் சிறப்புறுத் தல்போல்
பாரதிப் புலவனைப் பற்றிச் சிற்சில
கூறுவேன், முடிவுரை கூறுவேன் பின்பே:—
கொலைமலிந்த நாளில் கொல்லா நோன்பு
நிலைபெற வேண்டி நெடுந்தவம் புரிந்தநம்
தாயகம் சமண்மதம் தனைப்பெற்ற தன்றோ?

முத்தியோ சிலரின் சொத்தென இருக்கையில்
இத்தமிழ் நாடுதன் இருந்தவப் பயனாய்
இராமா னுசனை ஈன்ற தன்றோ?
இந்நாடு வடகலை ஏன்என எண்ணித்
தென்கலை ஈன்று திகழ்ந்த தன்றோ?
துருக்கர் கிறித்தவர் சூழ்இந் துக்களென்
றிருப்பவர் தமிழரே என்ப துணராது
சச்சரவு பட்ட தண்டமிழ் நாடு,
மெச்சவும் காட்டுவோன் வேண்டுமென் றெண்ணி
இராம லிங்கனை ஈன்ற தன்றோ?
மக்கள் தொகுதி எக்குறை யாலே
மிக்க துன்பம் மேவு கின்றதோ
அக்குறை தீர்க்கும் ஆற்றல்வாய்ந் தோனைச்
சிக்கென ஈன்று சீர்பெறல் இயற்கையாம்.
ஜாரின் கொடுமை தாங்கா உருசியம்
ஏருற லெனினை ஈன்றே தீரும்!
செல்வர் சில்லோர் நல்வாழ் வுக்கே
எல்லா மக்களும் என்ற பிரான்சில்
குடிகள் குடிகட் கெனக்கவி குவிக்க
விக்டர் யூகோ மேவினான் அன்றோ?
தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமைதிற வாமல் இருந்த நிலையில்
தமிழகம், தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்.
பைந்த மிழ்த்தேர்ப் பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு;
நீடு துயில்நீக்கப் பாடி வந்தநிலா;
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன். புதிய
அறம்பாட வந்த அறிஞன். நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்;

அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்;
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்.
தமிழால், பாரதி தகுதி பெற்றதும்
தமிழ், பாரதியால் தகுதி பெற்றதும்
எவ்வா றென்பதை எடுத்துரைக் கின்றேன்:
கடவுளைக் குறிப்பதே கவிதை என்றும்
பிறபொருள் குறித்துப் பேசேல் என்றும்
கடவுளைக் குறிக்குமக் கவிதையும் பொருள்விளங்
கிடஎழு துவதும் ஏற்கா தென்றும்
பொய்ம்மதம் பிறிதெனப் புளுகுவீர் என்றும்
கொந்தும் தன்சாதிக் குண்டு சட்டிதான்
இந்த உலகமென் றெழுதுக என்றும்
பழமை அனைத்தையும் பற்றுக என்றும்
புதுமை அனைத்தையும் புதைப்பீர் என்றும்
கொள்ளுமிவ் வுலகம் கூத்தாடி மீசைபோல்
எள்ளத் தனைநிலை இலதா தென்றும்
எழிலுறு பெண்கள்பால் இன்புறும் போதும்
அழிவுபெண் ணால்என் றறைக என்றும்
கலம்பகம் பார்த்தொரு கலம்ப கத்தையும்
அந்தாதி பார்த்தோர் அந்தாதி தனையும்
மாலை பார்த்தொரு மாலை தன்னையும்
காவியம் பார்த்தொரு காவியந் தன்னையும்
வரைந்து சாற்றுக்கவி திரிந்து பெற்று
விரைந்து தன்பேரை மேலே எழுதி
இருநூறு சுவடி அருமையாய் அச்சிட்
டொருநூற் றாண்டில் ஒன்றிரண்டு பரப்பி
வருவதே புலமை வழக்கா றென்றும்
இன்றைய தேவையை எழுதேல் என்றும்
முன்னாள் நிலையிலே முட்டுக என்றும்
வழக்கா றொழிந்ததை வைத்தெழு தித்தான்
பிழைக்கும் நிலைமை பெறலாம் என்றும்
புதுச்சொல் புதுநடை போற்றேல் என்றும்
நந்தமிழ்ப் புலவர் நவின்றனர் நாளும்!
அந்தப் படியே அவரும் ஒழுகினர்;
தமிழனை உன்மொழி சாற்றெனக் கேட்டால்
தமிழ்மொழி என்று சாற்றவும் அறியா

இருள்நிலை யடைந்திருந் திட்டதின் பத்தமிழ்!
செய்யுள் ஏட்டைத் திரும்பியும் பார்த்தல்
செய்யா நிலையைச் சேர்ந்தது தீந்தமிழ்.
விழுந்தார் விழித்தே எழுந்தார் எனஅவன்
மொழிந்த பாங்கு மொழியக் கேளீர்!
"வில்லினை யெடடா — கையில்
வில்லினை எடடா — அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்திசெய் திடடா"
என்று கூறி, இருக்கும் பகையைப்
பகைத் தெழும்படி பகர லானான்.
"பாருக்குள்ளே நல்ல நாடு — இந்தப் பாரதாநாடு"
என்பது போன்ற எழிலும் உணர்வும்
இந்நாட்டில் அன்பும் ஏற்றப் பாடினான்!
இந்நாடு மிகவும் தொன்மை யானது
என்பதைப் பாரதி இயம்புதல் கேட்பீர்.
"தொன்று நிகழ்ந்த தனைத்து முணாந்திடு
சூழ்கலை வாணர்களும் — இவள்என்று பிறந்தவள்
என்றுணராத இயல்பினளா மெங்கள் தாய்"
மக்கள் கணக்கும் வழங்கும் மொழியும்
மிக்குள பண்பையும் விளக்கு கின்ற
கற்பனைத் திறத்தைக் காணுவீர்:
"முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் — அவள்
செப்பும் மொழிபதி னெட்டுடையாள் — எனிற்
சிந்தனை யொன்றுடையாள்".
இந்நாட் டின்தெற் கெல்லை இயம்புவான்:
"நீலத் திரைக் கடல் ஓரத்திலே — நின்று
நித்தம் தவம்செய் குமரி யெல்லை"
கற்பனைக் கிலக்கியம் காட்டி விட்டான்!
சுதந்திர ஆர்வம் முதிர்ந்திடு மாறு
மக்க ளுக்கவன் வழங்குதல் கேட்பீர்:
"இதந்தரு மனையி னீங்கி இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதம்திரு இரண்டு மாறிப் பழிமிகுந் திழிவுற் றாலும்
விதம்தரு கோடிஇன்னல் விளைத்தெனை யழித்திட் டாலும்
சுதந்திர தேவி நின்னைத் தொழுதிடல் மறக்கி லேனே."
பாரதி பெரியஉள்ளம் பார்த்திடு வீர்கள்:

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு — நாம்
எல்லோரும் சமமென்ப துறுதி யாச்சு"
"விடுதலை! விடுதலை! விடுதலை!"
"மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே" — என்றறைந்தான் அன்றோ?
பன்னீ ராயிரம் பாடிய கம்பனும்
இப்பொது மக்கள்பால் இன்தமிழ் உணர்வை
எழுப்பிய துண்டோ? இல்லவே இல்லை.
செந்தமிழ் நாட்டைத் தேனாக்கிக் காட்டுவான்.
"செந்தமிழ் நாடென்னும் போதினிலே — இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே" — என்றான்.
சினம்பொங்கும் ஆண்டவன் செவ்விழி தன்னை
முனம்எங்கும் இல்லாத மொழியா லுரைத்தான்.
"வில்லினை யொத்த புருவம் வளைத்தனை வேலவா — அங்கு
வெற்பு நொறுங்கிப் பொடிப்பொடி யானது
வேலவா" என்று கோலம் புதுக்கினான்.
பெண்உ தட்டையும் கண்ணையும் அழகுறச்
சொல்லி யுள்ளான் சொல்லு கின்றேன்:
"அமுதூற்றினை யொத்த இதழ்களும் — நில
வூறித் ததும்பும் விழிகளும்".
இந்த நாளில் இந்நாட்டு மக்கட்கு
வேண்டும் பண்பு வேண்டும் செயல்களைக்
கொஞ்சமும் பாரதி அஞ்சாது கூறினான்.
"முனைமுகத்து நில்லேல்" — முதியவள் சொல் இது.
"முனையிலே முகத்துநில்" — பாரதி முழக்கிது!
"மீதூண் விரும்பேல்" — மாதுரைத் தாள் இது.
"ஊண்மிக விரும்பு" — என உரைத்தான் பாரதி.
மேலும் கேளீர் — "கோல்கைக் கொண்டுவாழ்"
"குன்றென நிமிர்ந்து நில்", "நன்று கருது"
"நினைப்பது முடியும்", "நெற்றி சுருக்கிடேல்"
எழுத்தில் சிங்க ஏற்றின் குரலைப்
பாய்ச்சு கின்றான் பாரதிக் கவிஞன்!
அன்னோன் கவிதையின் அழகையும் தெளிவையும்
சொன்னால் மக்கள் சுவைக்கும் நிலையையும்

இங்கு முழுதும் எடுத்துக் கூற
இயலா தென்னுரை இதனோடு நிற்கவே.

(அனைத்திந்திய வானொலித் திருச்சி நிலையத்தில்
5–வது கவியரங்கில் தலைமையுரையும், முடிவுரையும்
ஆகக் கூறப்பட்டது. 1946)

## 24

## தேன் கவிகள் தேவை

பொழுது விடியப் புதுவையி லோர்வீட்டில்
விழிமலர்ந்த பாரதியார் காலை வினைமுடித்து
மாடிக்குப் போவார், கடிதங்கள் வந்திருக்கும்
வாடிக்கை யாகவரும் அன்பரெல்லாம் வந்திருப்பார்;
சென்னைத் தினசரியின் சேதி சிலபார்ப்பார்
முன்னாள் அனுப்பிய கட்டுரையும் பாட்டும்
சரியாய்ப் படிந்ததுண்டா இல்லையா என்று
வரிமேல் விரல்வைத்து வாசிப்பார் ஏட்டை.

அதன்மேல் அடுக்கடுக்காய் ஆரவா ரப்பண்!
நதிப்பெருக்கைப் போற்கவிதை நற்பெருக்கின் இன்பஒலி
கிண்டல்கள்! ஓயாச் சிரிப்பைக் கிளறுகின்ற
துண்டு துணுக்குரைகள்! வீரச் சுடர்க்கதைகள்!
என்னென்ன பாட்டுக்கள்! என்னென்ன பேச்சுக்கள்!
பன்னத் தகுவதுண்டோ நாங்கள்பெறும் பாக்கியத்தை?
வாய்திறப்பார் எங்கள் மாக்கவிஞர்; நாங்களெல்லாம்

போய்அச்சப் பேயைப் புதைத்துத் திரும்பிடுவோம்.
தாம்பூலம் தின்பார், தமிழ்ஒன்று சிந்திடுவார்.
காம்பிற் கனிச்சாறாய்க் காதலின் சாற்றைப்
பொழிகின்ற தன்மையால் எம்மைப் புதுக்கி
அழிகின்ற நெஞ்சத்தை அன்பில் நனைத்திடுவார்.
மாடியின்மேல் ஓர்நாள் மணிஎட் டரைஇருக்கும்
கூடிக் கவிச்சுவையைக் கொள்ளையிடக் காத்திருந்தோம்;

பாரதியார் வந்த கடிதம் படித்திருந்தார்.
சீரதிகம் கொண்டதொரு சென்னைத் தினசரியின்
ஆசிரியர் போட்ட கடிதம் அதுவாகும்.
வாசித்தார் ஐயர், மலர்முகத்தில் வாட்டமுற்றார்,
"என்னை வசனமட்டும் நித்தம் எழுதென்று

சென்னைத் தினசரியின் ஆசிரியர் செப்புகின்றார்;
பாட்டெழுத வேண்டாமாம் பார்த்தீரா அன்னவரின்
பாட்டின் பயனறியாப் பான்மையினை" என்றுரைத்தார்.

பாரதியார் உள்ளம் பதைபதைத்துச் 'சோர்வெ'ன்னும்
காரிருளில் கால்வைத்தார் ஊக்கத்தால் மீண்டுவிட்டார்.
"பாட்டின் சுவையறியும் பாக்கியந்தான் என்றடைவார்?"
என்று மொழிந்தார், இரங்கினார், சிந்தித்தார்;
"நன்று மிகநன்று, நான்சலிப்ப தில்லை" என்றார்.
நாட்கள் சிலசெல்ல நம்மருமை நாவலரின்
பாட்டின் சுவையறிவோர் பற்பலபே ராகிவிட்டார்.
ஆங்கிலம் வல்ல சுசின்ஸ்என்னும் ஆங்கிலவர்
"நீங்கள் எழுதி நிரப்பும் சுவைக்கவியை
ஆங்கிலத்தில் ஆக்கி அகிலஅரங் கேற்றுகின்றேன்;
பாங்காய் எனக்குநல்ல பாட்டெழுதித் தாருங்கள்"
என்று வரைந்த கடிதத்தை எங்களிடம்
அன்றளித்தார். எம்மை அபிப்பிரா யம்கேட்டார்,
"வேண்டும் எழுதத்தான் வேண்டும்" என்றோம். பாரதியார்

"வேண்டும்அடி எப்போதும் விடுத லை"என்
றாரம்பஞ் செய்தார்; அரைநொடியில் பாடிவிட்டார்.
ஈரிரண்டு நாளில் இனிமை குறையாமல்
ஆங்கிலத்தில் அந்தக் கவிதான் வெளியாகித்
தீங்கற்ற சென்னைத் தினசரியின் ஆசானின்
கண்ணைக் கவர்ந்து கருத்தில் தமிழ்விளைத்தே
எண்ணூறாண் டாய்க்கவிஞர் தோன்றவில்லை இங்கென்ற
வீ.வீ.எஸ். ஐயர் விருப்பத்தைப் பூர்த்தி செய்து
பாவலராம் பாரதிக்கும் ஊக்கத்தைப் பாய்ச்சியதே!
ஆங்கிலவர், பாரதியார் ஆர்ந்த கவித்தேனை
வாங்கியுண்ணக் கண்டபின்னர் வாயூறிச் சென்னைத்
தினசரியின் ஆசிரியர் "தேவையினித் தேவை,
இனியகவி நீங்கள் எழுதுங்கள்" என்றுரைத்தார்;
தேவையில்லை என்றுமுன் செப்பிட்ட அம்மனிதர்
தேவையுண்டு! தேவையுண்டு! தேன்கவிகள் என்றுரைத்தார்!

"தாயாம் தமிழில் தரும்கவியின் நற்பயனைச்
சேயாம் தமிழன் தெரிந்துகொள்ள வில்லை
அயலார் சுவைகண் டறிவித்தார், பின்னர்

பயன் தெரிந்தார் நம்தமிழர்" என்றுரைத்தார் பாரதியார்.
நல்ல கவியினிமை நம்தமிழர் நாடுநாள்
வெல்ல வருந்திரு நாள்!

## 25

## பாரதி உள்ளம்

சாதி ஒழித்திடல் ஒன்று — நல்ல
தமிழ் வளர்த்தல்மற் றொன்று
பாதியை நாடு மறந்தால் — மற்றப்
பாதி துலங்குவ தில்லை.
சாதி களைந்திட்ட ஏரி — நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே — நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்!

என்றுரைப் பார்என் னிடத்தில் — அந்த
இன்ப உரைகளென் காதில்
இன்றும் மறைந்திட வில்லை — நான்
இன்றும் இருப்பத னாலே!
பன்னும்நம் பாரதி யாரின் — நல்ல
பச்சைஅன் புள்ளத்தி னின்று
நன்று பிறந்தஇப் பேச்சு — நம்
நற்றமிழர்க் கெழில் மூச்சு!

மேலவர் கீழவர் இல்லை — இதை
மேலுக்குச் சொல்லிட வில்லை;
நாலு தெருக்களின் கூட்டில் — மக்கள்
நாலா யிரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர் என்று — சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்.
மேலும் அப்பாரதி சொல்வார் — "சாதி
வேரைப் பொசுக்குங்கள்" என்றே.

செந்தமிழ் நாட்டினிற் பற்றும் — அதன்
சீருக்கு நல்லதோர் தொண்டும்
நிந்தை இலாதவை அன்றோ! — எந்த
நேரமும் பாரதி நெஞ்சம்
கந்தையை எண்ணுவ தில்லை — கையிற்
காசை நினைப்பதும் இல்லை.

செந்தமிழ் வாழிய! வாழி — நல்ல
செந்தமிழ் நாடென்று வாழ்ந்தார்.

## 26

## மகா கவி

[இது அந்நாளில் ஆனந்த விகடனில் "ரா.கி." (கல்கி)யால் பாரதி உலக கவியல்ல என்றும், அவர் பாடலில் வெறுக்கத் தக்கன உள்ளன என்றும் எழுதியதற்கு மறுப்பாக எழுதப்பட்டது.]

பாரதியார் உலககவி! — அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஓருருக் கொருநாட்டுக் குரிய தான
ஓட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர். மற்றும்
வீரர் அவர்! — மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்.

அகத்திலுறும் எண்ணங்கள், உலகின் இன்னல்
அறுபபவைகள்; புதியவைகள். அவற்றை யெல்லாம்
திகழ்பார்க்குப் பாரதியார் எடுத்துச் சொல்வார்
தெளிவாக, அழகாக, உண்மை யாக!
முகத்தினிலே களையிழந்த மக்கள் தம்மை
முனை முகத்தும் சலியாத வீரராகப்
புகுத்துமொழிப் பேச்செல்லாம் பொன்னி யாற்றுப்
புனல்போலத் தொடர்வதுண்டாம் அன்னார் பாட்டில்.

பழையநடை, பழங்கவிதை, பழந்த மிழ்நூல்,
பார்த்தெழுதிப் பாரதியார் உயர்ந்தா ரில்லை;
பொழிந்திடுசெவ் வியஉள்ளம் கவிதை யுள்ளம்
பூண்டிருந்த பாரதியா ராலே இந்நாள்
அழுந்தியிருந் திட்டதமிழ் எழுந்த தென்றே
ஆணையிட்டுச் சொல்லிடுவோம் அன்னை மீதில்!
அழகொளிசேர் பாரதியார் கவிதை தன்னை
அறிந்திலதே புவிஎன்றால் புவிமேற் குற்றம்!

* இது அந்நாளில் ஆனந்த விகடனில் "ரா.கி." (கல்கி)யால் பாரதி உலக கவியல்ல என்றும், அவர் பாடலில் வெறுக்கத் தக்கன உள்ளன என்றும் எழுதியதற்கு மறுப்பாக எழுதப்பட்டது.

கிராமியம்நன் னாகரிகம் பாடி வைத்தார்,
கீர்த்தியுறத் தேசியம் சித்தி ரித்தார்,
சராசரம்சேர் லௌகிகத்தை நன்றாய்ச் சொன்னார்.
தங்குதடை யற்றஉள்ளம்; சமத்துவ உள்ளம்;
இராததென ஒன்றில்லாப் பெரிய உளளம்!
இன்புள்ளம் அன்புள்ளம் அன்னார் உள்ளம்!
தராதலத்துப் பாஷைகளில், அண்ணல் தந்த
தமிழ்ப்பாட்டை மொழிபெயர்த்தால் தெரியும் சேதி!

ஞானரதம் போலொருநூல் எழுது தற்கு
நானிலத்தில் ஆளில்லை; கண்ணன் பாட்டுப்
போல்நவிலக் கற்பனைக்குப் போவ தெங்கே?
புதியநெறிப் பாஞ்சாலி சபதம் போலே
தேனினிப்பில் தருபவர்யார்! மற்றும் இந்நாள்
ஜெயபே ரிகைகொட் டடாஎன் றோதிக்
கூனர்களும் குவலயத்தை அளாவும் வண்ணம்
கொட்டிவைத்த கவிதைதிசை எட்டும் காணோம்!

"பார்ப்பானை ஐயரென்ற கால மும்போச்
சே" யென்ற பாரதியார் பெற்ற கீர்த்தி
போய்ப்பாழும் கிணற்றினிலே விழாதா என்று
பொழுதெல்லாம் தவங்கிடக்கும் கூட்டத் தார்கள்
வேர்ப்பார்கள்; பாரதியார் வேம்பென் பார்கள்;
வீணாக உலககவி அன்றென் பார்கள்.
ஊர்ப்புறத்தில் தமக்கான ஒருவ னைப்போய்
உயர்கவிஞன் என்பார்கள் வஞ்ச கர்கள்.

"சாதிகளே இல்லையடி பாப்பா" என்றார்
"தாழ்ச்சிஉயர்ச் சிகள்சொல்லல் பாவம்" என்றார்.
சோதிக்கின் "சூத்திரற்கோர் நீதி தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறோர் நீதி"
ஓதியதைப் பாரதியார் வெறுத்தார், நாட்டில்
ஒடுக்கப்பட் டார்நிலைக்கு வருந்தி நின்றார்.
பாதிக்கும் படி "பழமை பழமை என்பீர்
பழமைஇருந் திட்டநிலை அறியீர்" என்றார்.

தேசத்தார் நல்லுணர்வு பெறும்பொ ருட்டுச்
சேரியிலே நாள்முழுதும் தங்கி யுண்டார்.

காசுதந்து கடைத்தெருவில் துலுக்கர் விற்கும்
சிற்றுணவு வாங்கி,அதைக் கனிவாய் உண்டார்.
பேசிவந்த வசைபொறுத்தார் நாட்டிற் பல்லோர்
பிறப்பினிலே தாழ்வுயர்வு பேசு கின்ற
மோசத்தை நடக்கையினால், எழுத்தால், பேச்சால்
முரசறைந்தார். இங்கிவற்றால் வறுமை ஏற்றார்.

வையத்து மாகவிஞர் மறைந்து போனார்;
வைதிகர்க்குப் பாரதியார் பகைவ ரேனும்
செய்வதென்ன? மேலுக்குப் புகழ்ந்தே வந்தார்;
சிலநாட்கள் போகட்டும் எனஇ ருந்தார்.
உய்யும்வழி கெடாதிருக்க மெதுவாய் இந்நாள்
உலககவி அல்லஅவர் எனத்தொ டங்கி
ஐயர்கவி தைக்கிழுக்கும் கற்பிக் கின்றார்
அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவார் உண்டோ?

## 27

## செந்தமிழ் நாடு

### (செந்தமிழ் நாடென்னும் போதினிலே என்ற பாடலைப் பாரதி ஏன் பாடினார்?)

தமிழ்நாட்டைப் பற்றித் தமிழ்ப்பாக்கள் தந்தால்
அமைவான பாட்டுக் களிப்போம் பரிசென்று
சான்ற மதுரைத் தமிழ்ச்சங்கத் தார்உரைத்தார்
தேன்போற் கவிஒன்று செப்புகநீர் என்று
பலநண்பர் வந்து பாரதி யாரை
நலமாகக் கேட்டார்; அதற்கு நம்ஐயர்
என்கவிதான் நன்றா யிருந்திடினும் சங்கத்தார்
புன்கவிஎன் றே சொல்லிப் போட்டிடுவார்; போட்டால்தான்
சங்கத்தில் சர்க்கார் தயவிருக்கும்! ஆதலினால்,
உங்கட்கு வேண்டுமெனில் ஓதுகின்றேன் என்றுரைத்தார்!
'அந்தவிதம் ஆகட்டும்' என்றார்கள் நண்பரெல்லாம்.
"செந்தமிழ் நாடென்னும் போதினி லேயின்பத்
தேன்வந்து பாயுது காதினி லே" என்
றழகுத் தமிழ்நாட்டை அப்படியே நெஞ்சால்
எழுதி முடித்தார்! இசையோடு பாடினார்!
காதினிக்கும் நல்ல கருத்தினிக்கும் அஃதிந்நாள்
மேதினியிற் சோதி விளக்கு!

## 28

## திருப்பள்ளி எழுச்சி

### (திருப்பள்ளி எழுச்சி என்ற பாடலைப் பாரதி ஏன் பாடினார்?)

நற்பெரு மார்கழி மாதமோர் காலை
நமதுநற் பாரதி யாரோடு நாங்கள்
பொற்பு மிகும்மடு நீரினில் ஆடிடப்
போகும் வழியினில் நண்பர் ஒருவரைப்
பெற்ற முதுவய தன்னையார் 'ஐயரே,
பீடு தரும் "திருப் பள்ளி யெழுச்சி" தான்
சொற்றிறத் தோடுநீர் பாடித் தரு'கெனத்
தூய்மைக் கவிஞரும் சென்றனர் ஒப்பியே.

நீல மணியிருட் காலை அமைதியில்
நெஞ்சு குளிரும் நெடுமரச் சாலையின்
கோல நடையிற் குதிக்கும் மகிழ்ச்சியால்,
கோரி உடன்வரும் நண்பர்கள் மத்தியில்,
காலை மலரக் கவிதை மலர்ந்தது;
ககன முழுமையும் தேனலை பாய்ந்தது!
ஞானப் "பொழுது புலர்ந்த" தென் றார்ந்த
நல்ல தமிழ்க்கவி நாமடைந் தோமே!

## 29

## நாடக விமர்சனம்

ஒருநாள்நம் பாரதியார் நண்ப ரோடும்
உட்கார்ந்து நாடகம்பார்த் திருந்தார். அங்கே
ஒருமன்னன் விஷமருந்தி மயக்கத் தாலே
உயிர்வாதை அடைகின்ற சமயம், அன்னோன்
இருந்தஇடந் தனிலிருந்தே எழுந்து லாவி
"என்றனுக்கோ ஒருவித மயக்கந் தானே
வருகுதையோ" எனும்பாட்டைப் பாட லானான்!
வாய்பதைத்துப் பாரதியார் கூவு கின்றார்;
மயக்கம்வந் தால்படுத்துக் கொள்ளுவது தானே
வசங்கெட்ட மனிதனுக்குப் பாட்டா என்றார்!
தயங்கிப்பின் சிரித்தார்கள் இருந்தோ ரெல்லாம்
சரிதானே பாரதியார் சொன்ன வார்த்தை?

மயக்கம்வரும் மதுவருந்தி நடிக்க வந்தான்.
மயக்கவிஷம் உண்டதுபோல் நடிப்புக் காட்டும்
முயற்சியிலும் ஈடுபட்டான், தூங்கி விட்டால்
முடிவுநன்றா யிருந்திருக்கும் சிரம மும்போம்!

# திராவிட நாடு

## 30

## இனப்பெயர்

### 1

'இனப்பெயர் என்' என்று பிறன்எனைக் கேட்டால்
மனத்தில் எனக்குச் சொல்லொணா மகிழ்ச்சியாம்.
"நான்தான் திராவிடன்' என்று நவில்கையில்
தேன்தான் நாவெலாம்! வான்தான் என்புகழ்!
'முன்னாள்' என்னும் பன்னெடுங் காலத்தின்
உச்சியில் "திராவிடன்" ஒளிசெய் கின்றான்.
அன்னோன் கால்வழி யாகிய தொடர்கயிற்று
மறுமுனை நான்! என் வாழ்வின் கால்வழி
யாகிய பொன்னிழை அளக்க ஒண்ணா
எதிர்கா லத்தின் கடைசியோ டியைந்தது.

சீர்த்தியால், அறத்தால் செழுமையால், வையப்
போர்த்தி றத்தால் இயற்கை புணைந்த
ஒருயிர் நான்! என் உயிர்இனம் திராவிடம்!
ஆரியன் அல்லேன் என்னும் போதில்
எத்தனை மகிழ்ச்சி! எத்தனை மகிழ்ச்சி!
விரிந்த வரலாற்றுப் பெருமரம் கொண்ட
"திராவிடன்" ஆலின் சிறிய வித்தே!
இந்நாள் வாழ்வுக் கினிதினி தாகிய
பொன்னேர் கருத்துக்கள் பொதிந்துள அதனில்!
உன்இனப் பெயர்தான் என்ன என்று
கேட்கக் கேட்க அதடால் எனக்கு
மீட்டும் மீட்டும் இன்பம் விளைவதாம்.

### 2.

கடந்த காலப் படம் இது.
அடடே வடபெருங் குன்றமும் இல்லை!

அவ்விடம் நீர்ப்பரப்பு — ஆழ்கடல் உள்ளதே!
அப்பெருங் கடல்அலை, அழகிய விந்திய
வெற்பின் வடபுறத்து விளையா டினவே!
மேற்கு — அரபிக்கடல் கிழக்கு வங்கக் கடல்
இல்லை! என்ன வியப்பு இது!
ஆபி ரிக்கமும், ஆத்திரே லியமும்
குமரி ஆறுபாய் குளிர்தென் மதுரையும்
இடையீ டின்றி நெடிது கிடந்த
"தொடித்தோள் வையம்" தோன்றக் கண்டேன்,
அங்குக் கண்டேன்:
தென்மது ரைத்தமி ழின்முதற் கழகம்!
அதன்பாற் கண்டேன்:
ஆன்ற முத்தமிழ் அறிஞர் பல்லோரை.
நான்ஓர் திராவிடன்: நனிமகிழ் வுடையேன்!
தொடித்தோள் வையம் நெடிய வானில்,
உடுக்கல் போற்பல உயர்நா டுகளும்
அவற்றிடைத் திகழும் அழகு முழுமதித்
தென்மா மதுரையும் திகழ்வ தாகப்
பெருஞா லத்தின் இருள்கெடத் தமிழறிவு —
திராவிடர் கொண்டு சேர்க்கின்றாரே.

### 3.

என்னே! என்னே!
வடக்குக் கடல்நீர் தெற்கிற் பாய்ந்ததே!
தொடித்தோள் வையத் தூயநா டுகளில்
சிற்சில வற்றைச் சீறிவிழுங் கிற்றே!
அத்தென் பாங்கினர் அடைந்தனர் இங்கே!
மீண்டும் தெற்கில் ஈண்டிற்று வெள்ளம்!
மற்றும் சிற்சில மண்ணகம் மறைந்தன.
என்னே கொடுமை!
அங்குளார் இங்கு வந்தனர் அலறியே
'தெய்' என்று செப்பும் தீமுதல் ஐந்தில்
நீர்ஒன்று — அடிக்கடி நெடுநிலம் விழுங்கலால்
சிதறி வந்த தென்புலத் தாரை
ஓம்பும்நாள் இடைவிடாது — உளவா யிற்றே!

## 4.

கடற்கீழ்க் கிடந்த வடபெரும் பனிமலை
மேற்றோன் றும்படி மிகுபெருங் கடல்நீர்
தென்பால் ஐயகோ சீறி வந்ததால்
தொடித்தோள் வையமே படிமிசை மறைந்ததே!
இன்று தென்கடலில் இலங்கை முதலா
ஒன்று மில்லை.
மேற்கிடம் அரபிக் கடலும்
கிழக்கிடம் வங்கக் கடலும்
அன்றிவேறில்லை.
வடபெரும் பனிமலை மண்மேற் றோன்ற
அங்கிருந்து விந்தியம்ஆம் குன்றம் மட்டும்
நிலப்பரப் பானது!
திகழ்விந் தியத்தின் தென்னாட்டுத் திராவிடர்
அங்கும் குடிபுகுந் தழகு செய்தனர்.
ஆரியர் கால்நடை அமைய வந்தவர்,
பனிவரை யடுத்த நனிபெரு நிலத்தில்
தங்கினர். தங்கித் தங்கள் வாழ்வையும்
மொழியையும் தமிழால் ஒழுங்கு செய்தனர்.
வடபால் இருந்துதென் குடபால் வந்த
ஆரியர் சிற்சிலர்
குடமலைச் சாரல் அடைந்தார் ஆதலின்
குடமலை தன்னைக் குடமுனி என்றனர்.
ஆரியர் இங்குச் சீரிய தமிழில்
அறிவு பெற்றனர் அதிகா ரத்தின்
விருப்பால் நாடொறும் விளைத்தனர் சூழ்ச்சிகள்
இடைத்தமிழ்க் கழகம் கடைத்தமிழ்க் கழகம்
முதற்பெருங் கழகம் ஆகிய
எவற்றிலும் தம்பெயர் ஏற்றித் தம்மைத்
திராவிட இனத்திற் சேர்ந்தோர் போலக்
காட்ட முயன்றனர் அன்றோ
திராவிடன் நான்! என் பெருமை
இராவிடம் இல்லை மகிழ்ச்சி பெரிதே!

31

# திராவிடன்

## திராவிடன் கடமை

மனவீட்டைத் திறப்பாய் – சாதி
மதக்கத வுடைத்து — மனவீட்டைத்...

இனமான திராவிடர் பண்பின்
எழில்காண உணர்வு விளக்கேற்று — மனவீட்டைத்...

புனைசுருட் டுக்குப்பை — அன்றோ – பழம்
புராண வழக்கங்கள் — யாவும்?
இனிமேலும் விட்டுவைக் — காதே
எடுதுடைப்பத்தை இப் — போதே
தனி உலகை ஆண்டவனை — முன்னாள்
தன்மானம் இழந்திடாதே — இந்நாள் — மனவீட்டைத்...

வடநாடு தென்னாட்டை — வீழ்த்தச் – செய்த
வஞ்சங்கள் சிறிதல்ல — தம்பி
இடைநாளில் மட்டுமா? — சென்ற
இரண்டாயிரத் தாண்டு — பார்த்தார்
விடுவாயடாதன்ன — லத்தை – உன்
விடுதலை திராவிடர் விடுதலையி — லுண்டு — மனவீட்டைத்...

32

## அது முடியாது

கோட்டை நாற்காலி இன்றுண்டு – நாளை
கொண்டுபோய் விடுவான் திராவிடக்காளை.
கோட்டை நாற்காலி...

கேட்டை விளைத்துத் திராவிடர் கொள்கையைக்
கிள்ள நினைப்பது மடமையாம் செய்கை
கோட்டை நாற்காலி...

காட்டை அழிப்பது — கூடும் – அலை
கடலையும் தூர்ப்பது — கூடும்
மேட்டை அகழ்வதும் — கூடும் – விரி
விண்ணை அளப்பதும் — கூடும்

ஏட்டையும் நூலையும் தடுப்பது கூடும் — உரிமை
எண்ணத்தை மாற்றுதல் எப்படிக் கூடும்?
கோட்டை நாற்காலி...

அடக்குமுறை செய்திடல் முடியும் — கொள்கை
அழிக்குமுறை எவ்வாறு முடியும்?
ஒடுக்குசிறை காட்டுதல் முடியும் — உணர்
வொடுக்குதல் எவ்வாறு முடியும்?
திடுக்கிடச் செய்திடும் உன்னை — இத்
திராவிடர் எழுச்சியை மாற்றவா முடியும்?
கோட்டை நாற்காலி...

## 33

## பிரிவு தீது

கேரளம் என்றுபி ரிப்பதுவும் — நாம்
கேடுற, ஆந்திரம் பிய்ப்பதுவும்
சேரும் திராவிடர் சேரா தழித்திடச்
செய்திடும் சூழ்ச்சி அண்ணே — அதைக்
கொய்திட வேண்டும் அண்ணே.

கேரளம் என்னல்தி ராவிடமே — ஒரு
கேடற்ற ஆந்திரம் அவ்வாறே
கேரளம் ஆந்திரம் சேர்ந்த மொழிகள்
திராவிடம் ஆகும் அண்ணே — வேறு
இராதெனல் உண்மை அண்ணே.

செந்தமிழ் கேரளம் ஆந்திரமும் — அவை
சேர்ந்திடும் கன்னடம் என்பதுவும்
நந்தம் திராவிட நாடெனல் அல்லது
வந்தவர்நா டாமோ? — அவை
வடவர்நா டாமோ?

செந்தமிழ் கேரளம் ஆந்திரமும் — அவை
சேர்ந்திடும் கன்னட நன்மொழிகள்
அந்த மிகுந்த திராவிடம் அல்லது
ஆரியச் சொல்லாமோ — அவர்
வேர்வந்தசொல் லாமோ?

## 34

## உணரவில்லை

உணரச் செய்தான் உன்னை – அவன்
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும்
உணரச் செய்தான்...

தணலைத் தொழுவோன் உய்வென் கின்றான் – உனைத்
தணலில் தள்ள வழிபார்க் கின்றான்
உணரச் செய்தான்...

முணுமுணு வென்றே மறைவிற் சென்றே
முட்டாள் முட்டாள் திராவிடன் என்றே
பணிமனை ஆட்சி பட்டம் யாவும்
பார்ப்பா னுக்கே என்றுபு கன்றே
உணரச் செய்தான்...

நானிலம் ஆண்டான் திராவிடன் அந்நாள்
நான்மேல் என்றான் பார்ப்பான் இந்நாள்
ஏனவன் காலில் வீழ்தல் வேண்டும்?
எண்ணில் கோடி மக்கட் குறவே
உணரச் செய்தான்...

அடியை நத்திப் பிழைத்த பார்ப்பான்
ஆளப் பிறந்த தாய்ச்சொல் கின்றான்
துடியாய்த் துடித்தான் உன்றன் ஆட்சி
தூளாய்ச் செய்துனை ஆளாக் கிடவே.
உணரச் செய்தான்...

## 35

## உயிர் பெரிதில்லை

ஒருவன் உள்ள வரையில் – குருதி
ஒரு சொட் டுள்ள வரையில்
ஒருவன் உள்ள வரையில்....

திராவிட நாட்டின் உரிமைக்குப் போரிடச்
சிறிதும் பின்னிடல் இல்லை திராவிடன்
ஒருவன் உள்ள வரையில்...

பெரிது மானம்! உயிர்பெரி தில்லை!
பெற்ற தாயைப் பிறராள விடுவோன்

திராவிடன் அல்லன்! திராவிடன் அல்லன்!
தீமை செய்து பார்க்கட்டும் ஆள்வோர்!
ஒருவன் உள்ள வரையில்...

அடித்தோன் அடிபட நேர்ந்ததிவ் வுலகில்
ஆள வந்தார் ஆட்படல் உண்டு;
நெடிய திராவிடம் எங்களின் உடைமை
நிறைவுணர் வுண்டெங்கள் பட்டாள முண்டு!
ஒருவன் உள்ள வரையில்...

வஞ்ச நரிகள் புலிக்காட்டை ஆளுமோ?
வடக்கர் எம்மை ஆளவும் மாளுமோ?
அஞ்சும் வழக்கம் திராவிடர்க் கில்லை
ஆள்வலி தோள்வலிக் குப்பஞ்சம் இல்லை!
ஒருவன் உள்ள வரையில்...

## 36

## இனி எங்கள் ஆட்சி

தன்னினம் மாய்க்கும் தறுதலை யாட்சி
சற்றும் நிலைக்காது! மாளும்!
தன்னினம்...

இந்நிலம் திராவிடம் ஆண்டோர்
இறந்தநாள் வரலாறு காண்க.
தன்னினம்...

மன்னும் இமயத்தில் தன்வெற்றி நாட்டிய
மன்னவன் திராவிட மன்னவன் – எதிர்
வந்திட்ட ஆரிய ரைப்புறம் கண்டதோள்
திராவிட மன்னவன் தோளே!
சின்ன நினைப்புகள் தன்மான மற்ற
செயல்களை இனிவிட்டு வையோம்.
தன்னினம்...

திராவிடப் பெருங்குடியில் வந்தவன் திராவிடத்
திருநாடு பெற்ற சேய்தான் – இத்
திராவிடர்க் கின்னல் செய்துதன் நன்மை
தேடினான் எனிலவன் நாய்தான்!

எரிகின்ற எங்களின் நெஞ்சமேல் ஆணை
இனி எங்கள் ஆட்சி இந் நாட்டில்
தன்னினம்...

## 37

## தமிழனுக்கு வீழ்ச்சியில்லை

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ மக்கள்,
தமிழ்என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்த தில்லை!
தமிழர்க்குத் தொண்டுசெய்யும் தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவதில்லை
தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ?

தமிழகத்தில் மலைபோன்ற செல்வத் தாரும்,
தம்ஆணை பிறர்ஏற்க வாழு வாரும்,
தமிழர்க்கோ தமிழுக்கோ இடையூ றொன்று
தாம்செய்து வாழ்ந்தநாள் மலையே றிற்றே!
உமிழ்ந்தசிறு பருக்கையினால் உயிர்வாழ் வாரும்
உரமிழந்து சாக்காட்டை நண்ணு வாரும்
தமிழ்என்று தமிழரென்று சிறிது தொண்டு
தாம்புரிவார் அவர்பெருமை அரசர்க் கில்லை!

ஒருதமிழன் தமிழர்க்கே உயிர்வாழ் கின்றான்;
உயிர்வாழ்வோன் தமிழர்க்கே தனைஈ கின்றான்;
அரியபெருஞ் செயலையெலாம் தமிழ்நாட் டன்பின்
ஆழத்தில் காணுகின்றான்! தமிழன், இந்நாள்.
பெரிதான திட்டத்தைத் தொடங்கி விட்டான்;
'பிறந்துளார் தமிழறிஞர் ஆதல் வேண்டும்;
வருந்தமிழர் வையத்தை ஆளவேண்டும்.'
வாழ்கதமிழ்! இவ்வையம் வாழ்க நன்றே!

அந்நாளின் இலக்கியத்தை ஆய்தல் ஒன்றே
அரும்புலமை எனும்மடமை அகன்ற திங்கே!
இந்நாளிற் பழந்தமிழிற் புதுமை ஏற்றி
எழுத்தெழுத்துக் கினிப்பேற்றிக் கவிதை தோறும்

தென்நாட்டின் தேவைக்குச் சுடரை யேற்றிக்
காவியத்தில் சிறப்பேற்றி, இந்த நாடு
பொன்னான கலைப்பேழை என்று சொல்லும்
புகழேற்றி வருகின்றார் – அறிஞர் வாழ்க!

## 38

## தமிழன்

அறியச் செய்தோன் தமிழன்
அறிந்த அனைத்தும் வையத்தார்கள்
அறியச் செய்தோன்...

செறிந்து காணும் கலையின் பொருளும்
சிறந்த செயலும் அறமும் செய்து
நிறைந்த இன்ப வாழ்வைக் காண
நிகழ்த்தி, நிகழ்த்தி, நிகழ்த்தி முன்னாள்
அறியச் செய்தோன்...

காற்றுக் கனல்மண் புனலும், வானும்
தமிழன் கனவும் திறமும் கூட்டி
நாற்றிசை அழகை வாழ்வைச் செய்ய
நவின்று, நவின்று, நவின்று முன்னாள்
அறியச் செய்தோன்...

எங்கும் புலமை எங்கும் விடுதலை
எங்கும் புதுமை கண்டாய் நீதான்!
அங்குத் தமிழன் திறமை கண்டாய்
அங்குத் தமிழன் தோளே கண்டாய்!
அறியச் செய்தோன்...

## 39

## பகை நடுக்கம்

தமிழர் என்று சொல்வோம் – பகைவர்
தமை நடுங்க வைப்போம்
இமய வெற்பின் முடியிற் – கொடியை
ஏற வைத்த நாங்கள்
தமிழர் என்று...

நமத டாஇந் நாடு – என்றும்
நாமிந் நாட்டின் வேந்தர்

சமம்இந் நாட்டு மக்கள் – என்றே
தாக்கடா வெற்றி முரசை!

தமிழர் என்று...

எந்த நாளும் தமிழர் – தம் கை
ஏந்தி வாழ்ந் தில்லை
இந்த நாளில் நம்ஆணை – செல்ல
ஏற்றடா – தமிழர் கொடியை.

தமிழர் என்று...

வையம் கண்ட துண்டு – நாட்டு
மறவர் வாழ்வு தன்னைப்
பெய்யும் முகிலின் இடிபோல் – அடடே
பேரிகை முழக்கு.

தமிழர் என்று...

## 40

## கூவாய் கருங்குயிலே

எங்கள் திருநாட்டில் எங்கள்நல் ஆட்சியே
பொங்கிடுக வாய்மை பொலிந்திடுக என்றேநீ
செங்கதிர் சீர்க்கையால் பொன்னள்ளிப் பூசிய
கங்குல் நிகர்த்த கருங்குயிலே கூவாயே.

கன்னடம்தெ லுங்குமலை யாளம் களிதுளுவம்
முன்னடைந்தும் மூவாது மூள்பகைக்கும் சோராது
மன்னும் தமிழ்தான்இவ் வையத்தை யாள்கஎனக்
கன்னற் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே.

வராதெனச் சொன்னாரும் வருந்தத்தன் ஆட்சி
இராத இடமில்லை என்றநிலை நாட்டத்
திராவிட நாடு சிறைநீங்க என்று
குரலே முரசாகக் கூவாய் கருங்குயிலே.

உண்ணல் உடுத்தல் உயிர்த்தல்எனச் செந்தமிழை
நண்ணலும் ஆம்என்று நாட்டுக; வேறுமொழி
எண்ணல் நிறுவல் இலாதுகல்வி கட்டாயம்
பண்ணல் பயன்என்று கூவாய் கருங்குயிலே.

செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில், வையம் நடுங்கும்

வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே.

இளைஞர் துடிக்கின்றார் தமிழின்நிலை எண்ணிக்
கிளைஞர் அடைகின்ற கேடுபொறார் இங்கு
விளையாட வேண்டாமே ஆளவந்தார்! வாழ்வின்
களைநீக் குகஎன்று கூவாய் கருங்குயிலே

பாலோடு நேர்தமிழும் பைந்தமிழ் மக்களும்
ஆலோடு வேர்என் றறிந்திருந்தும் ஆளவந்தார்
மேலோடு பேசி விடுவரேல் அவ்வாட்சி
சாலோடு நீர்என்று சாற்றாய் கருங்குயிலே.

## 41

## தமிழர்களின் எழுதுகோல்

கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருக்கெடுக்க வேண்டும்.
கண்டதைமேற் கொண்டெழுதிக் கட்டுரையாக் குங்கால்
தெருத்தூற்றும்; ஊர்தூற்றும்; தம்முளமே தம்மேற்
சிரிப்பள்ளித் தூற்றும்! நலம் செந்தமிழ்க்கும் என்னாம்?
தரத்தம்மால் முடிந்தமட்டும் தரவேண்டும்; பின்னால்
சரசரெனக் கருத்தூறும் மனப்பழக்கத் தாலே!
இருக்கும்நிலை மாற்றஒரு புரட்சிமனப் பான்மை
ஏற்படுத்தல், பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்.

விருப்பத்தை நிறைவேற்ற முயலுங்கால் வையம்
வெறுந்தோற்றம் என்னும்ஒரு வேதாந்தப் பேச்சேன்?
மரத்தடியில் மறைந்திருந்து வாலியினைக் கொன்ற
மட்டமுறு கருத்துக்கள் இப்போது வேண்டாம்.
உரத்தினிலே குண்டுபுகும் வேளையிலும் மக்கள்
உயிர்காக்கும் மனப்பான்மை உண்டாக்க வேண்டும்!
பெருநிலத்தார் எல்லோரும் ஒருதாயின் மக்கள்
பிறர்தமர்என் றெண்ணுவது பேதமையே அன்றோ!

பொதுமக்கள் நலம்நாடிப் புதுக்கருத்தைச் சொல்க!
புன்கருத்தைச் சொல்லுவதில் ஆயிரம்வந் தாலும்
அதற்கொப்ப வேண்டாமே! அந்தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடுபல வாழ்ந்தால்
எதிர்ப்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை?
ஏற்றசெயல் செய்தற்கும் ஏன் அஞ்சவேண்டும்?

பா. க. 5.

உதிர்த்திடுக பொன்மலர்கள் உயர்கைகள், நன்றே
உணர்ந்திடுக உளங்கவரும் புதுமணத்தை யாண்டும்.

## 42

## இசைத் தமிழ்

மேசை விளக்கேற்றி — நாற்காலி
மீதில் அமர்ந்தேநான்;

ஆசைத் தமிழ்படித்தேன் — என்னருமை
அம்மா அருகில்வந்தார்.

மீசைத் தமிழ்மன்னர் — தம்பகையை
வென்ற வரலாற்றை

ஓசை யுடன்படித்தேன் — அன்னைமகிழ்
வுற்றதை என்ன சொல்வேன்!

செந்தமிழ் நாட்டினிலே — வாழ்கின்ற
சேயிழை யார்எவரும்

வந்த விருந்தோம்பும் — வழக்கத்தை
வாய்விட்டுச் சொல்லுகையில்

அந்தத் தமிழ் அன்னையின் — முகத்தினில்
அன்பு பெருகியதை

எந்த வகைஉரைப்பேன்! — கேட்டபின்பும்
இன்னும்சொல் என்றுரைத்தார்!

கிட்ட நெருங்கிஎனைப் — பிள்ளாய் என்று
கெஞ்சி நறுந்தேனைச்

சொட்டு வதைப்போலே — வாய்திறந்து
சொல்லொரு பாடல்என்றார்.

கட்டுக் கரும்பான — இசைத்தமிழ்
காதினிற் கேட்டவுடன்

எட்டு வகைச்செல்வமும் — தாம்பெற்றார்
என்னைச் சுமந்துபெற்றார்!

## 43

## சிறுத்தையே வெளியில் வா

பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில்வா!

எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல்செய்யப் புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட் பறவையே சிறகை விரி, எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திற விழி!
இங்குன் நாட்டுக் கிழிகழுதை ஆட்சியா?
கைவிரித் துவந்த கயவர், நம்மிடைப்
பொய்வி ரித்துநம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென் பார்எனில்,
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!
இகழ்ச்சி நேர்ந்தால் இறப்போம் என்றும்
புகழ்ச்சி யேஎம் பூணாம் என்றும்
வையம் ஆண்ட வண்டமிழ் மரபே,
கையி ருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும்உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணாக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!
பொன்மொ ழிக்குநீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை யுயர்த்துக!
கைக்குள திறமை காட்ட எழுந்திரு!
வாழ்க இளைஞனே, வாழ்க நின்கூட்டம்!
வாழ்க திராவிட நாடு!
வாழ்க நின்வையத்து மாப்புகழ் நன்றே!

## 44

## தீவாளியா?

நரகனைக் கொன்றநாள் நல்விழா நாளா?
நரகன் இறந்ததால் நன்மை யாருக்கு?
நரகன் என்பவன் நல்லனா? தீயனா?
அசுரன்என் றவனை அறைகின் றாரே?
இராக்கதன் என்றும் இயம்புகின் றாரே?
இப்பெய ரெல்லாம் யாரைக் குறிப்பன? —
இன்றும் தமிழரை இராக்கதர் எனச்சிலர்
பன்னு கின்றனர் என்பது பொய்யா?

இவைக ளைநாம் எண்ண வேண்டும்.
எண்ணா தெதையும் நண்ணுவ தென்பது
படித்தவர் செயலும் பண்பும் ஆகுமா?
வழக்கம் என்பதில் ஒழுக்கம் இல்லையேல்
கழுத்துப் போயினும் கைக்கொள வேண்டாம்.
ஆயிரம் கோடி ஆண்டு செல்லினும்
தூயது தூயதாம் துரும்பிரும் பாகாது!
"உனக்கெது தெரியும், உள்ளநா ளெல்லாம்
நினைத்து நடத்திய நிகழ்ச்சியை விடுவதா?"
என்றுகேட் பவனை, "ஏனடா குழந்தாய்!
உனக்கெது தெரியும் உரைப்பாய்" என்று
கேட்கும்நாள், மடமை கிழிக்கும்நாள், அறிவை
ஊட்டும்நாள், மானம் உணருநாள் இந்நாள்,
தீவா வளியும் மானத் துக்குத்
தீ—வாளி ஆயின் சீஎன்று விடுவரே!

## 45

## பன்னீர்ச் செல்வம்

மார்புற அணைத்து நாதன்
மங்கைக்குத் தந்த இன்பம்
சார்புறத் தேகம் தன்னை
மனத்தினைத் தழுவும் நேரம்
நேரினில் இருந்த நாதன்
மறைந்தனன் என்றால் நேயக்
கார்குழல் மங்கை கொள்ளும்
கடுந்துயர்க் களவு முண்டோ?

இறைந்தநற் றமிழர் தம்மை
இணைத்தசீர் இராம சாமி
அறைந்தநல் வழியே இந்தி
அரவினைக் கொன்றான் செல்வன்;
நிறைந்தஅத் தேனை நாட்டார்
நினைந்துண்ணும் போதே அன்னோன்
மறைந்தனன் என்றால் யார்தாம்
மனம்துடி துடிக்க மாட்டார்?

எல்லையில் "தமிழர் நன்மை"
என்னுமோர் முத்துச் சோளக்
கொல்லையில் பார்ப்பா னென்ற
கொடுநரி உலவும் போது,
தொல்லைநீக் கிடஎ ழுந்த
தூயரில் பன்னீர்ச் செல்வன்
இல்லையேல் படைத் தலைவன்
இல்லைஎம் தமிழ்வேந் துக்கே.

ஆங்கில நாட்டில் நல்ல
இந்திய அமைச்ச னுக்குத்
தீங்கிலாத் துணையாய்ச் சென்றான்
சர்பன்னீர்ச் செல்வன் தான்மேல்
ஓங்கிய விண்வி மானம்
உடைந்ததோ ஒலிநீர் வெள்ளம்
தூங்கிய கடல்வீழ்ந் தானோ
துயர்க்கடல் வீழ்ந்தோம் நாங்கள்.

பண்கெட்டுப் போன தான
பாட்டுப்போல் தமிழர் வாழும்
மண்கெட்டுப் போமே என்னும்
மதிகெட்டு மானம் கெட்டும்
எண்கெட்ட தமிழர் பல்லோர்
பார்ப்பனர்க் கேவ லாகிக்
கண்கெட்டு வீழும் போதோ
கடல்பட்ட தெங்கள் செல்வம்?

சிங்கத்தை நரிய டிக்கும்
திறமில்லை எனினும் சிங்கம்
பொங்குற்றே இறந்த தென்றால்
நரிமனம் பூரிக் காதோ?
எங்குற்றான் செல்வன் என்றே
தமிழர்கள் ஏங்கும் காலை
இங்குற்ற பூணூல் காரர்
எண்ணம்பூ ரிக்கின் றார்கள்.

# பன்மணித்திரள்

## 46

### அறம் செய்க

தொடங்குக பணியைத் தொடங்குக அறத்தை!
கடலிலும், வானிலும், கவினுறு நிலத்திலும்,
வாழுயிர் அனைத்தும், மக்கள் கூட்டமும்,
வாழுமாறு – அன்பு மணிக்குடை யின்கீழ்
உலகினை ஆண்டார் உயர்வுற நம்மவர்!

புலவர்கள் "உலகப் பொன்னி லக்கியம்"
ஆக்கினார்! மறவரோ, அறிவு—அறி யாமையைத்
தாக்குமாறு அமைதியைத் தாழாது காக்கக்
கண்கள் மூடாமல் எண்டிசை வைத்தும்
வண்கையை இடப்புறத்து வாளில் வைத்தும்
அறம்புரிந்து இன்ப அருவி ஆடினார்!

தொடங்குக பணியை! அடங்கல் உலகும்
இடும்நம தாணை ஏற்று நடக்கவும்
தடங்கற் சுவரும் சாய்ந்துதூ ளாகவும்
தொடங்குக! செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந் தோளால் தொடங்குக 'பணியை!'

இந்த உலகில் எண்ணிலா மதங்கள்
கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்!
சாதிக்குச் சாவுமணி அடிக்க! பழம்நிகர்
தமிழகம் வையத் தலையாய்
அமையத் தொடங்குக "அறம் இன்பம்" என்றே!

## 47

### கற்பனை உலகில்*

#### எண்சீர் விருத்தம்

தெருப்பக்கம் கூண்டறையில் இருந்தேன்: மேசை
சிறியதொரு நாற்காலி, தவிர மற்றும்,
இருந்தஇடம் நிறையமிகு பழந்தாள், பெட்டி,
எண்ணற்ற சிறுசாமான் கூட்டம்! காற்று

வருவதற்குச் சன்னல்உண்டு சிறிய தாக;
மாலை,மணி ஐந்திருக்கும் தனியாய்க் குந்தி,
ஒருதடவை வெளியினிலே பார்ததேன். அங்கே
ஒருபழைய நினைப்புவந்து சேர்ந்த தென்பால்!

நெஞ்சத்தில் 'அவள்' வந்தாள்; கடைக்கண் ணால்என்
நிலைமைதனை மாற்றிவிட்டாள்; சிரித்தாள் பின்னர்
கஞ்சமலர் முகத்தினையே திருப்பிக் கோபம்
காட்டினாள்! பூமலர்ந்த கூந்தல் தன்னில்
மிஞ்சும்எழில் காட்டினாள்! அவள்தன் கோபம்
மிகலாபம் விளைத்ததன்றோ என்ற னுக்கே!
'அஞ்சுகமே வா'என்று கெஞ்சி னேன்நான்
அசைந்தாடிக் கைப்புறத்தில் வந்து சாய்ந்தாள்.

இவ்வுலகம் ஏகாந்தத் தின்வி ரோதி!
இதோபாராய் பிச்சைஎன ஒருத்தி வந்தாள்.
திவ்வியமாம் ஒருசேதி என்று சொல்லித்
தெருநண்பர் வருவார்கள் உயிரை வாங்க!
'வவ்வவ்' வென் றொருகிழவி வருவாள், உன்றன்
மணநாளில் என்னைஅழை என்று சொல்வாள்!
ஒவ்வொன்றா? — என்செயலாம்! நீயும் நானும்
உயர்வானில் ஏறிடுவோம் 'பறப்பாய்' என்றேன்.

மல்லிகையின் அரும்புபோல் அலகும், நல்ல
மாணிக்கக் காலும்,மணி விழியும், பால்போல்
துல்லியவெண் சிறகும்உற்ற பெண்பு றாவாய்த்
துலங்கினாள். நானும்ஆண் புறாவாய்ப் போனேன்.
அல்லலற வான்வெளியில் இருவர் நாங்கள்;
அநாயச முத்தங்கள்; கணக்கே யில்லை.
இல்லைஎன்று சொல்லாமல் இதழ்கள் மாற்றி
அவைசாய்த்த அமுதுண்டோம்; இன்னும் போனோம்.

பொன்னிறத்துக் கதிர்பாயும் முகிலிற் பட்டுப்
புறஞ்சிதறும் கோடிவண்ண மணிக்கு லம்போல்;
மின்னும்மணிக் குவியிலெல்லாம் மேகம் மாய்த்து
விரிக்கும் இருள்! இருள்வானம் ஒளிவான் ஆகச்
சென்னியைஎன் சென்னியுடன் சேர்த்தாள். ஆங்கே
சிறகினொடு சிறகுதனைப் பின்னிக் கொண்டோம்!

என்னைஅறி யேன்! தன்னை அறியாள்! பின்னர்
இமைதிறந்தோம் ஆகாய வாணி வீட்டில்!
'பாரதநாட் டாரடிநாம் வாவா' என்றேன்.
பழஞ்சாமான் சிறுமேசைக் கூண்ட றைக்குள்,
ஓரண்டை நாற்காலி தன்னில் முன்போல்
உட்கார்ந்த படியிருந்தேன். பின்னும், உள்ளம்
நேர்ஓடிப் பறக்காமல் பெண்டு, பிள்ளை,
நெடியபல தொந்தரைகள், நியதி அற்ற
பாராளும் தலைவர்களின் செய்கை எல்லாம்
பதட்டமுடன் என்மனத்திற் பாய்ந்த தன்றே.

## 48

## குழந்தை

மெல்லென அதிர்ந்த மின்னல், அந்தச்
செல்வக் குழந்தையின் சிரிப்பு! நல்ல
இன்பம் வேண்டுவோர் இங்குள்ளார் வாழ
அருஞ்செயல் செய்துதான் அடைய வேண்டுமோ!

குளிர்வா ழைப்பூக் கொப்பூழ் போன்ற
ஒளிஇமை விலக்கி வெளிப்படும் கண்ணால்
முதுவை யத்தின் புதுமை கண்டதோ?
என்னவோ அதனை எவர்தான் அறிவார்?
தங்க மாதுளைச் செங்கனி பிளந்த
மாணிக்கம் அந்த மதலையின் சிரிப்பு!

வாரீர்! அணைத்து மகிழவேண் டாமோ?
பாரீர் அள்ளிப் பருகமாட் டோமோ?
செம்பவ ழத்துச் சிமிழ்சாய்த்த அமுதாய்ச்
சிரித்தது, பிள்ளை சிரிக்கையில்
சிரித்தது வையம்! சிரித்தது வானமே!

## 49

## தொழில்

தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!
எழிலை உலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்
தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!

இந்தவான். மன், கனல், எரி, வளி, உருப்படா
அந்தநாள் எழுந்ததோர் "அசைவினால்" வானொடு
வெண்ணி லாவும், விரிகதிர் தானும்,
எண்ணிலா தனவும் எழுந்தன வாகும்.
அணுத்தொறும் இயங்கும்அவ் வசைவியக் கத்தைத்
துணிப்பிலா இயற்கையின் தொழிலெனச் சொல்வார்.
அழியா தியங்கும்அவ் வசைவே மக்களின்
தொழிலுக்கு வேரெனச் சொல்லினும் பொருந்தும்.
ஆயினும் உன்னினும் அதுசிறந்த தன்று.
தாயினும் வேண்டுவது தந்திடுந் தொழிலே!

மக்களின் தேவை வளர்ந்திடும் அளவுக்குத்
தக்க வாறு தளிர்த்திடு கின்ற
அறிவிலே தோன்றுவை; அறத்தோள் தழுவுவை!
மறுவிலாக் கருவியில் வாய்விட்டுச் சிரிப்பை;
பொருள்பல நல்கிஅப் பொருள்தொறும் கலைத்திறம்
அருள்புரிந்து குறைபா டகற்றுவை தொழிலே!
பசித்தவன் புசித்திடப் பறப்பது போன்றதோர்
அசைப்பிலா ஆவலும், அசைப்பிலா ஊக்கமும்
அடைந்தோர் உனைத்தம், ஆயிரம் ஆயிரம்
தடந்தோள் தழுவியே கடந்தனர் வறுமை!

தொழிலே காதுகொடு! சொல்வேன், எங்கள்
அதிர்தோள் உன்றன் அழகிய மேனி
முழுவதும் தழுவ முனைந்தன பார்நீ.
அழகிய நாட்டில் அந்நாள் இல்லாத
சாதியும் மதமும் தடைசெயும் வலிவிலே
மோதுதோள் அனைத்தும் மொய்த்தன ஒன்றாய்!
கெண்டை விழியாற் கண்டுகொள் தொழிலே
வாராய் எம்மிடை வாராய் உயிரே
வாராய் உணர்வே வாராய் திறலே!

அலுப்பிலோம் இருப்புக் கலப்பை துடைத்தோம்;
மலையெனச் செந்நெலீ வழங்களம் தோளில்வா!
கரும்பா லைக்குக் கண்ணெலாம் நெய்யிட்
டிரும்பா லைக்கு வரும்பழு தகற்றினோம்
பண்டம்இந் நாட்டிற் பல்க மகிழ்ந்துவா!

தூட்டி ரும்பும் துளியும் போலஎம்
தோட்கூட் டத்தில் தொழிலுன் வல்லமை
சேர்வது நாங்கள் விடுதலை சேர்வதாம்!
யாமும் நீயும் இரண்டறக் கலப்பின்
தூய்மை மிக்க தொழிலா ளிகள்யாம்,
சுப்பல் முடைவோம் கப்பல் கட்டுவோம்
பூநாறு தித்திப்புத் தேனாறு சேர்ப்போம்
வானூர் தியாலிவ் வையம் ஆள்வோம்.

ஐயப் படாதே அறிவு புகட்டும்
வையநூல் பலஎம் மனத்தில் அடுக்கினோம்;
மாசு தவிர்ந்தோம்; மாசிலா மணியே
பேசு; நெருங்கு; பிணைதோ ளொடுதோள்;
இன்பம்! இன்பம்! இதோபார் கிடந்த
துன்பம் தொலைந்தது! தொலைந்தது மிடிமை!
வாழிய தொழிலே! செந்தமிழ்
வாழிய! வாழிய வண்டமிழ் நாடே!

## 50

## குழந்தைப் பள்ளிக்கூடம் தேவை

கூட்டின் சிட்டுக் குருவிக் குஞ்சு
வீட்டின் கூடத்தில் விழுந்து விட்டது!
யாழ்நரம்பு தெறித்த இன்னிசை போலக்
கீச்சுக் கீச்சென்று கூச்ச லிட்டது.
கடுகு விழியால் தடவிற்றுத் தாயை;
தீனிக்குச் சென்றதாய் திரும்ப வில்லையே!

தும்பைப் பூவின் துளிமுனை போன்ற
சிற்றடி தத்தித் திரிந்து, சிறிய
இறக்கையால் அதற்குப் பறக்கவோ முடியும்!

மின்இ யக்க விசிறி இறக்கையால்
சரேலென விரைந்து தாய்க்குருவி வந்தது.
கல்வி சிறிதும் இல்லாத் தனது
செல்வத் தின்நிலை தெரிந்து வருந்தி,
"இப்படி வா" என இச்இச் என்றதே!
அப்படிப் போவதை அறிந்து துடித்ததே!

காக்கையும் கழுகும் ஆக்கம் பெற்றன!
தாக்கலும் கொலையும் தலைவிரித் தாடின;
அல்லல் உலகியல் அணுவள வேனும்
கல்லாக் குழந்தையே கடிதுவா இப்புறம்
என்றது! துடித்த தெங்கணும் பார்த்தது!
மேலிருந்து காக்கை விழிசாய்த்து நோக்கிப்
பஞ்சுபோற் குஞ்சைப் பறித்துச் சென்றதே!
எழுந்து லாவும் இளங்குழந் தைகளை
இழந்து போக நேரும்;
குழந்தைப் பள்ளிக் கூடங்கள் தேவையே!

## 51

## கடவுள் மறைந்தார்

மனைமக்கள் தூங்கினார் நள்ளிரவில் விடைபெற்று
வழிநடைத் தொல்லைஇன்றி
மாபெரிய "நினைவென்ற உலகத்தை" அணுகினேன்.
வந்தார்என் எதிரில்ஒருவர்.
எனைஅவரும் நோக்கியே "நான்கடவுள் நான்கடவுள்"
என்றுபல முறைகூ றினார்.
"இல்லைஎன் பார்கள்சிலர் உண்டென்று சிலர்சொல்வர்
எனக்கில்லை கடவுள்கவலை"
எனவுரைத் தேன்.அவர், "எழுப்புசுவர் உண்டெனில்
எழுப்பியவன் ஒருவனுண்டே
இவ்வுலகு கண்டுநீ நானும்உண் டெனஅறிக"
என்றுரைத் தார்.அவரைநான்,
"கனமான கடவுளே உனைச்செய்த சிற்பிஎவன்?
காட்டுவீர்" என்றவுடனே
கடவுளைக் காண்கிலேன்! அறிவியக் கப்புலமை
கண்டஎம் அன்னைநாடே!

## 52

## கடவுளுக்கு வால் உண்டு

காணாத கடவுள்ஒரு கருங்குரங் கென்பதும்,
கருங்குரங் கின்வாலிலே
கட்டிவளை யந்தொங்க, அதிலேயும் மதம்என்ற
கழுதைதான் ஊசலாட

வீணாக அக்கழுதை யின்வால் இடுக்கிலே
 வெறிகொண்ட சாதியென்னும்
வெறும்போக் கிலிப்பையன் வெளவா லெனத்தொங்கி
 மேதினி கலங்கும் வண்ணம்
வாணங்கொ ளுத்துகின் றான்என் பதும்வயிறு
 வளர்க்கும்ஆத் திகர்கருத்து.
மாநிலம் பொசுங்குமுன் கடவுளுக் குத்தொங்கும்
 வாலையடி யோடறுத்தால்
சேணேறு கடவுளுக் கும்சுமை அகன்றிடும்
 தீராத சாதிசமயத்
தீயும்வி ழுந்தொழியும் எனல்என் கருத்தாகும்
 திருவார்ந்த என்றன்நாடே.

## 53

## நம் மாதர்

பழங்கல அறைக்குளே பதினைந்து திருடர்கள்
 பதுங்கிடவும் வசதியுண்டு.
பதார்த்தவகை மீதிலே ஒட்டடையும் ஈக்களும்
 பதிந்திடவும் வசதியுண்டு.
முழங்கள்பதி னெட்டிலே மாற்றமில் லாவிடினும்
 முன்றானை மாற்றமுண்டு.
முடுகிவரும் நோய்க்கெலாம் கடவுளினை வேண்டியே
 முடிவடைய மார்க்கமுண்டு.
தொழுங்கணவன் ஆடையிற் சிறுபொத்தல் தைக்கவும்
 தொகைகேட்கும் ஆட்கள்வேண்டும்
தோசைக் கணக்கென்று கரிக்கோடு போடவோ
 சுவருண்டு வீட்டில்.இந்த
ஒழுங்கெலாம் நம்மாதர் வாரத்தின் ஏழுநாள்
 உயர்விரதம் மேற்கொள்வதால்
உற்றபலன் அல்லவோ அறிவியக் கங்கண்
 டுணர்ந்தஎன் அன்னைநாடே!

## 54

## மலையிலிருந்து

சோபன முகூர்த்தத்தின் முன்அந்த மாப்பிள்ளைச்
சுப்பனைக் காணலானேன்.
"தொல்லுலகில் மனிதர்க்கு மதம்தேவை யில்லையே"
என்றுநான் சொன்னவுடனே.

கோபித்த மாப்பிள்ளை "மதம்என்னல் மலையுச்சி
நான்அதில் கொய்யாப்பழம்
கொய்யாப் பழம்சிறிது மலையுச்சி நழுவினால்
கோட்டமே" என்றுசொன்னான்.

தாபித்த அந்நிலையில் அம்மாப்பி ளைக்குநான்
தக்கமொழி சொல்லிஅவனைத்
தள்ளினேன். மலையுச்சி மீதே யிருந்தவன்
தன்புதுப் பெண்டாட்டியின்

சோபனக் கட்டிலில் தொப்பென்று விழுந்தனன்.
துயரமும் மனமகிழ்வும்
சுப்பனே அறிகுவான் நானென்ன சொல்லுவேன்
தூயென் அன்னைநாடே!

## 55

## எந்த நாளும் உண்டு

மாடறுக் கப்போகும் நாட்டுத் துருக்கன்நலம்
மறிக்கின்ற இந்துமதமும்,
மசூதியின் பக்கமாய் மேளம்வா சித்திடினும்
வாள்தூக்கும் மகமதியமும்,

வாடவரு ணாச்சிர மடமைக் கொழுந்தினை
"மகாத்மீயம்" என்னும்நிலையும்,
வழிபறிக் கும்தொல்லை இன்றியே "பொதுமக்கள்
மதிப்பைப் பறித்தெறிந்து,

பாடின்றி வாழ்த்திட நினைத்திடும் பாதகப்
பார்ப்பனர், குருக்கள்,தரகர்,
பரலோகம் காட்டுவார்" என்கிற பேதமையும்
பகைமிஞ்சு கடவுள்வெறியும்,

ஆடாமல் அசையாமல் இருந்திடக் கேட்கின்ற
அவ்வுரிமை நாளும்இங்கே
அமைந்திருக் கின்றதே அறிவியக் கங்கண்ட
அழகுசெந் தமிழ்வையமே!

## 56

## பெண்குரங்குத் திருமணம்

பெரும்பணக் காரனிடம் ஏழையண் ணாசாமி
"பெண்வேண்டும் மகனுக்"கெனப்
"பெற்றபெண் ணைக்கொடேன் வளர்க்கின்ற பெண்"ணுண்டு
பேச்செலாம் கீச்"சென்றனன்.

"இருந்தால் அதற்கென்ன" என்னவே, எனதுபெண்
"இரட்டைவால் அல்ல"என்றான்.
ஏழையண் ணாசாமி "மகிழ்ச்சிதான்" என்றனன்.
"என்றன்பெண் கால்வரைக்கும்

கருங்கூந்தல் உண்" டென்ன, ஏழையண் ணாசாமி
கடிதுமண நாள்குறித்தான்,
கண்ணுள்ள மகனுக்குத் தந்தைநிய மித்தபெண்
கழுதையா? அல்ல,அதுதான்

பெரும்பணக் காரன் வளர்த்திட்ட ஒற்றைவாற்
பெட்டைக் கருங்குரங்கு!
பீடுசுய மரியாதை கண்டுநல முண்டிடும்
பெரியஎன் அன்னைநாடே!

## 57

## கற்பின் சோதனை

கப்பல்உடை பட்டதால் நாயகன் இறந்ததாய்க்
கருதியே கைம்மைகொண்ட
கண்ணம்மை எதிரிலே ஓர்நாள்தன் கணவனும்
கணவனின் வைப்பாட்டியும்
ஒப்பியே வந்தார்கள். கண்ணம்மை நோக்கினாள்
"உடன்இப்பெண் யார்"என்றனள்.
"உன்சக்க ளத்திதான்" என்றனன். கண்ணம்மை
உணவுக்கு வழிகேட்டனள்.
"இப்பத்து மாதமாய்க் கற்புநீ தவறாமல்
இன்னபடி வாழ்ந்துவந்தாய்

என்பதனை எண்பிக்க எங்களிரு வர்க்கும்நீ
ஈந்துவா உணவெ"ன்றனன்.
அப்படியும் ஒப்பினாள் கண்ணம்மை ஆயினும்
அடிமையாம் பலிபீடமேல்
அவள்உயிர் நிலைக்குமோ? அறிவியக் கங்கண்ட
அழகுசேர் அன்னை நாடே!

## 58

## தலையுண்டு! செருப்புண்டு!

நிலம்ஆளும் மனிதரே! நிலமாளு முன்எனது
நேரான சொற்கள்கேட்பீர்
நீர்மொள்ள வும், தீ வளர்க்கவும் காற்றுதனை
நெடுவெளியை அடைவதற்கும்

பலருக்கும் உரிமைஏன்? பறிபோக லாகுமோ
பணக்காரர் நன்மையெல்லாம்?
பறித்திட்ட நிலம்ஒன்று! பாக்கியோ நான்குண்டு!
பறித்துத் தொலைத்துவிட்டால்

நலமுண்டு! பணக்காரர் வயிறுண்டு! தொழிலாளர்
நஞ்சுண்டு சாகட்டுமே!
நற்காற்று, வானம்,நீர், அனல்,பொது அடைந்ததால்
நன்செயும் பொதுவேஎனத்

தலையற்ற முண்டங்கள் சொன்னாற் பெரும்பெரும்
தலையெலாம் உம்மில்உண்டு!
தாழ்ந்தவர்க் கேதுண்டு; காற்செருப் பேஉண்டு
தகைகொண்ட அன்னைநிலமே!

## 59

## எண்ணத்தின் தொடர்பே!

குடியேறும் ஆரியப் பாதகர்கள் சூழ்ச்சியால்
கொலையுண்ட தமிழர் நெஞ்சும்
குறுநெறிச் சங்கரன் புத்தநெறி மாற்றிடக்
கொல்வித்த தமிழர் நெஞ்சும்,

படியேறும் சமண்கொள்கை மாற்றிடச் சம்பந்தப்
பார்ப்பனன் சூழ்ச்சி செய்து

படுகொலை புரிந்திட்ட பல்லாயி ரங்கொண்ட
பண்புசேர் தமிழர் நெஞ்சும்,

கொடிதான தம்வயிற் றுக்குகை நிரப்பிடும்
கொள்கையால் வேதநூலின்
கொடுவலையி லேசிக்கி விடுகின்ற போதெலாம்
கொலையுண்ட தமிழர் நெஞ்சும்,

துடிதுடித் துச்சிந்தும் எண்ணங்கள் யாவுமே
தூயசுய மரியாதையாய்ச்
சுடர்கொண் டெழுந்ததே சமத்துவம் வழங்கிடத்
தூயஎன் அன்னை நிலமே!

## 60

## சங்கங்கள்

சங்கங்களால்—நல்ல
சங்கங்களால்—மக்கள்
சாதித்தல் கூடும் பெரும்பெருங் காரியம்

சிங்கங்கல் போல்—இளஞ்
சிங்கங்கள் போல்—பலம்
சேர்ந்திடும் ஒற்றுமை சார்ந்திட லாலே.

பொங்கும் நிலா—ஒளி
பொங்கும் நிலா—எனப்
பூரிக்கும் நெஞ்சிற் புதுப்புதுக் கோரிக்கை

மங்கிடுமோ?—உள்ளம்
மங்கிடுமோ?—என்றும்
மங்காது நல்லறி வும்தெளி வும்வரும்.

சங்கங்களை—நல்ல
சங்கங்களை—அந்தச்
சட்டதிட் டங்களை மூச்சென வேகாக்க!

அங்கம் கொள்க!—அதில்
அங்கம் கொள்க!—எனில்
அன்பினை மேற்கொண்டு முன்னின் றுழைத்திட.

எங்கும் சொல்க!—கொள்கை
எங்கும் சொல்க!—இதில்
ஏது தடைவந்த போதிலும் அஞ்சற்க!

தங்கத்தைப் போல்—கட்டித்
தங்கத்தைப் போல்—மக்கள்
தங்களை எண்ணுக! சங்கங்க ளிற்சேர்க்க!
தங்கத்தைப் போல்...

கொள்கை இல்லார்—ஒரு
கொள்கை இல்லார்—மக்கள்
கூட்டத்தில் இல்லை! சங்கங்களின் சார்பினைத்
தள்ளுவதோ?—மக்கள்
தள்ளுவதோ?—சங்கத்
தாய்வந்து தாவும் தளிர்க்கையைத் தீதென்று
விள்ளுவதோ?—மக்கள்
விள்ளுவதோ?—மக்கள்
வெற்றியெல் லாம்சங்க மேன்மையி லேஉண்டு.
கொள்ளுகவே—வெறி
கொள்ளுகவே—சங்கம்
கூட்டிட வும்கொள்கை நாட்டிட வும்வெறி
கொள்ளுகவே...

சாதி மதம்—பல
சாதி மதம்—தீய
சச்சர வுக்குள்ளே பேத வுணர்ச்சிகள்
போதத்தையே—மக்கள்
போதத்தையே—அறப்
போக்கிடும் மூடவ ழக்கங்கள் யாவும்இல்
லாத இடம்— நீதி
லாத இடம்—நோக்கி
யேகிடு தேஇந்த வைய இலக்கியம்!
ஆதலினால்—உண்மை
ஆதலினால்—சங்கம்
அத்தனை யும்அதை ஒத்து நடத்துக!
உள்ளத்திலே—நல்ல
உள்ளத்திலே—எழுந்
தூறி வரும்கொள்கை யாகிய பைம்புனல்

வெள்ளத்திலே—இன்ப
வெள்ளத்திலே—இந்த
மேதினி மக்கள் நலம்பெறு வாரென்று

தள்ளத் தகாப்—பல
தள்ளத் தகா—நல்ல
சங்கங்கள் எங்கணும் நிறுவுவர் சான்றவர்!

பள்ளத்திலே—இருட்
பள்ளத்திலே—வீழ்ந்த
பஞ்சை கட்டும்சங்கம் நெஞ்சிற் சுடர்கூட்டும்

சங்கங்களால்...

தாய் தந்தையர்—நல்ல
தாய் தந்தையர்—மண்ணில்
தாம்பெற்ற பிள்ளைகள் சங்கத்திற்கே என்ற

நேயத்தினால்—மிக்க
நேயத்தினால்—நித்தம்
நித்தம் வளர்க்க! நற்புத்தி புகட்டுக!

ஆய பொருள்—உண்
டாய பொருள்—முற்றும்
அங்கங் கிருந்திடும் சங்கங்களுக் கென்றே

தூய எண்ணம்—மிகு
தூய எண்ணம்—இங்குத்
தோன்றிடில் இன்பங்கள் தோன்றிடும் ஞாலத்தில்.

## 61

## குடியானவன்

### அகவல்

ஏலாது படுக்கும் எண்சாண் உடம்பை,
நாலுசாண் அகன்ற ஓலைக் குடிசையில்
முழங்கால் மூட்டு முகம்வரச் சுருட்டி,
வழங்கு தமிழரசு வளைத்த வில்லெனக்
"கிடப்பவன்", பகலெல்லாம் கடுக்க "உழைப்பவன்"
"குடியா னவன்" எனக் கூறு கின்றனர்
முடிபுனை அரசரும், மிடிஇலாச் செல்வரும்!

அக்குடி யானவன், அரசர் செல்வரோடு
இக்கொடு நாட்டில் இருப்பதும் உண்மை!
அழகிய நகரை அவன்அறிந் ததில்லை
அறுசுவை உணவுக்கு—அவன் வாழ்ந்த தில்லை!
அழகிய நகருக்கு—அறுசுவை உணவை
வழங்குவது அவனது வழக்கம்; அதனை
விழுங்குதல் மற்றவர் மேன்மை ஒழுக்கம்!

"சமைத்தல்", "உழைத்தல்" சாற்றும் இவற்றிடை
இமைக்கும் நேரமும் இல்லை ஓய்வு—எனும்
குடியா னவனின் குறுகிய காதில்
நெடிய ஓர்செய்தி நேராய் வந்தது:
"உலகிற் பெரும்போர்" "உலகைப் பெறும்போர்"
"உலகின் உரிமை உறிஞ்சும் கொடும்போர்"
மூண்டது மூண்டது மூண்டது—ஆகையால்
ஆண்தகை மக்கள் அனைவரும் எழுக"—
அந்த ஏழையும் ஆண்தகை தானாம்!

ஒருவன் ஆண்தகைமை உற்றறி யத்தகும்
திருநாள் வாழ்க—எனச் செப்பினான் அவனும்!

அருமை மகளுக்கு—ஒருதாய் சேர்த்தல் போல்,
பெருங்கடல் அளக்கும் பெரும்போர்க் கப்பல்,
குண்டுகள், கொடிய வண்டிகள், சாப்புகை,
வண்டெனப் பறக்கும் வான ஊர்திகள்,
அனைய அனைத்தும் அடுக்கடுக் காக
மறைவினில் சேர்த்து வைத்த இட்லர்,
இறைமுதல் குடிகள் யார்க்கும் போர்வெறி
முடுக முடுக்கித் திடீரென எழுந்தான்!

பெல்ஜியம் போலந்து முதல்நல்ல நாடுகள்
பலவும் அழித்துப் பல்பொருள் பெற்றான்.
முடியரசு நாடு, குடியரசு கொள்ள
முடியும் என்பதை முடித்த பிரான்சை
வஞ்சம், சூழ்ச்சியால் மடக்கி ஏறி
அஞ்சாது செல்வம் அடியொடு பறித்தான்.
இத்தாலி சேர்த்தே இன்னல் சூழந்தவன்,
கொத்தாய் ஆசியாக் கொள்கையை நாடும்
ஜப்பான் போக்கையும் தட்டிக் கொடுத்தான்.

ஆங்கில நாட்டையும் அமெரிக் காவையும்
எரிக்க நினைத்த இட்லர் என்னுங்
"குருவி"நெருப்புக் குழியில் வீழ்ந்தது!
எத்தனை நாட்டின் சொத்துக் குவியல்!
எத்தனை நாட்டில் இருந்த படைகள்!
எத்தனை நாட்டில் இருந்தகா லாட்கள்!
அத்தனையும் சேர்த்து—அலைஅலை யாக
உருசிய நாட்டை அழிக்கச் செலுத்தினான்!
உலகின் உயிரை ஒழிக்கச் செலுத்தினான்!
பெரிதினும் மிகவும் பெருநிலை கண்ட
உருசிய நாட்டை ஒழிக்கச் செலுத்தினான்
மக்கள் வாழ்வின் மதிப்பு—இன்னதென,
ஒக்க வாழும் உறுதி இதுவென,
முதிய பெரிய முழுநிலத் திற்கும்
புதிய தாகப் புகட்டிய நாட்டில்
செலுத்தினான். இட்லர்; தீர்ந்தான்; முற்றிற்று!

உருசிய நாட்டின் உடைமையைக் கடமையை
மக்கள் தொகையால் வகுத்தே, வகுத்ததை
உடலில் வைத்தே உயிரினால் காக்கும்
உருசி யத்தை இட்லர் உணர்கிலான்!
ஜப்பான் காரன் தன்கொடி நாட்ட
இப்பெரு நாட்டின் எழில்நக ரங்களில்
குண்டெறி கின்றான்; கொலையைத் தொடங்கினான்!
பண்டை நாள்மறத் தொண்டுகற் கண்டென
நாய்க்குட்டி நாடுகள் நன்று காணக்
காட்டிய தமிழகம் கைகட்டி நிற்குமா?
ஊட்டத் தோளை ஓலைத்தோ ளென்னுமா?

இந்த நாட்டின் இருப்பையும், மூச்சையும்,
வந்துள பகையை வாட்டும் படையாய்
மாற்றி அமைத்து வைத்தனர் அன்றோ!
முகத்தைப் பின்னும் முன்னும் திருப்பாது
விடியுமுன் எருதின்வால் அடிபற் றிப்பகல்
முடிவினில் எருதின் முதுகிற் சாய்ந்து
வருங்குடி யானவன் அருகில்இச் செய்தி
வலியச் சென்று வாயைத் திறந்தது—!

எழும்அரசர், செல்வர், எதிரிஇம் மூன்றுக்கு—
உழைக்க வேண்டும்அவ் வேலைக் குடிசை,
உச்சியி னின்றும் ஓராயிரம் அடிக்கீழ்
வைச்ச கனலும் மலைமேல் வழிதல்போல்,
அந்த நெஞ்சத்தில் ஆயிரம் ஆண்டுமுன்
குவியப் புதைந்த அவியா மறக்கனல்,
அக்குடி யானவன் அழகிய தோளிலும்,
விழியிலும் எழுந்து மின்ன,அவ் வேழை
எழுந்தான்; அவனுக்கு—இதற்குமுன் வைத்த
இழிநிலை, அதன்பயன் என்னும் வறுமை
இவை, அவன் காலை இழுத்தன கடித்து!

மெத்தை வீடு, மென்மை ஆப்பிள்,
முத்தரிசி பாலில் முழுங்கிய சோறு,
விலைதந்து தன்புகழ் விதைக்கும் ஆட்கள்,
இவற்றி னின்றுதான் இன்பமும் அறமும்,
துவங்கும் என்று சொல்லல் பொய்ம்மை!

இதைஅவன் கண்ட தில்லை; ஆயினும்
அக்குடி யானவன் எழுந்தான்
நிற்க வில்லை; நிறைந்தான் போரிலே!

(வையப் போரில் ரஷ்யாவை ஜெர்மனி தாக்கத் துவங்கியபோது எழுதியது.)

## 62

## மடமை ஓவியம்

பார்த்ததைப் பார்ப்பதும், கேட்டதைக் கேட்பதும்
படத்தின் நோக்கமெனில்
போர்த்த அழுக்குடை மாற்றமும், வேறு
புதுக்கலும் தீதாமோ?
காத்தது முன்னைப் பழங்கதை தான்எனில்,
கற்பனை தோற்றதுவோ?
மாத்தமிழ் நாட்டினர் எந்தப் புதுக்கதை
பார்க்க மறுத்தார்கள்?

பாமர மக்கள் மகிழ்ந்திட வைத்தல்
படங்களின் நோக்கமெனில்,

நாமம் குழைத்திட வோஅறி வாளர்கள்
நற்கலை கண்டார்கள்?
தூய்மைத் தமிழ்ப்படம் செந்தமிழ் நாட்டில்
தொடங்கையில் செல்வரெலாம்
தாமறிந் துள்ள தமிழ்ப்புல வோர்களைச்
சந்திப்ப தேனும்உண்டோ?

நேர்மைஇ லாவகை இத்தனை நாளும்
நிகழ்ந்த படங்களெல்லாம்
சீர்மிகு செந்தமிழ்ச் செல்வர்கள் பார்வைத்
திறத்திற் பிறந்திருந்தால்,
ஓர்தமிழ் நாட்டில் உருசிய நாட்டையும்
உண்டாக்கித் தீர்த்திடலாம்
ஆர்செய்யும் பூச்சாண்டி இங்குப் பலித்திடும்?
அடிமையும் தீர்த்திடலாம்!

## 63

## நாடகம் சினிமா நிலை

சீரியநற் கொள்கையினை எடுத்துக் காட்டச்
சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்
கோரிக்கை பணம்ஒன்றே என்று சொன்னால்
கொடுமையிதை விடவேறே என்ன வேண்டும்?
பாராத காட்சியெலாம் பார்ப்ப தற்கும்
பழைமைநிலை நீங்கிநலம் சேர்ப்ப தற்கும்
ஆராய்ந்து மேல்நாட்டார் நாட கங்கள்
அமைக்கின்றார் முன்னேற்றம் அடைகின் றார்கள்.

ஒருநாட்டின் வேரிலுள்ள பகையை நீக்கி
உட்புறத்தில் புத்தொளியைச் சேர்ப்ப தற்கும்
பெருநாட்கள் முயன்றாலும் முடியா ஒன்றைப்
பிடித்தபிடி யில்பிடித்துத் தீர்ப்ப தற்கும்
பெருநோக்கம் கொள்வதற்கும் பிறநாட் டார்கள்
நாடகங்கள், சினிமாக்கள் செய்வார். என்றன்
திருநாட்டில் பயனற்ற நாட கங்கள்
சினிமாக்கள் தமிழர்களைப் பின்னே தள்ளும்.

தமிழ்நாட்டில் நாடகத்தால் சம்பா திப்போர்
தமிழ்மொழியின் பகைவரே! கொள்கை யற்றோர்!

இமயமலை யவ்வளவு சுயந லத்தார்
இதம்அகிதம் சிறிதேனும் அறியா மக்கள்
தமைக்காக்கப் பிறர்நலமும் காக்க என்னும்
தருமகுண மேனுமுண்டோ? இல்லை இந்த
அமானிகள்பால் சினிமாக்கள் நாட கங்கள்
அடிமையுற்றுக் கிடக்குமட்டும் நன்மை யில்லை.

முன்னேற்றம் கோருகின்ற இற்றை நாளில்
மூளிசெயல் தாங்காத நல்ல தங்கை
தானேழு பிள்ளைகளைக் கிணற்றில் போட்ட
சரிதத்தைக் காட்டுகின்றார் சினிமாக் காரர்;
இந்நிலையில் நாடகத்தில் தமிழோ, காதை
இருகையால் மூடிக்கொள் என்று சொல்லும்;
தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்
செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்!

## 64

## படத்தொழிற் பயன்

### கேள்வி

நூறா யிரக்கணக் காகச் செலவிட்டு
நூற்றுக் கணக்காய்த் திரைப்படம் ஆக்கினர்
மாறான எண்ணத்தை மட்டக் கதைகளை
மக்களுக் கீந்தனர் அண்ணே—அது
தக்கது வோபுகல் அண்ணே.

### விடை

கூறும் தொகைக்காகக் கூட்டுத் தொழில்வைப்பர்
கூட்டுத் தொழில்முறை நாட்டுக்கு நல்லது!
ஏறாக் கருத்தைஇங் கில்லாக் கதைகளை
ஏற்றின ரோஅவர் தம்பி?—இது
மாறாதி ருக்குமோ தம்பி?

### கேள்வி

தன்னருந் தொண்டினில் தக்கதோர் நம்பிக்கை,
தாங்கருந் தீங்கினில் நீங்கிடும் நல்லாற்றல்,
என்னும் இவைகள் திரைப்படத் தேயில்லை
என்றைக்கும் வந்திடும் அண்ணே?—இங்
கெழுத்தாள ரேஇல்லை அண்ணே.

விடை

சென்னையைக் காட்டிவை குந்தமென் பார்ஒரு
செக்கினைக் காட்டிச்சி வன்பிள்ளை என்பார்கள்
நன்னெறி காணாத மூதேவி தன்னையும்
நான்முகன் பெண்டென்பர் தம்பி—தொலைந்
தேன்என்னும் பொய்க்கதை தம்பி.

கேள்வி

செந்தமிழ் நாட்டில் தெலுங்குப் படங்கள்!
தெலுங்கருக் கிங்கு நடிப்பெதற் காக?
வந்திடு கேரளர் வாத்திமை பெற்றார்
வளர்ந்திடு மோகலை அண்ணே?—இங்கு
மாயும் படக்கலை அண்ணே.

விடை

அந்தத் தெலுங்கு மலையாள கன்னடம்
அத்தனை யும்தமிழ் என்று விளங்கிட
வந்திடும் ஓர்நிலை, இப்படத் தாலன்றோ
வாழ்த்துகநீ யிதைத் தம்பி—இதைத்
தாழ்த்துதல் தீயது தம்பி.

கேள்வி

அங்கங் கிருந்திடும் நாகரி கப்படி
அங்கங் கிருப்பவர் பேசும் மொழிப்படி
செங்கைத் திறத்தால் திரைப்படம் ஆக்கிடில்
தீமை ஒழிந்திடும் அண்ணே—நம்
செந்தமிழ் நேருறும் அண்ணே.

விடை

கங்குல், பகல்,அதி காலையும் மாலையும்
காலத்தின் பேராய் விளங்குதல் போலே
இங்குத் தமிழ்மலை யாளம் தெலுங்கெனல்
எல்லாம் திராவிடம் தம்பி—இதில்
பொல்லாங்கொன் றில்லையே தம்பி!

## 65

# வள்ளவர் வழங்கிய முத்துக்கள்

### கட்டளைக் கலித்துறை

தெள்ளு தமிழ்நடை,
சின்னஞ் சிறிய இரண்டடிகள்,
அள்ளு தொறுஞ்சுவை
உள்ளுந் தொறும்உணர் வாகும்வண்ணம்
கொள்ளும் அறம்,பொருள்
இன்பம் அனைத்தும் கொடுத்ததிரு
வள்ளுவ னைப்பெற்ற
தாற்பெற்ற தேபுகழ் வையகமே!

வெல்லாத இல்லை
திருவள்ளு வன்வாய் விளைத்தவற்றுள்,
பொல்லாத தில்லை,
புரைதீர்ந்த வாழ்வினி லேஅழைத்துச்
செல்லாத தில்லை,
பொதுமறை யான திருக்குறளில்
இல்லாத தில்லை,
இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே!

தொன்னூற் படியில்லை!
திராவிடர் தூய கலைஒழுக்கம்
பின்னூற் படியிற்
பெறும்படி இல்லை! பிழைபடியா
அந்நூற் படிதிரு
வள்ளுவன் தந்தனன் ஆயிரத்து
முந்நூற்று முப்பதும்
முத்தாக மூன்று படியளந்தே!

கன்னல் இதுஎனக்
காட்டியே மக்கள் கடித்துணுமோர்
இன்னல் தராது
பருகுக சாறென ஈவதுபோல்
பின்னல் அகற்றிப்
பிழைதீர் நெறிஇது பேணிர்என்றே

பன்னல் உடையது
வள்ளுவன் முப்பாற் பனுவலொன்றே!

வித்திப் பிழைக்கும்
உழவனும் வேந்தனும் நாடனைத்தும்
ஒத்துப் பிழைக்க
வழிகாட்டி வள்ளுவன் ஓதியநூல்
எத்துப் பழுத்தவர்
ஏமாற்றும் ஆரியர் நான்மறைபோல்
அத்திப் பழமன்று;
தித்திக்கும் முப்பழம் ஆம்படிக்கே!

## 66

## இசைபெறு திருக்குறள்

### கசடறக் கற்க

பகவத் கீதை பகர்ந்த கண்ணனை
நல்வட மதுரைக் கச்சென நவில்வர்;
திருக்குறள் அருளிய திருவள் ளுவரோ
தென்மது ரைக்கோர் அச்செனச் செப்புவர்.
இன்னணம் நல்கூர் வேள்வியர் இயம்பினார்!

இதனால் அறிவ தென்ன வென்றால்
இருவேறு நூற்கள், இருவேறு கொள்கைகள்,
இருவேறு மொழிகள், இருவேறு பண்பாடு
உளஎன உணர்தல் வேண்டு மன்றோ?

கீதையைக் கண்ணன் தோதுள நான்மறை
அடிப்படை தன்னில் அருளினான் என்க!
அதுபோல் வள்ளுவர் அருமைக் குறளை
எதனடிப் படையில் இயற்றினார் என்றால்,
ஆரூர்க் கபிலர் அருளிய எண்ணூல்

அடிப்படை தன்னில் அருளினார் என்க!
எண்ணூல் தன்னைச் சாங்கியம் என்று
வடமொழி யாளர் வழங்கு கின்றார்;
பரிமே லழகர் திருக்குற ளுக்குச்
சாங்கியக் கருத்தைத் தாம்மேற் கொண்டே
உரைசெய் தாரா? இல்லைஎன் றுணர்க!
ஆதலின் அவ்வுரை அமைவில தாகும்!

சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவர் எந்த மதத்தையும் சார்கிலார்!
சாங்கியம் மதமன்று; தத்துவ நூலே!
பரிமே லழகர் பெருவை ணவரே.
மதமிலார் நூற்கு மதமுளார் உரைசெயின்
அமைவ தாகுமோ? ஆய்தல் வேண்டும்.

திருவள் ளுவர்தாம் இரண்டா யிரமெனும்
ஆண்டின்முன் குறளை அளித்தார் என்பர்
ஆயிரத் தெழுநூ றாண்டுகள் கழிந்தபின்
பரிமே லழகர் உரைசெய் துள்ளார்
என்பதும் நினைவில் இருத்தல் வேண்டும்.

பரிமே லழகர் உரையோ வள்ளுவர்
திருவுள் ளத்தின் திரையே ஆனது!
நிறவேறு பாட்டை அறவே ஒதுக்கிய
தமிழ்த்திரு வள்ளுவர் அமிழ்தக் கொள்கையை
நஞ்சென்று நாட்டினார் பரிமே லழகர்.

பழந்தமிழ் நாட்டின் பண்பே பண்பென
அன்னார் ஆய்ந்த அறமே அறமென
ஒழுக்கமே ஒழுக்க விலக்கணம் ஆமென
வள்ளுவர் நாட்டினார். தெள்ளு தமிழர்
சீர்த்தியைத் திறம்பட எடுத்துக் காட்டினார்.
பரிமே லழகர் செய்த உரையில்
தமிழரைக் காணுமா றில்லை. தமிழரின்
எதிர்ப்புறத் துள்ள இனத்தார் மேன்மையின்
செருகலே கண்டோம்; செருகலே கண்டோம்!
வடநூல் கொண்டே வள்ளுவர், குறளை
இயற்றினார் என்ற எண்ணமேற் படும்படி
உரைசெய் துள்ளார் பரிமே லழகர்!
எடுத்துக் காட்டொன் றியம்பு கின்றேன்;
"ஒழுக்க முடைமை, குடிமை" என் பதற்கு
உரைசொல் கின்றார் பரிமே லழகர்:
"தத்தம் வருணத் திற்கும், நிலைக்கும்
ஓதப் பட்ட ஒழுக்கந் தன்னை
உடைய ராதல்"—உரைதா னாஇது?

"ஒழுக்க முடைமை, உயர்தமிழ்க் குடிகளின்
தன்மை யுடைய ராதல்"—தகும் இது;
குடிமை என்பது குடிகளின் தன்மையே!
"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இல்' எனப் பகர்ந்ததில்
பழங்குடி குறித்த பாங்கும் அறிக.
நன்றுயாம் நவில வந்த தென்எனில்
திருவள் ளுவரின் திருக்குறள் தன்னைக்
கசடறக் கற்க; கற்றே
இசையொடு தமிழர் இனிது வாழ்கவே!

## 67

## வாழ்வு

அச்சம் தவிர்ந்தது வாழ்வு—நல்
லன்பின் விளைவது வாழ்வு
மச்சினில் வாழ்பவ ரேனும்— அவர்
மானத்தில் வாழ்வது வாழ்வு!
உச்சி மலைவிளக் காக— உல
கோங்கும் புகழ்கொண்ட தான
பச்சைப் பசுந்தமிழ் நாட்டில்— தமிழ்
பாய்ந்திட வாழ்வது வாழ்வு!

மூதறி வுள்ளது வாழ்வு— நறும்
முத்தமிழ் கற்பது வாழ்வு!
காதினில் கேட்டதைக் கண்ணின்— முன்
கண்டதை ஓவியம் ஆக்கும்
பாதித் தொழில்செய லின்றி— உளம்
பாய்ச்சும் கருத்திலும் செய்கை
யாதிலும் தன்னை விளக்கும்— கலை
இன்பத்தில் வாய்ப்பது வாழ்வு!

ஆயிரம் சாதிகள் ஒப்பி— நரி
அன்னவர் காலிடை வீழ்ந்து
நாய்களைப் போல்தமக் குள்ளே— சண்டை
நாளும் வளர்க்கும் மதங்கள்
தூயன வாம்என்று நம்பிப்— பல

தொல்லை யடைகுவ தின்றி
நீஎனல் நானெனல் ஒன்றே— என்ற
நெஞ்சில் விளைவது வாழ்வு!

## 68

## கொட்டு முரசே!

எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்ததென்று
கொட்டுமுரசே— வாழ்வில்
கட்டுத் தொலைந்ததென்று
கொட்டு முரசே!

இல்லாமை என்னும்பிணி
இல்லாமல் கல்விநலம்
எல்லார்க்கும் என்றுசொல்லி
கொட்டுமுரசே— வாழ்வில்
பொல்லாங்கு தீர்ந்ததென்று
கொட்டு முரசே!

சான்றாண்மை இவ்வுலகில்
தோன்றத் துளிர்த்த தமிழ்
மூன்றும் செழித்ததென்று
கொட்டுமுரசே— வாழ்வில்
ஊன்றிய புகழ்சொல்லிக்
கொட்டு முரசே!

ஈன்று புறந்தருதல்
தாயின் கடன்! உழைத்தல்
எல்லார்க்கும் கடனென்று
கொட்டுமுரசே!— வாழ்வில்
தேன்மழை பெய்ததென்று
கொட்டு முரசே.

# மூன்றாம் தொகுதி

பிரிந்த க. பிச்சையனார் பெயர் வாழ்த்து வெளியீடு

– பாரதிதாசன்

# கடல்மேற் குமிழிகள்

## கதை உறுப்பினர்

### திறல்நாடு

| | |
|---|---|
| புலித்திறல் | மன்னன் |
| புலித்திறல் மன்னி | மனைவி |
| வையத்திறல் | மகன் |
| செம்மறித்திறல் | மன்னன் தம்பி |
| பொன்னி | மன்னன் கொழுந்தி |
| ஆண்டி | காவற்காரன் |
| அழகன் | மகன் |
| ஆண்டாள் | பூக்காரி |
| மின்னொளி | மகள் |

### பெருநாடு

| | |
|---|---|
| பெருநாட்டான் | அரசன் |
| பெருந்திரு | மகள் |
| பிச்சன் | அமைச்சன் |

### மலைநாடு

| | |
|---|---|
| மலையன் | அரசன் |
| மலர்க்குழல் | மகள் |

**இடம்:** திறல் நாட்டின் அரண்மனைத் தனியிடம்.
**நேரம்:** பகல் உணவுக்குப் பின்.
**உறுப்பினர்:** புலித்திறல் மன்னன், அவன் தம்பி செம்மறித் திறல்.

**அகவல்**

புலித்திறல் உண்டபின் பொன்னொளிர் கட்டிலில்
ஒருபுறம் தனிமையில் உட்கார்ந் திருந்தான்.
செம்மறித் திறல்அங்கு வந்தான்.
"இம்மொழி கேட்பாய்" என்றான் வணங்கியே.

### விருத்தம்

"பொன்னியை மணக்க வேண்டும்
அதைத்தானே புகல வந்தாய்?
பொன்னிஎன் கொழுந்தி. நீயோ
புலைச்சியின் மகனே அன்றோ?
என்னருந் தந்தை, வேட
ரினத்தவள் தன்னைக் கூடி
உன்னைஇங் கீன்றார், என்பால்
உறவுகொண் டாட வந்தாய்?"

புலித்திறல் இவ்வா றோதப்,
"புலைச்சி என் தாய்! என் தந்தை
நிலத்தினை ஆளும் வேந்தன்
நின்தந்தை அன்றோ அண்ணா?
புலப்பட உரைக்கின் றேன்நான்,
பொன்னிஉன் கொழுந்தி என்னைக்
கலப்புறு மணத்தாற் கொள்ளக்
கருதினாள் மறுப்ப தேனோ?"

என்றுசெம் மறிதான் கூற
புலித்திறல் "இராதே" என்றான்.
பொன்னிஅந் நேரம் ஆங்கே
பொதுக்கென எதிரில் வந்து
தன்எழில் மூத்தார் காலைத்
தளிர்க்கையால் பற்றி, "என்னை
உன்தம்பி மணக்கும் வண்ணம்
உதவுக" என்று சொன்னாள்.

"தமக்கையை எனக்க ளித்தாய்
சாதியில் இழிவு பெற்று
நமக்கெல்லாம் பழிப்பா வானை
நங்கைநீ நாடு கின்றாய்
இமைக்குமுன் புறஞ்செல் உன்றன்
எண்ணந்தான் மாறு மட்டும்
அமைக்கின்றேன் உன்னை என்றன்
அரண்மனைக் காவல் தன்னில்"

என்றுகா வலரைக் கூவ,
இருவர்வந் தழைத்துச் சென்றார்.
நின்றசெம் மறித்தி றற்கு
நிகழ்த்துவான்; "அரண்ம னைக்குள்
என்றுமே நுழைதல் வேண்டாம்
ஏகுக" என்று சொல்ல,
நன்றெனக் குன்றத் தோட்செம்
மறித்திறல் நடக்க லானான்.

## 2

இடம்: அரண்மனையில் ஒரு காவல் துறை.
நேரம்: மாலை.
உறுப்பினர்: பொன்னி, புலித்திறல் மன்னி, காவலர்.

### அகவல்

உலக மக்களில் உயர்வுதாழ் வுரைக்கும்
கலக மக்களைக் கருத்தால் தூற்றிக்
காதற் கண்ணீர் வெளிப்பட
மாது நின்றனள் வன்காப் பறையிலே.

### கண்ணி

"என்ன உனக்கில்லை பொன்னி?— உனக்
கேனிந்த எண்ணம்? புலைச்சி
தன்மகன் மேல்மைய லுற்றாய்— எமைத்
தாழ்வு படுத்த நினைத்தாய்"
என்று புலித்திறல் மன்னி— மிக
ஏசிக்கொண் டேஎதிர் வந்தாள்!
"இந்நில மக்கள்எல் லோரும்— நிகர்"
என்று புகன்றனள் பொன்னி.

"நாலு வகுப்பினர் மக்கள்— எனில்
நானிலம் ஆள்பவர் நாமே
மேலொரு பார்ப்பனர் கூட்டம்— உண்டு!
மூன்றா மவர்பொருள் விற்போர்!
காலத னாலிட்ட வேலை— தனைக்
கைகளி னாற்செய்து வாழும்

கூலி வகுப்பினன் அன்னோன்"— என்று
கூறி முடித்தனள் மன்னி.

"ஆளப் பிறந்தவர் தாமும்— மே
லானவர் என்பவர் தாமும்
கூளங்கள் அல்லர்; கடல்மேல்— காணும்
குமிழிகள் அன்னர் என்பேன்
மாளாப் பெருங்கடல் மக்கள்— அங்கு
மறைபவர் ஆள்பவர் என்பேன்
வேளை வரும் அக்கா— தீரும்
வேற்றுமை" என்றனள் பொன்னி.

"உன்னை மணந்திட வேண்டி— இவ்
வுலகிடை எண்ணிக்கை யில்லா
மன்னர்கள் உள்ளனர் பொன்னி— உன்
மனநிலை மாறுதல் வேண்டும்
அன்னது மட்டும் கிடப்பாய்— பிறர்
அண்டுதல் இல்லா அறைக்குள்
என்னடி வேண்டும் இப்போது— சொல்"
என்றாள் புலித்திறல் மன்னி.

"கன்னங் கறுப்புடை ஒன்றும்— மாற்றிக்
கட்டிடப் பின்னொன்றும் வேண்டும்"
என்றே உரைத்தனள் பொன்னி— ஒன்
றீந்தாள் புலித்திறல் மன்னி.
"என்னுயிர் போன்றவன் தன்னை— இனி
யானடைந் தின்புறு மட்டும்
என்னுடைநீ" என் றுடுத்தாள்— நகை
யாவும் கழற்றினள் பொன்னி.

### 3

இடம்: ஆற்றிடை என்னும் சிற்றூர்.
நேரம்: நிலவெறிக்கும் இரவு.
**உறுப்பினர்:** செம்மறித்திறல்.

**அகவல்**

இந்நி லத்தில் இருகுரல்— ஒன்று,
"மன்னர் நாங்கள்" என்பது; மற்றொன்று;

"பெரு நிலத்தில் யாம் பெருமக்கள்" என்பதாம்.
சரிநிகர் மக்கள் என்னும் அரியதோர்
அமைதிக் குரலினை ஆர்தல் எந்நாள்?
சமையம் சாதி தவிர்வ தெந்நாள்?
என்றுசெம் மறித்திறல் கறுப்புடை
ஒன்றினை ஏந்தி உரைப்பான் ஆங்கே.

### பஃறொடை வெண்பா

"மன்னர் பலரும் மணக்க இருக்கையிலும்
என்னை மணப்பதென்றே எண்ணினாள் எண்ணியதால்
என்ன இடர்ப்பட்டாள்! ஏச்செல்லாம் ஏற்றாளே!
அன்னவளை நான்மணக்கும் ஆவலினால் வாழ்கின்றேன்!

o o o

தன்னன்பு மூத்தாளைத் தானிழக்க வுந்துணிந்தாள்
இன்னந்தன் மேன்மை எலாமிழக்கவுந் துணிந்தாள்
என்னன்பு நோக்கினிலே யான் நோக்கத் தன்னருமைத்
தென்னம்பா ளைச்சிரிப்பால் தின்னுவளே என்ஆவி!

o o o

போகுமட்டும் பூரிப்பாள் போகவிடை பெற்றுப்பின்
ஏகுமட்டும் பின்னழகு பார்த்திருப்பாள் யான்திரும்பித்
தோகையினை மட்டாக நோக்கினால் தான்குனிந்து
சாகுமட்டும் நான்மறவாப் புன்னகையைச் சாய்த்திடுவாள்.

o o o

"மூத்தாள் மணாளன் முடிவேந்தைக் கேட்டபின்
போய்த்தார் மணமன்றில் பூண்போம்; பெருமக்கள்
வாழ்த்திடும் வாழ்த்தால் மகிழ்வோம்பின், பஞ்சணையில்
தீர்த்தோம்நம் ஆவல்எனச் சேர்ந்திருப்போம் என்றுரைப்பாள்.
பொன்னால் மணியால் புனைந்த நகையிழ்ந்தாள்
தன்னால் முடியாத தொல்லையினால் சாய்ந்தாளோ!

o o o

மின்னால் செயப்பட்ட மெல்லிடைக்கு நேர்ந்தவெல்லாம்
என்னால் என்னால் என்னால் காராடை ஏற்கிறேன்!

o o o

தண்ணிலவு கொண்ட மகிழ்ச்சி தனைக்கருதி
வெண்மை உடையணிந்து விண்ணில் துலங்குவதாம்
துன்பம் உடையேன் கரிய துகில்பூண்டேன்
என்னருமைப் பொன்னியைநான் எந்நாள் மணப்பேனோ?

o o o

பொன்னியும் நானும்ஒரு காதற் புனல்முழுகா
திந்நாள் தடுப்பதெது?" "மண்ணாள ஏற்றவர்கள்"
"இன்னலுற ஏற்றவர்கள்" என்னும் பிளவன்றோ?
இந்நிலையை மாற்றா திரேன்.

4

## இருபது ஆண்டுகளின் பின் ஒருநாள்

**இடம்:** அரண்மனை
**நேரம்:** மாலை.
**உறுப்பினர்:** புலித்திறல் மன்னி, அவள் மகன் வையத்திறல், ஆண்டாள், அவள் மகள் மின்னொளி, காவற்காரன் மகன் அழகன்.

**அகவல்**

மன்னியைச் சுமந்த பொன்னூசல், கூடத்தில்
தென்னாட்டுத் தோழியர் செந்தமிழ்ப் பாட்டில்
மிதந்துகொண் டிருந்தது மென்கை அசைத்ததால்!
எதிரில் ஆண்டாள், இவள்மகள் மின்னொளி
மன்னி ஆணைக்கு வாய்பார்த் திருந்தனர்
மன்னி திருவாய் மலர்ந்தருள் கின்றாள்;
"வையத் திறல்நம் பையன் பிறந்தநாள்!
நாளை! அவ்விழா நன்மலர் அனைத்தும்
வேளையோடு நீதரல் வேண்டும். அதன்விலைப்
பொன்னும் பெறுவாய், பரிசிலும் பூணுவாய்.
மின்னொளி யுடன் நீ விருந்தும் அருந்தலாம்."
என்றாள்! ஆண்டாள் இளித்தாள்!
நின்ற மின்னொளி ஆழ்ந்தாள் நினைவிலே.

**கண்ணிகள்**

வாழிய வாழிய— ஊசல்
மகிழ்ந்தாடு கின்றனை மன்னீ

தோழியர் ஆட்டினர் ஊசல்— கை
சோர்ந்திட நின்றனர் மன்னி
தோழியரும் சற்று நேரம்— ஆடச்
சொல்லுக என்னருந் தாயே
வாழிய வாழிய மன்னி— அவர்
மகிழ்ந்தாடவும் செய்க தாயே!"

என்றனள் மின்னொளி தானும்!— மன்னி
எள்ளி நகைத்துப் புகல்வாள்;
"மன்னியும் தோழியர் தாமும்— நில
மாந்தரில் ஒப்புடை யாரோ?
என்னடி மின்னொளி இன்னும்— உனக்
கேதும் தெரிந்திடவில்லை?"
என்றுரைத் தாள்! அந்த நேரம்— மகன்
'என்ன' வென் றேஅங்கு வந்தான்.

"தூண்டா விளக்கேஎன் கண்ணே— என்
தூய வையத் திறல் மைந்தா!
ஆண்டாள் மகள் சொன்ன தைக்கேள்— ஊசல்
ஆட்டிய தோழிகள் ஆட
வேண்டுமென் றேசொல்லி நின்றாள்— இவள்
வேற்றுமை காணாத பேதை
வேண்டாம் இப்பேச்சுக் கள்என்றேன்" —என்று
விண்டனள் சேயிடம் மன்னி!

மாவடு வொத்தகண் ணாளை— இள
வஞ்சிக் கொடிக்கிணை யாளைத்
தாவிநல் வாயிதழ் ஓரம்— உயிர்
தாக்கிடும் புன்சிரிப் பாளைத்
"தேவைஉன் எண்ணமும் பெண்ணே— அதில்
தீங்கில்லை வையத்துக்" கென்றான்.
பாவையும் அம்மொழி கேட்டாள்— எனி
பாங்கியர் ஆடுதல் காணாள்.

அழகனும் அவ்விடம் வந்தான்— தன்
அன்புறு தோழனை நோக்கி
"எழுதிய ஓவியந் தன்னை— நீ
ஏன்வந்து பார்த்திட வில்லை?
பிழையிருந் தால் உரைப் பாயே— என்

பின்வரு வாய்" என்று சொல்ல
வழியில்லை தப்புதற் கென்றே— அவ்
வையத் திறல்பிரிந் திட்டான்.

## 5

இடம்: அரண்மனைக் கூடம்.
நேரம்: நடுவேளை.
உறுப்பினர்: ஆளவந்தார் கூட்டம், புலித்திறல் மன்னன், வையத்திறல், மின்னொளி, ஆண்டாள், தோழியர்

**அகவல்**

திறல்நாட்டு மன்னனின் திருமகன் இருபதாண்டு
நிறைவு விழாவில் நிகழ்ந்த விருந்தில்
ஆளப் பிறந்தார் அனைவரும்
வேளையோடு வந்தார் விருப்போ டுண்ணவே

**கண்ணிகள்**

பத்தாயி ரம்பெயர்கள் — அரண்மனைப்
பாங்கிலோர் கூடத்திலே
ஒத்த தலைவாழை — இலைக்கெதிர்
உண்டிட வந்தமர்ந்தார்
எத்தாவி லும்கிடையா — தெனும்படி
எண்ணி ரண்டுவகையாம்
புத்தம் புதிய கறிகள் — நறுமணம்
பூரிக்க வேபடைத்தார்.
தித்திக்கும் பண்ணியங்கள், — அப்பவகை
தேடரு முக்கனிகள்.
தைத்திடும் கல்லையிலே — நறுநெய்யும்
தயிர்ஒரு குடமும்
அத்தனை பேர்களுக்கும் — எதிரினில்
அமைத்து நெய்ச்சோறு
முத்துக் குவித்தாற்போல் — பருப்போடு
முயங்க வேபடைத்தார்!
முன்உண்ண அள்ளிடுவார் — உயர்த்திய
முழங்கை நெய்வழியும்
பின்உண்ண ஊன்றியகை — கறிவகை

பெற்றிட ஆவலுறும்
மன்னவன் உண்டிருந்தான் – அவன்மகன்
வையத் திறலினுடன்!
இன்ன நிலைமைஎல்லாம் – அரண்மனை
ஏழையர் பார்த்திருந்தார்.

ஏழைப் பணியாளர் – ஒருபுறம்
ஏங்கி இருந்தார்கள்;
கூழைக் கரைத்தவுடன் – ஒருபுறம்
கூப்பிடப் பட்டார்கள்
தோழியர் கூழ்குடித்தார் – ஒருபுறம்
தோகைநல் மின்னொளிதான்
தாழையின் தொன்னையிலே – கூழினைத்
தாங்கிக் குடித்திருந்தாள்.

விழவு தீர்ந்தவுடன் – சிறப்புடன்
விருந்து தீர்ந்தவுடன்
அழகு மின்னொளிபால் – அவள்தாய்
ஆண்டாள் "என்மகளே,
விழவு மிக்கநன்றே – அவ்விருந்தும்
மேல்!" என்று சொல்ல, அவள்!
"இழவு பெற்றார்கள் என்அன்னாய்
ஏழையர்" என்றுரைத்தாள்.

"ஆளும் இனத்தார்க்கும் – பார்ப்பனர்
அத்தனை பேர்களுக்கும்
தாளா மகிழ்ச்சியன்றோ!
தனிச்சி றப்பன்றோ!
ஆளாகி வாழும்இடம் – விருந்துண்ண
ஆவலும் கொள்வதுவோ?
நாளும் அவர்மகிழ்ச்சி – நம் மகிழ்ச்சி!"
என்று நவின்றாள் தாய்!

6

இடம்: அரண்மனையில் தனியறை.
நேரம்: உணவுக்குப் பின், இரவு.
உறுப்பினர்: வையத்திறல், அழகன்

### அகவல்

நிலவு குளிர்வார்க்கக் காற்று நெளிய,
அலைகடல் இசையை அளிக்க மலர்சேர்
பஞ்சணையில் தனியே படுத்தான்,
நெஞ்சில் அவள்கூத்து நிகழ்த்துகின் றாளே!

### கண்ணிகள்

மின்னொளி இன்முக நிலவே – நிலவு!
விண்ணில வேஅக லாயோ!
அன்னவள் இன்சொல் இசையே – இசையாம்
ஆர்கடல் வாயடக் காயோ!
கன்னருங் கருங்குழல் மணமே – மணமாம்!
காட்டில் மலர்காள் அகல்வீர்!
என்ன உரைப்பினும் இனியும் – எனையேன்
இன்னற் படுத்துகின் றீர்கள்?

காவற் பணிசெய்யும் அழகன் – இன்னும்
காணப் படவில்லை இங்கே!
ஆவலெல் லாம்அவ னிடமே – கூறி
ஆவன செய்திட வேண்டும்.
பாவைஅம் மின்னொளி தன்னை – நானே
பார்க்கவும் பேசவும் வேண்டும்;
தேவைப் படுமிந்த நேரம் – தெரிந்தும்
தீமை புரிந்திடு கின்றான்.

என்று துடிக்கின்ற வேளை – அழகன்
"இளவரசே" என்று வந்தான்.
"ஒன்றுசெய் ஒன்றுசெய் அழகா – அழகா!
ஒண்டொடி வீட்டுக்குச் செல்வாய்
நன்று கிழவனை நோக்கிப் – பழங்கள்
நாலைந்து கொண்டுவ ரச்சொல்
சென்றிடு வான்பழத் தோட்டம் – நோக்கிச்
செல்லுக" என்றான் இளங்கோ!

(அழகன் போகின்றான்)

## 7

**இடம்: சிற்றூர், மின்னொளி வீடு**
**நேரம்: நள்ளிரவு**
**உறுப்பினர்: மின்னொளி, அவள் தந்தையாகிய கிழவன், அழகன், வையத்திறல்**

### அகவல்

'அன்னைஇன் றிரவில் அரசர் அரண்மனை
தன்னில் தங்கினாள் போலும்! தந்தையே,
சிறிது நேரம், செந்தமிழ்ப் பாட்டொன்று
பாடுக' என்றாள் மின்னொளி!
பாடுமுன் வந்தான் அழகன் பரிந்தே!

o o o

### பஃறொடை வெண்பா

"அன்பு முதிர்ந்தவரே. ஐயா, விரைவில்நீர்
மன்னர் மகன்விரும்பும் மாங்கனிகள் ஐந்தாறு
தூயனவாய்க் கொண்டுவரத் தோப்புக்குப் போய்வாரும்
வாயூறிப் போகின்றான் வையத் திறல்அங்கே
என்றான் அழகன், உடன் ஏகினான் அம்முதியோன்!

o o o

"மன்றிடை ஆடும் மயிலேநல் மின்னொளியே!
மாவின் கனிமீது மையலுற்ற நம்இளங்கோ,
மாவின்மேல் ஏறியிங்கு வந்திடுவான் இந்நேரம்!'
என்றான் – இளமங்கை "ஏன் நீ நடந்துவந்தாய்?
மன்னன் மகன்குதிரை ஏறி வருவதென்ன?
உன்னிளங்கால் நோகா திருக்குமா? மன்னன்மகன்
தன்கால்கள் மட்டுமா மென்கால்கள்?" என்றே
அழகன் நிலைமைக் கிரங்கி அவனை
முழுதன்பால் போக்கி முழுநிலவு சாய்த்திருந்தாள்.
வையத் திறல்வந்தான், வஞ்சி வரவேற்றாள்.
கையால் தடுக்கிட்டாள் காற்சிலம்பால் பாட்டிசைத்தாள்
இன்புருக் காட்டி எதிரினிலே நின்றிருந்தாள்;
அன்பால் 'அமர்க' என வையத் திறல் சொன்னான்;
சற்றே விலகித் தரையினிலே கையூன்றி

மற்றுமிரு வாழைத் துடைகள் ஒருக்கணித்து
மின்னொளியும் உட்கார்ந்தாள் மேலாடை தான்திருத்தி

"மின்னொளியே வீட்டில் விருந்தும் அருந்தினையோ?"
என்று வினவினான், கேட்ட எழில்வஞ்சி,
"அந்தப் பெரியவிருந் தேழைக் கருத் 'தினை'யோ?
இந்தவகை நீமட்டும் ஏன்தான் அருந்தினையோ?
சூழ்குடித்தார் இவ்வூர்க் குடித்தனத்தார் எல்லோரும்
வாழ்வுக்கே வந்தவர்கள் வாய்ப்பாய் விழுங்கினரே"
என்றாள் முகஞ்சுருக்கி. "இன்னல் உளங்கவர
மன்னர் வகுப்பென்றும் மற்றவகுப் பென்றும்
இந்நாட்டில் இல்லா தினிமேற் புரிந்திடுவேன்"
என்றான்! அவ்வேளை முதியோன் எதிர்வந்து
"தித்திக்கும் மாம்பழங்கள் தேடிக் கொணர்ந்தேன்நான்
பத்துக்கு மேலிருக்கும் பாராய் இளங்கோவே"
என்றான். பழத்தோடு வையத் திறலோ, தன்
குன்றை நிகர்த்த குதிரைஏ றிச்சென்றான்!

o o o

"போய்வருவேன்" என்றான் அழகன்; இளவஞ்சி
வாயு மிரங்க; மனமிரங்க "நீநடந்தா
போகின்றாய்?" என்றாள். "புதிதல்ல" என்றழகன்
ஏகலுற்றான் மின்னொளிஎய ஏய்த்து.

## 8

இடம்: அரண்மனை
நேரம்: காலை
உறுப்பினர்: பெருநாட்டின் அமைச்சன், புலித்திறல்.

அகவல்

அரியணை அமர்ந்த அரசனின் எதிரில்
பெருநாட் டமைச்சன் பிச்சனும் அமர்ந்தே
"அரசே, உன்னைநான் அணுகிய தேன்எனில்
பெருநாட்டு மன்னனின் ஒருமக ளான
பெருந்திரு என்னும்அப் பேரெழி லாளைஉன்
திருமகன் வையத் திறல்ம ணப்பது

பெருவான், நிலாவைப் பெறுவ தாகும்!
இந்த உறவினால், இவ்வை யத்தில்
எந்தப் பகைவரும் இல்லா தொழிவர்;
அதனால், திறல்நாடும் அப்பெரு நாடும்
எதனாலும் மேன்மை எய்துதல் கூடும்!
திருவுளம் யா" தெனக் கேட்டான்.
அரசன் மகிழ்ச்சியால் அறைவான் ஆங்கே.

கண்ணிகள்

மிக்கமகிழ்ச்சி அமைச்சே — மிக
மேன்மை யுடையதிவ் வெண்ணம்
சிக்கல்கள் பற்பல தீரும் — பல
தீமைகள் மாய்வது திண்ணம்;
திக்கை நடுங்கிட வைக்கும் — இத்
திருமண வுறவு! மெய் யன்றோ!
விக்குள் எடுக்கையில் தண்ணீர் — உன்
விண்ணப்பம் என்றனன் மன்னன்.
"வையத் திறற்கிதைச் சொல்க — அவன்
மணந்துகொள் ளத்தக்க வண்ணம்
செய்க எனக்கிதை நாளை — நீ
தெரிவிக்க" என்றனன் பிச்சன்.
"செய்திடு வேனிதை இன்றே — நான்
செப்பிடுவேன் பதிலை நாளை!
துய்யஎன் மன்னி கருத்தும் — கேட்டுச்
சொல்லுவேன்" என்றனன் மன்னன்.

9

**இடம்:** அரண்மனை மகளிர் இல்லம்
**நேரம்:** முதிர்காலை
**உறுப்பினர்:** புலித்திறல், மன்னி.

அகவல்

பாங்கியர் அப்புறப் படுத்தப் பட்டனர்
ஆங்கொரு கட்டிலில் அரசனும், மன்னியும்
விரைவில்வந் தமர்ந்தனர்; வேந்தன் முகத்தில்

புதுமை கண்டாள் மன்னி!
அதனை யறிய ஆவல் கொண்டனளே!

**கண்ணிகள்**

"பெண்ணேஉன் மகனுக்குப் பெருநாட்டான் – தன்
பெண்ணைக் கொடுப்பதெனும் நல்ல செய்தியைக்
கொண்டுவந்தான் அமைச்சன் என்ன சொல்கின்றாய் – உன்
கொள்கையும் தெரிந்திட வேண்டு மல்லவோ?
அண்டைநாட் டரசனின் உறவாலே – நமக்
கல்லல் குறையுமெனல் உண்மை யல்லவா?
தொண்டைக் கனிநிகர்த்த இதழாளே – எண்ணம்
சொல்லுக" என்று மன்னன் சொன்ன அளவில்,
"அண்ணன் எனக்கிருக்க மகளிருக்கப் – பெண்
அயலிற் கொள்வது தக்க தல்லவே!
வெண்ணெயை வைத்துநறு நெய்க்கழுவதா – என்ன
வேடிக்கை" என்றுமன்னி துன்பமடைந்தாள்!
"கண்ணுக்குப் பிடித்தவள் அண்ணன்மகளா – அக்
கட்டழகியா இதனை, மைந்தனிடமே
எண்ணியுரைக்கும்படி சொல்லிவிடுவோம் – அவன்
எண்ணப்படி நடப்பம்" என்றனன் மன்னன்.
"சேயை அழைத்துவரச் சொல்லுக" வென்றான் – அவன்
"தேரேறி நகர்வலம் சென்றனன்" என்றாள்!
ஆயினும் காவலரை விரைந்தனுப்பி – இங்
கழைப்பிக்க வேண்டுமென" மன்னன்உரைத்தான்
"தூயஎல் லைப்புறத்தின் காட்சிதனையே – அவன்
துய்த்திடச் சென்றதுண்டு வந்தபிறகே
ஆயஇச் செய்திதனை அறிவிக்கலாம்" – என
அரசி அரசனிடம் சொல்லி மறுத்தாள்!

## 10

இடம்: அரண்மனைத் தனியறை.
நேரம்: காலை.
உறுப்பினர்: மன்னி, வையத்திறல், மன்னன்.

**அகவல்**

வையத் திறலை மன்னி யழைத்துத்
"துய்ய மகனே, வையத் திறலே,

உன்மணம் பற்றி உன்னிடம் பேச
மன்னர் தேடினார் மகன்இல்லை என்று
சொன்னேன். உன்னை முன்னே நான்கண்
டென் கருத்தினை இயம்ப எண்ணினேன்.
பெருநாட் டானின் 'பெருந்திரு' தனைநீ
திருமணம் செய்யத் திட்ட மிட்டனர்.
என்னருந் தமையன் ஈன்ற பெண்ணாள்
உன்னரும் பண்புக் கொத்தவள் அன்றோ?
அழகிற் குறைவா? அன்பிற் குறைவா?
ஒழுக்கம் அனைத்தும் ஒருரு வானவள்
அவளைநீ மணப்ப தாக
அவரிடம் கூறுவாய்" என்றாள் அரசியே!

**கண்ணிகள்**

"ஆய கலைகள் அறுபத்து நான்கையும் அம்மா — நான்
ஆய்ந்தபின் னேமணம் ஆர்ந்திட எண்ணினேன் அம்மா
தீயன நல்லன காணாத இப்பரு வத்தே — ஒரு
சேயிழை யோடறம் செய்வதெவ் வாறுளம் ஒத்தே?
தூயஇந் நாட்டினை ஆளுந் திறம்பெற வேண்டும் — நான்
தொல்லறி வோரிடம் கல்வி பயின்றிட வேண்டும்
பாயும் பகைவர் தமக்கிடை யேஉல காள — எனைப்
பாரோடு போராடும் வண்ணம் பயிற்றுக" என்றான்.
வையத் திறல்சொன்ன பேச்சினைக் கேட்டனள் மன்னி — தன்
வாயை அடக்கினள் ஏதும்சொல் லாம லிருந்தாள்.
பையவந் தானந்த நேரத்தி லேஎழில் மன்னன், — 'எந்தப்
பாவையை நீமணம் செய்திட எண்ணினை" என்றே
துய்யதன் மைந்தனைக் கேட்டனன். அன்னையுரைப்பாள் — "அவன்
துய்க்க நினைப்பது பல்கலை யே" என்று சொன்னாள்.
வையக மாளும் புலித்திறல் மன்னவன் கேட்டே — தன்
மைந்தன் கருத்தினை நன்றெனச் சொல்லி நடந்தான்.

## 11

இடம்: அரண்மனை
நேரம்: மறுநாட் காலை
உறுப்பினர்: புலித்திறல், பிச்சன்.

### அகவல்

ஏந்தலைப் பிச்சன் எதிர்பார்த் தபடி
அரண்மனைத் தனியிடத் தமர்ந்தி ருந்தான்.
புலித்திறல் ஏந்தல் புறப்படு கதிர்போல்
வந்தான் பிச்சன் மழைநாட் குருவிபோல்
ஆவலோடு வணங்கி அமர அமர்ந்தான்
"என்மகன் வேறோர் எழிலுறு பாவைபால்
தன்உளம் போக்கினான்" என்றான் மன்னன்.
"அவள்யார்" என்றான் கவலையொடு பிச்சன்.
"பல்கலைப் பெண்" என்று மன்னன்
சொல்ல, அமைச்சன் சொல்வான் எழுந்தே.

### கண்ணிகள்

"வையத் திறல்மொழி பொய்யே – அவன்
மணம் வெறுத்திடவில்லை
தையல் ஒருத்தியை மைந்தன் – உள்ளம்
தாவியிருப்பது மெய்ம்மை.
துய்யவ னாம்பெரு நாட்டான் – பெற்ற
தோகை மணத்தை விலக்கப்
பொய்யுரைத் தான்!கலை மீது – நெஞ்சு
போனதென் றான்! அது பொய்யே!
காளை முகத்தினிற் கண்டேன் – உயிர்
காதல் வருத்தத்தின் வீச்சு
மீளவும் மைந்தனி டத்தே – மண
மேன்மையைச் சொல்லுக" என்றான்.
"காளை யுரைத்தது மெய்யே – அவன்
கருத்தில் ஐயுறவில்லை
மீளவும் மைந்தனிடத்தே – சொல்லல்
வீணென்று மன்னவன் – சொன்னான்.
"மலையன் எம்பகை மன்னன் – அவன்
மகளைக் கட்டுவ தால்உன்
நிலையு யர்ந்திடும் என்றே – நீ
நினைத்தி ருக்கவும் கூடும்;
பலபல நினையாதே – எம்
பாவையை ஒப்புக" என்றான்.

"கலை பயில்க என் மைந்தன்" — என்று
கழறினன் புலித்திறலே.

(அமைச்சன் சென்றான்)

## 12

**இடம்:** திறல்நாட்டின் வயல்வெளி
**நேரம்:** காலை
**உறுப்பினர்:** காருடை பூண்ட செம்மறித்திறல், வயலுழுவோர்.

**அகவல்**

மேழி பிடித்த "கை" மேலாம் இடது "கை"
தாழாக் கோல் "கை" வலது "கை" யாக
முழங்கால் சேற்றில் முழுக, வாய்திறந்து
பழந்தமிழ் பாடினர் வயலில் உழுவோர்.
அவ்வழி அணுகிய செம்மறித் திறலின்
விழிகள் தொழிற்படும் உழவர்பால் விரைந்தன
கருத்தோ கடலுலகு நிலைமையில் ஆழ்ந்தது!
செம்ம றித்திறல் பாடுவான்
அம்முழு துழைப்போர் அகத்தை நோக்கியே.

**பாட்டு**

**எடுப்பு**

ஆளுவோர் என்றே சிலரை
அமைத்த துண்டோ நீ உலகே? —

**உடனெடுப்பு**

மீளுமா றின்றி மிகுபெரு மக்களைக்
கருவினில் விளைத்ததும் உண்டோ? —

**அடிகள்**

வாளொடு பெற்ற துண்டோ சிலரை?
வடுவொடு பெற்றாயோ பலரை?
நாளும் உழைப்பவர் தமைப்பெற்ற தாயே,
நயவஞ்சகரைப் பெற்று ளாயோ?
மேலவர் என்றொரு சாதியையும்,
வீழ்ந்தவர் என்றொரு சாதியையும்

தோலில் குருதியில் அமைந்திடுமாறு
தோற்றுவித் தாயோ கூறு!

**அகவல்**

உழைப்பவர் என்றே ஓரினம் உண்டோ,
பழிப்பிலா துலகின் பயனை நுகரும்
ஓரினம் உண்டோ பிறவியில்? என்றே
ஏரும் நிறுத்தி எண்ணினர் உழுநரே!
(செம்மறித்திறல் செல்கிறான்)

## 13

**இடம்:** மின்னொளி வீட்டின் எதிரிலுள்ள தோட்டம்.
**நேரம்:** இரவு உண்டபின்.
**உறுப்பினர்:** அழகன், மின்னொளி, வையத்திறல், கிழவன்.

**அகவல்**

பழத்தோட்டத்தைக் கிழவன் நண்ணினான்
அழகன், மின்னொளி அருகரு கமர்ந்தே,
அரசன் மகன்தான் அனுப்பிய பண்ணியம்
அருந்து கின்றனர். அழகன் அருந்த
மின்னொளி விரும்பி, வேண்டுவாள் அவனை,
அதனை மின்னொளிக் களிப்பான் அழகன்.
உற்றதந் தைக்கென ஒருபங்கு வைத்து
மற்றவை இருவர் அருந்தினர்.
தெற்றென வந்தான் அரசன் சேயே.

**கண்ணிகள்**

"பெருநாட்டு மன்னவன் பெண்ணை – நான்
பெற்றிட வேண்டுமென் றார்கள்
ஒருநாட்டு மன்னவன் பெண்ணும் – எனக்
குண்மையில் வேண்டுவ தில்லை
திருநாட்டி லேயொரு பாவை – அவள்
செல்வத்தின் மேற்பகை யாவாள்.
இருநாட்டம் அன்னவள் மேலே – நான்
இட்டுவிட் டேன்என்று சொன்னேன்.

இவ்வாறு நான்சொன்ன தாலே – எனை
ஈன்றவர் ஒப்பிட லானார்;
அவ்விடத் தேபெரு நாட்டின் – ஓர்
அமைச்ச னிடத்திலும் சொன்னார்.
வெவ்வுளத் தோடவன் சென்றான் – இந்த
வேடிக்கை எப்படி?" என்றே
மைவிழி மின்னொளி தன்பால் – எழில்
வையத் திறல்வந்து சொன்னான்.

"இத்திரு நாட்டினிற் பாவை – அவள்
யார்?" என்று கேட்டனள் வஞ்சி.
"முத்தமிழ்" என்றனன் செம்மல்! – இதை
மொய்குழல் கேட்டு வியந்தாள்.
"தித்திக்கப் பேசும் திறந்தான் – பெருஞ்
செல்வர்கட் கேவரக்கூடும்!
மெத்த வியப்புறும் பேச்சும் – நல்ல
வேந்தருக் கேவரக்கூடும்!

ஏழையர் கற்றது மில்லை – கல்வி
எய்திட வும்வழி இல்லை.
கூழை அருந்திக் கிடப்பார் – தம்
கூரையில் தூங்கி எழுந்தே
பாழும் உழைப்பினில் ஆழ்வார் – நல்ல
பாங்கினில் பேசுதல் எங்கே?
வீழும் நிலைகொண்ட மக்கள் – எந்நாள்
மீளுவர்?" என்றனள் பாவை.

"இன்புறப் பேசி இருப்போம் – என
எண்ணி இங்கேவரும் போதில்
துன்புறும் பேச்சுக்கள் பேசி – எனைத்
துன்பத்தில் ஆழ்த்திடுகின்றாய்!
தன்னலக் காரரை எண்ணி – மிகத்
தாழ்ந்தவர் தம்நிலை எண்ணி
மின்னொளியே எனை நொந்தாய் – இது
வீண்செயல்", என்றனன் செம்மல்.

மேலும் வையத்திறல் சொல்வான்: – நீ
வேண்டிய நற்பண்ணி யங்கள்

சால அனுப்பிவைத் தேனே – அவை
தக்கனவோஎனக் கேட்டான்.

"ஏலுமட் டும்புசித் தேன்நான் – அவை
ஏழையர் அத்தனை பேர்க்கும்
ஞாலத்தில் எந்நாள் கிடைக்கும்?" – என
நங்கை உரைத்தனள் ஆங்கே!

மாம்பழம் கொண்டுவந் திட்டான் – அம்
மங்கையின் தந்தை; விரைவில்
கூம்பும் முகத்தோடு செம்மல் – பழங்
கொண்டுசென் றான்பரி யேறி
ஆம்பல் நிகர்த்திடும் வாயாள் – அங்
கழகனை நோக்கிப் புகழ்வாள்:
"பாம்பு கிடந்திடும் பாதை – நன்று
பார்த்துச் செல்" என்றனள்; சென்றான்.

## 14

**இடம்:** பெருநாடு, ஆய்வு மன்றம்.
**நேரம்:** காலை
**உறுப்பினர்:** பெருநாட்டு மன்னன், அமைச்சனான பிச்சன், படைத்தலைவன்.

**அகவல்**

"வையத் திறல்என் மகளை மறுத்தான்,
பெருநாட்டுப் பெருமையைத் திறல்நாடு மறுத்தது!
இதனை ஆய்க" என்று
பதறினான் மன்னன் பாங்குளார் இடத்தே.

**-ஆனந்தக் களிப்பு (எடுப்பு)**

"திறல்நாடும், மலைநாடும் சேர்ந்தே – நம்
திருநாட்டை மாய்த்திட ஒருநாட்டம் வைத்தான்!
நறுமலர்க் கூந்தலி னாளை – நல்ல
நம்பெண்ணைப் பின்ஏன் மணக்க மறுத்தான்!
திறலற்ற மலையவன் பெண்ணை – அவன்
திருமணம் செய்திட வேநினைக் கின்றான்.
இறையே படையெடுப் போம்நாம்" – என்ன
இயம்பினன் ஆங்கே படைத்தலை வன்தான்.

"அந்தத் திறல்நாட்டு மன்னன் – நம்
.ஆயிழை தன்னை மறுத்தது மெய்தான்!
மந்தி மலையவன் பெண்ணை – அந்த
வையத் திறல்மணம் செய்ய நினைத்தல்
எந்த வகைஅறிந் தாய்நீ – அதை
எப்படி நம்புவ" தென்றனன் மன்னன்;
குந்தி யிருந்த அமைச்சன் – தன்
கோவை வணங்கி யுரைத்திட லானான்;

"தேர்ந்தநல் ஒற்றர்கள் வேண்டும் – அத்
திறல்நாட்டி லேஅவர் தங்குதல் வேண்டும்.
தேர்ந்த நிகழ்ச்சிகள் யாவும் – அங்கு
நேரில் உணர்ந்து நிகழ்த்துதல் வேண்டும்.
சேர்ந்து மலையவன் பெண்ணை – அவன்
திருமணம் செய்திடல் மெய்யெனக் கண்டால்,
ஆர்ந்த பெரும்படை கூட்டி – அவன்
ஆட்சியைக் கைப்பற்ற லாம்" என்று சொன்னான்.
'நன்றிது' என்றனன் மன்னன் – உடன்
நால்வர்நல் ஒற்றர்கள் தம்மைய ழைத்தான்
"இன்று திறல்நாடு சென்றே – அங்
கியலும் நிலைமைகள் யாவையும் இங்கே
அன்றன் றுரைத்திட வேண்டும் – இடை
அஞ்சற் படுத்திடும் ஆட்களினோடு
சென்றிடு வீ" ரென்று சொன்னான் – உடன்
சென்றனர் ஒற்றர்கள், கோவை வணங்கி.

## 15

**இடம்:** திறல்நாட்டின் புற நகரான வெண்ணகர்.
**நேரம்:** மாலை
**உறுப்பினர்:** புலித்திறல் மன்னன், நகரமக்கள், செம்மறித்திறல்.

அகவல்

திறல்நாடு சார்ந்த வெண்ணகர் சென்று
அறநிலை யங்களை, பிறநிறு வனங்களை
வழக்குத் தீர்ப்பார் ஒழுக்க மதனைச்
செழிப்பினை ஆய்ந்து, திருநகர் மக்கள்
விரும்பிய வண்ணம் வீற்றிருக் கின்றான்

பெருமணி மன்றில் அரும்புலித் திறல்தான்
ஆங்கே ஒருகுரல் எழுந்தது!
மாங்குயில் அன்றது மக்கள் பாட்டே!

**கண்ணிகள்**

**குரல்:**

மாந்தரில் நான்கு வகுப்புகள் என்பதும் இல்லை – இல்லை
மன்னவ னாகப் பிறந்தவன் யாவனு மில்லை!

**புலித்திறல்:**

மாந்தரில் நான்கு வகுப்புகள் உண்டெனல்
மெய்யே – மெய்யே!
மன்னவ னாகப் பிறந்தவன் நான்எனல் மெய்யே!

**குரல்:**

நால்வகுப் பென்பது நூல்வகுப் பாதமிழ் நாட்டில்
நற்றமிழ் மக்கள் ஒரேவகுப் பேதமிழ் ஏட்டில்

**புலித்திறல்:**

நால்வகுப் பென்பது நன்மனுவே சொன்னதாகும் – அது
நற்றமிழ் மக்கள் எவர்க்கும் பொருந்துவதாகும்.

**குரல்:**

மேல்வர எண்ணிய ஆரியர் நூல்கள் நமக்கோ – மிகு
வீழ்ச்சியும் தாழ்ச்சியும் செந்தமிழ் மக்கள் தமக்கோ?

**புலித்திறல்:**

கோல்கைக் கொண்டுள மன்னவன் நான் என்றன்
ஆணை – அக்
கொள்கையைப் பின்பற்ற ஒப்பாதவர் நிலை கோணை?

**குரல்:**

கோலை எடுத்தவன் மேலெனக் கூறுதல் குற்றம் – பெருங்
குற்றமன் றே மக்கள் தாழ்வென்று கூறுதல் முற்றும்?

**புலித்திறல்:**

நூலை மறுத்துநம் கோலை எதிர்ப்பவர் தம்மை – நாம்
நோவ ஒறுத்திடில் யார் தடுப்பார் இங்கு நம்மை?

குரல்:

ஆள்பவர் சிற்சிலர்! ஆட்பட்டிருப்பவர் பல்லோர் — எனில்
அல்லல் அடைபவர் அப்படியே என்றும் நில்லார்.

புலித்திறல்:

வாளுண்டு கையினில் இன்றைக்கும் நாளைக்கும்
உண்டு — நிலை
மாற்ற நினைப்பவர் வந்திட லாமா?

அகவல்

செம்ம றித்திறல் அரையடி செப்பவும்
புலித்திறல் அரையடி புகலவும் ஆக
அங்குள குடிகள், அனைத்தும் அறிந்தார்
இங்கிது கண்ட புலித்திறல்,
எங்கே செம்மறி என்றெழுந் தானே!

அறுசீர் விருத்தம்

இருக்கைவிட் டெழுந்தான் சீறி
ஏகினான் வெளிப்பு றத்தே!
ஒருத்தனை — உணர்ச்சி மிக்க
செம்மறித் திறலை நோக்கிப்
"பிரித்தேன் உன்ஆவி" என்றான்
மன்னவன் பிடித்த வாளைச்
சிரித்தசெம் மறித்தி றல்வாள்
சிதைத்தது, திகைத்தான் மன்னன்.

செம்மறி செப்பு கின்றான்:
"திறல்நாட்டு மக்கள் தம்பால்
மெய்ம்மையே புகல்வேன்! மக்கள்
மேல்என்றும் மட்டமென்றும்
பொய்ம்மையால் புகலும் ஏட்டை
புகலுவார் தம்ஏற் பாட்டை,
இம்மாநி லத்தில் மாற்ற
ஆவன இயற்றித் தீர்வேன்.

"இதுவேநான் மக்கட் கிந்நாள்
இயற்றிட எண்ணும் தொண்டு
முதியோன் நீஉடன் பிறந்தாய்

உன்னுயிர் முடிப்ப துன்றன்
அதிகாரம், அல்லால் என்கை
அவ்வினை செய்வ தில்லை!
பொதுமக்கள் உள்ளம் நோக்கிப்
போகிறேன்" என்று போனான்.

## 16

இடம்: திறல் நாட்டின் நகர்ப்புறத்தில் ஒரு குளக்கரை.
நேரம்: காலை
உறுப்பினர்: அழகன், பெருநாட்டின் ஒற்றனான வேலன்.

### அகவல்

குளக்கரை தன்னில் கொம்பு கொண்டு, பல்
விளக்கும் அழகனை வேலன் அணுகி,
'எவ்வூர்? என அவன் 'இவ்வூர்' என்றான்.
'என்ன அலுவல்?' என்றான், அழகன்,
'மன்னன் மகனின் துணையாள்'
என்றான். வேலன் 'வணக்கம்' என்றான்!

### அறுசீர் விருத்தம்

"பொன்னாற்றூர் முத்துச் செட்டி
புதல்வன்நான் வாணி கத்தில்
பொன்னெலாம் இழந்தேன் என்றன்
புதுமனை யாளும் செத்தாள்
என்னை நீ காக்க வேண்டும்
எளியன்நான்" என்றான் வேலன்.
"என்னநான் செய்யக்கூடும்"
என்றந்த அழகன் சொன்னான்.

"அரண்மனை அலுவல் ஒன்று
சின்னதாய் கிடைந்தால் போதும்
அரசரின் மகனுக்கோ நீ
அன்பான துணைவன் அன்றோ?
உரைத்தால்நீ, இளங்கோ கேட்பான்
ஒருகாலும் மறுக்க மாட்டான்

அருள்என்மேல் வைக்க வேண்டும்
அன்பனே" என்றான் வேலன்.

"நாளைவா நண்பா" என்றே
அழகனும் நவின்றான். வேலன்
"வேளைநான் தவற மாட்டேன்
வருகின்றேன்" எனவி ளம்பிக்
காளை அவ் வரசன் மைந்தன்
"கடிமணம் எப்போ" தென்றான்.
"கேளாதே அதனை" என்று
கிளத்தினான் அழகன் ஆங்கே!

"கேட்டது குற்ற மானால்
மன்னிப்புக் கேட்கின் றேன்நான்!
நாட்டினில் நானோர் ஏழை
நாளைக்கே அலுவல் ஒன்று
காட்டினால் மிகநன் றாகும்
கைக்கூலி நூறு பொன்னும்
நீட்டுவேன் உனக்கே" என்று
நிகழ்த்திட லானான் வேலன்.

"ஏழைநீ நூறு பொன்னும்
எனக்கெவ்வா றீதல் கூடும்?
தோழனே, உன்றன் சொல்லில்
ஐயமே தோன்றச் செய்தாய்
வாழிநீ உண்மை கூறு
மறையேல்" என் றழகன் கூறத்,
"தோழனே நாளைக்கு வந்து
சொல்லுவேன்" என்று போனான்.

## 17

**இடம்:** படைவீடு.
**நேரம்:** உண்டபின்.
**உறுப்பினர்:** படைமறவர், செம்மறித்திறல்.

**அகவல்**

படைமறவர் உண்டார், படுக்கை சார்ந்தார்
இடைவானம் ஈந்த அமுதுபோல் ஒருகுரல்

காதிற் புகுந்தது மறவர்
யாதெனக் கருத்தில் ஏற்கலா யினரே.

### எண்சீர் விருத்தம்

### குரல்

இந்தநாடு பொது மக்கள் சிறையே!
எவரும் நிகரென்ற பொதுவுரி மைதனைப்
பொந்தில் ஆந்தைநிகர் மன்னன் பறித்தான்
போரின் மறவரே உங்களின் துணையினால்!
கந்தை யின்றி உணர்வின்றிப் பொதுவினர்
காலந் தள்ளி வருவது கண்டிரோ?
இந்த நாடு பொதுமக்கள் நாடன்றோ?
நீவிரெல் லீரும் இந்நாட்டு மன்னரே!
மன்னராகப் பிறந்திட்டோம் என்கின்றார்
மக்கள் ஆட்படப் பிறந்தவர் என்கின்றார்
இன்னவர்க்கு நுந்துணை இல்லையேல்
மன்னர் எங்கே, பெரும்படை மறவரே?
இந்நிலத்துப் பெருமக்கள் ஓர்கடல்
இடர்செய் மன்னவர் அக்கடற் குமிழிகள்,
இன்று கருதுக குடிகளே, மறவரே.
நாளைக் கேகுடி யரசினை நாட்டலாம்.
தமிழ் மொழிக்குள ஆக்கத்தைப் போக்கினார்
தமிழர் கொள்கையைத் தலைசாய்க்க எண்ணியே
அமுதை நீக்கியோர் நஞ்சைவார்க் கின்றனர்
அத்தனைக்கும் நும்துணை கேட்கின்றார்;
உமையெலாம் அந்த மன்னவர் கைகளின்
உளிகளாக்கி; நாட்டைப் பிளப்பதோ?
நமது கொள்கை மக்களெலாம் நிகர்
நான்கு சாதிகள் ஆரியர் கொள்கையே.

### அகவல்

படைவீட்டுப் படுக்கையில் இக்குரல் புகுந்து
நடைமுறை தன்னில், நாணிட வைத்தது.
மறவர்கள் தூக்கம் மாய்ந்திட
இறவாப் பெருவிருப் பெய்தினர் ஆங்கே.

## 18

இடம்: திறல்நாடு, அரண்மனையின் உட்புறம்.
நேரம்: காலை.
உறுப்பினர்: ஆண்டாள், மின்னொளி.

அகவல்

அரண்மனை தன்னில் ஆங்காங்குச் சென்று
மின்னொளி தன்தாய் தன்னைத் தேடினாள்;
காவல் அறையில் பொன்னி யோடு
மேவி இருப்பது கண்டுவியந் தாளே!

கண்ணிகள்

"வீட்டை மறந்தாயோ — எனையும்
வேம்பென விட்டாயோ?
நாட்டில் அரண்மனையே — உனக்கு
நன்றெனக் கொண்டாயோ?
போட்டது போட்டபடி — விடுத்தே
போனாள் அரண்மனைக்கே
கேட்டுவா என்றுரைத்தார் — தந்தையார்"
என்றனள் கிள்ளை மின்னாள்.

"மன்னர் கொழுந்தியடி — நிலைமை
மங்கிட லான தடி
கன்னல் மொழியாளை — மன்னவன்
காவலில் வைத்தானே
என்னைத் துணையாக — வைத்தனன்
ஏந்தலின் நன்மகன்தான்!
உன்னை மறக்கவில்லை — தந்தையை
உளம் மறந்த தில்லை"

என்றனள் ஆண்டாள்தான் — இந்நிலை
ஏனென்று கேட்டவளாய்
மின்னொளி நின்றிருந்தாள் — அவள்தாய்
மேலும் உரைக்கின்றாள்:
"மன்னவன் தம்பியினை — அச், செம்
மறித்திறல்தனையே
பொன்னியும் காதலித்தாள் — இதனைப்
புலித்திறல் எதிர்த்தான்.

புகலும் செம்மறிதான் — வேடர்தம்
புலைச்சியின் மகனாம்
இகழத் தக்கவனாம் — அவனை
இவ்விடம் வைக்காமல்
அகற்றி விட்டார்கள் — இந்தநல்
அரண்மனைக் குடையார்
மிக இரக்கமடி — நினைத்தால்
வெந்திடும் உள்ள" மென்றாள்.

"வேட்டுவ மங்கையிடம் — மறிதான்
வேந்தனுக்கே பிறந்தான்
நாட்டில் அவன்புலையன் — எனவே
நவிலல் என்னமுறை?
ஏட்டினில் உள்ளதுவோ — தமிழர்
இனத்தில் வேற்றுமைதான்?
வேட்டுவர், மக்களன்றோ" — எனவே
விண்டனள் மின்னொளிதான்.

"தோட்டத்தில் ஆடியிரு — மகளே
தூயவையத் திறலைக்
கேட்டுவரு கின்றேன் — விரைவில்
கிள்ளையே வீட்டுக்" கென
நாட்டம் உரைத்தாளே — ஆண்டாளும்
மின்னொளி நன்றென்றே
தோட்டம் புகுந்தாளே — அழகிய
தோகை மயில் கண்டாள்.

## 19

**இடம்:** அரண்மனைத் தோட்டம்.
**நேரம்:** காலை.
**உறுப்பினர்:** மின்னொளி, வையத்திறல், ஆண்டாள், மன்னி.

அகவல்

பசும்புற் பச்சைப் பட்டு விரித்த
விசும்பு நிகர்த்த விரிதரை தன்னில்
முல்லை படர்ந்துபோய் விளாவை அளாவச்
செல்வச் செழுமலர் கொன்றை திரட்டி

ஆயிரம் கிளைக்கையால் அளித்து நிற்க
வாய டங்காத மணிப்புள் பாடப்
புன்னை மலர்க்கிளை தென்றற் பூரிப்பொடு
மின்னொளி வருகென அழைக்க
அன்ன நடையாள் அணுகினாள் ஆங்கே.

வெண்பா

வளர்ப்பு மயில்தான் மரத்தடியில் ஓடிக்
களித்தாடக் கண்டு களித்தாள் – கிளிப்பேடு
கெஞ்சியது சேவற் கிளிவந் தருள்புரிய
வஞ்சியது கண்டாள் மகிழ்ந்து.

தனியிருக்கும் தாழ்பலவைக் கண்டாள்பின் வேரில்
கனியிருக்கக் கண்டு வியந்தாள் – இனியவாம்
'பூ'க் கண்டாள் பூவில் புதியபண் பாடுகின்ற
ஈக்கண்டாள் இன்பங்கண் டாள்.

கோணிக்கொம் பாட்டியசெங் கொத்தலரிப் பூக்கண்டாள்
மாணிக்கம் கண்டாள் மகிழ்கொண்டாள் – சேண் நிற்கும்
தென்னையிலே பாளை சிரிக்கச் சிரிக்கின்றாள்
புன்னையிலே போய்க்கண்டாள் முத்து.

மின்னொளி ஆங்கே வெயிலில் உலவுகின்றாள்
மன்னன் மகனோ தொலைவினிலே – நின்றபடி
கண்டு களிக்கின்றான் கட்டழகைத் தன்னுளத்தால்
உண்டு களிக்கின்றான் உற்று.

மான்கண்டு பூரிக்கும் மங்கையினை மன்னன்மகன்
தான்கண்டு பூரிப்பான்; தையல்நல்லாள் – வான்கண்ட
செம்மா துளங்கண்டு; சேல்விழிபூ ரிக்கஅவள்
அம்மா துளங்காண்பான் ஆங்கு!

கோவைக் கனிகண்டு கோவையிதழ் பூரிக்கும்
பாவை எழில்கண்டு பதறுகின்றான் – பூவைதான்
மாங்கனிக்குத் தாவுகின்றாள் மன்னன்மகன் உள்ளம்அத்
தீங்கனிக்குத் தாவும் தெரிந்து.

மின்னிடையும் தானசைய மேலாடையும் பறக்க
அன்னநடை போடும் அழகுகண்டும் – அன்னவளின்
பஞ்சேறு மெல்லடியைப் பாடாமல் தன்காதல்
நெஞ்சேற நின்றான் நிலைத்து.

தேசு வெயிலதுதான் தேக்குநிழற் கீழேபொற்
காசு கிடப்பதுபோல் காட்சிதர – மாசில்லாள்
செங்காந்தட் கைமுகவாய் சேர்த்தாள். இளங்கோவாய்
அங்கர்ந்தான் அண்ணாந்த வாறு.

அன்னோன் நிலையனைத்தும் அங்கவனைத் தேடிவந்த
மன்னி மறைந்திருந்து பார்க்கின்றாள் – மின்னொளிமேற்
கண்ணானான் பிள்ளை கருத்தழிந்தா னோஎன்று
புண்ணானாள் நெஞ்சு புகைந்து.

"வையத் திறலே, மகனே, திருவமுது
செய்யவா! செந்தீ விளைக்கின்ற – வெய்யில்
விழிபார்த்தல் தீமை விளைக்கும், அரசர்
வழிபார்த் திருக்கின்றார் வா!"

என்றுரைக்க மன்னி எதிரேதும் சொல்லாமல்
சென்றான் திறலோன் அரண்மனைக்கே – பின்னர் அங்கே
ஆண்டாளும் வந்தாள் அழைத்திட்டாள் தன்மகளை
மீண்டாள்தன் வீட்டுக்கு மின்.

## 20

**இடம்:** அரண்மனைத் தனியறை.
**நேரம்:** காலை.
**உறுப்பினர்:** புலித்திறல், புலித்திறல் மன்னி.

**அகவல்**

வேண்டுகோள் விட்டாள் வேந்தன் வந்தான்
"ஈண்டமர்க ஈண்டமர்க" என்றாள் மன்னி
மன்னன் முகத்தை மலர்க்கையால் ஈர்த்தே
'ஐயம் அடைந்தேன்' என்றாள்.
வையத் திறலின் வகையுரைப் பாளே!

**கலிவெண்பா**

"பூக்காரியின் மகளைப் பூங்காவில் நம்பிள்ளை
நோக்கிய நோக்கின் நிலையினைநான் – போய்க் கண்டேன்.
கீழ்மகளைப் பிள்ளைமனம் கிட்டிற்றா? அல்லதவள்
தாழ்நிலையி லேயிரக்கம் தட்டிற்றா? வாழ்வில்
தனக்குநிக ரில்லாத் தையல்பால் பிள்ளை

மனத்தைப் பறிகொடுக்க மாட்டான் — எனினும்,
தடுக்குத் தவறும் குழந்தைபோல் காளை
துடுக்கடைந்தால் என்செய்யக் கூடும்? — வெடுக்கென்று
வையத் திறலுக்கென் அண்ணன் மகளைமணம்
செய்துவைத்தல் நல்லதெனச்" செப்பினாள் — துய்ய தென்று
மன்னன் உரைத்தான்; மகனை வரவழைக்கச்
சொன்னான்; தொடர்ந்தாள் அம் மாது.

## 21

**இடம்:** அரண்மனைத் தனியிடம்.
**நேரம்:** முதிர்காலை.
**உறுப்பினர்:** புலித்திறல், வையத்திறல், மன்னி.

### அகவல்

மன்னனும் மன்னியும் மைந்தனை "நில்" என்று
கூறித் தமது கொள்கையைக்
கூறு கின்றார் சீறும்உளத் தோடே!

### கண்ணிகள்

"மணம்செய்து கொள்ளுதல் வேண்டும் — உன்
மாமனின் பெண்ணை மணந்திட வேண்டும்
இணங்கிட வேண்டும் இதற்கே — நீ
ஏதும் தடைசொல்ல லாகாது கண்டாய்.
அணுகும்உன் அன்னையின் அண்ணன் — பெற்ற
ஆரெழில் மங்கையை நீமணந்திட்டால்
வணங்குமிந் நானிலம் உன்னை" — என்று
மன்னவன் சொல்ல, மறுத்துரைப் பான்சேய்:

"மணம்செய்து கொள்பவன் நானா? — அன்றி
மாநிலம் ஆளும்இம் மன்னவன் தானோ?
இணங்கிட வேண்டுமென் கின்றீர் — எனில்
என்மன மோமணம் ஒப்பிடவில்லை;
அணங்கினை மாமனின் பெண்ணை — எனை
அச்சுறுத்திப் பெறுமாறு புகன்றீர்
வணங்குகின் றேன் தந்தை தாயே — நான்
மணம்புரியேன்" என்று செம்மல் மறுத்தான்.

காவலர் தம்மை அழைத்தான் மன்னன்
"கட்டுக இங்கிவன் கைகளை" என்றான்.
"ஆவல் மறுத்ததி னாலே — என்றன்
ஆணைக்குக் கீழ்ப்படி யாததினாலே
காவற் சிறைக்கிவன் செல்க — என்றன்
கட்டளை தன்னை மறுத்திடு வீரேல்
சாவது மெய்" யென்று சொன்னான் — அந்தத்
தறுகண்ணர் செம்மலைச் சிறையினிற் சேர்த்தார்.

வையத் திறல்சிறை சென்றான். பின்னர்
மன்னவன் தன்மனை யாளிடம் சொல்வான்:
"பையனை விட்டுவைத் திட்டால் — அந்தப்
பாவையைக் கூட்டி நடந்திடல்கூடும்
வையம் பழித்திடு முன்னே — அவன்
மனது திரும்பிடும் என்று நினைத்தே
வெய்ய சிறைதன்னில் வைத்தேன்" — என்று
வேந்தன் உரைத்தனன், மன்னி மகிழ்ந்தாள்.

## 22

இடம்: அரண்மனையில் வையத்திறல் அறை.
நேரம்: முன் மாலை.
உறுப்பினர்: அழகன், மன்னன், மன்னி.

### அகவல்

அழகன், வையத்திறல் அறைக்குச் சென்றான்
முழுதும் ஆய்ந்த விழிகள் ஏமாந்தன
புலித்திறல் மன்னிபால் போனான்
நலிப்புடன் அவளிடம் நவிலலா யினனே.

### கண்ணிகள்

"வையத் திறல்வந்த துண்டோ — அன்னாய்
மற்றெங்குச் சென்றனன் சொல்வாய்
வெய்யில் கொதிக்கின்ற நேரம் — அவன்
வேறெங்கும் சென்றிட மாட்டான்
துய்யவன் தன்னறை பார்த்தேன் — அங்கும்
தோன்றலை நான்காண வில்லை;

எய்தநல் அம்பினைப் போலே – உடன்
இங்குவந் தேன்" என்று சொன்னான்

"ஆண்டாள் மகள்மீதில் அன்பால் – என்றன்
அண்ணனின் பெண்ணை மறுத்தான்
பூண்டான் பெரும்பழி தன்னை! – மனம்
புண்படச் செய்ததி னாலே
ஈண்டு சிறைப்பட லானான் – அவன்
எண்ணம் திருந்திட வேண்டும்
யாண்டும் இதைச்சொல்ல வேண்டாம் – இது
என் ஆணை" என்றனள் மன்னி.

"இப்பிழை செய்திட வில்லை – நெஞ்சம்
ஏந்திழை மேல்வைத்த தில்லை
செப்புவ துண்மைஎன் தாயே – அவன்
சிறையிடை வாழ்வது முறையோ
கற்பது தான் அவன் நோக்கம் – பின்னர்
கடிமணம் செய்வது நோக்கம்
மெய்ப்பட வேஉரைக் கின்றேன் – அவன்
மீளும் வகைசெய்க" என்றான்.

மன்னன் அவ்விடம் வந்தான் – அந்த
மன்னவன் மைந்தனின் நண்பன்
பின்னும் உரைத்திட லானான் – "உன்றன்
பிள்ளையின் மேற்பிழை யில்லை
மின்னொளி மேற்கருத் தில்லை – அவன்
வெஞ்சிறை வாழ்வது நன்றோ"
என்றுரைத் தேநின்ற போது – மன்னன்
"என்அழ காஇது கேட்பாய்;

அன்னவன் உள்ளக் கிடக்கை – நானும்
ஆய்ந்திட வேண்டும்; அதற்குள்
உன்மொழி நம்பிட மாட்டேன் – அவன்
உற்ற சிறைமீட்க மாட்டேன்;
இன்ன நிகழ்ச்சிகள் யாவும் – நீயே
எங்கும் உரைத்திட வேண்டாம்"
என்றான் புலித்திறல் மன்னன் – 'சரி'
என்றுரைத் தான்அழ கன்தான்.

## 23

இடம்: சிறைக்கூடம்.
நேரம்: முன்னிரவு.
உறுப்பினர்: வேல்விழி, சிறைக்காவற்காரன், செக்கான்.

### அகவல்

சிறையில் வையத் திறலிருக் கின்றான்
காவற் காரன் கடிது சென்று,
"மின்னொளி பார்க்க வேண்டு மென்றாள்"
என்று சொன்னான் "இட்டுவா இட்டுவா"
என்றான் இளங்கோ! "வேல்விழி" யாளவள்
முகமலர் மறைய முக்கா டிட்டு
விரைந்தாள்! இரும்பு வேலிப் புறத்தே
இருக்கும் செம்மல் இருவிழி மலர்ந்தே
"மின்னொளி! மின்னொளி விளையாடும் மயிலே!
உன்மேல் வைத்த காதல் உளவறிந்து
மன்னவன் என்னைச் சிறையில் வைத்தான்!
என்றன் உயிரே வாவா" என்றனன்.
"மின்னொளி அன்றுநான் வேல்விழி அன்றோ
மன்னியின் அண்ணன் மகள்நான் அன்றோ
என்னை மணந்துகொள்" என்றாள்.
மன்னவன் மகனின் உள்ளம் எரிந்ததே.

### கண்ணிகள்

"என்னெதிர் நிற்கவும் வேண்டாம் – இங்
கேதும் புகன்றிட வேண்டாம்
உன்னை மணந்திட மாட்டேன் – நீ
ஒட்டாரம் செய்திட வேண்டாம்
மின்னொளி என்னுயிர்" என்றான் – வந்த
வேல்விழி ஓடி மறைந்தாள்.

## 24

இடம்: சிறைக்கூடம்.
நேரம்: இரவு.
உறுப்பினர்: புலித்திறல், வையத்திறல், அழகன்.

அகவல்

வையத் திறலை மன்னன் அணுகினான்.
சிறையின் கதவு திறக்கப் பட்டது.
புலித்திறல் புகுந்தான் புதல்வனைப் பற்றி
வலிதில் இழுத்து மண்ணிற் சாய்த்துச்
சாட்டையாற் கைகள் சலிக்க அடித்தான்.
"ஆட்படும் இனத்தின் அணங்கை மணப்பதா?
வாட்படை மன்னரின் மாண்பைக் குறைப்பதா?
மின்னொளி தன்னை வெறுப்ப தாகவும்
வேல்விழி தன்னை விரும்புவ தாகவும்
விளம்பும் வரைக்கும் மீள மாட்டாய்"
என்று கூறி, மன்னன் ஏகினான்.
அழகன் உணவுடன் அங்கு வந்தான்.
குருதிப் பெருக்கில் கொற்ற வன்மகன்
கிடந்தது கண்டு நடுங்கி, "அன்பனே,
எவரால் நேர்ந்த இன்னல்? ஐயோ?"
என்று பதறினான். இளங்கோ, "அழகனே,
வேல்விழி தன்னை வெறுத்ததால் என்னைத்
தந்தை சாட்டையால் அடித்தார்" என்றான்.
அழகன் அவ்வுரை கேட்டே
அழல்படு நெஞ்சுடன் சென்றான் அயலிலே.

## 25

இடம்: திறல் நாட்டின் நகர்ப்புறம்.
நேரம்: நள்ளிரவு.
உறுப்பினர்: பெருநாட்டின் ஒற்றர், அழகன்.

அகவல்

அனல்பட்டுத் தாண்டுவோன்போலும் அழகன்
பெருநாட்டின் ஒற்றர் எதிரில்
விரைந்தோடி நின்றான் விளம்புகின் றானே.

பஃறொடை வெண்பா

"பெருநாட்டான் பெற்ற பெருந்திருவை அன்றி
ஒருநாட்டு மங்கையையும் நான்மணக்க ஒப்பேனே''
என்றுரைத்தான் மன்னன்மகன். என்ன பிழையிதிலே?

அன்றே சிறைவைத்தான் ஆணழகை அவ்வரசன்
காட்டுமலை யன்மகளைக் கட்டிக்கொள் என்று சொல்லிச்
சாட்டையினால் சாகப் புடைக்கின்றான் தன்கையால்!
செங்குருதிச் சேற்றில் சிறையில் மடிகின்றான்!
எங்கிதனைச் சொல்வேன் இரக்கம் உமக்கிலையோ?
அஞ்சல் எழுதிவிட்டான் ஆட்களையும் போகவிட்டான்!
வஞ்சியொடும் அந்த மலைவேந்தன் வந்திடுவான்.
ஏழெட்டு நாளிலந்த ஏந்திழையைத் தான்மணந்து
வாழட்டும் அல்லதவன் மாயட்டும் என்கின்றான்.
"பெண்ணில் பெருந்திருவை யான்மணப்பேன் அல்லாது
மண்ணில் மறைந்திடுவேன் என்கின்றான் மன்னன்மகன்"
என்றே முடித்தான் அழகன்! — இதுகேட்டு
நின்றிருந்த ஒற்றர் நெடுமூச் செறிந்தவராய்
"இங்கிதனை யாரிடத்தும் சொல்லாதே; நாளைக்கே
அங்குள்ள எங்கள் அரசர் பெரும்படைதான்
பொங்கும் கடல்போற் புறப்பட்டு வந்துவிடும்
மங்காத நெஞ்சத்து வையத் திறல்மீள்வான்
அன்றே பெருந்திருவை அன்னோன் மணந்திடலாம்
இன்றே இதோநாங்கள் செல்கின்றோம்" என்றுரைத்தே

தம்குதிரை மேலேறித் தட்டினார்
அங்கே மகிழ்ந்திருந்தான் அன்று.

## 26

இடம்: ஏரிக்கரை.
நேரம்: காலை.
உறுப்பினர்: மண்ணெடுப்போர், அழகன்.

### அகவல்

ஏரி தூர்க்குமண் எடுப்பார் பல்லோர்
ஆங்கே அழகன் சென்றுதன்
தாங்காத் துயரம் சாற்றினான் மிகவே.

### எண்சீர் விருத்தம்

"ஏரியிலே மண்ணெடுத்துக் கரைஉ யர்த்தும்
தோழர்களே இப்பெரிய நாட்டின் ஆணி
வேரினிலே பெருநெற்றி வியர்வை நீரை

விட்டுவளர்த் திடுகின்ற நாட்டு மக்காள்
ஊரினிலே தெருவினிலே வீட்டில் எங்கும்
உம்உழைப்பைப் பொன்னெழுத்தால் காண்ப தன்றி
ஆரிங்கே உழைத்தார்கள் அரசன் என்போன்
அரசியொடு பொன்னூசல் ஆடு கின்றான்.

சடுகுடுவென் றேநெய்வீர் கந்தை யில்லை
தார்வேந்தன் கட்டுவது சரிகை வேட்டி
கடல்நடுவில் முத்தெடுப்பீர் கஞ்சி யில்லை
கடனறியா வேந்துக்கு முத்துத் தொங்கல்
மடுப்புனலும் செங்குருதிப் புனலும் வார்த்து
வளவயலில் களைஎடுத்துக் காத்த செந்நெல்
அடுக்களையில் கண்டீரோ! அரசன் வீட்டில்
ஆன்நெய்யில் சீரகச்சம் பாமி தக்கும்!

எவன்படைத்தான் இந்நாட்டை? இந்த நாட்டை
எவன்காத்தான்? காக்கின்றான்? காப்பான்? கேளீர்!
தவழ்ந்தெழுந்து நடந்துவளர் குழந்தை போலும்
தரை, வீடு, தெரு, சிற்றூர், நகரம் ஆக
அவிழ்ந்ததலை முடிவதற்கும் ஓயாக் கையால்
அணிநாட்டைப் பெற்றவர்கள் கண்ணு றங்கிக்
கவிழ்ந்திடஓர் ஈச்சம்பாய் இல்லை; தங்கக்
கட்டிலிலே ஆளவந்தார் நாயுறங்கும்!

சிற்றூரில் ஆயிரம்பேர், செழுந கர்க்குள்
திகழ்பன்னூ றாயிரம்பேர் விழுக்கா டாக
முற்றுமுள நாட்டிலுறு மக்கள், எண்ண
முடியாத தொகையினர்கள், அவர்கள் எல்லாம்
கொற்றவரின், பார்ப்பனரின் விரல்விட் டெண்ணும்
குடும்பங்கள் இடும்பணிக்குத் தலைவ ணங்கிக்
குற்றேவல் செயப்பிறந்தார் என்றார்; மற்றும்'
கொழுக்கட்டை யாய்ப்பிறந்தோம் நாங்கள் என்றார்.

மின்னொளிமேல் மன்னன்மகன் எண்ணம் வைத்தான்
மின்னொளியோ நம்மவரின் பெண்ணே அந்த
மின்னொளிதான் மிகத்தாழ்ந்த சாதிப் பெண்ணாம்!
மின்னொளியைத் தன்மைந்தன் எண்ணும் போதே
மன்னனெனும் தன்சாதிக் கிழிவா யிற்றாம்!
மன்னன்மகன் சிறையினிலே வைக்கப் பட்டான்.

தன்சாதிக் குமிழிகளை நிலைஎன் கின்றான்
தடங்கடலின் மக்களினம் தாழ்வென் கின்றான்.

மக்களிலே தாழ்வுயர்வே இல்லை என்று
மன்னன்மகன் எண்ணுவதும் பிழையாம் அன்றோ!
கக்குமுடற் குருதியிலே சேய்மி தக்கக்
கைச்சாட்டை ஓயுமட்டும் அடித்தான் மன்னன்.
மிக்குயர்ந்த சாதிகீழ்ச் சாதி என்னும்
வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க் கில்லை.
பொய்க்கூற்றே சாதிஎனல், ஆரியச் சொல்
புறநஞ்சு! பொன்விலங்கு; பகையின் ஈட்டி

"கடற்குமிழி உடைந்திடுக சாதி வீழ்க
கடல்மக்க ளிடைவேந்தர் மறைந்து போகக்
குடியரசு தழைக" என அழகன் சொல்லிக்
கொடிவழியைத் தாண்டிஅயற் புறத்தே சென்றான்.
"நெடிதுழைப்போர் மேடழித்தே உணர்ச்சி என்னும்
நீர்மட்டம் கண்டார்கள்; உழைத்த நாளுக்
கடைகூலி காற்பொன்னே! மாதந் தோறும்!
ஆள்வாருக் கறுபதினா யிரம்பொன்" என்றார்.

## 27

இடம்: அரண்மனையில் காவலறை.
நேரம்: காலை.
உறுப்பினர்: செம்மறித்திறல், பொன்னி, காவற்காரர், படைமறவர், மன்னன்.

அகவல்

உணவு வட்டில் ஒருகையில் மறுகையில்
குடிநீர்ச் செம்பும் கொண்டு, காவல்
அறையில் பொன்னியை அணுகினான் ஒருவன்
நிறை நிலா/முகம் நிலத்திற் கவிழக்
கருங்குழல் அவிழக் கண்நீர் உகுக்க
இருளிற் கிடந்த பொன்னி எழுந்தாள்.
"செம்மறித் திறல்நான்" என்ற தீங்குரல்,
மெல்லெனப் பொன்னி காதில் விழுந்ததே.

அவள்அவன் அணைப்பும் பிணைப்பும் ஆனார்
உள்ளம் இரண்டும் உலகை மறந்தன.

* * * *

வாயிலோர் "அழகன் வராததேன் வெளியில்?
போயினான் என்ன புரிந்தான் இன்னும்?"
என்றனர்; ஐயம் எய்தினர், ஒருவன்
அறைக்குள், ஒருகண் அரைமுகம் சாய்த்தான்;
இரண்டுடல் ஒன்றிலொன் றிறுகுதல் கண்டான்;
அவன்பதைத் தோடினான் அரச னிடத்தில்!
அரசன், மறவர் ஒருசில ரோடு
விரைவில் வந்தான், "வெளியில் வருவீர்
இருவரும்" என்று பெருங்குரல் பாய்ச்சினான்.
அழகன் உடையில் அங்குச் செம்மறி
மழமழ வென்று வந்து நின்று
கொழகொழ வென்று சிலசொற் கூறினான்
முக்காடு நீக்கி முடியரசன் கண்டான்
செம்ம றித்திறல் செழுமலர் முகத்தை!
இவனைக் கட்டி இழுத்துச் செல்க
சிறைக்கென்று!' மன்னன் செப்பினான்; மறவர்
அவ்வாறு பிணித்தே அழைத்துச் சென்றனர்.

* * * *

காவலிற் பொன்னியைக்
கண்ணால் வெதுப்பிப்,
"புலைச்சி மகனைப் புணர்ந்த புலைச்சி
கொலைக்குக் காத்திரு" என்று
நிலத்திடி எனவேந்து நேர்நடந் தானே.

## 28

**இடம்:** அரண்மனைவாயில், தெருக்கள், தொழிற்சாலை.
**நேரம்:** காலை முதல் இரவு வரைக்கும்.
**உறுப்பினர்:** அழகன், தோழிமார், தெருவினர்,
தொழிற்சாலையினர்.

### இணைக்குறள் ஆசிரியப்பா

தூய்மொழி என்னும் தோழி, அரண்மனை
வாயிலில் நின்றாள். அவளை,

அழகன் அணுகிக் கூறுகிறான்:
"நாமெல்லாம் தாழ்ந்தவர், தாமெலாம் உயர்ந்தவர்
என்று மன்னர் இயம்பினார் அன்றோ?
நம்மில் ஒருத்தியை அம்மன்னன் மகன்
மணக்க நினைத்தான் என்று
சிறையில் வைத்ததும் தெரிந்தாய் அன்றோ?

மன்னியின் தங்கையாம் பொன்னி செம்மறியை
மணக்க நினைத்ததால் மாளப் போவதை
அறிவாயன்றோ?
செம்மறித் திறலும் சிறையில் உள்ளான்
அம்மங்கைதனை அணுகிய தாலே
கண்டாய் அன்றோ?
தன் மானத்தைத் தமிழர் இழப்பதா?
பொன்னே தரினும் மன்னன் அரண்மனை
வாயிலை மிதிப்பதும் தீயதே"
என்றான் அழகன்.
புருவம் நெற்றி ஏற இருவிழி
எரியைச் சொரிய "என்போன் றார்க்கும்
இங்கென்ன வேலை?" என்றே
அங்கிருப் போரை அணுகினாள் விரைந்தே!
சிலநாழிகையில்,
தோழிமார் அரண்மனை துறந்தனர்.
பணிப்பெண் டிர்கள் பறந்தனர்.
காவலர் போயினர்.
பாவலர் எட்டியும் பாரோம் என்றனர்.
மெய்காப் பாளரும் வீடு திரும்பினர்.
அடுக்களை ஆக்குநர் இல்லை.

அரண்மனை இவ்வாறாகத்
தெருவெலாம் தெருவின் வீடெலாம், வீட்டின்
விருந்தினர் பொருந்தினோர் வருந்த லானார்.
பிறப்பில் தாழ்ந்தது பெருமக்கள் கூட்டமா?
பிறப்பில் உயர்ந்ததச் சிறிய கூட்டமா?
என்றே ஆர்த்தார்த்து எழுந்தனர் —

ஆலைத் தொழிலினர் அங்கொரு பாங்கில்
"கூலிக் கென்றே ஞாலத்திற் பிறந்தோம்

கோலைத் தாங்கியே பிறந்தனர் கொற்றவர்"
என்றனர்; மன்னன் வீழ்க!
என்றனர், பார்ப்பனர் வீழ்க!
என்று கூவினர்.
மனத்தாங் கல்கள் வளர்ந்தன!
இனத்தின் எழுச்சி நாடெலாம் எழுந்ததே.

## 29

**இடம்:** அரண்மனைக் கூடம்.
**நேரம்:** காலை.
**உறுப்பினர்:** புலித்திறல், மன்னி, பார்ப்பனர், அழகன்.

**இணைக்குறள் ஆசிரியப்பா**

'யாமிட்ட சோறுகறி எப்படி' என்று
நாட்டு மன்னனைக் கேட்டனர் பார்ப்பனர்.
'நன்று மிகவும்' என்றான் மன்னன்.
மேலும் மன்னன் விளம்புவான்:

"தாழ்ந்தவர் தம்மில் ஒன்று சேர்ந்தனர்;
உயர்ந்தவர் நாமும் ஒன்று சேர்ந்தோம்"
என்றான் – பார்ப்பனர்,
"இப்படி விடுவதும் ஏற்ற தல்ல
தாழ்ந்தார் போக்கைத் தடுக்க வேண்டும்,
அவர்களின் நன்மைக் காகவே!
அவர்மேல் படையை அனுப்ப வேண்டும்.
அவர்கள் நன்மை கருதியே!
அரண்மனை வேலையை அவர்கள் மறுத்தது
குற்றமன்றோ?
பொறுக்க லாமோ? ஒறுக்க வேண்டும்
அவர் நன்மைக்கே!
அவர்களில்
ஓரா யிரம்பேர் ஒழிந்துபோ கட்டுமே?
மற்றவர், வழிக்கு வருவா ரன்றோ?
திருத்த வேண்டும், திருந்துவர்;
மக்களைத் திருத்தல் மன்னன் கடமை.
மனுநூல் நாட்டில் வழங்க வேண்டுமே?
அதற்குப்

பார்ப்பனர் காப்பாற்றப் படுதல் வேண்டும்;
ஆள்வோர் பார்ப்பனர் சொற்படி
ஆளவேண்டும்.

விளைபொருள் விற்பவர் வேண்டும்
வளவயல் உழவும், குளச்சே றெடுக்கவும்,
இரும்ப டிக்கவும், கரும்பு நடவும்,
உப்புக் காய்ச்சவும், தப்ப டிக்கவும்,
சுவர்எ ழுப்பவும், உவர்மண் எடுக்கவும்,
பருப்புப் புடைக்கவும், செருப்புத் தைக்கவும்,
மாடு மேய்க்கவும், ஆடு காக்கவும்,
வழிகள் அமைக்கவ்ும், கழிவடை சுமக்கவும்,
திருவடி தொழுதுநம் பெருமை காக்கவும்,
வரும்படி நமக்கு வைத்து வணங்கவும்,
நாலாம் வகுப்பு நமக்கு வேண்டுமே"
என்றனர்.

"படைத் தலைவரைக் கடிதில் அழைப்பிக்க"
என்றான் மன்னன்.
குதித்தோ டினான் ஒரு குள்ளப் பார்ப்பான்.
பார்ப்ப னர்பால் பகர்வான் மன்னன்:
"அரண்மனை வேலைகள் அனைத்தும் நீவிர்
பார்த்திட வேண்டும், பணியாளர்கள்
வரும் வரைக்கும்" என்ன,
"அடடா! செருப்புத் துடைப்பது முதல்
அடுப்புத் தொழில்வரை நடத்துவோம்" என்றனர்.
பார்ப்பன ஆடவர் பார்ப்பனப் பெண்டிர்
அனைவரும் பணிசெய அரண்மனை வந்தனர்;
மன்னனும் மன்னியும் மகிழ்ந்தி ருந்தனர்;
அழகன் வந்தரின்.

"எங்கு வந்தாய்?" என எரிந்தான் மன்னன்.
"செம்மறித் திறலும் சேல்விழிப் பொன்னியும்
பொன்னூசல் ஆடிப் பொழுது போக்கு கின்றார்;
வையத் திறலோ
மாசுடை நீக்கித் தேசுடை அணிவான்;
ஏனெனில்,

ஆண்டா ளானதன் அன்பு மாமி
மாப்பிள்ளை பார்க்க வருகின் றாளாம்"
என்றரீன்.

மன்னி அழுதாள், மன்னவன் சீறி,
"இவர்கள் சிறையினின் றெப்படி வந்தனர்?"
என்று கேட்டான்.
"காவலர் எவரும் காணேன் அங்கே"
என்றான் அழகன்.
"எப்படி வரலாம், இவர்கள்?" என்று
மன்னன் கேட்டான்.

"அவர்களைக் கேட்க வேண்டும். அவர்கள்
வாளைக் கையில் வைத்திருக் கின்றனர்"
என்றான் அழகன்.

பார்ப்பனர் தம்மைக் கூப்பிட்டு மன்னன்,
"வையத் திறலை, மறியை, வஞ்சியைக்
கடுஞ்சிறை வைத்துக் காவ லிருங்கள்;
என்றன் ஆணை இது" வெனக் கூறினான்.
"புல்லேந்து கையில் வில்லேந்து வோம்யாம்"
என்று பார்ப்பனர் இயம்பினர்.
"மகிழ்ச்சி" என்றான் மன்னன்.
"ஆயினும்,
மல்லேந்து மன்னர்க்குச் செல்வாக் கில்லையே!
எப்படி அதுசெய ஏலும்?" என்றனர்.
அழகன் சிரித்தான்.
நன்றென மன்னன் இஞ்சி
தின்ற குரங்குபோல் திகைத்தான் குந்தியே.

## 30

இடம்: அரண்மனை.
நேரம்: காலை.
உறுப்பினர்: படைத்தலைவன், மன்னன்.

அகவல்

தாங்கா ஆவலில் தன்படைத் தலைவனை
ஆங்கெதிர் பார்த்தமர்ந் திருந்தான் அரசன்.

அன்னவன் வந்து வணங்கினான்
தன்ஆணை மன்னன் சாற்றுவான் மிகவே:

### அறுசீர் விருத்தம்

"விரைந்துசெல்! மானம் காப்பாய்
அரண்மனை வேலைக் காரர்
புரிந்தனர் தீமை விட்டுப்
போயினர் காவ லர்கள்
பிரிந்தனர் சிறை திறந்து
பெயர்ந்தனர் குற்றஞ் செய்தோர்!
விரைந்துசெல் பணியா ளர்கள்
வேண்டும்இப் போதே" என்றான்.

மேலுமே உரைப்பான் மன்னன்:
"வெந்திறல் மறவர் தம்மை
வேலொடு தெருவி லெல்லாம்
நிறுத்திவைத் திடுதல் வேண்டும்.
வாலசைத் திடுவார் தம்மை
மண்ணிடைப் புதைக்க வேண்டும்
தோலினை உரிப்பாய் நம்மைத்
தூற்றுவார் தம்மை" என்றான்.

படைத்தலை வன்பு கல்வான்
"படைசார்ந்த மறவர் எல்லாம்
கடைச்சாதி என்று நாமே
கழறிய துண்டோ?" என்றான்
விடுத்தஇவ் வினாவைக் கேட்ட
வேந்தனும், "ஆம் ஆம்!" என்றான்.
"கெடுத்தனிர் அரசே அந்தக்
கீழ்மக்கள் வருந்தி னார்கள்.

ஆயினும் அவர்கட் கான
ஆறுதல் கூறு கின்றேன்
போயினி நீங்கள் சொன்ன
செயலினைப் புரிய வேண்டும்
நாயினும் தாழ்ந்தா ரேனும்
நாட்டினிற் பெருங்கூட் டத்தார்!

பாயுமேல் மக்கள் வெள்ளம்
நம்மாள்வார் பறக்க வேண்டும்."
உயர்சாதிப் படைத்தலைவன்
இங்ஙனம் உரைத்துச் சென்றான்.
துயர்பாதி அச்சம் பாதி
தொடர்ந்திடத் தூக்க மென்னும்
அயலுல கடைந்தான் மன்னன்
உணவுண் ணான்அவன் விருப்பம்!
கயல்மீனும் சோறும் பார்ப்பார்
கட்டாய உணவாய்க் கொண்டார்!

## 31

**இடம்:** அரண்மனை.
**நேரம்:** காலை.
**உறுப்பினர்:** ஆளும்சாதி அதிகாரிகள், அரசன்.

**அகவல்**

ஆளும் சாதியார் அதிகா ரத்தினர்
வாளும் கையுமாய் வந்து மன்னனை,
"நாலாஞ் சாதியும் மேலாஞ் சாதியும்
ஆலும் விழுதும் ஆவார் இதனை
நாமறி வோமே. அறிந்தும்இத்
தீமை புரிந்தது தீமை" என்றாரே!

**அறுசீர் விருத்தம்**

"நேர்ந்திட்ட நிலைமை தன்னை
நிகழ்த்துவேன் உறவி னோரே
சார்ந்திட்ட ஆண்டாள் என்னும்
பூக்காரி தன்பெண் ணாளைத்
தேர்ந்திட்டான் மணமே செய்யத்
திருமகன்" என்றான் மன்னன்!
ஆர்ந்தது விழியிற் செந்தீ;
"ஐயையோ" என்றார் வந்தோர்.

"அன்றியும் என்கொ ழுந்தி
செம்மறித் திறலை அண்டி
நின்றனள். சிறையில் வைத்தேன்;

நிலைகெட்ட செம்ம றிக்கும்
பன்முறை சொன்னேன்; கேளான்.
படுசிறை என்றேன். மேலும்
என்பிள்ளை என்றும் பாரேன்
சிறையினில் இருக்கச் செய்தேன்.

பணியாளர் தோழி மார்கள்
இதையெல்லாம் பார்த்தி ருந்தார்
அணியணி யாகச் சென்றார்
அரண்மனை வேலை விட்டே!
துணிவுடன் நகரைக் கூட்டித்
தூற்றினார் மேல்வ குப்பை!
பணிவுடன் பணிகள் செய்து
பார்ப்பனர் உதவு கின்றார்.

"அரண்மனைப் பின்பு றத்தே
அம்மறித் திறலும், பொன்னி
ஒருத்தியோ டுள்ளான் என்றன்
உயர்மைந்தன் பணிப்பெண் ணாளைத்
திருமணம் புரிய வேண்டி
ஆவன செய்கின் றானாம்.
அருஞ்சிறைக் காவல் இல்லை
அனைவரும் இவ்வா றானார்"

என்றனன் மன்னன்; இந்த
இழிவினைக் கேட்டி ருந்த
மன்னரின் மரபி னோர்கள்
வாளொடு கிளம்பி னார்கள்
"புன்றொழில் புரிந்து ளாரைப்
புதைக்கின்றோம்" எனக்கொ தித்தார்.
சென்றனர், "சாதி வாழ்க
தீயர்கள் வீழ்க" என்றே.

போயினார் அரண்ம னைக்குப்
புறக்கட்டில், அவர்கள் இல்லை.
"தீயர்கள் மறைந்தார்" என்று
செப்பினார். அரசன் கேட்டு
"நாயினை ஒப்பா ரோடு
நகரினிற் கலகம் செய்யப்

போயினார். போவீர்" என்றான்
அஞ்சினர் பொய்கை யாள்வார்.

## 32

இடம்: திறல் நாட்டு நகர்.
நேரம்: காலை.
உறுப்பினர்: ஒற்றர் படைத் தலைவன், பெருமக்கள்.

அகவல்

"பெருநாட் டுப்படை, திருநாடு தன்னை
முற்றுகை யிட்டதே முற்றுகை யிட்டதே"
என்று கூவினர் எங்கணும் மக்கள்!
தீமை குறித்தது செழுநகர்ப் பெருமணி!
அரசன், படையை அழைத்தான் விரைவில்!
படையின் தலைவன் பரபரப் புற்றான்.
தேர்ப்படை ஒன்று சேர்ப்பீர் என்றான்
பரிப்படை எழுக என்று பகர்ந்தான்
யானைப் படையும் எழுக என்றான்
காலாட் படையும் காண்க என்றான்
நாலாஞ் சாதியார் நாமாட்டோம் என்றனர்.
மூன்றாஞ் சாதியார் முணுமு ணுத்தனர்
இரண்டாம் சாதியார் இருநூறு பேர்கள்
திரண்டெ ழுந்தனர் மருண்ட நெஞ்சோடு
முதன்மைச் சாதியார் மூக்கைப் பிடிக்க
அரண்மனைச் சோற்றை அருந்துவ தன்றிப்
போரை யணுகாமே "நமோ
நாராயணா" என்று நவின்றுசென் றனரே.

## 33

இடம்: கடல்மேற் குமிழிகள்.
நேரம்: இரவு.
உறுப்பினர்: வையத்திறல், செம்மறித்திறல், பெருமக்கள்.

அகவல்

நாட்டுமக் கட்கு நல்வழி காட்டச்
சேய்வை யத்திறல், செம்ம றித்திறல்

சொற்பெருக் காற்றுவார் என்று
நற்பெரு மக்கள் நண்ணினார் ஆங்கே.

எண்சீர் விருத்தம்

மேடையின்மேல் ஏறிநின்றான் மன்னன் மைந்தன்
விருப்பத்தால் நகரமக்கள் 'வாழ்க' என்றார்.
வாடாத மலர்முகத்தான் வணக்கம் கூறி
"மாண்புடையீர். திறல்நாட்டு மக்காள், கேளீர்!
பீடுடைய நம்திறல்நா டதனை நோக்கிப்
பெருநாட்டான் பெரும்படையைக் கூட்டி வந்தான்
வாடிடநாம் முற்றுகையும் போட்டு விட்டான்
மன்னவரின் அதிர்வெடியில் மருந்தே யில்லை.

பிரமன்உடல் தனில் நான்கு வகையாம் மக்கள்
பிறந்தாராம், பார்த்தானாம் என்றன் தந்தை.
பிரமன்முகந் தனிற்பார்ப்பார் பிறந்திட் டாராம்
பிரமன்தோள் பெற்றதுவாம் மன்னர் தம்மைப்
பிரமனிடை தனிற்பிறந்தார் வாணி கர்கள்
பிரமனடி தனிற்பிறந்தார் உலகி லுள்ள
பெருமக்கள் இதுமனுநூல் ஆரியர் சொல்
பிழைக்கவந்த ஏமாற்றுக் காரர் சூழ்ச்சி.

அரசன்மகன் உங்களினப் பெண்ணை நத்தல்
அடுக்காதாம் அதற்கென்னைச் சிறையில் வைத்தான்
அரசன்எழிற் கொழுந்தியார் என்சிற்றன்னை
அகம்பறித்தார் செம்மறியார் அதுவும் குற்றம்
பெருஞ்சிறையில் மூவருமே அடைக்கப் பட்டோம்
பெருமக்காள் இதையறிந்தீர்: தன்மா னத்தால்
வருந்துகின்றீர்; ஆள்வோர் பால்ஒத்து ழைக்க
மறுத்துவிட்டீர்; வாழ்கநீர் வாழ்க வாழ்க!

'பெருநாட்டான் படையெடுப்பைத் தகர்க்க வேண்டும்
பெருமறவர் கூட்டமே வாரீர்' என்று
திருநாடாம் திறல்நாட்டின் மன்னர் சென்று
திருமுழங்காற் படியிட்டுக் கெஞ்ச லானார்
வரமாட்டோம் எனமறவர் மறுத்து விட்டார்
வாழ்கநனி வாழ்கஅவர் வாழ்க வாழ்க!

இருசாதி தான்மீதி, மன்னர் கையில்
இவர்சாதி ஒன்றுமற்றொன் றினாம்தார் கூட்டம்.

அரண்மனையின் அறைக்குள்ளே வாள்சு ழற்ற
அட்டியில்லை என்றததோ அரசச் சாதி!
பிரமனார் திருமுகத்துப் பெருங்கா யங்கள்
பெண்டாட்டி பிள்ளையுடன் அரண்ம னைக்குள்
பெருநாட்டான் அருள்பெற்று விபீஷ ணன்தான்
பெற்றபயன் பெறுவோமா எனக்க யிற்றை
அருணாச லப்பெரும்பு ராணம் சாத்தி
அவனடியே உய்யும்வழி என்கின் றார்கள்.

மேற்சாதி யார்நிலைமை இவ்வா றாக
மேலும்நாம் செயத்தக்க தின்ன தென்று
சேர்கருங்கண் பொன்னியார்க் கன்ப ரான
செம்மறியார் என்னருமைச் சிறிய தந்தை
சாற்றிடுவார் கருத்தோடு கேட்பீர்" என்று
தன்னுரையை முடித்தமர்ந்தான் மன்னன் மைந்தன்
மாற்றுயர்ந்த பொன்போன்ற திறல்நாட் டாரே
வணங்குகின்றேன் என்றுரைத்து மறிபு கல்வான்:

"திறல்நாட்டின் மேல்வந்த பெருநாட் டானைச்
சிதறடிக்க வேண்டுமெனச் செப்பு கின்றீர்.
பொறுத்திருங்கள் பெருநாட்டான் வரட்டும் உள்ளே
போடட்டும் தன்கொடியை! மகிழ்ந்தி டட்டும்
வெறுக்காதீர் படைமறவர் விளையா டட்டும்
வெற்றிவிழாக் கொண்டாட்டம் நடந்தே றட்டும்
திறல்நாட்டின் தம்மறவர் தமக்கும் இந்தத்
திட்டத்தை நன்றாகச் சொல்லி வைப்பீர்.

தனித்தனியே பகைமறவர் தம்மைக் கண்டு
தாழ்சாதி எனநம்மேல் உயர்ந்தோர் வைத்த
மனப்போக்கை அவர்மனத்தில் ஏற்ற வேண்டும்
மற்றவற்றை யாமுரைப்போம் அவ்வப் போதில்.
இனத்தோடு இனம்சேரும்! ஆளும் சாதி
இங்குள்ள ஆளுஞ்சாதி யையே சேரும்
அனைத்துள்ள கோல்கொண்டார் நூல் கொண் டாரை
ஆட்கொள்ள வேண்டியவர் நாமே" எனறான்.

[கூட்டம் முடிந்தது]

## 34

**இடம்:** திறல்நாட்டு நகர்.
**காலம்:** காலை.
**உறுப்பினர்:** பெருநாட்டு மன்னன், பெருநாட்டுப் படைகள், திறல்நாட்டு மக்கள்.

### அகவல்

கோட்டைமேல் வெள்ளைக் கொடிப றந்தது
பேட்டையில் பெருநாட்டுப் படைகள் நுழைந்தன
பெரும்படை பின்வர ஒருமணித் தேரில்
பெருநாட்டு மன்னன் திருநகர் புகுங்கால்,
நேற்றுப் புலித்திறல் சோற்றை உண்ட
சிறுமதிப் பார்ப்பனர் நிறைநீர்க் குடத்தொடும்
நறுமலர்த் தாரொடும் நன்றெதிர் கொண்டு
"வருக பெருநாட்டு மன்னரே வருக!
திருமால் பிறப்பெனும் செம்மலே வருக!
புலித்திறல் மன்னனால் பட்டது போதும்
மனுநூல் தன்னை மன்னரே காக்க!
இனிமேல் எங்கள் தனிநலந் தன்னை
நாடுக நாடுக நன்றே வாழ்க
சூடுக மாலை" என்று சூட்டி
நல்வர வேற்பு நடத்திய அளவில்,
அரசனும் வணங்கி, 'அறம்பிச காமல்
பெருமை மனுநூல் பிழைப டாமல்
பார்ப்பனர் நன்மை பழுதுப டாமல்
காப்போம்' என்று கதறி முடித்தான்.
நாற்படை முழக்கொடு நகர்மேற் சென்றன
தேன்கூட்டில் ஈக்கள் செறிந்தன போல
வானுயர் வீடுதொறும் வாயிலில் மக்கள்
தலைவைத் திருந்தார் தம்முளம் மறைத்தே.
பெருநாட்டுப் பிறைக்கொடி திறல்நாடு பெற்றது
பெருநாட்டு மன்னனும் பெரும்படை மறவரும்
திறல்நாட் டரண்மனை சேர்ந்தனர் உடனே.

* * * *

புலித்திறல் சிறையில் புகுத்தப் பட்டான்
பிரமன் தோளிற் பிறந்த பெட்டைகள்
மரியா தையாகப் பெருஞ்சிறை சென்றனர்

* * * *

மருமக னாகும் வையத் திறலை
விரைவில் தேட விடுத்தான் ஆட்களை.

* * * *

பெருநாட் டான் தன் பெரும்படை மறவர்க்கு
விடுமுறை தந்தான், வேண்டிப் பார்ப்பனர்
அரண்மனை அரிசியில் விருந்துண் பித்தார்.

* * * *

முரசறை வோனை அரசன் அழைத்தே,
"அரசியல் திட்டம் அமைப்ப தற்கும்
வையத் திறலை என் மகளுக் காகத்
திருமண உறுதி செய்வ தற்கும்
நாளைக் காலை நாட்டு மக்கள்
மாளிகை வரும்படி மணிமுர சறைக"
என்றான். யானை வள்ளுவன்
நன்றெனப் பணிந்து நடந்தான் ஆங்கே.

## 35

**இடம்:** திறல் நாட்டு மாளிகை.
**நேரம்:** காலை.
**உறுப்பினர்:** அனைவரும்.

### அகவல்

மென்பட்டு மெத்தை விரித்த பெருந்தரை,
நன்முறை ஓவிய நாற்பு றச்சுவர்
கற்றச்சர் கைத்திறம் காட்டும் ஆயிரங்கால்,
பொற்கட்டில் பன்மணி புதைத்த மேன்மூட்டு
வருகெனப் பொற்பாவை வரவேற்கும் முன்வாயில்
பெருமக்கள் மகிழ்ந்துபோம் பின்புறப் பெருவாயில்,—
நறுந்தென்றல் வார்க்கும் நாற்சுவர்ச் சன்னல்கள்
நிறந்தரு பவழம், நீலம், மாணிக்கம்,

சுடர்விடு முத்துத் தொங்கல்கள் இடையிடை,
அடைசுவர் சேர அங்குக் கலைப்பொருள்
ஆன மாளிகைநடு அடலேறு சுமப்பதோர்
வானில வெறித்த மணிக்குடை இருக்கையில்
வென்ற பெருநாட் டான்வீற் றிருந்தான்.
அன்னோன் அமைச்சன் அருகினில் இருந்தான்
படையின் தலைவனும் பாங்கில் அமர்ந்தான்.
முரசு முழங்கும் முன்புற வாயிலால்
வரும்பெரு மக்கள் மலைப்புரள் அருவி
திறல்நாட்டு மறவரும் செம்மறித் திறலும்
வையத் திறலும் தம்முரு மாற்றி
நீறு பூத்த நெருப்பென இருந்தனர்.
ஆண்டாள் ஒருபுறம் அவள்மகள் ஒருபுறம்
ஈண்டிழைப் பொன்னி ஒருபுறம் இருந்தனர்.
தொலைவிலோர் மூலையில் தோன்றா வண்ணம்
அழகன் இருந்தான் அச்சத் தோடே,
பழந்திறல் நாட்டினர் பல்லா யிரவர்,
பெருநாட்டு மறவர் ஒருசில நூற்றுவர்
ஆங்கே கலந்தபடி அமர்ந்தி ருந்தனர்.
பெருநாட்டு மன்னன் பேசத் தொடங்குமுன்
"வையத் திறலோன் வந்துவிட் டானா?"
என்று பன்முறை கேட்டான்? 'இல்லை' என்று
சொன்னார். சொற்பொழிவு தொடங்கினான்:
"திறல்நாட்டு மக்களே, செப்புதல் கேட்பீர்:
இத்திறல் நாடோ, என்பகை யான
மலைநாட் டோடு கலந்து கொள்ள
இருப்பதால் நான்படை எடுக்க நேர்ந்தது
வென்றேன்.-சிறையில்உம் வேந்தரை அடைத்தேன்.
திறல்நாடு தனில்என் பிறைக்கொடி ஏற்றினேன்.
இவ்வா றிருக்க, இனிஇந் நாட்டின்
ஆட்சிமுறை எவ்வா றமைய வேண்டும்?
என்பது பற்றி இயம்பு கின்றேன்:
என்றன் உறவினன், மன்னர் மரபினன்
ஆன ஒருவனே இந்நாட் டரசன்.
வரும் அவ் வரசன் பெருநாட் டுக்குப்
போர்த்துணை நாளும் புரிய வேண்டும்.

மேலும் அந்த வேந்தன், பார்ப்பனர்
மறைநூ லுக்கு மதிப்பீய வேண்டும்.
இத்தனை கருதி இந்நாட்டு மன்னரின்
மகனுக் கேஎம் மகளைத் தரவும்
விரும்பினேன். அவனும் விரும்புவ தாக
அறிந்தேன்; மகிழ்ந்தேன். ஆதலால் இந்தத்
திறல்நாட்டை யாள்வோன் திறல்நாட் டினனே!
வையத் திறல்என் மகளை மணப்பதாய்
இன்றே உறுதி இயம்பினால், நாளையே
மணமுடித்து மணிமுடி பெறலாம்!
வையத் திறலோன் வராமை யாலே
அன்னோன் சார்பில் இந்நாட் டார்கள்
உறுதி கூறினும் ஒப்புக் கொள்வேன்"
என்று மன்னன் இயம்பிய அளவில்,
கூனும் கோலும் குள்ளமும் வெள்ளைத்
தாடியும் மீசையும் தள்ளா உடலுமாய்
எழுந்து நின்றான் ஒரு
கிழவன்: அரசனைக் கேட்டான் ஆங்கே:

### இணைக்குறள் ஆசிரியப்பா

"உங்கள் உறவுதான் ஊராள வேண்டுமோ?
வேந்தன் சேய்தான் வேந்தாக வேண்டுமோ? :
என்று கிழவன் கேட்டான்.
"கேட்பீர் கேட்பீர்" என்று
முன்னுள்ள மக்கள் முழக்கஞ் செய்தனர்!
"எங்கள் உறவுதான் ஆள ஏற்றவன்;
வேந்தன் சேய்தான் வேந்தாக வேண்டும்"
என்றான் வேந்தன்.
"எங்களில் ஒருவன் ஏன் ஆளக் கூடாது?
சொல்க" என்றான் கிழவன்.
"நாடாள்வ தன்று நாலாஞ் சாதி"
என்றான் மன்னன்.
"சாதி ஒழிக சாதி ஒழிக"
என்று முழங்கினர் எதிரில் மக்கள்!
"எங்கள் நாட்டுக் கினிவரும் மன்னன்
உங்கட்குப் போரில் உதவ வேண்டுமோ?

பாரோர் நாட்டைநீர் பறிக்க நினைத்தால்
சீராம் திறல்நாடு சேர வேண்டுமோ?"
என்று கேட்டான் முதியோன்.
"நன்று கேட்டீர் நன்று கேட்டீர்"
என்றனர் மக்கள்.
"ஆம் ஆம்!" என்றே அதிர்ந்தான் மன்னன்.
"பார்ப்பனர் மறையைப் பைந்தமிழ் மக்கள்
மாய்ப்பது தீதோ வளர்ப்பது கடனோ?"
என்றான் முதியோன்.
"ஆம்!" என்று மன்னன் தீமுகம் காட்டினான்.
"பார்ப்பனர் பொய்ம்மறை பாழ்பட" என்று
கூப்பாடு போட்டனர் மக்கள்.
"வையத் திறல்உம் மகளை மணக்கும்
எண்ணம் அவனுக் கிருந்த தில்லை;
இருக்கப் போவதும் இல்லை; இதனை
இளங்கோ சார்பில் யானுரைக் கின்றேன்"
என்றான் முதியோன்.
"ஆம் ஆம்" என்றே அனைவரும் கூவினர்!
சின்ன முகத்துடன் மன்னன், "கிழவரே!
வையத் திறலை மன்னன் ஒறுத்தது
பொய்யோ!" என்றான்.
"மன்னன் தன்னன்பு மைத்துனர் மகளை
மணக்கச் சொன்னான்; மறுத்தான் வையன்;
அதனால்
ஒறுத்தான்" என்றான்.
"சிறைமீட்டு வருக புலித்திறலை" என்று
பெருநாட்டு மன்னன் உரைத்தான்.
திறல்நாட்டு மன்னன் அவ்விடம் சேர்ந்தான்
"வையத் திறலைச் சிறையில் வைத்தனை
மெய்யாக் காரணம் விளம்" பெனக் கேட்கப்
புலித்திறல் புகல்வான்:
"உன்மகள் தனையும் என்மகன் மறுத்தான்
என்மைத் துனன்மகள் தன்னையும் மறுத்தான்
வேலைக்காரி மின்னொளி தன்னை
மாலை யிட்டு மன்னர் மரபையே
அழிக்க எண்ணினான்! அடைத்தேன் சிறையில்!"

என்ன,
பெருநாட்டான், வாள் உருவி
"புரட்சியோ! புரட்சியோ! கிழவரே,
உரைப்ப தென்ன?" என்று
மன்னன் கேட்கக்
கிழவன், "மன்னா! கிளத்துதல் கேட்க:
சாதி யில்லை!
பார்ப்பன வகுப்பும் பார்ப்பன நூற்களும்
பொய்யே!
மதம்என்ல் தமிழ் வையத்தின் பகை!
ஆள்வோர் என்றும் அடங்குவோர்
என்றும் பிறந்தார் என்பது சரடு!
தனிஒரு மனிதன் தன்விருப் பப்படி
இனிநாட்டை ஆள்வ தென்ப தில்லை!
மக்கள் சரிநிகர்!
எல்லாத் துறையிலும் எவரும் நிகரே!
நெடுநாட்டு மக்களின் படியினர் (பிரதிநிதிகள்):
குடியரசு நாட்டல்எம் கொள்கை யாகும்"
என்று கிழவன் இளைஞனாய் நின்றான்.
மன்னன் வையத் திறலைக் கண்டான்.
கையால் தன்வாள் காட்டி,
"என் மகள் 'பெருந்திரு' என்னும் மங்கையை
மணந்துகொள்; இன்றேல் மன்னன் மைத்துனன்
மகளை மணந்து கொள்! மக்களில் தாழ்ந்த
மின்னொளி தன்னை விரும்புதல் நீக்குக;
என்னொளி வாளுக் கிரையா காதே"
என்றான்.
"ஏஏ!" என்றனர் இருந்த மக்கள்!
வையத் திறல்தன் வாளை உருவினான்.
"படையின் தலைவனே பற்றுக இவனை"
என்று படைத்தலை வனுக்குக்
கட்டளை யிட்டான் மன்னன்!
எட்டிற்று மறித்திறல் இடிக்குரல் எங்குமே.

பாட்டு

மக்களின் உரிமைக்குத் தூக்குவீர் வாளை
மன்னரின் தனியாட்சி வீழ்க — நாட்டு
மக்கள் உரிமைக்கு...

[திறல் நாட்டு மறவர் மக்களின் வாள்கள் சுழலுகின்றன. பெருநாட்டுப் படைத்தலைவனும், அவனைச் சார்ந்த சில மறவர்களும் எதிர்க்கிறார்கள்.]

மக்கட் கடலில் மறைக் குமிழிகள்
மறுப்பவர் மாள்க மாள்கவே — நாட்டு
மக்கள் உரிமைக்கு...

[எதிர்த்தோர் இறந்து படுகின்றனர். இரு மன்னரும், படைத்தலைவர்களும், ஆளும் இனத்தோரும் பிணிக்கப்படுகின்றனர்.]

தக்கதோர் ஆட்சி மக்களின் மன்றம்
சரிநிகர் எல்லோரும் என்றோம்.
பொய்க்கதை மறையெனல் புரட்டே
புரட்சியில் மலர்க இன்ப வாழ்வே!

[பிணிக்கப் பெற்றவர் சிறை சேர்க்கப் பெற்றனர்].

## 36

**இடம்:** நகர்கள், சிற்றூர்கள்.
**நேரம்:** மாலை.
**உறுப்பினர்:** முரசறைவோன்.

அகவல்

யானைமேல் வள்ளுவன் இயம்புவான் முரசறைந்து:
"பூனைக்கண் போலும் பொரிக்கறிக் காக
ஆளுக் கிரண்டுகத் தரிக்காய் அடைக.
செங்கை இரண்டளவு சீரகச் சம்பா
அடைக அங்கங்கு மக்கள் அனைவரும்.
பொன்னிறப் பருப்பும் புத்துருக்கு நெய்யும்
ஒருகை யளவு பெறுகஒவ் வொருவரும்.

பாகற் புளிக்குழம்பும் பழமிள கின்சாறும்
ஆகத் தக்கன அடைக எவரும்!
ஆழாக் குத்தயிர் அடைக்காய் ஒவ்வொரு
வாழை இலைஇவை வழங்குவார் தெருத்தோறும்
விருந்தே நாளை விடியலில் அனைவரும்
அருந்துக குடியாட்சி அமைக்கும் நினைவிலே!"

இதுகேட்டுத் தெருத்தோறும் பொதுவில்லம்
எதுவெனக் கேட்டே ஏகினர்
அதுவது பெற்றே அடைந்தனர் வீட்டையே.

## 37

**இடம்:** மின்னொளி வீட்டு முன்வெளி.
**நேரம்:** விடியல்.
**உறுப்பினர்:** மின்னொளி, ஆண்டாள், விருந்தினர், வையத்திறல்.

**அகவல்**

வீட்டெதிர் ஆண்டாள், மின்னொ ளிக்குத்
தலைவாரு கின்றாள். "தையல் மின்னொளியே
மன்னன் மகனைநீ மணந்த பின்னர்
என்னை மறப்பாயோ?" என்றாள் அன்னை.
"ஏழைகள் அனைவரும் கூழைக் குடிக்க,
வாழை இலையில் வார்த்தநெய் ஓடையில்
மிதக்கும் பல்கறிச் சோறு விழுங்கும்
மன்னன் மகனை மணக்கவே மாட்டேன்"
என்றாள் மின்னொளி. அன்னை திடுக்கிட்டு,
"முன்னர் உன்காதல் மொய்த்த தெவன்மேல்?"
என்று கேட்டாள் ஏந்திழை. "அம்மா
ஏழ்மை கண்ட இடமெல்லாம் காதல்
தாழ்மைமேல் என்உளம் தாவுதல் அன்றி
உடல்மிசைக் காதல் உற்றிலேன்" என்றாள்.
"அழகனை உன்உளம் அண்டிற்றோ" என
அன்னை மின்னொளி தன்னைக் கேட்டாள்.
"அழகன் ஏழ்மையை அணுகிய தென்னுளம்
என்னுடல் அவனுடற் கில்லை" என்றாள்.
"மின்னொளி என்னுடன் விரைவில் வருக,

அருந்திட வேண்டும் விருந்" தென் றாள்தாய்.
இருவரும் எழுந்தார் விருந்துக் கேகினார்.

* * * *

வாகை நீழலில் மறித்திறல், பொன்னி
ஓகை யோடும் உண்டனர் விருந்தே!
அரசின் நீழலில் அழகனும் பிறரும்
அருந்தினர் இனிய விருந்து மகிழ்ந்தே!
வேங்கையின் நீழலில் வேறு பலப்பலர்
தாங்கா மகிழ்ச்சியில் தாம்உண் டிருந்தார்!
மாவின் நீழலில் வையத் திறலோன்
பாவை யைஎதிர் பார்த்தி ருந்தனன்.

* * * *

வீட்டினர் யாரும் விருந்துண்ணு நிலை
பார்த்து வந்தாள் பாவை மின்னொளி,
மரத்து நீழலில் வாயார உண்பார்
சரிநிலை கண்டாள் தையல் மின்னொளி.
அரசின் நீழலில் அழகனைக் கண்டாள்
அழகன் வையனை அணுகுநீ என்றான்.
அழகன்பால் ஏழ்மை அறிகிலாள் மின்னொளி!

* * * *

மாவின் நீழலில் வையனைக் கண்டாள்.
மன்னன் மகனை வையத் திறலிடம்
காணு கில்லாள்! கண்ட வையத்திறல்
அண்டையில் அமர்கென ஆவலில் அழைத்தான்.
கெண்டை விழியாள் கிட்ட அமர்ந்தாள்.
"கத்தரிப் பொரியலும், கரும்பாகற் குழம்பும்,
புத்துருக்கு நெய்யும், பொன்னிறப் பருப்பும்,
மிளகின் சாறும், புளியாத தயிரும்
அனைவர்க்கும் நிகரே! ஆயினும் மின்னொளி,
உனக்கொன் றதிகம்" என்றுரைத்தான் வையன்.
'என்ன' என்றாள் மின்னொளி
சின்னதோர் முத்தம் தந்தான்.
அன்னத னோடே அருந்தினாள் விருந்தே!

## 38

இடம்: திறல்நாட்டு அரண்மனை.
நேரம்: மாலை.
உறுப்பினர்: அனைவரும்.

### அகவல்

அனைவரும் திறல்நாட் டரண்மனை நிறைந்தனர்;
செம்மறித் திறல் எழுந்து
கைம்மலர் கூப்பிக் கழறுவான் ஆங்கே:

### எண்சீர் விருத்தம்

நாட்டினிலே குடியரசு நாட்டிவிட்டோம் இந்நாள்
நல்லபல சட்டங்கள் அமைத்திடுதல் வேண்டும்
காட்டோமே சாதிமணம்! கலப்புமணம் ஒன்றே
நல்வழிக்குக் கைகாட்டி! கட்டாயக் கல்வி
ஊட்டிடுவோம் முதியோர்க்கும் மாணவர்க்கும் நன்றே;
உழையானை நோயாளி ஊர்திருடி என்போம்;
கேட்டைஇனி விலைகொடுத்து வாங்கோமே; சாதி
கீழ்மேல்என் றுரைப்பவர்கள் வாழுவது சிறையே!

ஒருகடவுள் உண்டென்போம்! உருவணக்கம் ஒழிப்போம்
உள்ளபல சண்டையெல்லாம் ஒழியும்மதம் ஒழிந்தால்!
திருக்கோயில் தொழிற்சாலை! பார்ப்பனரும், கையில்
செங்கோலேந் தும்பிறரும் மக்களைச்சார்ந் தோரே!
பெருவாழ்வுக் கிவையெல்லாம் அடிப்படைத் திட்டங்கள்
பிறிதுள்ள சட்டங்கள் அறிஞர் அமைப் பார்கள்
வருநாளில் குடிமக்கள் படியினரின் தேர்தல்;
வகுப்பதற்கே இன்றுசிறு குழுஅமைப்பீர்" என்றான்.

செம்மறியே முதலாகப் பதின்மர்களைத் தேர்ந்தார்
திறல்நாட்டின் குடியரசைச் செயற்படுத்தச் சொன்னார்.
செம்மறிக்கும் பொன்னிக்கும் மின்னொளிக்கும் வையத்
திறலுக்கும் நடைபெற்ற திருமணம்பா ராட்டி,
நம்மருமை நாடன்றிப் பெருநாட்டை இந்த
நன்னிலையில் சேர்ப்பதற்கும் திட்டமிட்டார் மக்கள்.
"செம்மையுறத் திருநாட்டில் மணிக்கொடியும் ஏற்றித்
திகழ்ந்திடுக உலகமெலாம் குடியரசே" என்றார்.

# அமிழ்து எது?

### பஃறொடை வெண்பா

தலைவி

இதுதான் தைத் திங்கள்
எனக்கடல் மேல் வந்த
புதிய இளங்கதிர்,
பொன் அத்தான். பொன்! பொன்! பொன்!

தலைவன்

ஆம் ஆம் என் அன்பின்
உருவே அது "சுடர்ப் பொன்"
நீர்மேல், நிலமேல்,
நிழல் தரும்பூஞ் சோலைமேல்,
உன்மேல் தனதொளியை,
வீசி உளத்திலெல்லாம்
அன்பின் எழுச்சியினை
ஆக்கியது. வாழ்க கதிர்!
காலை மலர்ந்ததுவே
கண்ணேநான் சென்று, வயல்
வேலை தொடங்கி
விளைச்சல் அறுத்துவந்தே
இந்நாளில் இந்தா
எனக்கொடுக்கச் செல்கின்றேன்
பொன்னே புனலாடி
இல்லம் புதுக்கிடுநீ!

தலைவி

செல்வப் பரிதி
சிரித்துவந்த தைக்கண்டீர்
கொல்லைக் கொடிகள்
குலுங்கச் சிரித்ததுபோல்
காலை மலர்ந்ததையும்
கண்டீர் —விரைந்துவயல்
வேலை தொடங்கி
விளைச்சல் அரிந்தஅரிக்

கட்டடித்துத் தூற்றியொரு
கட்டைவண்டி மேலேற்றிப்
பட்டபெரும் பாட்டின்
பயனிந்தா என்பீர்; பின்
உள்ள மகிழ்ந்துங்கள்
உழுதோளை நான்தொழுது
வெள்ளத் தெடுத்து
விடிவெள்ளி போலரிசி
ஆக்கிநல்ல பானையிலே
ஆவின் தனிப்பாலைத்
தேக்கி அதிலிட்டுச்
செங்கரும்பின் கட்டியிட்டு,
"திங்களோ தைத்திங்கள்"
"செந்தமிழே தாய்மொழியாம்"
"பொங்கலோ பொங்கல்" எனப்
பொங்கிவரப் புத்துருக்கு
நெய்யும் பருப்பும்
நறும்பொடியும் நேர்கொடுத்து
மெய்யன் பினோடு
தமிழர் விழாவாழ்த்திப்
பானை இறக்கிப்
பலபேர்க் கிலையிட்டுத்
தேனைப் பழச்சுளையைச்
சேர்த்துப் படைப்பேன்.
எடுத்துண்டு நீவிர் அதை
என்னவென்று சொல்வீர்?

தலைவன்

அடடா! இப் பொங்கல்
அமிழ்தமிழ் தென்பேன் நான்,

தலைவி

அப்பொங்கல் தன்னை
அமிழ்தென்று சொல்வதுண்டோ?
ஒப்புவாரோ பொங்கல்
அமிழ்தென் றுரைத்துவிட்டால்?

தலைவன்

ஆமாம்நான் சொல்வேன்
அமிழ்துதான் அப்பொங்கல்
தீமை என்ன? ...

தலைவி

... தீமைஒன்றும் இல்லைஅத்தான்:
நீங்கள் உண்ணும்
பொங்கலா அத்தான்
அமிழ்து? புகலுங்கள்.

தலைவன்

பொங்கல் அமிழ்துதான்.
பொய்யில்லை, கட்டிக்
கரும்பும் அமிழ்து;
கனி அமிழ்து; முல்லை
யரும்பமிழ்து; தேனமிழ்து;
அப்பம் அமிழ்து
குழந்தை குதலை
மொழியமிழ்து; குன்றாப்
பழந்தமிழும் பாட்டும்
அமிழ்து; தமிழ்ப் பண் அமிழ்து;
திங்கள் அமிழ்து;
திகழ்ஆவின் பாலமிழ்தே!
இங்கெனக்கு நீ அமிழ்து,
நானுனக் கெப்படியோ?
வாய்மை அமிழ்து;
மடிசுமந்து பெற்றுவக்கும்
தாய்மை அமிழ்து.
தனிஇன்ப வீடமிழ்து
தென்றல் அமிழ்து. நறுஞ்
செவ்விள நீரமிழ்து.
ஒன்றல்ல எல்லாம்
அமிழ்தென் றுரைக்கலாம்.

தலைவி

ஏன் அத்தான்? எல்லாம்
அமிழ்தென்றால் அந்தச்சொல்

ஏன் அத்தான்? ஏதோ
அமிழ்தொன் றிருக்கும்.

**தலைவன்**

உயர்ந்த பொருட்கெல்லாம்
உயர்வு குறிக்க
உயர்ந்தோர் அமிழ்தை
உரைப்பார்கள் பெண்ணரசி.

**தலைவி**

பேர்இருந்தால் பேர்குறிக்கும்
அந்தப் பொருள் இருக்கும்
ஆரிடத்தில் இந்த
அளப்பை அளக்கின் றீர்?
எது அமிழ்தத்தான்?
எனக்கதைச் சொன்னால்
புதுநாளில் இன்பநறும்
பொங்கலுண்ணு முன்னரே
நல்ல அமிழ்துதனை
நான்கண்ட தாகாதா?
சொல்லுவீர் அத்தான்
அமிழ்தெது?

**தலைவன்**

... மானே
புதுநெல் அறுத்துவரப்
போம்போது நீயோ
எதுதான் அமிழ்ததனைச்
சொல்வீர் எனக்கேட்டாய்
அப்படியே உன்றன்
அருட்படி ஆகட்டும்நான்
செப்புவதை உற்றுக்கேள்
தித்திக்கும் தேனே
அமிழ்தென்றால் மேல்நின்
றமிழும் உணவாம்.
'அமிழ்' என்றும் 'து'வ்வென்றும்
சொல்இரண்டுண் டத்தொடரில்.

அவ்வளவுதான் இப்போ
தேனும் அறிந்தாயா?
இவ்வளவோ டென்னைநீ
விட்டிடுவாய் ஏந்திழையே!

தலைவி

இல்லையத்தான்! மேல்நின்
றிறங்கும் உணவென்று
சொல்லிவிட்டால் போதுமா?
ஒன்றுமே தோன்றவில்லை.
மேலிருந்து தான்விழும்
விளாம்பழமும்; அஃதமிழ்தா?
மேலான தாய்இருக்க
வேண்டும் அமிழ்து?
தெரிந்து கொள்ளக்
கேட்டேன் தெரிவித்தா லென்ன?

தலைவன்

சரி, என்றன் கேள்விக்குச்
சற்றே விடைபுகல்வாய்!
அவ்வானத் தேஇருந்து—அ
மிழ்ந்து வருவதெது?
இவ்வுலகுக் கின்பம்
பொதுவாக ஈவதெது?
கண்ணுக் கெதிரில்
கடகடென வீழும், அதை
எண்ணிப்பார் இன்னதென்று.

தலைவி

வானத்தி லேயிருந்து
வானூர்தி தான்அமிழும்
வானூர்தி அஃதா?
சிரிப்பு வருகிற தத்தான்.

தலைவன்

தேனேஎன் செல்வமே
செப்புகின்றேன் நீகேட்பாய்
ஆனதமிழ்ச் சான்றோர்

அருளியஓர் செய்யுள்இது;
"மாமழை போற்றுதும்
மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி
உலகுக் கவன்ளி போல்
மேல்நின்று தான்சுரத்த
லான்" என்றிளங்கோ
தானுரைத்த செய்யுள்
தரும்பொருளைக் கண்டுகொள்வாய்.

தலைவி

அச்சோ! மழைதான்
மழையேதான் அத்தான்.
இச்சேதி இப்போது
தானத்தான் நானறிந்தேன்.

தலைவன்

தேனான இன்பச்
சிலப்பதி காரத்தினிலே
"மேல்நின்று தான்சுரத்த
லான்" என்று விண்டதனால்,
வான்நின் றமிழும்
மழைதான் அமிழ்தென்று
நீ நன் றறிந்தாயா
நேரிழையே இப்போது?

தலைவி

நன்றாய் மழைதான்
அமிழ்தென்று நானுணர்ந்தேன்
ஒன்றிருக்க வேறொன்றில்
ஓடிற்றென் நெஞ்சம்
அருகில் இருக்கும்
மழைஅமிழ் தென்று
தெரியவில்லை; சொல்லத்
தெரிந்துகொண் டேன். ஆனால்,
மழைதான் அமிழ்தென்றால்,
மக்கள் அதனைப்

பிழைதான் எனச்சொன்னால்
என்னபதில் பேசுவது?

தலைவன்

"வானின் றுலகம்
வழங்கி வருதலால்.
தானமிழ்தம் என்றுணரற்
பாற்" றென்று சாற்றிய
வள்ளுவர் பாட்டை
வகையாகச் சொல்லி, அதற்
குள்ள கருத்தைஉரை.
அதையும் கேட்பாய்
அமிழ்தென் றுணரும்
அருமை மழைக்கே
அமையும் எனஉரைத்தார்
வள்ளுவரே அல்லவா?
கண்டவைஎல் லாம்அமிழ்தே
என்று கதைபேசிக்
கொண்டிருப்போர் பேதமையைக்
கண்டேஇவ் வாறுரைத்தார்.

தலைவி

சாவா மருந்தென்று
சாற்றுகின்றா ரே, அஃதென்ன?

தலைவன்

சாவா மருந்து
தனியல்ல இவ்வமிழ்தே!
வான்பெய்து கொண்டிருக்கும்
ஆதலினால் மண்ணுலகம்
தான்சிறக்கும் என்றுகுறள்
சாற்றியதைக் கேட்டாயே.

தலைவி

ஐயம்இன்னும் கேட்பேன்
அதற்காக நீங்களென்னை
வையக் கூடாது...

**தலைவன்**

... மயிலே வைவேனா?

**தலைவி**

அமிழ்தா? அமுதா? அமிழ்தமா? இன்னும்
அமுதமா? இங்கிவைகள்
அத்தனையும் ஒன்றா?

**தலைவன்**

அமிழ்தே 'அம்' சாரியையும்
ஆன திரிபும் பெற்று—
அமிழ்தம், அமுதம்
என்றாகும் பெண்ணே.

**தலைவி**

அமிர்தம்என் றாலென்ன?

**தலைவன்**

... அதுவா?
அமிர்தக் கதையை
அறிவிக்கின் றேன்கேள்நீ;
தேவர் அசுரரெல்லாம்
சண்டையிட்டுச் செத்திடுவார்
சாவைத் தடுக்கஓர்
அம்ருதங் கடைவதென்று
திட்டமிட்டார். சேடன்
கயிறாக மேருமலை
இட்டமத் தாக்கி
இருந்ததிருப் பாற்கடலைச்
சேர்ந்து கடைந்தார்கள்
தேவர் அசுரரெல்லாம்
ஆர்த்து வெளிப்பட்டதே
அம்ருதமென் பார்கள்.

**தலைவி**

அமிழ்துதனி, அம்ருதம்
அஃதொன்றா அத்தான்?

தலைவன்

அமிழ்துவே ரம்ருதம்வே
றல்லவா பெண்ணே?

தலைவி

இரண்டும்சா வைத்தடுப்ப
தென்றீர்நீ ரே; பின்
இரண்டும் தனித்தனி
என்றுரைத்த தென்ன?

தலைவன்

இரண்டும்சா வைத்தடுப்ப
தென்றாலும் அந்த
இரண்டுக்கும் வேறுபா
டில்லாமல் இல்லை.
உணவால் உயிர்நிலைக்கும்
ஆகவே பெண்ணே
உணவுக்கும் எல்லா
உயிர்க்கும் ஆதாரம் மழை!
அத்தேவர் இன்னுயிரும்
அவ்வமிழ்தா லேஅமையும்
அத்தேவர் அம்ருதத்தின்
முன்பு அமிழ்துண்டு.
பெரிதுல கோடு
பிறந்த தமிழமுது;
கிரேதா யுகத்திற்
கிடைத்ததுதான் அம்ருதம்.
தேவர்க்கு மட்டும்
திரட்டியதே அம்ருதம்
யாவர்க்கும் ஆதிமுதல்
எங்கும் அமிழ்துயிர்.

தலைவி

அத்தானே நான்ஓர்
அறிஞர் துணைவியன்றோ!
இத்தனைநாள் நானே
அதனை அறியேன்.

மழையே அமிழ்து
மழையே உலகை
அழியாது காப்பாற்றும்.
அப்படி இருக்கையிலே
ஏனிதனை யாரும்
வெளிப்படையாய்ச் சொல்லவில்லை?

**தலைவன்**

மானேநம் வள்ளுவர்தாம்
வாய்விட்டுச் சொன்னாரே?

**தலைவி**

பின்னாள் புலவரிதைப்
பேசுவதே இல்லைஅத்தான்.

**தலைவன்**

பொன்னே புதிய
அமிர்தொன்று வந்ததிங்கே!
பூட்டாத வீட்டில்
புதிதாய் நுழைந்தவர்க்கே
நாட்டார் சலுகையெல்லாம்
காட்டுவார். வீட்டில்
இருந்தார் இருளில்
இருப்பார்கள். வந்த
விருந்துக்குத் தாமே
விடிவிளக்கு வைப்பார்கள்?
என்று அமிழ்துண்டு
இதன் பெருமை உண்டு; மற்
றொன்றும் அமிழ்தென்று
போட்டியிட் டோடிவந்தால்,
நாட்டார் நினைவிலது
நாலுநாள் கூத்தாட
மாட்டாதா? ஆனாலும்
உண்மை மறையாது.

**தலைவி**

ஆமத்தான்! ஆமத்தான்.
ஆனால் மழைஎனும் பேர்

நாமும் அறிவோம்; நம்
நாட்டாரும் தாமறிவார்
அந்தப் பெயர்தான்
இருக்க அமிழ்தென்ற
இந்தப் பெயர்ஒன்
றெதற்காக வீணாக?

தலைவன்

நன்று நகைமுத்தே
காற்றென்ற பேர்இருக்கத்
தென்றலென்ற பேர்ஏன்?
சிறப்புநிலை காட்டஅன்றோ?
நீர், தீ, நிலம், காற்று,
விண்ணென்ற ஐம்பொருளில்
நீரின் நிலைகேள்
முகிலென்றும் கொண்டலென்றும்
விண்ணென்றும் கார்என்றும்
மேலும் மழைஎன்றும்
அண்ணாந்து நோக்கும்
அமிழ்தமென்றும் மாரிஎன்றும்
ஆயிரம்உண் டன்றோ?
அவற்றில் அமிழ்தென்னும்
தூய நிலைகருதித்
தோன்றியதே அப்பெயர்.
முற்றும்கேள்: வெப்பம்
முகந்தநீ ரேமுகிலாம்;
குற்றமறக் கொண்டநீர்
கொண்டல்; அக்கொண்டலோ
மேற்போய் இருந்தநிலை
விண்வான் விசும்பென்பார்;
காற்றால் கருமைபெறக்
காராகும்; கார்தான்
மழைக்கும் நிலையில்
மழையாம்; மழைதான்
தழைய அமிழ்உண
வாவது தான் அமிழ்து.

தலைவி

வாழ்வாருக் காக
வளங்கொழிக்க, அந்தநீர்
வீழும் நிலையில்அதை
மேலோர் அமிழ்தென்றார்
என்று புகன்றீர்
இதிலோர் மனக்குறை:
என்னவெனில் இவ்வமிழ்தை
மேலான தென்றிருந்தேன்
இப்போ தமிழ்து
மழைதானே...
சப்பென்று போயிற்றுத்
தையலாள் என்றனுக்கே.

தலைவன்

செப்பிய உன்பேச்சில்
சிறப்பில்லை, என்கண்ணே.
தப்புக் கணக்கிட்டாய்
தாங்கும் மழையை.
அமிழ்தின் பெருமை
அடுக்கடுக்காய்ச் சொன்னேன்.
அமிழ்தே மழைஎன்றேன்
அப்படியும் நீயோ
மழையின் உயர்வை
மதிக்கவில்லை. இந்தப்
பிழையை இளையவரும்
செய்யாரே பெண்ணரசி!
எங்கும் உளதுமழை.
என்றும் உளதுமழை.
தாங்கும் உலகுயிரைச்
சாவாது காக்குமழை.
அந்த மழைதான்
அளிக்குமோர் இன்பத்தைச்
செந்தமிழால் வள்ளுவரும்
நன்றாய்த் தெரிவித்தார்;
"வாழ்வார்க்கு வானம்

பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும்
அளி" என்றார்! விள்ளக்கேள்
சென்று திரும்பிவந்து
சேர்ந்து – அவர்எனக் களிக்கும்
இன்பந்தான் எவ்வா
றிருக்குமென்றால், இவ்வுலகில்
வாழ்வார்கள் நல்ல
மழைபெற்றாற் போலிருக்கும்.
யாழ்மொழியே! அந்தக்
குறளின் கருத்திதுவே.

தலைவி

பாவையரின் உள்ளப்
படப்பிடிப்பே தானத்தான்
ஆவல்இனி ஒன்றே
அதையும் அகற்றுங்கள்:
இந்த மழைதான்
அமிழ்தென்ற எண்ணத்தில்
எந்தப் புலவர்
எழுதியுள்ளார் செய்யுள்?

தலைவன்

சிறந்தஒரு கேள்வியே
கேட்டாய், திருவே,
"உறுதோ றுயிர்தளிர்ப்பத்
தீண்டலாற் பேதைக்
கமிழ்தின் இயன்றன
தோள்" என்ற பாட்டில்
கமழும் கருத்தைநீ
காண்பாய் – உயிர்தளிர்க்கத்
தீண்டினாள் தன்துணைவி.
அன்னதற்குக் காரணம்அம்
மாண்புடையாள் தோளேயாம்.
அத்தோள் அமிழ்தாம்.
தளிர்க்கவைப்ப தியாது?
மழையன்றோ? அந்தக்

குளிர்மழையை அன்னார்
அமிழ்தென்றார்! கூறும்
அதனால் அமிழ்தை
மழைஎன்றே சொன்ன
மதியுடையார் சொல்லால்
மகிழ்ந்து நலமடைவாய்.

தலைவி

ஐயமே இல்லை,
அமிழ்தே மழையத்தான்
வைய மழையே
அமிழ்தமிழ்து மெய்யாலும்!
அத்தான் எனது
மகிழ்ச்சிக் களவில்லை
முத்து மழைபொழிக
முத்தமிழ் நாட்டில்!
அமிழ்து பொழிக
அழகுதமிழ் நாட்டில்!
தமிழ்தான் தழைகவே
பொங்கலோ பாற்பொங்கல்!

தலைவன்

இன்றுபோல் என்றும்
மகிழ்ச்சி இலகுகவே!
நன்று தமிழர்
நலிவின்றி வாழ்க!
அமிழ்தே அனையபாற்
பொங்கலோ பொங்கல்!
தமிழ்நாடு வாழ்க தழைத்து!

[முற்றும்]

# அகத்தியன் விட்ட புதுக்கரடி

அகத்தியக் குள்ளன் ஆரியர் கொள்கையைப்
புகுத்தினான் செந்தமிழ்ப் பொன்னா டதனில்!
ஆதலால் "குள்ளனை அணுவும்நம் பாதே"
என்ற பழமொழி அன்று பிறந்தது!

* * * *

பழைய திராவிடம் செழுமை மிக்கது.
வழுவா அரசியல் வாய்ப்பும் பெற்றது.
செந்தமிழ் இலக்கணச் சிறப்புற் றிருந்தது.
வையக வாணிகம் மாட்சிபெற் றிருந்தன.
ஓவியம் தருநரும் பாவியம் புனைநரும்
ஆடல் பாடல் வல்லுநர் அனைவரும்
திராவிடர் தமக்குப் பெரும்புகழ் சேர்த்தனர்
இராத தொன்றில்லை திராவிட நாட்டில்
இந்த நிலையில் வந்தான் அகத்தியன்.

* * * *

சந்தனப் பொதிகையில் தமிழ்ப்பெரும் புலவரின்
மன்றினில் ஒன்றி ஒன்றி மாத்தமிழ்
நன்று பயின்றான் குன்றாச் சுவைத்தமிழ்
இயற்றமிழ் இசைத்தமிழ் இனியஆ டற்றமிழ்
முயற்சியிற் பயின்றபின், முடிபுனை மன்னனின்
நல்லா தரவை நாடுவா னாகிச்
'செல்வம் முற்பிறப்பிற் செய்தநல் வினைப்பயன்'
என்று புதுக்கரடி ஒன்றை ஏவினான்.
மன்றின் புலவர் வாய்விட்டுச் சிரித்தனர்.
ஒருநாள் மன்னனின் திருமணி மன்றில்
அகத்தியன் புதிதாய்ப் புகுத்திய கருத்தை
ஆய்ந்திட, மன்னன், "அகத்தியோய் அகத்தியோய்!
பிறந்த உடலும் பிணைந்த உயிரும்
இறந்தபின் இல்லா தொழிந்தன.
எதுபின் உயிர்உடல் எய்தும்" என்றான்.
"ஆன்மா என்றும் அழியா" தென்று,
மற்றொரு புதுக்கரடி தெற்றென விட்டான்.
மேலும் அகத்தியன் விளம்பு கின்றான்;

"வேந்த னாக வீற்றிருக் கின்றாய்;
ஆய்ந்து பார்ப்பின் அறிகுவை காரணம்!
செல்வம்முற் பிறப்பில் செய்தநல் வினைப்பயன்
மணிமுடி பூண்பரோ மக்கள் யாரும்?
பணிவொடு வாழ்வது பார்ப்பின், புரியும்,
சிறுமைமுற் பிறப்பில் செய்ததீ வினைப்பயன்"
என்னலும்; மன்னன் "பின்னொரு நாள்இதைப்
புகல்க" என்றனன்; போயினன் அகத்தியன்.

* * * *

அழல்வெரூஉக் கோட்டத்துக் கப்பால் ஒருநாள்
பழித்துறைக் கள்வன், பாங்கர் சூழ
நகர் அலைத்து நற்பொருள் பறித்து
'மிகுபுகழ் உடையேன் வேந்தன்நான்' என்றான்.

* * * *

ஊர்க்கா வலர்கள் ஓடி மன்னன்பால்
இன்ன துரைத்தனர் எழுந்தனன் மன்னன்.

* * * *

பழித்துறைக் கள்வன் படையும் மன்னனின்
அழிப்புறு படையும் அழல்வெரூஉக் கோட்டப்
பாங்கினில் இருநாள் ஓங்குபோர் விளைக்கவே
பழித்துறை பிடிக்கப் பட்டான் அரசனால்!

* * * *

மறவர்சூழ் அரச மன்றின் நடுவில்
பழித்துறை கட்டப் பட்ட கையுடன்
நின்றான். மன்னன் நிகழ்த்து கின்றான்:
"ஏன் என் ஆட்சியை எதிர்த்தனை? ஏன்
கோன்என் படைவலி குறைந்ததோ? என்றன்
தோள்வலி குறைந்ததோ? சொல்லுக சொல்லுக!
ஆள்வலி பெரிதோ, அறைக!" என்னலும்,
பழித்துறை மன்னனைப் பார்த்துக் கூறுவான்:
"இந்நாள் உண்டு பின்னாள் இலைஎனும்
வறுமை எமக்கு! வளமை உமக்கோ?
ஆள்வலி இல்லை; ஆயினும் நாளை
தோள் மறவர் தோன்றுவார்! இந்நாள்

என்னுயிர் போக்கல் எளிதாம்; உனக்கே
இன்னுயிர் போக்குவார் உண்டா கின்றார்."

* * * *

சினத்தோடு பழித்துறை இவ்வாறு செப்பலும்,
மன்னன் அவனைச் சிறையினில் வைத்தான்.

* * * *

**செல்வமுற் பிறப்பில் செய்தநல் வினைப்பயன்**
**சிறுமைமுற் பிறப்பில் செய்ததீ வினைப்பயன்**
இக்கருத்து நாட்டில் எங்கும் பரவினால்
மக்கள் எதிர்ப்பாரோ மன்னன் ஆட்சியை?
எதிர்க்க மாட்டார். தாங்கள் எய்திய
"சிறுமை" முற் பிறப்பில் செய்ததீ வினைப்பயன்
என்று சும்மா இருப்பார் அன்றோ?

* * * *

"அகத்தியோய் அகத்தியோய் அனைவ ரிடத்தும்
புகுத்துக உன்றன் புதிய கொள்கையை"
என்று மன்னன் இயம்பினான். அகத்தியன்
அன்றுதான் ஒருபடி அதிகாரம் ஏறினான்.

* * * *

இப்பிறப்பு முற்பிறப் பிருவினை ஆன்மா,
ஊழ்இவை யனைத்தும் உரைத்த அகத்தியன்,
அரசே இன்னும் அறைவேன் கேட்பாய்:
மண்ணவர் மண்ணில் வாழ்வார் அதுபோல்
விண்ணவர் விண்ணில் மேவினார் என்றான்.
அன்னவர் நம்மை அணுகுவார் என்றான்
இன்னல் ஒழிப்பார் என்று புளுகினான்.
விண்ணவர் விருப்புற வேண்டு மானால்
மண்ணிடை நான்மறை வளர்ப்பாய் என்றான்
மறைமொழி தானே மந்திரம் என்றான்
மந்திரத் தாலே மகிழ்வர் வானவர்
என்று பலப்பல இயம்பிச் சென்றான்.

* * * *

ஒருநாள் குறுங்கா டொன்று தீப்பட்
டெரிந்தது; சிற்றூர் எரிந்தது! மக்கள்

தெய்யோ தெய்யோ என்றே
அரச னிடத்தில் அலறினார் ஓடி!
அங்கிருந்த அகத்தியன், "அரசே!
தீஒரு தெய்வம் செம்புனல் தெய்வம்
காற்றொரு தெய்வம் கடுவளி தெய்வம்
நிலம்ஒரு தெய்வம் நீ இதை உணர்க
தெய்எனல் அழிவு! தெய்வம் அழிப்பது
இந்திரன் தெய்வம் எதற்கும் இறைவன்.
மந்திர வேள்வியால் மகிழும் அவ்விந்திரன்"
என்று கூறி ஏகினான் அகத்தியன்.

* * * *

அரச மன்றின் அருந்தமிழ்ப் புலவர்
அரசன், அகத்தியன் ஆட்டும் பாவையாய்
இருத்தல் கண்டார் இரங்கினார். தீய
கருத்து நாட்டிற் பரவுதல் கண்டு
கொதித்தார் உள்ளம். என்செயக் கூடும்?

* * * *

ஒருநாள் அரசனின் உறவினள் ஒருத்தி
பகைவனை அன்போடு பார்த்தாள், அவனும்
அவள்மேல் மிகுந்த அன்பு கொண்டான்.
இருவரும் உயிர்ஒன் றிரண்டுடல் ஆனார்.
அரசன் எரிச்சல் அடைந்தான். அகத்தியன்
இதனை அறிந்தான். அறைவான் ஆங்கே:
"மணமுறை மிகுதியும் மாறுதல் வேண்டும்;
ஒருத்தியும் ஒருவனும் உள்ளம் ஒப்பினால்,
மணம்எனக் கூறுதல் வாய்மை யன்று!
மணம்எனல் பார்ப்பனர் மந்திர வழியே
இயலுதல் வேண்டும்" என்று கூறினான்.
அரசன், 'ஆம்ஆம் ஆம்'என் றொப்பினான்.
அகத்தியன் அரசனே ஆகி விட்டான்.
அரசனும் அகத்தியன் அடிமை யானான்.
தமிழர் கலைபண் பொழுக்கம் தகர்ந்தன.
பழந்தமிழ் நூற்கள் பற்றி எரிந்தன.
அகத்தியம் பிறந்ததே அருந்தமி ழகத்தில்.

(முற்றும்)

# நல்லமுத்துக் கதை

## காட்சி – 1
## திருமண முயற்சி

**விரசலூர் வெள்ளையப்பன்**
**மனைவியாகிய மண்ணாங்கட்டியிடம் கூறுகிறான்**

உன்னைத் தானே; என்னசெய் கின்றாய்?
இங்குவா! இதைக்கேள்! இப்படி உட்கார்!
பைய னுக்கு மணத்தைப் பண்ணிக்
கண்ணால் பார்க்கக் கருதினேன். உன்றன்
எண்ணம் எப்படி? ஏனெனில் பையனுக்
காண்டோ இருபது ஆகி விட்டது
பாண்டியன் தானோ பழைய சோழனோ
சேரனே இப்படித் தெருவில்வந் தானோ
என்று பலரும் எண்ணு கின்றனர்.
அத்தனை அழகும் அத்தனை வாட்டமும்
உடையவன். திருமணம் முடிக்கா விட்டால்
நடையே பிசகி விடவும் கூடும்.
நாட்டின் நிலையோ நன்றா யில்லை.
சாதி என்பதும் சாத்திரம் என்பதும்
தள்ளடா என்று சாற்றவும் தொடங்கினார்.
பார்ப்பனர் நடத்தும் பழமண முறையைப்
பழிக்கவும் தொடங்கினர் பழிகா ரர்கள்.
இளைஞரை, அவர்கள் இவ்வாறு கெடுப்பதே
வழமை யாக வைத்திருக் கின்றனர்.
இந்த நிலையில் எவளோ ஒருத்தியைப்
பையன் ஏறிட்டுப் பார்த்தால் போதும்:
வெடுக்கென மணத்தை முடித்திடு வார்கள்.
என்ன? நான் சொல்வ தெப்படி? ஏன்? உம்?

**மனைவியாகிய மண்ணாங்கட்டி**

இன்றுதான் பிறந்ததோ இந்த உறுதி?
பைய னுக்குப் பத்து வயசு
தொடங்கியதி லிருந்து சொல்லி வந்தேன்;
காது கேட்டதா? கருத்தில் பட்டதா?

ஐயரை உடனே அழைக்க வேண்டும்
கிழக்குத் திசையில் கிடைக்குமா பெண்?
எந்தத் திசையில் இருக்கின் றாள்பெண்?
சொத்துள் ளவளா? தோதான இடமா?
மங்கை சிவப்பா? — மாஞ்செ வலையா?
என்றுபெண் பார்க்க இங்கி ருந்துநாம்
புறப்படவேண்டும்? புரிய வேண்டுமே!

வெள்ளையப்பன்

புரோகிதன் நல்லநாள் பொறுக்குவான்? அவனை
இராகுகா லத்திலா இங்க ழைப்பது?
ஆக்கப் பொறுத்தோம் ஆறப் பொறுப்போம்.
நடந்ததை, இனிமேல் நடக்கப் போவதை,
நடந்துகொண் டிருப்பதை நன்றாய்ச் சொல்வான்
பகைகுறுக் கிடுவதைப் பார்த்துச் சொல்வான்
இடையில் குறுக்கிடும் தடைகள் சொல்வான்
எல்லாம் சொல்வான்; ஏற்படு கின்ற
பொல்லாங் கெல்லாம் போக்கவும் முடியும்.
ஒருபொழுதுக் கான அரிசி வாங்க
அரைரூ பாயையும் அவனுண்டு பண்ண
முடியுமா? நம்மால் முடிந்த வரைக்கும்
ஏற்பாடு செய்து கொண் டிட்டு வருவோம்.

## காட்சி — 2

### மாப்பிள்ளையின் சாதகம் பார்த்தல்

சொறிபிடித்த கொக்குப் புரோகிதனிடம்
வீட்டுக்கார வெள்ளையப்பன் சொல்லுகிறான்:

இதுதான் ஐயரே என்மகன் சாதகம்
திருமணம் விரைவில் செய்ய வேண்டும்.
எப்போது முடியும்? எங்கே மணமகள்?
மணமகட் குரிய வாய்ப்பெல்லாம் எப்படி?
அயலா? உறவா? அணிமையா? சேய்மையா
பொறுமையாய்ப் பார்த்துப் புகல வேண்டும்.

மண்ணாங்கட்டி புரோகிதனிடம் கூறுகிறாள்:

காலையில் வருவதாய்க் கழறி னீரே
மாலையில் வந்தீர் என்ன காரணம்?

சொறிபிடித்த கொக்கு சொல்லுகிறான்:

தெரியா மல்என் பெரிய பெண்ணைத்
திருட்டுப் பயலுக்குத் திருமணம் செய்தேன்;
வட்டிக் கடையில் வயிர நகையைப்
பெட்டி யோடு தட்டிக் கொண்டதால்
சிறைக்குப் போனான், செத்தும் தொலைந்தான்
கட்டிய தாலியைக் கழற்றி எறிந்து
மொட்டைத் தலையுடன் மூதேவி போலப்
பெரியவள் பிறந்தகம் வரநேர்ந்து விட்டது.
சின்னப் பெண்ணைப் பின்னத் தூரில்
கப்பல் கப்பலாய்க் கருவா டேற்றும்
வாச னுக்கு மணம்செய் வித்தேன்.
மணம் முடிந்த மறுநாள் தெரிந்தது
வாசன் கருவாட்டு வாணிகன் அல்லன்
வாணிகன் கூலியாள் வாசன் என்பது!
ஒருநாள் வாசன் பெருங்குடி வெறியால்
நாயைக் கடித்தான் நாயும் கடித்தது
நஞ்சே றியதால் நாய்போல் குரைத்தே
அஞ்சாறு நாளாய் அல்லல் பட்டே
இரண்டு நாளின்முன் இறந்து போனான்.
ஓலை வந்தது காலையில்! கையில் —
கேட்டா லுஞ்சரி விட்டா லுஞ்சரி —
இரண்டணாக் காசும் இல்லை மெய்யாய்!
இந்நேர மட்டும் ஏதே தோநான்
தில்லு மல்லுகள் செய்து பார்த்தேன்.
யாரும் சிறிதும் ஏமாற வில்லை
உங்க ளிடத்தில் ஓடி வந்தேன்.
சாதகம் பார்த்துச் சரியாய்ச் சொல்வேன்;
முன்நடந் தவைகளை முதலில் சொல்வேன்
ஐயா இதுஓர் ஆணின் சாதகம்;

வெள்ளையப்பன்:

ஆமாம் அடடா! ஆமாம் மெய்தான்!

புரோகிதன்:

ஆண்டோ இருப தாயிற்றுப் பிள்ளைக்கு

**வெள்ளையப்பன்:**

மெய்தான் மெய்தான்! மேலும் சொல்வீர்!

**புரோகிதன்:**

பையனோ நல்ல பையன். அறிஞன்.
ஈன்றதாய் தந்தை இருக்கின் றார்கள்.
உங்களுக் கிவனோ ஒரே பையன்தான்.
பையன் தந்தை பலசரக்கு விற்பவர்
தாய்க்கோ ஒருகால் சரியாய் இராது.

**மண்ணாங்கட்டி:**

அத்தனையும் சரி அத்தனையும் சரி.
எப்போது திருமணம் ஏற்படக் கூடும்?

**புரோகிதன்:**

இந்தவை காசி எட்டுத் தேதிக்கு
முந்தியே திருமணம் முடிந்திட வேண்டும்.

**மண்ணாங்கட்டி:**

அத்தனை விரைவிலா? அத்தனை விரைவிலா?

**புரோகிதன்:**

நடுவில் ஒரேஒரு தடையி ருப்பதால்
ஆடியில் திருமணம் கூடுதல் உறுதி.

**வெள்ளையப்பன்:**

ஆடியில் திருமணம் கூடுமா ஐயரே?

**புரோகிதன்:**

ஆடி கடைசியில் ஆகும் என்றால்
ஆவணி முதலில் என்றுதான் அர்த்தம்.

**வெள்ளையப்பன்:**

அப்படிச் சொல்லுக; அதுதா னேசரி!

**மண்ணாங்கட்டி:**

மணப்பெண், என்ன பணக்காரி தானா?

**புரோகிதன்:**

மணப்பெண், கொழுத்த பணக்கா ரன்மகள்;
பெற் றவர் கட்கும் உற்றபெண் ஒருத்திதான்

மணமு டிந்தபின் மறுமா தத்தில்
ஈன்றவர் இருவரும் இறந்துபோ வார்கள்.
பெண்ணின் சொத்து பிள்ளைக்கு வந்திடும்.

**மண்ணாங்கட்டி**

எந்தத் திசையில் இருக்கின் றாள்பெண்?

**புரோகிதன்:**

வடகி ழக்கில் மணப்பெண் கிடைப்பாள்.
தொலைவில் அல்ல தொண்ணூறு கல்லில்

**மண்ணாங்கட்டி:**

அப்படி யானால் அரசலூர் தானா?

**புரோகிதன்:**

இருக்கலாம் இருக்கலாம்; ஏன்இருக் காது?

**வெள்ளையப்பன்:**

எப்போது கிளம்பலாம் இதைவிட்டு நானே?

**மண்ணாங்கட்டி:**

எப்போது கிளம்பலாம் இதைவிட்டு நாங்கள்?

**வெள்ளையப்பன்:**

யான்மட்டும் போகவா? இருவரும் போகவா?

**புரோகிதன்:**

நாளைக் காலையில் நாலு மணிக்கு
நீவிர் மட்டும் போவது நன்மை.
நாழிகை ஆயிற்று நான்போக வேண்டும்.

**மண்ணாங்கட்டி:**

இன்னும் ஒன்றே ஒன்று சொல்லுவீர்;
என்ன என்றால் – வேறொன்று மில்லை
எனக்குக் குழந்தை இன்னும் பிறக்குமா?

**வெள்ளையப்பன்:**

ஹூக்கும் இனிமேல் உனக்கா பிள்ளை?

**புரோகிதன்:**

இனிமேல் பிள்ளை இல்லை இல்லை.

**மண்ணாங்கட்டி:**

இந்தா நாலணா எழுந்துபோம் ஐயரே!

**புரோகிதன்:**

ஆயினும் இந்த ஆவணிக்குப் பின்
பெண் குழந்தை பிறக்கும் உறுதி;
போதாது நாலணா, போட்டுக் கொடுங்கள்

**மண்ணாங்கட்டி:**

சரிஇந் தாரும் ஒருரூ பாய்தான்!

## காட்சி — 3

### புதிய தொடர்பு

**அரசலூர் அம்மாக்கண்ணுவிடம்**
**விரசலூர் வெள்ளையப்பன் சொல்லுகிறான்:**

நிறைய உண்டேன் நீங்கள் இட்டதைக்
கறிவகை மிகவும் கணக்காய் இருந்தன.
அரசலூர் வந்ததை அறிவிக் கின்றேன்;
இரிசன் மகளை என்மக னுக்குக்
கேட்க வந்தேன்; கேட்டேன் ஒப்பினான்.
சாப்பிடச் சொன்னான்; சாப்பாடு முடிந்தது;
மாப்பிள்ளை பார்க்க வருவதாய்ச் சொன்னான்;
சரிதான் என்றேன்! வரும்வழி தன்னில்
உன்னைப் பார்க்க உள்ளம் விரும்பவே
வந்தேன் மிகவும் மகிழ்ச்சி கொண்டேன்
பெண் குழந்தை பெறவில்லை நீ
மருந்துபோல் ஒருமகன் வாய்த்திருக் கின்றான்.
அவனுக்கும் திருமணம் ஆக வேண்டும்
உன்றன் கணவர் உயிருடன் இருந்தால்
திருமணம் மகனுக்குச் செய்தி ருப்பார்.

**அரசலூர் அம்மாக்கண்ணு சொல்கிறாள்:**

அவர்இறந் தின்றைக் கைந்தாண் டாயின
பதினெட்டு வயது பையனுக் காயின.
எந்தக் குறையும் எங்களுக் கில்லை.
நன்செயில் நறுக்காய் நாற்பது காணியும்
புன்செயில் பொறுக்காய் ஒன்பது காணியும்

இந்த வீடும் இன்னொரு வீடும்
சந்தைத் தோப்பும் தக்கமாந் தோப்பும்
சொத்தா கத்தான் வைத்துப் போனார்.
என்ன குறைஎனில் சின்ன வயதில்
என்னை விட்டுச் சென்றார் அதுதான்!
பார்ப்பவர் ஏதும் பழுதுசொல் லாது
தனியே காலந் தள்ளி வந்தேன்
இனிமேல் என்னமோ? யாரதை அறிவார்?

விரசலூர் வெள்ளையப்பன் சொல்லுகிறான்:

நடந்தது பற்றி நாவருந் தாதே
கடந்தது பற்றிக் கண்கலங் காதே
நான்இன்று மாலை நாலரை மணிக்கெல்லாம்
விரசலூர் போக வேண்டும்! என்ன?

அரசலூர் அம்மாக்கண்ணு சொல்லுகிறாள்:

ஹுஹும் நான்அதை ஒப்ப மாட்டேன்
இன்றிரவு நன்றாய் இங்குத் தங்கிக்
காலையில் அடுப்பில் காய்ந்த வெந்நீரில்
ஆர அமர அழகாய் முழுகி
இட்டிலி மசால்வடை, சுட்டதும், சுடச்சுட
வெண்ணெய் உருக்கும், மிளகாய்ப் பொடியும்
தொட்டும் தோய்த்தும் ஒட்ட உண்டு
சற்று நேரம் கட்டிலில் துயின்றால்,
இரவில் கண்விழித்த இளைப்புத் தீரும்
திருந்த நடுப்பகல் விருந்து முடித்துப்
போக நினைத்தால் போவது தானே?

விரசலூர் வெள்ளையப்பன் சொல்லுகிறான்:

அன்பு மிக்க அம்மாக் கண்ணே!
பின்புநான் என்ன பேச முடியும்?
அப்படி யேஎன் அம்மாக் கண்ணு!
சொற்படி நடப்பேன் சொற்படி நடப்பேன்.

## காட்சி – 4

### பெண் எப்படி?

**விரசலூர் வெள்ளையப்பன்**
**மனைவி மண்ணாங்கட்டிக்குக் கூறுகிறான்:**

நல்ல உயரம் நல்ல கட்டுடல்
நல்ல பண்பு நல்ல சிவப்பே
எல்லாம் பொருத்தம்! எனக்குப் பிடித்தம்
செல்லாக் காசும் செலவில்லை நமக்கே
அனைத்தும் அவர்கள் பொறுப்பே ஆகும்.
மணமகள் வீட்டில் மணம்வைத் துள்ளார்

**மண்ணாங்கட்டி:**

சாதியில் ஏதும் தாழ்த்தி இல்லை!
சொத்தில் ஏதும் சுருக்கம் இல்லை!
ஏழு பெண்களில் இவள்தான் தலைச்சனா?
எப்படி யாகிலும் இருந்து போகட்டும்.
பெண்கள் ஏழுபேர் பிறந்தனர்; ஆணோ
பிறக்க வில்லை பெரிய குறைதான்
எப்படி யாகிலும் இருந்து போகட்டும்.
எழுபது காணி நன்செய் என்றால்
பைய னுக்குப் பத்துக் காணிதான்
எழுபதாயிரம் இருப்புப் பணமா?
பையனுக்குப் பதினா யிரம்வரும்.
எப்படி யாகிலும் இருந்து போகட்டும்!
மாப்பிள்ளை பார்க்க எப்போது வருவார்?

**வெள்ளையப்பன் விள்ளுகிறான்:**

காலையில் வருவார் கட்டாய மாக.

## காட்சி – 5

### மாப்பிள்ளை பார்த்தல்

[விரசலூர் வெள்ளையப்பனும் அரசலூர் இரிசனும் பேசுகிறார்கள்.]

**வெள்ளையப்பன்:**

வருக வருக இரிசப்ப னாரே
அமர்க அமர்க அந்தநாற் காலியில்

குடிப்பீர் குடிப்பீர் கொத்தமல்லி நீர்
வீட்டில் அனைவரும் மிக நலந் தானே?
பிள்ளைகள் எல்லாம் பெருநலந் தானே?
என்மகன் இந்த எதிர்த்த அறையில்
படித்திருக் கின்றான் பார்க்க லாமே.

இரிசன் இயம்புகிறான்:

பையன் முகத்தைப் பார்க்க வேண்டும்
பிள்ளையாண் டானொடு பேச வேண்டும்
இங்கே இருங்கள் யான்போய்ப் பார்ப்பேன்.

[நல்லமுத்துவும் இரிசனும் பேசுகின்றார்கள்]

நல்லமுத்து:

யார்நீர் ஐயா? எங்கு வந்தீர்?
ஊர்பேர் அறியேன்! உள்வர லாமா?
அப்பா இல்லையா அவ்வி டத்தில்!

இரிசன்:

அப்பா முந்தாநாள் அரசலூர் வந்தார்.
அதுதெரி யாதா?

நல்லமுத்து:

அரசலூர் சென்றார் அப்பா என்றால்
அறியேன், ஏனதை அறிய வேண்டும்?

இரிசன்:

திருமணம் உனக்குச் செய்ய எண்ணினார்.
அதற்கா கத்தான் அங்கு வந்தார்.
உன்பெயர் என்ன? உரைப்பாய் தம்பி.

நல்லமுத்து:

என்பெயர் நல்லமுத் தென்றி சைப்பார்.

இரிசன்:

என்ன படிக்கிறாய் இந்நே ரத்தில்!

நல்லமுத்து:

காலே அரைக்கால் கம்பரா மாயணம்.

இரிசன்:

காலே அரைக்கால் கம்பரா மாயண
நூலும் உண்டோ நுவலுக தம்பி!

நல்லமுத்து:

சிதம்பர நாதர் திருவரு ளாலே
அரையே அரைக்கால் அழிந்தது போக,
மேலும் மொழிமாற்று வேலைப் பாட்டுடன்
காலே அரைக்கால் கம்பரா மாயணம்
அச்சிடப் பட்டதை அறியீ ரோநீர்?

இரிசன்:

உனக்குத் திருமணம் உடனே நடத்த
என்மக ளைத்தான் உன்தந்தை கேட்டார்.
பெண்ணை உன்தந்தை பேசினார், பார்த்தார்.
நீயும் ஒருமுறை நேரில் பார்ப்பாய்.

நல்லமுத்து:

அப்பா பார்த்தார் அதுவே போதும்.

இரிசன்:

மணந்து கொள்வார் இணங்க வேண்டுமே?

நல்லமுத்து:

அப்பா இணங்கினார்! அதுவே போதும்!

இரிசன்:

கட்டிக் கொள்பவர் கண்ணுக்கும் பிடித்தமா
என்பது தானே எனக்கு வேண்டும்.

நல்லமுத்து:

பெற்ற தந்தைக்குப் பிடித்ததா, இல்லையா?
பிடித்தம் என்றால், எனக்கும் பிடித்தமே.

இரிசன்:

என்மகள், ஒருமுறை உன்னைப் பார்க்க
நினைப்ப தாலே நீவர வேண்டும்.

நல்லமுத்து:

அப்பாவைப் பார்த்தாள் அதுவே போதும்.
அப்பா கருத்துக் கட்டி உண்டோ?
இந்தரா மாயணம் இயம்புவ தென்ன!
தந்தை சொல்லைத் தட்டலா காதே
என்று தானே இயம்பு கின்றது?

**இரிசன்:**

மகிழ்ச்சி, தம்பி வருகின் றேன்நான்.

**இரிசன் வெள்ளையப்பனிடம்:**

நல்ல முத்து மிகவும் நல்லவன்
தகப்ப னாரை மிகவும் மதிப்பவன்
அடக்க முடையவன் அன்பு மிகுந்தவன்
பொழுது போயிற்றுப் போய்வரு கின்றேன்

**வெள்ளையப்பன்:**

போகலாம் நாளைக்குப் பொழுதுபோ யிற்றே!

**இரிசப்பன்:**

பொறுத்துக் கொள்க, போய்வரு கின்றேன்.

## காட்சி – 6

### அம்மாக்கண்ணுக்கு ஆளானான்

[அம்மாக்கண்ணும் வெள்ளையப்பனும்]

**வெள்ளையப்பன்:**

உன்றன் நினைவால் ஓடி வந்தேன்
இரண்டு நாள்முன் இரிசன் வந்து
மாப்பிளை பார்த்தான் மகிழ்ச்சி கொண்டான்.
திரும ணத்தின் தேதி குறிக்க
வருவது போல வந்தேன் இங்கே.
மண்ணாங் கட்டியும் வருவேன் என்றாள்
தட்டிக் கழித்துநான் தனியே வந்தேன்.

**அம்மாக்கண்ணு:**

இன்று நீங்கள் இங்கு வராவிடில்
என்றன் உயிரே ஏன் இருக்கும்!
பிரிந்து சென்றீர்! பிசைந்த சோற்றைக்
கையால் அள்ளினால் வாயோ கசக்கும்!
பச்சைத் தண்ணீர் பருகி யறியேன்
ஏக்கம் இருக்கையில் தூக்கமா வரும்?
பூனை உருட்டும் பானையை அவ்வொலி
நீங்கள் வரும்ஒலி என்று நினைப்பேன்.
தெருநாய் குரைக்கும் வருகின் றாரோ
என்று நினைப்பேன் ஏமாந்து போவேன்.

கழுதை கத்தும், கனைத்தீர் என்று
எழுந்து செல்வேன் ஏமாந்து நிற்பேன்
உம்மைப் போதும் உள்ளத்தில் வைத்ததால்
அம்மியும் நீங்கள் அடுப்பும் நீங்கள்
சட்டியும் நீங்கள் பானையும் நீங்கள்
வீடும் நீங்கள் மாடும் நீங்கள்
திகைப்ப டைந்து தெருவிற் போனால்
மரமும் நீங்கள் மட்டையும் நீங்கள்
கழுதை நீங்கள் குதிரை நீங்கள்
எல்லாம் நீங்களாய் எனக்குத் தோன்றும்.
இனிமேல் நொடியும் என்னை விட்டுப்
பிரிந்தால் என்னுயிர் பிரிந்து போகும்.

வெள்ளையப்பன் சொல்கிறான்:

அழாதே, தரையில் அம்மாக் கண்ணு
விழாதே, உன்னை விட்டுப் பிரியேன்;
துடைகண் ணீரைப், புடைவையும் நனைந்ததே
பயித்தியக் காரி பச்சையாய்ச் சொல்வேன்
என்னுயிர் இந்தா! பிடி, உன் னதுதான்!

அம்மாக்கண்ணு:

இரிசன் மகளையும் என்மக னுக்கே
பேசி முடிப்பீர்; பின்பு நீங்களும்
இங்கே யேதான் தங்கினால் என்ன?
என்மகன் உங்கள் பொன்மகன் அல்லனோ?
இங்குள தெல்லாம் உங்கள் சொத்தே.
மண்ணாங் கட்டிதான் மனைவியோ? இங்குள
பொன்னாங் கட்டி போயொழிந் தாளோ?

வெள்ளையப்பன்:

உறுதி உறுதி உன்மக னுக்கே
இரிசன் மகளை ஏற்பாடு செய்வேன்.
என்மகன் பெரியதோர் இளிச்ச வாயன்;
மண்ணாங் கட்டி மண்ணாங் கட்டிதான்!
பெண்ணா அவள்? ஒருபேய் மூதேவி!
இரு! போய் அந்த இரிசனைக் கண்டு
பேசி விட்டுப் பின்வரு கின்றேன்.

## காட்சி – 7

### வெள்ளையப்பன் மாறுபாடு

**வெள்ளையப்பன்:**

இரிசனார் வீட்டில் இருக்கின் றாரா?

**இரிசப்பன்:**

உள்ளே வருவீர் வெள்ளை யப்பரே!
எப்போது வந்தீர்? இப்போது தானா?
மனைவிமார் உம்முடன் வந்திட வில்லையா?
நல்ல முத்து நலமா? அமர்க.

**வெள்ளையப்பன்:**

மனைவி வயிற்று வலியோ டிருந்தாள்;
பையன் நிலையைப் பகர வந்தேன்;
திருமணம் வேண்டாம் என்று செப்பினான்.

**இரிசப்பன்:**

வெளியிற் சொன்னால் வெட்கக் கேடு
வெள்ளை யப்பரே வெந்தது நெஞ்சம்
பேச்சை நம்பி ஏச்சுப் பெற்றேன்,
திருமணம் விரைவில் செய்ய எண்ணி
எல்லாம் செய்தேன் எவர்க்கும் சொன்னேன்.
என்னை ஊரார் என்ன நினைப்பார்?
எப்படி வெளியில் இனிமேற் செல்வேன்?
மணம்வேண் டாமென மறுத்த தெதற்கு
அடங்கி நடப்பவன் அல்லவா உன்மகன்?
நல்ல முத்தா சொல்லைத் தட்டுவான்?
சொல்வது தானே நல்லமுத் துக்கு?

**வெள்ளையப்பன்:**

நூறு தீடவை கூறிப் பார்த்தேன்;
வேண்டாம் மணமென விளம்பி விட்டான்,
மனம்புண் பட்டு வந்தே னிங்கே.
அம்மாக் கண்ணுவின் அழகு மகனுக்குத்
தங்கள் பெண்ணைத் தருவது நல்லது;
வைத்த நாளில் மணத்தை முடிக்கலாம்;
என்னசொல் கின்றீர் இரிசப்ப னாரே?

**இரிசப்பன்:**

அம்மாக் கண்ணை அறிவேன் நானும்.
வெள்ளை யப்பரே வீண்பேச் செதற்கு?
நீவிர் விரைவாய் நீட்டுவீர் நடையை.

## காட்சி — 8

### வலையில் சிக்கினார் கணவர்

**இரிசப்பன் மண்ணாங்கட்டியிடம் வந்து கூறுகிறான்:**

நல்ல முத்து நல்ல பிள்ளை
நீங்களும் மிகவும் நேர்மை யுடையவர்
வெள்ளை யப்பர் மிகவும் தீயவர்
அரச லூரில் அம்மாக் கண்ணின்
வலையிற் சிக்கி வாழு கின்றார்.
அங்கே யேஅவர் தங்கி விட்டார்,
இன்னும் இங்கே ஏன்வர வில்லை?
மான மிழந்து வாழு கின்றார்;
அம்மாக் கண்ணின் அழகு மகனுக்கு
நான்என் பெண்ணை நல்க வேண்டுமாம்!
மணம்வேண் டாமென மறுத்தா னாம்மகன்!
நேரில் உம்மிடம் நிகழ்த்தவந் தேன்இதை;
உங்கள் கருத்தை உரைக்க வேண்டும்.

**மண்ணாங்கட்டி:**

கெடுத்தா ளாஎன் குடித்த னத்தை?
விருந்து வைத்து மருந்தும் வைத்தாள்.
சோற்றைப் போட்டு மாற்றினாள் மனதை!
ஏமாந் தாரா என்றன் கணவர்?
போய்ப்புகுந் தாரா புலியின் வாயில்?
எங்கள் பிள்ளை உங்கள் பெண்ணை
வேண்டா மென்று விளம்ப வில்லையே!
அவள்மக னுக்கே அவளைக் கட்ட
இப்படி எல்லாம் இயம்பினார் போலும்!
மாதம்ஒன் றாகியும் வரவில் லைஅவர்.
மகனை இங்கே வரவழைக் கின்றேன்
சொல்லிப் பார்ப்போம்; சொன்னாற் கேட்பான்.

(நல்லமுத்துவிடம் மண்ணாங்கட்டியும் இரிசனும் சொல்லுகிறார்கள்.)

**மண்ணாங்கட்டி:**

ஒருமாத மாக உன்றன் தந்தையார்
அரச லூரில் அம்மாக் கண்ணிடம்
விளையாடு கின்றார்; வீட்டை மறந்தார்.
அவர்தாம் அப்படி ஆனார் உன்றன்
திருமணம் பற்றிய சேதி எப்படி?
இரிசனார் பெண்ணை ஏற்பாடு செய்தோம்;
உடனே மணத்தை முடிக்க வேண்டும்.

**நல்லமுத்து:**

அப்பா இல்லை; அதுமுடி யாது.
விவாஹ முகூர்த்த விளம்ப ரத்தில்
அப்பா கையெழுத் தமைய வேண்டும்.
பாத பூசை பண்ணிக் கொள்ள
அப்பா இல்லை! எப்படி முடியும்?
திருமண வேளையில் தெருவில் நின்று
வருபவர் தம்மை வரவேற் பதற்கும்
அப்பா இல்லை! எப்படி முடியும்?
புரோகிதர் தம்மைப் போய ழைக்க
அப்பா இல்லை! எப்படி முடியும்?
அரசாணிக் கால்நட அம்மி போட
நலுங்கு வைக்க நாலு பேரை
அழைக்க, நல்லநாள் அமைக்க, அம்மன்
பூசை போடப் பொங்கல் வைக்க
அப்பா இல்லை! எப்படி முடியும்?

**இரிசப்பன்:**

அப்பன் இல்லையே, அதற்கென்ன செய்வது?

**நல்லமுத்து:**

சோற்றை உண்டு சும்மா இருப்பது!

**மண்ணாங்கட்டி:**

அம்மாக் கண்ணின் அழகு மகனுக்கு
மகளைக் கட்டி வைக்கச் சொல்லி
கெஞ்சினா ராமே அவரை
இரக்கம் இருந்ததா இனிய தந்தைக்கே?

**நல்லமுத்து:**

என்னருந் தந்தை இயம்பிய படியே
இவரின் மகளை அவன்மணக் கட்டும்.
"தெருவில் என்ன பெரிய கூச்சல்?"
போய்வரு கின்றேன் பொறுப்பீர் என்னை!

(நல்லமுத்து போனபின், இரிசனும், மண்ணாங்கட்டியும் பேசுகின்றார்கள்,)

**மண்ணாங்கட்டி:**

தன்மானம் இல்லாத் தடிப்பயல் என்மகன்.
உணர்ச்சி இல்லா ஊமை என்மகன்.
அடிமை எண்ணம் உடையவன் என்மகன்
தனக்குப் பார்த்த தையலை, அப்பன்
அயலான் மணக்கச் செயலும் செய்தால்
துடிக்க வேண்டுமே தடிக்கழு தைமனம்!
இல்லவே இல்லை; என்ன செய்யலாம்?
சாப்பி டுங்கள், சற்று நேரத்தில்
வருவான் பையன் ஒருமுறைக் கிருமுறை
சொல்லிப் பார்ப்போம்; துன்பம் வேண்டாம்.

## காட்சி – 9

### தமிழ் உணர்ச்சி

(இரிசப்பனும் மண்ணாங்கட்டியும் பேசியிருக்கிறார்கள்.)

**இரிசப்பன்:**

எங்கே போனான் உங்கள் பிள்ளை?

**மண்ணாங்கட்டி:**

கூச்சல் கேட்டதாய்க் கூறிப்போனான்.

**இரிசப்பன்:**

என்ன கூச்சல்? எங்கே கேட்டது?

**மண்ணாங்கட்டி:**

கேட்டது மெய்தான், கிழக்குப் பாங்கில்
வாழ்க தமிழ்! வீழ்க இந்தி! என்று.

**இரிசப்பன்:**

எந்த உணர்ச்சியும் இல்லாப் பிள்ளை
அந்த இடத்தை அடைந்த தென்ன?

**மண்ணாங்கட்டி:**

என்ன இழவோ? யார்கண் டார்கள்?

(தமிழ்ப்புலவர் அமுதனார் வந்து, இரிசனிடத்திலும் மண்ணாங்கட்டியிடத்திலும் சொல்லுகிறார்.)

**அமுதனார்:**

உங்கள் பிள்ளையா நல்லமுத் தென்பவன்?

**மண்ணாங்கட்டி:**

ஆம்ஆம் ஐயா! அன்னவன் எங்கே?

**அமுதனார்:**

யானதைச் சொல்லவே இங்கு வந்தேன்.
இந்த அரசினர் செந்தமிழ் ஒழித்துத்
தீய இந்தியைத் திணிக்கின் றார்கள்.
தமிழ்அழிந் திட்டால் தமிழர் அழுவார்.
நம்தமிழ் காப்பது நம்கடன் அன்றோ?
போருக்குத் திராவிடர் புறப்பட் டார்கள்.
திராவிடர் கழகம் சேர்ந்தான் உங்கள்
நல்ல முத்தும்! நல்லது தானே!

**இரிசப்பன்:**

எந்த உணர்ச்சியும் இல்லாப் பிள்ளை
இந்தக் கிளர்ச்சியில் என்ன செய்வான்?

**மண்ணாங்கட்டி:**

திருமணம் செய்யச் சேயிழை ஒருத்தியை
அமைத் திருந்தார் அவனின் தந்தையார்
பாரடா நீ போய்ப் பாவை தன்னை
என்றால், அதையும் ஏற்க வில்லை.
அந்தப் பெண்ணை அயலொரு வனுக்குத்
தரும்படி சொன்னார் தந்தை என்றால்,
அப்பா மனப்படி ஆகுக என்றான்.
இப்படிப் பட்டவன் என்ன செய்வான்?

அப்பா அயலவள் அகத்தில் நுழைந்தார்
இப்பக் கத்தில் இனிவரரார் ஆதலால்
திருமணத்தை நீ செய்துகொள் என்றால்,
ஓலை விடுக்கவும், ஊரைக் கூட்டவும்,
சாலும் கரகம் தனியே வாங்கவும்,
பாத பூசை பண்ணிக் கொள்ளவும்
அப்பா வேண்டும்என் றொப்பனை வைக்கிறான்

**அமுதனார்:**

மடமையில் மூழ்கி மடிகின் றான்அவன்
தன்மா னத்தைச் சாகடிக் கின்றான்.
மரக்கட் டைபோல் வாழ்ந்து வந்தான்.
இந்த நிலைக்கெல்லாம் ஈன்றவர் காரணர்
ஆயினும் தமிழ்ப்பற் றவனிடம் இருந்தது.
திராவிடர் கழகம் சேர்ந்து விட்டான்.
இனிமேல் அவனோர் தனியொரு மறவன்!
அரசினர் சிறையில் அடைத்தார் அவனை!

**இரிசப்பன்:**

என்ன? என்ன? எப்போது விடுவார்?

**மண்ணாங்கட்டி:**

இருந்தும் பயனிலான்; இருக்கட்டும் சிறையில்.

**அமுதனார்:**

எப்போது வருவான் என்ப தறியோம்
துப்பிலா அரசினர் சொல்வதே தீர்ப்பு
நான்வரு கின்றேன்; நல்ல முத்துவின்
திருமணம் விரைவில் சிறப்ப டைக!

## காட்சி — 10

### திருமணம் என் விருப்பம்

(இரிசப்பன் வீட்டில் வெள்ளையப்பன் வந்து பேசுகிறான்.)

**வெள்ளையப்பன்:**

அம்மாக் கண்தன் சொத்தெலாம் அளிப்பாள்.
உம்மகள் தன்னை, அம்மாக் கண்ணின்
மகனுக் கே,திரு மணம்செய் விப்பீர்,
என்மகன் பெரியதோர் இளிச்ச வாயன்!

இரிசப்பன்:

அம்மாக் கண்ணின் அடியை நத்தி
வீணில் வாழும் வெள்ளை யப்பரே!
உமது சொல்லில் உயர்வே யில்லை
எமது கொள்கை இப்படி யில்லை
நல்லமுத் துக்கே நம்பெண் உரியவள்
பொல்லாப் பேச்சைப் புகல வேண்டாம்.

(அதே சமயத்தில் நல்லமுத்து வந்து, இரிசனிடம் இயம்புகின்றான்.)

நல்லமுத்து:

உம்மகள் என்னை உயிரென்று மதித்தாள்.
திருமணம் எனக்கே செய்துவைத் திடுக:

(வெள்ளையப்பன், தன் மகனான நல்லமுத்தை நோக்கிக் கூறுகின்றான்:)

என்விருப் பத்தை எதிர்க்கவும் துணிந்தாய்,
உன்விருப் பத்தால் என்ன முடியும்?
இன்று தொட்டுநீ என்வீட்டு வாயிலின்
வழியும் காலெடுத்து வைக்க வேண்டாம்.
என்றன் சொத்தில் இம்மியும் அடையாய்.
நான்சொன் னபடி நடந்து கொண்டால்,
திருமணம் பிறகு செய்து வைப்பேன்.
அம்மாக் கண்ணின் அழகு மகனே
இந்நாள் இந்த எழில்ம டந்தையை
மணந்துகொள் ளட்டும் மறுக்க வேண்டாம்.

நல்லமுத்து:

திருமணம் எனது விருப்ப மாகும்.
ஒருத்தியும் ஒருவனும் உள்ளம் கலத்தல்
திருமணம் என்க. இரிசனார் மகளும்
என்னை உயிரென எண்ணி விட்டாள்.
நானும் என்னை நங்கைக் களித்தேன்.
உம்வீட்டு வாயிலை ஒருநாளும் மிதியேன்:
உம்பொருள் எனக்கேன்? ஒன்றும் வேண்டேன்.
நானும்என் துணைவியும் நான்கு தெருக்கள்
ஏனமும் கையுமாய், எம்நிலை கூறி

ஒருசாண் வயிற்றை ஓம்புதல் அரிதோ?
ஆட்சித் தொட்டியில் அறியாமை நீர்பெய்து
சூழ்ச்சி இந்திஇட்டுத் துடுக்குத் துடுப்பால்
துழவிப் பழந்தமிழ் அன்னாய் முழுகென
அழுக்குறு நெஞ்சத் தமைச்சர் சொன்னார்.
இழுக்குறும் இந்நிலை இடர வேண்டி
நானும்என் துணைவியும் நாளும் முயல்வதில்
சிறைப்படல் காதல் தேனருந் துவதாம்!
இறப்புறல் எங்கள் இன்பத்தி னெல்லையாம்!

(வெள்ளையப்பனை நோக்கி இரிசன் சொல்லுகிறான்:)

**இரிசன்:**

வெள்ளை யப்பரே வெளியில் போவீர்
என்மகள் உன்மகன் இருவரும் நாளைக்குக்
காதல் திருமணம் காண்பார், நீவிரோ
அம்மாக் கண்ணோடும் அழகு மகனொடும்
இம்மா நிலத்தில் இன்புற் றிருங்கள்.

[நல்லமுத்து, தன் திருமணத்திற்குப்பின், துணைவியுடன் இந்தி எதிர்ப்பு மறியலுக்குப் புறப்படுகின்றான்.]

**நல்லமுத்து:**

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
இந்தி ஒழிக! இந்தி ஒழிக!

[சென்றுகொண்டிருக்கையில், நல்லமுத்தின் தாய் அவர்களைத் தொடர்கிறாள்.]

**மண்ணாங்கட்டி:**

இன்பத் தமிழுக் கின்னல் விளைக்கையில்
கன்னலோ என்னுயிர்? கணவனும் வேண்டேன்;
உற்றார் வேண்டேன்; உடைமை வேண்டேன்;
இந்தி வீழ்க! இந்தி வீழ்க!
திராவிட நாடு வாழிய!
அருமைச் செந்தமிழ் வாழிய நன்றே!

# ஏற்றப் பாட்டு

## முற்பகல்

ஓங்கு கதிர் வா வா — நீ
[ஒன்றுடனே] வாழி
மாங் கனியும் நீதான் — அந்த
வானம் என்னும் தோப்பில்!
நீங்கும் பனி என்றே — இங்கு
நீ சிரித்து வந்தாய்!
நாங்கள் மறப் போமோ — நீ
(நாலு டனே) வாழி
ஐந் துடனே — வாழி — நீ
அள்ளி வைத்த தங்கம்!

முந்திய 'கருக்கல்' — எந்த
மூலை யிலும் இல்லை.
சந்து பொந்தில் எங்கும் — உன்
தங்க வெய்யில் கண்டோம்.
இந்த நன்மை செய்தாய் — நீ
(எட்டு டனே) வாழி!

### திராவிடநாடு வாழ்த்து

இன்பம் உள்ள நாடு — தம்பி
இத் திராவி டந்தான்
உன்னி வாழ்த்து வோமே — தம்பி
(ஒன்ப துடன்) வாழி!

### திராவிட நாட்டின் சிறப்பு

நன்மை யுள்ள நாடு — தம்பி
நாவலந் தீ வுக்குள்

தென்னை வளம் சேரும் — நல்ல
தெற்கு வள நாடு.

கன்னி முதல் வங்கம் — இரு
கடல் கிழக்கு மேற்கு.

சின்ன தல்ல தம்பி — நம்
திராவிட நன் னாடு!

முன்ன ரசர் நாடு — நல்ல
மூன் றரசர் நாடு

மன்னர் வில்எ டுத்தால் — பனி
வட மலைந டுங்கும்.

பாண்டி யன்பேர் சொன்னால் — இந்தப்
பார் நடுங்கும் தம்பி

ஆண்டி ருந்த சேரன் — அவன்
ஆரி யரை வென்றான்.

மாண்ட துண்டு சோழன் — அவன்
மா நிலத்தைக் காத்தான்.

மாண்டு விட்டால் என்ன — அவன்
வழி வந்தவர் நாமே!

(இருப துடன் ஒன்றே) — வளம்
எக்க ளிக்கும் நாட்டில்

எரு தடிப்ப தாலே — தம்பி
என்ன பயன் என்று

பொருந்த யானை கட்டி — நெல்
போர் அடித்தல் உண்டு.

கரும்பு தரும் சாறோ — தம்பி
கா விரியின் ஆறு!

முப் பழமும் தேனும் — நல்ல
முந்தி ரிப்ப ருப்பும்,

எப்பொ ழுதும் காணும் — தம்பி
(இருப துடன் ஆறு)

கப்பல் கொண்டு போகும் — இங்குக்
காணும் சரக் கெல்லாம்.

சிப்ப மாகச் சாயும் — பல
சீமைச் சரக் கெல்லாம்

கெட்டி முத்துச் சாயும் — நம்
கீழ்க் கடலில் தம்பி.

முட்டில் லாத நாடு — தம்பி
(முப்பதுடன்) வாழி!

வெட்டும்இட மெல்லாம் — நாம்
வேண்டிய பொன் கிட்டும்

எட்டுத் திசை பாடும் — நம்
இன்பத் திரு நாட்டை!

நாக ரிக நாடு; — நம்
நல்ல பெரு நாடு!

தோகை மயில் ஆடும் — பூந்
தோட் டங்களில் எல்லாம்.

வேக வைக்கும் கோடை — அதை
விழுந் தவிக்கும் தென்றல்

வாழ் கறவை மாடு — தம்பி
மாம லையின் ஈடு!

சந்த னத்துச் சோலை — அதைச்
சார்ந்து நிற்கும் குன்றம்

அந்தப் 'பொதிகை' போல் — தம்பி
ஆருங் கண்ட தில்லை

சிந்தருவி உண்டு — தம்பி
தெங் கிளநீர் போலே!

நந்து புனல் ஆறு — தம்பி
(நாற்ப துடன்) வாழி!

காவிரி நல்வைகை — பல
கண் கவரும் பொய்கை

பூ விரியும் சோலை — நல்ல
பொன் கொழிக்கும் நன்செய்;

யாவும் உண்டு கண்டாய் — தம்பி
இத் திராவி டத்தில்

தேவை எல்லாம் சாயும் — நம்
தெற்கு வள நாட்டில்.

### திராவிடர் கலை ஒழுக்கம்

குற்ற மற்ற கொள்கை — தம்பி
கொண்ட திந்த நாடு

கற்ற வருக் கெல்லாம் — தம்பி
கல்வி தந்த நாடு.

வெற்றி மற வர்கள் — தம்பி
வேல் மறவர் நாடு.

மற்ற வரும் வாழத் — தம்பி
வழி வகுத்த நாடு.

இங்கு வள்ளு வன் தான்
ஈரடியும் தந்தான் — தம்பி

ஆரும் அறம் கண்டோம் — தம்பி
(ஐம்ப துடன்) வாழி!

சீருடை நாடு — தம்பி
திராவிட நன் னாடு

பேருடைய நாடு — தம்பி
பெருந் திராவி டந்தான்.

ஓர் கடவுள் உண்டு — தம்பி
உண்மை கண்ட நாட்டில்

பேரும் அதற் கில்லை — தம்பி
பெண்டும் அதற் கில்லை.

தேரும் அதற் கில்லை — தம்பி
சேயும் அதற் கில்லை

ஆரும் அதன் மக்கள் — அது
அத்த னைக்கும் வித்து!

உள்ளதொரு தெய்வம் — அதற்
குருவ மில்லை தம்பி.

அள்ளி வைத்த ஆப்பி – தம்பி
அதிர் கடவுள் இல்லை.
குள்ள மில்லை தெய்வம் – அது
கோயில் களில் இல்லை.
தெள்ளு பொடி பூசும் – தம்பி
சிவன் கடவு ளல்ல.

(அருப துடன் ஒன்று) தம்பி
அரி கடவுள் அல்ல –
அறு முகனும் அல்ல – தம்பி
ஐங் கையனும் அல்ல.

அறு சமயம் சொல்லும் – தம்பி
அது கடவுள் அல்ல.

பிற மதத்தில் இல்லை – அந்தப்
பெரிய் பொருள் தம்பி.

திராவி டர்கள் முன்னே – தம்பி
தெரிந் துணர்ந்த உண்மை.

ஒரு மதமும் வேண்டாம் – தம்பி
உண்மை யுடை யார்க்கே.

பெரு மதங்கள் என்னும் – அந்தப்
பேய் பிடிக்க வேண்டா.

திருட்டுக் குரு மாரின் – கெட்ட
செயலை ஒப்ப வேண்டாம்!

காணிக் கைகள் கொட்டி – நீ
கண் கலங்க வேண்டாம்!

ஏணி ஏற்ற மாட்டார் – தம்பி
(எழுப துடன்) வாழி!

தோணி யினில் ஏற்றி – நல்ல
சொர்க்கம் சேர்க்க மாட்டார்.

நாண மற்ற பேச்சை – நீ
நம்ப வேண்டாம் தம்பி.

சாதி யில்லை தம்பி — மக்கள்
தாழ் வுயர்வும் இல்லை.

நீத கற்ற வந்த — நம்
திருக் குறளைப் பாராய்.

நீதி பொது தம்பி — இந்த
நீணி லத்தில் யார்க்கும்.

மாத ருக்கும் நீதி — ஆண்
மக்க ளுக்கும் ஒன்றே
பச்சை விளக் காகும் — உன்
பகுத் தறிவு தம்பி
பச்சை விளக் காலே — நல்ல
பாதை பிடி தம்பி!

அச்ச மில்லை தம்பி — நல்ல
அறம் இருக்கும் போது!

எச்ச ரிக்கை கண்டாய் — தம்பி
(எண்பத துடன்) வாழி!

வள்ளு வரின் நூலே — நல்ல
வழி யளிக்கும் தம்பி!

குள்ளர் வழிச் சென்று — நீ
குழியில் விழ வேண்டாம்.

உள்ள இனத் தார்கள் — உளம்
ஒன்று பட வேண்டும்.

தள்ளுக 'பொ றாமை' — ஒரு
தாய் வயிற்று மக்கள்,

நீக்குக பே ராசை — தம்பி
நிகர் எவரும் ஆவார்.

போக்கு சினம் தீச்சொல் — நீ
பொன் அறத்தை வாழ்த்து.

சேர்க்கும் அறம் உன்னை — ஒரு
தீங்கும் அற்ற வாழ்வில்!

ஊர்க் குழைக்க வேண்டும் — நீ
உண்மை யுடன் தம்பி!

நாட்டுக் குழை தம்பி — இந்த
நானி லத்தை எண்ணி!

வீட்டுக் குழை தம்பி — இங்கு
மீதிப் பெயர் எண்ணி!

தேட்டம் பொது தம்பி — இந்தச்
சீமை பொது தம்பி!

தோட்டம் பொது தம்பி — உணர்
(தொண்ணூ றோடி ரண்டே)

கண் அடித் தழைக்கும் — ஒரு
கட்டழகி தன்னை

எண்ணம் ஒத்திருந்தால் — நீ
ஏற்றுக் கொள்ள வேண்டும்

பண்ணி வைப்பதாக — வரும்
பார்ப்பு மணம் வேண்டாம்.

கண்மணியும் நீயும் — நல்ல
காதல் மணம் கொள்வீர்

திராவிடத்தை மீட்பீர் — நம்
செந்தமிழை மீட்பீர்.

திராவிடர்கள் ஒன்றாய்த் — தம்பி
சேர்ந்துழைக்க வேண்டும்.

---

குறிப்புரை:

கதிர் — சூரியன். ஓங்கு — கடல்மேல் எழுகின்ற. உன்னி — நினைத்து. நாவலந்தீவு — இந்தியா. கன்னி — கன்னியாகுமரி. வங்கம் — வங்காளம். மூன்றரசர் — சேர, சோழ, பாண்டியர். பனிவடமலை — இமயமலை. பார் — உலகம். முப்பழம் — மா, பலா, வாழை. குன்றம் — மலை. நந்து புனல் — பெருகுகின்ற நீர். மறவர் — வீரர். அறம் — தருமம். சேய் — பிள்ளை. ஆப்பி — சாணி. தெள்ளு பொடி — திருநீறு. நிகர் எவரும் — எவரும் சமானம். தேட்டம் — சொத்து. பார்ப்பு — பார்ப்பனன். மாற்றார் — பகைவர்.

திராவிடத்தில் மாற்றார் — தமைச்
சேர விட வேண்டாம்.

ஒரே உறுதி கொள்வாய் — தம்பி
(ஒரு நூறுடன்) வாழி.

### பிற்பகல்
### மாலை

உச்சி குடை சாய்ந்தான்— கதிர்
(ஒன்றுடனே) வாழி!

மச்சு வேய்ந்திருந்தான்— அந்த
மாற்றுயர்ந்த பொன்னன்

மெச்சு தடி பெண்ணே— அந்த
வெய்யி லையும் வையம்.

வைச்ச புள்ளி மாறான்— அவன்
மாலை மாற்றப் போவான்.

### ஒழுக்கம்

நல்லொழுக்கம் ஒன்றே— பெண்ணே
நல்ல நிலை சேர்க்கும்

புல் ஒழுக்கம் தீமை— பெண்ணே
பொய் உரைத்தல் தீமை!

இல் லறமே பெண்ணே— இங்கு
நல் லறமென் பார்கள்

கல்வியுடை யோரே— பெண்ணே
கண்ணுடைய ராவார்.

நன்றி மறவாதே— பெண்ணே
நற்பொறுமை வேண்டும்

இன்சொல் இனிதாகும்— பெண்ணே
இன்னல் செய்ய வேண்டாம்.

உன்னருமை நாட்டின்— பெண்ணே
உண்மை நிலை காண்பாய்.

இந்நிலத்தின் தொண்டில்— நீ
ஈடுபட வேண்டும்.

(பத்துடனே மூன்று)— நீ
பகுத்தறிவைப் போற்று!

நத்தியிரு பெண்ணே— நீ
நல்ல வரை என்றும்!

சொத்து வரும் என்று— நீ
தோது தவறாதே.

முத்து வரும் என்று— நீ
முறை தவற வேண்டாம்.

கனியத் தமிழ் பாடு— பெண்ணே
கச்சேரி செய்யாதே.

சினிமாவிற் சேர்ந்து— நீ
தீமை யடையாதே!

தனித்து வரும்போது— கெட்ட
தறுதலை கண் வைத்தால்,

இனிக்க நலம் கூறு— பெண்ணே
இல்லாவிடில் தாக்கு.

(இருபதுடன் ஒன்றே)— பெண்ணே
இத்திரா விடத்தில்.

அரிசிமட்டும் இல்லை— பெண்ணே
ஆட்சி மட்டும் உண்டு.

இரிசன் மகன் முத்தை— பெண்ணே
"இந்தி படி" என்றான்.

வரிசை கெட்ட மூளி— அவன்
வைத்தது தான் சட்டம்!

(இருபதுடன் ஐந்தே)— நம்
இனிய தமிழ்த் தாயைக்

கருவறுத்துப் போடும்— ஒரு
கத்தியடி இந்தி.

அரிய செயல் ஒன்று— பெண்ணே
ஆளுபவர் செய்தார்.

ஒருவருக்கும் கள்ளைப்— பெண்ணே
ஒழிக்கச் சட்டம் செய்தார்!

கள்ளை விட்ட பேர்க்குப்— பெண்ணே
கைப் பணமும் மீதி

முள் விலக்கி னார்கள்— பெண்ணே
(முப்பதுடன்) வாழி!

கள்ளை விட்டுக் கையில் பெண்ணே
காசு மீத்தச் செய்தார்.

கள்ளக் கடை போட்டார்— அதைக்
கழற்ற வழி செய்தார்.
ஆள வந்தார் உண்டு— பெண்ணே
ஐயோ பெரும் மண்டு

நாளும் கையில் மட்டும்— பெண்ணே
நல்ல வருமானம்!

ஆளுக்கென்ன பஞ்சம்— பெண்ணே
அடிமடியில் லஞ்சம்!

தோளிலே மிடுக்காம்— அவர்
தொழுவதோ வடக்காம்!

கெண்டை விழி யாளே— அடி
கிள்ளை மொழி யாளே!

கொண்டையிலே பூவும்— உன்
கோணை நெடு வாக்கும்,

தண்டையிலே பாட்டும்— உன்
தாழ் அடியில் கூத்தும்,

கண்டவுடன் காதல்— நான்
கொண்டே னேஉன் மீதில்.

(நாற்ப துடன் ஒன்று)— பெண்ணே
நான் உனக்கு மாமன்.

நேற்று வந்து போனாய்— அடி
நீல மயில் போலே.

மாற்று யர்ந்த பொன்னே— அடி
மாணிக்கமே கேளாய்

சோற்றை மறந் தேனே— அடி
தூக்க மில்லை மானே!

உன் நினைப்புத் தானே— அடி
ஊற் றெடுத்த தேனே!

என்னைக் கொல்லு தேடி— அடி
ஏதுக் கிந்த மோடி?

சின்ன வய தாளே— அடி
சிரித்த முகத் தாளே;

அன்ன நடை யாளே— நல்ல
அச்ச இடை யாளே!

துள்ளு வதென் ஆசை— அடி
துடித்த தடி மீசை.

அள்ளுவ தென் காதல்— அடி
(ஐம்பதுடன்) வாழி!

தள்ளத் தகு மோடி— நான்
தாய்க்குத் தலைப் பிள்ளை

நொள்ளை யல்ல பெண்ணெ— நான்
நொண்டி யல்ல பெண்ணே

வருத்தும் இல்லை பெண்ணே— என்
மாமிக் கும்என் மேலே

கருத்து உண்டு மாமன்— என்னைக்
கட்டிக் கொள்ளச் சொல்வான்

சிரிப்பு மலர் வாயால்— அடி
தெரிவி ஒரு பேச்சே

கருத்தை உரை கொஞ்சம்— பெண்ணே
கல்லடி உன் நெஞ்சம்.

பார் இரண்டு சிட்டு— பெண்ணே
பழகும் ஒன்று பட்டு.

யார் தடுக்கக் கூடும்— பெண்ணே
(ஐம்ப துடன் எட்டு)
பீர்க்க மலர் பூக்கும்— அடி
பின் பொழுதும் கண்டாய்.
ஆர்க்கு தடி வண்டும்— பெண்ணே
(அறுப துடன்) வாழி!

விரிந்ததடி முல்லை— அடி
வீசி யது தென்றல்

சரிந்த தடி பெண்ணே— மலர்
தங்கப் பொடி எங்கும்.

எரிந்த தடி மேனி— பெண்ணே
இனிப் பொறுக்க மாட்டேன்.

புரிந்த னைஇந் நேரம்— அடி
பொல்லாத ஒட் டாரம்.

பூட்டி வைத்த வீட்டின்— அடி
புது விளக்கும் நீயே.

மாட்டி வைத்த கூட்டில்— அடி
மணிக் கிளியும் நீயே.

போட்டு வைத்த சம்பா— இனிப்
பொங்கி டும்முன் னாலே

கூட்டி வைத்த வீட்டின்— நல்ல
குடும்ப விளக் காவாய்.

கூண்டு வண்டி கட்டி— நாம்
கூட லூர் அடைந்தால்,

பாண்டி யன்கு டும்பம்— என்று
பார்த்து மகிழ் வார்கள்.

தாண்டு நடை போட்டு— நாம்
தக தகென்று போனால்

மாண்ட நெடுஞ் சோழன்— அவன்
வளர் குடும்பம் என்பார்

தையல் என்றன் வீட்டில்— நீ
சமையல் செய்யும் போதுன்

கை யழகு பார்த்து— நான்
களித் திடுவேன் பெண்ணே

கையில் விளக் கேந்தி— நீ
கடைசி அறை போவாய்.

பொய் யல்லவே பெண்ணே— மிகப்
பூரிக்கும் என் மேனி

(எழுப துடன் ஏழு)— பெண்ணே
இளமை மாறிப் போகும்

அழகு மாறிப் போகும்— நீ
அறிந்து நட பெண்ணே

குழந்தை குட்டி பெற்று— நாம்
குறை தவிர்க்க வேண்டும்.

பிழிந்த பழச் சாறே— அடி
பேச்சும் உண்டோ வேறே

தங்கக் கதிர் மேற்கில்— மெல்லத்
தவழ்ந்ததடி பெண்ணே.

மங்கிற்றடி வெய்யில்— அதோ
மகிழ்ந்த தடி அல்லி.

தங்கும் தாமரைப்பூ— மானே
தளர்ந்ததடி மேனி,

பொங்கிற் றடி காதல்— அடி
பூவை யேஉன் மீதில்!

(எண்ப துடன் ஐந்தே)— பெண்ணே
எருதுகளின் கூட்டம்

கண் மகிழ்ந்து பெண்ணே— அவை
கழனி விட்டுப் போகும்.

பெண் மயிலே என்னை— நீ
பெருமை படச் செய்வாய்.

உண்மையிலே நானே— உன்
ஊழி யம்செய் வேனே.

பட்ட தடி உன்கை— பெண்ணே
பலித்த தடி வாழ்வு.

தொட்டது துலங்கும்— இனித்
(தொண்ணூா றுடன்) வாழி!

இட்டது நீ சட்டம்— என்
இன்பப் பெரு மாட்டி,

விட்டுப் பிரி யாதே— எந்த
வேலையிலும் மாதே

ஆறு தலைச் செய்வாய்— என்
அண்டை யிலி ருந்தே.
மாறி டுமோ கண்ணே— நம்
வாழ்க் கையிலே எண்ணம்?

மாறும்படி செய்வார்— இவ்
வையகத்தில் இல்லை,

ஊறு தடி அன்பும்— பெண்ணே
ஏங் கிடுதே இன்பம்.

தேக்கி யது நீலம்— அந்தச்
செங்க திரின் மேலே.

பூக்கும் மண முல்லை— இனிப்
போகு மடி மாலை

வாய்க்க விளக் கேற்றி— நகர்
மாத ரும்ம கிழ்ந்தார்.

நோக் கியது வையம்— பெண்ணே
(நூறுடனே) வாழி!

# திராவிடர் திருப்பாடல்

## காலைப் பத்து

### வெண்டளையான் வந்த தரவிணைக் கொச்சகக் கலிப்பா

கிழக்கு மலரணையில் தூங்கிக் கிடந்து
விழித்தான்; எழுந்தான்; விரிகதிரோன் வாழி!
அழைத்தார்கள் அன்பால் திராவிடர்கள் உம்மை!
மொழிப்போர் விடுதலைப்போர் மூண்டனவே இங்கே!
விழிப்பெய்த மாட்டீரோ? தூங்குவீரோ மேலும்?
அழிப்பார் தமிழை! அடிமையிற் சேர்ப்பார்!
ஒழிப்பீர் பகையை! நொடியில் மறவர்
வழித்தோன்றும் மங்கையீர் காளையரே வாரீரோ. 1

எழுந்தன புட்கள்; சிறகடித்துப் பண்ணே
முழங்கின! ஏருழவர் முன்செல் எருதை
அழிஞ்சிக்கோல் காட்டி அதட்டலும் கேட்டீர்.
எழுந்திருப்பீர் வீட்டினரே, இன்னும் துயிலோ?
பழந்தமிழர் செல்வம் கலையொழுக்கம் பண்பே
ஒழிந்துபட வடக்கர் ஒட்டாரம் செய்தார்;
அழிந்தோமா வென்றோமா என்ப துணர்த்த
எழில்மடவீர் காளையரே இன்னேநீர் வாரீரோ! 2

காக்கைக் கழுத்துப்போல் வல்லிருளும் கட்டவிழும்!
தாக்கும் மணிமுரசு தன்முழக்கம் கேட்டீரோ?
தூக்கமோ இன்னும்? திராவிடர்கள் சூழ்ந்துநின்றார்
தூக்கறியார் வாளொன்றும்! போராடும் துப்பிலார்.
சாய்க்கின்றார் இன்பத் தமிழைக் குறட்கருத்தைப்
போக்கேதும் இல்லா வடக்கர் கொடுஞ்செயலும்
வாய்க்கஅவர் வால்பிடிக்கும் இங்குள்ளார் கீழ்ச்செயலும்
போக்க மடவீரே காளையரே வாரீரோ! 3

தங்கம் உருக்கிப் பெருவான் தடவுகின்றான்
செங்கதிர்ச் செல்வன்! திராவிடர்கள் பல்லோர்கள்
தங்கள் விடுதலைக்கோர் ஆதரவு தாங்கேட்டே
இங்குப் புடைசூழ்ந்தார் இன்னும் துயில்வீரோ!

பொங்கும் வடநாட்டுப் பொய்யும் புனைசுருட்டும்
எங்கும் தலைவிரித்தே இன்னல் விளைத்தனவே
வங்கத்துக் கிப்பால் குடியரசு வாய்ப்படைய
மங்கையீர் காளையரே வாரீரோ! வாரீரோ! 4

தேர்கலி கொள்ள அமர்ந்து செழும்பரிதி
ஆர்கலிமேற் காட்சி அளிக்கின்றான் கீழ்த்திசையில்!
ஊர்மலர்ந்தும் உங்கள் விழிமலர ஒண்ணாதோ?
சீர்மலிந்த அன்பின் திராவிடர்கள் பல்லோர்கள்
நேர்மலிந்தார் பெற்ற நெருக்கடிக்குத் தீர்ப்பளிப்பார்
பார்கலந்த கீர்த்திப் பழைய திராவிடத்தை
வேர்கலங்கச் செய்ய வடக்கர் விரைகின்றார்;
கார்குழலீர் காளையரே வாரீரோ வாரீரோ! 5

செஞ்சூட்டுச் சேவல்கள் கூவின கேட்டீரோ?
மிஞ்சும் இருள்மீது பொன்னொளி வீழ்ந்ததுவே!
பஞ்சணைவிட் டெழுந்து பாரீர் திராவிடத்தை
நஞ்சுநிகர் இந்தியினை நாட்டித் தமிழமுதை
வெஞ்சேற்றுப் பாழ்ங்கிணற்றில் வீழ்த்த நினைத்தாரோ!
நெஞ்சிளைப் போமோ? நெடுந்தோள் தளர்வோமோ?
அஞ்சுவமோ என்று வடக்கர்க் கறிவிக்க
கொஞ்சுங் குயில்களே காளையரே வாரீரோ. 6

கோவாழும் இல்லொன்றே கோவிலாம் மற்றவை
நாவாலும் மேல்என்னோம்; நல்லறமே நாடுவோம்!
தேவர்யாம் என்பவரைத் தெவ்வரென எதிர்ப்போம்
சாவு தவிர்ந்த மறுமையினை ஒப்புகிலோம்
வாழ்விலறம் தந்து மறுமைப் பயன்வாங்கோம்
மேவும் இக்கொள்கைத் திராவிடத்தை அவ்வடக்கர்
தாவித் தலைகவிழ்க்க வந்தார் தமைஎதிர்க்கப்
பாவையரே காளையரே பல்லோரும் வாரீரோ! 7

மன்னிய கீழ்க்கடல்மேல் பொன்னங் கதிர்ச்செல்வன்
துன்னினான்! இன்னும்நீர் தூங்கல் இனிதாமோ?
முன்னாள் தமிழ்காத்த மூவேந்தர் தம்உலகில்
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" என்னும் நன்னாட்டில்
சின்ன வடக்கரும் வால்பிடிக்கும் தீயர்களும்,

இன்னலே சூழ்கின்றார் இன்பத் திராவிடத்துக்
கன்னல்மொழி மங்கையீர் காளையரே வாரீரோ! 8

நீல உடையூடு பொன்னிழை நேர்ந்ததென
ஞால இருளின் நடுவில் கதிர்பரப்பிக்
கோலஞ்செய் கின்றான் இளம்பரிதி? கொண்டதுயில்
ஏலுமோ? உம்மை எதிர்பார்த் திருக்கின்றார்
தோலிருக்க உள்ளே சுளையைப் பறிப்பவரைப்
போல வடக்கர்தம் பொய்ந்நூல் தனைப்புகுத்தி
மேலும் நமைமாய்க்க விரைகின்றார் வீழ்த்தோமோ?
வாலிழையீர் காளையரே வாரீரோ வாரீரோ! 9

அருவி, மலை, மரங்கள் அத்தனையும் பொன்னின்
மெருகு படுத்தி விரிகதிரோன் வந்தான்.
விரியாவோ உங்கள் விழித்தா மரைகள்?
அருகு திராவிடர்கள் பல்லோர்கள் ஆர்த்தார்
ஒருமகளை ஐவர் உவக்கும் வடக்கர்
திருநாட்டைத் தம்மடிக்கீழ்ச் சேர்க்க நினைத்தார்;
உருவிய வாளின், முரசின் ஒலி கேட்பீர்,
வரைத்தோளீர் காளையரே வாரீரோ வாரீரோ! 10

## விடுதலைப் பாட்டு

மீள்வது நோக்கம்— இந்த
மேன்மைத் திராவிடர் மீளுவ தின்றேல்
மாள்வது நோக்கம்— இதை
வஞ்ச வடக்கர்க்கெம் வாள்முனை கூறும்!
ஆள்வது நோக்கம்— எங்கள்
அன்னை நிலத்தினில் இன்னொரு வன்கால்
நீள்வது காணோம்— இதை
நீண்டஎம் செந்தூக்கு வாள்முனை கூறும்!
(மீள்வது நோக்கம்)

கனவொன்று கண்டார்— தங்கள்
கையிறுப் பிவ்விடம் செல்வதுண்டோ?
இனநலம் காண்பார்—எனில்
இங்கென்ன வேலை அடக்குக வாலை!
தினவுண்டு தோளில்— வரத்

திறல்மிக உண்டெனில் வந்துபார்க் கட்டும்!
மனநோய் அடைந்தார்— அந்த
வடக்கூர்க்கு நல்விடை வாள்முனை கூறும்?
(கனவொன்று கண்டார்)

திராவிடர் நாங்கள்— இத்தி
ராவிட நாடெங்கள் செல்வப் பெருக்கம்
ஒரே இனத்தார்கள்— எமக்
கொன்றே கலைபண் பொழுக்கமும் ஒன்றே!
சரேலென ஓர்சொல்— இங்குத்
தாவுதல் கேட்டெம் ஆவி துடித்தோம்
வராதவர் வந்தார்— இங்கு
வந்தவர் எம்மிடம் வாளுண்டு காண்பார்!
(திராவிடர் நாங்கள்)

## இராப் பத்து

### வெண்டளையான் வந்த இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா

திருவிளக் கேற்றி இரவு சிறக்க
வருவிருந் தோடு மகிழ்ந்துண வுண்டீர்!
அருகு மடவார் அடைகாய் தரவும்
பருகுபால் காத்திருக்கப் பஞ்சணை மேவித்
தெருவினில் யாம்பாடும் செந்தமிழும் கேட்பீர்!
பெருவாழ்வு வாழ்ந்த திராவிடநா டிந்நாள்
திருகுவட நாட்டார் கையினிற் சிக்கி
உருவழிந்து போகாமே காப்பாற்றல் உங்கடனே. 1

ஆற்றும் பணிகள் பகலெல்லாம் ஆற்றியபின்
சேற்றில் முளைத்திட்ட செந்தா மரைபோலும்
தோற்றும் இரவும் சுடர்விளக்கும் இல்லத்தில்
காற்று நுகர்ந்திடுவீர்! காது கொடுத்தேயாம்
சாற்றுதல் கேளீர் தமிழை வடநாட்டார்
மாற்றித் தமிழர் கலையொழுக்கம் பண்பெல்லாம்
மாற்றவே இந்திதனை வைத்தார்கட் டாயமென
வேற்றுவரின் எண்ணத்தை வேரறுத்தல் உங்கடனே. 2

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனுமோர்
சிறப்புடைய நம்கொள்கை நானிலத்தின் செல்வம்!

தறுக்கன் வடநாட்டான் தன்னலத்தான் இந்நாள்
நிறப்பாகு பாட்டை நிலைநிறுத்த எண்ணி
வெறுப்புடைய இந்தி விதைக்கின்றான் இங்கே.
அறப்போர் தொடுத்திடுவோம் வெல்வோம்நாம் அன்றி
இறப்போம் உறுதி இதுவாகும் என்பீர்
உறக்கம் தவிர்த்துணர்வே உற்றெழுதல் உங்கடனே. 3

தீயில் நிலநீரில் காற்றில் செழுவானின்
ஆயில் குறியில் அறியாப் பெரும்பொருட்குக்
கோயில் தனைஒப்புக் கொள்ளோம்! சுமந்தீன்ற
தாயின் பிறிதோர் பொருட்குத் தலைவணங்கோம்!
வாயில் பொறாமைச்சொல் வையோம்! அவாவெகுளி
தீயிற் கொடுஞ்சொற்கள் தீர்த்தோம்: அறப்பயனே
வாயிற் பருகுவோம் நம்கொள்கைப் பற்றறுக்க
நோயில் நுழைஇந்தி வேரறுத்தல் உங்கடனே. 4

ஒழுக்கம் கெடுக்கும்! உணர்வை ஒடுக்கும்!
வழக்கும் பெரும்போரும் மாநிலத்தில் சேர்க்கும்!
இழுக்குத் தருமதங்கள் யாவும் விலக்கிக்
கொழுக்கும் குருமாரின் கொட்டம் அறுத்துத்
தழைக்கத் தழைக்க நறுங்கொள்கை நெஞ்சிற்
பழுக்கும் படிவாழ் திராவிடர் பண்பை
அழிக்க நினைத்திங்கே ஆளவந்தார் இந்தி
புழுக்கும் படிசெய்தார் போக்கிடுதல் உங்கடனே. 5

எட்டுத் திசையும் பதினா றிடைப்பாங்கும்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு பேரொளிக்கே
எட்டுக் குடப்பசுப்பால் இட்டாட்டு வீரென்னும்
பட்டாடை சாத்தென்னும் பல்பணி பூட்டென்னும்
குட்டி வணங்குமுன்பு பார்ப்பனனைக் கும்பிடென்னும்
மட்டக் கருத்துக்கள் மாளா மடமைஎலாம்
கொட்டி அளக்குமோர் இந்தியினை நம்தலையில்
கட்டுவார் தம்மைஒரு கைபார்த்தல் உங்கடனே. 6

தந்தைமார் பற்பலராய்த் தாயொருத்தி யாய்மாட்டு
மந்தையுடன் இந்நாட்டில் வந்தவர்கள் நாமெல்லாம்
முந்தைக்கு முந்தை அதன்முந்தை நாளாக
இந்தப் பெருநாடாம் யாழின் இசையாவோம்!

வந்தார்க்கோ நாமடிமை? வந்தார் பொருள்விற்கும்
சந்தையா நம்நாடு? தாயாம் தமிழிருக்க
இந்தியோ கட்டாயம்? என்ன பெருங்கூத்தோ?
கொந்துமொரு கொத்தடிமை நீக்கிடுதல் உங்கடனே. 7

புலையொழுக்கம் கொண்டவர்கள் பொல்லா வடக்கர்
தலையெடுத்தார் இன்பத் திராவிடத்தின் தக்க
கலையொழுக்கம் பண்பனைத்தும் கட்டோ டொழித்து
நிலைபுரட்டி நம்நாட்டை நீளடிமை யாக்க
வலைகட்டி நம்மில் வகையறியா மக்கள்
பலரைப் பிடித்துரா மாயணத்தை மற்றும்
மலிபொய் மனுநூலை வாழ்வித்தார் யாவும்
தொலையப் பெரும்போர் தொடுப்பதுவும் உங்கடனே. 8

தென்றற் குளிரும், செழுங்கா மலர்மணமும்,
நின்று தலைதாழ்த்தும் வாழையும், நீள்கரும்பும்;
என்றும் எவர்க்குமே போதும்எனும் செந்நெல்
நன்று விளையும் வளமார்ந்த நன்செய்யும்,
அன்றன் றணுகப் புதிய புதியசுவை
குன்றாத செந்தமிழும், குன்றும், மணியாறும்
தொன்றுதொட்ட சீரும் உடைய திராவிடத்தை
இன்று விடுதலைச்சீர் எய்துவித்தல் உங்கடனே. 9

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்" என்ற வள்ளுவர்சொல்
தாழ்வொன் றடையாது தஞ்செயலை நன்றாற்றும்
ஆழ்கடல் முப்பாங் கமைந்த திராவிடத்தில்
வாழ்கின்றார் ஆன வடுத்தீர் திராவிடர்கள்
வாழ்க! நனிவாழ்க! மற்றோர்கள் வீழ்ந்திடுக!
யாழ்கொள் நரம்பும் இசையும்போல் எந்நாளும்
வாழ்க திராவிடமும் வான்புகழும் சேர்ந்தினிதே! 10

## திராவிடர் ஒழுக்கம்

### சிந்து கண்ணிகள்

தட்டுப்ப டாதபெரும்—பொருட்கொரு
சாதியும் உண்டோடா— படுவாய,
சாதியும் உண்டோடா—

மட்டற்ற செம்பொருட்கே—முரண்படும்
மதங்கள் உண்டோடா?

எட்டுத் திசைமுழுதும்—விசும்பு, மண்
எங்கும் நிறைபொருட்கே—படுவாய்,
எங்கும் நிறைபொருட்கே
கொட்டுமுழக்குண்டோ—அமர்ந்திடக்
கோயில்கள் உண்டோடா?

பிட்டுச் சுமந்ததுண்டோ?—நிறைபொருள்
பெண்டாட்டி கேட்டதுண்டோ?—படுவாய்
பெண்டாட்டி கேட்டதுண்டோ?
கட்டைக் குதிரை கட்டும் — பெருந்தேர்
காட்டெனக் கேட்ட துண்டோ?

பட்டுடை கேட்டதுண்டோ?—பெரும்பொருள்
பண்ணியம் உண்பதுண்டோ?—படுவாய்.
பண்ணியம் உண்பதுண்டோ?
அட்டைப் படத்தினிலும் — திரையிலும்
அப்பொருள் காண்பதுண்டோ?

பிரமன் என்பதிலும்—மொட்டைத்தலைப்
பிச்சையன் என்பதிலும்—படுவாய்,
பிச்சையன் என்பதிலும்
முருகன் என்பதிலும்—திருமால்
முக்கணன் என்பதிலும்,

வரும் பெருச்சாளி—அதன்மிசை
வருவன் என்பதிலும்—படுவாய்,
வருவன் என்பதிலும்
சரிந்த தொந்தியுள்ளார்—பார்ப்பனர்க்குத்
தரகன் என்பதிலும்

பெரும்பொருள் உளதோ?—தொழுவதில்
பேறுகள் பெற்றதுண்டோ?—படுவாய்,
பேறுகள் பெற்றதுண்டோ?
கரும் பிருக்குதடா—உன்னிடத்தில்
காணும் கருத்திலையோ!

இரும்பு நெஞ்சத்திலே—பயன்ஒன்றும்
இல்லை உணர்ந்திடடா—படுவாய்,

இல்லை உணர்ந்திடடா!
திரும்பும் பக்கமெலாம்—பெருமக்கள்
தேவை யுணர்ந்திடடா!

தீயபொ றாமையையும்—உடைமையிற்
செல்லும் அவாவினையும்—படுவாய்,
செல்லும் அவாவினையும்
காயும் சினத்தினையும்—பிறர் உளம்
கன்ற உரைப்பதையும்

ஆயின் அகற்றிடுவாய்— உளத்தினில்
அறம் பிறக்குமடா!—படுவாய்,
அறம் பிறக்குமடா!
தூய அறவுளத்தால்—செயலினில்
தொண்டு பிறக்குமடா!

ஏயும் நற்றொண்டாலே—பெரியதோர்
இன்பம் பிறக்குமடா—படுவாய்,
இன்பம் பிறக்குமடா!
தீயும் குளிருமடா—உனையண்டும்
நோயும் பறக்குமடா!

வாயில் திறக்குமடா—புதியதோர்
வழி பிறக்குமடா—படுவாய்,
வழி பிறக்குமடா
ஓயுதல் தீருமடா—புதியதோர்
ஒளி பிறக்குமடா!

தாயொடு மக்களடா—அனைவரும்
சரிநிகர் உடைமை;
தேயும் நிலை விடுப்பாய்—இவையே
திராவிடர் ஒழுக்கம்.

## அன்னை அறிக்கை

### (திராவிடம்)

என்னருமை மக்களே இன்பத் திராவிடரே
இன்னல் வடக்கர்களை எள்ளளவும் நாடாதீர்!

உங்கள் கலைஒழுக்கம் மிக்க உயர்ந்தனவாம்
பொங்கிவரும் ஆரியத்தின் பொய்க்கதைகள் ஒப்பாதீர்!

ஏமாற்றி மற்றவரை, ஏட்டால் அதைமறைத்துத்
தாமட்டும் வாழச் சதைநாணா ஆரியத்தை

நம்புவார் நம்பட்டும் நாளைக் குணர்வார்கள்
அம்பலத்தில் வந்ததின்றே ஆரியரின் சூழ்ச்சியெலாம்!

பிச்சை எடுப்பவர்கள் பேரதிகா ரம்பெற்றால்
அச்சத்தால் நாட்டில் அடக்குமுறை செய்யாரோ?

ஆட்சி யறியாத ஆரியர்கள் ஆளவந்தால்
பாட்டாளி மக்களெல்லாம் பாம்பென்றே அஞ்சாரோ?

மிக்க மதவெறியர் மேல்நிலையை எய்திவிட்டால்
தக்க முஸ்லீமைத் தாக்கா திருப்பாரோ?

உங்கள் கடமை உணர்வீர்கள், ஒன்றுபட்டால்
இங்கே எவராலும் இன்னல் வருவதில்லை!

ஏசு மதத்தாரும் முஸ்லீம்கள் எல்லாரும்
பேசில் திராவிடர் என் பிள்ளைகளே என்றுணர்க!

சாதிமதம் பேசித் தனித்தனியே நீரிருந்தால்
தோதுதெரிந் தாரியர்கள் உம்மைத் தொலைத்திடுவார்

ஆரியன் இந்தி அவிநாசி ஏற்பாடு
போரிட்டுப் போக்கப் புறப்படுங்கள் ஒன்றுபட்டே!
ஆண்டேன் உலகுக்கே ஆட்சிமுறை நான்தந்தேன்
பூண்ட விலங்கைப் பொடியாக்க மாட்டீரோ!
மன்னும் குடியரசின் வான்கொடியை என்கையில்
இன்னே கொடுக்க எழுச்சி யடையீரோ!

# சமத்துவப் பாட்டு

[குதம்பைச் சித்தர் பாடலின் மெட்டு]

புவியிற் சமூகம் இன்பம்
　　பூணல் சமத்துவத்தால்
கவிழ்தல் பேதத்தாலடி—சகியே
　　கவிழ்தல் பேதத்தாலடி! 1

புவிவேகம் கொண்டு செல்லும்
　　போதில்உடன் செல்லாதார்!

அவிவேகம் கொண்டாரடி—சகியே
அவிவேகம் கொண்டாரடி! 2

தாழ்வென்றும் உயர்வென்றும்
சமூகத்திற் பேதங்கொண்டால்
வாழ்வின்பம் உண்டாகுமோ?—சகியே
வாழ்வின்பம் உண்டாகுமோ?" 3

தாழ்ந்தவர் என்றுநீக்கிச்
சமுதாயச் சீர்தேடி
வாழ்ந்தது காணேனடி— சகியே
வாழ்ந்தது காணேனடி! 4

பிறப்பி லுயர்வுதாழ்வு
பேசும் சமூகம்மண்ணில்
சிறக்குமோ சொல்வாயடி— சகியே
சிறக்குமோ சொல்வாயடி? 5

பிறந்த முப்பது கோடிப்
பேரில் ஐங்கோடி மக்கள்
இறந்தாரோ சொல்வாயடி—சகியே
இறந்தாரோ சொல்வாயடி? 6

இதந்தரும் சமநோக்கம்
இல்லா நிலத்தில் நல்ல
சுதந்தரம் உண்டாகுமோ—சகியே
சுதந்தரம் உண்டாகுமோ? 7

பதம்பெறப் பணிசெய்வோர்
பகைகொண்டார் எனில்எந்த
விதம்அஃது கொள்வாரடி—சகியே
விதம்அஃது கொள்வாரடி? 8

சோதர பாவம் நம்மில்
தோன்றாவிடில் தேசத்தில்
தீதினி நீங்காதடி—சகியே
தீதினி நீங்காதடி! 9

பேதம் பாராட்டி வந்தோம்
பிழைசெய்தோம் பல்லாண்டாக

மீதம் உயிர்தானுண்டு—சகியே
மீதம் உயிர்தானுண்டு! 10

அற்பத் தீண்டாதார் என்னும்
அவரும் பிறரும் ஓர்தாய்
கர்ப்பத்தில் வந்தாரன்றோ!—சகியே
கர்ப்பத்தில் வந்தாரன்றோ? 11

பொற்புடை முல்லைக்கொத்தில்
புளியம்பூ பூத்ததென்றால்
சொற்படி யார்நம்புவார்—சகியே
சொற்படி யார்நம்புவார்? 12

தீண்டும் மக்களின் அன்னை
தீண்டாரையும் பெற்றாளோ?
ஈண்டிதை யார்நம்புவார்—சகியே
ஈண்டிதை யார்நம்புவார்? 13

தீண்டாமை ஒப்புகின்றார்
தீண்டாரிடம் உதவி
வேண்டாமல் இல்லையடி—சகியே
வேண்டாமல் இல்லையடி! 14

அடிமை கொடியதென்போர்
அவர்சோத ரர்க்கிழைக்கும்
மிடிமையை எண்ணாரடி—சகியே
மிடிமையை எண்ணாரடி 15

கொடியோர் பஞ்சமர் என்று
கூடப் பிறந்தோர்க்கிவர்
சுடும்பேர் வைத்திட்டாரடி!—சகியே
சுடும்பேர் வைத்திட்டாரடி! 16

தீண்டாதார் பழங்கீர்த்தி
தெரிந்தால் தீண்டாமைப்பட்டம்
வேண்டாதார் இல்லையடி—சகியே
வேண்டாதார் இல்லையடி! 17

ஆண்டார் தமிழர்இந்நா
டதன்பின் ஆரியர் என்போர்

ஈண்டுக் குடியேறினார்—சகியே
ஈண்டுக் குடியேறினார்! 18

வெள்ளை யுடம்புகாட்டி
வெறும்வாக்கு நயம்காட்டிக்
கள்ளங்கள் செய்தாரடி—சகியே
கள்ளங்கள் செய்தாரடி! 19

பிள்ளைக்குக் கனிதந்து
பின்காது குத்தல்போல்தம்
கொள்கை பரவச் செய்தார்— சகியே
கொள்கை பரவச் செய்தார்! 20

கொல்லா விரதம் கொண்டோர்
கொலைசெய்யும் ஆரியர்தம்
சொல்லுக் கிசைந்தாரடி—சகியே
சொல்லுக் கிசைந்தாரடி! 21

நல்ல தமிழர் சற்றும்
நலமற்ற ஆரியர்தம்
பொல்லாச்சொல் ஏற்றாரடி—சகியே
பொல்லாச்சொல் ஏற்றாரடி! 22

ஏச்சும் எண்ணார் மானம்
இல்லாத ஆரியர்
மிலேச்சர்என் றெண்ணப்பட்டார்—சகியே
மிலேச்சர்என் றெண்ணப்பட்டார்! 23

வாய்ச்சாலத் தால்கெட்ட
வஞ்சகத்தால் கலகத்தால்
ஏய்ச்சாள வந்தாரடி—சகியே
ஏய்ச்சாள வந்தாரடி! 24

மன்னர்க் கிடையில் சண்டை
வளர்த்தார்தம் வசமானால்
பொன்னாடுசேர்வார் என்றார்—சகியே
பொன்னாடுசேர்வார் என்றார்! 25

பொன்னாட்டு மாதர் போலும்
பூலோகத் தில்லை யென்று

மன்னர்பால் பொய்கூறினார்—சகியே
மன்னர்பால் பொய்கூறினார்! 26

வான்மறை எனத்தங்கள்
வழக்கம் குறித்தநூலைத்
தேன்மழை என்றாரடி—சகியே
தேன்மழை என்றாரடி! 27

"ஏன்மறை" எங்கட்கென்றே
இசைத்தால் ஆரியர் நீங்கள்
வான்புகத் தானென்றனர்—சகியே
வான்புகத் தானென்றனர்! 28

மேலேழு லோகம் என்றார்
கீழேழு லோகம் என்றார்
நூலெல்லாம் பொய்கூறினார்—சகியே
நூலெல்லாம் பொய்கூறினார்! 29

மேலும் தமை நிந்திப்போர்
மிகுகஷ்டம் அடைவார்கள்
தோலோதோல் கூடாதென்றார்—சகியே
தோலோதோல் கூடாதென்றார்! 30

சுவர்க்கத்தில் தேவர் என்போர்
சுகமாய் இருப்பதுண்டாம்
அவர்க்குத்தாம் சொந்தம்என்றார்—சகியே
அவர்க்குத்தாம் சொந்தம்என்றார்! 31

துவக்கத்தில் ஆரியரைத்
தொழுதார் இறந்தபின்பு
சுவர்க்கஞ்செல் வார்என்றனர்—சகியே
சுவர்க்கஞ்செல் வார்என்றனர்! 32

தம்சிறு வேதம்ஒப்பாத்
தமிழரை ஆரியர்கள்
நஞ்சென்று கொண்டாரடி—சகியே
நஞ்சென்று கொண்டாரடி! 33

வெஞ்சிறு வேதம்ஒப்பா
வீரரை ஆரியர்கள்

வஞ்சித்துக் கொன்றாரடி—சகியே
வஞ்சித்துக் கொன்றாரடி! 34

அழிவேதம் ஒப்பாதாரை
அரக்கரென் றேசொலிப்
பழிபோட்டுத் தலைவாங்கினார்—சகியே
பழிபோட்டுத் தலைவாங்கினார்! 35

பழிவேதம் ஒப்போம்என்ற
பண்டைத் தமிழர்தம்மைக்
கழுவேற்றிக் கொன்றாரடி—சகியே
கழுவேற்றிக் கொன்றாரடி! 36

ஆரியர்தமை ஒப்பா
ஆதித் திராவிடரைச்
சேரியில் வைத்தாரடி—சகியே
சேரியில் வைத்தாரடி! 37

சேரிப் பறையர்என்றும்
தீண்டாதார் என்றும்சொல்லும்
வீரர்நம் உற்றாரடி—சகியே
வீரர்நம் உற்றாரடி! 38

வெஞ்சமர் வீரர்தம்மை
வெல்லாமற் புறந்தள்ளப்
பஞ்சமர் என்றாரடி—சகியே
பஞ்சமர் என்றாரடி! 39

தஞ்சம் புகாத்தமிழர்
சண்டாளர் எனில்தாழ்ந்து
கெஞ்சுவோர் பேரென்னடி—சகியே
கெஞ்சுவோர் பேரென்னடி! 40

மாதர் சகிதம்தங்கள்
மதத்தைத் தமிழ்மன்னர்க்குப்
போதனை செய்தாரடி—சகியே
போதனை செய்தாரடி! 41

சூதற்ற மன்னர் சில்லோர்
சுவர்க்கக் கதையை நம்பித்

தீதுக் கிசைந்தாரடி—சகியே
    தீதுக் கிசைந்தாரடி! 42

உலகம் நம்மைப் பழிக்க
    உட்புகுந் தாரியர்கள்
கலகங்கள் செய்தாரடி—சகியே
    கலகங்கள் செய்தாரடி! 43

கொலைக்கள மாக்கிவிட்டார்
    குளிர்நாட்டைத் தம்வாழ்வின்
நிலைக்களம் என்றாரடி—சகியே
    நிலைக்களம் என்றாரடி! 44

சாதிப் பிரிவு செய்தார்
    தம்மை உயர்த்துதற்கே
நீதிகள் சொன்னாரடி—சகியே
    நீதிகள் சொன்னாரடி! 45

ஓதும் உயர்வுதாழ்வை
    ஆரியர் உரைத்திட்டால்
ஏதுக்கு நாம்ஏற்பதோ—சகியே
    ஏதுக்கு நாம்ஏற்பதோ? 46

ஊர்இரண்டு படுங்கால்
    உளவுள்ள கூத்தாடிக்குக்
காரியம் கைகூடுமாம்— சகியே
    காரியம் கைகூடுமாம்! 47

நேர்பகை யாளிஎன்னை
    நீசனென்றால் என்சுற்றத்
தார்என்னைத் தள்ளாரடி—சகியே
    சுற்றத் தார்என்னைத் தள்ளாரடி! 48

வீரமில் ஆரியரின்
    வீண்வாக்கை நம்பினால்நம்
காரியம் கைகூடுமோ?—சகியே
    காரியம் கைகூடுமோ? 49

ஆரியர் சொன்னவண்ணம்
    ஆண்டுபல கழித்தோம்

காரியம் கைகூடிற்றா?—சகியே
காரியம் கைகூடிற்றா? 50

எத்தால் வாழ்வுண்டாகும்! நாம்
ஒத்தால் வாழ்வுண்டாகும் இஃது
சத்தான பேச்சல்லவோ?—சகியே
சத்தான பேச்சல்லவோ? 51

எத்தான பேச்சைநம்பி
இரத்தக் கலப்பைநீக்கிச்
சத்தின்றி வாழ்வாருண்டோ—சகியே
சத்தின்றி வாழ்வாருண்டோ? 52

ஆரியப் பேர்மறைந்தும்
அவர்வைத்த "தீண்டார்" என்ற
பேர்நிற்றல் ஏதுக்கடி—சகியே
பேர்நிற்றல் ஏதுக்கடி? 53

ஆரியர் பார்ப்பாரானால்
அவர்சொன்ன தீண்டாதார்கள்
சேரியில் ஏன்தங்கினார்?—சகியே
சேரியில் ஏன்தங்கினார்? 54

ஊர்தட்டிப் பறித்திட
உயர்சாதி என்பார்இஃதை
மார்தட்டிச் சொல்வேனடி—சகியே
மார்தட்டிச் சொல்வேனடி! 55

ஓர்தட்டில் உயர்ந்தோர்மற்
றொன்றில் தாழ்ந்தோரை இட்டுச்
சீர்தூக்கிப் பார்ப்போமடி— சகியே
சீர்தூக்கிப் பார்ப்போமடி! 56

தீண்டாதார் சுத்தமற்றோர்
என்றாலச் சுத்தத் தன்மை
தாண்டாதார் எங்குண்டடி? சகியே
தாண்டாதார் எங்குண்டடி? 57

தீண்டாதார் ஊனுண்டால்
தீண்டு மனிதர்வாய்க்குள்

மாண்டன பல்கோடியாம்—சகியே
    மாண்டன பல்கோடியாம்! 58

பறவை மிருகமுண்டோர்
    பறையர் என்றால் மனுநூல்
முறையென்பார் பேரென்னடி?—சகியே
    முறையென்பார் பேரென்னடி? 59

வெறிமது உண்போர்நீசர்
    என்றால் பிறர்க்கிருட்டில்
நிறைமுக்கா டேதுக்கடி?—சகியே
    நிறைமுக்கா டேதுக்கடி? 60

சீலம் குறைந்தோர் என்றால்
    சீலமிலாச் சிலரை
ஞாலத்தில்ஏன் தீண்டினார்—சகியே
    ஞாலத்தில்ஏன் தீண்டினார்? 61

மேலைவழக்கங் கொண்டு
    மிகுதாழ்ந்தோர் என்றாலந்தக்
காலத்தில் தாழ்ந்தாருண்டோ?—சகியே
    காலத்தில் தாழ்ந்தாருண்டோ? 62

சாத்திரம் தள்ளிற்றென்றால்
    சற்றும் அதுதான் எங்கள்
கோத்திரத் தார்செய்ததோ?—சகியே
    கோத்திரத் தார்செய்ததோ? 63

வாய்த்திறம் கொண்ட மக்கள்
    வஞ்சம் யாவையும் நம்பி
நேத்திரம் கெட்டோமடி—சகியே
    நேத்திரம் கெட்டோமடி 64

மனிதரிற் றாழ்வுயர்வு
    வகுக்கும் மடையர் வார்த்தை
இனிச்செல்ல மாட்டாதடி—சகியே
    இனிச்செல்ல மாட்டாதடி! 65

கனிமா மரம் வாழைக்காய்
    காய்க்காதெனில் இரண்டும்

தனித்தனிச் சாதியடி—சகியே
　　தனித்தனிச் சாதியடி! 66

எருமையைப் பசுச்சேர்தல்
　　இல்லை; இதனாலிவை
ஒருசாதி இல்லையடி!—சகியே
　　ஒருசாதி இல்லையடி! 67

ஒருதாழ்ந்தோன் உயர்ந்தாளை
　　ஒப்பக் கருக்கொள்ளுங்கால்
இருசாதி மாந்தர்க்குண்டோ? சகியே
　　இருசாதி மாந்தர்க்குண்டோ? 68

உழைப்பால் உயர்ந்தவர்கள்
　　தாழ்ந்தவர்கள் என்றன்னோர்
பிழைப்பைக் கெடுத்தாரடி—சகியே
　　பிழைப்பைக் கெடுத்தாரடி! 69

தொழிலின்றிச் சோறுண்ணாச்
　　சுத்தர் அசுத்தர்என்ப
தெழிலற்ற வார்த்தையடி—சகியே
　　எழிலற்ற வார்த்தையடி! 70

உடல்நோய்கள் அற்றபேரை
　　ஒழுக்கமில்லார் என்பவர்
கடலைஉளுந் தென்பரோ?—சகியே
　　கடலைஉளுந் தென்பரோ? 71

தடையற்ற அன்பினரைச்
　　சண்டாளர் என்றுசொல்லும்
கடையர்க்கு வாழ்வேதடி?—சகியே
　　கடையர்க்கு வாழ்வேதடி? 72

பழிப்பவர்க்கும் உதவும்
　　பாங்கர் பறையர் என்பார்
விழித்துத் துயில்வாரடி—சகியே
　　விழித்துத் துயில்வாரடி 73

தழைக்கப் பிள்ளைபெறுவோர்
　　தாழ்வாம்! பிள்ளைக்கையரை

அழைப்போர்கள் மேலோர்களாம்—சகியே
அழைப்போர்கள் மேலோர்களாம்! 74

தோள்தான் பொருள் என்போர்கள்
தாழ்வாம்; துரும்பெடுக்கக்
கூடாதோர் மேலென்பதாம்—சகியே
கூடாதோர் மேலென்பதாம்! 75

மாடா யுழைப்பவர்கள்
வறியர்; இந்நாட்டுத் தொழில்
நாடாதோர் செல்வர்களோ?—சகியே
நாடாதோர் செல்வர்களோ? 76

ஏரிக்கரையினில் வாழ்ந்
திருந்து பிறரைக்காக்கும்
சேரியர் தாழ்ந்தார்களோ?—சகியே
சேரியர் தாழ்ந்தார்களோ? 77

ஊருக்கி ழிந்தோர் காவல்
உயர்ந்தோர் இவர்கள் வாழ்வின்
வேருக்கு வெந்நீரடி—சகியே
வேருக்கு வெந்நீரடி! 78

அங்கம் குறைச்சலுண்டோ
ஆதித் திராவிடர்க்கே?
எங்கேனும் மாற்றமுண்டோ;—சகியே
எங்கேனும் மாற்றமுண்டோ? 79

புங்கவர் நாங்கள்என்பார்
பூசுரர் என்பார்நாட்டில்
தங்கட்கே எல்லாம் என்பார்—சகியே
தங்கட்கே எல்லாம் என்பார்! 80

ஆதிசைவர்கள் என்பார்;
"ஆதிக்குப் பின் யார்?" என்றால்
காதினில் வாங்காரடி!—சகியே
காதினில் வாங்காரடி! 81

சாதியில் கங்கைபுத்ரர்
என்பார்கள் சாட்சி, பத்ரம்

நீதியில் காட்டாரடி—சகியே
நீதியில் காட்டாரடி! 82

வேலன்பங் காளியென்பார்
வெறுஞ்சேவ கனைக்கண்டால்
காலன்தான் என்றஞ்சுவார்—சகியே
காலன்தான் என்றஞ்சுவார்! 83

மேலும் முதலி; செட்டி;
வேளாளப் பிள்ளைமுதல்
நாலாயிரம் சாதியாம்—சகியே
நாலாயிரம் சாதியாம்! 84

எஞ்சாதிக் கிவர்சாதி
இழிவென்று சண்டையிட்டுப்
பஞ்சாகிப் போனாரடி!—சகியே
பஞ்சாகிப் போனாரடி! 85

நெஞ்சில் உயர்வாய்த் தன்னை
நினைப்பான் ஒருவேளாளன்
கொஞ்சமும் எண்ணாததால்—சகியே
கொஞ்சமும் எண்ணாததால்! 86

செட்டி உயர்ந்தோன் என்பான்
செங்குந்தன் உயர்வென்பான்
குட்டுக்கள் எண்ணாததால்—சகியே
குட்டுக்கள் எண்ணாததால்! 87

செட்டிகோ முட்டிநாய்க்கன்
சேணியன் உயர்வென்றே
கட்டுக் குலைந்தாரடி—சகியே
.கட்டுக் குலைந்தாரடி! 88

சேர்ந்துயர் வென்றிவர்கள்
செப்பினும் பார்ப்பனர்க்குச்
சூத்திரர் ஆனாரடி—சகியே
சூத்திரர் ஆனாரடி! 89

தூற்றிட இவ்வுயர்ந்தோர்
சூத்திரர் என்றுபார்ப்பான்

காற்றினில் விட்டானடி—சகியே
காற்றினில் விட்டானடி! 90

தம்மை உயர்த்தப் பார்ப்பார்
சமூகப் பிரிவுசெய்தார்
இம்மாயம் காணாரடி— சகியே
இம்மாயம் காணாரடி! 91

பொய்மை வருணபேதம்
போனால் புனிதத்தன்மை
நம்மில்நாம் காண்போமடி—சகியே
நம்மில்நாம் காண்போமடி! 92

நான்கு வருணம் என்று
நவிலும் மனுநூல்விட்டு
ஏனைந்து கொண்டாரடி—சகியே
ஏனைந்து கொண்டாரடி? 93

நான்கு பிரிவும் பொய்ம்மை
நான்குள்ளும் பேதம் என்றால்
ஊனத்தில் உள்ளூனமாம்—சகியே
ஊனத்தில் உள்ளூனமாம்! 94

சதுர்வர்ணம் வேதன் பெற்றான்
சாற்றும் பஞ்சமர் தம்மை
எது பெற்றுப் போட்டதடி—சகியே
எது பெற்றுப் போட்டதடி? 95

சதுர்வர்ணம் சொன்னபோது
தடிதூக்கும் தமிழ்மக்கள்
அதில்ஐந்தாம் நிறமாயினார்—சகியே
அதில்ஐந்தாம் நிறமாயினார்! 96

மனிதரில் தீட்டுமுண்டோ?
மண்ணிற் சிலர்க்கிழைக்கும்
அநீதத்தை என்சொல்வதோ?—சகியே
அநீதத்தை என்சொல்வதோ? 97

"புனிதர்என் றேபிறத்தல்"
"புல்லர்என் றேபிறத்தல்"

எனுமிஃது விந்தையடி—சகியே
　　எனுமிஃது விந்தையடி! 98

ஊரிற் புகாதமக்கள்
　　உண்டென்னும் மூடரிந்தப்
பாருக்குள் நாமேயடி—சகியே
　　பாருக்குள் நாமேயடி! 99

நேரிற்பார்க் கத்தகாதோர்
　　நிழல்பட்டால் தீட்டுண்டென்போர்
பாருக்குள் நாமேயடி—சகியே
　　பாருக்குள் நாமேயடி! 100

மலம்போக்கும் குளம்மூழ்கா
　　வகைமக்களை நசுக்கும்
குலமாக்கள் நாமேயடி—சகியே
　　குலமாக்கள் நாமேயடி! 101

மலம்பட்ட இடம் தீட்டாம்
　　மக்கள் சிலரைத் தொட்டால்
தலைவரைக்கும் தீட்டாம்—சகியே
　　தலைவரைக்கும் தீட்டாம்! 102

சோமனைத் தொங்கக்கட்டச்
　　சுதந்தரம் சிலர்க்கீயாத்
தீமக்கள் நாமேயடி—சகியே
　　தீமக்கள் நாமேயடி! 103

தாமூழ்கும் குளம் தன்னில்
　　தலைமூழ்கத் தகாமக்கள்
போமாறு தானென்னடி?—சகியே
　　போமாறு தானென்னடி? 104

பாதரட்சை யணிந்தாற்
　　பழித்துச் சிலரைத் தாழ்த்தும்
காதகர் நாமேயடி—சகியே
　　காதகர் நாமேயடி. 105

ஓத வசதியின்றி
　　உலகிற் சிலரைத் தாழ்த்தும்

சூதர்க்கு வாழ்வேதடி?—சகியே
சூதர்க்கு வாழ்வேதடி? 106

தீராப் பகையுமுண்டோ
திருநாட்டார்க் குள்ளும்நெஞ்சம்
நேராகிப் போனாலடி—சகியே
நேராகிப் போனாலடி? 107

ஓரைந்து கோடிமக்கள்
ஓலமிடுங்கால் மற்றோர்
சீராதல் இல்லையடி—சகியே
சீராதல் இல்லையடி! 108

தாழ்வில்லை உயர்வில்லை
சமமென்ற நிலைவந்தால்
வாழ்வெல்லை காண்போமடி—சகியே
வாழ்வெல்லை காண்போமடி! 109

சூழ்கின்ற பேதமெல்லாம்
துடைத்தே சமத்துவத்தில்
வாழ்கின்றார் வாழ்வின்பமாம்—சகியே
வாழ்கின்றார் வாழ்வின்பமாம்! 110

## ஆலய உரிமை

(ஆறுமுக வடிவேலனே – கலியாணமும் செய்யவில்லை என்ற காவடிச்சிந்தின் மெட்டு)

**கண்ணிகள்**

எவ்வுயிரும் பரன் சந்நிதி யாமென்
றிசைத்திடும் சாத்திரங்கள்—எனில்
அவ்விதம் நோக்க அவிந்தனவோ நம்
அழகிய நேத்திரங்கள்? 1

திவ்விய அன்பிற் செகத்தையெல்லாம் ஒன்று
சேர்த்திடலாகும் அன்றோ?—எனில்
அவ்வகை அன்பினிற் கொஞ்சம் இருந்திடில்
அத்தனை பேரும் ஒன்றே? 2

ஏக பரம்பொருள் என்பதை நோக்க
எல்லாரும்உடன் பிறப்பே—ஒரு
பாகத்தார் தீண்டப்படாதவர் என்பதி
லேஉள்ளதோ சிறப்பே? 3

"தேகம்சுமை நமைச் சேர்ந்ததில்லை" என்று
செப்பிடும் தேசத்திலே—பெரும்
போகம் சுமந்துடற் பேதம்கொண்டோம்; மதி
போயிற்று நீசத்திலே. 4

என்னை அழைக்கின்ற கோயிலின் சாமி
எனக் கிழிவாய்த் தெரியும்—சாதி
தன்னை விலக்கிடுமோ இதை யோசிப்பீர்
சமூகநிலை புரியும். 5

என்னை அளித்தவர் ஓர்கடவுள் மற்றும்
ஏழையர்க் கோர் கடவுள்—எளிதில்
முன்னம் இரண்டையும் சேர்த்துருக் குங்கள்
முளைக்கும் பொதுக் கடவுள். 6

உயர்ந்தவர் கோயில் உயர்ந்ததென்பீர் மிகத்
தாழ்ந்தது தாழ்ந்த தென்பீர்—இவை
பெயர்ந்து விழுந்தபின் பேதமிலா ததைப்
பேசிடுவீர் அன்பீர். 7

உயர்ந்தவர் கையில் வரத்தினைச் சாமி
ஒளி மறைவில் தரத்தான்—மிகப்
பயந்திழிந் தோர்களைக் கோயில் வராவண்ணம்
பண்ணினதோ அறியேன். 8

சோதிக் கடவுளும் தொண்டரும் கோயிலிற்
சூழ்வது பூசனையோ—ஒரு
சாதியை நீக்கினர்; தலையையும் வாங்கிடச்
சதியா லோசனையோ? 9

ஆதித் திராவிடர் பாரதர்க் கன்னியர்
என்று மதித்ததுவோ—சாமி
நீதிசெய் வெள்ளையர் வந்ததும் போய்க்கடல்
நீரிற் குதித்ததுவோ? 10

மாலய மாக வணங்கிடச் சாமி
வந்திடுவார் என்றீரே—அந்த
ஆலயம் செல்ல அநேகரை நீக்கி
வழிமறித்தே நின்றீரே. 11

ஆலயம் செல்ல அருகரென்ற சிலர்
அங்கம் சிறந்தாரோ?—சிலர்
நாலினும் கீழென்று நாரி வயிற்றில்
நலிந்து பிறந்தாரோ? 12

தாழ்ந்தவர் தம்மை உயர்ந்தவ ராக்கிடச்
சாமி மலைப்பதுண்டோ?—இங்கு
வாழ்ந்திட எண்ணிய மக்களைச் சாமி
வருத்தித் தொலைப்பதுண்டோ? 13

தாழ்ந்தவர் வந்திடில் தன்னுயிர் போமெனில்
சாமிக்குச் சத்திலையோ—எனில்
வீழ்ந்த குலத்தினை மேற்குல மாக்கிட
மேலும் சமர்த்தில்லையோ? 14

தன்னை வணங்கத் தகாதவரை அந்தச்
சாமி விழுங்கட்டுமே—அன்றி
முன்னை யிருந்த கல்லொடு கல்லாகி
உருவம் மழுங்கட்டுமே. 15

இன்னலை நீக்கிடும் கோயிலின் சாமி
இனத்தினில் பல்கோடி—மக்கள்
தன்னை வணங்கத் தகாதென்று சொல்லிடிற்
சாவதுவோ ஓடி? 16

குக்கலும் காகமும் கோயிலிற் போவதிற்
கொஞ்சமும் தீட்டிலையோ—நாட்டு
மக்களிலே சிலர் மாத்திரம் அந்த
வகையிலும் கூட்டிலையோ? 17

திக்கெட்டுமே ஒரு கோயிலன்றோ? அதில்
சேரி அப்பால் இல்லையே— நாளும்
பொய்க்கட் டுரைப்பவர் புன்மையும் பேசுவர்
நம்புவதோ சொல்லையே? 18

தாழ்ந்தவர் என்பவர் கும்பிடுதற்குத்
தனிக் கோயில் காட்டுவதோ?—அவர்
வாழ்ந்திடுதற்கும் தனித்தேசம் காட்டிப்பின்
வம்பினை மூட்டுவதோ? 19

தாழ்த்தப் பட்டார்க்குத் தனிக்கோயில் நன்றெனச்
சாற்றிடும் தேசமக்கள்—அவர்
வாழ்த்தி அழைக்கும் "சுதந்தரம்" தன்னை
மறித்திடும் நாசமக்கள். 20

தாழ்ந்தவருக்கும் உயர்ந்தவருக்கும் இத்
தாழ்நிலம் சொந்தம் அன்றோ?—இதில்
சூழ்ந்திடும் கோயில் உயர்ந்தவர்க்கே என்று
சொல்லிடும் நீதி நன்றோ? 21

"தாழ்ந்தவர்" என்றொரு சாதிப்பிரிவினைச்
சாமி வகுத்ததுவோ?—எனில்
வாழ்ந்திடு நாட்டினில் சாமி முனைந்திந்த
வம்பு புகுத்தியதோ? 22

முப்பது கோடியார் பாரதத்தார் இவர்
முற்றும் ஒரே சமூகம்—என
ஒப்புந் தலைவர்கள் கோயிலில் மட்டும்
ஒப்பாவிடில் என்ன சுகம்? 23

இப்பெரு நாடும் இதன்பெருங் கூட்டமும்
"யார்" என்று தற்புகழ்ச்சி—சொல்வர்
இப்புறம் வந்ததும் கோயிலில் நம்
இனத்தைச் செய்வார் இகழ்ச்சி. 24

மாடுண்பவன் திருக் கோயிலின் வாயிலில்
வருவதற்கில்லை சாத்யம்—எனில்
ஆடுண்ணுவோனுக்கு மாடுண்ணுவோன் அண்ணன்
அவனே முதற் பாத்யம். 25

நீடிய பக்தியில் லாதவர் கோயில்
நெருங்குவதால் தொல்லையே!—எனில்
கூடிஅக் கோயிலில் வேலை செய்வோருக்கும்
கூறும்பக்தி இல்லையே. 26

"சுத்தமில்லாதவர் பஞ்சமர்!" கோயிற்
சுவாமியைப் பூசிப்பரோ—எனில்
நித்த முயர்ந்தவர் நீரிற் குளிப்பது
யாதுக்கு யோசிப்பிரே. 27

நித்தமும் சாக்கடை நீந்தும் பெருச்சாளி
நேரில்அக் கோயிலிலே—கண்டும்
ஒத்த பிறப்பின ரைமறுத் தீருங்கள்
கோயிலின் வாயிலிலே. 28

கூறும் "உயர்ந்தவர்" "தாழ்ந்தவர்" என்பவர்
கோயிலின் செய்திவிட்டுப்— புவி
காறியு மிழ்ந்தது யார்முகத்தே யில்லை?
காட்டுவீர்ஒன்று பட்டு. 29

வீறும் உயர்ந்தவர் கோயில் புகுந்ததில்
வெற்றிஇந் நாட்டில் உண்டோ—இனிக்
கூறும் இழிந்தவர் கோயில் புகுந்திடில்
தீதெனல் யாது கொண்டோ? 30

## ஞாயமற்ற மறியல்

### (நொண்டிச் சிந்து)

என்றுதான் சுகப்படுவதோ?—நம்மில்
யாவரும் "சமானம்" என்ற பாவனை இல்லை—அந்தோ
ஒன்றுதான் இம் மானிடச் சாதி—இதில்
உயர்பிறப் பிழிபிறப் பென்பதும் உண்டோ?—நம்மில்
அன்றிருந்த பல தொழிலின்—பெயர்
அத்தனையும் "சாதிகள்" என்றாக்கிவிட்டனர்—இன்று
கொன்றிடுமே "பேதம்" எனும் பேய்!—மிகக்
கூசும்இக் கதை நினைக்கத் தேசமக்களே! (என்று)

இத்தனை பெரும் புவியிலே—மிக
எண்ணற்ற தேசங்கள் இருப்ப தறிவோம்
அத்தனை தேசத்து மக்களும்—தாம்
அனைவரும் "மாந்தர்" என்று நினைவதல்லால்—மண்ணில்
இத்தகைய நாட்டு மக்கள்போல்—பேதம்
எட்டுலக்ஷம் சொல்லிமிகக் கெட்டலைவாரோ!—இவர்

பித்துமிகக் கொண்டவர்கள்போல்—தம்
பிறப்பினில் தாழ்வுயர்வு பேசுதல் நன்றோ? (என்று)

தீண்டாமை என்னுமொரு பேய்— இந்தத்
தேசத்தினில் மாத்திரமே திரியக்கண்டோம்—எனில்
ஈண்டு பிறநாட்டில் இருப்போர்—செவிக்
கேறியதும் இச்செயலைக் காறி யுமிழ்வார்
ஆண்டாண்டு தோறு மிதனால்—நாம்
அறிவற்ற மக்கள் எனக் கருதப் பட்டோம்
கூண்டோடு மாய்வ தறிந்தும்— இந்தக்
கோணலுற்ற செயலுக்கு நாணுவதில்லை நாம் (என்று)

ஞானிகளின் பேரப் பிள்ளைகள்—இந்த
நாற்றிசைக்கும் ஞானப்புனல் ஊற்றிவந்தவர்—மிகு
மேனிலையில் வாழ்ந்து வந்தவர்—இந்த
மேதினியில் மக்களுக்கு மேலுயர்ந்தவர்—இந்த
வானமட்டும் புகழ்ந்து கொள்வார்—எனில்
மக்களிடைத் தீட்டுரைக்கும் காரணத்தினை—இங்கு
யானிவரைக் கேட்கப் புகுந்தால்—இவர்
இஞ்சிதின்ற குரங்கென இளித்திடுவார்—நாம் (என்று)

o o o

உயர்மக்கள் என்றுரைப்பவர்—தாம்
ஊரை அடித் துலையிலிட் டுண்ணுவதற்கே—அந்தப்
பெயர்வைத்துக் கொள்ளுவதல்லால்—மக்கள்
பேதமில்லை என்னுமிதில் வாதமுள்ளதோ?—தம்
வயிற்றுக்கு விதவித ஊண்—நல்ல
வாகனங்கள் போகப்பொருள் அநுபவிக்க—மிக
முயல்பவர் தம்மிற் சிலரை—மண்ணில்
முட்டித்தள்ள நினைப்பது மூடத்தனமாம்—நாம் (என்று)

உண்டி விற்கும் பார்ப்பன னுக்கே—தான்
உயர்ந்தவன் என்ற பட்டம் ஒழிந்துவிட்டால்—தான்
கண்டபடி விலை உயர்த்தி—மக்கள்
காசினைப் பறிப்பதற்குக் காரணமுண்டோ?—சிறு
தொண்டு செய்யும் சாதி என்பதும்—நல்ல
துரைத்தனச் சாதியென்று சொல்லிக் கொள்வதும்—இவை

பண்டிருந்த தில்லை எனினும்—இன்று
பகர்வது தாங்கள் நலம் நுகர்வதற்கே—நாம் (என்று)

o o o

வேதமுணர்ந் தவன் அந்தணன்—இந்த
மேதினியை ஆளுபவன் க்ஷத்திரியனாம்—மிக
நீதமுடன் வர்த்தகம் செய்வோன்—மறை
நியமித்த வைசியனென் றுயர்வு செய்தார்—மிக
நாதியற்று வேலைகள் செய்தே—முன்பு
நாத்திறம் அற்றிருந்தவன் சூத்திரன் என்றே—சொல்லி
ஆதியினில் மநுவகுத்தான்—இவை
அன்றியுமே பஞ்சமர்கள் என்பதும் ஒன்றாம்—நாம் (என்று)

அவனவன் செய்யும் தொழிலைக்—குறித்
தவனவன் சாதியென மநுவகுத்தான்—இன்று
கவிழ்ந்தது மநுவின் எண்ணம்—இந்தக்
காலத்தினில் நடைபெறும் கோலமும் கண்டோம்—மிகக்
குவிந்திடும் நால்வருணமும்—கீழ்க்
குப்புறக் கவிழ்ந்ததென்று செப்பிடத்தகும்—இன்று
எவன்தொழில் எவன் செய்யினும்—அதை
ஏனென்பவன் இங்கொருவ னேனுமில்லையே—நாம்
(என்று)

பஞ்சமர்கள் எனப்படுவோர்
பாங்கடைவ தால்நமக்குத் தீங்குவருமோ—இனித்
தஞ்சமர்த்தை வெளிப்படுத்தித்—தம்
தலைநிமிர்ந் தாலது குற்றமென்பதோ—இது
வஞ்சத்திலும் வஞ்சமல்லவோ—பொது
வாழ்வினுக்கும் இதுமிகத் தாழ்வேயல்லவோ—நம்
நெஞ்சத்தினில் ஈரமில்லையோ?—அன்றி
நேர்மையுடன் வாழுமதிக் கூர்மையில்லையோ—நாம்
(என்று).

கோரும் "இமயாசல" முதல்—தெற்கில்
கொட்டுபுனல் நற் "குமரி" மட்டும் இருப்போம்—இவர்
யாருமொரு சாதியெனவும்—இதில்
எள்ளளவும் பேதமெனல் இல்லையெனவும்—நம்
பாரதநற் றேவிதனக்கே—நாம்

படைமக்கள் எனவும் நம்மிடை இக்கணம்—அந்த
ஒருணர்ச்சி தோன்றியஉடன்—அந்த
ஒற்றுமை அன்றோநமக்கு வெற்றியளிக்கும்—நாம்
(என்று)

## சேசு பொழிந்த தெள்ளமுது

மேதினிக்குச் சேசு
நாதர் எதற்கடி? தோழி—முன்பு
வெம்மை கொள் மக்களைச்
செம்மை புரிந்திடத் தோழா—அவர்
காதினிக் கும்படி
சொன்ன சொல் ஏதடி? தோழி—அந்தக்
கர்த்தர் உரைத்தது
புத்தமு தென்றறி தோழா—அந்தப்
பாதையில் நின்று
பயனடைந்தார் எவர்? தோழி—இந்தப்
பாரத நாட்டினர்
நீங்கிய மற்றவர் தோழா—இவர்
ஏதுக்கு நன்மைகள்
ஏற்கவில்லை உரை தோழி—இங்கு
ஏசுவின் கட்டளை
நாசம் புரிந்தனர் தோழா!
ஏசு மதத்தினில்
இந்துக்கள் ஏனடி? தோழி—அந்த
இந்துக்கள் தீயிட்ட
செந்துக்கள் ஆயினர் தோழா—மிக
மோசம் அவர்க்கென்ன
வந்தது கூறடி தோழி—அட
முன் மனு என்பவன்
சொன்னதில் வந்தது தோழா—அவன்
நாசம் விளைக்க
நவின்றது யாதடி? தோழி—சட்டம்
நால் வருணத்தில்
நாலாயிரம் சாதி தோழா—ஏசின்
ஆசை மதம்புகப்
பேதம் அகன்றதோ தோழி—அவர்க்

கங்குள்ள மூதேவி
இங்கும் முளைத்தனள் தோழா!

o o o

சொல்லிய சேசுவின்
தொண்டர்கள் எங்கடி? தோழி—அந்தத்
தொண்டர்கள் உள்ளனர்
தொண்டு பறந்தது தோழா—அந்தப்
புல்லிய பேதத்தைப்
போக்கினரோ அவர்? தோழி—அதைப்
போதாக் குறைக்குமுப்
போகம் விளைத்தனர் தோழா—அடி
எல்லையில் பேதம்
இழைத்ததுதான் எவர்? தோழி—அட
இந்த நெடுஞ்சட்டை
அந்தகரே அறி தோழா—முன்பு
வல்லவர் சேசு
வகுத்தது தான் என்ன? தோழி—'புவி
மக்கள் எல்லாம்
சமம்' என்று முழக்கினர் தோழா.
ஈண்டுள்ள தொண்டர்கள்
என்ன செய்கின்றனர்? தோழி—அவர்
ஏழைகள் தாழ்வுறச்
செல்வரை வாழ்த்தினர் தோழா—அடி
வேண்டவரும் திருக்
கோயில் வழக்கென்ன? தோழி—அட
மேற்குலம் தாழ்குலம்
என்று பிரித்தனர் தோழா—விரல்
தீண்டப் படாதவர்
என்பவர் யாரடி? தோழி—இங்குச்
சேசு மதத்தினை
தாபித்த பேர்கள் என் தோழா—உளம்
தூண்டும் அருட்சேசு
சொல்லிய தென்னடி? தோழி—அவர்
'சோதரர் யாவரும்'
என்று முழங்கினர் தோழா.

பஞ்சமர் பார்ப்பனர்
என்பதெல்லாம் என்ன? தோழி—இவை
பாரத நாட்டுப்
பழிச்சின்னத்தின் பெயர் தோழா—வாங்கிக்
கொஞ்சமும் இப்பழி
கொள்ளுதல் நல்லதோ? தோழி—ஒப்புக்
கொள்ளும் நிலத்தினில்
கள்ளி முளைத்திடும் தோழா—இங்கு
நெஞ்சினிற் சேசுவின்
தொண்டர்கள் நினைப்பென்ன? தோழி—தினம்
நேர்மையிற் கோயில்
வியாபாரம் செய்வது தோழா—இந்த
வஞ்சகர்க் கென்ன
வழுத்தினர் சேசு? நல் தோழி—இன்ப
வாழ்க்கை யடைந்திட
யார்க்கும் சுதந்திரம் என்றார்.

நாலு சுவர்க்கு
நடுப்புறம் ஏதுண்டு? தோழி—அங்கு
நல்ல மரத்தினிற்
பொம்மை அமைத்தனர் தோழா—அந்த
ஆலயம் சாமி
அமைத்தவர் யாரடி? தோழி—மக்கள்
அறிவை இருட்டாக்கி
ஆள நினைப்பவர் தோழா—மக்கள்
மாலைத் தவிர்த்து
வழி செய்வாரோ? இனித் தோழி—செக்கு
மாடுக ளாக்கித்தம்
காலைச் சுற்றச் செய்வர் தோழா—அந்தக்
கோலநற் சேசு
குறித்தது தானென்ன? தோழி—ஆகா
"கோயிலென்றால்
அன்பு தோய்மனம்" என்றனர்! தோழா!

o o o

ஆண்மைகொள் சேசு
புவிக்குப் புரிந்ததென்? தோழி—அவர்

அன்பெனும் நன்முர
செங்கும் முழக்கினார் தோழா—அந்தக்
கேண்மைகொள் சேசுவின்
கீர்த்தி யுரைத்திடு தோழி—அவர்
கீர்த்தி யுரைத்திட
வார்த்தை கிடைக்கலை தோழா—நாம்
தாண்டவம் ஆடிடச்
செய்தவரோ அவர்? தோழி—அன்று
தன்னைப் புவிக்குத்
தரும் பெருமானவர் தோழா—அந்த
ஆண்டவன் தொண்டர்கள்
ஆகிடத் தக்கவர் யாவர்?—எனில்
'அன்னியர் தான்
என்ற பேதமிலாதவர்' தோழா!

## புரட்சித் திருமணத் திட்டம் நடத்தும் முறை

(திராவிடர் புரட்சித் திருமணம், இந்நாளில் முன்னாளிற் போலின்றிப் பெருமக்களால் மிகுதியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆங்காங்கு—அன்றன்று, திராவிடர் புரட்சித் திருமணங்கள்; சில அல்ல; மிகப்பல!

மணம் நடத்துவோர் சிற்றூராயினும்—தம் ஊரில் உள்ளவர்களைக் கொண்டே நடத்திக் கொள்வதால் செலவு குறையும்; தலைவர்கட்கும் தொல்லை இராது.)

1. அழைப்பிதழால் அல்லது வேண்டுகோளால் மண வீட்டில் குழுமியோர் அவையத்தார் ஆவார்.

2. இசை: திராவிடர் நாட்டுப் பண்.

3. மணமக்கள் அவைக்கு வருதல்.

4. முன்மொழிவோர் அவையில் எழுந்து, "அவைத் தலைமை தாங்கி இத் திருமணத்தை முடித்துத் தரும்படி இன்னாரை வேண்டிக் கொள்கிறேன்" என்று முன் மொழிதல்.

5. அவையத்தாரின் சார்பில் ஒருவர், "அதை நாங்கள் ஆதரிக் கிறோம்" என்று வழி மொழிதல்.

6. முன் மொழிந்தார், வழி மொழிந்தார் அவைத் தலைவரை அழைத்துவந்து, சிறப்புறுத்தி இருக்கை காட்டுதல்.

7. அவைத் தலைவர் முன்னுரை.

8. திருமணம் நடத்தல்: மணப்பெண் 'இன்னாரை நான் என் வாழ்க்கைத் துணைவராகக் கொண்டு வாழ்க்கை நடத்த ஒப்பு கிறேன்" என்று சொல்லல்; மணமகனும் அவ்வாறு சொல்லல். அதன்மேல் இருவரும் மாலை மாற்றுதல்; கணையாழி மாற்றுதல்; "வாழ்க" என முழங்குதல்.

9. தலைவர் மற்றும் அறிஞர் மணமக்களை வாழ்த்துதல்.

10. வரிசை: அவையத்தார்க்கு வெற்றிலை பாக்கு முதலியவை வழங்குதல்.

இந்த நடைமுறைக்கு முதல் நாளே நீதிமன்றத்தில் மணமகன் மணமகள் மணப்பதிவு செய்து கொள்வதுண்டு. பிறகும் பதிவு அறி விப்புச் செய்து கொள்ளலாம்.

இக் கருத்தை வைத்தே சுருக்கமாகக் கவிதை நடையில் ஈண்டு எழுதியுள்ளேன். இங்குக் காட்டிய திட்டம் பெரும் பாலும் நடை பெறுகின்றது என்பது தவிர, இப்படித்தான் நடத்தப்பட வேண்டும் என்று கட்டுப்படுத்திய தாகாது. இதனினும் சுருக்கமான முறையில் நடத்திக் கொள்ளலாம். ஆதலினால்தானே இது புரட்சித் திருமணம்!

பாரதிதாசன்

# புரட்சித் திருமணத் திட்டம்

## 1

## அவையத்தார்

### அகவல்

வருக வருகென மலர்க்கை கூப்பித்
திருமண மக்கட்கு உரியோர் எதிர்கொளத்
திராவிட நாட்டுப் பெருங்குடி மக்கள்
அரிவைய ரோடுவந் தமர்ந்தனர் நிறையவே!

o o o

குழலும் முழவும் பொழிந்த இன்னிசை
மழையை, நிறுத்தி ஓர் மறவன் எழுந்துதேன்
மழைபொழி வான்போல் மாத்தமிழ் சிறக்கத்
திராவிட நாட்டுப்பண் பாடினான்
ஒருபெரு மகிழ்ச்சி நிலவிற்று அவையத்தே.

### மணமக்கள் வருகை

மணமகள் தோழிமார் சூழவும், மணமகன்
தோழர் சூழவும் தோன்றி, அவைதொழுது
"இருக்கு" என்று தோழர் இயம்ப
இருக்கையில் இவருவர் அமர்ந்தி ருந்தனர்.

## 2

### முன்மொழிதல்

மன்னுசீர் மணப்பெண், மணமகன் சார்பில்
முன்மொழிந் தார்ஓர் முத்தமிழ் அறிஞர்;
திராவிட நாட்டுப் பெருங்குடி மக்களே,
அருமைத் தோழியீர், தோழரே, அறிஞரே,
என்றன் வணக்கம் ஏற்றருள் வீர்கள்.
இன்று நடைபெற விருக்கும்இத் திராவிடர்
புரட்சித் திருமணப் பெருங்கூட் டத்திற்குத்
தலைமை தாங்கவும், நிலைமை உயர
மணமகள் மணமகன் வாழ்க்கை ஒப்பந்தம்
நிறைவேற்றவும்..........பெரியாரை
முறையில் வேண்டினேன் முன்னுற வணங்கியே.

### வழிமொழிதல்

அவையத் தாரின் சார்பிலோர் அறிஞர்
"முன்மொழிந் தாரின் பொன்மொழி
நன்றொப்பு கின்றோம்" என்றார் இனிதே.

### வேண்டுகோள்

முன்மொழிந் தாரும் வழிமொழிந் தாரும்;
பின்னர்அப் பெரியார் இருப்பிடம் நாடி,
"எழுந்தருள்" கென்றே இருகை கூப்பி
மொழிந்து சீர்பெய்து முன்னுற அமைந்த
இருக்கை காட்டத் தமிழ்ச்சொற்
பெருக்கைப் பெரியார் தொடங்கினர் நன்றே:—

## 3

### அவைத் தலைவர்

சேர சோழ பாண்டியர் வழிவரு
திராவிட நாட்டுப் பெருங்குடி மக்களே,
அருமைத் தோழியீர் தோழரே அறிஞரே,
தாங்கள் இட்ட பணியைத் தலைக்கணிந்து—
ஈங்குச் சிலசொல் இயம்பு கின்றேன்;
ஆரியர் மிலேச்சர் ஆதலால், ஆரியத்து
வேரினர் பார்ப்பனர் வேறினத்தவர்
ஆதலால், அவரின் வேத மந்திரம்
தீது பயப்பன ஆதலால், திராவிடர்
வாழுமாறு மனங்கொளார் என்பதும்,
அன்றாட வாழ்வில் அறிந்தோம் ஆதலால்,
நம்மொழி, நம்கலை, நம்ஒழுக்கம்
நம்பேர் ஒட்பம், நடைமுறை மாய்க்கவே
தம்மொழி தீயதம் தகையிலா முறைகளை
மணமுதல், திராவிடர் வாழ்க்கை முறைகளில்
இணைக்க அவர்கள் எண்ணினர் ஆதலால்,
ஆரியர் பார்ப்பனர் அடாமண முறையை
வேரொடு சாய்க்க வேண்டும் அன்றோ?
அமிழ்தைத் தமிழென்று பேசும் அழகிய
தமிழ்மண வீட்டில் உமிழத் தக்க

வடமொழிக் கூச்சலா? இன்ப வாழ்வு
தொடங்கையில் நடுவிற் சுடு நெருப்பா?

o o o

தாய் தந்தையர் தவஞ்செய்து பெற்றனர்
தூய்பெருங் கிளைஞர் சூழ்ந்திருக் கின்றனர்
ஒருமனப் பட்ட திருமண மக்களைப்
பெரிதின்பம் பெறுக பெறுக என்று,
வாய்க்கு மகிழ்வாய் வாழ்த்த இருக்கையில்,
ஏய்த்திங்கு வாழுமோர் நாய்க்கென்ன வேலை?
ஊழி தொடங்கையில் ஒளி தொடங்கு மூவேந்து
வாழையடி வாழையாய் வந்த திராவிடர்
சூழ்ந்திங் கிருக்கையில் சூழ்ச்சி யன்றி
ஏதுங்கெட்ட பார்ப்புக் கிங்கென்ன வேலை?
நல்லறம் நாடும் நம்மண மக்கட்குக்
கல்லான் கைப்படும் புல்லென் செய்யும்?

மிஞ்சும் காதலர் மெய்யன் பிருக்கையில்
கெஞ்சிப் பிழைப்போன் பஞ்சாங்க மேனோ?

தீதிலா மிகப்பல திராவிடர் மறவர்
ஆதர விருக்கையில், அறிவிலான் படைத்த
சாணிமுண் டங்கள் சாய்ப்ப தென்ன?
கீழ்நெறிச் சடங்குகள் கிழிப்ப தென்ன?

மணத்தின் மறுநாள் மணப்பெண் ணாளைத்
தண்கதிர்ச் செல்வன் புணரத் தருவதாம்!
இரண்டா நாளில் இன்பச் செல்வியைக்
கந்தரு வர்பால் கலப்புறச் செய்வதாம்!
தீஎனும் தெய்வம் மூன்றாம் நாளில்
தூயள்பால் இன்பம் துய்க்கச் செய்வதாம்!
நாலாம் நாள்தான் மணமகன் புணர்வதாம்!
திராவிட மக்களின் செவிஏற் குமோஇதை?
வைதிக மணத்தை மெய்என ஒப்பிடில்
தமிழர் பண்பு தலைசா யாதோ?

'தெய்வம் தொழாஅள கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை' எனப் பேசும்

திருவள் ளுவனார் திருநெறி மாய்ப்பதோ?
திராவிடர் புரட்சித் திருமணம்
புரிந்தின் புறுக திருமண மக்களே!

## வாழ்க்கை ஒப்பந்தம்

### பஃறொடை வெண்பா

திராவிட நாட்டுப் பெருங்குடி மக்கள்
இருவர்தம் வாழ்க்கைஒப் பந்தம் இனிதாக—
நீவிர் சான்றாக—நிகழ்த்துவிக் கின்றேன்நான்.
"பாவையீரே!* உங்கள் பாங்கில் அமைந்துள்ள
ஆடவர் தம்மை அறிவீரோ?" அன்னாரைக்
கூடிஉம் வாழ்க்கைத் துணையாகக் கொள்ள
உறுதி உரைப்பீரோ!" என்று வினவ
உறுதிஅவ் வாறே உரைத்தார் மகளாரும்.

"தோழரே!* பாங்கிலுள்ள தோழியரைத் தேர்ந்தீரோ
வாழுநாள் வாழ்க்கைத் துணையாகக் கொண்டீரோ?
ஆயின் உறுதி அறிவிக்க!" என்னவே
தூயர்அவ் வாறே உறுதியும் சொல்லிட,
"வாழிய நீவிர்" எனப் பெரியார் வாழ்த்தினார்!
வாழிய என்றவையுள் மக்களெலாம் வாழ்த்தினார்!

தாரொன்றைத் தாங்கித் தம்கொழுநர்க் கேசூட்ட
நேரிழை யார்க்கும் நெடுந்தார வர்சூட்டக்
கையிற் கணையாழி கட்டழகி யார்கழற்றி
துய்யமண வாளரைத் தொட்டணிய, அன்னவரும்
தம்ஆழி மங்கையர்க்குத் தந்துமகிழ்ந் தமர்ந்தார்!
செம்மைப் பெரியார் அறமொழிகள் செப்புகின்றார்;

#### அறமொழிகள்

"அன்பும் அறனும்
உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும்
அது" என்றார் வள்ளுவர்.
இல்வாழ்வில் அன்பும்
அறமும் இருக்குமெனில்

* மணமகளாரே

* மணமகனாரே

நல்ல தன்மை நல்ல பயன்
நாளும் அடையு மன்றோ?
"மனைத்தக்க மாண்புடையாள்
ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்
துணை" என்றார் வள்ளுவனார்.
வாழ்க்கைத் துணைவி
மனைக்குரிய மாண்புகொண்டு
வாழ்வில் அவனின்
வருவாய் அறிந்து
செலவு செய்யவேண்டும்
என்பது மன்றியும்,
"தற்காத்துத் தற்கொண்டான்
பேணித் தகைசான்ற
சொற்காத்து சோர்விலாள்
பெண்" என்று சொல்லுகின்றார்.
தன்னையும் தக்கபடி
காத்துக் கொளல் வேண்டும்
தன்கொழுநன் தன்னையும்
காத்திடல் வேண்டும்
சீர்சால் திராவிடர்
பண்பு சிதையாமல்
நிற்பவளே பெண்ணாவாள்
"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" பெறுக
"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இல்' மற வாதீர்.
"இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு" தெளிக.
மணமக ளாரே, மணமக னாரே,
இணைந்தின் புற்றுநன் மக்களை ஈன்று
பெரும்புகழ் பெற்றுநீ டூழி
இருநிலத்து வாழ்க இனிது.

## நன்றி கூறல்

### அறுசீர் விருத்தம்

மணமக்கட் குரியர் ஆங்கு
வாழ்த்தொலிக் கிடை எழுந்தே
"மணவிழாச் சிறக்க ஈண்டு
வந்தார்க்கு நன்றி இந்த
மணஅவைத் தலைமை தாங்கி
மணமுடித் தருள்புரிந்த
உணர்வுடைப் பெரியார்க் கெங்கள்
உளமார்ந்த நன்றி" என்றே
கைகூப்பி, அங்கெவர்க்கும்
அடைகாயும் கடிது நல்கி
வைகலின் இனிதின் உண்ண
வருகென அழைப்பா ரானார்!
பெய்கெனப் பெய்த இன்பப்
பெருமழை இசையே யாக
உய்கவே மணமக்கள் தாம்
எனஎழும் உள்ளார் வாழ்த்தே.

o o o

# நான்காம் தொகுதி

## காதல் கவிதைகள்

### பொன் அத்தான்!

எனை,

மணக்கத்தான் பணத்தைத்தான்
குவிக்கத்தான் புறப்பட்டான்
மறப்பானோ தோழிப் பெண்ணே
என் அத்தான்—மனம்
மாறமாட்டான்
மாற்றுயர்ந்த பொன் அத்தான்!

நல்ல,

குணத்தில்தான் செயலிற்றான்
அணைப்பில்தான் மிகுந்திட்டான்
குற்றமில்லான் தோழிப் பெண்ணே
என் அத்தான்—ஒரு
கோவைப் பழத்தைக்
கிளிவிடுமா தின்னத்தான்?

என்,

சீரைத்தான் கோரித்தான்
தேரிற்றான் ஏறித்தான்
திரும்புகின்றான் தோழிப்பெண்ணே
என் அத்தான்—அவன்
விரும்புவதும்
உலகத்திலே என்னைத்தான்!

என்,

பேரைத்தான் எண்ணித்தான்!
ஊரைத்தான் நோக்கித்தான்
பெயர்கின்றான் தோழிப்பெண்ணே
என் அத்தான்—நீ
துயரத்தில் ஏன்
தள்ளிக் கொண்டாய் உன்னைத்தான்?

# நினைவு வராதா?

நிலவு வராதா—எங்கும்
உலவி வராதா!
நிலவு கண்டால் என்முகம் அவன்
நினைப்பில் வராதா—அவன்
மறதி தீராதா!

மலர் விரியாதா—அங்கு
மணம் பரவாதா!
மணம் நுகர்ந்தால் என்குழல் அவன்
மனத்தைத் தொடாதா—அவன்
மறதி கெடாதா!

குயிலும் கொஞ்சாதா—அவன்
செவியில் விழாதா!
குரலால் என் மொழி நினைவு
கொஞ்சம் வராதா—காதற்
பஞ்சம் தீராதா!

வெயில் தழுவாதா—ஒளி
இருள் கழுவாதா
வெயில் கண்டால் என் புருவம்
விருப்பம் தராதா—காதற்
கரிப்புத் தீராதா!

மின்னல் வராதா—அவன்
கண்ணில் படாதா!
மின்னல் கண்டால் என் இருப்பின்
மென்மை நினைப்பான்—காதல்
வெப்பந் தணிப்பான்!

கன்னல் ஓங்காதா—அங்குக்
காட்சி தராதா!
கன்னல் கண்டால் என் உதட்டுக்
கதை மறப்பானா?—இங்கு
வர மறுப்பானா?

## இது மறதியா?

வாழு மாந்தர்க்கு வான் மழை போன்றது
மணாளர்வந் தெனக்குத் தருவதோர் இன்பம்!

தோழியே அவரின்றி நான்படும் தொல்லை
சொல்லிக் காட்டல் இலேசில் இல்லை.

சிறுகொம்பு பெரும் பழம்
தாங்குவது போலே என்
சிறிய உயிர் பெருங் காதல்
தாங்குவ தாலே
மறத்தமிழன், விரைவில்
வராவிடில் உடலில்
மளுக்கென்று முறியும்என்
ஆவி மண்மேலே
பிறர் செய்த தீமையை
மறந்திடுதல் மறதி
பெற இயலாததை
மறப்பதும் மறதி
"இறந்து போவாளே
யான்போக வேண்டுமே"
என்பதில் மறதியா
அது என்றன் இறுதி!

## மறப்ப தெப்படி?

அவன் மேல் தானே நானே
ஆசை வைத் தேன் மானே!

அவன் மேல் தானே...!

கவலை மாட்டை ஓட்டிச் சென்றான்
கண்ணை அதோ காட்டிச் சென்றான்

அவன் மேல் தானே...!

முல்லை மலர் ஏந்தி வந்து
முன் அதற்கு முத்தந் தந்து
அல்லல் எல்லாம் கண்ணிற் காட்டி
அகன்றி டுவான் உள்ளம் நொந்து

அவன் மேல் தானே...!

ஆடச் சென்றால் அங்கிருப்பான்
அருமை கண்டால் அவன் சிரிப்பான்
கூடைப் பூவை என் எதிரில்
கொண்டு வந்து கடை விரிப்பான்
அவன் மேல் தானே...!

புதிய புதிய வெளி யீடு
போட்ட விலை மதிப் போடு
மிதிவண் டியில் வாங்கி வந்து
மிகக் கொடுத்தல் அவன் பாடு
அவன் மேல் தானே...!

வழுக்கியது குளத்துப் படி
வந்தணைத் தான் அதே நொடி
மழையும் பயிரும் அவனும் நானும்
மறப்ப தென்றால் அது எப்படி?
அவன் மேல் தானே...!

## அழுதேன்; பிறகு சிரித்தேன்!

எடுப்பு

அழுது கொண்டிருந்தேனே—எனைச்
சிரிக்க வைத்துப் போனானே!

உடனெடுப்பு

அம்மா வருத்தப்பட்டாள் என்றே
அடுத்த சோலையில் தனித்து நின்றே (அழுது...)

அடிகள்

வழிமேலே விழியை வைத்தே
வஞ்சகனையே நினைத்தே
தொழுதிருந்தேன் பின்னால் வந்தே
தோளில் சாய்ந்தான் முகம் இணைத்தே (அழுது...)

குறித்த இடம் இந்தப் புன்னை
கோரி வந்தடைவான் என்னை
மறித்து வேலை இட்டாள் அன்னை
வந்தேன் பெற்றேன் இன்பந் தன்னை (அழுது...)

புன்னை மரப் பந்தர் ஒன்றே
புன்னையின் கீழ்த் திண்ணை ஒன்றே
இன் னொன்றே என்றேன் அன்பன்
இட்ட முத்தம் இருபத்தொன்றே (அழுது...)

மாலை போய் மறைந்த துண்டு
வாய்த்த இன்பம் தெவிட்ட வில்லை
காலை மட்டும் யாம் பயின்ற
கன்னல் தமிழ் மறப்ப தில்லை (அழுது...)

## ஒருத்தனுக்கு ஒருத்தி!

சின்னவள் மேலவனுக் காசை—நான்
சிரித்தாலும் விழுந்திடும் பூசை.

கன்னத்தில் அவளுக்கே முத்தங்கொடுத்த ஓசை—என்
காதில் விழுந்த தென்று துடிக்கும் அன்னவன் மீசை.

பொன்னென்பான் கண்ணென்பான் அவளை—அவளோ
பொத்தலான ஈயக் குவளை

தின்று கிடக்க எண்ணி வந்து வாய்த்தவளை—ஒரு
தென்பாங்கு பாடென்று கெஞ்சும் இந்தத் தவளை.

வயிர அட்டிகை காசுமாலை—நல்ல
வகை வகையான பட்டுச்சேலை—அந்த

மயிலுக்கு வாங்கி வந்து போடுவதவன் வேலை
வாராய் சாப்பிட என்றால் உரிப்பான் எனது தோலை.

என் நிலைக்கு நான் அழவில்லை—நாட்டில்
எத்தனை பெண்கட் கிந்தத் தொல்லை!

கன்னி ஒருத்திதான் ஒருவனுக் கென்னும் சொல்லை
கட்டாயம் ஆக்கினார் ஏதென் மகிழ்ச்சிக் கெல்லை?

அறுபதினாயிரம் பெண்டாட்டி—மாரை
அடைந்தானாம் முன்னொரு காமாட்டி—பெண்கள்

குறைபாடெல்லாம் இன்றுதீரச் சட்டந்தீட்டிக்
கொடுத்த அரசுதன்னைக் கும்பிட்டேன் பாராட்டி!

## அவள் துடிப்பு!

படித்தும் பந்தடித்தும் இருந்தவள் தானே—அந்தப்
பாவி என் உள்ளம் கவர்ந்தானே (படித்தும்...)

துடித்தறியாத உள்ளம் துடித்தது காளை
தொடுவதெப் போதடி என் தோளை? (படித்தும்...)

விடிந்தால் அவன் உருவிலே என்விழி திறக்கும்—என்
வேலைக் கிடையில் நினைவெலாம் எங்கோ பறக்கும்
கொடியவன் பிரிந்தான் என்பதால் என்னுளம் இறக்கும்— பின்
கொஞ்ச வருவான் என அது மீண்டும் பிறக்கும்
(படித்தும்...)

மறந்திருக்கவோ என்னால் முடிவதும் இல்லை—அந்த
வஞ்ச வண்டுக்கென் நெஞ்சந்தானே முல்லை!
உறங்கும் போதும் இமைக்குள்ளும் செய்குவான்
தொல்லை—என்
ஒளி இதழ் அடையுமா அவன் முத்தப் பல்லை?
(படித்தும்...)

காலைக் கதிர் வந்து பலகணி இடுக்கில் சிரிக்கும்— அது
காளை எட்டிப் பார்ப்பது போலவே இருக்கும்
சோலைக் குளத்தில் செந்தாமரை இதழ்விரிக்கும்—அது
தூயவன் முகமென என் உளம் ஆர்ப்பரிக்கும்
(படித்தும்...)

## அவன் வாராதபோது...

(வெண்பா)

முல்லை எனைநகைக்கும் மூன்றுதமி ழும் தெவிட்டும்
தொல்லை மிகவிரிக்கும் தோகைமயில்—சொல்லை
வெறுப்பேற்ற வீசும் கிளிதான்! என் காதற்
பொறுப் பேற்றான் வாராத போது!

தென்றல் புலிபோலச் சீறும் மலரிலுறு
மன்றல் பிணநாறி மாற்றமுறும்—குன்றல்இலாத்
தீப்போல் வான் தோன்றுநிலா சேயிழை நெஞ் சக்குளத்திற்
பூப்போல்வான் வாராத போது!

பாலும் புளிக்கும் நறும் பண்ணியங்கள் வேப்பங்காய்
தோலும் எரியும் தோய்கலவை!—மேலும்
அலவனார் ஆர்கலியும் கொல்லும் என்காதற்
புலவனார் வாராத போது!

வண்டு வசை பாடும்! மாங்குயிலும் வாயாடும்!
மண்டுகுளிர்ச் சோலை எரிமலையாம்—கண்டுவக்க
மின்னாவான் மீன்எல்லாம் மெல்லி வறுணீமக்குப்
பொன்னாவான் வாராத போது!

பஞ்சும் பரப்பிய பூவும் படுநெருஞ்சி
கொஞ்சும் என் பாங்கி கொலைகாரி—நஞ்சுமிகும்
தீண்டவன் பாம்பு அதுதான் தேமலர்த்தார் என்அன்பு
பூண்டவன் வாராத போது!

## பொழுது விடியவில்லை!

பொழுதும் விடியவில்லை
பொற்கோழி கூவவில்லை
வழிபார்த்த விழியேனும்
மறந்தும் உறங்கவில்லை
பழிகாரன் வருவது திண்ணமா?—இல்லை
பாவை எனைக் கொல்ல எண்ணமா?

விளக்கிலும் நெய்இல்லை
வெள்ளி முளைக்கவில்லை
களம் காப்பவன் குறட்டை
காதுக்குப் பெருந்தொல்லை
இளக்காரம் இத்தனை ஆயிற்றே ?—காதல்
ஏரியின் நீர் வற்றிப் போயிற்றா?

கிளியும் விழிக்க வில்லை
கிட்ட எவரும் இல்லை
உளத்தில் அமைதிஇல்லை
உறவும் அழைக்கவில்லை
துளி அன்பும் என்மட்டில் பஞ்சமா?—என்
தோழன் தனக்கிரும்பு நெஞ்சமா?

மறக்க முடியவில்லை
வாழ்வில் மகிழ்ச்சி இல்லை

இறக்கவும் மனம் இல்லை
இருந்திடில் இந்தத் தொல்லை
பெறத்தகுமோ அவன் வரவு?—வரப்
பெற்றால் கழியும் இந்த இரவு!

## நேயனை அழைத்து வா!

எனக்கிதுதான் நிலவா, சுடு நெருப்பா—அவன்
என்னைக் கூடி இருக்கையிலே
அழகும் குளிரும் கலப்பா!
—எனக்கிதுதான் நிலவா!

இனித்திருக்கும் பழமா இது பாலா—அவை
எட்டி என்றால் அவனில்லாத தாலா!
நினைத் தொழுதேன் உயிரிருக்கும் போதே—என்
நேயனைப் போய் அழைத்து வாடி மாதே—
—எனக்கிதுதான் நிலவா!

மணக்கும் முல்லைக் கொடியா பிணநெடியா—அவன்
வாராவிட்டால் இவை எல்லாம் இப்படியா
தணலில் போட்ட புழுவாய்த் துடித்தேனே—என்
தமிழவேளை அழைத்து வாடி மானே!
—எனக்கிதுதான் நிலவா!

## நானா? அவளா?

(தலைவி வருத்தம்)

போனால் போகட்டுமே—பசும்
பொன்னா யிருந்தவன் பித்தளையாய் அங்கே
—போனால் போகட்டுமே!...

ஆனாலும் என்றன் அன்பை மறந்தான்—அந்த
ஆந்தைக் கூட்டிற் புறாவாய்ப் பறந்தான்
ஊனாய் வற்றிய பசுவைக் கறந்தான்—அவன்
உள்ளன் பிலாதவளால் சீர் குறைந்தான்
—போனால் போகட்டுமே!...

வாழ்க்கையிலே பங்கு கொண்டவள் நானா—அன்றி
வரவுக்கோர் இரவென்னும் அம்மங்கை தானா?

தாழ்வுற்ற நேரத்து தளர்ச்சி யுற்றேனா?—அவன்
தழைத்திருந்த போதும் தலைநிமிர்ந்தேனா?
போனால் போகட்டுமே!...

காலிற்பட்ட துரும்பென் கண்ணிற்பட்ட இரும்புதான்
கடிந்து பேசினாலும் அது எனக்குக் கரும்பு
தோலுக்குப் பிறகுமா தேனீ எனும் சுரும்பு?
சோலை யிலன்றோ இருக்கும் முல்லை யரும்பு?
—போனால் போகட்டுமே!...

## தவளை போல் குதிக்காதீர்!

அவளிப்படி நடந்தாளோ?
அவளிப்படி விழித்தாளோ!
இவளிடத்தில் காட்டாதீர்!
இவளிடத்தில் விழிக்காதீர்!
அவள் பூசிய கலவைதானோ?
அவள் தந்த அடைகாயோ!
இவளிடத்தில் வீசாதீர்!
இவளிடத்தில் சிரிக்காதீர்!

அவள் சூட்டிய மலர்தானோ?
அவள் கடித்த கன்னப் புண்ணோ!
இவளிடத்தில் நீட்டாதீர்!
இவள் மனத்தைக் கலக்காதீர்!
அவள் கொடுத்த தலைக் கொழுப்பா!
அவள் கொடுத்த ஆணவமா?
இவளிடத்தில் செல்லாதே
இவளை ஒன்றும் பண்ணாது!

அவளிடமே போவீரே!
அவளிடமே சாவீரே!
இவளிடத்தில் வரவேண்டாம்
இவள் தோளை நத்தாதீர்
எவளிடத்தில் எது செல்லும்?
அவளிடத்தில் அது செல்லும்
குவளை அத்தான் அவள் கண்கள்
குவளை நீரும் இங்கில்லை!

அவளிதழ்தான் இருக்குமங்கே
　　அவலுமில்லை மெல்லுதற்கே!
கவலை போகும் பிள்ளை இங்கே
　　தனிஇன்பக் கொள்ளை அங்கே
கவலை யெல்லாம் அவளிடத்தில்
　　கண்ணீர்தான் இவ்விடத்தில்
தவளை போலக் குதிக்காதீர்
　　தலைவாயில் மிதிக்காதீர்!

## அவன் எனக்குத்தான்!

எனக்குத்தான் அவன் எனக்குத்தான்
என்னைத்தான் அவன் காதலித்தான்!

தனித் திருக்கையில் புன்னையடியில்
சாய்ந் திருக்கையில் என்னைக் கண்டவன்
மனத் திலிருந்த தன் காதலை
வாரிக் கண்ணால் நேரில் வைத்தான்.
—எனக்குத்தான் அவன் எனக்குத்தான்!

மயிலிறகின் அடியிணை அவன்
மலருதட்டின் நடுவிற் கண்டேன்
வியப்பிருந்தது கண்குறிப்பில்!
விருப்பிருந்தது புன்சிரிப்பில்.
—எனக்குத்தான் அவன் எனக்குத்தான்!

எப்படி இருக்கும் செந்தாமரை
அப்படி இருக்கும் செங்கை நிரை
கைப்பட என்னை அணைக்கும்போது
கணமும் பிரிய மனம் வராது.
—எனக்குத்தான் அவன் எனக்குத்தான்!

இரண்டு தோளும் இரண்டு பொன்மலை!
எவள் அடைவாள் இச் செம்மலை?
வருத்தம் இனியும் என்னிடத்திலா?
மனஇருள் கெட வந்த வெண்ணிலா!
—எனக்குத்தான் அவன் எனக்குத்தான்!

## தென்றல் செய்த குறும்பு!

இழுத்திழுத்து மூடு கின்றேன்
எடுத்தெடுத்துப் போடு கின்றாய்
பழிக்க என்றன் மேலா டையைத் தென்றலே —உன்னைப்
பார்த்து விட்டேன் இந்தச் சேதி ஒன்றிலே!

சிலிர்க்கச் சிலிர்க்க வீசு கின்றாய்
செந்தாழை மணம் பூசு கின்றாய்
குலுக்கி நடக்கும் போதிலே என் பாவாடை—தனைக்
குறுக்கில் நெடுக்கில் பறக்கச் செய்தாய் தென்றலே!

வந்து வந்து கன்னந் தொட்டாய்
வள்ளைக் காதில் முத்த மிட்டாய்
செந்தா மரைமுகத்தி னைஏன் நாடினாய்—ஏன்
சீவியதோர் கருங்குழலால் மூடினாய்!

மேலுக்குமேல் குளிரைச் செய்தாய்
மிகமிகமிகக் களியைச் செய்தாய்
உள்ளுக்குள்ளே கையை வைத்தாய் தென்றலே
உயிருக்குள்ளும் மகிழ்ச்சி வைத்தாய்—என் தென்றலே!

## தோழியே சொல்வாய்!

காசுபணம் வேண்டாமடி தோழியே—அவன்
கட்டழகு போதுமடி தோழியே
ஆசை வைத்தேன் அவன்மேலே தோழியே—என்னை
அவனுக்கே அளித்தேனடி தோழியே!

ஓசைபடா தென்வீட்டில் ஓர் இரவிலே—என்பால்
ஒருமுறைவரச் சொல்வாயடி தோழியே
ஏசட்டுமே அவன் வரவால் என்னையே—நான்
இவ்வுலகுக் கஞ்சேனடி தோழியே!

தென்றலுக்குச் சிலிர்க்கும் மலர்ச்சோலையில்—செழுந்
தேனுக்காக வண்டுபாடும் மாலையில்
இன்றெனது மனவீட்டில் வாழ்வதோர்—நல்
எழில்காட்டிச் சென்றானடி தோழியே!

ஒன்றெனக்குச் செய்திடடி இப்போதே—நல்ல
ஒத்தாசை ஆகுமடி தோழியே

அன்றெனக்குக் காட்சி! தந்த கண்ணாளன்--கொஞ்சம்
அன்புதந்து போகச் சொல்வாய் தோழியே!

என்பார்வை அவன் பார்வை தோழியே—அங்கே
இடித்ததுவும் மின்னியதும் சொல்வாயே
தன் அழகின் தாக்கடைந்த என் வாழ்வில்—அவன்
தனக்கும் உண்டு பங்கென்று சொல்வாயே!

பொன்னான நாளடியே என் தோழி—ஒருவாய்ப்
பொங்கலுண்டு போகும்படி சொல்வாயே
இந்நாளும் வாழுகின்றேன் தோழியே—அவன்
எனை மறுத்தால் உயிர்மறுப்பேன் தோழியே!

## தீராதோ காதல் நோய்?

வாராத நாளெலாம் (நான்) வாழாதநாள்—அத்தான்
வாராத நாளெல்லாம்...
வந்திட்டால் காண்பேனிங்கே சந்தனச் சோலையைத்தான்
வாராத நாளெல்லாம்...

தீராத காதல்நோயை ஓர்நொடியில் தீர்த்திடுவான்
செந்தமிழில் பேசிப்பேசித் தேன்கவிதை சேர்த்திடுவான்
பாராத நாள்எல்லாம் பாழானநாள் அத்தானைப்
பார்க்கும் நாள் ஒவ்வொன்றும் தைப்பொங்கல் நாள்
வாராத நாளெல்லாம்...

உண்ணமனம் ஓடுமா (என்) கண்ணிமையும் மூடுமா
உண்டான தேன் வறண்டால் வண்டுதான் பாடுமா
எண்ணுவேன் என் மனந்தான் கண்ணாளனைத் தேடுமா
எண்ணாமல் இருப்பதற்கும் ஏந்திழையால் கூடுமா?
வாராத நாளெல்லாம்...

## திருமணம் எனக்கு!

பார்க்காதவன் போலே
பார்த்துப் போனாண்டி—அந்தப்
பாவி என் மனத்தில்
ஆசையைத் தூண்டி
(பார்க்காதவன்...)

தீர்க்காதவன் போல்தன் ஆவலைத் தீர்த்தே
சிரிக்காதவன் போலே மறைவாய்ச் சிரித்தே
(பார்க்காதவன்...)

ஐந்தாறு பேரோ டசைந்தாடிச் சென்றான்
ஆதலால் தன் எண்ணம் கண்ணால் புகன்றான்
செந்தாமரை காட்ட வந்தால் இருந்தேன்
சீராளன் வராவிட் டாலோ இறந்தேன்
(பார்க்காதவன்...)

உள்ளத்தில் உள்ளம் கலந்தபின் அங்கே
உடம்புதான் என் செய்யும் வாராமல் இங்கே?
தெள்ளு தமிழன்தோள் நான் பெற்ற பங்கே
திருமணம் எனக்கென்றே ஊதாயோ சங்கே!
(பார்க்காதவன்...)

## முத்து மாமா!

புதுக்கோயில் மதில்மேலே முத்து மாமா—இரண்டு
புறாவந்து பாடுவதேன் முத்து மாமா?
எதுக்காகப் பாடினவோ முத்து மாமா—நாமும்
அதுக்காகப் பாடுவமே முத்து மாமா.
ஒதுக்கிடுமா ஆற்று நீரைக் கடல் வெள்ளம்—என்னை
ஒதுக்கிவைக்க எண்ணலாமா முத்து மாமா?

முதல் மனைவி நானிருந்தும் முத்து மாமா—அந்த
மூளியை நீ எண்ணலாமா முத்து மாமா?
ஒதிய மரத்தின் கீழே முத்து மாமா—கோழி
ஒன்றை ஒன்று பார்ப்பதென்ன முத்து மாமா?
எது செய்ய நினைத்தனவோ முத்து மாமா—நாமும்
அது செய்ய அட்டி என்ன முத்து மாமா.
குதி குதியாய்க் குதித்ததுண்டு முத்து மாமா—எனக்குக்
குழந்தையில்லை ஆனாலும் முத்து மாமா
எதிலும் எனக்கதிகாரம் முத்து மாமா—நீ தான்
எப்போதுமே என் சொத்து முத்து மாமா!

## அறுவடைப் பாட்டு!

நாட்டு மாதரே—அறுவடைப்
பாட்டுப் பாடுவோம்.
(நாட்டு...)

ஆட்டமயில் கூட்டமாக அங்கே செல்லுவோம் (நாட்டு...)

தங்கக் கதிர்தான்—தன்
தலை சாய்ந்ததே
சிங்கத் தமிழர்—தம்
செல்வம் உயர்ந்ததே
பொங்கும் சுடர்ப்பொன் னரிவாள்
செங்கை பிடிப்போம்
போத்துக் கூட்டி அரிந்த செந்நெல்
போட்டுக் கட்டுவோம் (நாட்டு...)

கட்டழகு தாளின்—கட்டுக்
கண்ணைப் பறிக்கும்
சிட்டாய்ப் பறப்போம்—களத்தில்
சென்று சேர்ப்போம்
கட்டடிக்கும் ஆளும் தோளும்
பட்டாளந் தானோ—அவர்
காதலிமார் ஆசையோடு
தொட்டாலும் தேனோ? (நாட்டு...)

## மணக்க என்றான்!

### (தோழி கூற்று)

காந்தளின் இதழ்க் கதவு திறக்கும் வரைக்கும்
காத்திராது வண்டு பாத்திறம் காட்டத்
தக்கோர் வருகை கண்டெதிர் கொண்ட
மிக்கோர் போல மெல்லிதழ் திறந்தது.

அத்தகு சிறந்த மலையுடை அன்னவன்
நல்ல நெஞ்சம் உடையவன் என்க.
பெருமணம் புரியாது பிரிந்ததை உன்னிக்
கதறும் உன்நிலை கழறினேன்
மணக்கவே என்றான் மற்றவன் நாணியே!

(கருவூர்க் கதப்பிள்ளை அருளிய குறுந்
தொகை 265ஆம் பாடல் கருத்து இது.)

# இன்பத்தில் துன்பம்!

(தலைவி கூற்று)

இருந்தபடி என்றன் நெஞ்சை இழுக்கும்
இருவிழி இன்பம் செய்யும் எனில் அவர்
திருந்துபடி ஓவியன் தீட்டிய ஓவச்
சேயிழை தன்னைத் திரும்பிப் பார்க்கும்
அவ்விரு விழியே துன்பம்
செய்வன! எவ்வகை உய்வேன் தோழியே!

# சேவலைப் பிரிந்த அன்றிற் பேடு

[மாமி அழைத்தாள் என்று சென்று திரும்பிய தலைவியிடம், தோழி, உன் துணைவர் திருவரங்கம் போயிருக்கிறார் என்று கூறிய அளவில், தலைவி தோழியிடம் வருந்திக் கூறுகிறாள்.]

ஏண்டி போனார் திருவரங்கம்—அவர்
என்னாசைத் தங்கச் சுரங்கம் —ஏண்டி போனார்...

என்,

வேண்டுகோளைத் தாண்டி மலை
தாண்டி ஆற்றைத் தாண்டி அவர் —ஏண்டி போனார்...

நான்,

எட்டிப் பிடித்த வட்ட நிலா—நல்ல
இனிப்பி லேப ழுத்த பலா
வட்டி கொடுத்தாலும் வாராச் செல்வம்
வாழ்ந்த வாழ்வும் இந்தமட் டிலா? —ஏண்டி போனார்...

அவரும் நானும் பூவும் நாரும்
பிரிந்ததில்லை நொடி நேரம்
எவர்க்கும் தெரியும் திருவரங்கம்
இங்கிருந்து பத்துக்காத தூரம் —ஏண்டி போனார்...

அன்றில் பறவை பிரிந்த தில்லை
ஆண் பிரிந்து வாழ்ந்த தில்லை
என்ற சேதி தெரியாதா?—நான்
எப்படிப் பொறுப்பேன் இந்தத் தொல்லை?
—ஏண்டி போனார்...

## மணவாளனைப் பறிகொடுத்த மங்கை அழுகின்றாள்

இருப்பீர் என் றிருந்தேனே
இறந்தீரோ அத்தானே
ஒரு பானை வெண்ணெயும் கவிழ்ந்ததோ
உண்ணவே அணைத்தகை அவிழ்ந்ததோ!

சிரிப்பாலும் களிப்பாலும்
சேயிழையை வாழவைத்தீர்
முறித்தீரோ என் ஆசையை அத்தானே
முத்து மழையில் வாழ நினைத்தேனே!

வெண்ணெய் படும் நேரத்திலே
தாழி உடைந் திட்டதுவோ
கண்ணொளியை இழந்தேனே அத்தானே
காவலற்ற பயிரானேன் அத்தானே!

கண்ணுக்கே மையானீர்
கார்குழலில் பூவானீர்
மண்ணாகிப் போனதுவே என்வாழ்வு
மறப்பினும் மறக்கவில்லை உம் சேர்க்கை!

## சாவை நீக்கு

கண்டவுடன் காதல் கொண்டேன் உன்மேலே—நீ
கண்வைக்க வேணுமடி என்மேலே
அண்டினேன் ஆதரிக்கக் கையோடு—கேள்
அதுதானே தமிழர்கள் பண்பாடு!

கொண்ட மையல் தீர்ப்பதுன் பாரமே—எனைக்
கூட்டிக்கொள் உன் இடுப்பின் ஓரமே
நொண்டியின் கைம்மேல் வந்தா விழும்?—என்
நோய் தீர்க்கும் சேலத்து மாம்பழம்?

அழகில் ஆருமில்லை உன்னைப்போல்—உன்மேல்
அன்பு கொண்டவன் ஆருமில்லை என்னைப்போல்
இழைக்க இழைக்க மணம் கொடுக்கும் சந்தனம்—மனம்
இனிக்க இனிக்கப் பூப்பூக்கும் நந்தனம்!

பழுக்கப் பழுக்கச் சுவை கொடுக்கும் செவ்வாழை
பறிக்கும்போதே மணம் கொடுக்கும் வெண்தாழை
தழுவு முன்னே இன்பந்தரும் பெண்ணாளே—என்
சாவை நீக்க வேண்டுமடி கண்ணாளே!

## நீ எனக்கு வேண்டும்!

வானுக்கு நிலவு வேண்டும்
வாழ்வுக்குப் புகழ் வேண்டும்
தேனுக்குப் பலாச்சுளை வேண்டும்—என்
செங்கரும்பே நீ எனக்கு வேண்டும்!

மீனுக்குப் பொய்கை வேண்டும்
வெற்றிக்கு வீரம் வேண்டும்
கானுக்கு வேங்கைப்புலி வேண்டும்—என்
கண்ணாட்டியே நீ எனக்கு வேண்டும்!

வாளுக்குக் கூர்மை வேண்டும்
வண்டுக்குத் தேன் வேண்டும்
தோளுக்குப் பூமாலை வேண்டும்—அடி
தோகையே நீ எனக்கு வேண்டும்!

நாளுக்குப் புதுமை வேண்டும்
நாட்டுக்கே உரிமை வேண்டும்
கேளுக்கே ஆதரவு வேண்டும்—அடி
கிள்ளையே நீ எனக்கு வேண்டும்!

## இன்பம் அனைத்தும்!

பெண்கள் இட்ட பிச்சைதான்—ஆண்கள்
பெற்ற இன்பம் அனைத்தும்—அழகிய
—பெண்கள் இட்ட பிச்சைதான்!

கண்ணைக் கவர்வார் எண்ணம் கவர்வார்
காதலால் இன்ப வாழ்வ ளித்திடும்
—பெண்கள் இட்ட பிச்சைதான்!

அன்னை தயை உடையார்—பணிவினில்
அடியவர் போன்றார்—மலர்ப்
பொன்னின் அழகுடையார் பொறுமையில்
பூமிக்கிணை ஆவார்

இன்பம் அளிப்பதில் தாசிகள்—அவர்
எண்ணம் அளிப்பதில் அமைச்சர்கள்—அழகிய
—பெண்கள் இட்ட பிச்சைதான்!

கண்ணின் கடைப் பார்வை—ஒரு சிறு
கட்டளை போட்டுவிட்டால்—இப்பெரு
மண்ணுலகின் ஆட்சி ஆண்கள்
வாங்குமோர் வாள் வீச்சு
பெண்களினால் பண்கள் இலக்கியம்—அவர்
பேச்சுக்குத்தான் பெயர் அமிழ்தம்—அழகிய
—பெண்கள் இட்ட பிச்சைதான்!

## தொல்லை தீர்க்கலாம்

பாலும் தேனும் புளித்த காடி
பாடுது பார் வானம் பாடி
சோலையிலே நீயும் நானும் ஆடி—நம்
தொல்லையெல்லாம் தீர்த்திடலாம் வாடி!

ஆலமரம் கூடாரம்
அல்லிப்பூக் குளத்தோரம்
மாலைக்காலம் நமை அழைக்கும் நேரம்—இந்த
மாப்பிள்ளைக்கு நீதாண்டி ஆதாரம்!

காதலுக்கு மஞ்சள் சிட்டுக்
காத்திருக்கும் வேலை விட்டு—அடி
மாதரசே பேசக் கூச்சப்பட்டு—நீ
வருந்தலாமா கீழே தலை நட்டு?

போதாதா நான் உனக்கு
பொன்தாண்டி நீ எனக்கு
காதோடு சொல்வாயுன் எண்ணம்—நீ
கட்டுப்பட்டால் இன்பவாழ்வு திண்ணம்!

பூ மணக்கும் உன் கொண்டை
பொன் குலுங்கும் கால்தண்டை
தீமை என்ன கண்டாய் என்னண்டை—வாய்
திறந்திட்டால் கெட்டாபோகும் தொண்டை!

மாமிக்குன் மேல் ஆசையுண்டு
மகனுக்கு நீ கற்கண்டு

நீ மேலும் மேலும் துவண்டு—போய்
நிற்பதென்ன சொல் ஆசை கொண்டு!

## உன் எண்ணம் கூறு!

பாழாய்ப்போன என்மனம் ஒரு நாய்க்குட்டி—அதைப்
பறித்துக் கொண்டாய் அடியே என் சின்னக்குட்டி
உன் மேனி ஒரு பூத்தொட்டி
உதடு தித்திக்கும் வெல்லக்கட்டி!

ஏழைக்கு வடித்து வைத்த சோறு—பணம்
இருப்ப வர்க்குச் சாத்துக்குடிச் சாறு
பெருக் கெடுத்த தேனாறு
பெண்ணே உன் எண்ணம் கூறு!

காணக்காண ஆசை காட்டும் முத்துநிலா—நீ
கடுகடுப்புக் காட்டுவதும் என் மட்டிலா
வேரிலே பழுத்த பலா
வேண்டும் போதும் தடங்கலா?

வீணாகிப் போகலாமா நேரமே—என்னை
விலக்கிவிட்டால் பழி உன்னைச் சேருமே
பொறுத்தேன் ஒரு வாரமே
பொறுக்க மாட்டார் யாருமே!

## வந்தேன் நான்; நீ இல்லையே!

நேற்று வந்தேன் இல்லையே—நான்
நீ இல்லையே

காற்று வந்த சோலையில் எனைக்
கண்டு சிரித்த முல்லையே —நேற்று வந்தேன்!

ஆற்றங் கரையின் ஓரம்—மாலை
ஆறுமணி நேரம்—நீ
வீற்றிருப்பாய் என நினைத்தேன்
விளைத்தாய் நெஞ்சில் ஆரவாரம் —நேற்று வந்தேன்!

புல்லாங்குழற் சொல்லை—உன்
புருவமான வில்லை—முத்துப்
பல்லை, இதழை முகத்தைத் தேடிப்
பார்த்தேன் இல்லை பட்டேன் தொல்லை —நேற்று வந்தேன்!

இன்பமான நில்வு நீ
என்னைப் பற்றி உலவு—நான்
துன்பப்பட்ட நேரமெல்லாம்
தொலைந்தது பார் கொஞ்சிக் குலவு
—நேற்று வந்தேன் இல்லையே,
நீ இல்லையே!

## அவளில்லையே!

மணமும் தென்றலும் குளிரும் வாய்ந்த
மாலையும் சோலையும் இருந்தும் பயனில்லை
குணமும் அழகும் வாய்ந்த என் காதற்
குயில் இங்கிருந்தால் ஒரு குறையுமில்லை!

அணங்கும் நானும் ஒன்றாயிருந்தே
அடைந்தால் பெருமை அடையும் நறுமணம்
பிணத்திற்கு நலம் ஒரு கேடா அவளைப்
பிரிந்த எனக்கு மணமா குணந்தரும்?

ஒன்றில் ஒன்று புதையும் முகங்களைச்
சேராமல் செய்யும் கோடைக் கொடுமையைத்
தென்றற் காற்றுக் குளிர் செய்யும் ஆயினும்
சேயிழை இல்லை பயனொன்றும் இல்லை!

தனிமையில் எனக்கா இன்பக் கண்காட்சி?
தளிர்ஆல வட்டம் என் ஒருவனுக்கா?
இனிய பொன்மேடை அவளுடன் நானும்
இருந்தின்பம் அடையவே, அதுவன்றோ மாட்சி!

## திருக்குறள் படித்தான்

மரத்தின் நிழலில் நின்று கொண்டு
வந்த என்னை நீயும் கண்டு
வானம் பார்க்க என்ன உண்டு நல்ல
பருத்தி புடவை காய்த்ததடி பொன்வண்டு—நீ
பக்கத்திலே நின்றாயடி கற்கண்டு!

பார்த்ததில்லை என் கண்ணாலே
பாரினிலே உன்னைப் போலே
படித்ததில்லை இதன் முன்னாலே

ஏத்தி ஏத்தித் தொழுவதும் உன்காலே—கொஞ்சம்
இசைந்து வாடி மயிலே என் பின்னாலே!

வையகத்தில் ஏன் பிறந்தாய்?
வாழ்க்கை இன்பம் துறந்தாய்?
மங்கை கடன் ஏன் மறந்தாய்
ஐயையோ அழகிலே நீ சிறந்தாய்—எனை
அலையவிட்டால் நீ வீணில் இறந்தாய்!

நீ பத்தரை மாற்றுத் தங்கம்
நிறைபேச்சு மதுரைச் சங்கம்
நினைத்து நினைத்து வேகும் என் அங்கம்
ஊர் பழிக்கும் என் மனமும் கசங்கும்—அடி
உண்டோ சொல் எனக்கேடி நிகரெங்கும்?

## பறந்து வந்த கிளியே!

பறந்து வந்த கிளியே
திறந்த என் மனக்கூடு புகுவாய்.

பிறந்த பெண்கள் பல கோடி—உன்போல்
பெண்ணொருத்தி தேடி—நான்
இறந்து போகுமுன் னாடி—மிக
எழில் சுமந்தபடி என்னைநாடிப்
—பறந்து வந்த கிளியே!

பெற்றெடுத்த ஒரு பொன்னை—மண்மேல்
பிரிந்த தென்ன அன்னை
கற்றுணர்ந்த என்னை— நீ
கண்டதில்லை எனினும் என்முன்னே
—பறந்து வந்த கிளியே!

இலங்கை தனில் இருந் தாயா?—அவர் செய்
இழிவு கண்டு நைந்தாயா—நீ
கலங்கி இங்கு வந்தாயா?—என்
கைகள் என்னைக் காவாத தீயா?—
—பறந்து வந்த கிளியே!

உள்ள குறைகள் நான் தீர்ப்பேன்—தமிழ்
உலகை மீட்டுக் காப்பேன்

தெள்ளு தமிழர் எங்கிருந்தாலும்—அவர்க்குத்
தீமை செய்வாரை ஒருகை பார்ப்பேன்
—பறந்து வந்த கிளியே!

## அவளையா மணப்பேன்?

மேனியெல்லாம் வெளியில் தெரிய
வெங்காயத்தோல் சேலை கட்டி
மானமெல்லாம் விற்றவளா பெண் டாட்டி?—அவள்
மாந்தோப்பில் எனை அழைத்தாள் கண்காட்டி!

தேனிருந்தால் அவள் பேச்சில்
சிரிப்பிருந்தால் அவள் உதட்டில்
நான் மயங்கி விடலாமா சொல்லையா!—அவள்
நடத்தை கெட்டுப் போவாளா இல்லையா?

கமழ்விருந்தால் கூந்தலிலே
கலையிருந்தால் நடையினிலே
அமைவிருக்க வேண்டாமா தென்பாங்கே—கேள்
ஆர் பொறுப்பார் அவள் கொடுக்கும் அத் தீங்கே?

அமிழ்திருந்தால் கண்களிலே
அழகிருந்தால் முகத்தினிலே
தமிழர்க்குள்ள மான உணர்ச்சி வேண்டாமா—நாம்
தலைகுனிந்து வாழும் நிலை பூண்டோமா?

## சிரிப்பே குத்தகைச் சீட்டு!

சோலை வழியில், தொடுக்கும் மணிக்கிளை சூழ்
ஆலின் அடியில் அமைந்திட்ட திண்ணையிலே
நண்பன் வருகையினை நான் பார்த்திருக்கையிலே
வெண்பல்லைப் பூவிதழால் மூடியொரு மெல்லிதான்
போனாள் இடதுகை பொற்குடத்தைப் போட்டணைத்தே!
நானே அப் பொற்குடமாய் நாட்டிற் பிறந்தேனா?

தோகையவள் போகையிலே துள்ளும் வளர்ப்புமான்
பாகல் கடித்த படுகசப்பால் ஓடிவந்தே
அன்னாளை அண்டி அழகு முகம் எடுக்கப்
பொன்னான முத்தமொன்று பூவை கொடுத்தாளே
அந்த மான் நானாய் அமைந்தேனா? இல்லையே?
எந்த வகையிலே ஏந்திழையை நான் பிரிவேன்?

நீர்கொண்டு நேரில் வரும் நேரிழையைக் கண்டணைத்தாள்
பேர்கொண்ட நேரிழையாள் பெற்றதை நான் பெற்றேனா?

மங்கை வழிநடந்து சோலை மணிக் குளத்தில்
தங்குநீர் வெள்ளம் தழுவி மலர்மேனி
ஆழம் மறைக்க அவள் மூழ்கினாள் அந்த
ஆழப் புனலும்நான் ஆனேனா? இல்லையே!

தாழஉடை உடுத்துத் தண்ணீர்க் குடந்தாங்கி
வந்தாள், வரும் வழியில் வந்துநான் காத்திருந்தே
செந்தாழை பூத்துச் சிரிக்கச் சிரிப்பொளியாய்ப்
பொற்பொடியை வண்டள்ளிப் பூவை விழிமறைக்க
நற்கையால் தான்துடைத்தாள் நானிற்பதைக் கண்டாள்!

கொத்தெடுத்த கோவைப் பழஉதடு தான்திறந்தே
முத்தெடுத்து நான் மகிழ முன் வைத்தாள்! அன்பின்
இருப்பெல்லாம் நீ ஆள்க என்றாள்! அவளின்
சிரிப்பதற்குக் குத்தகைச் சீட்டு!

## அவளும் நானும்!

நானும் அவளும், உயிரும் உடம்பும்,
நரம்பும் யாழும், பூவும் மணமும்,
தேனும் இனிப்பும், சிரிப்பும் மகிழ்வும்,
திங்களும் குளிரும், கதிரும் ஒளியும் —நானும் அவளும்

மீனும் புனலும், விண்ணும் விரிவும்,
வெற்பும் தோற்றமும், வேலும் கூரும்,
ஆனும் கன்றும், ஆறும் கரையும்,
அம்பும் வில்லும், பாட்டும் உரையும் —நானும் அவளும்

அவளும் நானும், அமிழ்தும் தமிழும்,
அறமும் பயனும், அலையும் கடலும்,
தவமும் அருளும், தாயும் சேயும்,
தாரும் சீரும், வேரும் மரமும், —நானும் அவளும்

அவலும் இடியும், ஆளும் நிழலும்,
அசைவும் நடிப்பும், அணியும் பணியும்,
அவையும் துணிவும், உழைப்பும் தழைப்பும்,
ஆட்சியும் உரிமையும், அளித்தலும் புகழும்
—அவளும் நானும்

# இரும்பினும் பொல்லா நெஞ்சினள்!

### (கட்டளைக் கலித்துறை)

இழையினும் மெல்லிடையாள்; கயற்கண்ணினாள்;
ஏற்றிடுசெங்
கழையினும் இன்மொழியாள்; வள்ளைக் காதினாள்;
காரிருள்செய்
மழையினும் கன்னங்கருங்குழலாள்; என் மனம்நலிந்து
நுழையினும் ஏற்காத நெஞ்சினாள்! என்ன நுவலு வதே? 1

பஞ்சினும் மெல்லடியாள்; பசுந்தோகையின் சாயலினாள்;
நஞ்சினும் கொல்லும் விழியுடையாள்; ஒரு நன்னிலவின்
பிஞ்சினும் ஒண்மைசேர் நெற்றியினாள்; அவள் பின்நடந்து
கெஞ்சினும் ஏற்காத நெஞ்சினாள்! என்ன கிளத்துவதே? 2

முத்தினும் முல்லை அரும்பினும் ஒள்ளிய மூரலினாள்
சொத்தினும் சீரினள்; சோட்டுப் புறாக் கூட்டு மார்பகத்தாள்;
வித்தினும் மாணிக்கமே மிகும் பொன்வயல் மேனியினை
நத்தினும் ஏற்காத நெஞ்சினாள், என்ன நவிலுவதே? 3

கரும்பினும் தித்திக்கும் சொல்லொன்று சொல்லி என்
காதலினை
விரும்பினும் அன்றி விரும்பாவிடினும் விளக்கி விட்டால்
துரும்பினும் துப்பிழந்தேன் வாழுவேன் அன்றிச்
செத்தொழிவேன்
இரும்பினும் பொல்லாத நெஞ்சினாள்! என்ன
இயம்புவதே? 4

# ஒட்டாரம் செய்வது...?

பட்டாணி வன்னப் புதுச் சேலை—அடி
கட்டாணி முத்தே உன் கையாலே—எனைத்
தொட்டாலும் இனிக்கும் பூஞ்சோலை—உடல்
பட்டாலும் மணக்கும் அன்பாலே!

எட்டாத தூரம் இருந்தாலும்—உனை
எட்டும் என் நெஞ்சம் மேன்மேலும்—அது

கட்டாயம் செய்திட வந்தாலும்—நீ
ஒட்டாரம் செய்வதென் போங்காலம்!

ஆவணி வந்தது செந்தேனே—ஒரு
தாவணி யும்வாங்கி வந்தேனே—எனைப்
போவென்று சொன்னாய் நொந்தேனே—செத்துப்
போகவும் மனம் துணிந்தேனே!

பூவோடி விழிக் கொண்டையிலே?—ஒரு
நோவோடி உன் தொண்டையிலே?—நீ
வாவா என்றன் அண்டையிலே—என்று
கூவா யோகருங் குயிலே!

## வந்தாள்!

தாய்வீடு போய்விட்டாய்—மானே
தனிவீடெனைப் படுத்தும் பாடு காணாய்!
நாய்வீடு, நரிவீடு நீஇலா வீடு
நடுவீடு பிணம் எரிக்கும் சுடுகாடு
—தாய் வீடு போய் விட்டாய்

சாய்வு நாற்காலியிற் சாய முடியாது
தனியாகப் பாயிலும் படுக்க இயலாது
வாயிலில் நான் போய்ப்போய் மீள வலி ஏது?
மனம்பட்ட பாட்டுக்கு முடிவென்ன ஓது
—தாய் வீடு போய்விட்டாய்

முறுக்குச் சுட்டுக் கொண்டு வந்ததாய்ச் சொன்னாய்
முத்தமல்லால் வேறு கேட்டேனா உன்னை (க்)?
குறுக்கில் ஒரு கணம் வீணாக்கி என்னைக்
கொல்ல நினைத்தால் நீ ஒரு செந்நாய்
—தாய் வீடு போய் விட்டாய்

எனக்கும் உனக்கும் இடையில் சிறிதே
இடுக்கிருந் தாலும் துன்பம் பெரிதே
அனுப்பு கின்றனை முல்லைச் சிரிப்பை
அதனால் என்மேல் சொரிந்தாய் நெருப்பை!
—தாய் வீடு போய் விட்டாய்

## இவள்?... தேன்!

உண்டாலே தேன் மலரின் தேன்—இவள்
கண்டாலே தித்திக்கும் தேன்.

வண்டால் கெடாத தேன்
வையம் காணாத தேன்
மொண்டால் குறையாததேன்—நானே
மொய்த்தேன் பேராசை வைத்தேன்.

கண்ணொவ் வொன்றும் பூவே
கை ஒவ்வொன்றும் பூவே
பொன்னுடம் பெல்லாம் பூவே—நான்
பெறுவேன் அப் பூங்காவே.

ஆளுக்குக் குளிர்சோலை
தோளுக்குப் பூமாலை
நாளும் என் மனம் வெம்பாலை—அதன்
நடுவில் அவள் கரும்பாலை.

கோவையிதழ் சுவையூட்டம்
கொஞ்சுமொழி அமுதூட்டம்
பாவி வைத்தேன் இதில் நாட்டம்—காதற்
பசிக்கிவள் பழத்தோட்டம்.

## கனியே, நாம் தன்னந்தனி!

### எடுப்பு

கூடத்திலே வந்த மாடப்புறா—கூடிக்
கொஞ்சும் கிளி வஞ்சிப்பதா?

### உடனெடுப்பு

மன—
மாடத்திலே எரியும் மணிவிளக்கே
வாராய் என் பசிக்கே உணவளிக்க

### அடிகள்

கோடைதனைத் தணிக்கும் மலர்ச்சோலை—உன்
கூந்தல் பறக்குமோ என் மேலே?
ஆட அழைத்ததடி நமை மாலை
அதைவிட உனக்கிங் கென்ன வேலை?

சிரிப்புக்கு முகத்தினில் என்ன பஞ்சம்?
தீயாய் இருக்குமோடி உன் நெஞ்சம்?
திருப்படி சேயிழை உன் முகத்தைக் கொஞ்சம்
சிலம்பாடும் அடிக் கடியேன் தஞ்சம்!

தானே கனியவேண்டும் நெஞ்சக்கனி
தடிகொண்டு கனிவிக்க லாமோ இனி?
மானே அகப்பட்டாய் என்னி டத்தினில்
வாநாம் இவ்விடத்தில் தன்னந்தனி!

## வண்ணத் தமிழாள்

வஞ்சிக்கொடி போல இடை
அஞ்சத்தகு மாறுளது!
நஞ்சுக்கிணை யோ அலது
அம்புகிணை யோ, உலவு
கெண்டைக்கிணை யோ, கரிய
வண்டுக்கிணை யோ, விழிகள்
மங்கைக்கிணை ஏதுலகில்
அங்கைக்கிணை யோ மலரும்?

வானரசு தானிலவு போலுலக மாதரசு
நானினிது வாழும் வகை ஆனதிரு வானஉரு
மேனி அது வோஅமிழ்து வீசு மண மோமிகுதி
கானிடை உலாவு மயில் தானுமெனை யேயணைய
நினைவாளோ (1/4)

கொஞ்சிப்பரி மாறுமொழி
பண்டைத் தமிழோ அலது
கொம்பிற்கனி யோ எளிதில்
உண்டற் கமுதோ, அரசி
மிஞ்சிச் சுவை தோயுதடு
பஞ்சைக் கொரு வாழ்வினிய
கொண்டற்கிணை யானகுழல்
இன்பச்சுனை யாடுவது

கூடு மெனிலோ பெரிய பேறு பெறுவேன் அலது
நீடு துயரே அடைவேன் ஈடுசொல வோ அரிது

தேடு பொருள் யாதுமிலை சீருமிவளே உறவு
யாவு மிவளே இனிய தேனிவளில் ஈனவும்
அமிழ்வேனோ? (1/2)

பஞ்சுக்கிணை யானஅடி
அன்புக்குரி தானதுணை
மின்பட்டது போல்மெருகு
பொன்பட்டது போல் ஒளிசெய்
அன்புற்றிடு மாதுநகை
இன்புற்றிடு மாறுளது
பண்புக்கினி தாய் ஒழுகும்
நண்புக் கினி யாள் எழுது

பாடலவள் நான் ந(ல்)லுரை ஆடலவள் நானடையும்
ஓடைமல ரே அரசி ஊறுமணம் நானுமதில்
நீடவரும் யாழுமவள் நீர்மை இசை நானதனில்
ஈடுபடு மேனியவள் ஏழை அதில் ஆவி என
அமைவாளோ (3/4)

நெஞ்சிற்குடி யேறிநிலை
நின்றிட்டனளே உயிரில்
அஞ்சத்தகுமோ அவளின்
அண்டைச் செலவே இனியும்
என்சொற்படி யே அவளும்
இன்சொற்சொலு மோஅலது
வன்சொற்சொலு மோஅழகு
மங்கைக் கெவர் போயறைவார்?

மான மவளே எனதின் ஊனுமவளே எனுயிர்
தானு மவளே புகழ்மை மானவளே கொடிய
ஏழமை எலாமரசி தோழமை யினாலொழியும்
மாமழை யினாலுலகு தானமையுமாறு நலம்

அருள்வாளோ! (1)

## பாரதி போல்வாள்!

இளவெயில் ஆடி ஒளிவிடு மாந்தளிர் மேனி அவள் மேனி
கிளிப் பேச்செல்லாம் நெல்லிக்குப் பத்தாலைசீனி

சளசளவென்ன மலைவீழ் அருவிக் கூந்தல் அவள் கூந்தல்
இளப்பமில்லை அவ் வழகுக்களஞ்சியத்தைக் கை ஏந்தல்!

துன்ப ஆடவர் இன்புறும் மாணிக்கச் சிரிப்பே அவள் சிரிப்புக்
கன்னம் பளிங்கெனில் இயற்கை அன்னை கையிருப்பு!
பொன் வெயிலும் வெண்ணிலவும் ஒளிவிடும் அணிகள்
இவள் அணிகள்
அன்பு செய்தால் எனை அண்டுமா வையப் பிணிகள்?

பண்டை மறக்குல மாண்பினுக் குரியாள் அவள் உரியாள்
அண்டும் பகையை வெல்லும் மக்களைத் தருவாள்!
மண்டு புகழ்ப் பாரதி தமிழ் போன்ற சொல்லாள்
இன்சொல்லாள்
திண்டாடும் எனக்கின்ப வழிகாட்ட வல்லாள்!

## வீடும் பாலையே!

(தோழி கூற்று)

உயிரே பிரிந்தால் உடல் வாழாது
வெயில் நுதல், அயில் விழி, வெண்ணிலா முகத்து
நேரிழை தனையும் நீர் அழைத் தேகுக
என்றேன் நீரதற்கு இயம்பிய தென்ன?
உப்பு வாணிகர் ஒன்றிப் பிரிந்த
வெப்பு நிலம்போல் விரிச்சென்ற ஊர்போல்
இருக்கும் பாலை நிலத்தில் என்னுடன்
மருக்கொழுந்தும் வருவதோ என்று
தனியே செல்வதாய்ச் சாற்றினீர்! உம்மை
மாது பிரிந்து வாழும் வீடுதான்
இனிதோ சொல்க என்று
துனிபொறாது சொன்னாள் தோழியே!

(பாலை பாடிய பெருங் கடுங்கோ பாடிய
குறுந்தொகை 124ஆம் பாட்டைத் தழுவியது)

## பிணித்தது நெற்றி! பிடிபட்டது யானை!

(தலைவன் கூற்று)

வாட்டம் ஏன் என்று கேட்ட பாங்கனே,
கேட்க! எட்டாம் பிறை கடலில் கிளைத்தல் போல்
கரிய கூந்தல் அருகில் தோன்றிய

ஒருத்தியின் நெற்றி பிணித்தது— என்
கருத்தோ கடிது பிடிபட்ட யானையே!
(கோப்பெருஞ் சோழன் பாடிய குறுந்
தொகை 129ஆம் பாட்டின் தழுவல்)

## வருவார் என்பதால் இருந்தேன்!

(தலைவி கூற்று)

கிளி உண்டதனால் கதிரிழந்து கிடந்த
தினைத்தாள் செத்துப் போகாது நல்ல
மழை வர இலை விட்டது போலே என்
புதுநலம் உண்டதாற் போகும் என் நல்லுயிர்
வருவார் என்னும் நினைவால்
இருந்தது தோழி என்றாள் தலைவியே!

(ஒரு குறுந்தொகைப் பாட்டின் தழுவல்)

## தமிழ் மகளே வேண்டும்!

அவன்: என் மீதில் ஆசை வைக்காதே—மயிலே
என்னைப் பார்த்ததும் சிரிக்காதே
உன்மேல் நான் ஆசை வைக்கவில்லை—நீதான்
உண்மையிலே தமிழ் மகள் இல்லை!
ஆதலால் (என் மீதில்)

அவள்: மக்களில் வேற்றுமை ஏது— காதல்
வாழ்க்கையிலே நாம் புகும் போது?
அக்கால மனிதரும் நாமோ? என்னை
அயலாள் என விலக்கிட லாமோ?
உலகத்து (மக்களில்)

அவன்: சாதிகள் வீழ்ந்திட வேண்டும்—பெண்ணே
தமிழினமோ வாழ்ந்திட வேண்டும்
மாதொருத்தி வேண்டும் எனக்கும்—தமிழ்
மகளாயிருந்தால் தான் இனிக்கும்!
ஆதலால் (என் மீதில்)

அவள்: என் உதட்டில் கசிவதும் தேனே— உண்மையில்
என்பேச்சும் உன் தமிழ்தானே?

பொன்னேட்டில் புகழ் தீட்டுவோம்—இன்பப்
புது வாழ்வை நிலை நாட்டுவோம்!
உலகத்து (மக்களில்)

அவன்: தமிழ், உடல் உயிர் இவை யாண்டும்—ஒரு
தமிழ் மகளாய்ப் பிறந்திட வேண்டும்
அமிழ்தில் நாளும் நான் மூழ்க— எனக்
காசை உண்டு! தமிழ் வாழ்க!
—ஆதலால் (என் மீதில்)

## கற்பே உயிர்...

அவன்: தயிர் விற்கப் போனவளே
தட்டனிடம் பேச்சென்ன?
மோர் விற்கப் போனவளே
முத்தனிடம் பேச் சென்ன?

அவள்: தட்டனிடம் பேசாமே
தயிர் விற்ப தெப்படியாம்?
முத்தனிடம் பேசாமே
மோர் விற்ப தெப்படியாம்?

அவன்: தயிர் விற்க மட்டுந்தான்
தட்டனிடம் பேசலாம்
மோர் விற்க மட்டுந்தான்
முத்தனிடம் பேசலாம்.

அவள்: தயிர் விற்க மட்டுந்தான்!
மோர் விற்க மட்டுந்தான்!
உயிர் விற்க என் மனந்தான்
உடன்படுமா சொல்லத்தான்!

## சோறல்ல கோவைப்பழம்!

அவன்: வேலை விட்டு வீடு வந்தேன்
மெல்லி உன்னைக் காணவில்லை
சாலையில் இருப்பாய் என்று வந்தேனே—அடி
தங்கமே இதோ உன்னைக் கண்டேனே!

அவள்: ஆலை விட்டு நீ வரவே
ஐந்து மணி ஆகு மென்றே
ஆலிலை பறிக்க இங்கு வந்தேனே—என்
அத்தானே உன்னை இங்குக் கண்டேனே!

அவன்: தாங்க முடியாது பசி
சாப்பாடு போட்டுவிடு
ஏங்க முடியாது பெண்ணே என்னாலே—அடி
என்னாவல் தீர்க்க முடியும் உன்னாலே!

அவள்: தாங்க முடியா தென்றால்
சாலை யிலா சாப்பாடு?
வாங்கால் இலை பறித்துக் கட்டுக்கட்டி—வீடு
வந்திடுவேன் பொறுத்திரு என் சர்க்கரைக்கட்டி!

அவன்: கேட்டதுவும் சாப்பாடா?
கெஞ்சுவதும் பாற்சோறா?
காட்டுக்கிளி நான் கேட்டது கோவைப் பழந்தான்—என்
கண்ணாட்டியே இங்குவாடி உண்ணத் துடித்தேன்!

## வண்டி முத்தம்

அவள்: வந்து விட்டேன் இந்தமட்டும்
வழி தெரிய வில்லை—ஏ
வண்டி ஓட்டிப் போகும் ஐயா
எங்கே உள்ளது தில்லை?

அவன்: குந்திக் கொள்வாய் வண்டியிலே
என்னத்துக்குத் தொல்லை?—அதோ
கொய்யாத் தோப்பைத் தாண்டிவிட்டால்
தெரியும் உன்னூர் எல்லை.

அவள்: பஞ்சுகூட நெருப்பிருந்தால்
பற்றிக்கொள்ளக் கூடும்—இந்தப்
பச்சைக்கிளி நொச்சிக்கிளையில்
தொத்திக் கொள்ளக்கூடும்.

அவன்: நெஞ்சிருக்க நினைவிருக்க
உடம்பெங்கே ஓடும்?—சும்மா
நீகுந்து நான் ஓட்டுவேன்
நன்றாய் ஓடும் மாடும்.

அவள்: நல்லதையா குந்திக் கொண்டேன்
நானும் இந்த ஓரம்—இனி
நடந்திடுமோ ஒற்றை மாடு?
நாம் அதிக பாரம்!

அவன்: இல்லை பெண்ணே இப்படிவா!
இருந்தது பின்பாரம்—உம்
இப்படி வா! இப்படி வா!
இன்னம் கொஞ்ச நேரம்!

அவள்: ஏறுகாலின் ஒட்டினிலே
இருந்து சாகலாமா?—நீ
இப்படி வா இப்படி வா
என்னருமை மாமா!

அவன்: ஆறு கல்லும் தீர்ந்தாலும் நம்
ஆசை தீர்ந்து போமா?—வை
அன்பு முத்தம் நூறுகோடி
அதை மறப்பவர் நாமா!

## அவனும் அவளும்

அவள்: தின்பதற்குத் தேங்குழலே
தென்றலுக்குப் பூங்குழலே
அன்பு செய்ய வாய்த்திருக்கும்
அத்தானே—என்
ஆசையெல்லாம் உன்மேல் வைத்தேனே!

அவன்: இன்பத்தின் இருப்பிடமே
என் காதல் வார்ப்படமே
முன்பிருந்து காத்திருக்கும்
மாதுக்கு—நல்
முத்துப் பிறக்காததும் ஏதுக்கு?

அவள்: தங்கமலை வெள்ளிமலை
சந்தத் தமிழ்ப் பொதிகைமலை
குங்குமத்தில் உன் முகந்தான்
தோயாதா—என்
கொஞ்சுமொழி உன் காதில் தோயாதா?

அவன்: சங்கத்து முத்தமிழே
தாவியுண்ணும் புத்தமுதே
மங்கைக்கும் செங்கைக்கும்
தூரமா—உன்
வாய்திறக்க இவ்வளவு நேரமா?

## வண்டும் வேங்கையும்

காதலன்: கோடைக்குக் குளிர் இருக்கும்
கூந்தலுக்கு மலர் இருக்கும்
ஓடைக்குப் பக்கம் ஒரு மேடையாம்—அந்த
மேடை மேலே இரண்டு காடையாம்.

காதலி: கோடைக்குக் குளிர் இருக்கும்
கூந்தலுக்கு மலரிருக்கும்
ஓடையின் பக்கம் ஒரு மேடையா—அதில்
கூடுகட்டும் சின்னஞ்சிறு காடையா!

காதலன்: எருமை இறங்கக் கண்டால்
தவளை தங்கிடுமா
இருவரும் அங்கே கூடி இருக்கலாம்—நாம்
எந்நேரமும் கொஞ்சிப் பேசிச் சிரிக்கலாம்.

காதலி: தெரிந்தது பதை பதைப்பு
புரிந்ததே உன் கொழுப்பு
சிரிக்கச் சிரிக்கப் பேசுவது செல்லாது—உன்
சில்லரைப் பேச்சுக்கள் என்னை வெல்லாது.

காதலன்: பேசாதா பச்சைக்கிளி
சிரிக்காத முல்லைக்கொடி
பேசுவதும் சிரிப்பதுவும் நாளைக்கே—உதட்டில்
பிச்சைபோடு மெத்த பசி வேளைக்கே!

காதலி: ஆசைக்கு நான் ஆளல்ல
ஆட இது நாளல்ல
மூசு வண்டு வேங்கையிடம் ஓடுமா—ஒரு
முல்லைக்கொடி வேம்படியை நாடுமா?

## இன்பம், எங்கும் இன்பம்!

தலைவி: காற்றி லெலாம் இன்பம் அந்தக்
கடல் முரசில் இன்பம்
ஆற்று வெள்ளம் ஊற்றுப்புனல்
அசைவி லெல்லாம் இன்பம்
நாற்றிசையும் இன்பம் இதோ
நல்ல நிலாத் தோட்டம்—அதில்
மாற்றமிலா நம் காதல்
வாழ்க்கை எலாம் இன்பம் இன்பம்!

தலைவன்: சிரிப்பினிலே இன்பம் உன்றன்
சேல்விழியில் இன்பம் நீ
இருக்கும்போதும் நடக்கும் போதும்
பேசும்போதும் இன்பம்!
உரித்துவைத்த பழமே உன்
உடுக்கை போன்ற இடுப்பை—நீ
திருப்பும் போதும் நொடிக்கும் போதும்
குலுக்கும் போதும் இன்பம் இன்பம்!

## தேனமுதே!

தேனமுதே பாலமுதே
நானுனைப் பெற்றதால்!
போனதுண்டாம் என்னிளமை
நானுனைப் பெற்றதால்! —தேனமுதே பாலமுதே!

மேலானஎன் கட்டுமார்பும்
தோலாய் இளைத்ததாம்
மின்னும்என்றன் உடம்பும் சலவை
நூலாய் வெளுத்ததாம்
ஆனநாளெல் லாம் உனைநான்
தாலாட்டும் பணியாம்
அழகிய பஞ்சணை இல்லையாம்
நானுனைப் பெற்றதால்! —தேனமுதே பாலமுதே!

உன் அப்பா என் அத்தான்
உறவும் பொய்தானாம்
உற்ற காதல் வற்றிப்போன

தும் உண்மை தானாம்
புன் சிரிப்பும் கொள்ளாராம்
போனதுவாம் காதலின்பம்
நானுனைப் பெற்றதால்! —தேனமுதே பாலமுதே!

பொன்னல்ல வெள்ளியல்ல
பூவே உன் கன்னம்!
புதுப்புது முத்தம் இந்தாஇந்தா
வாங்கிக்கொள் இன்னம்!
இந்நிலத்தில் என்கண்ணே
பிள்ளை அமுதே!
எல்லாம் பெற் றேனடா
நானுனைப் பெற்றதால்! —தேனமுதே பாலமுதே!

## மகிழ்ச்சி வேண்டுமா?

வேண்டுமா? மகளே வேண்டுமா?
மகிழ்ச்சி வேண்டுமா? இன்பம் வேண்டுமா?

தூண்டா மணிவிளக்கே சொல்லுவேன் கேள் உனக்கே
துணைவனோடு நீதான் இணை பிரியாதிருக்க
—வேண்டுமா?

கறி சமைத்துச் சோறாக்கியுன்
கணவனுக்கிடும் முன்பு—நின்
கருத்தினிலே மகிழ்ச்சி தோன்றும்
அது தாண்டி அன்பு!
வெறுக்காமல் உன் அத்தான் உண்டு மகிழ்ந்தபின்பு
மெல்லியே உன் வாழ்க்கை இனிக்கும் செங்கரும்பு
—வேண்டுமா?

கண்ணாளன் வெளியிற் சென்று
திரும்புவதும் உண்டு—தன்
காரியம் கை கூடாமையால்
வருந்துவதும் உண்டு.
பண்ணொன்று பாடடி இன்பக் கற்கண்டு
பரிமாறு துயர்தீரும் அது நல்ல தொண்டு
—வேண்டுமா?

# மகளே வாழ்க!

### [அகவல்]

எனக்குப் பகைமேல் உனக்குக் காதலா?
என்று 'மன்றுளாடியார்' இயம்பவே,
புதுப்பூ முத்துநகை புகலுகின்றாள்:
"எதற்கு நீர் எதைப் புகல்கின்றீர் அப்பா
அவர் உமக்கே அன்றுபோல் இன்றும்
பகையாய் இருப்பதைப் பாவை நான் என்றும்
எதிர்ப்பதே இல்லை நீங்களும் என்போல்
மாதுநான் அவர் மேல் வைத்த காதலை
எதிர்க்கவேண்டாம்! ஏனெனில் அப்பா
எட்டிய தென்மனம் அந்த இளைஞரை
ஒட்டியது மீட்க ஒண்ணுமோ சொல்க!

ஒழுக்கம் உடையவர்; கல்வி யுடையவர்;
பழுத்த தமிழன் புடைய மேலோர்;
நான் அவராகி விட்டேன்; நான் என
வேறொன்றில்லை; அவரும் வீணாய்த்
தனித்தே இருந்து சாக எண்ணிலர்"
என்று சாற்றினாள். தந்தை இயம்புவான்:
"நமது சாதி வேறு; நல்லோய்
அவனது சாதிவேறென் றறிகிலாய்
என்று சினத்தைச் சொல்லில் ஏற்றினான்.
மங்கை இனிய வகையில் சொல்லுவாள்:
அப்பா உண்மையில் அவரும் என்போல்
மனிதச் சாதி, மந்தி அல்லர்!
காக்கை அல்லர், கரும்பாம் பல்லர்
என்று கூறத் தந்தை இயம்புவான்:
மனிதரில் சாதி இல்லையா மகளே?
என்று கேட்க—மங்கை இயம்புவாள்:
சாதி சற்றும் என் நினைவில் இல்லை,
மாதுநான் தமிழனின் மகளாத லாலே!
என்றாள் செந்தமிழ் இலக்கியப் பைங்கிளி;

தந்தை,
மக்கள் நிகர் எனும் தனது

சொந்த நிலையில் தோய்ந்தே
அந்த வண்ணமே வாழ்க என்றானே!

## எதிர்பார்க்கும் ஏந்திழை

சிரிப்பென்ன? களிப்பென்ன
சேயிழையே மடமானே—புகழ்
பரப்பும் சேரன்மகன்
வரக்கேட்ட சேதி தானே?

கரிப்பைச் சுவைத்த பிள்ளை
போலே இருந்ததுன்றன் கன்னம்—விண்
விரிக்கும் நிலவே என்று
விளம்ப முடியவில்லை இன்னம்.

தெருவை நோக்கி மீண்டும்
வருவை அறைக்கு மீண்டும் அன்னாய்—அவன்
உருவை மனத்திற் கண்டே
வருக வருக என்று சொன்னாய்.

இருவிழி அனுப்பினை
இரண்டரைக் கஸ்தூரம் நீயே—உடன்
வரவேற்பு வாழ்த்துரை
துவக்கம் செய்தனை தாயே!

அருகில் அவனும் இல்லை
அணைத்திடத் தாவினை தங்கமே—பின்
கருகினை விழி மலர்
காணுகிலான் அவன் எங்குமே.

சருகு சலசலக்கும்
தாவும் உனது மலர்க் காலம்மா!—அவன்
வருகை பாடின உன்
கைவளை சிலம்பவன் மேலம்மா!

## அன்பன் வந்தால் அப்படி!

'புளியிற் கோது நீக்' கெனப் புகல்வேன்
கிளியோடு பேசக் கிளம்புவாள் என் மகள்!
'வெந்தயம் புடை' எனில் வெடுக்கெனப் பகடைப்
பந்தயம் ஆடப் பறப்பாள் அப் பெண்!

விழுந் திருக்கும் மிளகையும் பொறுக்க
எழுந் திருக்க ஒப்பாதவள் அவள்!
அப்படிப் பட்டவள், கைப்படக் காதல்
அஞ்சல் அவளுக் கெழுதிய அன்பன்
என்னை மாமி என்று கூவி
வீட்டில் நுழைந்ததைக் கண்ட மெல்லி
அம்மியை அயலில் நகர்த்தி மிளகாய்
செம்மையில் அரைத்துச் சேர்த்துக் காய்கறி
திருத்திக் குழம்பு பச்சடி தென்முறைக்
கூட்டு முதலன குறைவற முடித்து
யானைத் தலையினும் பெரிதாய் இருந்த
பானையில் வெந்ததைப் பதமுற வடித்துக்
குருத்தரிந் துண்போன் கருத்தறிந்து முக்கனி
உரித்துத் தேன்வைத்து – உருக்குநெய் வைத்துச்
சமையல் ஆகட்டும் என்று சாற்றிய
என்னிடம் 'ஆயிற்று' என்றே இயம்பி,
எட்டி, அவன் முகம் நோக்கி இனிதே
முகிலைக் கண்ட தோகை போல்
தகதக என் றாடினள் அத் தையலே!

## தோப்புக்குள்ளே மாப்பிள்ளை

மாப்பிள்ளை வந்தான் – மாந்
தோப்பிலே நின்றான் – உன்
– மாப்பிள்ளை வந்தான்

கூப்பிடும்படி சொன்னான் உன்னை
கும்பிட்டானே அவனும் என்னை
– மாப்பிள்ளை வந்தான்

தாய் விழித்தாலும் – அவள்
வாய் மடித்தாலும் – வழி
நாய் குலைத்தாலும் – பொய்ப்
பேய் மறித்தாலும் – நீ
போய்வா அவன் சாகு முன்னே
பொய்யல்லவே என் பொன்னே
– மாப்பிள்ளை வந்தான்

இருட்டிருந்தாலும் — பாரை
உருட்டிருந்தாலும் — வழியில்
திருட்டிருந்தாலும் — வெளியில்
மருட்டிருந்தாலும் — நீ
உருக்குத் தங்கக் கட்டி அவன்
உயிருக்கு நீ வெல்லக் கட்டி
— மாப்பிள்ளை வந்தான்

மழை இருந்தாலும் — கிளை
தழை விழுந்தாலும் — அவன்
பிழை புரிந்தாலும் — புலி
வழியில் வந்தாலும் அடி
அழகான மயிலே உன்மேல்
ஆசை வைத்தான் உண்மையிலே
— மாப்பிள்ளை வந்தான்

மலை தடுத்தாலும் — அருவி
அலை தடுத்தாலும் — வழியின்
தொலை தடுத்தாலும் — மனத்தின்
நிலை தடுத்தாலும் — நீ
தலை காட்ட வேண்டும் அவன்
சாக்காட்டை நீக்க வேணடும்
— மாப்பிள்ளை வந்தான்

## அயல்மனை விரும்பியவன் பட்டபாடு

### (பதினான்குசீர் விருத்தம்)

கண்ணான மனைவியிடம் திரைப்படம் பார்த்திடக்
கருதினேன் என்று புளுகிக்
கந்தனோ ஒரு மங்கை வரச்சொன்ன நள்ளிருள்
வரும்வரை அழகிய திரு
வண்ணாமலை திருக்குளப்படி மலக்கழிவில்
அமிழ்ந்தே பதுங்கி, நேரம்
ஆனபின் விரைவினிற் போனதோர் போக்கிலே
ஆலமர வேர் தடுக்கப்
புண்ணான காலையும் எண்ணாமல் முள்ளொன்று
பொத்ததும் வாங்காமல் மேல்
புளியங்கி ளையொன்று துளையிட்ட நெற்றியிற்

போட்டகை போட்ட வண்ணம்
வண்ணான் பெருங்கழுதை மேல்விழுந் துதையுண்டு
தோட்ட வாயிற் சேர்ந்தனன்;
வள்ளென்ற தொருநாய், தன் உள்ளங் கலங்கினன்
வந்து வீழ்ந்தனன் வீட்டிலே!

## அவள் அடங்காச் சிரிப்பு

ஏரிக்கரை மீது தோழி – நான்
இருந்தேன் என் கால் இடரிற்று
நீரில் விழுந்திட்டேன் தோழி –அந்த
நிலையிலும் நீரினை நோக்கிப்
"பாரிலுன் சாதிதான் என்ன?" – என்று
பாவை நான் கேட்டிடல் உண்டா?
யாா சொன்ன சொல் இது என்றால் – என்னை
ஈன்றவர் சொன்னது தோழி!

'என்நிலை' என்பது கேட்பாய் – அதை
ஏரிக்கரை என்று சொன்னேன்
என்நிலை தப்பினேன் தோழி – ஓர்
இன்பத் தடந்தோளில் வீழ்ந்தேன்
அன்னதன் காரணம் கேட்பாய் – என்
அறிவின் திறம்பெற்ற காதல்!
மின்னல் வெளிச்சமும் வீச்சும் – வேறு
வேறென்று சொல்பவர் உண்டா?

மலர் என்பர் காதல் உளத்தை – அதன்
மணம் என்பர் அவன் தோளில் வீழ்தல்!
தலைநான்கு பெற்றவன் சொன்ன – நான்கு
சாதிக் கிங்கே என்ன வேலை?
உலகினில் சாதிகள் இல்லை – என்
உள்ளத்தில் வேற்றுமை இல்லை
கலகத்தைச் செய்கின்ற சாதி – என்
கைகளைப் பற்றி இழுப்பதும் உண்டோ?

சந்தனச் சோலை நான் தோழி – தென்றல்
தழுவத் தழுவினேன் தோழி
அந்தச் செயல் கேட்ட பெற்றோர் – அவன்
ஆர்? அவன் எச்சாதி? என்றார்

இந்தாடி அன்புள்ள தோழி – எனக்
கெப்போ தடங்கும் சிரிப்பு.
வந்தவன் ஆண்சாதி என்றால் – அவனை
மணந்தவள் பெண்சாதி தானே!

## பள்ளிக்குப் போகும் புள்ளிமான்

திருநாளில் என்னைத் திரும்பிப் பார்த்தாள் பின்
ஒருநாள் உரையாடத் தானும் உரையாடி
நான் நகைக்கத் தானும் நகைத்தாள் அதனாலே
வான நிலவும் மனமொத்துப் போனாள் என்
னின்பத்தை வாழ்வில் இணைஎன்றேன்! அன்னவள்

துன்பத்தை என் வாழ்வில் தூர்த்து விட்டாள் – இன்னும்
படித்துப் படிப்படியாய் முன்னேற்றத் திட்டம்
முடித்து நான் வாழுமுறைக்கு – முடிவொன்று
பண்ணுவ தென்றும் பகர்ந்திட்டாள்; இன்றதனை
எண்ணுவ தென்ப திழுக்கென்றாள் – கண்ணிலே

சற்றும் தொடர்பின்றித் தன்கருத்திற்கும் ஒரு
முற்றுப் புள்ளிக் குறியும் முன்வைத்தாள் – உற்றுக் கேள்
கண்ணப்பா நானவளைக் கட்டாவிட்டால் வாழ்வு
மண்ணப்பா என்றுரைத்தான் மன்னாதன் – "மன்னாதா.
பார்த்தாள் பகர்ந்திட்டாள் பற்காட்டினாள் என்று

கூத்தாடு கின்றாய் குரங்காகக் – கோத்த
பவழம் சிரிக்கும் பறிக்க முயன்றால்
அவிழ விடுமோ அதற்குள் – தவழ்சரடு?
பள்ளிக்குச் செல்லுமொரு செந்தமிழ்ப் பாக்கியத்தை
அள்ளிப் பெண்முற்போக்கில் ஆறாத – கொள்ளி வைக்க

எண்ணாதே எல்லாரும் அண்ணன்மார் என்றெண்ணும்
பெண்ணாத லாலும், இரும்பு மனம் – பண்பாடு
பெற்றுள்ள தாலும் அவள் பேசினாள் உன்னிடத்தில்
முற்றிய கல்வி முயற்சியே – நற்றவம்
என்று நினைக்கும் இளைய பெருமாட்டி!

கன்றாத் தமிழ்வாழைக் கன்றின்கீழ்க் – கன்றுதனை
அன்னை என்று போற்றப்பா என்றேன். அம் மன்னாதன்
பின் ஓடினான் அறிவு பெற்று!

## இன்றைக்கு ஒத்திகை

### (பஃறொடை வெண்பா)

மாணிக்கம் தன்வீட்டு மாடியின் மேற்குந்தி
தோணிக்காரத் தெருவின் தோற்றத்தைப் பார்த்திருந்தான்
பொன்னி தன் வீட்டுக் குறட்டினிற் பூத்தொடுப்பாள்
தன் விழியைத் தற்செயலாய் மாடியின்மேல் எறிந்தாள்!
பார்வை வலையில் ஒரு பச்சை மயில் பட்டதனால்
யார்வைத்த பூங்கொடியோ என்றிருந்தான் மாணிக்கம்.

பூத் தொடுக்கும் கைகள், புதுமை பார்க்கும் கண்கள்
நோக்குவதும் மீளுவதும் ஆக இருவரின்
உள்ளம் இரண்டும் ஒட்டிக் கிடக்கும் அங்கே!

"தள்ளுவளா? ஒப்புவளா? தையல்" எனும் ஐயத்தை
மாணிக்கம் எண்ணி மணிக்கணக் காய்த் துன்புற்றான்
ஆணிப் பொன் மேனியினாள் எண்ணமும் அப்படித்தான்!

அன்னைதான் பொன்னியினை உள்ளிருந்தே "உண்ணாமல்
என்ன செய்கின்றாய்" என்றேசினாள்; பொன்னி
இதோ வந்தேன் என்பாள் எழுந்திருக்க மாட்டாள்.

இதுவெல்லாம் காதினில் ஏறுமா? மாடியினைப்
பார்ப்பாள்; சிரிப்பாள்! அதே நேரம் பச்சையப்பன்
ஊர்ப்பேச்சுப் பேசுதற்கே உள்வந்து மாடியிலே
மாணிக்கம் செய்தி கண்டு மங்கையிடம் என்ன கண்டாய்?
காணிக்கை வைத்தாளா தன் நெஞ்சைக் காட்டென்றான்;

பெய்வளை தான் தன்மீது பெய்துள்ள அன்பினிலே
ஐயமில்லை என்றே அறிவிப்பான் மாணிக்கம்
துத்திப் பூக் கொண்டையும் நானும் நலம் துய்க்கின்ற
ஒத்திகை இன்றைக்கு; நாளைக்குக் கூத்து!

## பேசுதற்குத் தமிழின்றிக் காதலின்பம் செல்லுமோ?

நெஞ்சில் நிறைந்த காதலால் அந்த
நேரிழை, தன்னை எனக்களித் தாளே!
அஞ்சினாள் என்றும், தந்தையின் வறுமை
அகற்ற எண்ணி வேலனுக்கே தான்

தஞ்ச மாயினாள் என்றும் நீ சொல்கின்றாய்
சாவுக்கும் எனக்குந்தான் திருமணம் போலும்!
வஞ்சிக் கொடி போல்வாள் வஞ்சியா அன்றி
வஞ்சிப்பாள் வஞ்சியா ஐயுற வைத்தனள்.

கூடு சாத்தி யிருக்கையில் உள் உள்ள
கொஞ்சு கிள்ளை இல்லை என்கின்றாளா?
வீடுசாத்தி யிருக்கையில் உள்உள்
மேலோன் இல்லை என்கின்றாளா அவள்?
தேடி என்னைத் தன்னெஞ்சில் வைத்தவள்
திறந்து விட்டாள் எனில் இறந்து பட்டிருப்பாளே
ஈடிலாக் கற்பினாள் என்று நான் நம்பினேன்
இல்லை என்றால் தமிழுக்கே நாணமாம்!

தன்னுளத்தில் ஒருவனுக் கிடந்தந்து
மற்றொ ருத்தனைத் தாவுவ தென்பது
தென்னவர் கற்பன்று! கற்பை இழந்தவள்
தீந்தமிழ் நாட்டினள் என்றும் எண்ணப்படாள்
புன்னை கொய்து கொண்டிருந்தாள் எனைக்கண்டு
புன்னகைப்பினால் போட்டுக் கொலை செய்தாள்
பின்னொரு நாளிலே தன்வீட்டுத் தோட்டத்தில்
பொத்த லாம்படி கன்னத்தைக் கொந்தினாள்.

தமிழினும் இனியதோர் மொழிதேடித் திரிவேனைத்
தடுத்தாட் கொண்ட பெருமாட்டி தாள்தன்னை
அமிழ்தென்று காட்டி உண்ணவும் நீட்டினாள்
அவள் பிறனுக்கா அளித்தாள் எச்சிற்பண்டத்தை?
உமிழாதா வையகம்? கதிர்மதி ஒழிந்தாலும்
ஒழியாப் புகழுலகில் கால்வைக்க ஒண்ணாதே
அமிழ்ந்ததா என் ஆசை அவள் வஞ்சக் கடலினில்
அடைந்திட்டதா மாசும் தமிழ் ஒழுக்கந்தன்னில்?

வந்த ஆளிடம் இவ்வாறு கூறித்தன்
வயிற்றை நோக்கினான்; கத்தியைத் தூக்கினான்
கொந்து முன்னர்க் கத்தி தூக்கியகை
குறுக்கில் மறிக்கப்பட்டது! குரல் ஒன்றும்
"அந்த மங்கைதான் நான்" என் றெழுந்ததே!
அன்பு மங்கையைக் காதலன் கண்ணுற்றான்

இந்தி யாவில் மறைந்திட்ட தமிழகம்
எதிரில் வந்தது போல் மகிழ்ந்தான் அவன்!

நீ எனக்குத் தானேடி கிள்ளையே
நின்றவாறு நெஞ்சைக் கலக்கினாய்
'நேயத் தமிழே என் தோளில் சாய்' என்று
நீட்டுகின்ற கரும்பான கைகளைத்
தூய நங்கை விலக்கினாள் சொல்லுவாள்:
தொன்மையும் மேன்மையும் உடையவள் ஆந்தமிழ்த்
தாயிருந்தனள்; தமிழகக் காதலர்
தமிழிற் பேசித் தமிழின்பம் உற்றனர்.

நாமும் இன்று தமிழ்பேசி இன்ப
நல்ல வாழ்வின் வழிநோக்கி நடக்கின்றோம்
தீமனத்து வடக்கர்நம் தமிழினைத்
தின் றொழிக்க ஒவ்வொரு பல்லையும்
காய மாட்டித் துறட்டுக் கோலால் நீட்டிக்
கால் மாட்டில் நிற்கின்றார்! பேசுதற்கே
தேமதுரத் தமிழின்றிக் காதல் இன்பம்
செல்லுமோ? சொல்லுமோ தமிழ வாழ்வு?

(வேறு)

உரைகேட்டான் உரைக்கின்றான் தமிழவேங்கை:
ஒருமொழி வைத் துலகாண்ட தமிழனைப்போல்
ஒரு நாவலந் தீவை வென்றேனுந் தன்
ஒரு மொழி வைத்தாட்சி செயக்கனவு கண்ட
பெரு நெருப்பைத் தில்லி எனும் சிறுதுரும்பா
நெருங்கும்? நீ துவக்கம் செய் என்று சொன்னான்:
நெருங்கினார்! குளிரருவித் திருக்குற்றாலம்!

## இன்பம்

[அறுசீர் விருத்தம்]

1

சிந்தொன்று வண்டு பாடும்
சோலையில், செங்கை யிற்பூப்
பந்தொன்றை எறிந்தாள் அன்னம்
பார் என்றாள்! பறந்த தென்றாள்!

பொந்தொன்றில் சோலைக் கப்பால்
போயிற்றே என்று நைந்தார்
பந்தில்லை என்றார் கிள்ளை
பார் என்றாள்! பறந்த தென்றாள்!

அன்னத்தைப் பழித்தாள் கிள்ளை
ஆதலால் அழுத அன்னம்
முன்அதைக் கொணர்வேன் என்று
முடுகொடு வெளியிற் சென்றாள்
தென்னந் தோப் பொன்று கண்டாள்
சிறு பந்தைத் தேடும் போதில்
புன்னையின் மறைவி னின்று
பொலிந்தன இரண்டு கண்கள்!

குனிந்தனள் குனிந்த வன்னம்
கூனிய முதுகின் மீது
புனைந்தனள் இரு மலர்க்கை!
பொன்முகம் கவலை நீரால்
நனைந்தனள். "என்ன தேடி
நலிகின்றாய்?" என்று வேலன்,
முனம் வந்து கேட்டான்; அன்னம்
முகத்தினில் நாணம் பூத்தாள்.

சோலையில் அடித்த பந்து
தொலைவிலே இங்கு வீழ்ந்த
தாலதைத் தேடுகின்றேன்
அயலவர்க் கிவ்வி டத்தில்
வேலை ஏதென்று வேலன்
விலாப்புறம் வேல் பதித்தாள்!
நூலிடை முறியும் என்று
நுவல்வதும் பிழையா என்றான்.

வேலனும் பந்து தேட
அன்னமும் முயலு கின்றாள்
ஆலின்வேர்ப் பொந்து கண்டார்
எதிரெதிர் அன்னம் வேலன்
ஏலவே நுழைத்த கைகள்
ஒன்றில் ஒன்றிழைந்த தாலே

மூலத்தை மறந்தா ராகி
நகைமுத்தை முடியவிழ்த்தார்.

மேழியை உழவர் தூக்கி
வீட்டுக்குத் திரும்பும் நேரம்!
கோழிகள் சிறகு கூம்பி
அடைந்தன கூட்டுக் குள்ளே!
தோழிமார் பந்து கேட்பார்
தொலைந்தது தெரிந்தால் என்மேல்
ஏழிசை கூட்டிக் கேலிப்
பண்பாடி இழிவு செய்வார்.

இதுகேட்ட வேலன் அன்பால்
இடதுகைப் புறத்தில் அன்னம்
புதைந்திட அணைத்த வண்ணம்
போகலாம் என்று சொன்னான்.
எதற்கென்று மங்கை கேட்டாள்
இதற்கல்ல வீட்டி லுள்ள
புதுப்பந்து தரத்தான் என்றான்
அன்றில்கள் போக லானார்.

## 2

அன்னத்தைத் தேடும் கண்கள்
அழுதன கிள்ளை என்பாள்
என்கேலி அன்னந் தன்னை
இன்னலில் தோய்த்த தென்றாள்
முன்னாக அன்னந் தன்னைத்
தேடநாம் முயல வேண்டும்
என்றனள் வஞ்சி, ஆங்கே
எழுந்தனர் பெண்கள் யாரும்.

தோழிமார் வருகின் றார்கள்
தொலைவினில் என்றாள் அன்னம்
வாழிய அன்பே என்று
வேலனும் வாழ்த்திச் சென்றான்.
நாழிகை ஆயிற் றந்தோ
நான் செய்த தொன்றுமில்லை.

பாழ்மகன் செய்த வேலை
பந்திதோ என்றாள் அன்னம்.

பொழிலிடை ஒருபாற் குந்திப்
பூப்பந்தை ஆராய்ந் தார்கள்
எழிலான பந்தே ஆனால்
இப்பந்து நம்பந் தன்றே
விழிக்கின்றாய் அன்னம் என்ன
விளைந்தது சொல்க என்று
கழைமொழி கேட்டாள் அன்னம்
கண்ணீராற் சொல்ல லுற்றாள்.

தென்னந்தோப் புக்குச் சென்று
பந்தினைத் தேடும் போதே
புன்னைக்குப் பின்னி ருந்து
பொதுக்கென எதிரில் வந்தே
இன்னந்தான் தேடு கின்றாய்
யான் தேடுகின்றேன் என்று
கன்னந்தான் செய்தான் அந்தக்
கள்வன் என் கையைத் தொட்டான்.

புறங்கையை விரலால் தொட்டான்
அதிலொரு புதுமை கேளீர்:
திறந்தது நெஞ்சம்! உள்ளே
சென்றனன் அந்தக் கள்வன்
மறந்திட்டேன் உலகை அந்த
மறக்கள்வன் இடு மருந்தால்
பறந்தது நாணம்! பட்ட
பாட்டையார் அறிவர் என்றாள்.

பூப்பந்து கிடைக்க வில்லை
போது போயிற்றே! அங்கே
கூப்பிடு வார்கள் தோழ்மைக்
குயில்களும் என்று சொன்னேன்.
காப்பாக என் இடுப்பைக்
கைப்புறம் இறுக்கி ஆலை
வாய்ப்பிலே கரும்பஞ் சக்கை
ஆக்கினான் வஞ்ச நெஞ்சன்.

அணைத்திட்ட அணைப்பில் என்னை
வீட்டுக்கே அழைத்துச் சென்றான்
முணுமுணுத்தேன் அப்போதென்
முகத்தொடு முகத்தைச் சேர்த்தான்
அணிமலர்ப் பந்து தந்தான்
அதே இது என்றாள் அன்னம்
மணப்பந்தல் இடுதல் தான்நம்
மறுவேலை என்றாள் கிள்ளை.

நாளையே பந்து தேட
நாமெல்லாம் போக வேண்டும்
காளையை அங்குக் கண்டால்
கடுஞ்சொல்லை உகுக்க வேண்டும்
வேளையோ டேகுவோம் நாம்
வீட்டுக்கே என்றாள் முல்லை.
நாளைக்குப் பந்து தேட
நான் போதும் என்றாள் அன்னம்.

## பச்சைக்கிளி

### [பஃறொடை வெண்பா]

காட்டுக் கதிகாரி கண்ணையன், காலையிலே
வீட்டுக்குப் போக மிதிவண்டி ஏறினான்.

* * *

ஆலஞ்சாலை தாண்டி அல்லிக்குளம் தாண்டி
வேலங்கா டொன்றும் விலக்கிச் செலும்போது
செந்தாழை வேலிக்குத் தென்னண்டை ஓர்புலியை

அந்தோ என்றான் கண்டே! அங்கோர் இளவஞ்சி
பாவாடை கட்டிப் பலாவின்கீழ் மென்பட்டுப்
பூவாடை போர்த்துப் புனலொழுகு கண்மூடி
நீளக் கிடந்தாள்! நிலா முகத்தைத் தின்னாமல்
வேளைப் புதர்ஓரம் வெள்ளாட்டைத் தின்னுதற்குப்

போன புலிகண்ட கண்ணையன் போபோ என்
மானை விடுத்தாயே என்று மனந்தேறி
நின்றான்! மிதிவண்டி என் செய்வான்? நீண்டபனை
ஒன்றின் மேல் சார்த்தி உணர்ச்சிப் பெருக்கால்
வழியை மறிக்கும் மலர் ஓடை தாண்ட

விழியூன்றி நீரில் விரல் பட்ட நேரத்தில்
"நில்லப்பா" என்ற சொல் கேட்டான் நிலைமாறிச்
சொல்வந்த திக்கைச் சுவைத்தான் இருவிழியால்!
நீண்ட சடைமுடியை, நெற்றித் திருநீற்றை
ஆண்டியைக் கண்டான், அட இழவே என்றெண்ணி

ஓடையின் அப்புறத்தில் ஓவியத்தைத் தான் காட்டிக்
காடு விழுங்கு முன்னே காப்பாற்ற வேண்டு மென்றான்.

* * *

ஆண்டி சிரித்துரைப்பான்: அப்பனே, காப்பவன்
ஈண்டு நீதானா! – இது கேட்ட கண்ணையன்
உம்மால் முடிந்தால் ஒரு தொல்லை இல்லை என்றான்.

என்னால் முடிவதென்றால் என்னப்பன் ஏன் என்
றுரைத்தான் துறவி! உமக்கப்பன் இங்கே
வரத்தகுந்த போது வரட்டும், அதற்குள்ளே
ஓநாய் கடித்துண்ணும் ஓநாய்க்கு மீட்சிதர
ஏனோ தயக்கம்? எனக்கேட்டான் கண்ணையன்.

வேண்டாம் குழந்தாய் கேள்! மெய்யான பெண்ணல்ல
தூண்டிலே! நீயோர் துடுக்குமீன். அண்டாதே!
பற்றுள்ள கண்ணுக்குப் பச்சைக்கிளி அவள்
பற்றற்றுக் காண்பாய் புரளும் மலைப்பாம்பை
என்றான் துறவி! அதே நேரம் ஏந்திழையும்
நன்று விழி மலர்ந்தாள் நாற்புறமும் நோக்கினாள்,
ஆண்டிக்குக் கும்பிட்டாள்! ஆளனைக் கை ஏந்தினாள்!

கண்ணையன் விண்ணிற் பறந்தானா! காரோடைத்
தெண்ணீரை நீந்தித் தான் சென்றானா யார் கண்டார்?
பெண்ணருகில் நின்று, பிறைநுதலே என் என்றான்
"அன்னை இல்லை தந்தை இல்லை அத்தையிடம் நான்
வளர்ந்தேன்

என்னை என் அத்தை மகன் ஏற்றுக் கொள் என்றான்
ஒழுக்கம் இலா இடத்தை உள்ளம் தொடுமா?
வழிக்கு வரமாட்டேன் என்பதுணர்ந்தான்
கசக்கிப் பிழிந்துண்ணக் காத்திருந்தான் காட்டின்

பசிக்கிரை ஆவதுவும் பாக்கியமென் றிங் குற்றேன்"
என்றாள். அதே நேரம் நீந்தி எதிர் வந்து

நின்றான் துறவி! நிலை ஆய்ந்தாள் நேரிழையாள்
என்ன குறை உனக்குப் பெண்ணே எனக் கேட்டான்
பின்னையும் ஆண்டியவன் பேசத் தொடங்குமுன்னே

கண்ணையன் தோள்புறத்தில் கானமயில் போய் மறைந்தாள்
திண்ணமிவள் என்னைத் தெரிந்து கொண்டாள்
என்றெண்ணிக்
கத்தி யெடுத்துக் கடி முனையை நேர் நிறுத்தி
ஒத்துக் கொள் என்னை! மறுத்தால் ஒழிந்து போ
என்று துறவி சொல்ல – என்ன இது என்ன இது?

நின்ற துறவி உன் நேர் மாமனா என்று
கண்ணையன் கேட்டான். கன்னல் பதைத் துரைத்தாள்:
பெண்ணாசை தீர்ந்த பெருமான் இவன் அல்லன்
அத்தை மகன்தான். அறங்காணாத் தீயன் அவன்.
கத்தியால் குத்தட்டும், கண்டதுண்ட மாக்கட்டும்.

கண்டிருங்கள்! ஆனால் இக்கைகாரன் என் உடலைக்
கொண்டு போகாமல் குழிபறித்து மூடிடுங்கள்.
என்றாள் – எதிர் வந்தாள்; எடுத்துக்கொள் கத்தி என்றாள்.

நின்றாள் இடியைச் சிரிப்பாக்கி நேர் இறைத்தாள்!
கண்ணையன், அத்தீயோன் கத்தியைக் கைப்பற்றிப்
பெண்மணியைக் கொல்லுமுன் பேதாய் எனைக் கொல்க
என்றான். துறவி தான் ஏந்திய கத்தியைத்
தன் மார்பிற் பாய்ச்சிக் குருதி தனில் மிதந்தான்.

கண்ணொப்பாள் கண்ணும் கருத்தும் புரிந்ததென்ன?
விண்ணும் விரிபுனலும் வேடிக்கை பார்த்தனவாம.
செத்தான் மேல் கண்ணீர் செலுத்தி உயிர்காத்த
அத்தான் மேல் வைத்தாள் மெய்யன்பு.

## பால்காரன் பால் அன்பு

கண்ணன் பால் மிக அன்பால் வேலைக்காரி
கையிற்பால் செம்போடு தெருவிற் சென்றாள்
திண்ணன், பால் வாங்கென்றான் கரியனும்பால்,
தீங்கற்ற பாலே என்பால் வாங்கென்றான்
திண்ணன்பால் கரியன்பால் வெறுப்பால் பெண்பால்
சீ என்பால் நில்லாதீர் போவீர் அப்பால்

கண்ணன்பால் நான்கொண்ட களிப்பால் அன்னோன்
கலப்பாலே இனிப்பதென்று கசப்பால் சொன்னாள்!

## நிலவு சிரித்தது

வருவதாய்ச் சொன்னவர் வந்திருப்பார் என்று
தெருக்கதவு திறந்து பார்த்தேன்; தென்னையை
அத்தான் என்றழைத் திட்டேன்; அதற்கு
முத்தொளி சிதறிட முழுநிலா என்மேல்
கேலிச் சிரிப்பை வீசி
நாலு பேர் அறியச் செய்தது நங்கையே!

## காதல் வலியது போலும்!

அன்பே உடலுயிர் ஆக்கும் போலும்!
அன்பே காதல் ஆகும் போலும்!
கழறும் அக் காதல் வலியது போலும்!
மதின்மேல் இருந்த வரிஅணிற் காதலி
கிரீச் சென்று தன்னுளம் கிளத்திய அளவில்
வான் கிளையினின்று மண்ணில் வீழ்ந்த
சிற்றணிற் காதலன் செத் தொழியாமல்
வில் லெறி அம்பென மரத்தில் ஏற
இரண்டும் காதற் படகில் ஏறின
இன்பக் கடலின் அக்கறை எய்தின
அதோ காதலி கைக் குழந்தை
மதியை வா என்றழைத்தது பாடியே!

# நாடு

## தமிழகம்

மொழியும் நாடும்:

ஆதிமனிதன் தமிழன்தான்
அவன் மொழிந்ததும் செந்தமிழ்த்தேன்
மூதறிஞர் ஒழுக்க நெறிகள்
முதலிற் கண்டதும் தமிழகந்தான்!
காதல் வாழ்வும் புகழ் வாழ்வும்
காட்டியதும் தமிழ்நான் மறைதான்

ஓதும் அந்தத் தமிழ்நான் மறை
உலகம் போற்றும் முத்தமிழ்தான்!

**நெய்தல்:**

நீளக்கடலும் முத்துப் பெட்டி;
நெய்தல் நிலத்துப் பெண்மான் குட்டி,
ஆளனுக்கே வரிந்து கட்டி
அளிக்கும் உதடு சர்க்கரைக்கட்டி

**குறிஞ்சி:**

வேளை பார்க்கும் சிச்சிலிக் குருவி
மீனை வீசும் மலைஅருவி
காளையின்மேல் கண்வாள் உருவிக்
கதை முடித்தாள் அவள் மருவி.

**முல்லை:**

காட்டு மயில் கூட்டம் கூடிக்
களித்திருப்பார் குரவை ஆடிக்
கூட்டமுதப் பாட்டும் பாடிக்
குழலூதிடும் ஆயர்பாடி.

**மருதம்:**

பரத்தையிடம் சென்று வந்து
பஞ்சமான நிலை பகர்ந்து
சிரித்த கணவன் மேல்சினந்து
செங்கை தொட்டாள் பின்னுவந்து.

பாடிவரும் ஆறுகள் பல;
பரந்துயர்ந்த மலைகளும் பல;
கூடி நடக்கும் உழவு மாடு
கொடுக்கும் செல்வம் மிகப் பலபல;

ஓடை என்பது மலர்ச்சோலை
ஒழுகவிட்டது தேனாலே!
அறங்கிடந்து பண்பாடும்
அன்பிருந்து சதிர் ஆடும்
திறங்கிடந்த நாகரிகம்
செய்து தந்தது தமிழ்நாடு!

மறங்கிடந்த தோள்வீரர்
மகளிர்தரும் பெருங்கற்புச்

சிறந்திருக்கும் தமிழ்நாடு!
செந்தமிழர் தாய்நாடு!

## எழில்மிகு தமிழ்நாடு

எல்லாம் இருந்த தமிழ்நாடு
படிப்பில்லாமல்
பொல்லாங் கடைந்தது பிற்பாடு.

சொல்லும் இயற்கை தரும் செல்வம்
இல்லை என்னாமல்
நெல்லும் சுவை முக்கனி
நெய் பால் கரும்பு வெல்லம் — எல்லாம் இருந்த...

தென்றல் சிலிர்க்க வரும் சோலை
தனிற்குயிலும்
தேன்சிட்டும் பாடும் அங்கு மாலை
மணக்கும் மலர்
ஒன்றல்ல மூலைக்கு மூலை
தெருக்கள் தொறும்
ஓரத்தில் நிழல் தரும் சாலை
இடையிடையே
தென்னை மாதுளைகள் வாய்ப்பு
வாழை மரத்தில்
தேனாகத் தொங்கும் பழச்சீப்பு
விளா இலந்தை
எந்நாளுமே கொடுக்கும் காய்ப்பு
குலுங்கும் எலி
மிச்சை நாவல் எங்கும் தோப்பு
உலகினிலே
எங்கும் இல்லை இப்படி
என்பது கவிஞர் தீர்ப்பு! — எல்லாம் இருந்த...

## விடுதலை ஆசை

**(தனித்தமிழ் வண்ணம்)**

தனதன தான தனதன தான
தனதன தான தன தான்ா

கருவிழி ஓடி உலகொடு பேசி
எனதிட மீளும் அழகோனே
கழைநிகர் காதல் உழவினில் ஆன
கதிர்மணி யேஎன் இளையோய் நீ!

பெரியவ னாகி எளியவர் வாழ்வு
பெருகிடு மாறு புரியாயோ
பிறர்நலம் நாடி ஒழுகினை யாக
இருசெவி வீழ மகிழேனோ!

தெரிவன யாவும் உயர்தமி ழாக
வருவது கோரி உழையாயோ
செறிதமிழ் நாடு திகழ்வது பாரீர்
என எனை நீயும் அழையாயோ!

ஒரு தமி ழேந முயிரென யாரும்
உணர்வுறு மாறு புரியாயோ
உயர்தமிழ் நாடு விடுதலை வாழ்வு
பெறஉன தாசை பெருகாதோ!

## நாட்டியல் நாட்டுவோம்!

தென்பால் குமரி வடபால் இமயம்
கிழக்கிலும் மேற்கிலும் கடலாய்க் கிடந்த
பெருநிலத்தின் பெயரென்ன அத்தான்?
நாவலந் தீவென நவிலுவார் கண்ணே!

தீவின் நடுவில் நாவல் மரங்கள்
இருந்ததால் அப்பெயர் இட்டனர் முன்னோர்.
செவ்விதழ் மாணிக்கம் சிந்தும் செல்வியே
எவ்வினத் தார்க்கும் இப்பெயர் இனிக்கும்
நாவல் நறுங்கனி யாருக்குக் கசக்கும்?

பழைய நம் தீவில் மொழி, இனம்பல உள.
மொழியினின்று கல்வி முளைத்தது
கல்வி இந்நாட்டில் கணக்காயர்களைக்
கலைஞரை, கவிஞரைத், தலைவரைப், புலவரை
விஞ்ஞானிகளை விளைத்தது – ஆயினும்
கற்றவர், கல்லாரிடத்தும் கல்வியைப்
பரப்ப முயலவில்லை பாழிருள்

விட்டு மீண்டவர் பிறரை மீட்கிலர்.
கற்றவர் சிலர், கல்லாதவர் பலர்,
என்னும் இழிவு நாட்டில் இருக்கலாம்
என்பது கற்றவர் எண்ணம் போலும்
எல்லாரும் இந்த நாட்டில் கற்றவர்
எனும் நிலை இயற்றுதல் கற்றவர் பொறுப்பே!

என்ன அத்தான், நீங்கள் இப்படிக்
கற்றாரை எல்லாம் கடிந்து கொள்கின்றீர்?
கற்றாரைத் திட்டவில்லை, கல்வி
அற்றார்க்கு இரக்கம் காட்டினேன் அன்பே!

கல்வி இருட்டிற்குக் கலங்கரை விளக்கு,
யாவர்க்கும் வாக்குரிமை இருக்குமிந் நாட்டில்
யாவர்க்கும் கல்வி இருக்கவேண்டும்.
கண்ணிலார் எண்ணிலார் என்பது கண்டும்
கண்ணுளார் கண்ணிலார் போல இருப்பதா?
கல்லா வறியர்க்குக் கைப்பொருள் கல்வியே!
இல்லை என்பது கல்வி இல்லாமையே!
உடையவர் என்பவர் கல்வி உடையரே!

நாட்டின் மக்கள் நாட்டின் உறுப்பினர்
உறுப்பினர் நிறுவனம் உடையவர் ஆவார்
சிலர் படித்தவர் பலர் படியாதவர்
என்ற வேற்றுமை ஏன் வரவேண்டும்?

ஆட்சி வேலை அதிக மிருக்கையில்
நாட்டிற் கட்டாயக் கல்வி, நாளைக்கு
ஆகட்டும் என்பவர் மக்கள் இன்று
சாகட்டும் என்று சாற்றுகின் றவரே!
எந்நாளுமே நான் எண்ணுவது இதுதான்:
இந்த நாட்டில் யாவரும் படித்தவர்
என்னும் நன்னிலை ஏற்படுவ தெந்நாள்?

நாவலந் தீவில் மதங்கள் நனிபல!
கடவுளே வந்து மதம்பல கழறினார்
கடவுளின் தூதரும் கழறினார் மதங்கள்
கடவுளிற் கொஞ்சம் மனிதரிற் கொஞ்சமும்
கலந்த ஒருவரும் ஒரு மதம் கழறினார்

கடவுளை நேரிற் கண்டவர் சொன்னார்
கேள்விப் பட்டவரும் கிளத்தினார்.

ஒருவர் "கடவுள் ஒருவர்" என்பார்,
ஒருவர் 'கடவுள் மூவர்' என்பார்,
ஒருவர் 'கடவுள் இல்லை' யென்றுரைப்பார்.
நாம் பெற்ற பேறு யார் பெற்றார்கள்
ஒரு மதம் தோன்றி அதன்கிளை ஒன்பதாய்த்
திருவருள் புரிந்த பெரியோரும் பலர்;
மதங்களைப் பலவாய் வகுக்க, அவற்றில்
விதம்பல சேர்த்த வித்தக ரும்பலர்.

நாவலந் தீவில் மதங்கள் அனைத்தும்
இருக்கலாம் இன்னும் பெருக்கலாம் எனினும்
மதங்கள் வேறு மக்கள் வேறு
மதங்கள் மக்களின் மாற்றுச் சட்டைகள்
இந்நில மக்கள் அவ்வெழிற் சட்டையின்
உட்புறத் துள்ள மனிதரைக் காண்க.
அந்த மனிதர் இந்தப் பெருநிலம்
ஈன்ற பிள்ளைகள் என்னும் எண்ணம்
அறிந்து பயனிலை உணர்ந்தால் ஒற்றுமை
நிலைபெறும்; கலகம் அறவே நீங்கும்.
பன்மதம் சேர்ந்த பல்கோடி மக்களும்
நாங்கள் ஒன்றுபட்டோம் என்று நவின்றால்
மதங்களின் தலைவர் விரைந்து வந்து
பிரிந் திருங்கள் என்றா பிதற்றுவர்?
அவர்கள் அருள் உளம் கொண்டவர் அல்லரோ?

நாட்டியல் என்னும் நல்ல தங்கத்தேர்
நன்னிலை நண்ண வேண்டாமா? சொல்,
எல்லாரும் இந்நாட்டு மக்கள் என்றுணர்ந்தால்
செல்லரும் நிலைக்குச் செல்லல் இலேசு.

பல இனம் பலமொழி பற்றி ஒரு சில:—
பழம்பெரு நிலத்தில் பலமொழி பல இனம்
இருப்பதால், இஃதொரு பல்கலைக் கழகம்!
ஆனால், தேனாய்ப் பேசும் திருவே,
ஓரினத்துக் குள்ள மொழியைப்
பல இனத் துள்ளும் பரப்ப முயல்வதால்

நாட்டில் ஒற்றுமை நண்ணும் என்ற
கோட்பாடு சரி என்று கொள்வதற் கில்லை.

அவ்வவ் வினத்தின் அவ்வம் மொழிகளைச்
செம்மை செய்து செழுமை யாக்கி
இனத்து மக்கள் எவர்க்கும் பரப்பும்
ஒன்றினால் நாட்டில் ஒற்றுமை ஏற்படும்
என்பதென் எண்ணம் கன்னற் சாறே!

இனத்தைச் செய்தது மொழிதான், இனத்தின்
மனத்தைச் செய்தது மொழிதான், மனத்தை
மொழிப்பற்றினின்று பிரிப்பது முயற்கொம்பு.
அன்னை மொழியையும் படி அதனோடு நான்
சொன்ன மொழியையும் படி எனும் சொற்கள்
கசக்குமே அலாது மக்கட்கு இனிக்குமோ?

ஆங்கிலன் தனக்குள அடிமையை நோக்கி
ஆங்கிலம் படித்தால் அலுவல் கொடுப்பேன்
என்றான். நாட்டில் இலக்குமண சாமிகள்
தமிழ் மறந்து ஆங்கிலம் சார்ந்து தமிழைக்
காட்டிக் கொடுக்கவும் தலைப்பட் டார்கள்.

இந்த நிலத்தில் அடிமை இல்லை
ஆதலால் துரைகளும் இல்லை அல்லவா?

கைக்குறிகாரர் கணக்கிலர் வாழும்
இந்த நிலையில் அயல்மொழி ஏற்றல்
எவ்வாறு இயலும்? அமைதி என்னாகும்?

நானிங்கு நவின்ற திருத்தம் வைத்துப்
பாரடி நாவலந் தீவின் பரப்பை நீ
பிரிந்த பகுதி பிணைந்தது பாரடி
பிரிய நினைத்தவர் பிழை உணர்கின்றனர்
பெருநிலத்தில் ஒரே கொடி பறந்தது!

நாவலந் தீவினர் எல்லாரும் நல்லவர்
எல்லாரும் வீரர் எல்லாரும் கவிஞர்

இமையச் சாரலில் ஒருவன் இருமினான்
குமரி வாழ்வான் மருந்து கொண் டோடினான்

ஒருவர்க்கு வந்தது அனைவர்க்கும் என்ற
மனப்பாங்கு வளர்ந்தது வேண்டிய மட்டும்!

இமயம் மீட்கப் பட்டதிதோ பார்
சீனன் செந்நீர் கண்ணீராக
எங்கோ ஓட்டம் பிடிக்கின் றானடி!

விளைச்சற் குவியல் விண்ணை முட்டியது
தொழில் நலம் கண்டோம் – தேவை
முழுமை எய்திற்று – வாழ்க
அழகிய தாய்நிலம் அன்பில் துவைந்தே!

## வள்ளுவர் வழி

வாழ வழி வகுத்தார் வள்ளுவனார் தமிழ்
மறை புகன்றார் நல்ல
முறை நவின்றார்
நம்மனோர்
வாழ வழி வகுத்தார் வள்ளுவனார்.

வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் என்றார்.
– வாழ வழி வகுத்தார் வள்ளுவனார்.

ஏழைக் கிரங்காததும்
சரியா? நாட்டின்
எளிமை கண்டு கூத்தாட
ஒரு நரியா?
இன்சொலால் ஈத்தளிக்க
வல்லாற்குத் தன்சொலால்
தான் கண்டனைத் திவ்வுல
கென்றார் நம்மனோர்
– வாழ வழி வகுத்தார் வள்ளுவனார்.

## துன்ப உலகிலும் தொண்டு!

எடுப்பு

துன்ப உலகம் என்று புத்தர்பி ரானும்
சொன்னதில் பொய்யில்லை ஒருதுளி யேனும்!

### துணை எடுப்பு

அன்பினால் செய்யும் மக்கள் தொண்டு
வன்பினை நீக்க வழிசெய்தல் உண்டு.

### அடிகள்

நல்லவரை மாய்க்கக் கெட்டவர் இருப்பார்
நாடாண்ட மன்னரைக் காடாளப் பிரிப்பார்
செல்வக் குழந்தைகளின் கழுத்தையும் முறிப்பார்
செந்தமிழ்த் தாய்நலம் செல்லாய் அரிப்பார்!

தமிழர்க்குத் தலைவர் தமிழையே கொல்வார்
தடுத்தாலும் தம்வழி சரி என்று சொல்வார்
உமக்காக உழைக்கின்றோம் என்றும் சொல்வார்
ஊரைஏ மாற்றுவதில் தாமே வெல்வார்!

தூங்கித் தூங்கிமக்கள் தீயரை வளர்ப்பார்
தூங்காம லேவந்த தீமையில் குளிப்பார்
ஆங்கிலம் இந்தியை அழைத்தே களிப்பார்
அவர் சொல்லை ஒப்பியே பிறகுதத் தளிப்பார்.

வாணிகம் என்பது வஞ்சகக் கிடங்கு
வளர்ந்த அலுவல் கைக்கூலி அரங்கு
நாணற்க அஞ்சற்க ஊதுக சங்கு
நமக்குண்டு நாட்டுக்குத் தொண்டிலே பங்கு!

## தோழனே! உன்னிடம் சொல்வேன்!

அமிழ்தென்று சொன்னால் இனிமையைக் குறிக்கும்
அந்த இனிமை செந்தேன், கரும்பு
முப்பழம் முதலிய இயற்கையில் தோன்றும்.
ஆயினும், ஆடவர் உழுது வித்தி
விளைத்து மலைபோல் குவித்த நெல்லைத்
தூய மாதர் தமிழ்ப்பண் சொல்லிக்
குத்திய அரிசி பாலிற் குழையப்
புத்துருக்கு நெய்யும் வெல்லமும் புணர
ஏலமும் பருப்பும் ஞாலம் மணக்கத்
தோலுரித் திட்ட பழத்தொடும் அன்பொடும்
இலையி லிட்ட பொங்கலில் இனிமை
அலையடிக்கும்! அதனைத் தமிழர்

அமிழ்தென் றுண்பர் தமிழென்று பாடுவர்!
அதென்ன மோஎன் அகத்தில்இந் நாளில்
புதிய மகிழ்ச்சி கண்டேன்; அதுபோல்
உனக்கும் உண்டே அன்புறு தமிழனே!
என்னிடம் தீய நினைவுகள் இல்லை
உன்னையும் அவை ஒட்ட வில்லை,
தன்னலமில்லை, உனக்கும் அஃதில்லை.
உறவினர் தமிழர் உரக்கப் பாடினார்.
மகிழ்ச்சியால் ஆடினார். நாமும் அப்படி!
என்றன் நெஞ்சை இதோ பார் தோழனே!
ஒன்றை உன்னிடம் சொல்ல எண்ணிற்று;
நீ ஒருநீளத் திரைப்படம் எழுதுவோன்.
நீயே எண்ணி நீயே எழுதுக!
உள்ள மதனை உறுதியால் தோண்டினால்
வெள்ளப் புதுக்கருத்து விரைந்து பாயும்.

அயலார் பாட்டின் அடியைத் தொடாதே
அயலார் பாட்டின் சிலசொல் அகற்றி
உன்பாட் டென்றே உரைக்க வேண்டாம்
பிறரின் கருத்தைப் பெயர்த்தெழு தாதே
பிறரின் பேச்சின் சொல்தொட வேண்டாம்.

அடியைத் திருடிச் சொல்லைத் திருடிப்
படிந்த வழக்கம் அயலார் படைத்த
நூலையே திருடும் நோயும் ஆனதே!

அதனால் அயலார் தமிழ கத்தை
மதியார் அன்றோ? பொங்கல்
புதுநாள் போற்றடா! வாழ்த்தடா மகிழ்ந்தே!

## புத்தர் புகன்றார்

பழைய நூற்கள் இப்படிப் பகர்ந்தன
என்பதால் எதையும் நம்பிவிடாதே
உண்மை என்றுநீ ஒப்பிவிடாதே!

பெருநாளாகப் பின்பற்றப்படுவது
வழக்கமாக இருந்து வருவது
என்பதால் எதையும் நீ நம்பிவிடாதே
உண்மை என்று நீ ஒப்பிவிடாதே!

பெரும்பான் மையினர் பின்பற்று கின்றனர்
இருப்பவர் பலரும் ஏற்றுக் கொண்டனர்
என்பதால் எதையும் நீ நம்பிவிடாதே!

பின்பற்றுவதால் நன்மையில்லை!
ஆண்டில் முதிர்ந்தவர் அழகியர் கற்றவர்
இனிய பேச்சாளர் என்பதற்காக
எதையும் நம்பிடேல் எதையும் ஒப்பேல்!
ஒருவர் சொன்னதை உடன் ஆராய்ந்துபார்
அதனை அறிவினாற் சீர்தூக்கிப்பார்
அறிவினை உணர்வினால் ஆய்க! சரிஎனில்
அதனால் உனக்கும் அனைவருக்கும்
நன்மை உண்டெனில் நம்பவேண்டும்
அதையே அயராது பின்பற்றி ஒழுகு!

இவ்வுண் மைகளை ஏற்று நீ நடந்தால்
மூடப்பழக்க வழக்கம் ஒழியும்
சமையப் பொய்கள் அறிவினாற் சாகும்!

இவைகள் புத்தர் பெருமான்
உவந்து மாணவர்க்கு உரைத்தவை என்பவே!

## நன்றி இது – தீது எது?

விலை பெரிது; சுடர் மிகுதி;
வயிர மணி நன்று – ஆனால்
விற்கறையும் கிளிக்காலும்
இருந்தால் அது தீதே!

தலைசிறந்தது; நிலையுயர்ந்தது
தமிழ்ச்சுவடி நன்றே – ஆனால்
தழுவத்தகா வடவர் கொள்கை
இருந்தால் அது தீதே!

கலையுயர்ந்தது; பயன்விளைப்பது
திரைப்படந்தான் நன்றே – ஆனால்
காலொடிந்தவன் நடித்ததென்றால்
நாலு நாள் ஓடாதே!

துலையில் ஏற்றிப் பெரியார்க்கே
எடைப் பொருள்தரல் நன்றே — ஆனால்
தொட்டால் கையில் ஈமொய்க்கும்பே
ரீச்சம்பழம் தீதே!

பொன்னான இயக்கத்திற்குத்
தலைமைப் பதவி நன்றே — ஆனால்
பொறுக்கித் தின்ன வந்தவனைப்
புகுத்துவதால் தீதே!

தன்மானம் காத்து வரும்
தந்தை திறம் நன்றே — ஆனால்
தறுதலைகள் சேர்க்கப்பட்டால்
எதிர்காலம் தீதே!

எந்நாடும் போற்றுகின்ற
தமிழ்நாடு நன்றே — ஆனால்
இருட்டறையில் தமிழ்மக்கள்
இருப்பதுவும் தீதே!

உன்னும் கோவில் ஊர்தோறும்
இருப்பதுவும் நன்றே — ஆனால்
உருவ வணக்கம் இருக்குமட்டும்
உமிழும் தணற் குன்றே!

## எது கலை?

கலை எனும் செந்தமிழ்ச் சொல் கலை ஆயிற்றாம்
'கலை'தன்னைக் "கலா" என்றார் வடவர் பின்நாள்!
கல்லை எனல் நற்றிறத்தின் பயனாம், மற்றும்
கலை என்று சொன்னாலும் அதே பொருள்தான்.
கல்வி எனல் அறிவாகும்; அறிவே கல்வி
கலை என்றால் கல்வியல்ல; ஒருவற்குள்ள
வெல் அறிவின் தனி ஆற்றலால் பிறக்கும்
வியத்தகுமோர் பொதுச்செல்வம், இன்பப்பேறு!

கலைதோன்றும் வகை தன்னை விளக்கமாகக்
கழறுகின்றேன் கருத்தாகக் கேட்க வேண்டும்
அலைதோன்றும்; ஆழ்புனலின் நெளிவிலெல்லாம்
அசைகின்ற ஒளிதோன்றும் ஆங்கே வானில்

விலையில்லா மாணிக்கப் பரிதி தோன்றும்;
விழிகொண்டு பருகுகின்ற கவிஞன் நெஞ்சில்
மலிமகிழ்ச்சி தோன்றும்; அம் மகிழ்ச்சி தன்னில்
மாபடைப்புத் திறந்தோன்றும்! கவிஞன் ஆங்கே

படைத்திட்டான் சிலசொல்லாற் கவிதை ஒன்று
படித்திட்டோம் அதனை நாம்; அறை வீட்டுக்குள்
கடல்கண்டோம், கதிர்கண்டோம்; அழகு கண்டோம்.
கசப்புலகை மறந்திட்டோம் அன்றோ? நம்மைக்
கடிதுலகை மறக்கச் செய்ததுதான் யாது?
கடலின் பந்தனிற் சேர்த்ததெது? வையத்து
நடைமுறையின் சொல்லல்ல; சொல்லுகின்ற
நல்லாற்றலின் விளைவு! கலை அஃதாகும்.

என் நண்பர் பகவதியாம் நடிகர் ஓர்நாள்
எழிலுறும் நாடக அரங்கை அடைந்தார் ஆங்கே
என் நண்பர் அடையாளம் மறந்தேனில்லை
இடர் சூழ்ந்தானை நோக்கி அறம் விளக்கும்
சொல் மழையைச் சினங்கூட்டி, மெய்ப்பாடேற்றித்
தொடங்கினார்; விழிப்புற்ற ஏழைத்தோழன்
தனைக்கண்டேன் பகவதியை மறந்தேன்
மறக்கவைத்ததெது? அதுதான் கலையாம் அன்றோ!

## இது...கலை!

[அகவல்]

சேற்றிலே தூரியம் செலுத்தி, அள்ளி
வீட்டுக் குறட்டில் விளையாட்டாகக்
கலைஞனாம் ஒருவன் கடிதொன்று வரைகையில்
'அடடே தூய்மை அழிந்ததே' என்றே
எரிச்ச லோடே அவனிடம் ஏக, அக்
குறட்டில் குச்சுநாய் வாலைக் குரங்கு பற்றி
இழுப்பதைக் கண்டேன். எழுதியோன் இழிசெயல்,
சேறு, தூரியம், செறிந்த என் எரிச்சல்,
இவைகள் அனைத்தும் என் நினைவில் இல்லை.
எது எனை இவற்றை மறக்கச் செய்தது?
குரங்கா? நாயா? அல்ல: இவற்றை

ஆக்கிய திறம்! அது 'கலை'
பார்க்கும் குரங்கு நாய் பகர் "கலைப்பொருள்களே!"

## ஒழுக்கம் விழுப்பந்தரும்!

நன்றியறிதல்:

என்றுமே ஒருவர் செய்த
நன்றியை மறக்காதே
இந்நாட்டின் பண் பாட்டைத்
துறக்காதே!

பொறையுடைமை:

உன்னைப் பிறர் வைதாலும்
உன் பொறுமை கெடவேண்டாம்
உனக்கொரு தீங்கு செய்தால்
விடவேண்டாம்.

இன்சொல்:

தமிழ் மொழியைப் பழிப்பவனைத்
தாக்காமல் விடாதே
தனிமுறையில் கடுமொழியைத்
தொடாதே!

இன்னா செய்யாமை:

தீயவர்க்கும் ஒரு தீங்கும்
செய்யாமல் விலக்குவாய்
தாய் நாட்டை வருத்துவோரைக்
கலக்குவாய்!

கல்வி:

தமிழ்க்கல்வி கற்க வேண்டும்
அமிழ்தாக நன்றன்றோ
அயல் மொழியை ஆதரித்தல்
தீ தன்றோ?

ஒப்புரவு:

நமக்கென்ன என்றிராதே
நமில் ஒருவன் நைகையில்
நறுக்கு வாய்பகைவர் தீங்கு
செய்கையில்.

அறிவுடைமை:

சாதியால் சமையங்களால்
அறிவு தழைக்காது
தமிழ் நூலில் மடமையே
இருக்காது.

மெய்ந்நெறி:

ஆதியில் இருந்ததில்லை.
ஆரியப் பொய்ந்நெறி
ஓதும் தமிழ் காட்டுவதே
மெய்ந்நெறி!

## ஏன் நரைக்கவில்லை?

[பிசிராந்தையார் விடை]

மிகப்பல ஆண்டுகள் ஆகியும் மேனியில்
நரையே இல்லையே! இந்த நன்னிலை
எப்படி எய்தினீர்? என்று கேட்டோர்க்குப்
பிசிராந்தையார் இசைப் பாராயினார்:
மாட்சிமைப்பட்ட குணங்கள் வாய்ந்த என்
மனைவி அறிவு நிரம்ப வாய்ந்தவள்!
அன்புறு புதல்வரும் அத்தகை யோரே
என்னுடை ஏவலாளர் தாமும்
யான் எண்ணியது – அவர் எண்ணும் இயல்பினர்!
இறைவனோ முறை செய்து காக்கும் மேலோன்!
என்னூரின் கண் இருக்கும் குடிகள்
பணியத் தகுமிடம் பணிபவர் நன்றே!
அமையத் தகுகுணம் அனைத்தும் அமைந்தவர்.
கல்வி நிறைந்தவர் கற்றதன் பயனாய்
நாவைச் சுவைக்கே அடிமை ஆக்கார்;
உடம்பு பயன் மடந்தைக்கே என்னார்;
கண்ணில், காட்சி வெறி கொண்டு திரியார்
மூக்கு நறுமணம் தோய்த்துக் கவிழார்;
காதை இசையினில் அளவொடு கவிப்பவர்;

எனவே,
ஆன்றவிந் தடங்கிய கொள்கையுடைய
சான்றோர் மிகப் பலர்! ஆதலால்
ஏன் எனக்கு நரைக்கும்? இயம்புவீரே!

இது புறம் 'யாண்டு பலவாக' என்ற
தொடக்கச் செய்யுளின் உரை விளக்கம்.

## குட்டி நிலாவும் வட்ட நிலாவும்

வட்ட நிலா:

குட்டி நிலாவே குட்டி நிலாவே
எங்கே வந்தாய் குட்டி நிலாவே?

குட்டி நிலா:

வட்டநிலாவே வட்டநிலாவே
வந்தேன் உன்னிடம் வட்ட நிலாவே
கெட்ட உலகம் வாழும் வழியைக்
கேட்க வந்தேன் வட்ட நிலாவே.

வட்ட நிலா:

எட்ட இருக்கும் வட்ட நிலா நான்
எனக்கா தெரியும் குட்டி நிலாவே?

குட்டி நிலா:

வளர்ச்சி பெற்றாய் குளிர்ச்சி பெற்றாய்
வட்ட நிலாவே வாய்திற வாயோ?

வட்ட நிலா:

தளர்ச்சி பெற்றது தட்டை யுலகம்
சண்டை பிடித்தது குட்டி நிலாவே.

குட்டி நிலா:

களைப்பு நீங்க உலகம் ஒருவன்
கைக்குள் வருமோ வட்ட நிலாவே?

வட்ட நிலா:

இருப்பு மிகவும் இருக்கும் ஊரில்
அரிசி உண்டோ குட்டி நிலாவே.

குட்டி நிலா:

ஆயிரங் கோடிச் செலவில் வந்தேன்
அறிவைக் கொடுப்பாய் வட்ட நிலாவே.

வட்ட நிலா:

ஆயிரங் கோடியை அரிசிக்காக
அளித்ததுண்டா குட்டி நிலாவே
போய்விடு போய்விடு குட்டி நிலாவே!
– போய்விடு – என்றது வட்ட நிலாவே
தீயில் எரிந்தது குட்டி நிலாவே;
தீய்ந்து விழுந்தது குட்டி நிலாவே!

## கடன்பட உடன்படேல்!

உடற் பயிற்சி விடுதியில் ஒள்ளியோன்
எடையில் மிகுந்த இரும்புக் குண்டை
ஒருகையால் தூக்கி உயர்த்திக் காட்டினான்
ஐந்து பாரம் ஆன ஓர் தூணை
ஏந்தி இருகையால் உயர்த்தி இறக்கினான்
முடுக்கி விட்ட முழுவலி இயங்கியை
இடக்கை பற்ற இழுத்து நிறுத்தினான்!

இவ்வகை ஆற்றல் காட்டி இருக்கையில்
அவ்விடம் அவனை நண்பன் அணுகி, "நீ
பட்ட கடனுக்காகப் பச்சை
வட்டிக் கணக்குப் பார்த்த வண்ணமாய்த்
திண்ணையில் அமர்ந்துள்ளான்" என்று செப்பினான்.

இதனைக் கேட்ட ஒள்ளியோன் ஏங்கி
எதிரில் உள்ளதன் இல்லம் கிளம்பினான்.
ஒள்ளியோன் வாங்கிவைத்த ஒரு மணங்கு
பஞ்சு மூட்டையைத் தூக்கவும் அஞ்சி
ஆளிடம் அனுப்பச் சொல்லிப் போனான்.

உள்ளம் கடன் வாங்குகையில் உவப்புறும்
கொடுத்தவன் வட்டியொடு கேட்கையில் கொலைபடும்.
ஆதலின் அருமைத் தமிழரே கேட்பீர்,
கடன்படும் நிலைகளுக்கு உடன்பட வேண்டாம்.

"ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை" எனப் புகன்ற
தேவர் நன்னெறி புகலெனத்
தாவுக! தமிழகம் மீளுதற் பொருட்டே!

## கருத்தடை மருத்துவமனையில் ஒருத்தி வேண்டுகோள்

இருக்கும் பிள்ளைகள் எனக்குப்போதும் அம்மா – என்
கருக்கதவை மூடிவிடுங்கள் அம்மா – அம்மா
இருக்கும் பிள்ளைகள்...

பெருத்த வருமானம் எனக்கில்லை – இனிப்
பிள்ளை பெறும் வலிவும் உடம்பில் இல்லை
வருத்தில் ஏதும் மீதம் ஆவதுமில்லை – அடகு
வைத்து வாங்க மூக்குத் திருகுமில்லை
இருக்கும் பிள்ளைகள்...

மக்கள் தொகை பெருத்தால் வரும் பஞ்சம் – இங்கு
வரும் பஞ்சத்தால் ஒழுக்கக்கேடே மிஞ்சும்
தக்கோர் இவ்வாறு சொன்னார் (என்) நெஞ்சம்
தாங்குவதோ அருள் புரிவீர் கொஞ்சம்
இருக்கும் பிள்ளைகள்...

தாய்மொழியில் அன்பிராது நாட்டில்
தன்னலமாம் அவரவர் கோட்பாட்டில்
தூய்மையே இராது நெஞ்ச வீட்டில் – மக்கள்
தொகைப் பெருக்கம் ஏன் இந்தக் கேட்டில்
இருக்கும் பிள்ளைகள்...

தோன்றியுள்ள மக்கள் நலம் யாவும் – இங்குத்
தோன்றாத மக்கள் தந்த தாகும்
தோன்றாமை இன்பம் என்று சொன்னார் – மிகத்
தூயரான புத்தர் ஐயாவும்
இருக்கும் பிள்ளைகள்...

## அரசினரே நடத்த வேண்டும்!

தனியாரிடத்தில் வாணிகம் இருந்தால்
சரிவிலைக்குச் சரக் ககப்படுமா?

இனியும் அரசினர் கண்மூடி இருத்தல்
ஏழை மக்களை மண்ணிற் புதைத்தலே.

எள்முதல் அரசினர் கொள்முதல் செய்க
எப்பாங்கும் கடைவைத்து விற்பனை செய்க

கண்படாது சரக்கைப் பதுக்கிடும்
கயவர் எதிர்ப்பைக் கான்றுமிழ்ந் திடுக.

வாங்கிய தொருவெள்ளி ஒருதூக்குப் புளி
மறுகிழமை மூன்று வெள்ளி என்பான் அதேபுளி
பாங் கிரக்கம் இருக்கா தொருதுளி
பஞ்சைகள் உயிரைக் கழற்றும் திருப்புளி.

பெருங்காயம் ஒரு பெட்டி வைத்திருப்போன்
பிள்ளை பெற்றவளுக்கும் இல்லையே என்பான்
ஒரு கிழமை போனால் விலை ஏறிற் றென்பான்
ஒழிய வேண்டும் தனித்துறை வாணிகம்.

## நிலையானது புகழ் ஒன்றே!

கணக்கன் சொல்லோவியமே கடவுள்!
இன்றைக் கொன்று நாளைக் கொன்றென
ஒருவன் குறித்ததை மற்றவன் ஒப்பான்
ஆதலின் தெய்வம் நிலையிலது ஆகும்.
தேடத் தக்கது தெய்வமா? எண்ணுக!

ஆயிரம் வேலி நன்செய் ஆயினும்
தாயக ஏழைகள் தலைக் கொன்றாக
அடைவர், அவையும் நிலையில வாகும்.
தேடத் தக்கது செழுநில மன்று!

பணத்தாள் பத்துக்கோடி சேர்க்கலாம்
கருவூலம் தங்கக் கட்டியை இழந்தால்
பணத்தாள் குப்பை மேட்டுக்குப் பயன்படும்
தேடத் தக்கது செல்வ மன்று!

காதலி இருக்கும் மாளிகைக் கற்சுவர்
காதலன் கால் வைத்து ஏறிக்குதிக்க
வளைந்து கொடுத்த தொருநாள்! முதுமையில்
அவளால் அண்டையில் அணைக்க வருங்கை

உலக்கை என்றே அவன் ஒதுங்குவான் பின்னாள்!
இளமையில் இனித்ததே முதுமையில் கசந்தது
தேடத் தகுந்தது சேயிழை இன்பமா?
பொன்றாது நிற்பது புகழே, புகழே!

அப்புகழ் வருவ தெப்படி என்னில்
செப்புவேன் கேட்க, தாயகம் தீயரால்
அடைந்த அடிமை நீக்க
உடல் பொருள் ஆவி உதவிட வருமே!

## கையேந்துவார் மகிழ்ச்சி — கடவுள் மகிழ்ச்சி!

முறிந்த உள்ளங்கள்! ஏந்தும் கைகளைத்
திரும்பிப் பாரப்பா — கெஞ்சுவதை
விரும்பிக் கேளப்பா — அந்தக்
கருங்கற் கோயில் கேட்டதா உனைக்
காசு பணம் அப்பா — மனத்தின்
மாசு தவிர் அப்பா!

பசிக்குமா கல்லுக்கும் செம்புக்கும்
பாலொடு பழமா? — கொடுக்
காவிடில் அழுமா? — அவற்றைப்
புசிக்குமா? பொன்னான மக்கள்
புலம்புகின்றாரே — இங்குக் கண்
கலங்கு கின்றாரே!

நடமாடும் கோயில்கட்கே
நாமொன்று தந்தால் — இரங்கி
நலமொன்று புரிந்தால் — அதுதான்
உடனே போய்ப் பரமனுக்கே
உவப்பைச் செய்யுமப்பா — பெரியார்
உரைத்ததும் தப்பா?

பஞ்சமிலாக் கோயிலுக்குப்
பஞ்சாமிர்தமா? — படையல்
அஞ்சாறு தரமா — இங்கே
கெஞ்சுகின்ற தெய்வங்கட்குக்
கிண்டலா — அப்பா? கெஞ்சுவதைக்
கேட்பது கசப்பா?

செல்வக் குழந்தை தாய்ப்பால் இன்றித்
திடுக்கிடும் போதே — அப்பனே
துடித்தழும்போதே — கோயிலின்

கல்லின் தலையில் பாலூற்றினால்
உலகம் ஒப்பாதே — திருந்திடு
வாயோ இப்போதே!

எங்கும் நிறைந்ததே கடவுள்
எண்ணிப் பாரப்பா — பெரியா
ரும் சொன்னாரப்பா — நீதான்
இங்கி வர்க்கே ஒரு தருமம்
பண்ணிப் பாரப்பா — பசி இவர்
கண்ணில் பாரப்பா!

எவ்வுயிரும் பராபரன்
சன்னதி அப்பா — பெரியார்
சொன்னது தப்பா — அப்பனே
அவ்வுயிர்தான் கல்லில் செம்பில்
இருக்குமோ செப்பாய் — நெஞ்சை
உருக்குமோ செப்பாய்!

மெய்யறிவே கடவுள் என்று
விளம்பவில்லையா? — வள்ளுவர்
விளக்கவில்லையா? — கருமான்
செய்து வைத்த உருவங்கட்குச்
செலவுத் தொல்லையா? — இதெல்லாம்
கலகம் இல்லையா?

## நம்பிக்கை வைத்தான்!

நம்பிக்கை வைத்தான் — அவள்மேல்
நம்பிக்கை வைத்தான்

கம்மாளன் திறம்என் றாலும்
கற்பாவை அதுவென் றாலும்
அம்மையே உன்னை அல்லால்
அணுவும் அசையா தென்றே [நம்பிக்கை]

கைகூப்பி நிற்பான் — அவன்
கண்ணீர் உகுப்பான்
கொய்தோடி மலர்கள் — அவள்
கோயிலுக் களிப்பான்

வையமெல் லாம் பார்க்க
வாயார அவனை வாழ்த்த
உய்விக்க வேண்டும் இன்றே
உன்னடியே துணை என்றே [நம்பிக்கை]

நீஇருக்கையிலே என்
தாய் எதற்கென்பான் — உன்
கோயில் இருக்கையில் என்
குடிசை ஏன் என்பான்

கோயிலிற் போய்ப் படுத்தான்
குடும்பத்தையும் விடுத்தான்
ஆய பண்ணே படித்தான்
அன்னையே துணை என்றே [நம்பிக்கை]

இரவினில் எழுந்தான் கோயில்
எங்கும் திரிந்தான்
கருவறை நுழைந்தான் — நகை
கண்டே விழைந்தான்

திருத்தாலி கழுத்தில் கண்டான்
திருமணி முடியும் கண்டான்
திருப்பதக்கம் புரளும்
திருமார்பின் ஒளியும் கண்டான்

நம்பிக் கை வைத்தான் — அவள்மேல்
நம்பிக் கை வைத்தான்!

தன் — வேட்டியை அவிழ்த்தான் எதிர்
போட்டு விரித்தான்
பூட்டிய நகைகள் — கழற்றிப்
போட்டுக் குவித்தான்

காட்டுக் கேன் மலர் ஓடை?
கல்லுக் கேன் பொன் னாடை?
கேட்டுக் கொண்டே நொடிக்குள்
கேளாத அவள் இடுப்பில்

நம்பிக் கை வைத்தான் — அவள்மேல்
நம்பிக் கை வைத்தான்!
நம்பிக்கை வைத்தார் என்று

நம்பிக் கை வைத்தான்
தம்பி கை வைத்தான் எனினும்
தாய் கண் வைத்தாளா?

கம்பிநீட் டினான் அன்றோ
கைவைத்த இடம் ஒன்றோ?
நம்பாதார் நம்பிக்கையில்
நம்பிக்கை வைத்தல் நன்றோ?

நம்பிக் கை வைத்தான்—அவள்மேல்
நம்பிக் கை வைத்தான்.

## எவர்சில்வர் ஏனம்

ஏனமெல்லாம் எவர் சில்வர்
இருந்து விட்டால் அவர் செல்வர்
ஏழைப் பெண்களும் வேண்டும் என்று சொல்வர்—கணவர்
இல்லை என்றால் தொல்லை பண்ணிக் கொல்வர்.

எவர் சில்வர் என்றுகூவி
இல்லாதவரிடம் உலாவித்
தவறாமல் சொக்குப்பொடி தூவிக்—கேட்பான்
தட்டைக் கொடுத்துப் பட்டு சேலையைப் பாவி.

சரிகைச் சேலையைச் சுரண்டித்
தரவருவான் சிறு கரண்டி
அரசே அத் திருடர்களை அண்டி—நீ
ஐந்தாறுநாள் சிறைக்குப் போகத் தண்டி.

## ஏய்க்கின்றாரே!

அறிவு வளர வளரத் தருமம் அரோகரா – ஒழுக்கம்
அரோகரா!

பிறர்பொருளைப் பறிப்பதற்குப் பெருமாளுண்டு –
பொருளைப்

பின்னின்று பங்குபோடக் குருமார் உண்டு
நிறுப்பதிலே அளப்பதிலே கடைகாரர்கள்
நினைத்தபடி ஊரை ஏய்க்க நெஞ்சம் உண்டு
– அறிவு வளர வளர...

பாலென்றால் படிக்குப் பாதி நீர்தானுண்டு
பாட்டென்றால் பிறர் எழுதிய படிதானுண்டு
நூல் என்றால் தமிழிற் பிழை நூற்றுக் கைம்பதாம்
நொடிக்கு நொடி விலையேற்றம் நூற்றுக் கெண்பதாம்
— அறிவு வளர வளர...

அரிசி என்றால் கல்லும் புழுவும் அளந்து கொடுப்பார்
அவிந்த காயைக் கனிந்த வாழை என்று கொடுப்பார்
வருந்துவரை படிக்குப்படி மண்ணு ருண்டைதான்
மடிந்த வெல்லத்தின் இளகலின்பேர் மருந்து குழைக்கும் தேன்.

## சாவதற்கு மருந்து உண்டோ!

'அடிகளே' என்று வணங்கினான் அரங்கன்!
'நெடுநாள் வாழ்க' என்று நிமிர்த்தினேன்
விரைவில் சாக வேண்டும் என்னைப்
பெருநாள் வாழ வைப்பது சரியா?
என்றான் — ஏனப்பா என்று கேட்டேன்!
"அரைப்படி அரிசி அரை ரூபாய் விலை,
ஒருபடி உப்போ பதினெட்டுப் புதுக்காசு,
தண்ணீர் இலவச மாயினும், மனிதன்
உண்ணீர் அல்ல! வேட்டி ஒன்றை
ஏழு ரூபாய் என்றான் வணிகன்
ஏழு பணத்துக்குக் கேட்டேன், எனை அவன்
வண்டி கொண்டு வந்தாயா என்றான்.

ஆள்மேல் ஆளை அடுக்க இடமிலாத்—
தேள்மேல் விழும் ஒரு சிறு குடிசைக்கும்
அறுபது ரூபாய் வாடகை ஆகுமாம்
நகராட்சி வரி நாலு ரூபாயாம்
ஐந்து கட்சிகளின் ஆண்டு விழாவுக்கு
ஐந்தோ பத்தோ அதுவோர் இழவு!
குழந்தை படிக்கக் கொடுக்கச் சொல்லி
முழநீளத்தில் சுவடி முன் வைப்பதும்
நாராயண கோபாலம் நவில்வதும்
இருக்கும் பிள்ளைகட்கு ஏதேனும் கேட்பதும்
சுருண்டு படுப்பினும் தூங்க விடுமா?

எதிர் பாராமல் இலேசாய்த் திடீரென்று
சாகும் வழியொன்று சாற்றுக" என்றான்.

அப்பனே இங்கு வா, இப்படி அமர்வாய்
இருக்க வழிதான் இல்லையே தவிர
இறக்க வழிகள் எத்தனை வேண்டும்?

வான ஊர்தி வரும் அதில் ஏறு
கானமோ கடலோ மலையோ எங்கோ
துணிந்து விழுந்திடும்; தொல்லை இல்லை உன்
பிணமும் கிடைத்ததென்ற பேச்சே
இல்லை – இதுவுனக்குப் பிடிக்காவிட்டால்,
அதோ பார் சுங்கான் புகைவிட்டு அதிரத்
தடதடா என்று சாவுக்கு வழிகாட்டி
வந்ததே அதனை ஆங்கில வல்லவர்
இண்டியன் ரெயில்வே இஞ்சின் என்பர்
முப்பது மூடு பல்லக்கை அதுதான்
இழுத்து வந்ததே! ஏறு! சாவு!!
இதற்கேன் இத்தனை தொல்லை? ரூபாய்
ஒன்று கொடு – உணவு விடுதி உள் போ
உண்! நீ திரும்புவது உன் செயலல்ல!
அது மருத்துவ விடுதியார் அறக்கடன்!

இறுதி விடைபெற்றுச் சென்றான்
இறந்த செய்தி கிடைத்தது மறுநாளே!

## மக்கள் நிகர்!

தொழிலெல்லாம் நின்று விட்டால்
எழிலெல்லாம் பறிகொடுக்கும் இந்தவுலகம்
தொழிலாளர் மகிழ மகிழப்
பழியில்லை பகையில்லை இல்லை கலகம்!

முதலாளி இருக்கு மட்டும்
தொழிலாளிக் கேற்படுமோ முன்னேற்றமே?
முதலெல்லாம் பொதுவானால்
தொழிலாளிக் கேற்படுமோ ஏமாற்றமே!

உண்டான தொழி லெல்லாம்
கொண்டாளா ஆட்சியுமோர் ஆட்சியாகுமா?

பண்டான முதலெல்லாம்
பற்றாத ஆட்சியிலே கலகம் போகுமா?

எல்லாரும் தொழிலாளர்
எல்லாரும் ஆளவந்தார் என்றாக்குவோம்
பொல்லாதார் இல்லை! தமிழ்
கல்லாதார் இல்லாநிலை உண்டாக்குவோம்!

## உழைப்பவரும் ஊராள்பவரும்

மாடாய் உழைப்பார்க்கு வீடில்லை சோறில்லை
நாடோறும் அங்கம் வளையல் — ஆண்டை மனைவி
போடமட்டும் தங்கவளையல்.

பாடே படுவார்க்குக் காடோ கரிக்கலோ கண்
மூடாமல் களம் காப்பே — ஆண்டை மனைவி
போடமட்டும் பவுன் காப்பே.

சாகுபடி தீர்ந்ததென்று
போகும்படி யாட்களுக்கு
நோகும்படி தொண்டைக்கம்மல் — ஆண்டை மனைவிக்
காகமட்டும் கெம்புக்கம்மல்.

பாதிரத்தம் சுண்டுமட்டும்
பாடுபட்டுச் சாடுமக்கள்
மீதிவைக்க ஏதுகாசு — நல்லாண்டையரின்
மோதிரமெல்லாம் நகாசு.

தூசின்றி நெல் மணியைத்
தூற்றித்தரும் தோழர்கட்குக்
காசில்லை கட்டத் துணியில்லை — ஆண்டையர்க்கு
வேசு கிட்டப்பா புகையிலை.

கையலுத்துக் காலலுத்துக்
காலமெல்லாம் உழைப்பவர்
கண்டதில்லை ஒரு தானம் — ஆண்டைகள் வீட்டில்
ஐயருக்கோ கோதானம்.

## புத்துணர்வு பெறுவீர்!

மேகம் பொழிவதற்குள்
வியர்வை பொழிந்து, மண்ணை
வெட்டி வரப்படுத்திரே நீரே தோழரே.

காகமும் அஞ்சும் அதி
காலைமுதல் முள்வேலி
கட்டிக்காவலும் செய்திரே நீரே தோழரே.

உள்ளங்கால் வெள்ளெலும்பு
தோன்ற உளைச் சேற்றையே
உழுது பயிரும் இட்டிரே நீரே தோழரே,

வெள்ளம் மறித்துக் களை
போக்கிக் கொடு வெய்யில்
மேனி இளைத்து நொந்திரே நீரே தோழரே,

கண்மணிபோற் பயிரைக்
காத்தும் தண்ணீர் இறைத்தும்
கையறு வடை செய்திரே நீரே தோழரே,

பெண்மணியுடன் ஆணும்
ஆகக் களம் அடித்து
நெல்மணியை எடுத்திரே நீரே தோழரே,

இத்தனை பட்டும் ஊசி
குத்த நிலமு மின்றிக்
கொத்தடிமையும் பட்டிரே நீரே தோழரே.

ஒத்து விவசாயிகள்
உரிமையை நிலைநாட்டப்
புத்துணர்வு பெறுவிரே நீரே தோழரே!

## தொழில்

விரலே நாணுதே அண்ணா
என் வாழ்வும் விழலோ!

உரமிழந்ததோ எனதொரு மார்பும்!
ஓதுநாட்டில் ஏது தொழிற் புலமை?

தமிழர் நாட்டினில் பலபல பொருள்கள்
சார்ந்திட்டதில் என்ன பயன்?
சுமைகொள் தேவைகள் ஒரு நொடியில் பெறத்
தோன்ற வேண்டும் நாட்டிலே தொழில்...

## நலம் தேடு!

நலம் தேடுவோம் உடலோம்புவோம்
நரம்போடு தசை நாளும் வன்மை ஏறி
நாம் வாழ — நலம் தேடு...

கலங்காத நெஞ்சமே பெற்றாலென்ன
கற்றூண் நிகருடல் பெற வேண்டியே
இலங்கு புனல் குளிர் தென்றலும் இல்லமும்
அமைவுணவும் நிறைவு பெறுமாறே நாம் — நலம் தேடு...

## புத்தர் புகன்றார் இல்லை!

நோன்பென்றால் கொல்லாமை என்று புத்தர்
நுவன்று வந்தார்! கொன்றுண்ணும் மக்கள் யாரும்
ஏன்று கொண்டார்; நல்லொழுக்கம் பரவிற்றெங்கும்!
இருள் உளங்கள் ஒளியாகும் நிலையில் ஓர் நாள்
தேன்பொழியும் மலர்த்தாரான்; திருவார் மன்னன்
சுதரிசனன், புத்தர்பிரான் திருத்தாள் நண்ணி
"ஊன் உண்ணும் வழக்கத்தை மறுக்கின் றீர்கள்,
ஊர் இதனை ஒப்பவில்லை!" என்று சொன்னான்.

புத்தர்பிரான் சுதரிசற்குப் புகலுகின்றான்:
"பொன்னுயிர்கள் இன்னலுறப் புரிதல் வேண்டாம்!
இத்தரையில் உனக்கூறு நேரும் போதில்
எவ்வாறு துடித்திடுவாய்? அதுபோல் தானே
அத்தனையாம் உயிருக்கும் இருக்கும்! நீயே
அறிவிருந்தால் எண்ணிடுதல் வேண்டும்," என்றார்.
"அத்தனே, நான்கொல்லேன், பிறர்கொன் றீந்தால்
அதையுண்பேன் அனுமதிப்பீர்!" என்றான் மன்னன்.

"எவன்கொன்று நினக்கீவான்? ஈவானாயின்
ஏற்றுண்பாய்!" என்றுரைத்தார் அருளின் மிக்கார்!
அவனுக்குக் கொன்றுவந்து கொடுத்தார் இல்லை!
அம்மன்னன் மகிழ்ந்ததுவு மில்லை! ஆனால்
தவப்பெருமான் இவ்வாறு சொன்ன சொல்லைச்
சமணர்களும் சைவர்களும் தலையில் தூக்கி
"இவர் கண்டீர் மீனுண்ணச் சொன்னார்! ஆட்டை
இழுத்தறுத்துக் கொலைபுரியச் சொன்னார்!" என்றார்;

"பன்றிவெட்டச் சொல்லினார் புத்தர்!" என்றார்;
"பசுவெட்டச் சொல்லினார் புத்தர்!" என்றார்;
இன்றுவரை புத்தர்மேற் பழிசு மத்த
இடை விடா மற்புளுகி வருகின் றார்கள்!
தன்னேரி லாப்புத்தர் நெறியை வீழ்த்தித்
தம் சமயம் மேலோங்கச் செய்யும் சூழ்ச்சி
நன்றாமோ? உலகுக்குக் கொல்லா நோன்பை
நடுவாய்ந்து முதற்புகன்றோர் புத்தர் தாமே!

## தமிழன்

பிறக்கும் போதே பெருமையோடு
பிறந்தவன் தமிழன் – தமிழ்ப்
பெருங்குடி தன்னிற் பிறந்தவன் ஆதலால்
– பிறக்கும் போதே...

இறப்பதே இல்லை தமிழன் – புகழுடம்பை
எங்குமே வைத்தது காண்க
மறக்குமா வையம் தமிழன் – மனப்பாங்கு
வளர்த்த அறத்தையும் அறிவையும்?
சிறப்பதென்றால் தமிழாற் சிறக்க வேண்டும்
தீர்வதென்றால் தமிழ் மறந்து தீர்தல் வேண்டும்
– பிறக்கும் போதே...

முதலில் தோன்றிய மனிதன் தமிழன்
முதல்மொழி தமிழ் மொழி – ஆதலால்
புதுவாழ் வின்வேர் தமிழர் பண்பாடே
– பிறக்கும் போதே...

முதுகிற்புண் படாதவன் தமிழன் – போர்எனில்
மொய்குழல் முத்தமென் றெண்ணுவான்
மதிப்போடு வாழ்பவன் தமிழன்
வாழ்வதற்கென்று வாழ்பவன் அல்லன்
– பிறக்கும் போதே...

## நாம் தமிழர் என்று பாடு!

நாம் பிறந்தது நாம் வளர்ந்தது தமிழ்நாடு – தமிழா
நாம் தமிழர் நாம் தமிழர் என்று பாடு!

போம்படி சொல் அயலாட்சியைப் பொழுதோடு – விரைவில்
போகாவிட்டால் அறிவார் அவர் படும்பாடு.

நாமறிவோம் உலகத்தில்நம் பண்பாடு – தமிழா
நாம்தமிழர் நம்திறத்துக் கெவர்ஈடு?
தீமை இனிப் பொறுக்காது நம் தமிழ் நாடு – நாம்
தீர்த்துக் கொண்டோம் அவர் கணக்கை இன்றோடு!

மூவேந்தர் முறை செய்தது நம் தமிழ் நாடு – தாய்
முலைப்பாலொடு வீரம் உண்டது செந்தமிழ் நாடு
கோவிலுக்குள் வேண்டாம் பிறர் தலையீடு – பகை
குறுகுறுத்தால் பொறுக்காதெம் படைவீடு!

நாவலரும் காவலரும் ஆண்டதிந்நாடு – நிமிர்ந்து
நாம்தமிழர் நாம்தமிழர் என்று பாடு
நாவைப்பதா நம் சோற்றில் கோழிப்பேடு? – தமிழா
நாம்தமிழர் நாம்தமிழர் என்று பாடு!

முத்துக் கடல் முரசறையும் முத்தமிழ் நாடு – நீ
முன்னேறுவாய் தமிழ் மறவா ஒற்றுமையோடு
நத்துவதை ஒப்பிடுமா நம் வீடு மறவா
நாம் தமிழர் நாம் தமிழர் என்று பாடு!

தத்தும் தவளைக் கிடமா முல்லைக்காடு – நம்
தமிழகத்தில் கால்வைப்பதா இந்திப்பேடு
நத்தை உறவாடுவதா சிங்கத்தோடு – தமிழா
நாம் தமிழர் நாம் தமிழர் என்று பாடு!

## ஒற்றுமைப் பாட்டு

### (ஆனந்தக் களிப்பு மெட்டு)

மக்கள் நலத்துக்கு மதமா? – அன்றி
மதத்தின் நலத்துக்கு மக்களா சொல்வீர்! – மக்கள்...

திக்கெட்டும் உள்ளவர் யாரும் – ஒன்று
சேராது செய்வதே மதமாகு மானால்
பொய்க்கட்டு நீக்குதல் வேண்டும் – அப்
பொல்லாங்கில் எல்லாரும் நீங்குதல் வேண்டும்.
எக்கட்சி எம்மதத்தாரும் – இங்
கெல்லாரும் உறவினர் என்றெண்ண வேண்டும் – மக்கள்...

எல்லா மதங்களும் ஒன்றே — அவை
எல்லாரும் இன்புற்று வாழ்வீர்கள் என்றே
சொல்லால் முழங்குவது கண்டீர் — அவை
துன்புற்று வாழ்ந்திடச் சொல்லியதும் உண்டோ

எல்லாரும் மக்களே யாவர் — இங்
கெல்லாரும் நிகராவர் எல்லாரும் உறவோர்
எல்லாரும் ஒரு தாயின் செல்வர் — இதை
எண்ணாத மக்களை மாக்களென் போமே! — மக்கள்...

வழிகாட்டும் மதமெலாம் இங்கே — நல்
வழிகாட்டியான பின் வழிகாட்டிடாமல்
பழிகூட்ட வைத்திருப்பீரோ? — நீர்
பகைகூட்ட மதமென்ற மொழி கூட்டலாமோ?
பிழியாக் கரும்பினிற் சாற்றை — நீர்
பெற்றபின் சக்கையை மக்கட்களித்தே
அழிவைப் புரிந்திடுதல் நன்றோ? — நல்
அன்பால் வளர்த்திடுக இன்ப நல்வாழ்வை — மக்கள்...

## கொட்டடா முரசம்

நறுக்குவோம் பகையின்வேர் சிறுத்தைப் பெருங்கூட்டம்
நாம்! தமிழர் நாம்தமிழர் என்று முரசறைவாய்
குறுக்கில் முளைத்திட்ட அயலார் ஆட்சி
கூண்டோடு போயிற்றுக் கொட்டடா முரசம்!

நறுமலர்ச் சோலையில் நரிபுக விட்டிடோம்
நாம்! தமிழர் நாம் தமிழர் என்று முரசறைவாய்
வெறிகொண்டு புகுமிந்த அயலார் ஆட்சி
வேரற்றுப் போயிற்றுக் கொட்டடா முரசம்!

நந்தமிழ் நாடாளும் சொந்த நன்மைந்தர்கள்
நாம்! நாம்தமிழர் என்று முரசறைவாய்
முந்துபல் பகைப்படை நம் படை முன்னிற்க
முடியாது போயிற்றுக் கொட்டடா முரசம்!

நந்தமிழ்த் தாய்க்கெதிர் இந்திக்கும் ஆட்சியா!
நாம்! தமிழர் நாம்தமிழர் என்று முரசறைவாய்
வந்தவர் போயினார் செந்தமிழ்ச் செல்வமே
மணிமுடி புனைந்தனள் கொட்டடா முரசம்!

## மிடிமை தீரக் கடமை புரிவீர்!

காலை மலர்ந்தது செங்கதிர் எழுந்தான்
கண் மலர்வீரே உலகினில் மாந்தரே!
வேலை தொடங்குவீர் மெய்யான வழியில்
விருப்பமும் குறிப்பும் அறமெனக் கொள்வீர்
ஆலையிற் கரும்புபோல் வாடினர் பல்லோர்
அவர்களை மீட்டல் அறத்தின் முதன்மையாம்
சோலையிற் குயில்கள் பாடி நலஞ் செயும்
துளிரன்றி ஆயிரம் தேடுவதில்லையே!

மக்களை நடத்தும் சட்டமும் நடப்பும்
மாய்த்திடும் பசிநோய் வளர்த்திடல் அறிந்தீர்!
தக்கது நாடி ஒற்றுமை வலியினால்
தகர்த்திட வேண்டிக் கொதித்திடுவீர்கள்!
கொக்கும் இரைபெற இருந்திடும்; வந்தால்
கொத்திடத் தயங்கிப் பசித்திடல் உண்டோ!
கைக்குள் கொண்டுளீர் மீட்சி மருந்தினைக்
கடமை புரிகுவீர் எழுக தொண்டரே!

## எவன் தமிழன்?

தமிழனை எதிர்க்கும் பீரங்கிக் குண்டு
சமையல் அறையின் முள்ளங்கித் தண்டு

தமிழைத் தமிழன் தாய் என்பதாலும்
தமிழ் பழித்தானை அவன் நாய் என்பதாலும்
— தமிழனை எதிர்க்கும்...

தமிழ்த்தாய் வாடத் தான் வாழ்வதென்பது
தமிழனால் சற்றும் பொறுக்க ஒவ்வாதது
தமிழைத் தமிழன் மறந்த தெப்போது
சாவதும் வாழ்வதும் தமிழுக்கே என்றோது
— தமிழனை எதிர்க்கும்

மெத்தை வீடு கட்டிப் புலாற்சோறு
வழங்குவதல்ல அவன் வேண்டும் பேறு
முத்தமிழ் காத்துப் பகைவனை ஒருவாறு
முடிப்பது தான் முடிவாம் என்று கூறு
— தமிழனை எதிர்க்கும்...

ஒரு நாட்டு மொழியினை ஒழிப்பவன் எண்ணம்
ஒழிந்தது போகுமுன் ஏற்படும் எண்ணம்
பருந்து பறக்க வேண்டியது திண்ணம்
பறக்கா விட்டால் தெரியும் கைவண்ணம்.

– தமிழனை எதிர்க்கும்...

## மாணவர் ஒற்றுமை

ஆரிய ஆசான் பேரைச் சொல்லி
அழைக்க அதற்குத் தமிழ்மா ணாக்கன்
உள்ளேன் ஐயா என்றே உரைத்தான்
அப்படிச் சொல்லல் தப்படா என்ற
இழிஞனை எதிர்த்த துண்டா மாணவன்?

தாயாம் தமிழில் கையெழுத் திடும்படி
சேயாம் மாணவன் தெரிவித்த போது
வடமொழியிற் றான் கையெழுத்து வைப்பேன்
என்று பலபடி இழித்துப் பேசிய
மாபாவி தன்னை அந்த மாணவன்
எதிர்த்த துண்டா? இல்லவே இல்லை.

எதுதான் வடசொல்? எதுதான் தமிழ்ச்சொல்?
என்று வினாவிய எளியமா ணவனை
எதிர்த்த இழிஞனை அந்த மாணவன்
எதிர்த்த துண்டா? இல்லவே இல்லை!

வடமொழி உயர்ந்தது தமிழ்மொழி தாழ்ந்ததே
என்ற பள்ளி ஆசிரியன் தனை
எந்த மாணவன் எதிர்த்தான் இதுவரை?
வடசொலி னின்றே தமிழ்ச்சொல் வந்ததாம்
என்ற மடையனை எந்த மாணவன்
எதிர்த்தான் இதுவரை? இல்லவே இல்லை!

தம்மினத்தைத் தம்தாய் மொழியை
தாக்கினோ னுக்கும் அவனைத் தாங்கிய
தலைமை ஆசான் தனக்கும் அஞ்சும்
மாணவர் எல்லாம் மான மிழந்தவர்!

ஆனால் அந்த மாணவர் இந்நாள்
ஒற்றுமை பெறுவதை ஊக்க வேண்டும்!

பச்சை யப்பன் பள்ளி மாணவர்
ஒன்று பட்டுக் கேட்ட வசதியை
இன்றே செய்து தருவது சிறந்ததே!

## குரங்கிலிருந்து மனிதனா?

### [ஓர் ஐயப்பாட்டு]

ஆயிரம் ஆண்டின் முன் இருந்த மனிதனின்
உயரமும் பருமனும் உரமும் வரவரக்
குறைந்து வருவது கொஞ்சமும் பொய்யன்று!

உடற்பயிற்சி உள்ளறைச் சுவரில்
அந்நாள் கையால் அறைந்த சுவடுதொட
இந்நாள் மனிதன் ஏணி கேட்கின்றான்.

ஓரடிக் கொன்றாய்க் கம்பி அடைத்த
பலகணி இந்நாள் படை நுழைவாயில்!

இந்நாள் மனிதனுக் கிருக்கும் உள்ளுரம்
அந்நாள் பொட்டுப் பூச்சிக் கமைந்தது!
மலை படைத்த கனிகொண்டு காலையில்
இலை படைத்தான் இதற்குமுன் னிருந்தவன்!
குளிக்க ஆள்வேண்டும் இந்நாட் குள்ளனுக்கு!
வெளிக்குப் போகக் குடுவை வேண்டும்.
ஏறு குதிரையை இருகால் இறுக்கி
ஆலினைப் பற்றித் தூக்கினான் அந்நாள்!
இருகையால் சிறுகுண்டு தூக்கி எறிந்துதன்
வீரத்தைத் தானே மெச்சுவான் இந்நாள்!
வாயிற் படிக்கு மலைக்கல் கொணர்ந்தவன்
அம்மி நகர்த்த ஐந்தாள் கேட்டனன்.
போருக்குப் போந்த ஆயிர மறவரின்
நேருக்கு நேர் நின்றான் அந்நாளில்!
இந்நாள் எறிகுண்டு செய்யும் ஆளின்
பொன்னடிக்குப் பொன்னையும் தந்து
புலம்புகின்றான் புதிய மெட்டில்!

ஒழுக்கம் விழுப்பம் உண்டாக்கு மன்றோ!
ஒழுக்கம் இந்நாள் உருப்பட்ட துண்டா?

சோறு தந்தார்க்கு மாறு கொண்டாரை
எதிர்க்கத் தன்னுயிர் ஈந்தான் அந்நாள்!
உப்பிட்டாரை உள்ளளவும் மறவான்
தினைநலம் செய்யினும் பனை எனக் கொள்வான்.
இந்நாள் மனிதன் எப்படி? சோறிட்டுக்
கல்வி தந்து கரையேற்றிய தன்
குருவின் வழியில் கொடிய முள் இட்டான்!
ஏனெனில், கட்சிக் கொள்கை என்பான்.
கவிஞன் விளைத்த கவிஞர்கள், கவிஞனின்
ஒளிவிளக் கவிக்க உதவிதாம் புரிவர்
ஏன் எனில் கட்சிக் கொள்கை என்பார்.
நன்றி நினைத்தலால் சிறந்த முன்ஞாலம்
நன்றி மறத்த லால் நனி சாய்ந்திட்டது.

இன்னா செயினும் இனியவே செய்வர்
முன்னாள் மனிதர்! இந்நாள் அஃதிலார்!

நல்லார் உறவு நாடுவார் முன்னாள்
அல்லார் தம்மையே அடுப்பார் இந்நாள்!

எல்லா வகையிலும் இந்நாள் வரைக்கும்
தேய்ந்து தேய்ந்துவரும் இம் மனிதனை
ஆய்ந்துணர்க! ஆய்ந்துணர்க!

மனிதன் தேய்ந்து மாண்பிலா விலங்கு
பறவை பாம்பு பூச்சி புல் என
ஆகின்றான் என ஐயுறுகின்றேன்!

குரங்கினின்று மனிதன் வந்தானா?
மனிதனிலிருந்து குரங்கு வந்ததா?
வையகத்தை வைதிலேன்
ஐயப்பட்டேன், ஆய்க அறிஞரே!

## தூங்கும் புலி எழுந்தது!

தூங்கும் புலியைப் பறைகொண் டெழுப்பினோம்
தூய தமிழரைத் தமிழ் கொண்டெழுப்பினோம் — தூங்கும்

தீங்குறு பகைவரை இவணின்று நீக்குவோம்
செந்தமிழ் உணர்ச்சி வேல்கொண்டு தாக்குவோம்
— தூங்கும்

பண்டைப் பெரும் புகழ் உடையோமா? இல்லையா!
பாருக்கு வீரத்தைச் சொன்னோமா? இல்லையா!
எண்டிசை வாய்மையால் ஆண்டோமா, இல்லையா?
எங்கட்கும் இங்குற்ற நரிகளால் தொல்லையா? — தூங்கும்

தமிழ் காப்போம் என்றோம், எழுந்தாரா இல்லையா?
தமிழ்க் குயிர் தர இசைந்தாரா இல்லையா?
தமிழ்வாழ்ந்தால் தமிழர் வாழ்வார்கள் என்றோம்
தமிழர் மார்தட்டி வந்தாரா இல்லையா? — தூங்கும்

செந்தமிழ் நெஞ்சம் கொதித்ததா, இல்லையா?
தில்லி நரிதான் நடுங்கிற்றா, இல்லையா?
முந்தா நாள்விட்ட பிஞ்சுகள் தமிழை
முறிக்க எண்ணுதல் மடமையா, இல்லையா? — தூங்கும்

தமிழர் ஒற்றுமை நிறைந்ததா, இல்லையா?
தக்கைகள் ஆட்சி சரிந்ததா இல்லையா?
தமக்குத் தமிழகம் அடிமையே என்னும்
சழக்கு மரவேர் அறுந்ததா இல்லையா? — தூங்கும்

## புலிக்கு நாய் எந்த மூலை!

தமிழர்க்குத் தமிழே தாய்மொழி என்றோம்
தமிழகம் தமிழர்க்குத் தாயகம் என்றோம்

தமிழ் நாட்டில் அயலார்க் கினி என்ன வேலை?
தாவும் புலிக்கொரு நாய் எந்த மூலை?

தூங்கிய துண்டு தமிழர்கள் முன்பு — பகை
தூளாகும் அன்றோ எழுந்த பின்பு?
தீங்கு புரிகின்ற வடக்கரின் என்பு
சிதைந்திடச் செய்திடும் தமிழரின் வன்பு.

அவனவன் நாட்டில் அவனவன் வாழ்க — மற்
றயல் நாட்டைச் சுரண்டுதல் அடியோடு வீழ்க!
துவளாத வாழ்க்கை உலகெலாம் சூழ்க!
தூக்கிய கைகள் அறம் நோக்கித் தாழ்க!

தமிழனுக் குலகம் நடுங்கியதுண்டு — அங்குத்
தன்னாட்சி நிறுவிட எண்ணியதுண்டா?

தமதே என்று பிறர் பொருள் கொண்டு
தாம் வாழ எண்ணினோர் எங்குளார் பண்டு!

## வீட்டுக் கோழியும் காட்டுக் கோழியும்

வீட்டுக்கோழி:

காலையில் எனக்குக் கம்பு போடுவர்
மாலையில் தவிடு பிசைந்து வைப்பர்
இட்டலி உண்கையில் என்னையும் அழைத்துப்
பிட்டுப் பிட்டுப் போட்டு மகிழ்வர்
இரவில் எனக்கோர் இன்னல் வராமல்
ஒருபெருங் கூடை கவிழ்ப்பர்! வருபிணி
வராமல் வசம்புநீர் வார்த்துக் கழுவுவர்
என்னை வளர்ப்பவர் எனக்குச் செய்யும்
நன்மை நவிலத் தக்கதன்று.

காட்டுக்கோழி:

உன்னால் அவர்க்கு நன்மையில்லையா?

வீட்டுக்கோழி:

முட்டை இடுவதற்கு மூலை யடைவேன்
எதிர்பார்த்திருந்த என் வீட்டார்கள்
சட்டியை அடுப்பில் இட்டு நெய் விட்டு உடன்
என்னைக் கூடையில் இட்டுக் கவிழ்ப்பர்
பன்முறை கூடையைத் திறந்து பார்ப்பர்
வெளிவரும் முட்டையை வெடுக்கென்றெடுத்தே
அடைசுட்டு உண்டு மகிழ்வர் அனைவரும்.

காட்டுக்கோழி:

அடைகாத்திடவும் முட்டைகள் அமைப்பரோ?

வீட்டுக்கோழி:

ஒருபெருங் கூடையில் உமி பரப்பி
அதன்மேல் ஐந்தோ பத்தோ முட்டையை
அமைத்து மேல்எனை அமைத்து மூடுவர்
இருபத்திரண்டு நாட்கள் அடைகாத்துக்
குஞ்சு வெளிப்பட நெஞ்சம் மகிழ்வேன்.
இதனிடை எனக்குத் தீனியும் இடுவர்

குஞ்சுகண்டு நான் கொள் மகிழ்ச்சியைவிட
வளர்ப்பவர் கொள்ளும் மகிழ்ச்சி பெரிது.

காட்டுக்கோழி:

குஞ்சுகள் அவர்க்கு என்ன கொடுக்கும்?

வீட்டுக்கோழி:

பதினைந்து நாளில் என் பசுங்குஞ்சுகளில்
இது நன்று மற்றையது நன்றென்று
வாட்டம் பார்த்தே ஓட்டமாய் ஓடி
இரண்டு மூன்றைப் பற்றித் தலையைப்
பாளையிற் பாக்குக் காய்போல் திருகிப்
பஞ்சுடம்பின் பஞ்சுமயிர் சிரைத்துக்
குருதி கொட்டக் கூறிட்ட சதையை
நெய்யோடு நெய்யாய் நீர்ப்பதம் எய்தச்
சொய் எனத் தாளித்துச் சூப்பென்று அருந்துவர்
அப்போது நானோ அழுது கொண்டிருப்பேன்.

காட்டுக்கோழி:

வடக்கன் தெற்கு வாழ் தமிழர்க்கு அள்ளிக்
கொடுப்பதாய்ச் சொல்லிக் குதிக்கின்றார்கள்
உன்போல்! உன்போல்! உரைப்பது கேட்பாய்
இங்குளார் உழைப்பின் பயனை யெல்லாம்
வடவர் அடியோடு விழுங்கி வாழ்பவர்
அடிமைகள் தமிழர்கள் என்றே அறைபவர்
இதனை எண்ணி அழுதிடும் தமிழரும்
முட்டைகள் குஞ்சுகள் முற்றும் இழக்கையில்
அழுதிடும் உன்னையே ஒப்பவர் ஆவார்
வீட்டுக் கோழியே வீட்டுக் கோழியே
கேட்பேன் உன்னையோர் கேள்வி! உன்றன்
தாயகம் எது? அதைச் சாற்ற முடியுமா?

வீட்டுக்கோழி:

சேலத்திலிருந்து ஓசூர் செல்லும்
வழியில் அழகு வழங்குகின்ற ஓர்
ஈக்காடு வேய்ங்குழல் இசைத்தட்டு வைக்கும்
பூக்காட்டின் கீழ்ப் புதர் என் தாயகம்
என்றே என் பாட்டி சொன்னதாய்
என் தாய் எனக்குச் சொல்லியதுண்டு.

காட்டுக்கோழி:

ஆசை மலர்க்கொடி பூசல் ஆடி
அகமகிழ்ந் திருக்கும் என் அன்னை நாடும்
அதுதான்! இதுகேள் உடன் பிறந்தோய்
பூச்சி புழுக்கள் பொன்னிற மணிகள்
உண்டு தன்மானத்துடன் சேவலின்
முன் மார்பு, கதிர் முகம் பார்க்கும் கண்ணாடி!
ஒளியை இறைக்கும் வாலின் சிறகுகள்
தரையிற் புரள்வது தனி ஒரு காட்சி!
பலவின் அடியில் இலவம் பஞ்சுமேல்
இட்டமுட்டை யெலாம் பொறித்திட்ட
பெட்டை, மாம்பழ மேனிப் பிள்ளைகள்
யாழும் குழலும் இசைத்துச் சூழ
நரிகள் அஞ்சிப் பறக்கும் அங்கே!
கம்பு போட்டுக் கழுத்தை அறுக்கும்
வடக்கன் ஆட்சி போன்ற இடக்கு
நம் தாயகத்தில் நாம் கேட்டறியோம்
ஆதலின் பற! நம் தாயகம் பெறவே!

வீட்டுக்கோழி:

இறக்கை இருந்தும் பறக்க வகையிலேன்.

காட்டுக்கோழி:

என்றன் முதுகில் ஏறு
துன்பமில்லாத விடுதலை தோய்கவே!

## சீனாக்காரன் தொலைந்தான்

சீனாக்காரன் தானே வந்தான் போருக்கு — நம்
சிறுத்தைக் கூட்டம் வேறே இங்கே யாருக்கு?
போனால் கிடைக்கும் போரில் — அந்தச்
சீனாக் காரன் ஈரல்!

போர்க்களத்தில் சீனனுக்கா எக்காளம்? — உடன்
புறப்படட்டும் அங்கே வேங்கைப் பட்டாளம்!
பார்க்கட்டும் அக் கொதுகு — நன்றாய்ப்
பழுக்கட்டும் அவன் முதுகு!

சீனனுக்கே இங்கே என்ன வேலை? — நம்
சிங்கப்படை கிழிக்கட்டும் அவன் தோலை
தானே வந்தான் கொழுத்து — தன்
தலை இழந்தது கழுத்து!

தேனாய்ப் பேசித் திடீரென்று பாய்ந்தான் — நம்
ஆனைப்படை கண்டுமனம் ஓய்ந்தான்
சீனா இனி இல்லை — இனிப்
போன தவன் தொல்லை.

நாடுபிடிக்கச் சீனாசெய்த வஞ்சகம் — மிக
நன்றாகவே தெரிந்து கொண்டது .வையகம்
கோடு தாண்டப் பார்த்தான் — தன்
கொடியை எரித்துத் தீர்த்தான்.

## அழைப்பு

கட்டாயம் வீட்டுக்கொரு சிங்கம் புறப்படட்டும்
கொட்டடா வெற்றிமுர செங்கும் — அச்சமில்லாமல்

இட்டான் எல்லையிற் காலைத்
தொட்டான் துப்பாக்கிக் கோலைச்
சுட்டான் சீனன்தன் னாலே
கெட்டான் கெட்டான் என்று — கட்டாயம்

நட்டாரைப் போலவேந டந்தான் — அதன்பிறகு
நாட்டைப் பிடித்திடமு னைந்தான் — நாணயமின்றிப்
பட்டாளம் சேர்த்திடமு னைந்தான் — நம்பாரதந்தன்
பாட்டன் நிலமென்று பகர்ந்தான் — உணர்ந்தெழுந்து
சுட்டுத் தொலைக்கத் திட்டம் போட்டோம் — அடுத்தபடி
தொல்லுல காதரவைக் கேட்டோம் — கிடைத்தபின்பு
மட்டிப்பய லைவிட மாட்டோம் — எனத்தெளிந்து
வண்டியைத் திருப்பினான் இன்னமா நடமாட்டம்!
— கட்டாயம்

சொல்லாமல் எல்லைபுக லாமா — புகுந்தபின்பு
சோதாவாய்ப் பின்வாங்க லாமா — பின்வாங்கியவன்
எல்லையில் இடம்கேட்க லாமா — தராததாலே
எத்துக்கள் செய்தால்விடு வோமா — இன்னமும் சீனன்

பொல்லாங்கை விலைபேசுகின்றான் — எல்லைப்புறத்தில்
போராயுதங்கள் குவிக்கின்றான் — உலகிலுள்ள
எல்லாப் பழியும் சுமக்கின்றான் — இந்த நிலையில்
இந்நாட்டைச் சுரண்டியே தின்னக் குதிக்கின்றான்!

— கட்டாயம்

காலத்தைக் கருதிட வேண்டும் — நமது மானம்
கட்டாயம் காக்கப்பட வேண்டும் — கொடுஞ்சீனனின்
மூலக்கருத்தை எண்ண வேண்டும் — இதேநொடியில்
முன்னேறித் தாக்கிடுதல் வேண்டும் — விடாது மேலும்
மேலும்நா யைத்துரத்திச் சென்று — சீனத்துக்கோட்டை
மேலே நம் மறவர்கள் நின்று — நம் வெற்றிக்கொடி
கோலம்பு ரியவைத்தல் நன்று — தூள் இதென்று
கொன்றோம் சீனப்படையை வென்றோம் எனப்புகன்று

— கட்டாயம்

## உலகின் அமைதியைக் கெடுக்காதே!

சென்றதடா அமைதி நோக்கி உலகம் — அட
சீனாக்காரா ஏண்டா இந்தக் கலகம்.
நன்றாக நீ திருந்த வேண்டும்
ஞாலம் உன்னை மதிக்கவேண்டும்
ஒன்றாய்ச் சேர்ந்து வாழவேண்டும்
ஒழுக்கம் கெட்டால் என்னவேண்டும்? — சென்றதடா

உலகம் எலாம் பொது வென்றாய்
உடமை எலாம் பொது வென்றாய்
கலகம் செய்து நிலத்தை எல்லாம்
கைப்பற்றத்தான் முயலுகின்றாய். — சென்ற...

பொது உடைமைக் கொள்கை ஒன்று
பூத்துக் காய்த்து வருமின்று
பொதுவுடைமை எனக்கென்று
புகன்றாயே குறுக்கில் நின்று. — சென்ற...

கொலைகாரப் பசங்களோடு
கூடுவது மானக்கேடே
இலைக்காக மரத்தை வெட்டிடில்
ஏற்றுக் கொள்வ தெந்த நாடு? — சென்ற...

உயிர் காப்பது பொது உடைமை
உயிர் போக்குதல் பெரு மடமை
உயர்வான இக் கருத்தை
உணர்வதுதான் உன் கடமை — சென்ற...

அற நெறியை முற்றும் நீக்கி
அழிவு செய்ய உலகை நோக்கிப்
புறப்பட்டாய் சீனாக்காரா
பொடியாகும் உன் துப்பாக்கி — சென்ற

## முனையிலே முகத்து நில்!

**வீரம் வளரப் போர் வரவேண்டும்!**

பல நூற்றாண்டாய் பாரத நாட்டில்
போரே இல்லை; அதனால் மக்கள்பால்
அஞ்சாமை என்பதே இல்லாத மிழ்ந்தது;
நாட்டன்பு காட்ட வாய்ப்பே இல்லை.

கடமை உணர்ச்சி மடமையில் மாய்ந்தது;
ஓவியம் காவியம் அனைத்தும் உளத்தில்
பத்திமை ஒன்றையே பதிய வைத்தன.

மறச்செயல் செய்ய வாய்ப்பே இல்லை
வெட்டுக் கத்தி வீசியதெலாம் போய்
அட்டைக் கத்தி வீச லாயினர்.

கல்வியில் வீரம் கடுகும் இல்லை
கூனிக் கொட்டாவி விட்டுவிட்டுப்
போன உயிர்போல் பொழுது போக்கினர்
ஒழுக்கம் பழுத்தது விழுப்பம் வீழ்ந்தது.

சைவம் வைணவம் முதலிய சமைய
மெய்ம் முழக்கமெலாம் பொய்ம்மை முழங்கின
தம்பிரான் மார்கள் தம்பிரான் அடியை
நம்பினார்; நாட்டை எண்ணுவதில்லை.

வாலியை மறைந்திருந்து மாய்த்த இராமனை
வீரன் என்று விளம்பினார் என்றால்,
படிப்படியாகப் பாரத நாட்டின்
அடிப்படை வீரமே அழுகிய துணர்க!

### திலகர் தொடுத்த போர்

கரடியும் புலியும் இல்லாக் காடெனப்
போரிலா திருந்த இந்த நாட்டில்
திலகர் மக்களைப் போருக்குத் திரட்டினார்.
ஆங்கிலேயனை, அன்னவன் ஆட்சியை,
ஆங்கில மொழியை, அன்னவன் சரக்கை
அழிக்கவேண்டும் என்பன அனைத்தும்
திலகர் அந்நாள் இட்ட திட்டம்;
ஆங்கிலம் இதன்பால் அவிழ்த்து விட்ட
அடக்கு முறையால் அந்தத் திட்டம்
மக்கள் பால் மதிப்பைப் பெறு வதானது.

### வீரர் எழுந்தனர் பாரதி தோன்றினார்

புதைந்திருந்த வீரம் புறத்தே எழுந்தது
ஆங்கிலேயனை அழித் தொழிக்க
எங்கணும் வீரர்கள் எழுந்தனர்; அவர்களில்
பாரதி ஓர் ஆள்! பாரத நாட்டில்
எங்கணும் தலைவர்கள் எழுந்தனர்; அவர்களில்
பாரதி பண்புறு தலைவர்! கவிஞர்
சிற்சிலர் எழுந்தனர்; அவர்களில் பாரதி
ஒரு பெருங்கவிஞர்! உயிருள வரைக்கும்,
பாரதி பாரத நாட்டு வீரர்!
பாரதி பாரத நாட்டுத் தலைவர்!
பாரதி பாரத நாட்டின் கவிஞர்!
இந்த நாட்டில் இருந்த பல் வீரர்க்கும்
இந்த நாட்டில் இருந்த தலைவர்க்கும்
இந்த நாட்டில் இருந்த கவிஞர்க்கும்
பாரதிக்கும் வேற்றுமை பகர்வேன்:
அவர்கள் எல்லாம் கொள்கை அகன்றனர்
பாரதி பாரதியாகவே இருந்தார்
காந்தி கொள்கைக் கனல் இந்நாட்டில்
நன்று பரவிய போதும் அக் கொள்கை
வென்று முடித்த வேளையதிலும்
காந்தியண்ணல் கழறிவந்த

**பாரதி போர் நூல்**

ஊறிலாக் கொள்கையைப் பாரதி ஒப்பிலர்!
ஊறிலாக் கொள்கை உலகை வளைத்து
நாட்டை மீட்ட நாளிலே தான்
போர்நூல் புதிதாய்ப் புகன்றார் பாரதி;
அதுதான் புதிய ஆத்திசூடி ஆகும்.

**காதல்நூல் – போர்நூல்**

பாரத நாட்டின் நூற்கள் பலவும்
காதல் நூல் போர் நூல் என இருவகைப்படும்
அவைகளைத் தமிழர் அகத்திணை புறத்திணை
என்பார் – அவற்றுள் ஐயனாரிதனார்
புறப்பொருள் வெண்பா மாலை
விதைத்ததும் அறுக்கும் வீரப்பாடல்கள்
படித்ததும் எழுப்பும் பழநாட் போர்நூல்.

**ஆத்திசூடி முழக்கம்**

அதைத்தான் பாரதி அழகுறச் சுருக்கி
அச்சம் தவிர், ஆண்மை தவறேல்,
இளைத்தல் இகழ்ச்சி என்ற மூன்றால்
தொடக்கம் செய்தார் தூய நூலாகவே!
போரினை விரும்பாப் புலமையோர் ஆன
ஔவையார் முனைமுகத்து நில்லேல் என்றார்
போரை விரும்பும் புலமையாளர்
பாரதி, 'முனையிலே முகத்துநில்' என்றார்.
'ஊன்மிக விரும்பு' நாளும் என்றார்.
ஏறு போல் நட என இயம்பிய அதுவும்
கீழோர்க் கஞ்சேல் எனக் கிளத்தியதும்
குன்றென நிமிர்ந்துநில் என்று கூறியதும்
எண்ணுக எண்ணுக இந்நாட்டிளைஞர்கள்.
கேட்டினும் துணிந்துநில் என்று கிளத்தித்
தேசத்தைக் காத்தல் செய்என்று செப்பினார்.
போர்த்தொழில் புரியேல் என்பதைப் புதைத்துப்
போர்த்தொழில் பழகுநீ என்று புகன்றார்.

**சீனனை வெருட்ட!**

சீனன் இந்த நாட்டில் சிற்றடி
வைத்தான் பாரதி இச் சொல் வைத்தார்!

வெள்ளைக் காரனை வெருட்டச் சொன்னவர்
கொள்ளைக் காரனான சீனனை
எதிர்த்துப் போரிட இதனைச் சொன்னார்;
இறக்கவில்லை பாரதி இருக்கின்றார்! அவர்
சாவதற்கஞ்சேல் என்று சாற்றிப்
புத்துயிர் நம்மிடம் புகுத்து கின்றார்.
சீனன் பெற்ற சிறிய வெற்றியைப்
பெரிதென எண்ணிடேல் என்று பேசுவார்
தோல்வியிற் கலங்கேல் என்று சொன்னார்:
பாரத வீரரே பாரத வீரரே
பாரதி பாரதப் படையின் தலைவர்
என்று நீவிர் எண்ணுதல் வேண்டும்
நல்வழி காட்ட வல்லவர் என்று
நம்புதல் வேண்டும். நவிலக் கேளீர்
கோல்கைக் கொண்டு வாழ் என்றார்
வேல்கொண்டு சீனனை வெல்லச் செல்கவே!

## கதர் இராட்டினப் பாட்டு*

### பாரததேவி [வெண்பா]

விண்கொள் இமயமா வெற்பே திருமுடியாய்ப்
பண்கொள் குமரி பணிதாளாய் – மண்கொள்
வளமேதன் மேனியாய் வாய்ந்த "தாய்". வீரர்
உளமேதன் மேனிக் குவப்பு.

### ஜன்ம பூமியின் சிறப்பு [வெண்பா]

தேர்நின்ற வீதிச் செயபேரிகை முழங்கப்
போர்நின்ற வீரர்குலம் பூத்தநிலம் – பார்நின்று
அடல்வளர்த்தும் பாரதநற் புத்திரன்நான் ஆக
உடல்வளர்த்த நாடு என் உயிர்.

### காந்தியடிகளும், கதரும்

### பறை முழக்கம் [சுவை : வீரம்]

"அன்னியர் நூலைத் தொடோம்" என்றசேதி
அறைந்திடடா புவி முற்றும் – எங்கள்

* 1930 ஆம் ஆண்டில் பாவேந்தர் பாடிய பாக்கள்.
அடல் வளர்த்து - (என் தேக) பலத்தை வளரச் செய்து.

அறுபது கோடித் தடக்கைகள் ராட்டினம்
சுற்றும்—சுற்றும்—சுற்றும்

இன்னும் செல்லாது பிறர்செய்யும் சூழ்ச்சிகள்
என்று சொல்லிப் புயம் தட்டு — அட
யானையின்மேல் வள்ளுவா சென்று நீபறை
கொட்டு—கொட்டு—கொட்டு

இன்னல் செய்தார்க்கும் இடர்செய்திடாமல்
இராட்டினம் சுற்றென்று சொல்லும் — எங்கள்
ஏதமில் காந்தியடிகள் அறச்செயல்
வெல்லும்—வெல்லும்—வெல்லும்

கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்
கழறுகின்றேன் அதைக் கேளே — நீவிர்
கதரணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத்
தூளே—தூளே—தூளே

பால்நுரை போலப் பருத்தியுண்டு சொந்தப்
பாரத தேசத்தில் எங்கும் — எனில்
பண்டைமுதல் இழை நூற்பதிலே யாம்
சிங்கம்—சிங்கம்—சிங்கம்

வானம் புனல் சுடர் நாணும்படி உடை
வர்ணமும் சொர்ணமும் கொண்டு — பேரும்
வையம் களித்திட நெய்யும் திறம் எமக்
குண்டு—உண்டு—உண்டு

ஆனஇந் நாட்டினைச் சந்தையென் றாக்கிய
அந்நியர் போக்கையும் கண்டோம் — எனில்
ஆக்கந் தருவது சக்கரம் ஆம் எனக்
கொண்டோம்—கொண்டோம்—கொண்டோம்

பானல் விழியுடை யாளெங்கள் தாயிந்தப்
பாரினை யாள்பவள் என்றே — நெஞ்சில்
பாயும் எழுச்சிக் கனல் சொன்னதாகச் சொல்
நன்றே—நன்றே—நன்றே.

---

தடக் கைகள் — நீண்ட கைகள். இன்னல் — துன்பம். ஏதமில் காந்தியடிகள் —குற்றமில்லாத காந்தியடிகள் கன்னல் — கரும்பு. பண்டைமுதல் — ஆதிமுதல். சுடர் — சூரியன்.

## சுதந்தரதேவியும், கதரும்

**சுவை: சிங்காரம் – இராகம்: பியாக் – தாளம்: சாப்பு**

ஆளை மயக்கிடும் மாதொருத்தி – உடல்
அத்தனையும் பொன்னை ஒத்திருந்தாள் – அவள்
பாளை பிளந்த சிரிப்பினிலே – என்னைப்
பார்த்துரைத்தாள் "எந்த நாளையிலே – உன்றன்
தோளைத் தழுவிடக்கூடும்" என்றே – "அடி!
சுந்தரி உன்பெயர் ஊர் எதென்றேன் – அவள்
"காளி யனுப்பிய கன்னி" யென்றாள் – என்றன்
காதற் சுந்தர மங்கையன்றோ அவள் (ஆளை)

"இந்தத் தினம் இந்த நேரத்திலே – நல்ல
இன்ப மிகுக்கக் கலந்திடுவோம் – இதில்
பிந்தி யெதற்கடி மாதரசி – இங்குப்
பேசிய நேரமும் வீண்கழித்தோம்' – என்று
சிந்தை களிக்க உரைத்து நின்றேன் – "ஒரு
சேதியிருக்குது கேள்" என்றனள் – அந்த
விந்தையைக் கேட்கவும் ஆவலுற்றேன் – என்
வேட்கை பொறுக்கவும் கூடவில்லை – பின்பு (ஆளை)

கன்னி யுரைத்தது கேட்டிடுவீர்;– "உள்ளக்
காதல் இருப்பது மெய் எனிலோ – அட
சின்ன இராட்டின நூலிழைப்பாய் – அதில்
தீட்டின்றி நெய்த உடை உடுப்பாய் – வரும்
அன்னியர் நூலைத் தலைகவிழ்ப்பாய் – அதற்
கப்புறம் என்னைக் கலந்திடுவாய்" – என்று
கன்னியுரைத்து மறைந்து விட்டாள் – அவள்
கட்டளை தன்னை மறப்பதுண்டோ – அந்த (ஆளை)

குறிப்பு: – இராட்டினத்தில் நூலிழைத்து நெய்து உடுத்த வேண்டும்; அந்நியர் நூலைத் தொலைக்க வேண்டும்; அதன் பின்புதான் சுதந்தரம் பெறமுடியும் என்பது இதன் கருத்து.

---

பானல் விழி – பானல் பூப்போன்ற கண். எழுச்சிக்கனல் – ஆவேசத்தீ.

## தேசத்தாரின் பிரதான வேலை

### சுவை: சாந்தம்

நாடகங்களில் "கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு" என்று பாடுவதுண்டு. அந்தக் குறத்திப் பாட்டின் மெட்டு.

பால்நுரைபோல் பாரதத்தில்
பஞ்சுவிளைப்பீரே — நல்ல
பஞ்சுவிளைப்பீரே — அந்தப்
பஞ்சுதனைச் சுத்திசெய்வீர்
பனிமலைபோல் நீரே.

தேனருந்தும் ஈக்களெல்லாம்
சேர்ந்து மொய்த்தல்போலே — மிகச்
சேர்ந்து மொய்த்தல்போலே — முழுத்
தேசமின்று ராட்டினத்தைச்
சேர்ந்து சுற்றுவீரே.

ஆனமட்டும் சிலந்தியிழை
போல மெலிதாக — அது
போல மெலிதாக — உம்
ஐந்துவிரல் தேர்ச்சியிலே
அழகிழை நூற்பீரே.

ஏனத்தினிற் சோறுகேட்கும்
ஏழையரும் யாரும் — நம்
ஏழையரும் யாரும் — பஞ்
சிழையை நூற்றுத் தறிநெய்வதால்
கொத்தடிமை தீரும்.
தாய்நிலம் போய் மற்றவரைத்
தலைவணங்க லாமோ ? — தன்
தலைவணங்க லாமோ? — இனித்
தறித்தொழிலின் நன்மையினை
மறப்பதுண்டோ நாமே?

காய்நினைத்துக் கனியிழக்கும்
கதை மறப்பீர் நீரே — அந்தக்
கதை மறப்பீர் நீரே — உங்கள்
கதி நினைத்து வறுமையென்னும்
கனல் அவிக்க வாரீர்!

போயழிக்கும் நமதுரிமை
போக்க நினைப் போரை — மெல்லப்
போக்க நினைப் போரை — மிகப்
போற்றுகநீர் இப்பணி யெப்
போது மறவாமே.

தோய்மது வாய்க் காதில்வந்து
வீழ்ந்ததொரு வாக்கு — வந்து
வீழ்ந்ததொரு வாக்கு — அது
தொல்லைகெட வந்துதித்த
காந்தி அண்ணல் வாக்கு.

"கதரணிவீர்" என்றுரைத்த
காந்தியண்ணல் ஆணை — எழிற்
காந்தியண்ணல் ஆணை — அதைக்
கருதிடுவீர் அது உமக்கு
நாரதனார் வீணை.

கதரணிவீர் என்றமொழி
அடிமையுற்ற நேரம் — நாம்
அடிமையுற்ற நேரம்
கருதிடுவீர் அது நமக்கு
நான்மறையின் சாரம்.

கதரணிவீர் எனும் அடிகள்
காந்தியின் வாய்க்குமுதம் — நம்
காந்தியின் வாய்க்குமுதம் — மிகக்
கருதிடுவீர் அது நமது
வாழ்வினுக்கோர் அமுதம்.

கதரணிவீர் என்னும் வார்த்தை
யுடனொழுகும் அன்பும் — அத
னுடன் ஒழுகும் அன்பும் — நம்
காந்தியண்ணல் அன்புமொழி
யால் விளையும் இன்பம்.

சதுர் நமக்குத் தோளிலுண்டு
மானமுண்டு பாரீர் — நல்ல

---

பணி — வேலை. மது — தேன். ஆணை — கட்டளை. வாய்க்குமுதம் — வாயாகிய அல்லிமலர். சதுர் — பலம்.

மானமுண்டு பாரீர்
சதைவருத்தித் தாயடிமைத்
தனம் அகற்ற வாரீர்.

விதி நமக்கு வாய்த்ததுண்டோ
வேற்றுவர்கை பார்க்க — நாம்
வேற்றுவர்கை பார்க்க
விளையும் பஞ்சில் விரல்பொருந்த
விடுதலை நீர் காண்பீர்.

அதிகமுண்டு விளைவுநிலம்
அதிகமுண்டு மக்கள் — இங்
கதிகமுண்டு மக்கள்
நிதிகளெலாம் பிறருக்கிட்டு
வறுமைகொள்ள வேண்டாம்.

கதரணிவோம் ஒன்றுகூடிக்
கலிதொலைக்க நாமே — தீக்
கலிதொலைக்க நாமே — தீக்
கலி தொலைத்துக் கிருதயுகம்
காணப் பெறுவோ மே.

## இராட்டினச் சிறப்பு

**சுவை: சிங்காரம்**

**'தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே'**

**என்ற மெட்டு**

கூட்டமுதம் நானுனக்கு
ராட்டினப் பெண்ணே — அடி
கொஞ்சுகிளி நீ எனக்கு
ராட்டினப் பெண்ணே.

பாட்டினிக்கப் பாடுகின்ற
ராட்டினப் பெண்ணே — பண்டு
பாரதத்திலே பிறந்த
ராட்டினப் பெண்ணே.

ஊட்டமுறத் தோளுரமும்
உடலழகும் — எனக்

சுக்கமும் கொடுத்துவரும்
ராட்டினப் பெண்ணே.

காட்டுமலர்த் தேனுருசி
வண்டறிதல் போல் – நாம்
கைகலந்த பின்புசுகம்
கண்டு மகிழ்ந்தேன்.

தொட்டகைகள் விட்ட தில்லை
மாதமும் பல – உன்னைச்
சூல்படுத்தி என்னை இன்பம்
தோய வைத்தன.

எட்டுத்திசை யோர் அடையும்
இன்பமனைத்தும் – நமக்
கின்றளித்த தெய்வமதை
என்றும் மறவோம்.

சுட்டி நமை வாழ்த்துதடி
இந்த உலகம் – நாம்
துள்ளிவிளை யாட – ஒரு
பிள்ளை பெற்றதால்.

இட்டு வழங்கும் படி செய்
இவ்வுல கெங்கும் – நாம்
ஈன்ற சுதந்தரப் பிள்ளை
காப் பரிசியே.

### அன்னைக்கு ஆடை வளர்க

சுவை: சோகம் [பஃறொடை வெண்பா]

"ஆவி இழக்கலாம்"
"ஆடை இழப்பதுண்டோ"!
"கூவிக் குரல் இழக்கும்"
"கோதைதுயர் கண்டிருந்தும்"
"வீரர்களும் மன்னர்களும்"
"மீட்கக் கரு தீரோ!"
"காரிகை என் மானமுங்கள்"
"கண்முன் இழப்ப துண்டோ?"

என்று துடித்தழுதாள்
அன்றந்தப் பாஞ்சாலி

சென்றுதுர்ச் சாதனன்தான்
சேலை பறித்திடுங் கால்.

முப்பத்து முக்கோடி
மொய்ம் புடைய மைந் தர்களை
இப்புவியிற் பெற்ற
எழில் பாரதத்தாளின்
ஆடை பறித்தார்
அதிகாரம் கொண்டவர்கள்
ஓடி அவளின்
உடைமீட்க வேண்டாமோ?

பஞ்சு விளைவிக்கப்
பறந்தோட வேண்டாமோ?
மிஞ்சுபொதி பொதியாய்
மெல் இழை தான் நூற் கோமோ?
நெய்து நெய்து வேறு
நிலத்தார்க்கும் நாமுதவச்
செய்து குவியோமோ
சிறந்த கதராடை
ஓகோநம் பாரதத்தாய்
உற்றதன் மைந்தரிடம்
சோகத்தால் வாய்விட்டுச்
சொல்வதும் கேளீர்:—

"ஆவி யிழக்கலாம்"
"ஆடை இழப்பதுண்டோ"
"கூவிக் குரலிழக்கும்"
"கோதை துயர்கண்டிருந்தும்"
"வீரர்களும் மன்னர்களும்"
"மீட்கக் கருதீரோ"
"காரிகை என் மானமுங்கள்"
"கண்முன் இழப்பதுண்டோ"

கேட்டீரோ நம்மவரே
கீர்த்தியுள்ள பாரதரே?
வாட்டுகின்ற தந்தோநம்
மாதாவின் இம்மொழிகள்.

"தீயார் துகில் பறித்து"
"தீர்க்கின்றார் என்மானம்"
"மாயா மலர்க்கண்ணா"
"வந்து துயர் தீர்த்திடுவாய்"

என்று பாஞ்சாலி
இசைக்க அதுகேட்டுச்
சென்று மலர்க் கண்ணன்
சித்திரஞ் சேர் ஆடை
வளர்ந்திடுக என்றான்
அறம் வளர்க்க வந்தோன் –
வளர்ந்ததுவாம் வண்கடல் போல்
வான்போல் மலையைப்போல் –
இங்கதுபோல் தேசம்
இளமைந்தர் நம்மிடத்தில்
சிங்கம் கதறுதல் போல்
தேம்பி அழுதழுது

"தீயர் துகில் பறித்துத்"
"தீர்க்கின்றார் என்மானம்"
"மாயா மலர்க் கண்ணா"
"வந்து துயர் தீர்த்திடுவாய்"

என்று உரைத்திட்டாள்
இதனைச் செவியுற்றுச்
சென்று கண்ணக் காந்தி
சித்திரஞ் சேர் ஆடை
வளர்ந்திடுக என்றான்
அறம் வளர்க் வந்தோன் –
வளர்க வளர்க நம் வாழ்வு!

## பாரததேவி வாழ்த்து

### அகவல்

பொன்னிறக் கதிர்விளை நன்செயிற் புத்தொளி
வடிவமர் அன்னாய், நின்னெழில் வாழ்க!
கணுவகல் கரும்பின் இனியநற் சாறும்!
கதலியும் செந்நெலும் உடையை நீ வாழ்க!
தென்றலின் குளிரும் தேன்சுவைப் பழமும்

நன்றியல் சோலை நலத்தினாய் வாழ்க!
வானுயர் பனிமலை வண்புனர் கங்கையென்
றுலகெலாம் உரைக்கும் பெரும் புகழ் உடையைநீ!
முப்பது கோடியர் முனிவராய் வீரராய்ப்
பெற்றிடும் தேவிநீ வீறுகொள் பெற்றியாய்,
கலிப்பகை வென்றே தலைநிமிர் குன்றனாய்,
கடையுகம் முற்றினும் திறல்கெடாக் காளிநீ!
அறமெனும் வயிரக் குலிசத் தோளுடை
அன்னை நீ வாழ்க! அன்னை நீ வாழ்கவே!

## முன்னேறு...

ஏறு முன்னேறுதி ராவிடனே
இன்னலை நீக்குதல் உன்கடனே – விரைந்தேறு...

வீறுகொண் டேறுவி ரைந்துமுன் னேருவி
ழாக்கண்ட பிள்ளையைப் போல் மகிழ்ந்தேறு

நீறுபடுத்திடு வாய்பகை நெஞ்சினை
நீதான் இறைவன் திராவிட நாட்டினுக்—கேறு...

குமரிஇத் தெற்கிலும் வங்கம் வடக்கிலும்
கொட்டும் திரைக்கடல் மற்றிரு பாங்கிலும்
அமையக் கிடந்த திராவிட நாட்டினை
ஆண்டவன் ஆளப் பிறந்தவன் நீ விரைந்—தேறு

செல்வத்தை நல்கும் மலைகளும் மண்ணிடைத்
தேனென்று பாய்ந்திடும் ஆறும் சுனைகளும்
நெல்லைக் குவித்திடும் நன்செயும் முத்தை
நிறைக்கும் திரைகொள் திராவிடம் வெல்கஎன்—றேறு

வையம் எதிர்த்து வந்தாலும் கலங்காத
மறவரும் பச்சை மயிலொத்த பெண்களும்
மெய்யறம் காத்துநல் லின்பத்தி லாழ்ந்திடும்
மேன்மைத் திராவிடம் வாழியவே என—ஏறு

## சுயமரியாதை எக்காளம்

**தன்யாசி—ஆதி. கண்ணிகள்.**

நெருப்பில் துடித்திடும் மக்கட்கெல்லாம்
நல்ல காப்பு – நல்கும்
நீதச்சுயமரி யாதையென்னும் குளிர் தோப்பு! – அங்குச்
சுமப்பதெல்லாம் இன்ப மாகிய வண்புனல் ஓடை—நீவிர்
சுகித்திடவோ அறிவான இயக்கத்தின் வாடை!—இங்கு
விருப்பமெலாம் விழலாக்கிய வாழ்க்கையின் கோணை—அங்கு
விளையும் கருத்துக்கள் காதிலினித்திடும் வீணை!—இங்
கிருப்பதெலாம் ஒருவர்க்கொரு வர்செய்யும் சேட்டை—அங்
கெழுப்பியிருப்பது சமத்துவ மானகற் கோட்டை.

உப்பினை உண்டு கரிப்புக் கழும்சிறு பிள்ளை—வாழ்வில்
ஊமைக் கடவுள்! எதற்குத் தொட்டீர் அந்த முள்ளை?—தேசம்
முப்பத்து முக்கோடி மக்களினால் பெற்ற பேறு;—இங்கு
மூச்சுவிடக்கூட மார்க்கமில்லா மதச் சேறு!—மண்ணில்
எப்பக்கங் காணினும் இன்பத்திலேறும்முன் னேற்றம்—இங்
கீன மதப்பலி பீடத்திலே முடை நாற்றம்!—சொல்விர்
எப்பதம் பெற்றனிர் இந்நாள் வரைக்கும்மண் மேலே—நீர்
எதற்கும் உமக்குள் உதிக்கும் மதக்கொள்கை யாலே?

"தாழ்ந்தவர் என்பர்" உயர்ந்தவர்க் கிம்மொழி இன்பம்;—இந்தச்
சாத்திரத்தால் இந்த நாள்வரைக்குந் துன்பம்! துன்பம்!! –
மண்ணில்

தாழ்ந்தவர் என்றொரு சாதியுரைப்பவன் தீயன்;—அவன்
தன்னுட லைப்பிறர் சொத்தில் வளர்த்திடும் பேயன்—நீர்
தாழ்ந்து படிந்து தரைமட்டமாகிய நாட்டில்—இனிச்
சாக்குருவிச் சத்தம் நீக்கிடுவீர் மண வீட்டில்!—இன்று
வீழ்ந்தவர் பின்னர் விழித்ததற்கே அடையாளம்—வாய்
விட்டிசைப்பீர்கள் சுயமரியாதை எக்காளம்!

# பெண்கள் பாட்டு

## பந்துக்கு வருந்தல்

(ஆருக்குப் பொன்னம்பலம் கிருபை இருக்குதோ அவனே
பெரியவனாம் என்ற மெட்டு)

### பல்லவி

எறிந்த என் பூப்பந்தை எடுக்க முடியுமோ
இசைப்பீர் சகிமாரே. (எறி)

### அநுபல்லவி

அறிந்தவரைக்கும் பந்து வானம் அளாவிப் பின்
ஆஸ்திகள் நடுவீட்டில் போய்ச்சேர்ந்த தாலே (எறி)

### சரணம்

பார்ப்பனன் கால் மாடு – தலையைவைத்துப்
படுக்கும் அப்புல்ல னோடு – முட்கள் செறிந்து
மூர்க்கமாய் வளர்ந்திடும் மூடவழக்கக்காடு
மொய்க்கும் ஆஸ்திகன் வீடு முடைநாற்றச் சுடுகாடு. (எறி)

அகத்தில் ஆணவம் கொழுக்கும் – பொய்வஞ்சப்பாசை
அணுகவும் கால் வழுக்கும் – ஏழைக்கு மட்டும்
இகசுகம் பொய்மை என்னும் இதயத்தின் அழுக்கும்
இழுக்கமெல்லாம் மறைக்க முகத்திற் குறிபழுக்கும் (எறி)

கடவுள்கள் என்னும் உலையே – மூட்டித்துவைத்த
கடுமதவாள்கொள் நிலையே – நிலையாய் நின்று
படியில் தாழ்ந்தோர் என்போரைப் பண்ணும் படுகொலையே
பாங்கியரே அதனைப் பார்க்கச் சகிக்கலையே. (எறி)

ஏழை அறிவை வேட்டை – இட்டதினாலே
இழிகோயில் என்னும் நாட்டை – விழியிற்காட்டிப்
பாழாக்கச் சொல்லியதிற் பறித்திடும் பணமூட்டை!
பார்க்கவும் சகியேன் ஆஸ்திகன் வீட்டை. (எறி)

பொய்மைப் புராணப் பேச்சில் – மக்களறிவைப்
புதைக்கும் அவனின் மூச்சில் – வெளிமயங்க
மொய்க்கும் விருதா பக்தி மொழிந்திடும் கைவீச்சில்
முகம் கருகியிருக்கும் என்பந்து சீச்சி. (எறி)

# பிள்ளைப் பாட்டு

## நிலா

**துருக்கச் சிறுவன்:—**

நிலவே நிலவே நிற்பாய் நிலவே!
மெருகு கொடுத்த வெள்ளி நிலவே!
நாங்கள் உன்னை நாயம் கேட்போம்
கூறவேண்டும் குளிர்ந்த நிலவே!
மூன்றாம்பிறையாய்த் தோன்றுங்காலை
என் கூட்டத்தார் உன்னைத் தொழுவார்
ஆதலாலே அழகு நிலவே!
துருக்கருக்குச் சொந்தப் பொருள்நீ!

**கத்தோலிக்கச் சிறுவன்:—**

கன்னி மரியாள் உன்மேல் நிற்பாள்
ஆதலாலே அழகு நிலவே!
கத்தோலிக்கர் சொத்து நீதான்!

**இந்துச் சிறுவன்:—**

எங்கள் சிவனார் முடியில் இருப்பாய்
ஆதலாலே அழகு நிலவே!
இந்துமதத்தார் சொந்தப் பொருள் நீ!

**மூவரும்:**

மூன்று பேரும் மொழியக் கேட்டாய்
யார்க்குச் சொந்தம் தீர்ப்புச் சொல்வாய்?

**சு.ம. சிறுவன், மற்றப் பிள்ளைகளைக்குறித்து:—**

உன் தகப்பன் உளறு வாயன்
துருக்கனென்று சொன்னான் உன்னை.
உன் தகப்பன் உளறுவாயன்
கத்தோலிக்கப் பட்டம் கட்டினான்.
உன் தகப்பன் உளறுவாயன்
இந்து என்றான் ஏற்றுக்கொண்டாய்!
துருக்கன் என்ற சொல்லை நீக்கு!
கத்தோலிக்கப் பித்தம் தொலைப்பாய்!
இந்து என்ற சிந்தனை வேண்டாம்!
யாவரும் மனிதர் என்பது தெரிந்தால்

நிலவும் பொதுவே என்பது தெரியும்.
அறிந்து வாழ்வீர் அன்பர் கூட்டமே.

## வாழ்க திராவிடம்

நிழலில் இருந்த நின்உடல் நிறமும்,
வெயிலில் இருந்தஉன் கையின் நிறமும்,
வேறா யினும், அம்மெய்யும், கையும்,
வேறுவே றென்று விளம்புவ துண்டா?
நீயும் தெலுங்கனும் நீங்கொணா இனத்தவர்,
இந்த உண்மையை "இடைநாள்" என்னும்
நிழல்மறைத் திருந்தது. நீ,உன் உணர்வால்,
உள்ள உறவினை உற்று நோக்குக.

பரந்து கிடக்கும்உன் பழந்தமிழ் நாட்டைப்
பார்! உன் பைந்தமிழ்ச் சீர்பார்! மகிழ்ச்சிகொள்!

உன்னையும் தெலுங்கன் தன்னையும் விடாமல்
ஒன்று சேர்க்கும் ஓர் "உறவை" நீஏன்
அறுக்க முயன்றனை? ஆகுமா உன்னால்?

பிறர்கண் டஞ்சுமுன் பெரியபட் டாளத்தை
அறுத்துக் குறுக்குதல் அறியாமை அன்றோ!

ஏன்உன் இனத்தை எதிரிக் காக்கி
ஊனத்தை நாட்டுக் குண்டாக்கு கின்றாய்?

அயலார் தம்மை,நீ அண்டவில்லை யே;
தெலுங்கனை நம்மருஞ் செந்தமிழ் மறவனை
அடைகின்றாய் நீ, அறஞ்செய் கின்றாய்!

அகத்தில் உணர்ச்சி அருவி பாய்ச்சும்
நம்மருந் தாய்த்தமிழ் செம்மைப் பழந்தமிழ்,
தெலுங்கென ஒருமொழி செப்பிய துண்டா?
கன்னடம் உண்டெனக் கழறிய துண்டா?
கேரளம் உண்டெனக் கிளத்திய துண்டா?
துளுவம் உண்டெனச் சொன்ன துண்டா?

சேரன் பிறன் என்று செந்தமிழ் சொன்னதா?
அன்னவன் நாட்டை அயல்நா டென்றதா?
பாண்டிய நாட்டைப் பழந்தமிழ் வெறுத்ததா?
சோழ நாட்டைத் தொடாதீர் என்றதா?

தலைமுறை தலைமுறை தலைமுறை யாகக்
கிடந்தஉன் புகழுக் கடையாள மாக
இருந்தஉன் விற்கொடி எட்டிபோற் கசந்ததா?
கயற்கொடி புலிக்கொடி கசப்பா நல்கின?

"தெலுங்க நாடு" செப்பு கேரளம்
கன்னடம் துளுவம் என்னும் நாடுகள்
அனைத்தும் புதுப்பெயர் ஆம்என அறிக.
எல்லாம் பழந்தமிழ் நாடென இயம்புக.
யாவரும் என்றன் இனத்தார் என்க.
திராவிடம் என்றன் திருநாடென்று
சரேலென எழுக தடந்தோள் ஆர்த்தே!
மீட்பாய் திராவிட நாட்டை! அதோ பார்
வீழ்ந்த துன்றன் பகைப் புலம்
வாழ்ந்தனர் திராவிட மக்கள் இனிதே!

## பாரீஸ் விடுதலை விழா!*

வெண்ணிலா, முகிலி னின்று
மீண்டது போலே மீண்டாய்
எண்ணிலா மகிழ்ச்சி யூட்டும்
எழில் பாரீஸ் நகரே நீதான்!
கண்ணிலா இட்லர் நின்பால்
கால் வைத்தான்! தோல்வி பெற்றான்!
மண்ணுளார் துயரி னின்று
மீண்டனர். மகிழ்ச்சி யுற்றார்.

தனித்தாளும் ஆட்சி என்னும்
தவிர்ப்பதற் கரிய நோயை
இனித்தாளோம் எனக்கிடந்த
வையத்துக் கிரத்தம் சிந்தி
மனித்தரே ஆள்வ தென்ற
மாண்புறு மருந்தின் நுட்பந்
தனைக் காட்டிப், பிராஞ்சு நாடே
சாற்றரும் பெருமை பெற்றாய்.

* கவர்னர் லூய் பொன்வேன் அவர்கள் தலைமையில் 1.10.44ல் நடந்த பாரீஸ் விடுதலை விழாவில் சொல்லியது.

"பிறப்புரி மைகாண் பார்க்கும்
விடுதலை" எனப் பிழிந்த
நறுந்தேனை எங்கும், பெய்தாய்!
நால்வகைச் சாதி யில்லை;
தருக்குறும் மேல், கீழ் இல்லை
சமம் யாரும் என்றாய்! வானில்
அறைந்தனை முரசம் "மக்கள்
உடன்பிறப் பாளர்" என்றே!

கல்வியைப் பொதுமை யாக்கிக்,
காட்டினாய் நல்வே டிக்கை!
செல்வரின் இல்லத் துள்ளும்
வறியரின் சிறுவீட் டுள்ளும்
நல்லறி வென்னும் பெண்ணாள்
மாறின்றி நண்ண லுற்றாள்
வில்லிருள் புறங்காட் டிற்று
வையகம் அறிந்த தன்றோ!

வையத்து மக்கள் உன்சீர்
மறக்கிலார்! அவர்கள் நீண்ட
கையெலாம் உன்னைக் காக்கக்
கவிந்திடும் என்ற செய்தி,
பொய்யெலாம் உருக்கொண் டுள்ள
பகைவர்க்குப் புரிய வில்லை!
மெய்! பாரீஸ் மீண்ட திந்நாள்!
நாளைமீள் வாய் பிரான்சே!

இலை மறை காயோ? இல்லை!
இவ்வையம் அறியும்; போரின்
கலைமுறை பிறழா வண்ணம்
பகைவரைக் கலக்கும் வீரர்
தலைமுறை யுடையாய்! மாண்பின்
தக்காரைப் பெற்றுள் ளாய்நீ!
நிலைகலங் காத் தெகோல் சீர்
நிகழ்த்தவோ பிராஞ்சு நாடே?

வழி உண்டாம்; நண்பு கொள்ள
நாடுகள் வந்து சேரும்;

விழியுண்டாம்; வன்மை உண்டாம்
மீட்போம் நாம் என்று போரின்
தொழில் கண்ட தெகோல் இருந்தார்
தூய்நாடே மீட்சி கண்டாய்
பழிகாரர் பட்ட பாடு
கொஞ்சமா ரஷிய ராலே?

தொல்லையை ஒருகை தாங்க
மற்றோர்கை சுறுசு றுப்பால்
வல்லபோர்க் கருவி செய்து
வரும்பகை மறுத்து. நின்பால்
நல்லுளம் காட்டும் இங்கி
லந்துக்கு நன்றி சொல்வோம்
வெல்லும் ஆயுதம் கடல்போல்
அமெரிக்கா தருதல் வீணோ!

சீனத்தின் ஒத்து ழைப்பும்
தெரிந்துள் ளோம், பிராஞ்சு நாடே
மானத்தை உயிராய்க் கொண்ட
நின்மக்கள், பகைவர் என்னும்
கானத்து விலங்கி னத்தைக்
கடிந்ததில் வியப்பும் உண்டோ!
தேனொத்த தமிழரின் போர்ச்
செயலையும் மறக்க வேண்டாம்.

குடியேற்ற நாடு தோறும்
நீவெற்றி கொள்ளத் தொண்டு
முடியேற்றுச் செய்தார் உன்றன்
முழுதன்பர் என்றால் இங்கு
கொடிதோறும் நோற்ற நல்லார்
போன்வேனே சிறந்தார் என்போம்
கொடியேற்றுப் பிரஞ்சு நாடே
முழுவெற்றி கொண்டு வாழ்க!

## என் கருத்தில்...

வள்ளுவர்க்கு நிறமில்லை மதமும் இல்லை
மதங்கட்[கு] அப்பாலிருந்தே குறள் செய்துள்ளார்

உள்ளசிறு மதங்குறிக்கும் சொற்கள் கொண்டே
உவகையொடு தத்தமது மதத்தில் சேர்த்து
தெள்ளிவைத்த நீறிடுதல் திருமண் சார்த்தல்
செழும்பிண்டி அமர்ந்தானைச் சேர்ந்தா னென்னல்
தள்ளிவைத்த மரபென்று பேசல் யாவும்
சரியென்று தோன்றவில்லை யென்கருத்தில்!

## "தீவாளியா?"

### எண்சீர் விருத்தம்

அசுரர் என்று தமிழர்களை, ஆரியர்கள்
அழைத்தார்கள்; சுரர் என்று தம்மைச் சொன்னார்
பசி கொண்ட நரி போலே ஆரியர்கள்
பழந்தமிழர் தமையணுகி, வயிற்றைக் காட்டி
இசைந்தவர்பால் கூத்தாடி, இனத்தைக் கூட்டி
இடம்பெற்றுக் கலாம் விளைத்துக் குடித்தனத்தை
வசம்பார்த்துப் பெரிதாக்கி வைத்தபின்னர்
வளநாட்டில் ஆதிக்கம் பெற நினைத்தார்.

செங்கதிரை நாழிகைகள், மேற்கில் தள்ளும்
செயல்போலே, ஆரியர்கள், தமிழர் வாழ்வில்
பொங்குதமிழ்க் கலைச்செல்வம் மறையும் வண்ணம்
புனைசுருட்டுச் செய்து வந்தார்; ஐயகோ நம்
மங்காத தமிழ் மறவர் வரலா றெல்லாம்
மங்கும் வகை செய்தார்கள்; வையங் கண்ட
தங்கத்தை இரும்பென்று சொன்னார்; ஐயோ
தமிழரெலாம் அசுரர்கள்! தாம்சு ரர்கள்!

அரக்கரென்றார்; அசுரர் என்றார்; நம்மையெல்லாம்
அழகற்றோர் ஒழுக்கமிலார், எனவரைந்தார்
சுரக்கவில்லை மலையருவி! உணர்ச்சி வெள்ளம்
தோன்றவில்லை நெஞ்சத்தில் நமைம றந்தோம்
குரக்கி னங்கள் என்றுரைத்தார். நம்மை யெல்லாம்
குறுங்கரடிக் கூட்டமென்றார் கேட்டி ருந்தோம்.
அரிக்கின்ற செல், அழிக்க மறந்த தோள்கள்,
அன்று போல் இன்றுமுண்டு குன்றத் தைப்போல்.

வாலியின் பால் வஞ்சகத்தைச் செய்த ராமன்
வாலிக்கு மோட்சத்தை அருள் செய் தானாம்!
கோலைத்தன் வசமாக்கச் சதையை விற்ற
கொடியவன்பேர் ஆழ்வானாம்! உடன் பிறந்தீர்,
கேலி யொன்று கேட்டீரோ, நரகன் என்போன்,
கீழ்ச் செயல்கள் செய்தானாம், சுரர்கட் கெல்லாம்
ஏலாத செயல்செய்த பாவி யாம், அவ்
விந்திரனின் ஆட்சியையும் பறித்த துண்டாம்.

பெண்ணினத்தைக் கொல்லாமை கடைப்பி டித்த
பெரியானை, நரகன் எனும் தமிழச் சேயைப்
பெண்டாட்டி தனையனுப்பி, மானமின்றிப்
பெருவெற்றி கிழித்தாராம் கண்ண வீரர்.
பண்டிகையாம்! தீவாளி அந்த நாளாம்;
பல்லக்கை வழிகூட்டி அனுப்பு கின்ற
பெண்டுக்குப் போடுதல் போல் கழுத்துக் கோடி
பெரிதுபெரி தாய் வாங்கிப் படைய லிட்டே

அணிந்திடவும் வேண்டுமாம், அந்த நாளில்;
அக மகிழ வேண்டுமாம். அதுவுமன்றித்
தணியாத மகிழ்ச்சிதனை, அறிவை அந் நாள்
தலைமுழுக வேண்டுமாம்; தமிழர் மானம்
தணல் பட்டுப் படபடென வெடித்த தென்று
சாற்றுதல் போல் வெடிகொளுத்த வேண்டுமாம்; இப்
பணி யிட்டோர் ஆரியர்கள். தமிழர் என்னும்
பண்டிதர்கள் இவற்றிற்குக் கவிதை செய்தார்.

இனமழிப்பார் அடிசுமக்கும் படிச்சு வர்கள்
இனமழிப்பார் அடிசுமப்பார் படிச்சவர்கள்!
கன லென்று நடுங்கினரோ? நம்மினத்தைக்
கசந்தாரோ? வற்றியதோர் ஓலையைப் போல்
மனம் சுருண்டு போனாரோ? தம்மைத் தாமே
மறந்தாரோ. ஐயகோ தமிழர் தம்முன்
முன மிருந்தார் சிலகம்பர்; விட்டதாலே
முளைத்தகம் பக்கிளைகள் மும்ம டங்கோ?

## கூதிர் விழா*

கூதிர் விழா — நல்ல
குளிர்காலப் பொன் விழா
கொட்டடா கொட்டடா முரசம்
வீதிக்கு வீதி பல
வீட்டுப் புலித் தமிழர்
வில்லேந்தி வந்தனர் வாழ்கக!
சூதற்ற தமிழ் மாதர்
சோலைப் பசுங்கிளிகள்
சுடர்விளக் கேந்தினர் வாழ்க!
போழ்தும் புறம் போகப்
பொன்னாடு வலம் வந்து
பொதுமன்று சூழ்ந்தனர் வாழ்க!
தமிழர் விலா நல்ல
தன்கூதிர்ப் பொன் விழா
தடதடென் றோச்சடா முழவம்.
அமுதென்று பாடுவோம்
அது நன்று போற்றுவோம்
அறிவென்று சொல்லடா தமிழை!
நமதென்று நாட்டடா
நந்தமிழ்ப் பொன்னாடு!
நரிகளுக் கிங்கில்லை வேலை.
சமைகின்ற கலை யெலாம்
தமிழ் தந்த பணியெலாம்
தலையென்று சாற்றடா உலகில்.
ஊதடா — நற்றமிழர்
ஒன்றென்று நாடெலாம்
ஊதடா ஊதடா தாரை!
மீதெலாம் கார்வானம்
விளைவெலாம் செந்நெல்
விருப்பெலாம் போர் ஆமென் றூது!
போழ்தெலாம் அறமென்று
புகையெலாம் அகிலென்று
பொற்றாரை ஊதடா ஊது!
கூதிராம் ஐப்பசிக்
கார்த்திகைக் குளிர் விழா
கொட்டடா கொட்டடா முரசம்!

* திராவிட நாடு இதழில் வந்தது.

# பாடல் முதற்குறிப்பகராதி

| பாடல் | பக்கம் |
|---|---|
| அக்கால | 27 |
| அகத்தியக் | 276 |
| அகத்திலுறும் | 160 |
| அவளிப்படி | 362 |
| அச்சம்தவிர் | 201 |
| அசுரர் என்று | 466 |
| அடிகளே என்று | 427 |
| அண்டுபவர் | 96 |
| அண்டையயல் | 93 |
| அணிந்திடவும் | 467 |
| அணைத்திட்ட | 402 |
| அத்தைமகள் | 148 |
| அதிகரித்த | 97 |
| அந்தியகாலம் | 80 |
| அந்தியிருளாற் | 17 |
| அந்தியிலே | 137 |
| அந்நாளில் | 171 |
| அமிழ்தென்று | 413 |
| அமுதவல்லி காத் | 16 |
| அமுதவல்லியன்றோ | 18 |
| அமைதியில் | 132 |
| அரக்கரென்றார் | 466 |
| அரசன் அமைச்சர் | 14 |
| அரசன் மகன் | 250 |
| அரசனுக்குப் பின் | 28 |
| அரசனுக்கும் எனக்கு | 27 |
| அரசாங்கப் | 33 |
| அகண்மனை அலு | 226 |
| அரண்மனை தன்னில் | 229 |
| அரண்மனைப்பின் | 248 |
| அரண்மனையின் | 251 |
| அரியணை | 214 |
| அருகவளும் | 71 |
| அருவிமலை | 316 |
| அலைமாகடல் | 110 |
| அவள்மேல் தானே | 356 |
| அவணியிலே | 71 |
| அவையத்தார் | 349 |
| அவையினிலே | 25 |
| அழகன் வையத் | 234 |
| அழகிய மயிலே | 41 |
| அழுது கொண்டிரு | 357 |
| அழைத்தனர் | 140 |
| அறிஞர்தம் | 117 |
| அறியச் செய்தோ | 172 |
| அறிவுரை | 427 |
| அறைவாயில் | 138 |
| அன்புமுதிர்ந் | 213 |
| அன்பே உடல் | 405 |
| அன்றியும் என் | 247 |
| அன்னத்தைத் தேடும் | 400 |
| அன்னத்தைப் பழி | 399 |
| அன்னியர் நூலை | 449 |
| அன்னை இன் | 213 |
| அன்னோள் நிலை | 232 |
| அனல்பட்டு | 237 |
| அனைவரும் | 261 |
| ஆங்கில நாட் | 178 |
| 'ஆடவரின் காதல் | 59 |
| ஆடுகின்றாய் | 97 |
| ஆதி மனிதன் | 405 |
| ஆய கலைகள் | 217 |
| ஆயிரம் ஆண்டின் | 438 |
| ஆயினும் அவர் | 246 |
| ஆயுதங்கள் | 86 |
| ஆர்ப்புறும் | 151 |
| ஆராரோ (ஆம்) | 84 |
| ஆராரோ (பெண்) | 85 |
| ஆரிய ஆசான் | 437 |
| ஆவி இழக்கலாம் | 455 |
| ஆளும் சாதியார் | 247 |
| ஆளுவோர் | 219 |
| ஆளை மயக்கிடும் | 451 |
| ஆற்றங்கரை | 63 |
| ஆற்றும் பணிகள் | 317 |
| ஆற்றோரம் | 92 |
| ஆனாலும் | 15 |

இங்குள்ளோர் 50
இசைத்தமிழ் 175
இதுகேட்ட 400
இதுதான் கை 262
இதுவே நான் 225
இந்த நாடு 228
இந்நிலத்தில் 206
இருக்கும் பிள்ளை 422
இருக்கை விட்டு 225
இருந்தபடி 368
இருந்திங்கே 26
இருப்பீர் என் 369
இரும்புப் பெட்டி 111
இலைமறை காயோ 464
இவ்விதமாக 17
இவ்வுலகம் 180
இழுத்திழுத்து 364
இழையினும் 377
இளமை தந்தாய் 59
இளவெயில் 381
இளைஞர்துடி 174
இறைந்த நற் 177
இன்பம் வந்து 117
இன்னலெலாம் 37
இன்னாரென் 32
இன்னொன்று 18
இனப்பெயர் 164
இனமழிப்பார் 467
இனிமைத்தமிழ் 65
உங்கள் உறவு 255
உட்கார்ந்தாள் 144
உடற்பயிற்சி 421
உண்டனன் 138
உண்டாலேதேன் 379
உண்ணல் உடுத்தல் 173
உணரச் செய்தான் 169
உணவு வட்டில் 240
உயர்சாதிப் படை 247
உயிர் போன்றோன் 140
உயிரே பிரிந்தால் 382
உருவினையும் 106
உலக மக்களில் 205
உலகமிசை 42
உலகியலின் 66
உழைப்பவர் 220
உளமுற்ற 106
உறுதி உறுதி 104
உன் கடிதம் 51
உன்னை என் 17
உன்னைத்தானெ 280
உனைக்காணும் 17
எங்கள் திரு 173
எங்கள் வாழ்வும் 69
எட்டுத் திசையும் 318
எண்ணங்கள் 46
எதிர் இருந்தோர் 93
எல்லாம் இருந்த 407
எல்லார்க்கும் நல் 202
எல்லையில் தமிழர் 178
எவ்வுயிரும் பரன் 336
எவன்கொன்று 432
எவன் படைத்தான் 239
எழுந்தன புட்கள் 314
எளிய நடை 66
எறிந்த என் 460
என் ஆணை 25
என் தமிழர் 107
என் நண்பர் 417
என்மீதில் ஆசை 383
என்மேல் 123
என்றன் மலர் 107
என்றனன் மன்னன் 248
என்று காவலரை 205
என்று செம் 204
என்று சொன்னான் 93
என்றுதான் சுக 340
என்றுமே ஒருவர் 417
என்றுரைக்க மன்னி 232
என்றுரைத்தான் 25
என்றுரைத்தாள் 76
என்று வியப்புடன் 18
என்ன உனக்கில்லை 205
என்னருந்தமிழ் 67
என்னருமை மக் 321

| | | | |
|---|---|---|---|
| என்னுளத்தில் | 54 | கடும்புதர் | 118 |
| என்னெதிர் | 236 | கண்கள் நமக்கும் | 73 |
| என்னே என்னே | 165 | கண்களும் | 69 |
| என்னை அத்தான் | 143 | கண்டவுடன் | 369 |
| எனக்கிதுதான் | 361 | கண்ணன்பால் | 404 |
| எனக்குத்தான் அவன | 363 | கண்ணான | 393 |
| எனக்குப்பகை | 390 | கண்படைத்த | 59 |
| எனக்கும் உன்மேல் | 141 | கண்போற் | 79 |
| எனைமணந்தார் | 59 | கண்மூக்கு | 139 |
| ஏடெடுத்தேம் | 64 | கணக்கன் சொல் | 423 |
| எண்டி போநாற் | 368 | கப்பல் உடை | 187 |
| எந்தலைப்பிச் | 218 | கமலம் அடுக்கிய | 66 |
| ஏரிக்கரை | 394 | கமழ்தேய்வு | 139 |
| ஏரித்தூர்க்கும் | 238 | கருத்தூற்று | 174 |
| ஏரியிலே மண் | 238 | கரும்பினும் | 377 |
| ஏலாதுபடு | 191 | கருவிழி ஓடி | 19 |
| ஏழுவயதே | 77 | கல்யாணம் | 78 |
| ஏழை நீ நூறு | 227 | கல்வியில்லை | 71 |
| ஏழை முதலாளி | 97 | கல்வியைப் பொது | 464 |
| ஏறு முன்னேறு | 458 | கலை எனும் | 416 |
| ஏனமெல்லாம் | 427 | கலைதோன்றும் | 416 |
| ஐயகோ | 28 | கலையே வளர் | 109 |
| ஒரு கடவுள் | 261 | கவிஞன் இவ்வாறு | 23 |
| ஒரு தமிழன் | 171 | கவிஞனுக்கும் | 29 |
| ஒரு தினத்தில் | 82 | கற்போர்கள் | 32 |
| ஒரு நாட்டின் | 195 | கன்னடம் தெலு | 173 |
| ஒரு நாள் | 163 | கன்னத்தில் | 76 |
| ஒருவன் உள்ள | 169 | கன்னல் இது | 198 |
| ஒலியுருவப் | 107 | கனவொழிய | 83 |
| ஒழுக்கம் | 318 | கனியிடை | 61 |
| ஒளி செய்தான் | 42 | காக்கைக்கழுத்து | 314 |
| ஒளியைக் | 136 | காசு பணம் | 364 |
| ஓங்குகதிர் | 300 | காட்டுக்கதிகாரி | 402 |
| ஓடினான் | 77 | காடுகளைந்தோம் | 89 |
| ஓருயிரும் | 59 | காணாத கடவுள் | 184 |
| ஓவியம் | 118 | காதல் துரத்த | 151 |
| கட்டாயம் | 444 | காதலனை | 25 |
| கட்டுடலில் | 142 | காதலியின் | 58 |
| கடந்தகாலப் | 164 | காதலுக்கு | 83 |
| கடவுள் கடவுள் | 87 | காதலும் கனலாய் | 60 |
| கடற்கீழ் | 166 | காந்தளின் இதழ் | 367 |
| கடற்குமிழி | 240 | காரிருள் அகத்தில் | 117 |

காரிருளால் 19
காலைமலர்ந்தது 436
காலையில் எனக்கு 441
காற்றிலெலாம் 388
கிழக்கு வெளுக்கு 99
கிளி உண்டதனால் 383
கிராமியம் 161
கீச்சென்று 45
குட்டி நிலாவே 420
குடும்பத்தின் 58
குடியேறும் 188
குடியேற்ற நாடு 465
குத்தகைக்காரர் 96
குயில் கூவி 1
குளக்கரை 226
குன்றின்மீது 47
குனிந்தனள் 399
கூட்டமுதம் 454
கூட்டின் சிட்டு 183
கூடத்திலே 379
கூடத்து நடுவில் 145
கூடித்தொழில் 88
கூதிர்விழா 468
கைகூப்பி 353
கைத்திறச் 67
கேட்டது குற்றம் 227
கேரளம் என்று 168
கோட்டை நாற்காலி 167
கோட்டைமேல் 252
கோடைக்குக் 387
கோணிக்கொம்பு 231
கோரிக்கையற்று 71
கோவாழும் 315
கோவைக்கனி 231
சங்கங்களால் 189
சடுகுடுவென்றே 239
சர்க்காருக்கு 113
சாதி ஒழித்திடல் 159
சாதிகள் இல்லை 161
சாதிமத பேதங்கள் 96
சாந்தியால் உலகம் 94
சிங்கத்தை 178
சித்திரச் சோலை 101
சிந்தொன்றுண்டு 398
சிரிப்பென்ன 391
சிற்றூரில் ஆயிரம் 239
சிற்றூரும் 26
சிறுகதை 118
சிறையில் வையத் 236
சின்னவன்மேல் 358
சீப்புக்கண்ணாடி 119
சீரிய நற்கொள்கை 195
சீனத்தின் 465
சீனாக்காரன் 443
சுயமரியாதை 91
செங்கதிரை 466
செஞ்சூட்டு 315
செந்தமிழை 173
செம்மறி செப்பு 225
செம்மறித்திறல் 225
செம்மறியே 261
செல்வப் பிள்ளாய் 77
சென்றதடா 445
சென்னையில் 134
சேர சோழ 349
சேற்றிலே தூரியம் 417
சொல்வதென்றால் 141
சோபன முகூர்த்தம் 186
சோலையில் 399
சோலையிலோர்நாள் 60
சோலை வழியில் 375
ஞானரதம் 161
தங்கம் உருக்கி 314
தட்டுப்படாத 319
தண்ணிலவும் 54
தந்தைமார் 318
தந்தையார் 58
தமிழ்நாட்டில் 195
தமிழ்நாட்டை 162
தமிழ்நாடெங்கும் 69
தமிழ்மொழிக்குள் 228
தமிழகத்தில் 171
தமிழர் என்று 172
தமிழர்க்குத் தமிழ் 108

தமிழர்க்குத் தமிழே 440
தமிழறிந்ததால் 28
தமிழனுக்கு 171
தமிழனை எதிர்க்கும் 436
தமிழுக்கும் 62
தயிர் விற்கப் 384
தலைகாதுமூக்கு 115
தலைமை அமைச்சன் 14
தலையாகிய 110
தறுக்கினாற் 68
தன் குலத்தின் 117
தன்பெண்டு 86
தன் மகளுக்கு 27
தன்னினம் மாய்க்கும் 170
தனித்தமைந்த 108
தனித்தனியே 251
தனித்தாளும் 463
தனியாரிடத்தில் 422
தனியிருக்கும் 231
தாங்கா ஆவலின் 245
தாமரை பூத்த 48
தாய்வீடு போய் 378
தாயெழிற்றமிழை 67
தாயோ என் 58
தார்வேந்தன் 15
தாழ்திறந்த 37
திடுக்கென்று 145
தித்திக்கும் 114
திராவிட நாட்டு 351
திருநாளில் 395
திருவிலார் 37
திருவிளக்கேற்றி 317
திறல் நாட்டின்மேல் 251
திறல் நாட்டு 210
திறல்நாடு சார்ந்த 224
திறல் நாடும் மலை 222
தின்பதற்கு 386
தீயில் நிலநீரில் 318
துன்ப உலகம் 412
துன்பம் பிறர்க்கு 439
தூய்மொழி 241
தூய தமிழ் 152
தெரியாமல் 138
தெருப்பக்கம் 179
தெருப்பெருக் 119
தெள்ளமுதம் 144
தெள்ளுதமிழ் 198
தென்பால் குமரி 408
தென்றல் புலி 359
தென்றலும் 139
தென்றற்குளி 319
தென்றிசையை 110
தென்னந்தோப்பு 401
தென்னிலங்கை 116
தென்னைமரத்தில் 45
தேசத்தார் 161
தேசு வெயிலது 232
தேர்கலி 315
தேர்நின்ற 449
தேனமுதே 388
தொடங்குக 179
தொல்லையை 465
தொழிலெல்லாம் 429
தொழிலே வாழி 181
தொன்னூற் 198
தோட்டத்து 51
தோழிமார் 400
நந்தமிழ்த்தாய் 435
நந்தமிழ் நாடாளும் 435
நம்பிக்கை 425
நரகனைக் 176
நல்ல இளம் 54
நலம் தேடு 432
நற்பெருமார்கழி 163
நறுக்குவோம் 435
நறுமலர்ச் 435
நாட்டிலே 261
நாட்டும் சீர் 68
நாட்டு மக்கட்கு 249
நாட்டு மாதரே 367
நாம் பிறந்தது 433
நாமின்று சென்று 150
நாயை இழுத்துப் 24
நாலைந்து வீதி 109

நாளையே பந்து 402
நாளை வா 227
நானும் அவளும் 376
நிலந்தொழேன் 140
நிலம் ஆளும் 188
நிலவு குளிர் 212
நிலவு வராதா 355
நிலவே நிலவே 461
நிழலில் இருந்த 462
நீ எனக்கும் 81
நீல உடை 316
நீல மணியிருட் 163
நீல வான் ஆடை 16
நூறாயிரக் 196
நெஞ்சத்தில் 180
நெஞ்சில் நிறைந்த 396
நெஞ்சிலுற்றது 116
நெருப்பில் துடித் 459
நேர்ந்திட்ட 247
நேர்மை இலா 195
நேற்று வந்தேன் 372
நோன்பென்றால் 432
பக்கத்தில் 137
பகவற் கீதை 199
பகுத்தறிவு 96
பசும்புற்பச்சை 230
பஞ்சினும் 377
பஞ்சும் பரப்பிய 360
பட்டாணி 377
படக்கலைதான் 108
படிகத்தை 29
படித்தும் 359
படைத்தலைவன் 246
படைத்திட்டான் 417
படை மறவா 227
படைமீட்டுப் 228
பண்கெட்டுப் 178
பணியாளர் தோழி 248
பத்தாயிரம் 210
பத்துமாதம் 83
பரமசிவன் 108
பலநூற்றாண்டாய் 446
பலியாகிக் கால் 27
பழங்கல அறைக்குளே 115
பழங்கல அறைக்குளே 185
பழத்தோட்டத்தை 220
பழைய நூற்கள் 414
பள்ளம் பறி 97
பறந்து வந்த 374
பன்றிவெட்ட 433
பாங்கியர் 215
பாமர மக்கள் 194
பார்க்காதவன் 365
பார்த்ததைப் 194
பார்த்தொழில் 67
பார்ப்பானை 161
பாரத நாட் 181
பாரதியார் உலக 160
பால் நுரைபோல் 452
பாலும் தேனும் 371
பாலும் புளிக்கும் 360
பாலோடு நேர் 174
பாழாய்ப்போன 372
பிரமன் உடல் 250
பிழைத்தது 140
பிறக்கும் போதே 433
பிறப்புரிமை 464
பிறப்பொக்கும் 317
புத்தர் பிரான் 432
புதியதோர் 102
புதுக்கோயில் 366
புலித்திறல் இவ் 204
புலித்திறல் உண்ட 203
புலையொழுக்கம் 319
புவிப்பெரியான் 71
புவியிற் சமூகம் 322
புளியிற்கோது 391
புறங்கையை 401
புன்னையின்கீழ் 53
பூக்காரி 232
பூட்டிய இருப்பு 175
பூப்பந்து 41
பெண்கள் இட்ட 370
பெண்கள் துயர் 80

| | |
|---|---|
| பெண்குழந்தை | 82 |
| பெண்ணினத்தை | 467 |
| பெண்ணே உன் | 216 |
| பெங்கல்வி | 76 |
| பெருநாட்டான் படை | 250 |
| பெருநாட்டான் பெற்ற | 237 |
| பெருநாட்டுப் படை | 249 |
| பெருநாட்டு மன்னவன் | 220 |
| பெரும்பணக்காரன் | 187 |
| பேரன்பு | 26 |
| பொக்கிஷம் | 27 |
| பொதிகை மலை | 137 |
| பொதுமக்கள் | 174 |
| பொழுது விடிய | 157 |
| பொழுதும் விடிய | 360 |
| பொன்னாற்றூர் | 226 |
| பொன்னியை | 204 |
| பொன்னிறக் கதிர் | 457 |
| பொன்னிறத்து | 180 |
| பொழிலிடை ஒரு | 401 |
| போயினார் அரண் | 248 |
| போனால் போகட்டும் | 361 |
| மக்கள் நலத்துக்கு | 434 |
| மக்களிலே தாழ்ந்த | 240 |
| மஞ்சம் திருத்தி | 46 |
| மணக்கத்தான் | 354 |
| மணம் செய்து | 233 |
| மணமக்கட் | 353 |
| மணமக்கள் | 348 |
| மணமும் தென்றலும் | 373 |
| மணிபுரி மக்கள் | 34 |
| மணிபுரியின் | 35 |
| மத ஓடத்தில் | 103 |
| மதிப்பிலாள் | 139 |
| மயக்கம் வந்தால் | 163 |
| மரத்தின் நிழலில் | 373 |
| மல்லிகையின் | 180 |
| மலடி என்றேன் | 144 |
| மறையக் கண்டேன் | 137 |
| மன்னவன் ஆணை | 15 |
| மன்னர் பலரும் | 207 |
| மன்னராக | 228 |
| மன்னன் மதுவினில் | 29 |
| மன்னனும் | 233 |
| மன்னிய கீழ் | 315 |
| மன்னுசீர் | 348 |
| மனவீட்டை | 167 |
| மனிதரெலாம் | 108 |
| மனைமக்கள் | 116 |
| மனைமக்கள் | 184 |
| மனையாளும் | 83 |
| மனைவிக்கும் | 144 |
| மாடறுக்க | 186 |
| மாடாய் உழைப் | 430 |
| மாணிக்கம் தன் | 396 |
| மாதிவள் இலையெனில் | 149 |
| மாந்தரில் நான்கு | 224 |
| மாப்பிள்ளை | 392 |
| மார்புற | 177 |
| மாலைப்போதில் | 42 |
| மாலைப் போதைத் | 54 |
| மான்கண்டு | 231 |
| மானிடத்தன்மையை | 95 |
| மிக்க மகிழ்ச்சி | 215 |
| மிகப்பல | 419 |
| மிளகு நீள்கொடி | 151 |
| மின்னற் குலத்தில் | 18 |
| மின்னிடையும் | 231 |
| மின்னொளி ஆங்கே | 231 |
| மின்னொளி இன்முகம் | 212 |
| மின்னொளி மேல் | 238 |
| மீள்வது | 316 |
| முட்புதர்கள் | 43 |
| முத்தினும் | 377 |
| முல்லை எனை | 359 |
| முல்லை சூடி | 74 |
| முறிந்த உள் | 424 |
| முன்மொழிந்தாரும் | 349 |
| முன்னேற்றம் | 196 |
| மெய்வண்ண | 119 |
| மெல்லென | 181 |
| மென்பட்டு | 253 |
| மேகம் பொழிவ | 430 |
| மேசை விளக் | 175 |

| | | | |
|---|---|---|---|
| மேடையின்மேல் | 250 | வானத்தை | 19 |
| மேதினிக்குச் சேசு | 104 | வானந்தான் | 133 |
| மேதினிக்குச் சேசு | 343 | வானிடை நிகழும் | 118 |
| மேலுமே உரை | 246 | வானுக்கு நிலவு | 370 |
| மேழி பிடித்த | 219 | வானும் கனல் | 44 |
| மேழியை உழவா | 400 | விண்கொள் இமய | 449 |
| மேற்சாதியார் | 251 | விண்ணிடை | 68 |
| மேற்றிசையில் சூரி | 53 | வித்திப் பிழைக்கும் | 199 |
| மேற்றிசையில் வான | 75 | விரலே நாணுதே | 431 |
| மேனியெல்லாம் | 375 | விரிந்த ஒரு | 75 |
| யாமிட்ட சோறு | 243 | விரிந்த வானே | 132 |
| யானைமேல் | 258 | விருப்பத்தை | 174 |
| வஞ்சக விபீஷணன் | 110 | விரைந்து செல் | 246 |
| வஞ்சிக்கொடி | 380 | விலை பெரிது | 415 |
| வடநாட்டார் | 107 | விளக்கு வைத்த | 82 |
| வண்டு வகை | 360 | விற்கோவை | 32 |
| வந்துவிட்டேன் | 385 | வீட்டை மறந் | 229 |
| வராதெனச் | 173 | வீட்டெதிர் | 259 |
| வருகவருகென | 348 | வீழ்ச்சியுறு | 111 |
| வரும்படியை | 82 | வீழ்நாள் | 319 |
| வருவதாய் | 405 | வையத்திறல் என் | 222 |
| வரைமட்டும் | 36 | வையத்திறல் மொழி | 218 |
| வலியோர் | 109 | வையத்திறல் வந்த | 234 |
| வழி உண்டாம் | 464 | வையத்திறலை மன்னந் | 237 |
| வள்ளுவர்க்கு | 465 | வையத்திறலை மன்னி | 216 |
| வளர்ப்பு மயில் | 231 | வையத்திறலே மகனே | 232 |
| வாசிக்க | 109 | வையத்து மக்கள் | 464 |
| வாட்டம் ஏன் | 382 | வையத்து மாகவிஞர் | 162 |
| வாலியின்பால் | 467 | வெண்ணிலா முகிலி | 462 |
| வாழ்க்கை மலர் | 138 | வெல்லாத இல்லை | 198 |
| வாழ்வதிலும் நலம் | 99 | வெள்ளம்போல் | 68 |
| வாழ வழி | 412 | வேண்டுகோள் | 232 |
| வாழி என் அன்பு | 121 | வேண்டுமா | 389 |
| வாழிய என் | 28 | வேலைவிட்டு | 384 |
| வாழிய வாழிய | 208 | வேற்றூர் போய் | 57 |
| வாழும் மாந்தர்க்கு | 356 | வேலனும் பந்து | 399 |

# பாரதிதாசன் படைப்புகள்

| நூற் பெயர் | ஆண்டு |
|---|---|
| மயிலம் சுப்பிரமணியர் துதியமுது | 1926 |
| கதர் இராட்டினப்பாட்டு | 1930 |
| சிறுவர் சிறுமியர் தேசியகீதம் | 1930 |
| தொண்டர் படைப்பாட்டு | 1930 |
| தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு | 1930 |
| சஞ்சீவி பர்வதத்தின் சாரல் | 1930 |
| சுயமரியாதைச் சுடர் | 1931 |
| புரட்சிக்கவி | 1937 |
| இந்தி எதிர்ப்புப் பாடல் (பாரதி தாசன் உட்படப் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு) | 1938 |
| பாரதிதாசன் கவிதை | 1938 |
| இரணியன் அல்லது இணையற்ற வீரன் | 1939 |
| இசையமுது | 1939 |
| எதிர்பாராத முத்தம் | 1941 |
| குடும்ப விளக்கு — ஒருநாள் நிகழ்ச்சி | 1942 |
| பாண்டியன் பரிசு | 1943 |
| இருண்ட வீடு | 1944 |
| அழகின் சிரிப்பு | 1944 |
| நல்ல தீர்ப்பு | 1944 |
| காதல் நினைவுகள் | 1944 |
| குடும்ப விளக்கு — விருந்தோம்பல் | 1944 |
| கற்கண்டு (நாடகம்) | 1945 |
| எது இசை? | 1945 |
| தமிழியக்கம் | 1945 |
| அமைதி | 1946 |
| தன்மானத் தாலாட்டு | 1946 |
| கவிஞர் பேசுகிறார் | 1947 |
| முல்லைக்காடு | 1948 |
| மகாகவி பாரதியார் | 1948 |
| காதலா? கடமையா? | 1948 |
| கடல்மேற் குமிழிகள் | 1948 |
| குடும்ப விளக்கு — திருமணம் | 1948 |
| இந்தி எதிர்ப்புப் பாட்டு | 1948 |
| அகத்தியன் விட்ட புதுக்கரடி | 1948 |
| திராவிடர் திருப்பாடல் 35 | 1948 |
| படித்த பெண்கள் | 1949 |
| சேரதாண்டவம் | 1949 |

| நூற் பெயர் | ஆண்டு |
|---|---|
| தமிழச்சியின் கத்தி | 1949 |
| திராவிடர் புரட்சித்திருமண திட்டம் | 1949 |
| பாரதிதாசன் ஆத்திசூடி | 1949 |
| ஏற்றப்பாட்டு | 1949 |
| பாரதிதாசன் கவிதைகள்—2 | 1959 |
| குடும்ப விளக்கு — மக்கட்பேறு | 1950 |
| குடும்ப விளக்கு — முதியோர் காதல் | 1950 |
| இன்பக்கடல், சத்திமுத்தப் புலவர் | 1950 |
| சௌமியன் | 1950 |
| அமிழ்து எது? | 1951 |
| கழைக்கூத்தியின் காதல் | 1951 |
| இசையமுது—2 | 1952 |
| தமிழ் இன்பம் | 1952 |
| பொங்கல் வாழ்த்துக் குவியல் | 1954 |
| பாரதிதாசன் கவிதைகள் | 1955 |
| பாரதிதாசன் கவிதைகள்—3 | 1955 |
| தேனருவி | 1956 |
| தாயின்மேல் ஆணை | 1958 |
| இளைஞர் இலக்கியம் | 1958 |
| பாரதிதாசன் நாடகங்கள் | 1959 |
| குறிஞ்சித்திட்டு | 1959 |
| கண்ணகி புரட்சிக்காப்பியம் | 1962 |
| மணிமேகலை வெண்பா | 1962 |
| பாரதிதாசன் பன்மணித்திரள் | 1964 |
| பிசிராந்தையார் | 1964 |
| காதல் பாடல்கள் | 1977 |
| குயில் பாடல்கள் | 1977 |
| பாரதிதாசன் கவிதைகள் (நான்காம் தொகுதி) | 1977 |
| புகழ் மலர்கள் | 1978 |
| நாள் மலர்கள் | 1978 |
| தமிழுக்கு அமுதென்று பேர் | 1978 |
| தலைமலை கண்ட தேவர் | 1978 |
| ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது | 1978 |
| வேங்கையே எழுக | 1978 |
| தேனருவி (புதுப்பாடல்கள்) | 1978 |
| வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா | 1980 |
| கோயில் இரு கோணங்கள் | 1980 |
| பாட்டுக்கு இலக்கணம் | 1980 |
| சிரிக்கும் சிந்தனைகள் | 1980 |
| கேட்டலும் கிளத்தலும் | 1980 |

# பதிப்புச் செம்மல் பதிப்பித்த பாரதிதாசன் நூல்கள்

பாரதிதாசன் கவிதைகள்

குடும்ப விளக்கு

பாண்டியன் பரிசு

அழகின் சிரிப்பு

தமிழியக்கம்

எதிர்பாராத முத்தம்

இளைஞர் இலக்கியம்

இருண்ட வீடு

இசையமுது

சேரதாண்டவம்

தமிழச்சியின் கத்தி

அமைதி

நல்லதீர்ப்பு

தேனருவி

காதல் நினைவுகள்

பிசிராந்தையார்

## பதிப்புச் செம்மல்

### டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணைப்பேராசிரியர்; திருக்குறள்இயக்கம், திருமுறைஇயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; புலவர் குழு உறுப்பினர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளை கள் நிறுவியுள்ளார்; பன்னிரண்டு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய தாகூர் நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர் துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களை வெளியிடுவதை தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். **பதிப்புச்செம்மல்** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

